வெளியீடு—29—10—1974]
Issued—29—10—1974]

B I

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

புதன் கிழமை 1974 ஏப்ரல் 3

Wednesday 3rd April 1974

தொகுதி LIV—எண் 1

Volume LIV—No. 1

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

VR11,31'N74
31N74.54
61659

# Tamil Nadu Legislative Assembly Debates.

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

3rd to 5th and 8th April 1974

Volume LIV (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS

PAGES

*Wednesday, 3rd April 1974.*

1. Questions and Answers .. .. .. .. 1, 28
2. Points of Order—
   (a) Full utilisation of Question-hour .. .. 28, 29
   (b) Allowing public in Legislators' bus .. .. 30, 31
3. Privilege Matter—
   Alleged incorrect statement by Education Minister to a call attention notice .. .. 29, 30 31 41
4. Adjournment Motion—
   Leakage of S.S.L.C. Examination question papers 41, 44
5. Calling Attention—
   (a) Failure of monsoon in Kanyakumari district and the necessity to supply rice and allow tax-remission 44, 50
   (b) Enfield India Workers' strike in Singampunari .. .. .. .. .. 50, 51
6. Presentation of Report—
   Public Accounts Committee Report .. .. 52

PAGES

*Wednesday 3rd April 1974—cont.*

7. Government Bill—

The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on land) Second Amendment Bill 1974 52

8. Voting on Demands for Grants for the year 1974-75—cont.

Demand No. 28 – Community Development Projects, etc. .. .. .. .. .. 52, 133

9. Papers laid on the Table .. .. .. .. 134, 135

*Thursday 4th April 1974*

1. Questions and Answers .. .. .. .. 139, 169

2. Point of Information—

Taking up of certain matters given notice of by some Members. .. .. .. .. .. 170, 172

3. Calling Attention—

(a) Damages by floods in Semmarikulam and Puthantharuvai .. .. .. .. 172, 174

(b) Hardships experienced by poor people due to kerosene scarcity .. .. .. .. 174, 177

4. Voting on Demands for Grants for the year 1974-75—cont.

Demand No. 10—Milk Supply schemes
Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959
Demand No. 27—Khadi } 178-271

5. Papers laid on the Table .. .. .. .. 271-272



PAGES

*friday, 5th April 1974*

1. Government Motion—

Suspension of Question-hour .. .. .. 291

2. Government Bills—

The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill 1974 .. .. 291-292

3. Voting on Demands for Grants for the year 1974-75—cont. .. .. .. .. ..
Demand No. 23—Co-operation } 292-425

4. Papers laid on the Table .. .. .. .. 425

*Monday, 8th April 1974*

1. Questions and Answers .. .. .. .. 433-457

2. Privilege Matter—

Alleged incorrect statement by Education Minister to a Call Attention notice.. .. .. .. 458-460

3. Adjournment Motion—

Arrest of D. K. volunteers.. .. .. .. 463-464

4. Calling Attention—

(a) Failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of Land Revenue, loans .. .. .. .. .. 467-469

(b) Accidents due to foot-board travelling in buses .. .. .. .. .. .. 469-470

5. Announcements—

(a) The Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill 1974 .. .. .. .. 471

(b) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. .. .. .. 583

| | PAGES |
|---|---|
| *Monday 8th April* 1974—cont. | |
| 6. Government Bills— | |
| (a) The Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill 1974 .. .. .. | 471 |
| (b) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill 1974.. | 471 |
| (c) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. .. .. .. | 583 |
| 7. Point of Information— | |
| Questions allowed to ruling party members .. | 472 |
| 8. Voting on Demands for Grants for the year 1974-75—*cont.* | |
| Demand No. 7—State Legislature .. .. | 472-54 |
| 9. Papers laid on the Table .. .. . .. | 584 |


## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்பத்தூர்–மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எ[illegible]. .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ. |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ. |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஓரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகுளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டிணம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனூர் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை |
| 94 சபதி, திரு. மா பா. .. .. | |
| 95 சிதம்பரம், திரு. சித. .. .. .. | வேலூர். |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | காரைக்குடி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. .. | சேரன்மகாதேவி. |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | அரியலூர். |
| 99 சீனிவாசன், திரு. பெ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. .. | விருதுநகர். |
| 101 சின்னசாமி, திரு. அ. .. .. .. | போளூர். |
| 102 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 103 சின்னசாமி திரு. மு. .. .. .. | தர்மபுரி. |
| 104 சின்னசாமி, திரு. வ. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | எற்காடு (ஆ. வா.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. .. .. | ஹரூர் (செ. வ.) |
| 107 சுந்தரம், திரு. ஓ. என். .. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. .. .. | திண்டுக்கல். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. .. .. | சிங்கநல்லூர். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | சத்யமங்கலம். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. .. | தியாகராயநகர். |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | ஈரோடு. |
| 113 சுப்பு, திரு. க. .. .. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | ராஜபாளையம். |
| 115 சுப்பையா, திரு. கே. வி. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. ச. .. .. | ஆலங்குடி. |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். .. .. .. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 118 சுருளிவேல், திரு. மு. .. .. .. | கடயநல்லூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். .. .. | போதிநாயக்கனூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | மேட்டூர். |
| 121 செபமாலை, திரு. கோ. .. .. .. | பத்மநாபபுரம். |
| 122 ஜெயாராமன், திரு. இ. .. .. .. | மங்களூர் (செ. வ.) |
| 123 செல்லத்துரை, திரு. வீ. .. .. | சேலம்–1. |
| 124 செல்லையா, திரு. குழ. .. .. | ஓமலூர்.(செ. வ.) |
| .. .. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 127 சோலையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. .. ... | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. வ. க. .. .. .. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. .. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. வ. சி. .. .. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. .. .. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. .. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. .. .. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. .. .. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர் |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.) |
| 179 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமனாதபுரம் மாவட்டம்) |
| | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | தலைவாசல் (செ.வ.) |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | வேதாரண்யம். |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | மேலப்பாளையம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | லால்குடி. |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்து, திரு. வ. | வேடசந்தூர். |
| 204 முத்துசாமி, திரு. ப. | முசிறி. |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | வானூர் (செ. வ.) |
| 206 முத்துவேல், திரு. ந. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. கே. கே. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முத்தையா, திரு. எம். | கலசப்பாக்கம். |
| 209 முருகையன், திரு. எஸ். | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | திருப்போரூர். |
| 211 முனு ஆதி, திரு. மு. | மேல்மலையனூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | நாகர்கோயில். |
| 214 மோசஸ், திரு. ம. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ரங்கனாதன், திரு. கே. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. இ. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமசாமி, திரு. ஜி. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானி. |
| 219 ராஜா, திரு. ஏ. எம். | தி[illegible]வணம். |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திரு[illegible]கலம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். வ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## புதன்கிழமை, 1974 ஏப்ரல் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*General Hospital for South Madras*

* 722 Q.—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the construction of a Hospital was included in the lay out for Ashok Nagar-Karunanidhi Nagar Scheme:

(b) whether the proposal was dropped; and

(c) if so, the resons for dropping the scheme?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ—உ) தென் சென்னைக்கு அரசினர் பொது மருத்துவ மனையொன்றை கோடம்பாக்கம்புதூரில் தோற்றுவிக்க அரசிடம் ஒரு திட்டம் சில ஆண்டுகளாகவே பரிசீலனை யில் இருக்கிறது. அதுபற்றி தகுந்த முடிவு இன்னும் எடுக்கப்பட வில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தென் சென்னையில் ஒரு
மருத்துவ மனை ஆரம்பிப்பது குறித்து தகுந்த முடிவு எடுக்கப்பட
வில்லை என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருக்கின்ற
ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏராளமான கூட்டம் இருக்கிறது. அங்கே
நோயாளிகளுக்கு வேண்டிய படுக்கை வசதிகள் எவ்வளவுதான் அதி
கரித்தாலும் போதவில்லை. எனவே, தென் சென்னையில் ஒரு புதிய
மருத்துவ மனையைத் துவக்குவதற்குக் கொஞ்சம் காலதாமதமா
னாலும், இப்பொழுதிருக்கின்ற ஜெனரல் ஆஸ்பத்திரியை இன்னும்
விரிவாக்குவது குறித்து செயற்குறிப்பு இருக்கிறதா? சென்ட்ரல்
ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அங்கு ஜெனரல் ஆஸ்பத்
திரியை விஸ்தரிப்பதாக ஏற்கெனவே ஒரு செயற்குறிப்பு இருந்தது.
அந்த முறையில் இந்த மருத் ... னையை விஸ்தரிக்க ஏதாவது செயற்
குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வி
யினுடைய நோக்கம், எப்படியும் தென் சென்னையில் ஒரு மருத்துவ
மனை வரவேண்டும் என்பது. அரசாங்கத்தினுடைய ஆசையும் தென்
சென்னையில்—அடையார் பகுதியிலோ, கோடம்பாக்கம்புதூர் பகுதி
யிலோ, அசோக்நகர் போன்ற பகுதியிலோ—ஒரு மருத்துவ மனை
ஏற்படுத்த வேண்டும் என்பது. அதற்காக நிலம் ஒதுக்குவதற்கெல்
லாம்கூட, ஏற்கெனவே அரசு முயற்சி எடுத்துக்கொண்டு நிறைவேறி
யிருக்கிறது. ஏறத்தாழ 140 லட்ச ரூபாய் இருந்தால்தான் ஒரு தகுந்த
பொது மருத்துவ மனையை ஏற்படுத்துவதற்குரிய அடிப்படை வசதி
களை உண்டாக்க முடியும். 500 படுக்கைகள் கொண்ட பொது
மருத்துவ மனையை 15–20 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்துவ
தென்று, அதற்காக நிதி ஒதுக்கினாலும், இரண்டு மூன்று ஆண்டு
களுக்குள் எல்லா ஏற்பாடுகளும் செய்து நிறைவேற்ற முடியுமா
என்பது சந்தேகமே, வசதிக் குறைவு காரணமாக அது ஒத்திவைக்கப்
பட்டு வருகிறது. இந்தக் கேள்வியினுடைய நோக்கம், தென் சென்னை
யில் பொது மருத்துவ மனையை ஏற்படுத்துவது என்பது. ஜெனரல்
ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவது என்கிற நோக்கம் இதில் நிறை
வேறாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை, மதுரை போன்ற பெரிய
நகரங்களில் இப்படி இரண்டாவது மருத்துவ மனைகள் ஆரம்பிக்க
வேண்டும் என்று 1971-ம் ஆண்டில்கூட இந்த மன்றத்தில் சொல்லப்
பட்டது. மதுரையில் இரண்டாவது மருத்துவ மனை ஆரம்பிக்க
ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? சென்னையிலும் என்றைக்கு
ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னை
யில் ஆறு, ஏழு பெரிய மருத்துவ மனைகள் இருக்கின்றன. மதுரையில்
விரிவு அடைந்த ஒரு பெரிய மருத்துவ மனை இருக்கிறது. இன்னும்
ஒரு மருத்துவ மனை—அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும்—துணை
மருத்துவ மனை மதுரை தெற்குப் பகுதியில் ஏற்படுத்த வேண்டும்
என்று அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு 15 இலட்ச ரூபாய்
செலவில் கட்டட அமைப்பு ஏற்படுத்துவதற்கு அரசு யோசித்திரு
கிறது. விரைவில் அதற்கு ஆவன செய்யப்படும். இடத்தை
மாநகராட்சி மன்றம் தந்திருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : ஏறத்தாழ முப்பது இலட்சம் ஜனத்
தொகை கொண்ட சென்னையில் போதிய மருத்துவ மனைகள் இல்லை
என்ற குறைபாடு இருக்கிறது. அதுவும் ஸ்லம் பகுதியில்—குடிசைப்





மக்கள் வாழும் பகுதியில் உள்ள
பகுதியில்—தாழ்த்தப்பட்ட
நோயாளிகள் மருத்துவ மனைக்குச் செல்ல சங்கடப்படுகிறார்கள்.
ஆகவே, குடிசைப் பகுதியில் செல்லுவதற்கேற்ற நடமாடும் மருத்துவ
மனைகளை அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த
ஆண்டு நடமாடும் மருத்துவ மனையைப்பற்றி சற்று உற்சாகமாகப்
பேசப்பட்டது. இப்பொழுது பெட்ரோல் விலை ஏறியிருப்பதால்,
மருந்தைவிட பெட்ரோல் விலை அதிகமாகும். அப்படிப்பட்ட
நிலைமையைவிட ஏழைகள் மருத்துவ மனைக்கு நடந்து வரத் தயாராக
இருக்கிறார்கள். துணை மருத்துவ நிலையங்களை அமைக்கவேண்டும்
என்ற எண்ணத்தில் அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால்,
அதற்கும் போதுமான வசதி இல்லாத காரணத்தால் தாமதம்
ஆகிறது.

*Additional building for General Hospital, Madras.*

* 723 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the
Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to
build a multi-storeyed building as an annexe to the Government
General Hospital, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு
இணைப்பாக முடிவில் ரூ. 56 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், இரட்டை
தொகுதியாகவுள்ள கட்டிடம் ஒன்றை கட்டி, அதில் காது, மூக்கு,
தொண்டை நோய்த்துறை, புற்று நோய்த்துறை, ரத்த நாள அறுவை
சிகிச்சைத்துறை (Vascular Surgery) குண்டிக்காய் இயல்துறை
(Nephrology) சிறுநீரக இயல்துறை (Urology) ஆகிய துறைகளை
அமைப்பதென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சென்னை நகரத்
திலேயே இவ்வாறு மருத்துவ வசதிகளை அதிகரித்துக்கொண்டு
போவதற்குப் பதில், மாவட்ட மருத்துவ மனைகளையும் விஸ்தரித்து,
மாவட்ட அளவில் மருத்துவ வசதிகளைப் பரவலாக்குவதற்கு அரசு
திட்டமிடுமா?

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒன்றைப்
பற்றிப் பேசும்போது மற்றொன்றை மறந்துவிட்டதாகப் பொருள்
அல்ல. ஒரு அங்கத்தினர் சொற்பொழிவாற்றும்போது மற்ற
அங்கத்தினர்கள் அந்தப் பொறுப்பை இழந்துவிட்டதாகப் பொரு
ளல்ல. அதுபோல் சென்னை பொது மருத்துவ மனையிலுள்ள நெருக்
கடியைத் தவிர்ப்பதற்கு வகை செய்யவேண்டும். அங்குள்ள கட்ட
டங்கள் சில 75 ஆண்டுகள், 100 ஆண்டுகள், 125 ஆண்டுகள் ஆகி
விட்டன. அப்படிப்பட்ட கட்டடங்கள் எந்த நேரத்திலும் விபத்தை
விளைவிக்கக் கூடும். அவற்றை இடித்துவிட்டு, இருக்கும் சிறு சிறு
பகுதிகளில் கட்டடங்கள் வருவதால் மருத்துவ மனையின் மொத்தமான
அமைப்பு கெட்டுவிடுகிறது. அதற்காக ஏற்கெனவே 15–17 லட்ச
ரூபாய் ஒதுக்கியிருந்த அந்தப் பணத்தை நிறுத்திவைத்து, ஒரு முழு
கட்டடமாக உருவாவது மேலானது. பல சிறு கட்டடங்கள்
வருவதைத் தவிர்க்கும் முயற்சியோடு இணைந்து இந்த முயற்சி நடை
பெறுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே
அங்கிருக்கக்கூடிய கார்டியாலஜி பிளாக் நெருக்கடியாக இருக்கிறது.
அது மாத்திரமல்லாமல், கார்டியாலஜி ப்ளாக்கில் இருக்கக்கூடிய
வர்கள் வெறும் மெடிக்கல் யூனிட்டைச் சேர்ந்தவர்களாகத்தான்
இருக்கிறார்கள். அதற்கு இணைந்தாற்போல் ஒரு சர்ஜிகல் யூனிட்டும்
அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கார்டி
யாலஜி பகுதியில் இப்போதே சர்ஜரி நடைபெற்று வருகிறது.
ஆனால், பெயரளவில் சர்ஜரி யூனிட் என்ற அமைப்பு முறை ஏற்படுத்த
வில்லை. என்றாலும், செயல் முறையில், தனிப் படுக்கைகள் பெற்று
அறுவை சிகிச்சை நடத்துகிறார்கள். ஆனால், சிறப்பு அவர்களுக்கும்
தரவேண்டும் என்ற அடிப்படையில் அம்மையார் அவர்கள் சொன்ன
அந்த ஆலோசனை அரசால் மிக விரைவில் பரிசீலிக்கப்பட்டு நிறை
வேற்றப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, பொருளாதார
நிலையை அனுசரித்து, இரண்டு மாடிக் கட்டடங்கள்தான் கட்ட
வேண்டும், அதற்குமேல் கட்டக்கூடாது என்று மத்திய சர்க்காரி
லிருந்து சமீபத்தில் நம்முடைய சர்க்காருக்கு ஆலோசனை வந்திருக்
கிறதா? அப்படியானால், இதை மாற்றி அம்மாதிரி செய்ய
உத்தேசம் உண்டா?



1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி
யொரு ஆலோசனை வந்திருப்பதாகத் தெரியவில்லை. நம்மைவிட
அறிவாளிகள் அங்கேதான் இருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்
கொள்வதில்லை.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போதே சென்னை பொது மருத்துவ மனையில் ஜன நெரிசல்
அதிகமாக இருக்கிறது. நோயாளிகளுக்கு வசதி செய்யவேண்டும்
என்பதற்காகப் பெரிய கட்டடங்களைக் கட்டி, அவற்றின் மூலம்
நோயாளிகளுக்கு வசதிகளைப் பெருக்குவதாகச் சொன்னபோதிலும்,
மேலும் ஜன நெரிசல் அதிகமாக ஏற்பட்டு, சுகாதாரக் கேடுகள்
விளைவதற்குக் காரணமாகி விடுகின்றன. ஆகவே, இதுபோன்ற புதிய
புதிய கட்டடங்களை மாவட்ட அளவில் கட்டி, சென்னை வந்து சரியான
முறையில் மருத்துவ வசதி பெற முடியாது வறுமையினால் பீடிக்கப்
பட்டிருக்கின்ற மக்கள் அந்தந்த மாவட்டத்தில் இத்தகைய நல்ல
பயனைப் பெறும்வகையில் அரசு முனைப்பான திட்டத்தை விரைவில்
ஏற்படுத்திக் கொடுக்குமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாவட்ட
மருத்துவ மனைகள் இன்றைக்கிருக்கும் நிலையிலிருந்து, வருகிற
ஐந்தாண்டுக் காலத்தில், ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பல சிறப்புத்
துறைகளைப் பெற்று வளர்ச்சி அடையவேண்டும் என்று அரசு திட்ட
மிட்டிருக்கிறது. அவை அப்படியிருக்கிற நிலையிலிருந்து வளர
முடியுமே தவிர, பெரிய வளர்ச்சிபெற்ற, பல்வேறு சிறப்புத் துறை
களுக்குள்ள பகுதிகளைக்கொண்டு உருவாவதென்பது முப்பதாண்டு
காலமானாலும் நிறைவேற முடியாத ஒன்றாகும்.

ஆனால், வாய்ப்புள்ள சில இடங்களில் ஏதாவதொரு புதிய
அமைப்பை உருவாக்கும்போது அவை அத்தனையையும் சென்னை
யிலேயேதான் ஏற்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல.
பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரில் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்
ஒன்று காஞ்சீபுரத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
பெரிய கட்டடம் ஒன்று அங்கே கட்டுவதற்குரிய பணியும்
இப்பொழுது அங்கே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. 25 லட்ச
ரூபாய் செலவில் அந்தக் கட்டடம் மட்டும் வர இருக்கிறது. மேலும்
அந்த அமைப்பு முழுவதையும் பார்த்தால், ஏறத்தாழ 35–40 லட்ச
ரூபாய் செலவிட்டு தமிழ்நாட்டிலேயே ஒரு வகையில் புற்று நோய்
சிகிச்சையைப் பொறுத்த வரையில் ஒரு தலைமை நிலையத்தைப்போல

அது இயங்க வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணுமலை அவர்கள் அதிலே மிகப் பெரிய மன நிறைவு அடைவார் என்று எதிர்பார்க்கிறேன்.

*Siddha Dspensary in Killiyoor Union*

* 724 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government have received any representation from the Killiyoor Panchayat Union for the opening of a Siddha Dispensary during the year 1972–73?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தோலயாவேட்டையில் 10 படுக்கைகளுடன் கூடிய ஒரு சித்த மருத்துவமனை திறப்பதற்கான குறிப்பு இந்திய மருத்துவ இயக்குநரால் பெறப்பட்டுள்ளது. போதிய விளக்கங்களுடன் கூடிய திருத்தப்பட்ட குறிப்பு அனுப்புமாறு இந்திய மருத்துவ இயக்குநர் கன்னியாகுமரி மாவட்ட மருத்துவ அதிகாரியை கேட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ்: இந்திய வைத்தியமுறையை ஊக்குவிப்ப தற்கும், இந்த மருத்துவ முறையில் சித்த வைத்தியக் கல்லூரியிலிருந்து தேறியவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும் இவ்விதமான மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதற்கு அரசு மானியம் கொடுத்து செயல்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒன்றியத்தினுல் நடத்தக்கூடிய இந்த மருத்துவமனைகள் ஒன்று கிராம மருத்துவமனையாகவோ அல்லது ரெகுலர் டிஸ்பென்ஸரி அல்லது பார்ட்-டைம் டிஸ்பென்ஸரி யாகவோ அமைப்பதற்கு இன்றைக்கு இடம் இருக்கிறது. அதற்குத் தேவையான பொருளாதார வசதி அவர்களிடம் இருக்கிறதா என்று உள்ளாட்சித் துறை செயலாளரும், அதற்குப் பின்னர் நிதித்துறை செயலாளரும் பரிசீலித்து, அந்த முறைப்படி ஒன்றியத்திற்கு வாய்ப்பு இருக்கும், அவர்கள் நடத்தலாம் என்று சொல்லி, அவர்கள் நடத்து வதற்கு முன்வந்தால், அப்படி எல்லா வாய்ப்புகளும் இருக்குமானுல் அரசு என்ன உதவி செய்யும் என்பதை அப்பொழுதுதான் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: சித்த வைத்தியமுறை மிகச் சிறந்த முறை என்று கூறப்படுகிறது. இதிலே சில ரகசியமான முறைகளை பத்தியர்கள் வெளியிடுவதில்லை. அவர்கள் பரம்பரையாக இந்த



ரகசியத்தை வைத்துக்கொண்டிருக்கிற ஒரு முறையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை வெளியில் கொண்டுவருவதற்கு அரசு முயற்சி எடுத்து, இப்படிப்பட்ட முறைகளை இந்த மருத்துவமனைகள் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நூலிலிருந்து கிடைக்கக்கூடிய உண்மைகள் சில பயிற்சியில் மாத்திரம் இருந்தாலும், நூலில் உள்ள அப்படிப்பட்ட உண்மைகள் ஆராயப்பட்டு, ஆதாரபூர்வமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றை பார்மகோபியா முறையில் மருந்து தயாரிப்பதன் மூலம் அங்கே இடம் பெறச்செய்யலாம். அதேபோன்று ரகசியங்களை யார் தெரிவித்தாலும் அதை ஒப்பு நோக்கி அரசு ஏற்றுக்கொள்ளும்.

*Conversion of sea-water into drinking water.*

* 725 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have decided to put up a plant near Madras to convert the sea-water into drinking water; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: கடல் நீரை குடிநீர் ஆக்குகின்ற திட்டத்தை எண்ணூர் நிலையத்தில் உருவாக்க வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்பு மத்திய அரசு கூறியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்தது. இது குறித்து மத்திய அரசு நமது அரசுக்கு தகவல் அனுப்பி யிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அவ்வாறு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. ஆனுல் அதற்குப் பதிலாக கல்பாக்கம் அணுமின் சக்தி உற்பத்தி நிலையத்தில் இயல்பாக ஒரு நாளைக்கு ஒரு மில்லியன் காலன் தண்ணீரை, கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதற்குரிய ஒரு பெரிய அமைப்பை ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் இன்னும் மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றலாம் என்று அவர்கள் கருது கிருர்கள். அது ஒரு பரிசீலனை திட்டமாக இருக்கிறது. அப்படி மூன்று ஆண்டு காலத்திற்குள் அது ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டால், ஒரு வகையில் ஒரு முன்னேடித் திட்டமாக, ஆய்வுக்குரிய

திட்டமாக நிச்சயம் அது இருக்கும். அப்படி பெரிய செலவாகிறது என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நினைத்த வகையில் செயலாற்ற முடியவில்லை.

திரு. எம். தேவராசன் : கடல் நீரில் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து போகும் கழிவுப் பொருள்களின் நச்சு கலந்திருப்பதால், பல கெமிகல்ஸ் கலப்பதால் மீன்கள் செத்துவிடுகின்றன. அதனால் பல நோய்கள் உண்டாகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடல் நீரைக் குடி நீராக மாற்றுவது பற்றிய கேள்வி இது . . .

திரு. எம். தேவராசன் : அம்மாதிரி கெமிகல்ஸ் கலப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படி கழிவுப் பொருள் கலக்கின்ற மிகுந்த அளவைக் குறைத்து பாதகம் ஏற்படாமல் செய்கிறார்கள். மிகுந்த அளவைக் குறைப்பதாலும், கழிவுப் பொருள்களின் தரத்தை மாற்றுவதாலும் பொதுவாக உலகம் எங்கும் ஆலோசனை நடத்தி குடிநீராக மாற்றுவதற்கு, அதிலுள்ள உப்புத் தன்மையை மாற்றி வேறு தீங்குகள் இருப்பினும் அவற்றையும் மாற்றுவதற்கும் அந்த அமைப்பு இடம் தரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இது மிகுந்த செலவுடையதாக இருக்கும் என்பது அடிக்கடி கூறப்படும் ஒன்றாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, it is stated that the percentage of salt in sea water differs from sea to sea. So may I know fom the Hon. Minister whether any investigation has been made to find out the percentage of salt in the sea water near Madras?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக ஏராளமான உப்பு தமிழ் நாட்டு கடற்கரை ஓரத்தில் தயாரிக்கப்படுகிறது. இதிலிருந்து தமிழ் நாட்டு கடற்கரையிலே உப்பு கலந்து இருக்கிற அளவு குறைவாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஏராளமாகத்தான் இருக்கும்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னை நகரத்தில் நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டே போகிறது. வீராணம் திட்டத்தை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டம் நிறை



வேறினால் கூட போதுமான அளவுக்கு குடிநீர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு கடல் நீரை குடி நீராக மாற்றுவதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க முயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்பொழுது வீராணம் திட்டத்தை விரைவாக நிறைவேற்றவேண்டும் என்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு கட்டமாகத் தான் தமிழக அரசு நிதி ஒதுக்கி பல காரியங்களைச் செய்ய முடியும். அந்தக் கட்டத்திற்குப் பின் இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : முதல் முதலாக இஸ்ரேல் நாட்டில் கடல் நீரை குடி நீராக மாற்றுவதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் அதில் வெற்றியடைந்திருக்கிறார்கள். அமெரிக்காவும் வெற்றிகரமாக அந்த சோதனையை செய்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் கல்பாக்கம் அணு மின்சார உற்பத்தி நிலையத்தில் செய்து பார்க்கலாம் என்று சொன்னார்கள். கடல் நீரை குடி நீராக ஆக்குவதற்குப் பதிலாக அதைப் பாசனத்திற்கு உபயோகப்படுத்துவதற்கான முறையில் விரிவாக ஆராய்ச்சி செய்வதற்கு சர்க்கார் அவர்களுக்கு ஆலோசனை சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதெல்லாம் விஞ்ஞான முறையில் ஆராய்வதற்குரியதாகும். பல்வேறு நிலையில் பல்வேறு நாடுகளில் நடைபெறுகிற ஆராய்ச்சியிலிருந்து நம்முடைய பொருளாதார நிலையில் நாம் அதைச் செயல்படுத்தக்கூடிய அளவுக்கு ஆராய்ச்சி விஞ்ஞான முறையில் அப்பொழுது தான் செய்ய முடியும். இப்பொழுது 1,000 காலன் தண்ணீரை ஜப்பானிய முறைப்படி குடி நீராக மாற்ற ரூ. 11 ஆகிறது என்று கணக்குப் போடப்பட்டிருக்கிறது. அப்படிக் கணக்குப் போட்டு 4, 5 ஆண்டுகள் ஆகின்றன. இப்பொழுது கணக்குப் போட்டால் ரூ. 11 என்பது ரூ. 14, 15 ஆகும். தமிழ்நாட்டுப் பொருளாதார நிலையைப் பார்க்கும்பொழுது இது நிறைய செலவுடையதான திட்டம் என்று நான் கருதப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : ஆண்டுக்கு ஆண்டு சென்னையிலும் மற்ற பகுதிகளிலும் ஏற்படுகின்ற தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க ரஷ்ய நாட்டில் மிகக் குறைந்த செலவில் கடல் நீரை குடி நீராக ஆக்குகின்ற திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதாக அங்கே பரிசீலிக்கப்பட்டதில் தெரியவருகிறது. ஆகவே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ரஷ்ய

நாட்டிற்குச் சென்று அந்த முறையைக் கற்று வந்தால், சிறப்பாக அதை இங்கே நிறைவேற்றுவதற்கு வழி பிறக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விஞ்ஞான அறிவு என்பது ஒரு நாட்டிலே அவர்களே வெற்றிகரமாக ஒரு காரியத்தை முடிப்பதற்கு உதவுவதாகும். விஞ்ஞான அறிவு மற்றவர்களுக்கு எளிதாக கிடைத்துவிடும். ரஷ்யா போகவேண்டும் என்ற ஆர்வத்தை எல் மூலமாக நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கடல் நீரை குடி நீராக மாற்றுவது என்பது தண்ணீர் கிடைக்காத இடங்களில் மேற் கொள்ள வேண்டிய ஒரு முயற்சி. ஆனால், சென்னையைச் சுற்றி 20 மைல், 30 மைல் அளவுக்கு கிரவுண்டு வாட்டர் பூமிக்கு அடியில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. வேண்டுமானால் குடிப்பதற்கு லாயக்கு இல்லாத தண்ணீராக இருக்கலாம். ஆனால் கடல் நீரை குடி நீராக ஆக்கவேண்டும் என்றால் அதற்கு நிறைய மின்சாரம் தேவைப்படுகிறது. நம்மிடம் மின்சாரம் இல்லை. ஆகவே, இந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் அனுவசியமாக பரிசீலனை செய்து கொண்டு இருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அமைச்சர் அவைசியமான வேலையிலே ஈடுபட்டிருப்பதைக் குறைப்பது நல்லது தான். உலகில் எங்கும் சில பிரச்னை பேசப்படும்பொழுது, நம்முடைய நாட்டிலும் அது பற்றி பேசப்படுவது இயற்கை. அந்த முறையில் கல்பாக்கம் அணு மின்சக்தி நிலையத்தில் அவர்களுக்கு கிடைக்கின்ற ஒரு வெப்ப அலை மூலம் இயல்பாகவே அணு சக்தி மின் நிலையத்தின் தேவைக்காகவே அதை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கருதி இருப்பார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அது மத்திய அரசின் முயற்சியில் நடைபெறுகின்ற காரியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 726 எண்ணுள்ள கேள்வி பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Bridges across A.V.M. Canal*

* 727 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that the bridges constructed in the A.V.M. Canal at several places need reconstruction in Kanyakumari district?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: இந்த ஏ.வி.எம். கால்வாயில் உள்ள பாலங்கள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. சில பாலங்கள் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கின்றன. மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் இது பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பாலங்களை உடனடியாக பழுது பார்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா? எப்பொழுது அவைகள் பழுதுபார்க்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது வரையில் அந்தக் கால்வாயை யார் பராமரிப்பது, யார் மராமத்து செய்வது என்பது இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் அதைப் பொதுப் பணித் துறை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினிடம் சில தகவல்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. தகவல்கள் வந்தவுடன் வேலைகளை துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

*Water-supply for ayacuts in Kanyakumari.*

* 728 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware of the withering away of standing crops at Kanyakumari district due to inadequate supply of water during September 1973; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) பேச்சிப்பாறை பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களிலிருந்த தண்ணீரைக் கொண்டும், மேல் கோதையாறு நீர்த்தேக்கத்திலிருந்து அதிகப்படியான தண்ணீர் பெற்றும், வாய்க்கால்களுக்கு இடையே முறைப்பாசனம் ஏற்படுத்தியும் கோதையாறு பட்டணம்கால் ஆயக்கட்டுப் பிரதேசத்தில் உள்ள விளைநிலங்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செப்டம்பர் 73-ல் வளரும் பயிர்கள் எதுவும் வாடவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் "டெயில் என்ட்" நிலங்களில் செப்டம்பர் மாதத்தில் கூட வளரும் பயிர்கள் வாடியும் கரிந்தும் காணப்படுகின்றன. அந்த

முறையில் தற்போது கூட ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போக்க அரசாங்கம் தண்ணீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த பாதகம் ஏற்பட்டிருப்பதற்கு தண்ணீர் விநியோகம் காரணம் அல்ல. பருவ மழை பொய்த்ததுதான் அதற்குக் காரணம். பருவ மழை பொய்த்ததற்கு என்னால் எதுவும் செய்ய முடியாது.

ஐயன்குளம் ஏரியை ஆழப்படுத்தல்

* 729. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கருகில் உள்ள ஆயக்குடியைச் சேர்ந்த ஐயன் குளத்தை ஆழப்படுத்தி வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1 20 இலட்சம். எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 87.75 டன்களாகும். ஒரு டன்னுக்கு ஆகும் செலவு ரூ. 1,368. இத்திட்டம் 1974-75-இல் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 730. வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தினை ஊக்குவிக்க (Consumer Co-operative Movement) அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, சிறு சிறப்பங்காடிகள், நுகர்வோர் தொழில்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், கிடங்குகள் கட்டுதல், பாரவண்டிகள் வாங்குதல், பங்கு மூலதனம், நிர்வாக உதவித்தொகை ஆகியவற்றை வழங்குதல் போன்ற பல



வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. ஆதாயம் இல்லாமல் இயங்கிவரும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புத்துயிர் அளிப்பதற்காக சிறப்பு நிதி உதவியும் அளிக்கப்படுகிறது. இன்றியமையாப் பொருட்களைச் சில்லறையில் விநியோகம் செய்யும் பணியை வருங்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களிடம் படிப்படியாக ஒப்படைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காக 1—4—69-லிருந்து 31—3—73 வரை வழங்கப்பட்ட நிதியுதவி ரூ. 125.97 லட்சமாகும். இதைத்தவிர மாநில திட்டத்தின் நிதி வரம்பிற்குப் புறம்பாக இந்திய அரசிடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது. துறைப் பண்டகசாலைகளையும், பெரிய அளவிலான சில்லறைக் கடைகளையும் திறந்து அவற்றை விரிவு படுத்துதல், நுகர்வோர் தொழில்களை ஏற்படுத்தல் ஆகியவை குறித்த மத்திய அரசுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மேற்படி நிதியுதவி பெறப்படுகிறது. நிதியுதவி அளிக்கும் வங்கிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக அவசியமான இடங்களில் மேற்படி வங்கிகளுக்கு அரசு உத்தரவாதமும் அளிக்கப்படுகிறது.

திரு. கி. ஜெயராமன்: தலைவரவர்களே, உறுப்பினர்கள் பங்குத் தொகை குறைந்தபட்சம் எவ்வளவு என்பதையும், சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துகின்ற அளவுக்கு பங்குத் தொகையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர்களுடைய பங்குத் தொகையை இப்போது குறைப்பதாக உத்தேசம் இல்லை. இப்போதுள்ள பங்குத்தொகையே இருக்கும். சர்க்காரின் பங்குத்தொகை, சிறப்பங்காடிகள், சிறு சிறப்பங்காடிகள் ஆகியவைகளுக்குள்ள விகிதாசாரங்களிலும்—தொகையில் மாற்றம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், பற்றுக்குறைப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு குறைந்த அமைப்பாக கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்துவது மிக நல்லது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் கூட்டுறவுத் துறையின் தேவையை உணர்ந்து, குறைந்த

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: போக்குவரத்துக் கட்டுப்பாடுகளினாலோ அல்லது இதர காரணங்களினாலோ இறக்குமதி குறைந்துவிடவில்லை. நமக்கு 9,000 டன் கோதுமை கொடுத்திருக்கிறார்கள். 20,000 டன் வேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு, நான் கேட்டிருக்கிறேன். அதற்கு அவர்களிடமிருந்து இன்னும் விபரம் வரவில்லை. மேலும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஒருவேளை தனிப்பட்ட முறையில் வியாபாரிகள் சென்று 50 சதவிகிதம் லெவி கொடுத்துவிட்டு, கொள்முதல் செய்து வருவதற்கு மத்திய சர்க்கார் அனுமதிக்கலாம் என்று தெரிகிறது. அதுவும் அவர்களுடைய பதில் வந்தால்தான் தெரியும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் கோதுமை இறக்குமதியில் காலதாமதம் ஏற்பட்டதா? கடற்கரையில் கோதுமை தேங்கிக் கிடந்தது என்பது உண்மையா? அப்படியானால் அதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அது தொழிலாளர்களுடைய கட்டுப்பாடு, போராட்டங்களினால் ஏற்பட்டிருக்கலாம்; இப்போது அப்படி இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், 9,000 டன் கோதுமை ஒரு மாதத்திற்கு நமக்கு விநியோகத்திற்கு வருவதாகச் சொன்னார்கள். அது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறதா? அல்லது வேறு அமைப்புகளின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறதா? ஏற்கனவே இந்த விநியோக முறையை இனி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செய்யப்போவதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததே. ஆகவே, இப்போது எந்த முறையில் விநியோகம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கோதுமையை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் விநியோகம் செய்கிறோம். ஆனால் சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் ஒரு சில இடங்களில் கூட்டம் அதிகமாக இருப்பதால், பரவலாக விநியோகம் செய்கின்ற முறையில் டி.யு.சி. எஸ். மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசில பகுதிகளில் தான் அப்படி செய்யப்படும். முழுவதும் கூட்டுறவுத் துறையில் விநியோகம் செய்யவில்லை.



974 ஏப்ரல் 3]

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, சர்க்கரை வியாதி
பிடித்தவர்கள் அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு தாராளமாக
கோதுமை கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்
கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே,
தாராளமாக எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்
கிறோம். சர்க்கரை வியாதி பிடித்தவர்கள் என்று தகுந்த அத்தாட்சி
களைக் காட்டுகிறவர்களுக்கு ஒரு நபருக்கு 5 கிலோ வதம் கொடுக்க
உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. மா. வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, சென்னை
மாநகரத்தை ஒட்டியுள்ள பெல்ட் ஏரியா என்று சொல்லப்படுகிற
புறநகர் பகுதிகளிலும் சென்னை மாநகரில் எந்த அடிப்படையிலே
உணவுப்பொருட்கள்—கோதுமை உட்பட—விநியோகிக்கப்படுகிறதோ
அதே அடிப்படையில்தான் தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும், சென்னையில் வழங்கப்படுவது
போலவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் பெல்ட் ஏரியாக்
களிலும் வழங்கப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும்
செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அந்த
முறையில் கோதுமை வழங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்?
இனிமேலாவது அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: காரணம் பற்றாக்
குறை தான். 9,000 டன் தான் வந்துகொண்டிருக்கிறது. எங்கெங்கே
கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் அதை கொடுக்கிறோம். தமிழ்
நாடு முழுவதும் கொடுக்கின்ற அளவுக்கு வரவில்லை.

(முற்பகல் 9-30)

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்பொழுது
அரசாங்கம் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்குத்தான் கோதுமை
கொடுக்கப்படும் என்று சொன்னவுடன் திடீரென்று சர்க்கரை வியாதிக்
காரர்களுடைய எண்ணிக்கை அதிகரித்த விவரம் அரசாங்கத்துக்குத்
தெரியுமா? அதற்காக அவர்கள் கோதுமை பெற முயற்சிக்கிறார்கள்.

ஆகவே, பொதுவாகவே சர்க்கரை வியாதியைத் தடுப்பதற்குக்
கூட கோதுமை உதவியாக இருக்கும். கோதுமையை உண்ணும்
படியாக, இந்த அரசாங்கமும் இன்னும் இதற்கு முந்தைய அரசாங்

கமும் பிரச்சாரம் செய்தது. ஆகவே, பரவலாக எல்லோருக்குமே கோதுமை கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சர்க்கரை வியாதி இல்லாதவர்கள் கோதுமை வாங்குவதாக கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல் தெரிகிறது. அப்படி யார், யார் வாங்குகிறார்கள் என்று சொன்னால், நிறுத்தி விடுகிறேன். கோதுமை சாப்பிட்டால், சர்க்கரை வியாதி வராது என்று யார் சொன்னார்கள், எந்த மருத்து வர்கள் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அப்படியென்றால், கோதுமை ரொம்ப சாப்பிட்டு, சர்க்கரை வியாதிக்காரர்கள் தேறி யிருப்பார்கள். உறுப்பினர் அவர்கள் கோதுமை சாப்பிட்டால், சர்க்கரை வியாதி வராது என்று கூறுவது போல் தெரிகிறது. அந்த மாதிரி மருத்துவ ஆராய்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கோதுமை மொத்த வர்த்தகத்தை அரசு கைவிட்டதற்குப் பிறகு, இந்த மாநிலத்தினுடைய தேவைக்கேற்ற அளவுக்கு கோதுமை பெற, அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டி ருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எந்த மத்திய அமைச்சரைக் கேட்க வேண்டுமோ, அந்த மத்திய அமைச்சரை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது, தந்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் அதற்காக ஏதாவது முயற்சி செய்தால் நன்றாக இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி : கோதுமை பெற, ரேஷன் அதிகாரி யிடமும் சர்டிபிகேட் வாங்கவேண்டும், டாக்டரிடமும் சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும், டையபெட்டிக் பேஷண்ட் என்று. 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு டையாபெட்டிக் கம்பிளெயின்ட் வந்துவிடு கிறது. அதில் ஒரு டிகிரி ஜாஸ்தியாக இருக்கலாம், அல்லது கம்மியாக இருக்கலாம். ஆகவே, 40 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் கோதுமை கொடுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 40 வயதுக்கு மேற் பட்டவர்களைக் கனம் உறுப்பினர் அவர்கள் பயமுறுத்துகிறார்கள். (சிரிப்பு) 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வரும் என்ற கணக்கே கிடையாது. எனக்கு 52 வயது வரையிலும் டையபெட்டிஸ்



கிடையாது. 30 வயது உள்ளவர்களுக்குக் கூட, டையபெட்டிஸ் வந்துவிடுகிறது. (குறுக்கீடு) இப்பொழுது இருக்கிறது. ஆகவே, வயதைப் பொறுத்து டையபெட்டிஸ் இருக்கிறது என்ற நிலைமையே கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

உணவுப்பொருள் வழங்கல் கழக டிரைவர்கள் முதலியோர்

* 733. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில உணவுக் கார்ப்பரேஷனில் பணியாற்றும் லாரி டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியோர் 10—8—72 அன்று உணவு அமைச்சரிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு ஏதேனும் கொடுத் துள்ளனரா?

(இ) ஆம் எனில், அக்கோரிக்கைகளுக்குள் எவையெவை நிறை வேற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உணவு வழங்கு துறையிலே பல்லாண்டுகாலம் பணியாற்றுகிற லாரி டிரைவர்ஸ், கிளீனர்ஸ், இப்பொழுது அந்த லாரிகளை வேறு துறை களுக்கு விற்கிற காரணத்தால் வேலை இழக்கிற சூழ்நிலையிலே இருக் கிறார்கள். அவர்களது முன்னாள் கோரிக்கைகூட, மாற்று வேலைகள் தங்களுக்குத் தரப்படவேண்டும், அல்லது போக்குவரத்துத் துறைக் காவது அனுப்பப்பட வேண்டுமென்பது. ஆகவே, அவர்களது கோரிக்கைகள் கவனிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது, லாரிகளை விற்றுவிட்டபிறகு. சென்னை போலீஸ் கமிஷனரிடம் 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு 4 லாரிகள் கொடுத்திருக்கிறோம், மெட்ராஸ் புட் செல்லுக்கு, டபுட் டிபார்ட்மெண்டில் இருக்கிற போலீஸ் துறைக்கு 3 லாரிகள் கொடுத்திருக்கிறோம். நாங்கள் 4 வைத்திருக்கிறோம். போலீஸ் கமிஷனருக்கு கொடுத்துள்ள 4 லாரிகளுக்கு 4 லாரி டிரை வர்களை அனுப்பினோம். அது போல், சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷனுக்கு கொடுத்திருக்கிற 4 லாரிகளுக்கு 4 டிரைவர்களைப் போகச்

[1974 ஏப்ரல் 3

சொல்கிறோம். அவர்கள், இருந்தால், சிவில் சப்ளைஸ் டிபார்ட் மெண்டில்தான் இருப்போம், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குக் கூடப் போகமாட்டோம் என்று சொல்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் தான் தலைவர் என்று நினைக்கிறேன். இருந்தால் இங்குதான் இருப்போம் என்று சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குக்கூடப் போக மறுக்கிறார்கள். போலீஸ் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்ட அந்த 4 லாரிகளுக்குக் கூட டிரைவர்கள் போக மறுக்கிறார்கள். புட் செல்லிலே வைத்திருக்கிற போலீஸ் துறைக்கு 3 லாரி கொடுத்திருக் கிறோம். அதற்கும் போக மறுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவர் என்று கருதுகிறேன். ஆகவே, நியாயமான முறை யிலே அதைத் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர் களுடைய நியாயங்களை ஏற்றுக்கொள்கிறோம். அப்படி வேலைக்கு எற்றுக்கொள்கிற நேரத்தில் சர்விஸுடன் எடுத்துக்கொள்வதாக இருந்தால் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அதை கட் செய்கிற காரணத்தால்தான், அவர்கள் போகத் தயங்குகிறார்கள்; இதற்கு உரிய பரிகாரம் காணப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர்களுடைய 8 கோரிக்கைகளிலே அந்தப் பிரச்னையே வரவில்லை. வேறு இடத்திற்கு மாற்றப்படுவதால், எப்படி சர்விஸ் குறைக்கப்படும் என்பது தெரியவில்லை. முன்பு என்ன என்ன உரிமைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவோ, அத்தனை உரிமைகளும் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள்

* 734 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1972-ல் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் ஒதுக்கப் பட்ட குடியிருப்புக்களுள், அவற்றை பெற்றுக்கொண்டோர், மற்றவர் களுக்கு விற்பனை செய்தனர் என்பதற்காக அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?



1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(அ) ஆம்.

(இ) தாண்டவராய சத்திரத்தில் 265-ம் எண்ணுள்ள குடியிருப்பு ஒதுக்கப்பெற்ற திரு. நடராஜன் என்பவர் அந்தக் குடியிருப்பை திருமதி கோவிந்தம்மாளுக்கு விற்றுவிட்டதற்காக அவர் மீது வழக்கு ஒன்று தொடரப்பட்டது. அவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப் பட்டு, ரூ. 100 அபராதம் அல்லது அபராதம் கட்டத் தவறினால், 2 வார கால அளவு சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

* 735 வினா—திரு. ரா. ரா முனுசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

குடியிருப்புகள் ஒதுக்கப்பெற்றுள்ளவர்களே, அக்குடியிருப்புகளில் குடியிருக்கின்றனரா என்பதை உறுதிப்படுத்த குடிசைப்பகுதி மாற்று வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடியிருப்பு ஒதுக்கப்பெற்றவர் கள் வாடகை வைப்பீட்டுத் தொகையைச் செலுத்திய பின்னரும், சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் அவர்களுடைய கையெழுத்தைப் பெற்ற பின்னரும், குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. குடியிருப்பு ஒதுக்கப் பட்டவர்களுக்கு குடியிருப்பு விவர குறிப்புப் புத்தகமும் (பாஸ் புத்தகம்) வழங்கப்படுகிறது. இந்த குடியிருப்புகளுக்கு குடிசை மாற்று வாரிய பணியாளர்கள் திடீர் எனச் சென்று பார்வையிடு கின்றனர். முன்னர் குடிசைப்பகுதி மாற்று வாரியம் எடுத்த நிழற் படங்களை வைத்துக்கொண்டு குடியிருப்பிலுள்ளவர்களை சரிபார்க் கிறார்கள். மாறுபாடு எதுவும் காணப்பட்டால் குடியிருப்பில் அனு மதியின்றி குடியேறியுள்ளவர்களை வெளியேற்ற வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, ஒருவர் பேரில் பல குடியிருப்புகள் இருக்கிற நிலை இருக்கிறது. ஒருவர் பல பேரில் குடி யிருப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையை அகற்றுவதற்காக ஏதாவது தீவிர நடவடிக்கை எடுப்பீர்களா? என்ன நட வடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் குடிசை மாற்று வாரியப் பகுதியிலே இல்லை. ஆனால், சிலபேர் தாங்கள் பெற்ற வீடுகளை, சப்-லீஸ், மற்றவர்களுக்கு வாடகைக்குவிடுகிற தன்மைமட்டும் சில இடங்களிலே இருக்கிறது. அது அடிக்கடிக் கண்டுபிடிக்கப்படுகிறது. 426 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு 4 பேர் மீதுதான் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த 4 பேர் மீதும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எந்தப் புகார் வந்தாலும், அதற்கான நடவடிக்கையை எடுக்க குடிசை மாற்று வாரியம் தவறுவதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தாண்டவராய சத்திரத்தில் 265-ம் எண்ணுள்ள குடியிருப்பை வாங்கிய கோவிந்தம்மாளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த அம்மையார் ஒரு விதவை. அவர்களுக்கு விதிகளெல்லாம் தெரியாது. இருந்த நகைகளை எல்லாம் விற்றுவிட்டு, ரூ. 1,500-க்கு அந்த வீட்டை இன்னொருவரிடத்திலிருந்து வாங்கிக் கொண்டார்கள். வாங்கியவருக்கு ரூ. 100 தண்டனை கொடுப்பதைவிட, விற்றவருக்குத் தண்டனை கொடுப்பதுதான் நியாயம். அந்த அம்மையார், உள்ளபடியே வேதனையோடு, குழந்தை குட்டிகளோடு வந்து கதறி அழுதார்கள். அதனாலே, வாங்கியவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைவிட, விற்றவர்களுக்குத் தண்டனை கொடுப்பதுதான் நியாயம் என்று, அரசு விற்றவர்களுக்குத் தண்டனை கொடுக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினருடைய ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நான் கருதுகிறேன். ஆனால், ஏழைகளுக்கு நாம் இரக்கம் காட்டுவதாகக் கருதிக்கொண்டு, தவறுகளை மலிய விடுவதற்கு யாரும் முற்பட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, ஒரு குடும்பத்தில், தாய்க்கும் தந்தைக்கும் 5, 6 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் திருமணம் செய்து வைக்கிறபொழுது, ஒரு வீடு போதாது என்ற நிலை இருக்கும்போது, 4 பேர் சேர்ந்து, குடும்பம் என்று வைத்து, தனித்தனியாகப் பிரியும்போது, அவர்கள் வீட்டுவசதி வாரியத்திற்குத் தாக்கீது அனுப்புகிற நேரத்தில், 4 வீடுகள் பெறுகிறார்கள், 3 வீடுகள் பெறுகிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்படுகிறதே, அந்தச் சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக, அரசு பரிசீலனை செய்து, பெரிய குடும்பமாக இருந்தால், 2 வீடு, 3 வீடு கொடுக்கலாம் என்ற முறையை அரசு ஏற்படுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில், 1,600 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. 7 ஆண்டுக் காலத்திலே அவைகள் கட்டிக் கொடுக்கப்பட இருக்கின்றன. மக்கள் நல் வாழ்வுத் துறை விருப்பத்திற்கு நேர்மாறாகக் குடும்பங்களைப் பெருக்கிக் கொண்டே இருந்தால், நாடு சமாளிப்பது மிகவும் கடினம். ஆகவே, அப்படிப்பட்ட கோரிக்கைகளை உறுப்பினர் அவர்கள் மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : குடிசை மாற்று வாரிய வீடுகளிலே யார் இருக்க வேண்டுமோ அவர்களுக்குப் பதிலாக, வேறு ஆட்கள் இருந்ததாக, நால்வர் மீது நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் எவ்வளவு பேர் இருக்கக் கூடும் என்று அரசாங்கத்திற்கு யூகம் இருக்கிறதா? அல்லது கணக்கு இருக்கிறதா? வீட்டை வாடகைக்கு விடுகின்றவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்ற குடிசைகள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவு வீடுகள் தானே கட்டப்படுகின்றன, அப்படி இருக்கும்போது, ஒரே குடும்பத்தில் பல பேருக்கு வீடு கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதில் உண்மை நிலை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சில பேர் வாடகைக்கு விட்டு விடுகிறார்கள். பின்னாலே மீண்டும் குடிசைகள் போட்டுக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட தவறுகள் சில இடங்களிலே நடைபெறுகின்றன. நாங்கள் போகிற இடங்களிலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட தவறுகள் செய்த 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான குற்றவாளிகள் அங்கே இல்லையென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் மக்கள் தொடர்பு

* 736 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வீட்டு வசதி வாரியம், தனது புதிய குடியிருப்புத் தொகுதிகளிலுள்ளோர் நலனுக்காக மக்கள் தொடர்புத் திட்டம் எதனையும் தொடங்கியுள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. இராசாராம்: விவரமான அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: நான்-ஹவுசிங் போர்டு ஏரியாவிலும் சென்று குறைகளை விசாரித்து, அவற்றை நீக்குவதற்கு அரசாங்கம் கையாண்டு வருகிற முறை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் சம்பந்தமாகத்தான் இந்த இலாக்கா பணி புரியும். எல்லா இடங்களுக்கும் செல்வது இல்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட விவரப்படி—மின்துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை ஆகியவற்றின் அலுவலர்களும் வருவார்கள்—மாதத்தில் ஒருநாள் சென்று அங்குள்ளவர்களின் குறைகளைக் கேட்டு, அடுத்த மாதம் கூட்டம் நடப்பதற்குள் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்தத் திட்டம் செயல்படுகிறது.

### அண்ணாசாலையிலுள்ள மின்வாரியக் கட்டடம்

* 737 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா சாலையிலிருக்கும் மின்சார-வாரிய கட்டடத்தை புதுப்பித்து 10 நிலை கட்டடமாக கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆமெனில், இதற்காகும் செலவு மதிப்பிடப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) ரு. 91.50 இலட்சம்.

திரு. எம். சுரேந்திரன்: இம்மாதிரி கட்டிடங்களைப் பெரிதாகக் கட்டுவது நல்லதுதான். இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியில் டெட்காபிடலாக இப்படி பணத்தை முடக்கிவிடுவது நல்லதுதானா? அரசாங்கக் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சில விவரங்கள் முழுமையாகத் தெரியாத காரணத்தினால் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்கள். மின்சார வாரியம் கட்டிடம் இல்லாது பல இடங்களில் வாடகைக்

@ 137-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 3]

கட்டிடத்தில் இருக்கின்றன. வாடகையாக ஆண்டுக்கு 10,60,711 ரூபாய்க்குமேல் கொடுக்கிறது. ஒருகோடி கட்டிடத்திற்குச் செலவானாலும் சீக்கிரமே அந்தப் பணம் வாடகை மிச்சமாக வந்துவிடும் என்கிற வேண்டுகோளையும் விடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

### குன்றத்தூர் பகுதியில் புலிகள்

* 738 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகில் உள்ள குன்றத்தூர் அருகே வாழும் கிராமத்தார்களை 29—3—1973-ம் நாள் அளவில், புலிகள் தாக்கின என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### *Tamil Nadu Dairy Development Corporation.*

* 739 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation had in recent times produced a cattle feed scientifically; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பால்வள நிறுவனம், ஈரோட்டில் கால்நடைத் தீவனத் தொழிற்சாலை ஒன்றை நடத்தி வருகிறது. இதன் உற்பத்தித் திறன், மணிக்கு அரை டன் ஆகும். ஈரோடு பால்பண்ணைக்குப் பால் வழங்குகின்ற உழவர்களுக்கும், இந்தக் கால்நடைத் தீவனம் வழங்கப்படுகிறது.

* 740 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation had, in collaboration with the banks, started in recent times a scheme to finance small farmers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) 1. சிறு பால்பண்ணைகளை நிறுவுவதற்கான திட்டம்.

2. வேலையற்ற பட்டதாரிகள் மாதவரம் பால் பண்ணையில் பால் பண்ணை நடத்தும் திட்டம்.

3. கிடேரிக்கன்று வளர்ப்புத் திட்டம்.

4. பால் வற்றிய பசுக்கள் பண்ணைத் திட்டம்.

5. கால்நடைத் தீவன உற்பத்தி மும்முரத் திட்டம்.

*741 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that a calf rearing scheme offering a maintenance allowance to owners and a subsidised fodder development scheme had been launched in recent times by the Tamil Nadu Dairy Development Corporation; and

(b) if so, the details thereof.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) கன்று பிறந்ததிலிருந்து ஆறாவது மாதம் தொடங்கி 18 திங்களுக்கு கன்று உதவித்தொகையாக ரூ. 240 வழங்குவதற்கு "பால் பெருக்குத் திட்டம்" வகை செய்கிறது. கால்நடைத் தீவன உற்பத்திக்காக ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200 உதவித்தொகை வழங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: மாட்டுத் தீவனம் தயாரிக்கப்பட்டு சப்சிடி ரேட்டில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் மேலும் பலவிடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா? பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க நான்கு திட்டங்கள் போட்டதில் 2 பேருக்குத்தான் வேலை கொடுக்க முடிந்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நியாயமான விலையில் தீவனம் கொடுக்கத்தான் ஆங்காங்கு சிறந்த முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கால்நடைத் தீவனம் தயார் செய்கிறார்கள். ஈரோடு கால்நடைத் தீவனத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு $\frac{1}{2}$ டன் தயார் செய்கிறார்கள். பால்வள வாரியத்தின் சார்பிலும், பால்வள நிறுவனத்தின் சார்பிலும் கால்நடைத் தீவனத் தொழிற்சாலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இரண்டாவது கேள்வி என்ன?



மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேட்கிற நேரத்தில் அமைச்சர்கள் நினைவில் கொண்டு பதில் சொல்கிற அளவுக்கு ஒரு கேள்வி போடவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க நான்கு திட்டங்கள் போடப்பட்டன? 2 பேருக்குத் தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். இதற்கா அவ்வளவு பணம் செலவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம் இல்லை—பால்பண்ணை நடத்த பயிற்சி கொடுக்கும் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து வருகிறார்கள். பயிற்சிக்குப் பின் அவர்களுக்கு வங்கிகள் மூலம் பணம் கடன்கொடுத்து பால்பண்ணை ஏற்படுத்த உதவி செய்யப்படும். தனிப்பட்ட பட்டதாரி யாருக்கும் வேலை கொடுத்ததாகச் சொல்லவில்லை.

திரு. இரா. மாணிக்கவாசகம்: அமைச்சர் அவர்கள் கால்நடைத் தீவன உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். இந்தத் திட்டம் வேகமாகச் செயல்படாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் கேரளாவிற்கு ஓட்டிச் செல்லப்படுகிறது. இதைத் தடுக்க இங்கேயே கால்நடை தீவன உற்பத்தியை விரைவாகச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தீவன பற்றாக்குறை காரணமாக கேரளத்திற்கு மாடுகள் கொண்டுசெல்லப்படுவதாக இங்கே சொல்லப்படுகிறது. அது தவறான கருத்தாகும். இங்கே கருத்து பசுமாடாக இருந்தாலும், காளையாக இருந்தாலும் வேலை அத்தனையும் இங்கே வாங்கிக்கொண்டு—அதன் இரத்தத்தை உறிஞ்சிய பிறகே—சக்கையாக அங்கே அனுப்பப்படுகிறது. அதுவும் கோவை மாவட்டத்தில் ஒரு வாரத்தில் பத்தாயிரக்கணக்கில் கொண்டு போகிறார்கள்.

கால்நடைத் தீவனத்தைப் பொறுத்தவரையில் ஈரோட்டில் நாள் ஒன்றுக்கு $\frac{1}{2}$ டன் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னேன். பால்வள நிறுவனம் மாதவரம், மதுரையில் நாள் ஒன்றுக்கு 13 டன் உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை நடத்தி வருகிறது. மாதவரத்தில் ஒரு புதிய தொழிற்சாலையையும் தொடங்க இருக்-

கிரேம்—பத்து லட்சம் ரூபாய் செலவில்—நாள் ஒன்றுக்கு நூறு டன் கால்நடை தீவன உற்பத்தி செய்யக்கூடிய திறன் உடையதாக இது இருக்கும்.

திரு. கோவை செழியன் : இந்தியாவிலேயே—என்னுடைய காங்கேயம் தொகுதி கால்நடைக்குப் பெயர்போன பகுதி. இப்போது அந்தப் பகுதியில் கால்நடைத் தீவனம் இல்லாத காரணத்தினுல்— திரு. மாணிக்கவாசகம் சொன்னதுபோல—குறைந்த விலைக்கே மாடுகளை விற்றுவிடுகிருர்கள். க்ரேசிங் லாண்டு என்று இருந்ததை எடுத்துவிட்ட காரணத்தினுல்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா மேய்ச்சல் பகுதிக்காக என விவசாயிகள் வைத்துக்கொள்ள அரசாங்கம் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மேய்ச்சல் தரை என்ற பெயரால் எத்தனை பேர் நிலங்களை ஒதுக்கி கொண்டு அதில் நெல்லே சாகுபடி செய்துவந்தார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு இதுபற்றிய மானியமே விவாதத்திற்கு வர இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : கேள்வி நேரமே இன்னும் 10 நிமிடங்கள் இருக்கின்றன. தயவு செய்து துணைக்கேள்வி போட அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு வருகிற மானியத்தின் கீழ் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிருர்கள். இடையில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. உரிமைப் பிரச்சினை இருக் கிறது. ஆகவே வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. இனி அடுத்து...

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) நடைமுறைக் கேள்விகள்

### (அ) முதல் ஒரு மணி நேரம் முழுவதும் வினாக்கள் கேட்க அனுமதிக்காதது குறித்து

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், நம்முடைய சட்டசபை விதியின்படி முதல் ஒரு மணி நேரம், சரியாக ஒரு மணி நேரம் கேள்விநேரத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.



அந்த ஒரு மணி நேரத்தைக் குறைப்பதற்கு சட்டமன்றமே முடிவெடுத்தால்தான் செய்ய முடியும். தாங்களாகவே குறைப்பது விதிகளின்படி சரியல்ல என்பது என்னுடைய கருத்து. இன்னும் கொஞ்சம் நேரம் துணைக் கேள்விகளை அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுக்கத்தான் பேரவையின் அனுமதி தேவையாக இருக்கிறது. கேள்வி நேரத்திற்குள்ளாகவே துணைக்கேள்வி இல்லையென்றல் கேள்வி நேரத்தை முடித்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. நான் எதற்காகச் சொன்னேனே அதன் பயனைக் கெடுத்து விடுகிறீர்கள். இங்கே உள்ளாட்சித்துறை பற்றிய மானியக்கோரிக்கை வர இருக் கிறது, அதில் பேசுவதற்கு நிறைய உறுப்பினர்கள் பெயர் கொடுத் திருக்கிருர்கள். அவர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டும், தவிர, ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம், உரிமைப் பிரச்னை ஆகியவை இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன்.

திரு. எம். சுரேந்திரன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். முக்கிய மான கேள்வியாக இருப்பதால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையதினம் மானியக் கோரிக்கை வருவதால் அதில் பேசிக்கொள்ளலாம். அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள்,

## 3. உரிமைப் பிரச்சினை.

### தவறான அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தன் கவன ஈர்ப்பு தகவல் அளித்ததாக டாக்டர் எச். வி. ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை.

MR. SPEAKER : Dr. Hande has given the following notice:

"I do hereby give notice of the privilege motion against the Hon. the Education Minister for giving an incorrect statement on 26th March 1974 in reply to my call attention notice on the plight of S.I.E.T. College students. The Minister in his reply had stated that there was a delay in the release of III term funds for the college, because the college authorities refused to submit to audit by the Government Auditing. But in today's Hindu a statement has been released by the Correspondent of the College

that the statement made by the Hon. the Minister is at variance with facts and that no Government agency had asked the College authorities to submit itself to such an audit and the delay in the release of the funds is the entire fault of the Government.

" Hence, I request you to refer this matter to the Privilege Committee to enable the House to get the correct facts."

என்று உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி உரிமைப் பிரச்னையாகும் என்பதை மட்டும் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பியிருந்தேன். இன்றைக்குச் சொல்கிறேன் என்று சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடியட்டும், பிறகு நீங்கள் சொல்லலாம். நான் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்களுக்காக உறுப்பினர் விடுதியில் இருந்து விடப் படும் தனிப்பேருந்துகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படாதது குறித்து.

திரு. ஆ. பரந்தாமன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நாங்களெல்லாம் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயிருந்து தினந்தோறும் சட்ட மன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறோம். எங்களுக்கு வசதி செய்து தரும் வகையில் அரசாங்க பஸ்களை விட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு யாரோ ஒரு உறுப்பினர் இந்தப் பிரச்னையை எழுப்பினார்கள். நாங்கள் ஏறும் நேரத்தில் அதிகமான பொதுமக்கள் அதில் ஏறிவிடுகிறார்கள், அதனால் எங்களுக்கு வசதியில்லை என்று சொன்னவுடன் இப்பொழுது பொதுமக்கள் அதில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதனால் அரசாங்க விடுதிகளில் நாங்கள் வரும் நேரத்தில் அங்கே வருகிற பொதுமக்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்து கிறார்கள். ஆகவே, 8 மணியிலிருந்து 9 மணி வரையிலும், பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரையிலும் மட்டும் எம்.எல்.ஏ.-க்களுக்கு



மட்டும் அந்த வசதியை ஏற்படுத்திவிட்டு, மற்ற நேரங்களில் பொது மக்களும் ஏறலாம் என்ற வசதியைச் செய்து தருவதற்கு நீங்கள் யோசனை செய்தால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ஸ்டேட் லெஜிஸ்லேச்சர்" பற்றிய டிமாண்ட் வரும்பொழுது அந்தக் குறைபாடுகளைக் கூறுங்கள். அப்பொழுது முடிவெடுக்கலாம்.

3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவறான தகவல் அளித்ததாக டாக்டர் எச். வி. ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை

Dr. H. V. HANDE: Mr. Speaker, I beg your permission to bring to the notice of the Minister for Education the contents of my Privilege Notice so that the House will be able to know the correct position. He had made a statement in reply to my call attention notice which I raised here about the S.I.E.T. College students. It was stated that the S.I.E.T. College was at fault, that the Education Department had sought certain details from the College and the Education Department wanted to subject the accounts of the College to departmental audit, etc. That was the information given by the Hon. Minister in this House.

The Minister also stated that the III Term funds for the college were not granted because the college authorities refused to submit to audit.

But in the Hindu, dated 30th March 1974, there was a news item by means of a statement by the Correspondent of the College that the statement made by the Minister was at variance with facts, that no Government agency asked the College authorities to submit itself to such an audit and the delay in the release of the funds was entirely the fault of the Government.

Besides, they had also stated that as early as 29th February 1974 in the proforma prescribed, there was a request by the management of the Women's S.I.E.T. College. But there was no

sanction till 6th March 1974, for nearly $1\frac{1}{2}$ months; the management was not aware that the condition for compensation for loss of fees income was that their accounts were subject to audit by the department. That was the point they had made.

Compensation by any means is not a grant as made out by the Hon. Minister. Other Colleges were not called upon to give such a statement and none of the accounts of the other colleges was subject to audit by the Education Department and only the accounts of the S.I.E.T. Women's College was singled out. This was rather peculiar and surprising.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டே கருத்து, அதாவது அவர்கள் ஆடிட்டிற்குக் காட்டவில்லை, கொடுக்கவில்லை என்று மினிஸ்டர் சொன்னார்கள். ஆனால், அவர்கள் ஆடிட்டிற்குக் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள் என்ற அந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மற்ற காலேஜ்களைப் பற்றியெல்லாம் இதிலே வராது, அதையெல்லாம் மற்ற டிமாண்டிலே பேசுங்கள்.

Dr. H. V. HANDE: I am only saying . . . . I am aware of my limitations. I am making a specific case. My specific point is that this particular correspondent had written in the Hindu that that College had been singled out and there was no basis for asking their accounts for audit. That is the only point of mine.

In connection with another thing I wish to state that the present Director of Collegiate Education, released compensation by his Proceedings, dated 6th March 1974 which was received by the College only on 11th March 1974, after a delay of 5 days. That is the causative factor.

My submission is unless the House gets all the details we will not be in a position to know whether the statement of the correspondent is correct or the statement of the Hon. Minister is correct. We have opportunity only to listen to what the Minister says. The normal convention is for the House to take for granted the statement by the Minister is correct. Unless we bring in a privilege motion, we will not know whether the Minister's statement is correct.





I would also like to make another point. Whenever the Ministers make statements we must have adequate proof to know that what they are saying is supported by all facts or whether the statement is made to cover the defects of the Government and whether the statement substantiates the correct position. The House is expected to know that.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மினிஸ்டர் ஸ்டேட்மெண்ட் கொடுத்தார். அந்த ஸ்டேட்மெண்ட் தப்பு என்று உறுப்பினருக்குத் திட்டவட்டமாகத் தெரிந்தால் ஒழிய உரிமைப்பிரச்னை கொண்டுவர முடியாது. "ஹிந்து" பேப்பரில் செய்தி வந்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமைச்சர் கொடுத்தது தவறு என்பதற்குத் திட்டவட்டமாக ஏதாவது ஆதாரம் இருக்கிறதா?

Dr. H. V. HANDE: The very fact.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்கலாம். இது போல் நீங்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்தீர்கள், பத்திரிகையில் இப்படி வந்திருக்கிறது, இதில் எது சரி என்று கேட்கலாம். ஆனால் -றுப்பினருக்கு திட்டவட்டமாக மினிஸ்டர் ஸ்டேட்மெண்ட் தவறான ஸ்டேட்மெண்ட் என்று தெரிந்தாலொழிய அது பிரிவிலஜில் வராது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் அடிக்கடி குறுக்கிடாமல் இருந்தால் விளக்க முடியும். திருப்பித் திருப்பி இப்படியே கேட்டுக் கொண்டிருந்தால் என்னால் விளக்கம் கொடுக்க முடியாது. நான் முடித்துவிடுகிறேன். நான் முடிப்பதற்கு முன்னாலேயே இப்படிச் சொன்னால் என்னால் பேச முடியாது. என்னுடைய உரிமைகூட பாதிக்கப்படும். நான் சொல்வது என்னவென்றால், கரஸ்பாண்டென் டிற்கும் தெரியும், இம்மாதிரி தவறான ஸ்டேட்மெண்ட் கொடுத்தால். The Correspondent will be attracted by the Privileges of the House. பேப்பருக்கும் தெரியும், கரஸ்பாண்டெண்டிற்கும் தெரியும். தவறான தகவலை அவர்கள் கொடுத்தால் அவர்கள்மேல் பிரிவிலஜ் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த பிரிவிலஜுக்கு வாருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் இம்பேஷண்டாக கேட்கிறீர்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் தப்பாகக் கொடுத்திருந்தால் அவர்கள் மேல் பிரிவிலஜ் வரும் என்பதையெல்லாம் ஏன் சொல்ல வேண்டும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே : எனக்கு ரூல்ஸ் தெரியும்.

THIRU V. KRISHNAMOORTHI : The hon. Member is not hearing the Chair. Is it correct?

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் பேச வேண்டாமென்றால் சொல்லிவிடுங்கள். நீங்கள் இம்பேஷண்டாக மணியடித்தால் எப்படிச் சொல்லமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவிலஜ் எழுப்பும்பொழுது எப்பொழுது வரும் என்றால் அமைச்சர் கொடுத்த......

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் உங்கள் தீர்ப்பைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால் பேசுகின்ற பேச்சு எப்படிப் போக வேண்டும் என்று டைரக்ஷன் கொடுப்பதும் பேரவைத் தலைவரின் கடமைதான். ஆகவே, அந்த முறையில் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய பாயிண்ட் என்னவென்றால், திட்டவட்டமாகச் சொல்கிறார்கள், தேதியைக் குறிப்பிடுகிறார்கள் என்றால், அந்தத் தகவல் தவறு என்றால் அவர்கள்மீது பிரிவிலஜ் வரும். வந்து நான்கு நாட்களாகிவிட்டது. நம்முடைய லீடர் ஆஃப் தி ஹவுஸ் அவர்கள் ஒன்றும் பேசவில்லை.

(முற்பகல் 10-00)

அதே ஆம்பிள் ப்ரூஃப்.

That itself is ample proof that there is no privilege against the party concerned.

The Leader of the House has not chosen to raise to the privilege against the assertion of the opposite party and there are the Minister has given an incorrect statement. Therefore it is quite



clear there is a breach of privilege against the Minister and that is all the more proved after you have interjected. The Hon. Minister Dr. Nedunchezhiyan has definitely committed a gross breach of privilege and this should be referred to the Committee of Privileges.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் 26—3—74-ம் நாளன்று நான் இந்த அவையிலே கவன ஈர்ப்பு தீர்மானத்தையொட்டி வைத்த அறிக்கையிலே உண்மைக்கு மாறான செய்திகள் காணப்பட்டன என்று உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார்கள். அவர்கள் முழு விளக்கமும் கேட்டால் நான் விளக்கம் தந்திருப்பேன். ஆனால் அவர்கள் விளக்கம் கேட்காமல் நான் தந்த அறிக்கையிலே தவறிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். விளக்கத்தை எந்த வகையிலே கேட்கமுடியும்? ஒழுங்கு பிரச்சினை கொண்டுவந்தால் காரணம் கேட்கப்படுகிறது. அதற்காகத்தான் பொது விளக்கம் கேட்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற வரையில் நான் பொறுமையாக இருந்தேன். அதேபோல அவர்களும் நான் பேசுகிற வரையில் பொறுமையாக இருக்கவேண்டும். என்னை நம்புவதற்குப் பதிலாக பத்திரிகையில் வந்ததை நம்பி நான் கூறியது தவறு என்ற கருத்தில் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்ததால்தான் நான் வருத்தம் தெரிவித்தேன். 26—3—74 அறிக்கையிலே என்னென்ன கருத்து சொன்னேனோ அதிலே தவறேதும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

The Minister in his reply had stated that there was a delay in the release of III Term funds for the college because the college authorities refused to submit to audit by the Government auditing. அரசு அரசாங்கம் கணக்கை செய்யவேண்டுமென்று கல்லூரி நிர்வாகத்தினரைக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் மறுத்தார்கள் என்பதை நான் கூறியிருக்கிறேன். அது முழுக்க முழுக்க உண்மை. அதிலே நாம் தெளிவாக கிராண்ட்-இன்-எய்டு கோடு விதி 44-படி கூறியிருக்கிறோம்.

The financial statement and the other records shall be audited by the departmental audit staff attached to the Directorate of Collegiate Education, Madras.

என்று மானியம் ஒழுங்கு விதிமுறை 44 தெளிவாகக் கூறுகிறது. தணிக்கை செய்யப்படுகிறது என்பதை 11—8—1973 நாளிட்ட கடிதத்தில் எல்லா உதவி பெறும் கல்லூரிகளுக்கும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதேபோல மற்ற கல்லூரிகளுக்கு அனுப்பப்படவில்லை என்பது தான் டாக்டர் ஹண்டே அவர்களின் கருத்து. நான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எல்லாக் கல்லூரிகளுக்கும் நாம் அனுப்பியிருக்கிறோம் என்று. கிராண்ட்-இன்-எய்டு கோடு 44-வது விதிப்படி எஸ்.ஐ.இ.டி. கல்லூரி உட்பட எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பியிருக்கிறோம்.

The audit of accounts of the Colleges for the year 1972–73 will be taken up by the departmental staff attached to this Directorate.

என்று எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பியிருக்கிறோம். இதில் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி 3-வது இடத்திலே இருக்கிறது.

Correspondent—

1. Pachiappa's College.
2. Thiagaraja College.
3. S.I.E.T. College.

ஆக, எல்லாக் கல்லூரிகளோடும் 11—8—73-லே இந்தக் கல்லூரிக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு உதவி பெறும் கல்லூரிகளின் தாளாளர்கள் தணிக்கைக்கு ஆயத்தமாக இருக்கவேண்டுமென்று 20—8—73-லே கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலகத்தின் சார்பாக எல்லா கல்லூரிகளுக்கும் அனுப்பப் பட்டிருக்கிறது. அதிலே தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

The attention of the correspondents of the undermentioned aided colleges is invited to the Director's proceedings cited and they are informed that the audit of the accounts will be taken up from 1st September 1973 onwards. Hence, they are requested to report to the Director on or before 25th August 1973 whether the accounts and the registers for the financial year 1972–73 are ready for the purposes of audit by the departmental audit staff. The



exact date will be intimated to them separately on hearing from them. This should be treated as most urgent and reply sent to the Director immediately so as to enable the Director to draw up a programme for the financial year 1972–73

என்று இந்த ஒரு கல்லூரிக்கு மட்டுமல்ல, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி உட்பட எல்லாக் கல்லூரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் 20—10—73-லே பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள் :

"Resolved that the Director of Collegiate Educattion be informed that this management is not agreeable to his proposal for audit of the accounts of the S.I.E.T. Women's College by departmental auditors and his attention be invited to previous correspondence on the subject".

என்று அவர்கள் தெளிவாக மறுத்து எழுதியிருக்கிறார்கள்.

மறுபடியும் கல்லூரிக் கல்வி டைரக்டர் அலுவலகத்திலிருந்து 5—12—73 அன்று ஒரு உத்தரவு அந்த கல்லூரிக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதிலே தெளிவாக கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

I am to inform you that the audit of the accounts of the College for the year 1972–73 will be taken up by the audit staff of this Directorate on 12th December 1973. Necessary records and registers may be produced for audit. Financial statement for the year 1972–73 duly signed by the correspondent and the Principal may be given and facilities may be rendered to them to check the accounts as quickly as possible.

என்று தெளிவாக அதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதற்கு அவர்கள் மறுபடியும் பதில் சொல்கிறபோது எஸ்.ஐ.இ.டி. கல்லூரி நிர்வாகத்தினர் 8—12—73-லே பதில் எழுதி இருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மறுபடியும் 11—12—73லே தணிக்கைக்கு வருவார்கள் என்று எழுதப்பட்ட பிறகு அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

It has been already stated therein that this management is not agreeable to audit of accounts by the department of the Directorate of Collegiate Education. You need not send your auditors and they will not be permitted to audit our accounts.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 3

என்று 8—12—73லே அவர்கள் திருப்பி எழுதியிருக்கிறார்கள். ஆனால் மற்ற கல்லூரிகள் அனைத்தும் தணிக்கைக்கு இணக்கம் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையிலும் அதற்குப் பிறகு முதல் டெர்மிலே மானியம் தரப்பட்டிருக்கிறது. 2-வது டெர்மிலேயும் தரப்பட்டிருக்கிறது. 3-வது டெர்மிலேதான் தரப்படவில்லை.

அவர்கள் தணிக்கை செய்வதற்கு உரிமையில்லை என்றே எழுதுகிறார்கள். எந்தப் பணம் எப்படி செலவு செய்தாலும் அது எப்படி செலவாயிற்று என்று கேட்கும் உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இங்கே இருக்கும் சிறுபான்மையினருக்காக நடத்தப்படும் அனைத்துக் கல்லூரிகளும் உத்தமபாளையம் கல்லூரி, அதிராம்பட்டினம் கல்லூரி போன்றவை எல்லாம் தணிக்கை செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. இந்த ஒரு கல்லூரி மட்டும்தான் அதற்கு ஒப்பவில்லை.

மற்றைய கல்லூரிகளுக்குக் கிரான்ட் தந்தீர்களே என்று கேட்டால் அவர்கள் அரசாங்கத்தின் தணிக்கைக்கு உட்படுகிறார்கள்; கணக்குகளை அவர்கள் தருகிறார்கள். இவர்கள் கணக்குகளைத் தணிக்கைக்குத் தரமாட்டேன் என்று சொன்ன காரணத்தால் கல்லூரி கல்வி இயக்குநர் அந்தத் தொகையை நிறுத்தி வைத்தார்கள்.

இந்த ஆடிட்டைப் பொறுத்தவரை தனியார் பள்ளிகளானாலும், கல்லூரிகளானாலும், சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகள், கல்லூரிகளானாலும் அவர்கள் எல்லோரும் தணிக்கை செய்ய தங்கள் கணக்குகளைத் தருகிறார்கள்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்கு 10—1—74 அன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். "எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் தாளாளர் கணக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தரவேண்டிய காம்பன்சேஷன் போன்றவற்றை நிறுத்தி வைத்திருக்கிறேன். இப்போது நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அரசு ஆணையிட வேண்டும், அறிவுரை நல்க வேண்டும்" என்று கடிதம் எழுதினார்கள்.

அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்த அந்த நிலையில்தான் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி முதல்வர் அவர்கள் அறிக்கை பத்திரிகைகளில் வந்தது. ஒவ்வொரு மாணவியும் 80 ரூபாய் கட்ட வேண்டும்



1974 ஏப்ரல் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசாங்கத்திடமிருந்து வந்த பிறகு அது திருப்பித் தரப்படும் என்று சொன்னதன் பேரில் மாணவியர்களுக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது.

ஆகவே, கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு எழுதிய பதில் கடிதத்தில் அரசு, மாணவியர்கள் அவதிக்குள்ளாகக் கூடாது என்ற நோக்கில் ஃபீ காம்பன்சேஷனைப் பொறுத்தவரை கொடுத்து விடலாம், மூன்றாவது டெர்முக்குரிய டீச்சிங் கிராண்ட் போன்றவற்றை நிறுத்தி வைத்து விடலாம். 7—3—1974 நாள் இட்ட கடிதத்துடன் அந்தத் தொகை ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்பட்டது; எஸ்.ஐ.இ.டி. தாளாளர் அதை 11—3—74 அன்று பெற்றிருக்கிறார்கள். 6-ம் தேதி முடிவு எடுத்து 7—3—74 அன்று அனுப்பப்பட்டு 11—3—74 அன்று கிடைத்திருக்கிறது.

அதற்குள் அவர்கள் சில மாணவியர்களிடத்தில் பணம் வசூலித்திருக்கிறார்கள். மற்ற மாணவியர்கள் யாரிடத்திலும் வசூலிக்கக் கூடாது; ஏற்கனவே மாணவியர்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்ட தொகையையும் உடனடியாகத் திருப்பித் தரவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. 7—3—74 அன்று எழுதப்பட்ட கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த முறை மாணவிகள் அவதிக்குள்ளாகக்கூடாது என்ற காரணத்தால் தந்திருக்கிறோம்.

இனிமேல் தணிக்கைக்குக் கணக்குகளைத் தராத வகையில் எந்த வகையான கிராண்டும் கொடுக்கப்பட மாட்டாது. இதனைப் பொது மக்களும் தெரிந்து கொள்ளவேண்டும்; எதிர்காலத்தில் சேரும் மாணவியரும் தெரிந்து கொள்ள வேண்டும்; கல்லூரியும் உணர்ந்து கொள்ளவேண்டும். இனிமேற்கொண்டு எந்தத் தொகையாக இருந்தாலும் ஆடிட்டுக்குக் கணக்குகளை வைத்த பிறகுதான் தரமுடியும் என்று திட்டவட்டமாக 7—3—74-ல் அரசின் சார்பில் கல்லூரிக் கல்வி இயக்குநர் கடிதம் எழுதியிருக்கிறார்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் 26—3—74 வரை அது போய்ச் சேரவில்லை என்று சொன்னார்கள். அது சரியல்ல. 11-ம் தேதியே அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. அவர்கள் கொடுத்த அறிக்கைக்கு மறுப்புத் தந்திருந்தால் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்க மாட்டேன் என்று சொன்னார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 3

அந்த அறிக்கை வந்த நாள் அன்றே (சேம் டே) அவர்கள் உரிமைப் பிரச்சினையைத் தந்து விட்டார்கள். நான் அந்த அறிக்கையைப் பார்த்தவுடனேயே கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் விளக்கங்களை எல்லாம் தாருங்கள் என்று அவற்றைச் சேகரித்துக் கொண்டிருந்தேன். என்றைக்கு அது பத்திரிகையில் வந்ததோ அன்றைக்கே உரிமைப் பிரச்னையை எழுதிக் கொடுத்து விட்டார்கள்.

பெற்றோர் என்ற முறையில் கிருஷ்ணு என்பவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலே 80 ரூபாயைத் திருப்பிக் கொடுக்கும்போது 5 ரூபாயைப் பிடித்துக் கொண்டு 75 ரூபாய்தான் தந்திருக்கிறார்கள் என்று எழுதியிருந்தார். இன்றைக்குக் காலை இந்து பத்திரிகையில் அன்றைக்கு கரெஸ்பான்டென்ட் கொடுத்த ஸ்டேட்மென்ட் சரிதான் என்று சொல்லியிருக்கிறார். இதிலே 75 ரூபாய் கொடுத்தார்களா, 80 ரூபாய் கொடுத்தார்களா என்ற விவரம் இல்லை.

காம்பன்சேஷன் கொடுப்பது கிராண்ட் அல்ல என்று இன்று கடிதம் எழுதியிருப்பதற்கும் விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களே எழுதியிருக்கிற வகையில்—

Grants made under the Grant-in-Code compensation for the loss of fee income. என்றும்

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மானியம் வழங்கும் ஒழுங்கு முறை விதிகளின்படி வராது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

எந்தத் தொகையாக இருந்தாலும் அரசாங்கத்தின் சார்பாகத் தருவது, கல்லூரி ஆசிரியர்களுக்கானாலும், கட்டடத்திற்கானாலும், பழுது பார்க்கும் செலவானாலும் கிராண்டாகத்தான் கருதப்படுமே தவிர வேறு வகையில் அல்ல. அவர்களே கூட எழுதியிருக்கிறார்கள். 8—8—73-ல் கரஸ்பான்டென்ட் எழுதிய விண்ணப்பத்தில் இந்தத் தொகைகள் தங்களுக்குத் தரவேண்டுமென்பதிலே குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள்.

Advance fee compensation grant on account of full fee concession granted to the students of the P.U.C.

என்று, "கிராண்ட்" என்று குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்கள். இப்போது விவாதத்திற்காக வார்த்தைகளில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அந்த அப்ளிகேஷனில்—

The audited statement of accounts sent by the correspondent.

என்று கூறியிருக்கிறார்கள்.



1974 ஏப்ரல் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்களுடைய ஆடிட்டர் அனுப்பிய வகையில் கூட—

on 28th December 1973, under the heading "Receipts", grant-in-aid from State Government.

என்று சொல்லிவிட்டு மேலும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(a) advance teaching grant,
(b) fee compensation grant,
(c) final teaching grant,
(d) supplemental teaching grant

என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'fee compensation grant' என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, இன்று அது கிராண்ட் அல்ல என்று வாதிடுவது பொருந்தாது. அவர்களே ஒப்புக்கொண்டு கிராண்ட் தாருங்கள், காம்பன்சேஷன் கிராண்ட் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இதிலே எந்தவிதமான உண்மைக்கு மாறான செய்தியும் இல்லை. 26—10—73 அன்று கொடுத்த விளக்கத்திலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. இதிலே கல்லூரிக் கல்வி இயக்குநர் எந்த முறையிலே நடந்து கொள்ளவேண்டுமென்று அரசாங்கமே தெரிவித்திருக்கிறது. அதிலே உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மேல் என்னுடைய தீர்ப்பை பிறகு தெரிவிக்கிறேன்.

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்

## எஸ்.எஸ்.எல்.ஸி. ஆங்கில வினாத்தாள் வெளியானதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்—

'Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I do hereby give notice to move that the proceedings of the Assembly be adjourned to discuss a matter of urgent public importance, viz., the leakage of English question papers for the S.S.L.C. examination that is being conducted currently'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். அது எப்படி பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவிற்கு முக்கியத் துவம் வாய்ந்தது என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடை பெறுகிற எஸ்.எஸ்.எல்.சி. விளுத் தாளில் ஆங்கிலத் தேர்வு பற்றிய விளுத் தாள் வெளியாகிவிட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதன் விளைவாக பல மாணவர்கள் ஆங்கிலத் தேர்வைச் சரியாக எழுத முடியவில்லை. விளுத்தாள் வெளியாகிறது என்றுல் அதனைப் பாதுகாத்து வைக்கின்ற ஏற்பாட்டிலே பெரும் குறை இருப்பதைத்தான் அது காட்டுகிறது. அதை நம்பிப் போகிற மாணவர்கள் சரியாக விடை எழுத முடியாமல் தோற்றுப் போகிற நிலைமையும் ஏற்படுகிறது. இத்தகைய நிலைமை இதற்கு முன்னுல் கூட இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது.

இப்படி தொடர்ந்து ஏற்படுவது என்றுல் இந்த விளுத்தாள்களைத் தயாரித்து தேர்வுக்கு அனுப்புகிற முறையில் அடிப்படையில் ஏதோ கோளாறு இருக்கிறது, அது சரியாக நடைபெறவில்லை என்பதைக் எடுத்துக்காட்டுகிறது. இது மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்னை.

ஒரு ஆண்டு படித்து விட்டு விளுத்தாள்கள் வெளியாகி, தப்பான விளுத்தாள்கள் வெளியாகி, அது தெரிந்து கடைசி நேரத்தில் அவற்றை மாற்றக்கூடிய சூழ்நிலையில் ஒரு ஆண்டு படிப்பும் கெட்டு விடும் அபாயம் இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்டவர்களைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதற்கான யோசனைகளைக் கூறுவதற்கும், மாணவர்களின் எதிர் காலம் நல்ல முறையில் இருக்க இந்தத் துறை ஒழுங்காக இயங்கப் பயன்படும் அளவில் இந்த அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





இது பத்திரிகையில் வந்த ஒரு வதந்தியே தவிர வேறு அல்ல. ஆகவே, ஆங்கில விளுத்தாளோ அல்லது வேறு எந்த விளுத் தாளுமோ வெளியாகவில்லை என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட வதந்திகள் கிளம்புவது என்பது எல்லாக் காலங் களிலும் இருந்து வருகிற ஒன்று. மாணவர்கள் இன்னின்ன விளுக்கள் வரும் என்று படித்துவிட்டு அவை வராமல் போகிற நிலைகளெல்லாம் உண்டு. ஆகவேதான் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று அடிக் கடி சொல்கிறேம். விளுத்தாள்களை உருவாக்குவது, வைப்பது, அச்சடிப்பது இவை எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாப்பான முறையில் வைக்கவேண்டுமோ அதற்கேற்ற வகையில் பாதுகாப்பான முறைகளில் தான் வைக்கப்படுகிறது.

இது கூட குறிப்பிட்ட ஒரு நாளிதழைத் தவிர வேறு எந்த நாளிதழிலும் வந்ததாகத் தெரியவில்லை. நான் எல்லா நாளிதழ் களையும் புரட்டிப் பார்த்தேன். கேள்வித்தாள் வெளியான விஷயம் அறிந்து கல்வித் துறை மூன்று மணி நேரத்திற்குள் கேள்வித் தாள்களை மாற்றியமைத்தது என்றுல் அப்படி மூன்று மணி நேரத்திற்குள் வேறு விளுத்தாள்களை தயாரித்து அச்சிடமுடியாது. அப்படிச் செய்து சென்னை முழுவதும் பரப்பவும் முடியாது. தமிழகம் முழுவதும் இரண்டு லட்சத்து சில்லறை மாணவர்கள் எழுதுகிற வகையில் அப்படிச் செய்ய முடியாது.

ஆகவே, அந்தச் செய்திக்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஆங்கில விளுத்தாள் அவுட்டாகி, அந்த விளுத்தாளை நம்பி மாணவர் கள் உருப்போட்டு பரீட்சை எழுதுவதாகச் சொல்வது, அங்கேதான் பரிதாபகரமான நிலை இருக்கிறது. ஆகவே நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட வதந்திகளை நம்பக் கூடாது. பத்திரிகைகள் அப்படிப்பட்ட வதந்திகளை பரப்புவதில் ஈடுபடாமல் இருத்தல் நல்லது. மாணவர்களிடையே ஒரு பீதியை ஏற்படுத்தி விடக்கூடாது.

திடீரென்று உத்தரவு போட்டு மாற்றிக் கொடுக்கப்பட்டது ஆங்கில விளுத்தாள் என்று சொல்வது சரியல்ல. தமிழகம் முழுவ தற்கும் ஒரே நாளில் ஆங்கில விளுத்தாள் தரப்படுகிறது, மற்ற விளுத்தாள்களும் தரப்படுகின்றன. ஆகவே, விளுத்தாள் வெளி யாகியது என்பது சரியல்ல.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 3

வதந்திகளைக் கிளப்புவதோடு சிலர் வினாத்தாள்களை தாங்களே தயாரித்து விற்றுக்கொண்டும்கூட வருகிறார்கள். சில நகரங்களில் அது பிடிக்கப்படக்கூடச் செய்தது. ஆகவே, பீதிக்கு இடம் தர வேண்டாம்.

இதற்கு செய்தித்தாள்களும் ஓரளவிற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். பீதியைக் கிளப்பாமல் இருக்க மாணவர்களுக்கு சங்கடத்தை உருவாக்காமல் இருப்பது நல்லது. ஆதாரம் இல்லாத இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடுவது சரியல்ல. வினாத்தாள்கள் வெளி வந்திருக்குமானால் முன்கூட்டியே தகவல் தந்திருந்தால் ஒப்பிட்டு தவறு இருந்தால் திருத்திக்கொள்ள அல்லது நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கமுடியும்.

ஆனால் இந்தச் செய்தியைப் பொறுத்தவரையில் மூன்று மணி நேரத்திற்குள் மீண்டும் முழுவதையும் மாற்றிவிட இயலாது. சென்னை நகரில்கூட மாற்ற முடியாது.

முதலில் எந்தக் கேள்விகள் தரப்பட்டனவோ அவைகள்தான் வந்திருக்கின்றன. ஆகவே, அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு இதில் ஒன்றுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## (5) கவன ஈர்ப்பு

### (அ) குமரி மாவட்டத்தில் பருவமழை தவறியதும், நியாய விலையில் அரிசி வழங்கவும், நிலவரி விலக்கு அளிக்கவேண்டியதன் அவசியமும் குறித்து.

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவமழை தவறியதின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் பயிர் கருகி, தீய்ந்து, குறிப்பாக குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் தளக்குளம், கடியப்பட்டிணம், மணவாளக்குறிச்சி, இராஜக்கமங்கலம் ஆகிய கிராமங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கிராமங்களுக்கு நியாய விலையில் அரிசி வழங்கவும், தீய்ந்து



1974 ஏப்ரல் 3] [திரு. ஏ. பாலையா]

போன நிலங்களுக்கு நிலவரியிலிருந்து விலக்களிக்கவும் வேண்டியது பற்றிய அவசர பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, 1973–74-ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்மேற்கு வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். இவ்வழக்கமற்ற மழைக் குறைவு, பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி நீர்த் தேக்கங்களின் நீர் மட்டத்தை வெகுவாக பாதித்தது.

இத்தகைய மோசமான நிலைமை இதுவரையில் ஏற்படவில்லை. வழக்கிற்கு மாறான இக்குறைந்த நீர் அளவை உத்தேசித்து, நீர்த் தேக்க நீரினை நம்பி கும்பம் 74 நெற்பயிரை சாகுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரப்பட்டிருந்தார்கள். இந்த அறிவுரை எல்லோராலும் சரிவர பின்பற்றப்படாததால் தேவைப் பட்ட நீரினை வழங்குவது வெகு சிரமமாக இருந்தது. அதனால் 20—12—73 முதல் முறைத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப் பட்டது.

மேலும், மேல் கோதையாறு ஏரியிலிருந்து விடப்பட்ட நீரினைக் கொண்டு வருவதற்கும் அவ்வப்போது முயற்சி எடுக்கப்பட்டது.

முக்கியமாக, 1974-ம் ஆண்டு பிப்ரவரி ஆரம்ப முதலே நிலைமை மிகவும் சமாளிக்க முடியாதது ஆகிவிட்டது. 1974-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ம் நாள்முதல் கோதையாறு மின் நிலையத்தின் கடைகோடியிலிருந்து 150 கியூசெக்ஸ் நீர் விடப்பட்டும்கூட நீர் தேவையில் ஒரு பகுதியைக் கூட சரி செய்ய முடியாததாகிவிட்டது.

உணவுப் பொருள் போக்குவரத்தினை கட்டுப்படுத்தும் ஆணையின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டமும் கல்குளம் வட்டத்தினை அடுத்துள்ள 10 கிராமங்களும் அடங்கிய எல்லையோரப் பகுதியை நெல் அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் தனிப் பகுதியாகப் பிரித்து அறிவிக்கப்பட்டு அப்பகுதியில் பொது மக்களுக்கு அரசின் இருப்பிலிருந்து கட்டுபடியாகும் விலையில் அரிசி வழங்கப்படுகிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 3

இதேபோல் மாவட்டத் தலைமையிடமான நாகர்கோவிலிலும் அரிசி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் மீதமுள்ள பகுதியான கல்குளம் வட்டத்தில் அடங்கிய 8 கிராமங்களிலும், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களின் முழு பகுதியிலும் உள்ளூரில் வாங்கப்பட்டும், அனுமதிச் சீட்டின் பேரில் வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டும் அரிசி தனி நபர்கள் மூலம் பங்கிடு செய்யப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் அரிசி உற்பத்தியில் ஓரளவு பின்தங்கியுள்ளது. மாவட்டத்தில் முக்கிய நெற்பயிர் விளைச்சல் ஓரளவு தவறி விட்டது என்பது உண்மையாகும். இக்குறைகளை கவனத்திற்கொண்டால் நடப்பு ஆண்டில் அரிசி உற்பத்தி 1.25 லட்சம் டன்கள் அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, மாவட்ட முழுவதிற்கும் தேவையான அரிசியின் அளவு 1.55 லட்சம் டன்களாக இருப்பதால் 30,000 டன் அரிசி பற்றுக்குறையாக இருக்கும்.

முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை செயலுள்ள பகுதியில் அடங்கிய அறிவிக்கப்பட்ட எல்லையோரப் பகுதியினைச் சார்ந்த விளவங்கோடு வட்டம் மற்றும் கல்குளம் வட்டத்தினைச் சேர்ந்த 10 கிராமங்களுக்கு மட்டும் ஒரு மாதத்தில் சராசரியாக 5,000 டன் அரிசி அரசின் இருப்பிலிருந்து அனுப்பப்படுகிறது. முறைப்படுத்தப் பட்ட பங்கீட்டு முறையின் கீழ் உள்ள நாகர்கோவிலில் மாதத்தில் 560 டன்கள் அரிசி வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் உற்பத்தியாகிற அரிசியின் அளவும், அரசின் இருப்பிலிருந்து அளிக்கப்படுகின்ற அளவும் உபரியாக உள்ள மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் அரிசியின் அளவுகளையும் சேர்த்தால் மாவட்டத்தின் தேவைக்கும் அதிகமானதாகவே இருக்கிறது. எனவே, மாவட்டத்திற்குப் போதுமான அரிசி உள்ளது என்பது தெளிவாகும்.

மாநில எல்லையோரத்தில் கள்ளக் கடத்தலைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் எல்லையோரங்களில் அரிசி கடத்தல்கள் மிகுதியாக நடைபெற்று வருகின்றன. தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கடத்தல்களே இம்மாவட்டத்தில் விலை உயர்வுக்கு முக்கியமான காரணங்களுள் ஒன்றாகும்.



1974 ஏப்ரல் 3] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதியில் வெளிச்சந்தை அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.25லிருந்து ரூபாய் 2.50 வரை உள்ளது. இப்பகுதியில் மக்களின் தேவையை நிறைவு செய்ய அரசின் இருப்பிலிருந்து கட்டுப்படியாகக் கூடிய விலையில் அரிசி வழங்கப்படுவதால், வெளிச் சந்தையில் அரிசி அதிக விலைக்கு விற்பனை செய்வது குறிப்பிடத் தகுந்ததல்ல. மீதமுள்ள பகுதியாகிய தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் கல்குளத்திலுள்ள 8 கிராமங் களில் அரிசியின் விலை பொதுச் சந்தையில் ஒரு கிலோ 2 ரூபாயிலிருந்து ரூ. 2.20 வரை விற்கப்படுகிறது. இவைகள் மிக உயர்வானதாகக் கூற முடியாது.

சமீபத்தில் உற்பத்தி குறைந்திருந்தும், இப்பகுதியில் அறுவடை செய்யப்பட்டுள்ளது. தனி வியாபாரிகள் மூலம் பங்கீடு செய்ய கை யிருப்பு இருக்க வேண்டும்.

இப்பகுதியில் கடுமையான போக்குவரத்து தடையுத்தரவின் மூலம், மாவட்ட எல்லையோரங்களிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் குறையை நீக்குவதற்காகத் தான் பொதுப் பங்கீட்டு முறை கொண்டு வரப்பட்டது.

நெல், அரிசி போக்குவரத்து தடை செய்யப்படாததினால், போது மான கையிருப்பு உள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை வட்டங்கள், மற்றும் கல்குளம் வட்டத்தினைச் சேர்ந்த 8 கிராமங்களுக்கும் அங்குள்ள விலையுயர்வின் காரணமாக அங்கு பொதுப் பங்கீட்டு முறையினை பகுதியாக அல்லது முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்பது சரியான காரணமல்ல.

திருநெல்வேலி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து இம்மாவட்டத் திற்கு அரிசி எடுத்துவர அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் பற்றுக்குறை ஏதும் இருப்பதாகத் தெரிந்தால் உபரி மாவட்டங்களிலிருந்து அரிசி கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கும்.

நிலவரி விலக்கு கோரிக்கையைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டு. நிலைமையை ஆய்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. பாலையா: மாவட்டத்தில் தேவைக்கு அதிகப்படியான அரிசி இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அங்கு படி ரூ. 4.50.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஸ்டேட்மென்டையொட்டி ஏதாவது விளக்கங்கள் பெறலாம்.

திரு. ஏ. பாலையா: அமைச்சர் அவர்களின் ஸ்டேட்மென்ட் என் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு உரிய ஸ்டேட்மென்டாக இருப்பதாகத் தெரியவில்லை. கேட்ட விவரங்கள் சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆகவேதான் இதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10-30

அதிலே நான் கேட்பதெல்லாம், தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது கொடுத்த ஸ்டேட்மென்டில் ஏதாவது தெளிவு இல்லையென்றால், இரண்டொரு கேள்விகள் கேட்கலாமே தவிர புதிதாக கருத்தைச் சொல்ல விவாதத்தை எழுப்புவது முறையல்ல.

திரு. ஏ. பாலையா: நான் கொடுத்த தீர்மானத்திலே தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக அழிவு ஏற்பட்ட தளக்குளம், கடியபட்டினம், மணவாளக்குறிச்சி, இராஜக்காமங்கலம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டது. அங்கே தற்காலிகமாக நியாயவிலையில் அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதோடு அந்த நிலங்களுக்கு எல்லாம் நில வரி ரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கை 5 பக்கம் இருக்கிறது. நான் அந்த 5 பக்கங்களையும் படிக்க ஆரம்பித்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். எனவே, சுருக்கமாகச் சொன்னேன். அவர் கேட்டிருக்கிற கோரிக்கை இரண்டு. ஒன்று, கிராமங்களுக்கு நியாயவிலையில் அரிசி வழங்கவும்,



ற்ருென்று, நிலவரியிலிருந்து விலக்களிக்கவும் என்று கேட்டிருக் ருர்கள். நியாயவிலையில் அரிசி வழங்கப்படும், அதற்கான நட டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சில விஷயங்களைச் சான்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அரிசி ... தானே ஆன்சர் செய்யவேண்டும். வண்டுமென்ருல் புட் மினிஸ்டர் தானே ஆன்சர் செய்யவேண்டும். மன்னை நாராயணசாமி அவர் 'யாயவிலைக்கடைகள் பற்றி மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர் ள் அல்லவா பதில் சொல்லவேண்டும். ஏன் ரெவின்யூ அமைச்சர் திில் சொன்ருர்? எங்களுக்கு இது கன்ஃப்யூஷனுக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்படுமா என்பதைப் பற்றியும், நியாயவிலையில் அரிசி வழங்கு வது பற்றியும் இரண்டு விஷயங்களைக் கேட்டிருக்கிருர்கள். ஒரு அமைச்சர் பதில் சொன்ருல் போதும். "கலெக்டிவ் ரெஸ்பான் சிபிளிடி". ஆகவே, சொல்லலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When the Minister concerned is present how can the other Minister answer?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சொல்லலாம். இன்னொரு மந்திரி சொல்லக்கூடாது என்பது அல்ல.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினருக்கு எந்த விதமான கன்ஃப் யூஷனும் இல்லை. அவர் நல்லமுறையில் தெளிவான முறையில், தகுந்த கவனத்துடன்தான் இதைக் கொண்டுவந்திருக்கிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவருக்குத் தெரியலாம், எங்களுக் குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நிலவரியைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக் கிறது. அதன்படி அவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன். அவருடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று சொன்ருல், ரெவின்யூ போர்டுக்குத் தெரிவித்தால், அல்லது அரசாங் கத்திற்குத் தெரிவித்தால் வரிவஜா செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாயவிலையில் அரிசி வழங்கவேண்டுமென்ற கோரிக்கை விடுத்தார்கள். எனவே, நியாயவிலையில் எங்கெங்கே அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னேன்.

இன்னும் சில இடங்களில் தேவை என்று கருதினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், கூடுதலாக நியாயவிலைக் கடைகளைத் திறந்து அரிசி வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. பாலையா : நான் குறிப்பிடுவது எல்லாம் பருவ மழை பெய்யாததன் காரணமாக பாதிக்கப்பட்ட, நான் குறிப்பிட்ட அந்த கிராமங்களில் தற்காலிகமாக நியாயவிலைக் கடைகள் திறக்கச் செய்ய வேண்டும். அதற்கு முடிவான பதிலை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் அவர் குறிப்பிட்ட எல்லாப் பகுதிகளிலும் நியாயவிலைக் கடை திறக்கப்படும்.

## (ஆ) சிங்கம்புணரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் கடந்த 2—3—1974-ம் நாள் முதல் தங்களது ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்து வருவது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : இராமநாதபுரம், சிங்கம்புணரியில் என்ஃபீல்டு இந்தியா தொழிலாளர்கள் கடந்த மாதம் நடத்திய வேலை நிறுத்தம் பற்றி. துர் நடத்தை காரணமாக, இரண்டு வேலை பழகுபவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, சிங்கம்புணரி என்ஃபீல்டு இந்தியா (வரையறைக்குட்பட்டது) தொழிற்சாலையில் 300 தொழிலாளர்கள் 2—3—1974 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். மாண்புமிகு தொழில் அமைச்சர் முன்னிலையில் 12—3—1974 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விளைவாக தொழிலாளர்கள் 14—3—1974-ல் வேலைக்குத் திரும்பினர். 85 அலுவலக ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. இப்போது நிலைமை அமைதிகரமாக இருக்கின்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த வேலைநிறுத்தமானது நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். அதில் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு இருந்தால், லேபர் இலாகா அவர்களை அழைத்து என்ன குறைகள் என்று கேட்டு இருந்தால் அதை உடனடியாகத் தடுத்து இருக்கலாம். அது ஏன் காலதாமதம் ஆனது? உடனடியாக ஏன் தடுக்க முடியவில்லை என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, 2-ம் தேதி வேலை நிறுத்தம் ஏற்பட்டது. 14-ம் தேதி வேலைநிறுத்தத்தை முடித்து இருக்கிறார்கள். இதைவிட வேகமாக வேலை நிறுத்தம் முடிப்பது என்பது இயலாது என்பதை கனம் உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

DR. H. V. HANDE : My point was they brought to the attention of the Government much earlier, even before the strike took place. They had made their demands. My point is that we need not have waited till the strike and the strike could have been averted, if the Minister had been a little smarter.

6 அம்ச கோரிக்கை முதலில் சொன்னார்கள். அப்போதே கவனித்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இதைவிட சுறுசுறுப்பாக எனக்கு இருக்க முடியவில்லை.

[1974 ஏப்ரல் 3

(6) அறிக்கை அளித்தல்.

பொதுக்கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளின் மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கை.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Mr. Speaker, I rise to present the Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations contained in its earlier reports.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

4. நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,88,71,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."



1974 ஏப்ரல் 3]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ஊராட்சி வளர்ச்சித் துறையை மாவட்ட, கோட்ட அளவுகளில் தனியாகப் பிரித்து நிர்வாகத்தை சீரமைத்தல் பற்றி விவாதிக்க. . . .

" நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to separate the Community Development Department from the Revenue Department in the Division level, I move—

" That the allotment of Rs. 28,88,71,300 under Demand No. No. 28—Community Development Projects, etc., be reduced by Rs. 100 ".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the measures to improve the efficiency of the developmental works in Blocks, I move—

" That the allotment of Rs. 28,88,71,300 under Demand No. 28-Community Development Projects, etc., be reduced by Rs. 100 ".

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, வசதி குறைந்த ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளின் பொறுப்பிலிருக்கும் சாலைகளை நெடுஞ்சாலைப் பிரிவினர் எடுத்துக்கொள்ளும் அவசியம் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1974 ஏப்ரல் 3

திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் ஜீப்புகளை, ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்கு மட்டுமே உபயோகிக்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, சேலம் மாவட்டம் சூரமங்கலம் நகரப் பஞ்சாயத்துக் கூட்டங்களைக் கூட்டாமல் இருப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும் ஏனைய வசதிகளும் கிடைக்க உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 28,88,71,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், என்னுடைய வெட்டுத் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பில் ஒரு வெட்டுத் தீர்மானம் மூவ் செய்தாகிவிட்டது. மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சமுதாய வளர்ச்சி திட்டத்தைப் பற்றி நான் ஒரு சிலவற்றை முன்னுரையாக இங்கே தந்தால் பேசுகின்ற அங்கத்தினர்கள் எனக்கு யோசனை கூறத் துணையாக இருக்கும் என்பதால் முன்கூட்டியே சிலவற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஊராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஒரு பழம் பெரும் வரலாறே உண்டு. நீண்ட நெடுங் காலமாக பண்டைய தமிழகத்தில் சோழப் பெருமன்னர் காலத்திலும் பராந்தக சோழன் காலம் வரையில் இந்த ஊராட்சி எப்படி இயங்கி வந்திருக்கிறது என்றால் ஊராட்சி மூலமாகத் தான் எல்லா விதமான தகராறுகளும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன, தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது வரலாறு சொல்கிற உண்மையாகும். அதற்குப் பிறகு வெள்ளையர் ஆட்சி வந்த காலத்தில் அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு ஊராட்சியினுடைய ஆட்சியே அகற்றப்பட்டுவிட்ட அளவுக்கு மாறுதல் ஏற்பட்டது. ஆனால் 1858-ம் ஆண்டுக்குப் பிறகு வெள்ளையர் ஆட்சி காலத்தில் ஊராட்சி தன்னாட்சி பெற்று இயங்க வேண்டும் என்பதற்கு அப்பொழுது அமைக்கப்பட்ட குழுவில் இந்த நிர்வாகம் எப்படி இயங்கவேண்டும் என்பதற்காக 1858-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு தன்னாட்சி உரிமை பெற்ற உள்ளாட்சி மன்றம் அமைப்பது குறித்து தீவிரமாக சிந்தித்து 1870-ம் ஆண்டு மேயோ பிரபுவின் தீர்மானமாகவும், 1882-ம் ஆண்டில் ரிப்பன் பிரபுவின் தீர்மானமாகவும் .........

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We wanted the Hon. Minister not even to read the Policy Note. So, we do not want the history to be narrated here. He can straightway come to the subject

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த உள்ளாட்சியின் வரலாற்றைப் பற்றி சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லித் தான் இந்த முன்னுரையை ஆரம்பித்தேன். இதன் பழம் பெரும் வரலாறு தெரியாதவர்கள் புதியதாகச் சொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டு நான் சொல்லிக்கொண்டிருப்பதாகக் கருத வேண்டாம். பழம் பெரும் வரலாறு விவாதத்திற்குத் துணையாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன். (குறுக்கீடு). ஊறுகாய் ஊற ஊறத் தான் அதிலிருந்து சுவை கிடைக்கும். ஆகவே, பழமை அத்தனையையும் தள்ளிவிட வேண்டியதில்லை.

அதற்குப் பிறகு பல் வேறு முறைகளிலே தமிழகத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட மன்றங்கள், டிஸ்டிரிக்ட் போர்டுகள் அமைக்கப்பட்ட நேரத்தில் அவைகளுக்கு கலெக்டர் தலைவராக இருந்து ஆட்சி புரிந்துவந்தனர். இது அனந்தநாயகி அவர்களுக்கு இப்பொழுது படித்துத் தெரிந்து இருக்கலாம். அதற்குப் பிறகு அது

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 3

மக்களுடைய ஆட்சிக்கு மாற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்ட வாரியங்கள், வட்டவாரியங்கள், செயலாற்றி வந்தாலும், அதற்குப் பிறகு வட்ட வாரியங்கள் (டாலுக் போர்ட்ஸ்) கலைக்கப்பட்டு அந்த அதிகாரங்களை டிஸ்டிரிக்ட் போர்டுகள் ஏற்றுக்கொள்ளலாம் என்று அப்பொழுது சட்டம் இயற்றப்பட்டு, அதன் கீழ் இன்னென்ன காரியங்கள் நடைபெறவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டு, அதன்படி டிஸ்டிரிக்ட் போர்டுகள் இயங்கி வந்தன.

சுய ஆட்சி பெற்றதற்குப் பிறகு உலக உத்தமர் காந்தியடிகள் கண்ட கனவு நினைவாக்க, இராமராஜ்யம் ஏற்படவேண்டும் என்ற நோக்கத்தில் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இதை மக்கள் இயக்கமாக மாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு 2—10—1952-ம் ஆண்டு இதற்கு தேசிய வளர்ச்சித் திட்டம் “நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம்” என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதற்கு உதவ திட்டக்குழு அமைத்து அதற்குப் பிரதமரே திட்டக் குழுவின் தலைவராக இருந்து, அப்பொழுது திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் துணைத் தலைவராக இருந்து பணியாற்றச் செய்து 1952–56-ம் ஆண்டு வரையிலே தேசிய வளர்ச்சித் திட்டம் தமிழ் நாட்டில் பணியாற்றிவந்தது.

அதிலே பல தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை, நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1956-ம் ஆண்டு திரு. எஸ். கே. டே அவர்களை அழைத்து “இதை ஒரு தனி இலாகாவாக ஆக்கப்போகிறேன்” என்று சொன்ன வரலாறும் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடம் “ஏன் இந்தத் திட்டத்தைப் பிரிக்கிறீர்கள்” என்று எஸ். கே. டே அவர்கள் கேட்டபொழுது அவர்கள் ஒன்றைச் சொன்னது பல அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். காரணம் “நான் இந்தத் திட்டத்தை உருவாக்கிய நேரத்தில் அதனுடைய பலனை எதிர்பார்த்த நேரத்தில் நான் நினைத்தது நடக்கவில்லை. நாய் வாலை ஆட்டவேண்டும் என்று கருதினேன். ஆனால் வால் நாயை ஆட்டுகிறது” என்று சொன்னார். இன்னும் பல பழமொழிகளும், உதாரணங்களும் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்பொழுது அவைகளைப் குறிப்பிடுவது அவசியமில்லை என்று கருதுகிறேன்.



974 ஏப்ரல் 3] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

எனவே தான் இந்த வாலை வெட்டுகிறேன் என்று சொல்லி 958-ம் ஆண்டு சமுதாய நலத் திட்டத்தை உருவாக்கினார்கள். 959-ம் ஆண்டில் பல்வந்த்ராய் மேதாவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே: On a point of order. இப்பொழுது தான் 1959-ம் ஆண்டுக்கு வந்திருக்கிறார்கள், 11 மணிக்கு. 1974-வது ஆண்டு வருவதற்குள் .........

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரலாறு முழுவதும் சொல்ல இருக்கிறார்கள். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அந்த வரலாற்றின் மீது எங்களுடைய கருத்துக்களைக் கூறவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் சொல்வீர்கள் இப்பொழுது இருக்கிற சமயம் 2 மணி நேரம்தான் என்று. ஆக, அமைச்சர் அவர்கள் விரும்புகிற முறையில் இந்த விவாதத்தை நடத்தவேண்டுமென்றால் இன்னும் ஒரு நாள் கூடி நீட்டிக்கொடுக்கவேண்டும். வரலாறு முழுவதும் அமைச்சர் அவர்கள் கூறவேண்டுமென்றால் ஒரு நாளைக்குள் விவாதத்தை முடிப்பதற்கு வழி இருக்கிறதா என்பதை தலைவர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். The Hon. Minister for Local Administration can oblige us by......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். இல்லாவிட்டால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று மட்டும் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த மானியக் கோரிக்கையிலே எல்லா உறுப்பினர்களும் ஒரு கருத்தைச் சொல்ல இருக்கிறார்கள். கார்ப்பரேஷன் தேர்தல்களை உடனே வைக்கவேண்டும் .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வேறு சொல்லிவிட்டு ஏதோ டிமாண்டில் பேசுவது போல சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே? இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. உட்காருங்கள்.

(திரு. கு. காமாட்சி, திரு. எம். ஏ. லத்தீப் எழுந்திருந்தார்கள்.)

திரு. க. மு. இராசகோபால்: நாங்கள் கிராமப்புறத்திலிருந்து
வந்திருக்கிறோம். உள்ளாட்சித் துறையைப்பற்றி நாங்கள் பேசுவதற்கு
போதுமான நேரம் ஒதுக்கவேண்டும். எதற்கும் எங்களுக்குப்
வாய்ப்பூட்டு போட்டுவிடக்கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப்: மான்யங்களை முன்மொழிந்து பேசுகிற
அமைச்சர்கள் அந்தத் துறையைப்பற்றி தாங்கள் கொடுத்திருக்கிற
விளக்கங்களுக்கு மேற்கொண்டு விளக்கங்களை விவாதத்திற்குச் சாதக
மாக இருப்பதற்கு கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு
ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி இந்த மாதிரி கொடுப்
பதே தவறு என்று பாயின்ட் ஆப் ஆர்டர் அடிப்படையில் கொண்டு
வருவார்களேயானால், தேவையான நேரத்தில் கூட அமைச்சர்கள்
விளக்கம் கொடுப்பதில் தயங்கக்கூடிய நிலைமை உருவாகும். எனவே
பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற அடிப்படையில் இதை எழுப்பாமல்
வேண்டுமானால் வேண்டுகோளாகச் சொல்லலாம். எங்களுக்கு அதிக
நேரம் ஒதுக்க வேண்டுமென்று சொல்லலாம்.

THIRU P. SEENIVASAN :I strongly object to it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்த இடத்திலிருந்து
சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கோபம் வருகிறது.
லத்திப் ஒரு உறுப்பினர் என்ற முறையில் சொன்னால் மற்ற உறுப்பினர்
கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றுதான் சொல்லியிருக்கலாம்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

திரு. பெ. சீனிவாசன்: இவர் என்ன அதாரிட்டி? எப்பொழுது
பார்த்தாலும் இவர் என்ன மெம்பர்களுக்கு அட்வைஸ் பண்ணுவது ...

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பேசிக்கொண்டிருக்கும்
பொழுது பாதியிலேயே வெட்டிவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர்
என்று சொல்லிவிட்டு கார்ப்பரேஷனைப் பற்றிப் பேசினீர்கள். அதனால்
தான் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லி உட்காரச்
சொன்னேன்.

திரு. முனு ஆதி: பாயின்ட் ஆப் ஆர்டர் .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. முனு ஆதி: மற்றவர்களைப் பேசவிடுகிறீர்கள்.........





மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருக்கு சில
நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் யோசனை சொல்வது வழக்கம்.
அது உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொருந்தும் என்று தான் அவர்
சொன்னாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: திரு. முனு ஆதி அவர்கள் ஒரு
" ஹார்ட் பேஷன்ட் " ஆக இருக்கிறார்கள். எனவே அவர்கள் ஆவேச
மாக பேசினால், ஏதாவது ஆகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,
ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்பு
களை அகற்றவேண்டுமென்று தீர்மானத்தை ஒட்டி பேசுகின்றபோது,
இதிலே பல ஆக்கிரமிப்புகள் வந்துவிட்டது வருந்தத் தக்கது.
இன்றையதினம் நான் இவைகளைப்பற்றி முதலிலே குறிப்பிடுவதற்குக்
காரணம், மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்களுடைய கருத்துக்
களைச் சொல்வதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதால்தான்.

1958-ம் ஆண்டு பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இந்த
சமுதாய வளர்ச்சித் திட்டத்தை, அரசியல், சமுதாயம், பொருளா
தாரத் துறைகளின் அடித்தளத்தில் இருக்கின்ற கிராமப்புற மக்கள்
முன்னேற்றத்திற்காகக் கொண்டு வந்தார்கள். அதற்கு என்னென்ன
இடையூறுகள் அவர்கள் காலத்தில் ஏற்பட்டன என்பதை பண்டித
ஜவகர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டதையும் அதையொட்டி திரு.
எஸ். கே. டே அவர்கள் சொல்லிய விபரங்களையும் இங்கே எடுத்துச்
சொல்வதற்கு நேரம் இல்லாததால் இத்துடன் விட்டுவிடுகிறேன்.
அதற்குப் பின், நேரு அவர்கள் காலஞ்சென்ற பிறகு, சாஸ்திரி
அவர்களுடைய காலத்தில் இந்த இயக்கம் இருக்கிறதா என்ற
அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் பிறகு இந்திரா
காந்தி அவர்கள் பிரதமர் பொறுப்பை ஏற்றவுடன் ஏதோ இருக்க
வேண்டுமென்ற நோக்கத்தோடு. உணவு, கூட்டுறவுத் துறை ஆகிய
வற்றுடன் சேர்த்து செயல்படுத்தினார்கள். நான் இதை சொல்வதற்
குக் காரணம் நேரு அவர்கள் எந்த அடிப்படையில் கிராம முன்னேற்
றத்திற்கான காரியங்களைச் சொன்னார்களோ, எப்படி கிராம
முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று சொன்னார்களோ. அந்த
அளவுக்கு இன்னும் அமையவில்லை என்பதற்காகச் சொல்கிறேனே
அல்லாமல் வேறல்ல. அதை ஒட்டி, இன்றையதினம் கொடுக்கப்
பட்டுள்ள திட்டங்கள் எப்படி குறைக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி
விவரங்களைப் பிறகு தெரிவிக்கிறேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 3

இந்தத் திட்டம் தமிழ்நாட்டிலேதான் சிறப்பாக செயல்படுகிறது என்று பல்வேறு மாநிலங்களிலிருந்து இங்கே வந்துசெல்கின்ற நிபுணர்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதிக் கோரிக்கை பற்றிய விபரங்கள் அடங்கிய குறிப்பு மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அது மிகுந்த பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 12,630 ஊராட்சி மன்றங் களும், 597 பேரூராட்சி மன்றங்களும், 12 நகரியங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும் செயல்பட்டு வருகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 28,88,71,300 ரூபாய் ஒதுக்கி செலவிட வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

எங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் விருப்பப்படி சமுதாய வளர்ச்சிப் பணிகள் சீரிய முறையில் நிறைவேறி வருகின்றன. கிராமங்கள் முன்னேற வேண்டுமென்று அதிக அக்கறை கொண்டவர்கள் அண்ணா அவர்கள். அதனால் எங்களைப்பார்த்து செல்லமாக "கிராமங்கள்" என்று கூட சொல் வார்கள். கிராமங்கள் முன்னேற்றமடைந்தால்தான் நகரம், நாடு, தேசம் எல்லாம் முன்னேற்றமடையும் என்று சொல்வார்கள். அவர் களுக்குப் பின்னால் அவர்களுடைய வழியில் வந்த டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் துறையிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக் கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கு 1,04.22.05,000 ரூபாய் செலவாகும் என்று இந்த ஆண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகள் மூலமாக செலவிடு கின்ற மொத்தத் தொகையில் 21.6 சதவிகிதமாகும். ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து, எந்த அளவுக்கு அந்த உதவி உயர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

1966–67-ம் ஆண்டு 47.47.71.000 ரூபாயில் தொடங்கப்பட்ட இத் திட்டம் 1974–75-ம் ஆண்டில் அதாவது இந்த ஆண்டில் 1,04,22,05,000 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது.



1974 ஏப்ரல் 3] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கிராம மக்களின் வாழ்க்கை வசதிகளை நிறைவேற்றுகின்ற வகையில் இந்த அரசு ஊரக வளர்ச்சிப்பணிகளில் அதிக ஆர்வத்தோடு செயல் பட்டு வருகிறது. தமிழ்நாடு பூராவும் ஆரம்பக் கல்விக்கென்று ஊராட்சி நிறுவனங்கள் மூலம் இந்த அரசு செலவிடுகின்ற தொகை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கள் எல்லாம் புள்ளி விபரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

1969–70-ம் ஆண்டில் 2.147 லட்சமாக இருந்தது இந்த ஆண்டு 3,636.97 லட்சமாக உயர்ந்துள்ளது.

அதைப்போலவே சாலைகள் அமைப்பு, பள்ளிக்கூட கட்டடங்கள் அமைப்பு ஆகிய பணிகளுக்கும் பெருந்தொகை செலவிடப்பட்டிருக் கிறது.

1973-ம் ஆண்டு டிசம்பர் முடிய 6,165 மேல்நிலை நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன; 73,836 கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன; 35,114 கிலோமீட்டர் அளவுக்கு இணைப்புச் சாலைகள் போடப் பட்டுள்ளன; இன்னும் பெருமளவில் திட்டங்களைத் தீட்டி கிராம முன்னேற்றத்திற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அவ்வளவையும் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவைகள் போதாது என்று கருதி, பஞ்சாயத்து யூனியன் சாலை களில் ஆயிரம் மைல்கள் அளவுள்ள சாலைகளைப் பொதுப்பணித் துறையே எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி வலியுறுத்திய கருத்துக்களின் அடிப்படையிலேதான் இதைச் செய்திருக்கிறோம். எனவே, ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்கு அதிக ஒதுக்கீடு இருந்தாலும் பஞ்சாயத்து சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்தால் அதிலிருந்து பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அதைப்போலவே சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் அதிகமாக வழங்கப்பட்டது. அதுமாத்திரமல்ல; 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களை எல்லாம் இணைக்கின்ற வகையில் இணைப்புச்சாலைகள் அமைக்கும் திட்டத்தையும் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதற்காக 1974–75-ம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 3.

பேருந்து செல்லும் சாலைகளையும் மற்ற சாலைகளையும் மேம்படுத்துவதற்கு இத்திட்டம் உதவியாக இருந்துவருகிறது.

அதுமட்டுமல்ல. சிறுபாசனத் திட்டங்களுக்கும் அரசாங்கம் வழிவகைச் செய்திருக்கிறது. 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள பெரிய குளங்களை எல்லாம் பொதுப்பணித் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அதையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக் குறைவாக உள்ள குளங்களை பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக்கொள்ள வழிவகை செய்திருக்கிறோம். அதற்காக இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் உதவி கொண்டு தமிழ்நாட்டில் 230 வட்டாரங்களில் கிராம வேலைவாய்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்தது. இந்திய அரசு 1973-74-ம் ஆண்டு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வரவில்லை. ஏற்கெனவே இத்திட்டத்தின்கீழ் வேலை செய்து வந்தவர்களுக்கு ஏமாற்றமும், மனக் கசப்பும் ஏற்படாமலிருக்கத் தொடர்ந்து இத்திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டமாக செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட வேலைகளை முடிப்பதற்கு இன்னும் 60 லட்சம் ரூபாய் தேவைப்படும். அதை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். அவர்கள் 60 லட்சத்திற்குப் பதிலாக 27.74 லட்சம் நிதி உதவி அளித்திருக்கிறார்கள். அதோடு நாம் மேலும் 1974-75-ம் ஆண்டில் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இதையும் சேர்த்து அந்தத் திட்டத்தை முடித்திட இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

கிராம வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதில், பசுமைப் புரட்சி போன்ற திட்டங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் நேரடியாகப் பங்கு கொள்கின்ற வகையில் அவைகளுக்கான சட்டதிட்டங்களை திருத்தி அமைக்கும் பணியை அராய்ந்து வருகிறோம். இந்தச் சீரமைக்கும் பணியை நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் விட்டிருக்கிறோம்.



1974 ஏப்ரல் 3] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

நிர்வாக சீர்திருத்தக் குழு அதன் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துவிட்டது. அதை ஆய்வு செய்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பு ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது; மாண்புமிகு அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 83 பரிந்துரைகளைக் கொடுத்தார்கள். அதில் 48 பரிந்துரைகள்மீது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை அரசின் ஆய்வில் உள்ளன.

இவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் யோசித்துப் பார்த்து, கட்சி மாச்சரியங்கள் இல்லாமல் அரிய கருத்துக்களை சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கருத்துக்களைத் தெரிந்துகொண்ட பின்னால் என்னென்ன வகைகளிலே அவைகளைச் செயல்படுத்தலாம் என்பதை பரிசீலனை செய்து, அரசு முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 2½ மணி நேரம் தான் இருக்கிறது. 20 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தொடங்கி வைக்கின்ற உறுப்பினர் 15 நிமிடங்களும், மற்ற உறுப்பினர்கள் 5 நிமிடம் பேசுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. என். கே. பழனிசாமி: இது முக்கியமான விஷயம்—48 சிபார்சுகள் இருப்பதாக—அவற்றைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்கிறார்கள். நாங்கள் யோசனை சொல்ல வேண்டுமென்றால், 5 நிமிடத்திற்குள் எப்படி முடியும்? அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

Thiru B. VENKATASWAMY: It is an important Demand and therefore, it is better to have the discussion in the evening also. It is a most important demand relating to Community Development.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்ய வேண்டும். இன்றைக்குக் கேள்வி நேரத்தைக்கூட ஒத்திவைத்திருக்கலாம். அங்கே ஒன்றும் தீர்மானிக்காது இங்குவந்து நேரம் போதவில்லை என்றால், என்ன செய்வது?

THIRU B. VENKATASWAMY: The time has been taken away by Call Attention Notices and Adjournment Motion. That time can be extended for the Demand. Therefore, we can have the sittings in the evening also.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு வந்து மாலையில் வைத்துக் கொள்ளலாம் என்பது முடியாது. மாலையில் வேறு எத்தனையோ பணிகளை மாண்புமிகு அமைச்சர்களும், உறுப்பினர்களும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்

* திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை இங்கே அறிமுகப்படுத்திய அமைச்சர் அவர்கள்—இது மக்கள் வளர்ச்சிக்கான மானியம்—சமுதாய வளர்ச்சிக்கான மானியம்—இதில் அரசியல் கலப்பு இல்லாமல்—அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இதில் எந்த அளவுக்கு அரசியல் தலையீடு இருக்கிறது என்பதையும் அரசியல் தலையீடு காரணமாக அரசாங்கம் செய்திருக்கிற இந்த ஏற்பாடு எவ்வளவு பாழ்படுகிறது என்பதையும் நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் இன்றைக்கு நேரடித் தலைவர் தேர்தல் இல்லை. இந்திய துணைக்கண்டம் முழுவதிலும்—இன்றைக்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தலைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதானால்

"It is not an election; but it is a contest for kidnapping." என்கிற நிலையில்—ஆட்களைக் கடத்துகின்ற தேர்தலாகத்தான் இருக்கிறது.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தல் நேரடியாக நடத்துகின்ற நிலைமையில்—அது அமைதியாகச் செயல்பட்டிருக்கிற காரணத்தினால், அதனால் கிராமங்களில் அமைதி, சுமுகமாக சூழ்நிலை ஏற்படுகிறது என்கிற காரணத்தினால் எல்லா இடங்களிலும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) என் அனுபவத்தை வைத்தே சொல்கிறேன். உங்கள் அனுபவத்தை வைத்தும் பார்க்கலாம். இதில் ஒளிமறைவு இல்லை. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தல் என்றால் ஆட்களைக் கடத்துகின்ற தேர்தலாகத்தான் நடைபெறுகிறது. (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினருக்குக் கொடுத்திருக்கிற நேரம் குறைவானது. யாரும் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: நம்முடைய பஞ்சாயத்துகள் சட்டமும் தெளிவாக இல்லை. கேஸ் லாவை வைத்து—நீதி மன்றங்கள் தீர்ப்பைப் பின்பற்றி—செயல்படுகிறது—அடிக்கடி முரண்பட்ட தீர்ப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன—இதனால் நிர்வாகத்தில் பல சங்கடங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, பஞ்சாயத்து சட்டத்தை அரசாங்கம் தெளிவாக—விரைவில் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற அதிகாரங்கள் மிகமிகக் குறைவானவை. நாளுக்குநாள் அதன் அதிகாரங்கள் குறைந்து, நலிந்து வருகின்றன. தமிழ்நாடு அரசாங்கத்தை நடத்துகிற திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய சர்க்காரிடம் மாநில சுயாட்சி கேட்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடிப்படையாகத் தரப்பட வேண்டிய—அத்தியாவசியமான அதிகாரங்கள் கூட கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்பட்டவையும் பறிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட ஜங்ஷனைப்போல—ரெயில்கள் வரும்—பல பெட்டிகள் கழட்டிவிடப்படும்—சில பெட்டிகள் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதான ரீதியில்—தண்ணீர் திட்டங்கள்—வாடர் போர்டு—ரோடுகள்—ஹைவேஸ்—ரெவின்யூ டிபார்ட்மெண்டு என்பதாக பல டிபார்ட்டுமெண்டுகள் அங்கே வந்து மோதுகின்றன. ஆசிரியர்களை மாற்றுகிற அதிகாரத்தைக் கூட எடுத்துவிட்டார்கள்.

* ரெவின்யூ போர்டை ஒழிக்கிறோமோ இல்லையோ—இங்கே ரெவின்யூ டிபார்ட்டுமெண்டையே ஒழித்துவிடவேண்டும். முழுக்க முழுக்க எல்லா அதிகாரங்களும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே தரப்படவேண்டும்.

நீண்ட நாட்களாக ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டு இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்டு—ஆர்.டி. எல்.ஏ. டிபார்ட்மெண்டு இரண்டும் தனித்தனியாகப் பிரிக்கப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் மகாநாட்டிலேயே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ரெவின்யூ இலாக்கவும், ஆர்.டி.எல்.ஏ. இலாக்காவும் இணைந்திருக்கிறது.

கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. பஞ்சாயத்துகள் .சேர்ந்த பஞ்சாயத்து ஒன்றியம் இருக்கிறது. நகராட்சிகள்— மாநகராட்சிகள் வந்துவிட்டன. இது அல்லாது டவுன்ஷிப்பும் இருக் கிறது. நிலவரியைக் குறைத்திருக்கிறோம். இப்படி இருக்கையில் ரெவின்யூ இலாக்கா எதற்காக இருக்கவேண்டும்? கிராம முன்சீப் களை நியமிப்பது—வேலையைவிட்டு நீக்குவது—உயர்நீதி மன்றத்திற்கு வழக்குப்போகச் செய்வது—ஆக இப்படி எங்களைப்போன்ற வழக்கறி ஞர்களுக்கு வருமானத்தை உண்டாக்கிக்கொடுக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறதே தவிர—உதவிகரமான பணி எதையும் ரெவின்யூ இலாக்கா செய்யவில்லை.

அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்றார்கள். கிராம ராஜ்யம் ஏற்படவேண்டுமென்றால், ரெவின்யூ இலாக்காவே அபாலிஷ் செய்யப்படவேண்டும். ரெவின்யூ இலாக்காவின் அதிகாரம் கிராமங்களில் இருக்கிற வரைக்கும், அதன் கரங்கள் நீளுகிற வரைக்கும்—கிராமங்களைத் தீண்டுகிற வரைக்கும் நிச்சயமாக கிராம ராஜ்யம் உருவாகாது என்பதை நான் வலியுறுத்தித் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதலில் ரெவின்யூ இலாகாவும்—ஆர்.டி.எல்.ஏ. இலாகாவும் பைபர்கேஷன் செய்யப்படவேண்டும். தலைமையகத்தைக் காட்டிலும் முதலில் மாவட்ட அளவில்—தாலூகா அளவில்—கிராம அளவில் ரெவின்யூ இலாகா அபாலிஷ் செய்யப்படவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவராக இருந்தபோதே இந்தக் கருத்தைச் சொல்லி வந்தார்கள் என்று நினைக்கிறேன். பதவிக்கு வந்தவுடன் சொன்னதை எல்லாம் நிறைவேற்ற முடியாத நிலைமையில் அமைச்சர்கள் இருக்கிறார்கள். இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சிக்கு அரசியல் கலப்பில்லாத கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். உதாரணமாகச் சொல்கிறேன். சிவகாசி பஞ்சாயத்து யூனியனில் ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்கே அரசியல் தலையீடுதான் காரணம். அந்தச் சிக்கலுக்கு முதல் காரணம் ஆளுங்கட்சி—அமைச்சருடைய தலையீடு—அதுவும் குறிப்பாக ஒரு அமைச்சருடைய தலையீடுதான் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.





சிவகாசி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கோபால்சாமி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்கு ஆளுங்கட்சி உதவி செய்தது—அதிகாரம் முழுவதையும் பயன் படுத்தியது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடிய வில்லை என்றவுடன்—நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்வது என்று ஆரம்பித்தார்கள்.

என்ன என்ன காரியங்கள் உண்டோ அவை அனைத்தையும் செய்தார்கள்—நிர்வாகத்தை முடக்கினார்கள்—நான் ஏற்கனவே குறிப்பிட்டேன்—அங்கே இருக்கிற ஆணையர் என்னென்ன காரியங் களைச் செய்கிறார் என்பதை நீங்கள் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டு அதிகாரிகளையே கேளுங்கள்—சி.ஐ.டி.க்களை வைத்துப் பாருங்கள்— எவ்வளவு லஞ்சம் வாங்குகிறார்—அக்கிரமங்கள் பண்ணுகிறார் என்பது தெரியும். ஈ.ஓ. மூலம் அவர் விரட்டுகிற விரட்டு—வட்டா ரங்களில் எந்தக் காரியமும் நடைபெற முடியாமல் நாசம் செய்து கொண்டிருக்கிறார்.

இன்னும் அரசாங்கத் தலையீட்டுக்கு மற்றொரு உதாரணம் சொல்ல முடியும்—திருத்தங்களில் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவருடைய உறவுக்காரர் சாராயக் கடை வைத்திருக்கிறார். (திரு. கு. காமாட்சி குறுக்கீடு) சாராயக் கடை வைத்திருக்கிறாரே? அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கம்யூனிடி டெவலெப் மெண்டு மானியக் கோரிக்கை—அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

திரு. பெ. சீனிவாசன்: சம்பந்தம் இருக்கிறது. விவசாயப் போராட்ட காலத்தில் அந்தக் கடை தாக்கப்பட்டது. தாக்கியது யார்? ஆனால் இன்றைக்கு சிவகாசி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரை அதில் சிக்கவைத்து மேலும் இரண்டு மூன்று பேர்களைச் சேர்த்து வழக்குப்போட்டார்கள். செஷன்ஸ் கோர்ட்டில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு—அந்தத் தீர்ப்பே அரசுக்கு மிகப் பெரிய நிமார்க்காக இருக்கிறது. இப்படி இன்றையதினம் அரசியல் தலையீடு அரசியல் கலப்பாகத்தான் ஊராட்சி—ஊராட்சி ஒன்றியங்களை இவர் கள் ஆக்கிவருகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 ஏப்ரல் 3

கிராமங்களில் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. பஞ்சாயத்துகள்
சேர்ந்த பஞ்சாயத்து ஒன்றியம் இருக்கிறது. நகராட்சிகள்—
மாநகராட்சிகள் வந்துவிட்டன. இது அல்லாது டவுன்ஷிப்பும் இருக்
கிறது. நிலவரியைக் குறைத்திருக்கிறோம். இப்படி இருக்கையில்
ரெவின்யூ இலாக்கா எதற்காக இருக்கவேண்டும்? கிராம முன்சீப்
களை நியமிப்பது—வேலையைவிட்டு நீக்குவது—உயர்நீதி மன்றத்திற்கு
வழக்குப்போகச் செய்வது—ஆக இப்படி எங்களைப்போன்ற வழக்கறி
ஞர்களுக்கு வருமானத்தை உண்டாக்கிக்கொடுக்கக்கூடிய ஒன்றாக
இருக்கிறதே தவிர—உதவிகரமான பணி எதையும் ரெவின்யூ
இலாக்கா செய்யவில்லை.

அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கிராம ராஜ்யம் ஏற்பட
வேண்டும் என்றார்கள். கிராம ராஜ்யம் ஏற்படவேண்டுமென்றால்,
ரெவின்யூ இலாக்காவே அபாலிஷ் செய்யப்படவேண்டும். ரெவின்யூ
இலாக்காவின் அதிகாரம் கிராமங்களில் இருக்கிற வரைக்கும், அதன்
கரங்கள் நீளுகிற வரைக்கும்—கிராமங்களைத் தீண்டுகிற வரைக்கும்
நிச்சயமாக கிராம ராஜ்யம் உருவாகாது என்பதை நான் வலியுறுத்தித்
தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதலில் ரெவின்யூ இலாகாவும்—ஆர்.டி.எல்.ஏ. இலாகாவும்
டைபர்கேஷன் செய்யப்படவேண்டும். தலைமையகத்தைக் காட்டிலும்
முதலில் மாவட்ட அளவில்—தாலூகா அளவில்—கிராம அளவில்
ரெவின்யூ இலாகா அபாலிஷ் செய்யப்படவேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந்
தலைவராக இருந்தபோதே இந்தக் கருத்தைச் சொல்லி வந்தார்கள்
என்று நினைக்கிறேன். பதவிக்கு வந்தவுடன் சொன்னதை எல்லாம்
நிறைவேற்ற முடியாத நிலைமையில் அமைச்சர்கள் இருக்கிறார்கள்.
இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சிக்கு அரசியல் கலப்பில்லாத கருத்துக்களைச்
சொல்லவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள்.
உதாரணமாகச் சொல்கிறேன். சிவகாசி பஞ்சாயத்து யூனியனில்
ஏற்பட்டிருக்கிற சிக்கலுக்கே அரசியல் தலையீடுதான் காரணம்.
அந்தச் சிக்கலுக்கு முதல் காரணம் ஆளுங்கட்சி—அமைச்சருடைய
தலையீடு—அதுவும் குறிப்பாக ஒரு அமைச்சருடைய தலையீடுதான்
என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. பெ. சீனிவாசன்]

கோபால்சாமி மீது
சிவகாசி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கொண்டுவந்தார்கள். அதற்கு
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் முழுவதையும் பயன்
ஆளுங்கட்சி உதவி செய்தது—அதிகாரம் கொண்டுவர முடிய
படுத்தியது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் செய்வது என்று
வில்லை என்றவுடன்—நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச்
ஆரம்பித்தார்கள்.

என்ன என்ன காரியங்கள் உண்டோ அவை அனைத்தையும்
செய்தார்கள்—நிர்வாகத்தை முடக்கினார்கள்—நான் ஏற்கனவே
குறிப்பிட்டேன்—அங்கே இருக்கிற ஆணையர் என்னென்ன காரியங்
களைச் செய்கிறார் என்பதை நீங்கள் ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மெண்டு
அதிகாரிகளையே கேளுங்கள்—ஸி.ஐ.டி.க்களை வைத்துப் பாருங்கள்—
எவ்வளவு லஞ்சம் வாங்குகிறார்—அக்கிரமங்கள் பண்ணுகிறார்
என்பது தெரியும். ஈ.ஓ. மூலம் அவர் விரட்டுகிற விரட்டு—வட்டா
ரங்களில் எந்தக் காரியமும் நடைபெற முடியாமல் நாசம் செய்து
கொண்டிருக்கிறார்.

இன்னும் அரசாங்கத் தலையீட்டுக்கு மற்றொரு உதாரணம் சொல்ல
முடியும்—திருத்தங்களில் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவருடைய
உறவுக்காரரர் சாராயக் கடை வைத்திருக்கிறார். (திரு. கு. காமாட்சி
குறுக்கீடு) சாராயக் கடை வைத்திருக்கிறாரே? அதைத்தான்
சொல்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது கம்யூனிடி டெவலெப்
மெண்டு மானியக் கோரிக்கை—அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

<u>திரு. பெ. சீனிவாசன் :</u> சம்பந்தம் இருக்கிறது. விவசாயப்
போராட்ட காலத்தில் அந்தக் கடை தாக்கப்பட்டது. தாக்கியது
யார்? ஆனால் இன்றைக்கு சிவகாசி ஊராட்சி ஒன்றியப் பெருந்
தலைவரை அதில் சிக்கவைத்து மேலும் இரண்டு மூன்று பேர்களைச்
சேர்த்து வழக்குப்போட்டார்கள். செஷன்ஸ் கோர்ட்டில் அவர்கள்
விடுதலை செய்யப்பட்டு—அந்தத் தீர்ப்பே அரசுக்கு மிகப் பெரிய
ரிமார்க்காக இருக்கிறது. இப்படி இன்றையதினம் அரசியல் தலையீடு
அரசியல் கலப்பாகத்தான் ஊராட்சி—ஊராட்சி ஒன்றியங்களை இவர்
கள் ஆக்கிவருகிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 ஏப்ரல் 3

எனது ஊராட்சி ஒன்றியத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். நான் இங்கே டெபுடி ஸ்பீக்கர் பதவியைவிட்டுவிட்டு—கட்சிமாறியிருக்கிறேன். இதன் விளைவுகள் இங்கேயே இருக்க வேண்டும்—எதற்காக ஊராட்சி ஒன்றியத்தில் இதன் விளைவாக பல சிக்கல்களை உண்டாக்க வேண்டும்?

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரை—மாவட்ட ஆட்சித் தலைவரே கூப்பிட்டனுப்பி, விரட்டினார்கள். அவர் பயந்து லீவில் போய் விட்டார். பி.டி.ஓ.வும் விடுமுறையில் போய்விட்டார். வேறு யாரையும் போடவில்லை—ஏ.இ.ஓ. இன்சார்ஜ்—அங்கே எந்தவிதமான வேலையும் நடைபெற முடியாமல் நிர்வாகத்தை இப்படி குலைக்கிறார்கள்.

அதோடு எம்.எல்.சி. தங்கபாண்டியன் இரண்டு ஆட்களை வைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் வந்து அங்கிருந்தவரை அடித்துத்தாக்கியிருக்கிறார்கள். அவர் போலீஸ் வழக்குக் கொடுத்தார். எடுக்கவில்லை—அவர் ப்ரைவேட் கம்ப்ளேன்ட் கொடுத்தது. டி.ஆர்.டி. ரகுபதி அவர்களுக்குத் தெரியும்—அந்த அலுவலகத்தில் உள்ளவர்களையும், ஊர் மக்களையும் சி.ஐ.டி. போட்டு விசாரித்துப் பாருங்கள்—உண்மை தெரியும்—இ.ஓ.பி.ஐப் பந்தாடியிருக்கிறார்கள். சொந்த ஊரைவிட்டு—இன்றைக்கு அவரை எந்த ஊரில் போட்டிருக்கிறார் என்பதே தெரியவில்லை. இந்த அளவுக்கு அரசாங்கத் தலையீடு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

நாளையதினம் இதே நிலைமை நீடிக்குமானால், என்னுடைய ஊராட்சி மன்றத்தில் நடக்கிற நாகரீகமற்ற காரியங்கள் தொடருமானல், அது நல்லதல்ல. எனக்கு வேண்டியவர்கள்மீது வழக்கு போடுகிறார்கள், எனக்கு எதிராக இருப்பவர்களை மன்னிக்கிறார்கள், நகர–ஊராட்சி மன்ற காரியங்களை நடக்க விடாமல் செய்கிறார்கள்.

இன்றைக்கு அது மாத்திரமல்ல, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில், கள்ளக்கூடம் சரியாகச் செயல்பட முடியவில்லை, வத்தலகுண்டு சரியாகச் செயல்பட முடியவில்லை. இதற்கு மக்கள் தங்களுடைய ஜனநாயக உணர்வுகளை மறந்துவிட்டார்களென்று பொருள் அல்ல. அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள், ஒரு அமைப்பு உருவாகியிருக்கிறது. அந்த அமைப்புகளைச் செயல்பட விடுகிறார்களா?



1974 ஏப்ரல் 3] [திரு. பெ. சீனிவாசன்]

எத்தனை கோர்ட்டுகள் உள்ளனவோ, ரெவினியூ கோர்ட்டிலே ஆரம்பித்து, சுப்ரீம் கோர்ட்டு வரை நீங்கள் ஊராட்சி மன்றங்களைக் கொண்டு போனால், கிராம ராஜ்யம் சுப்ரீம் வரண்டாவிலேயா வரும்? இன்றைக்கு இவ்வளவுதூரம் ஆளுங்கட்சித் தலையிடுகிற காரணத்தால்தான் இந்த நிலைமை.

அரசு சுயாட்சி கேட்கிறது, தி.மு. கழகம் கேட்கிறது, அதைப் பற்றி பெரிய புத்தகம் வெளியிட்டிருக்கிறது. தங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்று கேட்கிற நீங்கள், உங்களுக்குக் கீழே உள்ள யாருக்காவது சுயாட்சி தருவதற்குச் சம்மதித்திருக்கிறீர்களா? கீழே உள்ள லோக்கல் பாடீஸ் எதற்காவது, அந்த சுயாட்சி தர வேண்டுமென்ற எண்ணம், ஆசை, இருக்கிறதா என்று நான் உங்களை உறுதியாகக் கேட்க ஆசைப்படுகிறேன். அது நிச்சயமாக இல்லை.

அரசாங்கம் தலையிட்டால் கூடப் பரவாயில்லை, அரசாங்கத்திலே சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், அவர்களுடைய கட்சி என்ற காரணத்தால், அவர்கள் அங்கே புகுந்து விளையாடுகிறார்கள், சட்டம் தெரியாமல், விதிமுறைகளைப் புரியாமல், அங்கே இருக்கிற அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கிற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இந்த நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை தவிர்க்கப்பட்டாலொழிய, சரியான நிலைமை ஏற்பட முடியாது, அமைச்சர் அவர்கள் கூறுகிற ராம ராஜ்யம், கிராம ராஜ்யம் வராது.

இளையாங்குடியில், புறம்போக்கு நிலத்திற்காக, தி.மு.க. ஆதரவி உள்ள ஊராட்சி ஒன்றியத்தில், அவர்கள் பெரும்பான்மை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், ஒரு தீர்மானம் போடுகிறது. அந்த மசூதி இருக்கிறது, முஸ்லீம் தாய்மார்கள் தண்ணீர் எடுக்கக் கிணறு இருக்கிறது. இடையிலே, முக்கோண வடிவ குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் இருக்கிறது ஒரு சிறு இடத்தில். அந்த இடத்திலே, தி.மு.க. மன்றம் வேண்டுமென்பதற்காக, பட்டா செய்து தரவேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்கள், ஊரிலே இருக்கிற முஸ்லீம்கள் எல்லாம் ஆட்சேபணை செய்கிறார்கள். ஆனால், அதையும் மீறி அதிகாரிகளுடைய தலையீடு நடைபெறுகிறது.

இந்த அளவு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடைய ஊராட்சி ஒன்றியங்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களுக்கு வரவேற்பு தருவதற்கு அமைந்திருக்கிற ஒரு வரவேற்பிடமாக, ஆளுங் கட்சிப் பிரச்சாரங்களுக்கு வசூல் செய்கிற இடமாக, ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிலை நீடிக்குமானல், நிச்சயமாக, கிராம ராஜ்யம் மலர முடியாது, கட்சி ராஜ்யம் வேண்டு மானல் மலர முடியும்.

அடுத்த தடவையாவது ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவரை நேரடியாக மக்கள் தேர்ந்தெடுக்கும் வகையில் சட்டத்தை மாற்றி அமையுங்கள். ஆட்கடத்தல், ஜாதித் தகராறு நிச்சயம் இருக்காது. அப்படி வைக்கப்படுமானல், ஏராளமான பணத்தைச் செலவழிக்கிற நிலைமை இருக்காது. அதன்மூலம், செலவழித்த பணத்தைப் பின்னலே ஈடுகட்டுகிற நிலைமை இருக்காது.

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவராக இருந்த காரணத்தால், அவர்கள் இதை உணர்ந்த காரணத்தால், இந்த ஒரு சட்டத்தையாவது மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தாங்கள் குறுக்கிட வேண்டா மென்று சொன்ன காரணத்தால், நான் குறுக்கிடவில்லை. அவர் பேசி முடித்த பிறகு கேட்க வேண்டுமென்று இப்பொழுது கேட்கிறேன். இந்த அவையில் அங்கம் வகிக்காத தன்னைப் பாதுகாக்க முடியாத ஒருவரது பெயரைச் சொல்லி, குற்றம் சாட்டக் கூடாது என்று தாங்கள் இந்த மன்றத்திற்குச் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும், நண்பர் மாண்புமிகு சீனிவாசன் இன்னெரு அவையிலே, இன்னும் உறுப்பினராக இருக்கும் உறுப்பினர் பெயரைச் சொல்லி, ஒரு அலுவலகத்திற்கு வந்து அடித்தார் என்று கூறுவது பொருத்தமா என்பதற்குத் தாங்கள்தான் தீர்ப்பு அளிக்கவேண்டும். அதே முறை யில், அந்த மன்றத்திலே, இந்த மன்றத்து உறுப்பினர்களைப்பற்றிச் சொல்வது, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாதவர்களது பெயரைச் சொல்வது, மன்ற மரபிற்கு அப்பாற்பட்டது என்றுதான் தாங்கள் தீர்ப்பளித்துள்ளீர்கள். ஆகவே, இதற்குத் தங்களது தீர்ப்பைக் கோருகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : அந்த உறுப்பினர் மீது ஏதாவது ஒரு குற்றச் சாட்டை, அவர் நிருபித்துத் தீரவேண்டிய, விவாதத்திற்குரிய குற்றச்சாட்டை இங்கே நான் எழுப்பினல், மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும். அவர் ஊராட்சி மன்றத்திலே அடித்தது, வழக்கு நடந்தது, போலீசால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது, எல்லோருக்கும் தெரிந்த விவகாரம், பத்திரி கைகளிலே வந்திருக்கிறது. இங்கே வந்து டிஃபென்ட் பண்ண வேண்டிய அவசியமில்லை, அவருக்கு வாய்ப்பு கொடுத்தால்கூட, மறுத்துவிடுவார். இது எல்லோருக்கும் தெரிந்த விவகாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக, நம்முடைய அவை யிலே வந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்களைப்பற்றி குறிப்பிட்டுப் பேசுவது முறையல்ல; முறையல்ல என்று விதிகளிலே இருக்கிறது. அந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அவைமுன் உள்ள உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையினை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு, இந்த ஊராட்சித் துறைக்குப் பொருத்தமானவர்கள் என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்ருக அறிவார்கள். அவர்கள் உள்ளாட்சித் துறையில் மிக நீண்ட காலமாகத் தொடர்புகொண்டு, உள்ளாட்சித் துறையினுடைய பல நிலைகளை நன்ருக அறிந்து இன்றையதினம் அதைச் செயல்படுத்தக் கூடிய நல்ல நிலையில் அமர்ந்து அதைச் செயல்படுத்திக் கொண்டு வருகிருர்கள் என்பதனையும் அத்தகைய நல்ல வாய்ப்பினை அவர்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டு வருவதற்கு இந்த மன்றம் நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்பதையும் நான் மிகத் தாழ்மையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர், எனது அருமை நண்பர் சீனிவாசன் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வாக்காளப் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த நிலை நிச்சயமாக நாம் வரவேற்கத்தக்க ஒன்று என்ற அடிப்படையிலும், அவர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்ற முறையிலேயும் அதை அவர் சொல்லி யிருப்பார் என்று நான் கருதுகிறேன்.

அதேபோல், நகராட்சி மன்றத்திலே ஓர் உறுப்பினராக இருப்பவன் என்ற முறையிலே, அந்தந்த நகராட்சித் தலைவர்களை, அந்தந்த நகராட்சிப் பகுதியிலே இருக்கிற பொது வாக்காளர்கள்

தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறையில், மாண்புமிகு அமைச்ச ரவர்கள் தன்னுடைய முழு முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபொழுது, அத்தகைய கருத்துக்கு மிக உடந்தையாக இருந் தார் என்பது மட்டுமல்ல, இதை எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டும், எப்படியாவது நிறைவேற்றி தன்னுடைய ஜனநாயகக் கடமையை நாட்டிலே நிலைபெற்று உருவாக்கி விடவேண்டுமென்ற எண்ணத்தில் ஆழ்ந்த கருத்துடையவர் என்ற முறையில், அதை நிறை வேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில், அந்தந்தப் பகுதி யிலே இருக்கிற தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பினை இன்றையதினம் நாம் பெற்றிருக்கிறோம். அதைப்போல், அந்தந்தத் தொகுதியிலே இருக்கிற நகராட்சி மன்றங் களில், நகராட்சி மன்ற உறுப்பினர்களாக இல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் நகராட்சிமன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்வ தற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை ஜில்லா, நகராட்சிகள் சட்டப்படி, இந்த மன்றத்திலே எனக்கு 6, 7 ஆண்டுகாலமாக வாய்ப்பு ஏற்பட்டபொழுதெல்லாம், பணிவன்போடு சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன், பழைய சென்னை ஜில்லா சட்டத்தின்படி இருக்கிற உறுப்பினர்களில், நாலிலே ஒரு பகுதியினர் ஆதித் திராவிடர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இங்கே இருக்கிற நகராட்சிகளுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை நிறைவேற்றுகின்றபொழுது, இன்றைக்கிருக்கிற அரசாங்கம் நிச்சயமாக அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் 15. 16 ஆண்டுகளாக மாயூரம் நகராட்சியினுடைய உறுப்பினராக இருக்கிறேன், முதல் தடவையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பொழுது, 28 பேர்கள் உறுப்பினர்களாக இருந்தோம். அந்த 28 பேரில் ஒரே ஒருவர் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் என்ற முறையில் அவருக்கு இடம் கிடைத்தது. ஆனால், இன்றையதினம் வளர்ந்து வருகிற முறையில் அடிப்படையில் 32 பேர் அந்த மன்றத்தின் உறுப் பினராக இருக்கிறோம். ஆனால், அந்த 32 பேரில் ஒரே ஒரு ஆதி திராவிடருக்குத் தான் இடம் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு





(திரு. வை. பாலசுந்தரம்—தலைமை]

அமைச்சரவர்களுக்கு மிகப் பணிவன்போடு கேள்வி நேரத்தில் எடுத்துச் சொன்னேன், அவருக்குத் தெரியாது என்ற காரணத்தால் அல்ல, அது செயல்பட வேண்டுமென்ற காரணத்தால்; ஏனென்றால், இன்றையதினம் ...... (மணி அடிக்கப்பட்டது) ஒரு தன்னிலை விளக்கம், இந்தக் கூட்டம் ஆரம்பித்த தேதியிலிருந்து இப்பொழுதுதான் நான் பேசத் தொடங்கி, 2, 3 நிமிடம் ஆகிறது. பேச வேண்டாம் என்று சொன்னால் நான் சபையைவிட்டு வெளியே போவதற்குக்கூட தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) : மணி அடிப்பதை தவறுகக் கருதக்கூடாது. ஒரு அங்கத்தினருக்கு 5 நிமிடம் என்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஆகையால் நேரமாகிவிட்டது என்பதைத் தெரிவிப்பதற்காகவே மணி அடிக்கப்படுகிறது. ஆகவே இதைத் தவறுக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

திரு. என். கிட்டப்பா : இந்தக் கூட்டத் தொடருக்கே 5 நிமிடம் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, the hon. Member has spoken for only three minutes. The normal practice is that the bell is not rung before the allotted time of five minutes is over. If the bell is rung within five minutes, it will upset any hon. Member and also it will not be a good parliamentary practice.

நீங்கள் தயவுசெய்து முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும் போது கொஞ்சம் "பொலைட்"டாகச் சொல்லுங்கள். ஏனென்றால், நீங்கள் சொல்லுவது பலரின் மனதைப் புண்படுத்துகிறது. இது நன்றாக இல்லை. கொஞ்சம் "பொலைட்"டாகச் சொல்லுங்கள். இங்கு நீங்கள் சொல்வதற்கு நாங்கள் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். இருந்தாலும் நீங்கள் சொல்லும்போது கொஞ்சம் சிரித்துக்கொண்டு சொல்லுங்கள்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, நானும் இந்த மன்றத்தில் கவனித்துக்கொண்டுதானிருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இப்போது உச்சரித்த வார்த்தைகளைக் கொஞ்சம் நாகரீகமாகச் சொல்லியிருக்கலாம். அவர் சொன்ன கருத்துக்களிலே நாகரீகமற்ற வார்த்தைகள் இருக்கின்றன. அவர் "impolite, he is not nice" என்று சொன்னார்கள்.

[திரு. செ. கந்தப்பன்] [1974 ஏப்ரல் 3

It is a reflection on the Chair and I beg of the hon. Member to withdraw such an expression.

டாக்டர் எச். வி. ஹண்டே: நான் அப்படிச் சொல்லவில்லை. கொஞ்சம் சிரித்துக்கொண்டு சொல்லுங்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. செ. கந்தப்பன்: அதைத் தலைவரிடத்தில் தனியாக சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். இந்த அவையில் அப்படிப் பேசுவது நல்லதல்ல. ஆகவே அதை "வித்ட்ரா" செய்யவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): பொதுவாக என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தாதீர்கள். ஒரு அங்கத்தினருக்கு 5 நிமிடம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. 5 நிமிடம் ஆனவுடன் மணி அடிப்பது பேச்சை முடித்துக்கொள்வதற்காகத்தான். ஆகவே அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இங்கே 5 நிமிடம் என்று குறித்திருக்கிற காரணத்தால்தான் நான் சொன்னேன். திரு. கிட்டப்பா அவர்கள் தொடர்ந்து பேசுவதாக இருந்தால் பேசலாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இப்போது செலவழிக்கப்பட்ட நேரத்தைக்கூட எனக்கே தந்திருக்கலாம். மீண்டும் எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தகைய வாய்ப்பை ஆதித்திராவிட சமூகத்திற்கு தந்து 4-ல் 1 பங்கு ஆதி திராவிட சமூகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படலாம், "மே பி எலக்டட்" என்று இருப்பதை "ஷல் பி எலக்டட்" என்று உருவாக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி தேர்தல் எப்போது வரும், எந்த தேதியில் வரும், அதை ஒத்தி வைத்துவிடக் கூடாதே என்று பல மாண்புமிகு உறுப்பினர்களும், பல கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நகராட்சி தேர்தலிலும், ஊராட்சி, பேரூராட்சி தேர்தல்களைப் போல கட்சி அரசியல் ஏதுமில்லை என்பதை எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்ற காரணத்தால் இந்தத் தேர்தலிலும் கட்சி சார்பாக இல்லாமல், எந்தக் கட்சியின் ஆதரவில்லாமலும் அதை ஒரு சுயேச்சை தேர்தலாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. என். கிட்டப்பா]

நேரம் அதிகமில்லை என்ற காரணத்தால், நான் சுருக்கமாக என்னுடைய ஊரைப்பற்றி அங்கிருக்கிற நிலைமைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நான் மாயவரம் நகரசபையின் 1-வது வார்டு அங்கத்தினராக இருக்கிறேன். அங்கு நகரசபையில் ஆளுங்கட்சியாக இருக்கிற ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு நடத்துகிறார்களோ, நாங்கள் அங்கே மைனாரிட்டியாக இருக்கிறபடியால் எந்த அளவுக்கு எங்களை தாழ்த்துகிறார்களோ, அதைவிட மோசமாக ஆணையராக இருக்கக்கூடியவர் எங்களுக்கு எவ்வளவு தொல்லைகள் கொடுக்க முடியுமோ, அவ்வளவு தொல்லைகளைக் கொடுத்து மாற்றுத் தரப்பிலே இருப்பவர்களுக்கு ஒரு கட்சித் தலைவரைப்போல அங்கே நடந்துகொள்கிறார்.

இதை நான் எடுத்துச்சொல்வதற்குக் காரணம் அரசாங்கம் இந்த விஷயத்தில் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான். அவர் பல லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர் என்பதைக்கூட என்னால் நிரூபிக்க முடியும் என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

ஆக இதிலே என் போன்றவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாயவரத்திலே இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சி மன்றம் ஏற்று நடத்த வேண்டியிருக்கிறது. அதிலே ஒரு பள்ளியையாவது அரசாங்கம் நகராட்சிமன்றத்தின் பொறுப்பிலிருந்து வெட்டிவிட்டு அதை அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் சொல்கிறபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் நாகரீகமற்ற முறையிலே சொன்னார் என்று சொன்னார்கள். ஆனால் அவர் சொன்னது முகத்தை கொஞ்சம் சிரித்துக்கொண்டு சொன்னால்போதும் என்றுதான் சொன்னார். அந்த வார்த்தைகள் எப்படி நாகரீகமற்ற வார்த்தைகள் என்று சொல்லமுடியும்? இது நிச்சயமாக தீர்ப்புக்கு வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். நான்

தீர்ப்பு கூறுகிற வரையிலும் நின்று கொண்டே இருப்பேன். இல்லையென்றால் அவர் பேசியதை மட்டும் அவைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன்: தலைவரவர்களே, சபையிலே தலைவராக இருப்பவர் சபையில உறுப்பினராக இருந்தாலும் பேனலிலே இருந்தாலும் அவருடைய டிஸ்க்ரீஷன் பேரிலேதான் இந்த அவை நடக்கிறது. ஆகவே கொஞ்சம் பொலைட்டாக சொல்லுங்கள் என்று இதை தலைவரிடத்தில் தனியாகச் சொன்னால் நல்லது என்றுதான் நான் சொன்னேன். இதற்கு ரெக்கார்டை வேண்டுமானாலும் எடுத்துப் பார்க்கலாம். ஒரு வேளை இது உங்கள் சம்பந்தப்பட்டது என்று நினைத்து நீங்கள் இதிலே உத்தரவு போடவில்லை என்று நினைக்கிறேன். இது உங்கள் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. நீங்கள் அமர்ந்திருக்கிற நாற்காலியின் மரபு காக்கப்படவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லோருமே "பேனல் ஆஃப் சேர்மன்"லேயிருந்துதான் இங்கே வந்து உட்காருகிறார்கள். டாக்டர் ஹண்டே என்ன சொன்னார்கள்? நாங்களெல்லாம் பள்ளிக்கூட மாணவர்கள் இல்லை. பொறுப்புள்ள அங்கத்தினர்களாக இருக்கிறோம். சமயத்தில் நாங்கள் உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கெல்லாம் நீங்கள் பொறுமையை இழக்கக்கூடாது என்றுதான் சொன்னார்கள். அதிலே ஒன்றும் இம்பொலைட்டாக இல்லை. அங்கத்தினர்கள் சொல்வதை நல்ல "குட் ஸ்பிரிட்டி"லே தான் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர—நீங்கள் நல்ல எண்ணத்தில் எடுத்துக்கொண்டாலும் இவர் விடமாட்டார் போலிருக்கிறது—ஆகவே தயவுசெய்து இதை நீங்கள் நல்ல எண்ணத்திலேதான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு என்னை சங்கடத்தில் ஆழ்த்தாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

(முற்பகல் 11–30)

* திரு. என். கே. பழனிசாமி: கனம் மந்திரியவர்கள் எங்கேயோ வெளியே போய்விட்டார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்): நான் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம். குறிப்பிட்ட நேரம் வகுத்திருக்கிறோம். அதற்குள் முடித்துக்கொள்வது நல்லது.





இந்த நேரத்திற்குள்ளாக ஒரு அங்கத்தினர் முறையும்கூட. பேசியிருக்கலாம். இதற்குள்ளாக இங்கே ஏற்பட்ட பிரச்னையின் காரணமாக ஒரு அங்கத்தினர் காலங்கடந்து பேசுகின்ற சூழ்நிலை உருவாகிவிட்டது.

திரு. என். கே. பழனிசாமி: கனம் தலைவரவர்களே, மாநகராட்சி யில் பலபேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் கைதிகளாக இல்லை, ராஜபோகத்தில் இருக் கிறார்கள். இன்றைக்கு எப்பொழுது தேர்தல் என்று அறிவிக்கப் போகிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை.

மதுரையிலேயும் இதேமாதிரி ஊழல் இருப்பதாகச் சொல்லப்படு கிறது. அதையும் கலைத்துவிட்டு இம்மாதிரி பரிசிலனை செய்ய முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கார்ப்பரேஷன் வரி கட்டாமலேயே தண்ணீர்க் குழாய் வைப்பதும், வரி கட்டாமல் டிரெய்னேஜ் வைப்பதும் நடக்கிறது. ஒவ்வொரு ஏரியாவிலேயும் 6 குவார்ட்டர், 7 குவார்ட்டர் என்று— ஒரு குவார்ட்டர் என்றால் 6 மாதங்கள்—7 குவார்ட்டர் என்றால் எத்தனை மாதங்கள்? யார் யார் வரி கட்டாமல் குழாய் வைத்திருக் கிறார்களோ அல்லது டிரெய்னேஜ் போட்டிருக்கிறார்களோ அவர் களுக்கு இதுவரையில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஜனங்கள் குடிப்பதற்கு மெட்ரூஸ் சிட்டியில் தண்ணீர் இல்லை. ஆனால் எத்தனை தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது? எத்தனை பங்களாக்களில் பாய்கிறது? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 120 டிவிஷன்கள் இருக்கின்றன, ஒரு டிவிஷனில் ஒரு தெருவில் மட்டும் 10 பேர் அன்-ஆதரைஸ்டாக, ஜனங்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நந்தவனத்திற்கும், பார்க்குக்கும் கொடுக்கிறார்கள். அந்த டீடெயில்ஸ் இருக்கிறது. கனம் அமைச்சரவர்களிடம் பிறகு அதைக் கொடுத்துவிடுகிறேன்.

அதுமட்டுமல்ல. நிறைய உட்லன்ட்ஸ் இருக்கிறது. பெரிய தோட்டம். கார்ப்பரேஷனைச் சேர்ந்த அதிகாரியும் 6 பேர்களும் அங்கேயே பர்மனென்ட் உத்தியோகம். அவர்கள் கார்ப்பரேஷன் சம்பளத்தை வாங்குகிறார்கள், அங்கேயே சாப்பிட்டுக் கொள்கிறார்கள். இதைப் பற்றி பரிசிலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாட்டுத் தீவனத்திற்கு என்று காண்டிராக்ட், நாலு மாடுகளுக்குக் காண்ட்ராக்ட் என்றால், ஒரு மாட்டுக்கான தீவனத்தையே 4 மாடுகளுக்கும் போடுவது. அது வைக்கோலானாலும் சரி, புல்லானாலும் சரி கணக்கு 4 மாடுகளுக்கு. ஆனால் ஒரு மாட்டுத் தீவனத்தையே 4 மாடுகளுக்கும் போடுவது. வண்டிகள் இருக்கின்றன. ஆனால் மாடுகள் போதுமானதாக இல்லை. மாடுகளுக்குப் பதிலாக ஆட்களே இழுக்கின்ற நிலைமை கார்ப்பரேஷனில் இருக்கிறது.

இந்தக் கார்ப்பரேஷன் காண்ட்ராக்ட் முறையை எடுத்துக்கொண்டால், என்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அதிலே லோ கொட்டேஷனை என்ஜினியரிங் டிபார்ட்மெண்ட்டிலே வாங்கிவிடுவது, எல்லா கொட்டேஷனையும்விட கால் பர்சென்ட் கொடுத்து அங்கேயுள்ள கவுன்சிலரோ அல்லது மற்றபடி யாருக்குத் தேவையோ அவர்களைக் காண்ட்ராக்ட் எடுக்கச் சொல்வது. இம்மாதிரி ஊழலில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

ஒரு ஸ்பெஷல் அதிகாரி நல்ல திறமையாக இருந்தபோதிலுங்கூட கீழேயுள்ள அதிகாரிகள் இதைச் செய்ய மறுக்கிறார்கள். ஆகவே, இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியனைப்பற்றிச் சொல்ல வேண்டும். வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்ததிலிருந்து பஞ்சாயத்து என்ற சரித்திரம் நமக்குத் தெரியும். முன்பு முற்றிலும் சுதந்திரமாக இயக்கப்பட்டது. அப்படி ஜனங்களுக்காக இயங்கிக் கொண்டிருந்த அந்தப் பஞ்சாயத்தை வேண்டுமென்று நசிக்க வைத்து, பிரிட்டிஷ்காரர்களுக்கு ஆதரவாக வந்தது தெரியும்.

ஆனால் 52-லே கம்யூனிஸ்ட் பார்ட்டி அதிக சீட்டுகளை வாங்கியது, பீஹாரில், உத்தரப்பிரதேசத்தில் சோஷலிஸ்ட் பார்ட்டி வாங்கியது.

எப்படி ஆவடி சோஷலிசம் உருவானது என்று தெரியும். அமெரிக்காவின் உதவியோடு சமுதாய திட்டங்களை ஆரம்பித்து, உணவு உற்பத்தியும், சமுதாய முன்னேற்றமும் அடிப்படைக் காரியங்கள் என்று இருந்தது.

எமு எவல்யூஷன் ரிப்போர்ட்டுகளை எடுத்துக் கொண்டாலும், மத்திய சர்க்கார் ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டாலும் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்று தெரியும்.





மானியம் கேட்கும் நேரத்தில், "அக்ரிகல்சுரல் ஸ்கீம்" என்று விவசாயத்தின் அடிப்படையாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இருந்தது. அமெரிக்காகாரர்கள் பணம் கொடுத்து, அதை வைத்து மத்திய சர்க்கார் நமக்குக் கொடுத்தது. எல்லாம் நின்றுவிட்டது. இப்பொழுது ஒன்றுமில்லை.

இப்பொழுது கிராமசேவக்கிற்கு என்ன வேலை, முக்கிய சேவிக்காவிற்கு என்ன வேலை? ஒரு வேலையும் இல்லை.

பல பஞ்சாயத்துக்களில் இன்றைக்குப் பண வசதி இல்லை. சர்க்கார் ஒதுக்கியிருக்கும் பணத்தை கொஞ்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். எஸ்டிமேட்டை விட 30 பர்சென்ட் ஏறிவிட்டது. ஆகவே, சில சிபார்சுகளை நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒவ்வொரு டெவலெப்மெண்ட் கவுன்சிலிலும் "கொஸ்டின் அவர்" ஒரு மணி நேரம் அமலாக்குவதற்கு ஆர்.டி. & எல்.ஏ. ஒரு மாதத்தில் சொல்ல வேண்டுமென்று இருப்பது நல்ல தீர்மானம்.

அடுத்தபடியாக, கமிஷனே சொல்லியிருக்கிறது, நேரடித் தேர்தல் வேண்டுமென்று. அதன்மீது என்ன பரிசீலனை? 4 வருஷங்களாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். ஏன் தாமதம்?

அதுமட்டுமல்லாமல், பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு 300 ரூபாய் கொடுக்கவேண்டும். சர்க்காருக்கு அதனால் செலவு இல்லை, பஞ்சாயத்து யூனியனுக்குத்தான் செலவு. பிரசிடெண்டுகளுக்கு அந்தந்த யூனியன் கூட்டத்தில் வரும் நேரத்தில் 15 ரூபாய் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

திரு. க. பழனிவேலன் : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட சமுதாய வளர்ச்சி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே ஊர்நல உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு பற்றியும், ஒன்றிய அலுவலர்களுக்கு ஓய்வூதியச் சலுகை பற்றியும், இப்படிப் பல நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தியமைக்காக ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் சார்பில் நான் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. பழனிவேலன்] [1974 ஏப்ரல் 3

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் இப்பொழுது அதன் அடிப்படை மையமாக உள்ளது ஊராட்சி மன்றங்கள், பல ஊராட்சி மன்றங்கள் நான்கைந்து கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதனால் பெரும்பாலான ஊராட்சி மன்றங்களில் சரியான முறையில் சில பகுதிகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, இதற்காக நான்கைந்து சிற்றூர்களை உள்ளடக்கிய ஊராட்சி மன்றங்களை உடனடியாகப் பிரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், மற்ற உறுப்பினர்கள் கூறியதைப்போல ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலை பொதுமக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, குடிநீர் வழங்கல் திட்டத்திலே, குடிநீர் ஆதாரங்களே இல்லாதவை, நோய் பரவக்கூடியவை என்ற இரண்டு தலைப்பிலே உள்ள திட்டங்களை குடிநீர் வாரியம் எடுப்பதாகக் கூறியுள்ளார்கள்.

தற்பொழுதுள்ள குடிநீர் வாரியம் உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொள்ளும் என்று உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதன் கருத்து எல்லாவற்றையும் குடிநீர் வாரியம் எடுக்க வேண்டுமென்பதாகும் என்று கருதுகிறேன். சிறப்பாகச் செய்ய வேண்டுமென்றால் உள்ளாட்சித் துறைக்கு முழுப்பொறுப்பையும் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வாரியம் அமல் நடத்தும் திட்டங்களில் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கு உள்ளாட்சித் துறையிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் ஊராட்சி ஒன்றியமே அதை அமல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்ப் பணிகள் மானியத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சராசரியாக ஒரே தொகையாக அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த மானியக் கோரிக்கையிலே தேவைக்கேற்ப மானியங்கள் அளிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டி மேலும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் இப்பொழுது கிளாசிபிகேஷன் செய்திருக்கிறார்கள். அந்த கிளாசிபிகேஷன் அடிப்படையிலே இந்த மானியங்களைத் தர வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. க. பழனிவேலன்]

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில், 1,500-க்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட ஊர்களில் இணைக்கும் வேலைகளைப் பொறுத்தவரையில் ஒன்றியங்கள் மூலம் செய்வதைப் பொறுத்தவரையில் மக்கள் நன்கொடை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்கள் நன்கொடை என்றால் ஊராட்சிகளின் பங்குத் தொகையா அல்லது பொதுமக்களிடமிருந்தே நேரடியாகத் திரட்ட வேண்டுமா என்பதைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. அதையும் தெளிவுபடுத்தி விடுவார்கள் என்று நம்புகிறேன்.

பொதுமக்களிடமிருந்து நன்கொடைத் தொகையைத் திரட்ட சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு அதிகாரம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிச் சாலைகளைப் பொருத்தவரை கிளாசிபிகேஷன் ஆப் சாயில் என்று போட்டிருக்கிறார்கள். இது திருத்தியமைக்கப்பட வேண்டும். திருத்தியமைக்கும்போது வட்டாரத்திலுள்ள டி.இ.-யும் கலெக்டரும் சேர்ந்து ஒன்றியங்களின் கருத்தை மனத்தில் கொண்டு டி.டி.சி.ல் மெம்பர்கள் சொன்னதையும் வைத்துக்கொண்டு ரிகிளாசிபிகேஷன் செய்யவேண்டும்.

ரூரல் ரோட்ஸ் திட்டம் கிராமப்புற மக்களால் வரவேற்கத் தக்க திட்டமாகும். இதற்காக 5.28 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் குறைந்தது 8 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஒன்றியத்தில் வேப்பூர் ஆடுதுறை நெடுஞ்சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பற்றி ஒரு கருத்து. பூச்சி மருந்துகள், விதைகள் உரிய காலத்தில் ஒன்றியங்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் உழவர்களுக்கு இவை எல்லாம் பயன்படாமல் இருக்கின்றன. காலத்திலே பூச்சி மருந்துகளைக் கொடுக்க ஆவன செய்யவேண்டும். தனியார் துறையிலிருந்து பூச்சி மருந்துகளைப் பெறுவதில் கால தாமதம் ஏற்படுவதால் அரசே பூச்சி மருந்துகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டது போல் ஆசிரியர் மாறுதல் போன்ற பல காரியங்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் சம்மதம் இல்லாமல் நடை

[திரு. க. பழனிவேலன்] [1974 ஏப்ரல் 3

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் இப்பொழுது அதன் அடிப்படை மையமாக உள்ளது ஊராட்சி மன்றங்கள், பல ஊராட்சி மன்றங்கள் நான்கைந்து கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதனால் பெரும்பாலான ஊராட்சி மன்றங்களில் சரியான முறையில் சில பகுதிகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, இதற்காக நான்கைந்து சிற்றூர்களை உள்ளடக்கிய ஊராட்சி மன்றங்களை உடனடியாகப் பிரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், மற்ற உறுப்பினர்கள் கூறியதைப்போல ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலை பொதுமக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை அமல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, குடிநீர் வழங்கல் திட்டத்திலே, குடிநீர் ஆதாரங்களே இல்லாதவை, நோய் பரவக்கூடியவை என்ற இரண்டு தலைப்பிலே உள்ள திட்டங்களை குடிநீர் வாரியம் எடுப்பதாகக் கூறியுள்ளார்கள்.

தற்பொழுதுள்ள குடிநீர் வாரியம் உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொள்ளும் என்று உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதன் கருத்து எல்லாவற்றையும் குடிநீர் வாரியம் எடுக்க வேண்டுமென்பதாகும் என்று கருதுகிறேன். சிறப்பாகச் செய்ய வேண்டுமென்றால் உள்ளாட்சித் துறைக்கு முழுப்பொறுப்பையும் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வாரியம் அமல் நடத்தும் திட்டங்களில் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதற்கு உள்ளாட்சித் துறையிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும் என்பதால் ஊராட்சி ஒன்றியமே அதை அமல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்ப் பணிகள் மானியத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சராசரியாக ஒரே தொகையாக அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்த மானியக் கோரிக்கையிலே தேவைக்கேற்ப மானியங்கள் அளிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டி மேலும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களையெல்லாம் இப்பொழுது கிளாசிஃபிகேஷன் செய்திருக்கிறார்கள். அந்த கிளாசிஃபிகேஷன் அடிப்படையிலே இந்த மானியங்களைத் தர வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. க. பழனிவேலன்]

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில், 1,500-க்கு மேற்பட்ட
மக்களைக் கொண்ட ஊர்களில் இணைக்கும் வேலைகளைப் பொறுத்த
வரையில் ஒன்றியங்கள் மூலம் செய்வதைப் பொறுத்தவரையில் மக்கள்
நன்கொடை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்கள் நன்கொடை
என்றால் ஊராட்சிகளின் பங்குத் தொகையா அல்லது பொதுமக்களிட
மிருந்தே நேரடியாகத் திரட்ட வேண்டுமா என்பதைப் பற்றித் தெளி
வாகக் குறிப்பிடவில்லை. அதையும் தெளிவுபடுத்தி விடுவார்கள்
என்று நம்புகிறேன்.

பொதுமக்களிடமிருந்து நன்கொடைத் தொகையைத் திரட்ட
சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்திற்கு அதிகாரம் அளிப்பதற்கு
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிச் சாலைகளைப் பொருத்தவரை கிளாசிபிகேஷன் ஆப்
சாயில் என்று போட்டிருக்கிறார்கள். இது திருத்தியமைக்கப்பட
வேண்டும். திருத்தியமைக்கும்போது வட்டாரத்திலுள்ள டி.இ.-யும்
கலெக்டரும் சேர்ந்து ஒன்றியங்களின் கருத்தை மனதில் கொண்டு
டி.டி சி.ல் மெம்பர்கள் சொன்னதையும் வைத்துக்கொண்டு ரிகிளாசி
பிகேஷன் செய்யவேண்டும்.

ரூரல் ரோட்ஸ் திட்டம் கிராமப்புற மக்களால் வரவேற்கத் தக்க
திட்டமாகும். இதற்காக 5.28 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டி
ருக்கிறது. இதற்குக் குறைந்தது 8 கோடி ரூபாயாவது ஒதுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஒன்றியத்தில் வேப்பூர் ஆடுதுறை நெடுஞ்சாலையை
அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையைப் பற்றி ஒரு கருத்து. பூச்சி மருந்துகள்,
விதைகள் உரிய காலத்தில் ஒன்றியங்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால்
உழவர்களுக்கு இவை எல்லாம் பயன்படாமல் இருக்கின்றன. காலத்
திலே பூச்சி மருந்துகளைக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.
தனியார் துறையிலிருந்து பூச்சி மருந்துகளைப் பெறுவதில் கால
தாமதம் ஏற்படுவதால் அரசே பூச்சி மருந்துகளை உற்பத்தி செய்ய
ஏற்பாடு செய்யவேண்டும்.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில் முன்னாலே பேசிய பல
வர்கள் குறிப்பிட்டது போல் ஆசிரியர் மாறுதல் போன்ற நடை
காரியங்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் சம்மதம் இல்லாமல் நடை

பெறுகிறது. ஒன்று கல்வியைப் பொறுத்த ஆசிரியர்கள் கல்வி இலாகாவே வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் முழுப் பொறுப்பும் எங்களிடம் இருக்கவேண்டும். 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் தொடக்கக் கல்வியைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்திற்குத்தான் இருக்கிறது; கல்வி இலாகாவில் தற்போது தக்க வாய்ப்பு இல்லை என்று கூறி இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. சத்தியமூர்த்தி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானிய கோரிக்கையின்மீது எங்கள் கட்சி கொடுத் திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகின்றேன்.

உள்ளாட்சித் துறையைப் பற்றியும் அதனுடைய பாரம்பரியத்தைப் பற்றியும் நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே எடுத்துச் சொன்னார்கள். அப்படி இயங்கி வந்த உள்ளாட்சித் துறை சமுதாய வளர்ச்சி என்ற முறையிலே இப்போது எப்படி இயங்கி வருகிறது என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய ஞாபகத் திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

சமுதாய வளர்ச்சி நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டு வருகிறது. எப்படித் தேய்ந்து வருகிறது என்பதற்குச் சான்றை இப்போது கூடப் பார்க்கலாம். பல மானியக் கோரிக்கைகள் இந்த மன்றத்தில் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் அதிகமான நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த முக்கியமான மானியத்திற்கு அதிகமான நேரம் ஒதுக்கப்படாது இருப்பதைப் பார்க்கும்போது இதுவே ஒரு சான்று என்று உணர்ந்து கொள்ள முடியும். சமுதாய வளர்ச்சித் துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அமைச்சரும், இந்த அரசும் இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது தெரிகிறது.

நமது சர்க்காரானது மத்திய சர்க்காரிடம் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் இந்தத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் அவர்களுடைய சார்பாக நான் உள்ளாட்சித் துறையைத் தனியாட்சி யாக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





அது தனி ஆட்சியாக இயங்கினால் மட்டும் போதாது. அது எப்படிச் செயல்படவேண்டுமென்பது பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சீர்திருத்தக் குழுவிலே பல முக்கிய கருத்துக்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அதிலே உள்ளாட்சித் துறையை வருவாய்த் துறையில் அடகு வைத்திருக்கிறார்கள் என்ற முறையிலே கருத்துக் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி அக்குழுவில் மெம்பராக இருந்த திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகாவிலே சேர்க்கப்படக் கூடாது என்பதற்கான காரணங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். நானும் அதையொட்டி சில காரணங்களை சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏற்கனவே ரெவின்யூவில் வேலை செய்து கொண்டிருந்த தாசில் தார்கள் எல்லாம் வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகப் போடப் பட்டார்கள். வட்டார வளர்ச்சி அதிகாரிகள் வட்டார வளர்ச்சிப் பணியிலே எந்த வகையில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதுபற்றி அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

அவர்கள் எங்கெங்கு கமிஷனர்களாகப் போடப்பட்டு பதவியில் இருந்தார்களோ அந்த இடங்களில் எல்லாம் எந்த வளர்ச்சிப் பணியும் நடைபெறவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. கமிஷனர் களுக்கும், சேர்மன்களுக்கும் இடையில் நல்ல உறவு இருக்கவேண்டும். அது இல்லாத காரணத்தால்தான் வளர்ச்சிப் பணிகள் சரிவர நடை பெறவில்லை என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற முறையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் பகுதியில் அன்னவாசல் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அதிலே விளாத்திப்பட்டு பஞ்சா யத்து இயங்கி வருகிறது. அண்மையில் அமைச்சர் அவர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள். அங்கு 17,000 ரூபாய் வீட்டு வரி பாக்கி இருக் கிறது. (மணி அடிக்கப்பட்டது)

இந்த ஒரு கருத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

[திரு. மு. சத்தியமூர்த்தி] [1974 ஏப்ரல் 3

பஞ்சாயத்து இயங்குவதற்கு உதவியாக இருக்கக்கூடிய வீட்டு வரியைப் போடக்கூடாது என்று இப்போது இருக்கக்கூடிய திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இப்படி இருந்தால் பஞ்சாயத்து ராஜ்யம் எப்படி நல்ல முறையில் இயங்க முடியும் என்பதற்கு இது ஒரு சான்று. நமது அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* <u>திரு. பூ. எட்டியப்பன்</u>: மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1974–75-ல் இதில் நல்ல பல புதிய திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. காரணம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல ஆண்டுகளாக ஒன்றியப் பெருந் தலைவராக இருந்ததால், அதன் சாதக பாதகங்களை நேரில் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்திருப்பதால், நல்ல முறையில் இப்படிப் பட்ட திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இவற்றை கிராம மக்கள் பெரிதும் வரவேற்றும் பாராட்டுகிறார்கள். இதை ஒரு பெரிய சமுதாய நலத் திட்டம் என்று கூறினால் அது மிகையாகாது.

1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு எல்லாம் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 1,500 மக்கள் தொகை என்பதில் மதுராக் கிராமங்களும், காலனி களும் அதில் சேர்க்கப்படுவதில்லை. மெயின் கிராமம் மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகவே இந்த 1,500 மக்கள் தொகை என்பதில் மெயின் கிராமத்தோடு இந்த மதுரா கிராமங் களையும் காலனிகளையும் சேர்த்து, மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான வழிவகைகளை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் திட்டத்தில் இந்த ஆண்டு ரூ. 22,667 ஊராட்சி ஒன்றியத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். எரு, செத்தை, தழைகள் இவற்றைக் கொண்டு போகவும், மகசூலைக் கொண்டு வருவதும்



1974 ஏப்ரல் 3] [திரு. பூ. எட்டியப்பன்]

பலயிடங்களில் கடினமாக இருப்பதால் சிறிய வண்டிப் பாட்டைகள் அமைத்துக் கொடுக்க அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலங்கின வளர்ச்சிக்காக ரூ. 1,200 ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன் பெல்லாம் ஒரு வட்டாரத்திற்கு ஒரு லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட் இருப்பார். இப்போது ஆறு பேர்கள் இருக்கக்கூடிய அளவில் நிலைமையிருப்பதால் கிராமங்களில் கால்நடைகளின் நோய்களைத் தடுப்பதில் வேலைகள் பாராட்டத்தக்க முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால் மருந்துகள் ஸ்டாக் செய்து வைப்பதற்கு ஒரு ப்ரிஜேடர் அவசியம் என்று ஒவ்வொரு கிளை மருத்துவ நிலையங்களில் இருந்தும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒவ்வொரு ப்ரிஜிடேர் கிளை மருத்துவ நிலையங்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளுக்காக ரூ. 29,333 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 60 பஞ்சாயத்துக்கள் உள்ளன, இன்னொரு ஊராட்சி ஒன்றியத்தில் 20 பஞ்சாயத்துக்கள்தான் உள்ளன. ஆனால் ஒதுக்கப்படும் தொகை ஒன்றாகத்தான் இருக்கிறது. அதனால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. சரியானபடி செலவு செய்யப்படாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது என்னவெனில், பஞ்சாயத்துக்களின் தொகைக்கு ஏற்ப, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

பள்ளிக்கூடக் கட்டடங்களுக்கு ரூ. 25,488 ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் கூரைக் கட்டடங்களிலும், மரத் தடிகளிலும்தான் நடக்கின்றன. ஆகவே பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களுக்கு முதல் இடம் அளித்து முக்கியத்துவம் கொடுத்து பள்ளிக் கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கிணறுகளுக்காக ஒதுக்கப்படும் தொகையும் போதாது. கிணறு வேலைக்கு காண்ட்ராக்டரும் வருவதில்லை, பஞ்சாயத்து தலைவர்களும் செய்வதில்லை. ஆகவே, கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அதிகப்படியானத் தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, திரு. முத்தையா பேச அழைக்கப்பட்டார்)

திரு. எம். முத்தையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் பேசும்போது ராம ராஜ்யம், பஞ்சாயத்து ராஜ்யம், என்றெல்லாம் பாராட்டிப் பேசினார்கள். நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ராஜ்யம் என்று பெயர் இருக்கிறதே தவிர என் போன்றவர்கள் ராம ராஜ்யம், பஞ்சாயத்து ராஜ்யம், சமுதாய வளர்ச்சித் திட்டம் என்று சொல்வதை எல்லாம் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

காரணம், சமுதாய வளர்ச்சித் திட்டம் என்றால் சில விதிகளை திருத்தியமைக்கவேண்டும். இது சமுதாய வளர்ச்சித் திட்டமா என்றால் இல்லை: இது சமுதாதய வீழ்ச்சித் திட்டம் என்றே நான் கருதுகிறேன். சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்தல் நடத்துகிற முறையைமாற்றி அமைக்க வேண்டும். முன்னேற்றம் அடைந்துள்ள சமுதாயத்தினர்தான் ஒன்றியப் பெருந்தலைவர்களாக தேர்தலில் வர முடிகிறதே தவிர என்னைப்போன்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றியப் பெருந்தலைவர்களாக வருவதற்கு முடியவில்லை.

ஆகவே, ஒன்றியப் பெருந்தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இப்போதுள்ள தேர்தல் முறையை திருத்தியமைப்பதோடுகூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு அதில் 18 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் வந்து ஏழெட்டு வருடங்களாகியும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்கு சலுகை தரப்படவில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இந்த 18 சதவிகித ஒதுக்கீட்டை செய்து தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இதை உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.

ஏனென்றால் பெருந்தலைவர்களால்தான் சில முக்கியமான காரியங்கள் நடக்கின்றன. என்னைப்போன்ற உறுப்பினர்களால் கூட சில காரியங்களைச் செய்யமுடியவில்லை. அமைச்சர்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் இதை இதை செய்யவேண்டும் என்று கேட்க வேண்டிய



நிலைதான் இருக்கிறதே தவிர, ஒன்றியப் பெருந்தலைவர்களாலே பல காரியங்களைச் செய்ய முடிகிறது. அவர்கள்தான் அப்பாயின்ட்டிங் அத்தாரிட்டிகளாக இருக்கிறார்கள்.

ஆகவே தாழ்ந்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து ஒன்றியத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சில சலுகைகள் கிடைக்கும். ஆகவே இந்த 18 சதவிகிதம் என்பதை அமல்படுத்தவேண்டும்.

இப்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு ஆசிரியர்கள் பதவி இன்னும் இது போன்ற சில பதவிகளில் 18 சத விகித அளவிற்கு ஊராட்சி ஒன்றியங்களில் வேலைகள் கிடைப்பதில்லை. ஆகவே, இந்த 18 சத விகிதம் அளவிற்கு வேலைகள் எங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும்.

பின்னர், என் ஒட்டப்பிடாரம் தொகுதி சுற்றுவட்டாரம் கரிசல் பாங்கான பகுதியாகும். அங்கு மழை பெய்தால்தான் குடிதண்ணீர் கிடைக்கும்.

ஆகவே, எங்கள் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு குடி நீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம், பசுவந்தனை வழியாக கோவில்பட்டிக்கு செல்லும் சாலை முப்பது ஆண்டுகளாக மராமத்து செய்யப்படவில்லை. அங்கு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் மழை இல்லாத காலத்தில்தான் ஓடுகிறது. மற்ற மழை காலங்களில் ஓடுவதில்லை. ஆகவே அதை நெடுஞ்சாலைத் துறையின்கீழ் எடுத்துக்கொண்டு மராமத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புளியம்பட்டிக்கும்–கடலூருக்கும் இடையே உள்ள சாலை மராமத்து செய்யப்படாமல் பல ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. அதையும் நெடுஞ்சாலைத் துறையின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(மணியடிக்கப்பட்டு, திரு. ரா. ரா. முனுசாமி பேச அழைக்கப் பட்டார்)

திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியத்தின் மீது நான் ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எங்களுக்கு தரப்பட்டிருக்கும் நேரம் குறைவாக இருந்த போதிலும் ஒன்றியங்களில் இருக்கிற நிலைமைகளை எடுத்துவிளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்றியங்களுக்காக ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகிற நிதி நிலைமைகள் போதுமா என்றால் போதாது. ஒன்றியங்களில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் தொடர்சாலைகள் தேவை. அந்தச் சாலைகள் நல்லமுறையில் செப்பனிடப்பட முடிகிறதா என்றால் முடியவில்லை. எங்கள் மேல்மலயனூர் ஒன்றியத்தில் இரண்டு மூன்று இடங்களில் பெரிய நீர் ஓடைகள் இருக்கின்றன. அந்த இடத்திற்கு அங்கேயுள்ள பொறியாளர்களைக் கொண்டு பாலம் அமைக்கவேண்டுமானால் 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்படுகிறது.

(நண்பகல் 12.00)

கிட்டத்தட்ட சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அந்த புதுப்பாளையம் கிராமத்திலிருந்து அக்கரையிலிருந்து இக்கரைக்கு வரமுடியவில்லை. அங்கே நந்தன் கால்வாய் குறுக்கே வருகிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை பொதுப் பணித் துறை மூலமாகத்தான் போக்க முடியும். அவர்களைக் கேட்கிறபோது, இந்தச் சாலைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப் படுகின்றன, அவர்கள் தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அதற்கு அடுத்து, கங்கவரம்–பழவந்தாங்கல் சாலையில் ஒரு மேம் பாலம் கட்டவேண்டும். அதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. அவ்வளவு தொகையை ஒன்றியம் ஒதுக்கித் தரமுடியாது. எங்கள் தொகுதிக்கு இந்த இலாகா பொறுப் பேற்று இருக்கும் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது நிலைமைகளை எடுத்து விளக்கினோம். அவர்கள் அங்குள்ள நிலைமைகளை நன்கு புரிந்து இருக்கிறார்கள். குறிப்பாக மேல்மலையனூர், பரனூரில் ஒரு ஓடை இருக்கிறது. அதற்கு பாலம் கட்ட ரூ. 5 இலட்சம் ஆகும் என்று எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். ஊராட்சி தான் செய்ய வேண்டுமென்று பொதுப் பணித் துறை செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை உடனடியாக போக்கித்தரும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, 1967-ஆம் ஆண்டே, மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயே நான இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த நிலை தமிழகத்திலே எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இருக்கிறது. எரிந்து





கொண்டிருக்கிற மின்சார விளக்குகளுக்கு மாத்திரம் கட்டணம் வசூல் செய்யுங்கள். பல விளக்குகள் எரிவது இல்லை. எரிகிற விளக்கு களுக்கு மீட்டர் போடவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக் கிறேன்.

இப்போது வைத்து இருக்கிற விவர அறிக்கையில் அரசு பரிசீலிப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து அதைப் பரிசீலித்துக் கொண்டிருப்பதைவிட, உடனடியாக அரசாங்கம், அமைச்சர் அவர்கள், மீட்டர் வைக்கவேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களை மாற்றுவதற்கு அதிகாரம் ஆணையர் வசம் கொடுத்து இருக்கிறார்கள். அது வரவேற் கத்தக்கது. ஆனால் ஆணையர் மாறுதலைப் போட்டாலும், அதற்கு டி.இ.ஓ. அங்கீகாரம் பெறவேண்டுமென்று இருக்கிறது. டி.இ.ஓ.க்கு அங்குள்ள ஆசிரியர்களின் நிலை தெரியாது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க ஆணையர் அவர்களுக்கே அந்த அதிகாரத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை அங்கே எழுத்தர்களாகப் பணிபுரிந்து கொண்டிருப்பவர்களை ஒன்றிய நிர்வா கத்திலும் சேர்க்காமல், அரசு ஊழியர்கள் என்ற வகையிலும் இல்லா மல் வைத்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் அரசாங்க அதிகாரிகள் என்று உடனடியாக உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, ஆசிரியர்களை ஒன்றியங்களில் போடும் விஷயம். இது ஆசிரியர்கள் மாறுதல் விஷயத்தை விடக் கடுமையான விஷயம். ஒரு கோட்டா வைத்து இருக்கிறார்கள் போலிருக்கிறது. அந்த கோட்டா படி ஊராட்சிகளுக்கு இத்தனை ஆசிரியர்கள், தனியாருக்கு இத்தனை ஆசிரியர்கள் என்று விகிதாசாரம் வைத்து இருக்கிறார்கள். அதை டி.இ.ஓ.விடம் விடாமல் அரசாங்கமே அந்தக் கோட்டா பிரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் டி.இ.ஓ.-விற்கு விட்டால் அவர்கள் தனியாருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஒன்றியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. ரா. முனுசாமி] [1974 ஏப்ரல் 3

அமைச்சர் அவர்கள் இரண்டு 5 வருடம் ஊராட்சிப் பெருந் தலைவராக இருந்து இருக்கிறார்கள். நான் எடுத்துச்சொல்லி அவர்கள் பிரச்னைகளை புரிந்து கொள்ளும் அளவில் இல்லை. இதிலே ஏதாவது சட்டச் சிக்கல் இருந்தாலும்கூட, எந்த அளவுக்கு மக்களுக்கு வேண்டிய அளவுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவுக்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

<u>திரு. கே. எ. வகாப்:</u> தலைவரவர்களே, நாட்டிலே நல்லாட்சி ஏற்படவேண்டுமானால் அதற்கு உள்ளாட்சித் துறை நல்லமுறையில் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் நல்ல பல கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

இங்கே நான் இந்த உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது பேசுகின்ற நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர் களாலும், இந்த அரசாலும் அளிக்கப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான ஒரு வாக்குறுதி இந்த நேரத்திலே நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகிறேன்.

உள்ளாட்சித் துறை ரெவின்யூ துறையோடு சம்பந்தப்பட்டு இருக் கிறது. இதைப் பிரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். இதை நல்ல முறையில் அமல் செய்ய வேண்டும்.

இதற்கு முன்பு வருவாய்த் துறையின்கீழ் இருந்த வேளாண்மைத் துறை, நீதித் துறை, கருவூலத் துறை நல்ல சிறப்பான முறையில் இன்று தனியே பிரிக்கப்பட்டு இயங்கிவருகின்றன என்பதைப் பார்க்கிற போது உள்ளாட்சித் துறையும் அத்தகைய சீராக, சிறப்பாக பணி யாற்றமுடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதன் சார்பாக நான் ஒரு வெட்டுப் பிரேரேரணை கொடுத்து இருக்கிறேன். அதை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு, இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு பேரூராட்சியில் தலைமைதாங்குகிறேன். பேரூராட்சிகள் அனாதைக் குழந்தைகள் போல் இருக்கின்றன. முனிசிபாலிடி என்றால் தனி கவனம், ஊராட்சி ஒன்றியம் என்றால் தனி கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் பேரூராட்சி என்றால் மானியமோ, சலுகையோ எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதை



1974 ஏப்ரல் 3] [திரு. கே. எ. வகாப்]

இந்த நேரத்தில் மிக வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். அங்கே இருக்கும் தலைவருக்கு மீட்டிங் அஜெண்டாவில் கையெழுத்துப் போடுவது தவிர வேறு எந்த அதிகாரமும் கிடையாது. இப்போது மாநில சுயாட்சி கேட்கிறோம். அதேபோல் ஊராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் எல்லாம் உள்ளாட்சி, சுயாட்சி என்று கேட்கிற நிலைமை உண்டாக்காமல் எங்களுக்கும் சில அதிகாரங்களைக் கொடுங்கள்.

குறிப்பாக பேரூராட்சி என்று சொல்கிற நேரத்தில், செக்கில் கையெழுத்துப் போடும் அதிகாரம், எக்சிகியூடிவ் ஆபீசர் கையில் தான் இருக்கிறது. இருக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனால் பல தீமைகள் வருகின்றன. வந்தவாசியில் இருந்த நிர்வாக அதிகாரி ஏறத்தாழ 20,000 ரூபாய்க்கு அவர்களே கையெழுத்துப் போட்டு எடுத்துக்கொண்டு, அதற்கு வேண்டிய தண்டனையை அவர் இப்போது அனுபவித்து வருகிறார்.

கூட்டுறவு சொசைடிகளில் செக்ரட்ரியும், கையெழுத்துப்போட வேண்டும், தலைவரும் கையெழுத்துப் போடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அந்த முறையை இந்த பேரூராட்சிகளிலும் கொண்டு வரலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

பேரூராட்சிக்கு வீட்டு வரியிலிருந்து ஈட்டு மானியம் கொடுப்ப தற்கு அரசு முன் வரவேண்டும். பேரூராட்சிகள் எல்லா நிர்வாகத் திலும் தன் காலிலேயே நிற்கவேண்டியிருப்பதால், மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. அதைச் சிறந்த முறையில் கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார விளக்கு பற்றி இங்கே பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். இந்த மின்சார விளக்குகளுக்கு மீட்டர் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் நல இளநிலை உதவியாளர்கள் பதவி உதவியேதும் இன்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க அரசு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1974 ஏப்ரல் 3

பேரூராட்சி சாலைகள், பஸ்போகும் சாலைகளாக இருந்தால் அவற்றை எடுத்துக்கொள்வதில் நெடுஞ்சாலைத் துறையினர் கால தாமதம் செய்கின்றனர். இந்தக் காலதாமதத்தைத் தடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஒன்றியத்தில் இருக்கும் ஊராட்சித் தலைவர்கள் கான்டிராக்டர்களாக இருந்து வேலைகளைச் செய்கிறார்கள். அந்த முறை கூடாது. அது பல விதமான ஊழல்களுக்கு இடம் அளிக்கிறது.

ஊராட்சித் தலைவரே செய்கிற காரணத்தால் அவர் பி.டி.ஓ. விடம் போய் கையேந்தி நிற்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இதை மாற்றி அமைக்கவேண்டும்.

ஊராட்சிகளில் வரி வசூல் செய்ய தனியாக பில் கலெக்டரைப் போட வேண்டும். இதனால் 5,000, 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இங்கே பஞ்சாயத்து யூனியன் உப தலைவரைப் பற்றிச் சொன்னார் கள். உப தலைவர், உபத்திரவத் தலைவர் என்று சொன்னார்கள். நான் கூட ஒரு உபதலைவனாக ஒன்றியத்தில் இருக்கின்றேன். எங்களுக்கு அங்கே எந்த விதமான அதிகாரமும் கிடையாது. பெரும் தலைவருக்குத்தான் அங்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உப தலைவர்களுக்கும் ஏதாவது அதிகாரம் கொடுத்தால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

முனிசிபாலிட்டிகளில் வார்டு பிரிப்பதில் தவறுகள் இருக்கின்றன. மைனாரிட்டி கம்யூனிட்டி வசிக்கும் இடங்களில் சில அதிகாரிகள் தாறுமாறாக இதைச் செய்து இருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் குறிப்பாக ராணிப்பேட்டை, வாலாஜா பாத் முனிசிபாலிட்டி இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது வாலாஜாபாத் முனிசிபாலிடி 100 ஆண்டு விழாகூட கொண்டாடினோம். ஒரு காலத்தில் 60,000 மக்கள் வாழ்ந்தார்கள். இன்று 10,000 மக்கள் கூட வாழவில்லை. அதனால் வருமானம் போத வில்லை. இது மாதிரி நொடிந்து போன முனிசிபாலிடிகளுக்கு அரசு உதவவேண்டும்.



1974 ஏப்ரல் 3] [திரு. கே. எ. வகாப்]

ராணிப்பேட்டையில் ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்தவேண்டும். அங்கே ஒரு டவுன்ஷிப் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும். ஏனென்றால், ராணிப்பேட்டையில் அமைச்சர் அவர்களுக்கு நிறைய அக்கறை உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழில் பேட்டை அருகில் ஒரு டவுன்ஷிப் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அந்த முயற்சி வெற்றிகரமாக முடியும். அது மக்களுக்கு நன்மை செய்கின்ற ஒரு முயற்சியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

நான் முதலிலே சொன்னபடி இதை ரெவின்யூவிலிருந்து பிரித்து வட்ட அளவிலோ அல்லது கோட்ட அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ தனியான அதிகாரத்தைக் கொடுத்துவிடவேண்டும். நாம் எதற்கெடுத்தாலும் போர்டு அமைத்து சீர்திருத்தம் செய்து கொண்டிருக்கிறோம். இது செம்மையாக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன். இதைப்பற்றி யோசனை செய்யவேண்டிய அவசியமில்லை. அப்படி ஒரு வேளை ஏற்பட்ட பிறகு தவறு இருந்தால், அதைப் பின்னால் திருத்திக் கொள்ளலாம் ...... (மணி அடிக்கப்பட்டது).

* திரு. ஆ. கருப்பையா: தலைவரவர்களே, இந்த மானியத்தை மனமார வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். இன்றைக்கு நமது கட்சி ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ஊராட்சி மன்றங்கள் வளர்பிறை போல் வளர்ந்து வருகிறது என்பதை நாடு பூராவும் நன்றாக அறியும். எவ்வளவோ வளர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் இதை வளர்த்துக்கொள்வதற்கு சில காரியங்களை நாம் செய்யவேண்டியிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியம் 20 ஊராட்சி மன்றங்களைக் கொண்டதும் இருக்கிறது, 58 மன்றங்களைக் கொண்டதும் இருக்கிறது. ஆனால் இரண்டு ஒன்றியங்களுக்கும் ஒரு ஓவர்சியர், ஒரு எஞ்சினியர் தான். இதனால் சில இடங்களில் வேலைப்பளு அதிகமாகி வேலைகள் துரித மாக நடைபெறாமல் தேங்கிவிடுகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே தேவைக்கேற்ப என்ஜினியர்கள், ஓவர்சியர்களை அதிகப்படுத்த வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நாம் என்ன தான் செய்தாலும் கூட, தமிழக அரசு இந்த வளர்ச்சி மன்றங்களின் மூலமாக எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்தாலும், நமக்கு இருக்கிற கெட்ட பெயர் எல்லாம் எதனால் ஏற்படுகிறது

என்றால், ஆசிரியர்களை நியமிக்கின்ற பொறுப்பு ஊராட்சி மன்றத் தலைவர்கள் கையிலே இருக்கிற காரணத்தினால் தான். காரியங்கள் எவ்வளவோ ஒழுங்காக நடந்தாலும் கூட, அதனால் நமக்கு கெட்ட பெயர் தான் வந்து சேருகிறது என்பதை மறுக்க முடியாது.

ஏனென்றால், அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள், 18,000 ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது 1970-ம் ஆண்டில் பாஸ் பண்ணியவர் வேலைக்குப் போகிறார். 1968-ம் ஆண்டில் பாஸ் செய்தவருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, இதில் எங்கோ தவறு நடக்கிறது என்று மக்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆசிரியர்கள் நியமனத்தை பொறுத்தவரையில் ஒரு சர்வீஸ் கமிஷன் போன்ற அமைப்பை ஏற்படுத்தி, ஆசிரியர்கள் நியமிக்கின்ற பொறுப்பை அவர்கள் கையில் ஒப்படைக்கவேண்டும் என்ற என்னுடைய சிறிய யோசனையை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு குளங்களையெல்லாம் மராமத்து செய்துகொண்டிருக்கிறோம். நல்ல முறையில் சீரும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் குளங்கள் மராமத்து செய்யப்பட்டாலும், அந்தக் குளங்களிலிருந்து வருகிற மீன் பாசியின் ரூபாயை நாம் எடுத்துக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. குளங்களின் சொந்தக்காரர்களுக்கு அந்தப் பணம் போய்க்கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து ஊராட்சி மன்றங்களுக்கு இந்த வருமானம் போய்ச் சேரும்படிச் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களில் எங்கு பார்த்தாலும் 18 சதவிகிதம் அரிசனங்களுக்கு இடம் ஒதுக்குவது என்பது ஒதுக்கப்படவில்லை என்று நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு ஒன்றியத்தில் கூட தலைவராக வர முடியாத சூழ்நிலை தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. 20 சதவிகிதம், 22 சதவிகிதம் அரிசனங்கள் இருந்தால், அதை அரிசனத் தொகுதி என்று தனித் தொகுதியாக அமைத்துக் கொடுத்தால் இந்தக் குறையை நிவர்த்தி செய்யமுடியும் என்று என்னுடைய சிறிய கருத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.



பஞ்சாயத்து ஏரியாக்களில் தெரு விளக்குகள் 150 இருந்தால், 70 விளக்குகள் தான் எரிகின்றன. ஆனால் 150 தெரு விளக்குகளுக்கும் பஞ்சாயத்தினுடைய பணத்தை நாங்கள் கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் மீட்டர் ஸிஸ்டத்தை ஏற்படுத்திவிட்டால் எவ்வளவு விளக்குகள் எறிந்திருக்கின்றனவோ அந்த அளவுக்கு நாங்கள் பணம் கட்டுவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆகவே, இதை இவ்வாறு மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து வரி வசூல் கிராம முன்சீப்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ஆனால் அவர்கள் லாண்ட் ரெவின்யூ வசூல் செய்கின்ற அளவுக்கு பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்வதில்லை. ஒரு ஆண்டுக்கு பஞ்சாயத்துக்கு வரவேண்டிய வருமானம் ரூ. 10,000 வரவில்லை என்றால் பஞ்சாயத்திற்கு ரூ. 20,000 நஷ்டம் வரும் என்பது யாரும் அறியாதது ஒன்றுமில்லை. ஆகவே, பஞ்சாயத்து வரி வசூலுக்கு என்று தனியாக ஒரு பில் கலெக்டர் போட்டுவிட்டால் அதில் எந்தவிதமான நஷ்டமும் கிடையாது. மேலும் 10 பேர்களுக்கு வேலை கொடுத்தது மாதிரியும் இருக்கும், பஞ்சாயத்தும் நல்ல முறையில் நடந்ததாக இருக்கும். இதைக் கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ரோடு வசதிகளைப் பற்றி ...... (மணி அடிக்கப்பட்டது)

THIRU B. VENKATASWAMY: Mr. Speaker, Sir, in support of the Cut Motion that I have given notice of on the Demand relating to Community Development Projects. I would like to offer a few remarks.

I am glad to note that in the note relating to Community Development and Panchayat Development it has been stated that the Government have decided to increase the number of posts of Gramasevaks, Grade I, in a Block from 3 to 5 in order to improve promotional opportunities, and also some concessions have been granted to Pachayat Union staff.

Regarding setting up of District Development Corporation, I am happy to note that a District Development Corporation is to be set up in Dharmapuri district in order to give more facilities as in other districts.

[Thiru B. Venkataswamy] [1974 ஏப்ரல் 3

*Coming to the Community Development Programme, I would like to say that it is really a Department which attends to the needs of the rural areas. So, it should be given more amount. I am sure the Hon. Minister for Local Administration who was also a Chairman of the Panchayat Union will understand the difficulties of the Panchayat Union.*

*This Community Development is not only giving economic prosperity to the villagers but also implementing various social services. They are directly connected with so many social works like Education, Health, Roads, etc.*

*I have already given a Cut Motion to discuss the need to separate the Community Development Department from the Revenue Department in the division level. It should be essentially done because the people working in the Revenue Department are different from the people working in the Community Development Department. They are quite different.*

*In the Community Development Programme, it is the duty of the Gramasevak to contact each and every individual in that place. The Panchayats should be given more facilities.*

*The Hon. Minister was telling about 'Ramarajya'. Without improving the Panchayats and affording necessary facilities, it may not be possible to achieve Ramarajya in villages. We cannot achieve this by mere rules and regulations. At the beginning, steps should be taken to shape the society.*

*To have straight elections to Panchayats, I can say it is a welcome suggestion. I understand the Government is hesitating to accept that recommendation. I request the Hon. Minister to consider this suggestion because it will avoid all mal-practices and bad practices.*

*Being a Chairman of the Panchayat, I know the difficulties. If it is a straight election, the Chairman can do justice to all the people. As it is, the Chairman is not able to do full justice to the people. The Chairman is not able to do much for the people.*

*If there is a powerful man in the Panchayat, he can bring a No-Confidence Motion against the Chairman. But by straight election, this cannot be done. The people have to decide. It will also enable the Chairman to do justice to the people.*



1974 ஏப்ரல் 3] [Thiru B. Venkataswamy]

With regard to water-supply, link roads and schools, I would like to say that the amount allotted is not sufficient. What I feel is that more amount should be provided for the provision of more schools in villages. According to the statistics furnished, 7,377 elementary schools and 1,112 Higher elementary schools have to be provided with pucca buildings. Actually in Tamil Nadu, the Government were able to provide only for about 800 schools during the year. I do not know how they are going to construct buildings for the remaining schools.

I hope it will take another 25 years to complete the construction of buildings.

Similarly, under primary education also, there are so many schools. In Schools and Colleges, there are so many disorders and indiscipline. Because, there is something wrong in the basic education. Elementary education was once very good and the atmosphere was also very good. But it has now changed.

I hope the hon. Minister will give more importance for the construction of buildings for elementary schools.

For Minor irrigation and desilting of tanks, a very meagre amount has been allotted. In our area, especially in Dharmapuri district, the lands are of slopy nature. The tanks get accumulated with silt and people are finding it very difficult. The desilting of tanks should be taken immediately. I request the Hon. Minister to extend the SMIP Scheme to Vemanamangalam and Hosur blocks.

I understand that there is a proposal to discontinue the crash programme. It is a disheartening news to people of Tamil Nadu. This scheme was drawn up by the Central Government under 'Garibi Hatao' 'Garibi' means poor and the poor worker is a manual labourer.

If the manual labourers are deprived of this opportunity, how can they eradicate poverty? I request the Hon. Minister to reconsider this.

[Thiru B. Venkataswamy] [1974 ஏப்ரல் 3

Under the Crash Programme during 1972–73 an a amount of Rs. 600.19 lakhs has been spent and a total of 77.59 lakhs of man-days of employment has been generated, and a length of about 4,000 K.Ms. of roads have been formed.

So it is really a very remarkable achievement. But such an achievement has not been appreciated by the Government of India and they have ignored it. On the other hand, I am very happy that the Government of Tamil Nadu have provided for a token grant of Rs. 25 lakhs for it. But this is a meagre amount and they should increase it.

As regards Roads, I have given notice of a cut motion to discuss the need to sanction the road maintenance grant on the mileage basis to the Panchayat Unions in the State. This is very urgent and I request the Hon. Minister for Local Administration to sanction it.

There is a Panchayat Union called Thalli Panchayat Union which is having 52 panchayats under its jurisdiction. Its area is more than 800 sq. miles. There is a proposal to bifurcate it and constitute a separate Anjati Hill Block. I request the Hon. Minister to see that Anjati Hill Block is created as a separate Block.

As regards winter allowance, it is given to the Government servants and not to the teachers of the Panchayat Unions. The teachers of the Panchayat Unions have been neglected and I request the Hon. Minister to see that the winter allowance is also given to the teachers of the Panchayat Unions, as is given to the Government servants.

Coming to another matter......

(Mr. Speaker sounded the gong and called the next member.)

திரு. சீ. க. வடிவேலு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் ஒருசிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. சீ. க. வடிவேலு]

பொதுவாக தமிழ்நாட்டிலே ஊராட்சித் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை சென்ற தேர்தலிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பது இந்த அரசு. அதற்காக இந்த மன்றத்தின் மூலம் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு வருகின்ற தேர்தல்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் மக்களே தேர்ந்தெடுக்கின்ற முறையைக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஊராட்சித் தலைவர்களால் ஒன்றியத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் போது, அங்கே கட்சிக் கண்ணோட்டம் வந்துவிடுகிறது. எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்று வந்துவிடும். அதனால் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியாது. ஆகவே, ஒன்றியத் தலைவர்களையும் மக்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஒன்றியத் தலைவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நீக்கி விடுவதற்கான அதிகாரம் இப்போது இருக்கிறது. ஒன்றிய விதிமுறைகள் அப்படி இருக்கின்றன. அது கூடாது. அதை மாற்றியமைக்க வேண்டும். காரணம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரை ஒரு அதிகாரி நீக்கி விடுவது என்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. எனவே, இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஊராட்சி மன்ற வளர்ச்சித் திட்டத்தில் ஒன்றியப் பள்ளிகள் இருக்கின்றன. அப்படி இருக்கின்ற பள்ளிகளில் தரமான முறையிலே கல்வி கற்றுக்கொடுக்க வகை இருக்க வேண்டும்.

ஒன்றியப் பள்ளிகளில் குழந்தைகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று மாவட்ட கல்வி அதிகாரியிடம் சொன்னால் அவர்கள் முடியாது, வேண்டுமானால் அரசாங்கத்திடம் கேளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் தனியார் பள்ளிகளுக்கு அவர்கள் கேட்கின்ற அளவுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்கள். விகிதாச்சார அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்றைக்கு ஏறக்குறைய 18 ஆயிரம் பேர் ஆசிரியர் பயிற்சி பெற்றுவிட்டு, வேலை இல்லாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. இப்போது 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று வைத்திருக்கிறோம். இதை 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று வைத்தால் கல்வியின் தரம் உயருவதோடு பல நூற்றுக் கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படும்.

வட மாநிலங்களிலே ஊராட்சி ஒன்றியங்களுடன் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை பத்திரிகைகள் மூலமாக அறிகிறோம். பொதுவாக, நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு, மக்களுக்கு நன்மை செய்வதற்கென்றே இருக்கிறோம். அந்த வகையிலே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுகிறது.

கூட்டுறவுத் துறையில் சங்கங்கள் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் நடைபெறுவது ஜன நாயகத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றியங்களுடன் இணைக்கப்படுகின்ற நல்ல திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற பொறி யாளர்கள் நெடுஞ்சாலைத்துறை எஞ்சினியரின் கன்ட்ரோலில் இருக் கிறார்கள். ஏறக்குறைய 3,000 ரூபாய் வரையிலுள்ள பணிகளைத்தான் ஒன்றிய பொறியாளர்கள் செய்ய முடியும். அது வளர்ச்சித் திட்டங் களுக்கு சில இடையூறுகளை ஏற்படுத்துகிறது. ஆகவே, 30,000 ரூபாய் வரையிலுள்ள பணிகளை ஒன்றியப் பொறியாளர்களே செய்யலாம் என்று மாற்றியமைக்க வேண்டும்.

நான் ஒன்றியத் தலைவராக இருப்பதால் ஒன்றியங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒன்றியத் தலைவருக்கு 100 ரூபாய் கொடுக்கிறார்கள். ஒரு கவுன்சிலருக்கு 2 ரூபாய் கொடுக் கிறார்கள். இது மிகவும் கேவலமான ஒரு நிலையாகும். அமைச்சர வர்களும் ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறார்கள். ஆகவே, அவர் களுக்கும் இதுபற்றி நன்றாகத் தெரியும். ஆகவே, இந்தப் படியை மாற்றியமைத்து, கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீமின்கீழ் ரோடு போடும் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி என்னுடைய தொகுதியில் ஒரு ரோடு கூட இதுவரையில் போடவில்லை. மாங் குளம் ஊராட்சியில் ஒரு ரோடு போடும் திட்டம் அனுப்பப்பட்டு 4 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலை நடைபெறவில்லை. அதேபோல் சீனிவாச ஊரில் 5 லட்சம் ரூபாய்க்கான மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தானிப்பாடிபேட்டை மிகவும் பின்தங்கிய பகுதி. அப்பேர்ப்பட்ட ஊராட்சிகளுக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டும். அந்த ஊராட்சிகளுக்கு போதுமான நிதி வசதி கிடையாது.

அங்கே ஆசிரியர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்க முடியாத அளவுக்கு நிதிவசதி மோசமாக இருக்கிறது.

அப்படிப்பட்ட ஊராட்சிகளுக்கு அதிக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

61659

* திரு. பொ. பத்மநாபன்: தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை நகராட்சியில் குழந்தைகள் வளர்ப்புப் பள்ளி ஒன்று அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளை தனியார் நடத்துகின்ற நர்சரி பள்ளிகளில் சேர்த்து படிக்கவைக்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அங்கே 15 ரூபாய், 20 ரூபாய் மாதக் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கிறது. ஆகவே, ஏழை எளிய குழந்தைகளை சேர்ப்பதற்கு வசதியாக நெல்லை நகராட்சியில் குழந்தைகள் வளர்ப்பு பள்ளி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நெல்லை நகராட்சியில் கண்டியப்பேரி பெண்கள்– குழந்தைகள் மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. தினமும் 600, 700 நோயாளிகள் வருகிறார்கள். அவர்களுக்கு மருந்து சப்ளை செய்வ தற்கு நகராட்சியில் பண வசதி இல்லை. அதனால் போதுமான மருந்து வழங்க முடியவில்லை.

[திரு. பொ. பத்மநாபன்] [1974 ஏப்ரல் 3

தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனை தரத்திற்கு, அந்த மருத்துவ மனையை அரசாங்கமே எடுத்து, உயர்த்தி போதுமான அளவுக்கு மருந்து வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் பெரிய மருத்துவ மனை ஒன்று இருக்கிறது. அங்கிருந்து சுமார் 7 மைல் தூரத்தில் அது இருக்கிறது. ஆகவே, நெல்லை நகரிலேயே அந்த மருத்துவ மனையை அரசு ஏற்று, தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனை அளவுக்கு விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக நெல்லை நகர மக்களுக்கு ஒரு பாலம் கட்டப் படாமல் போக்குவரத்துக்கு சிரமமாக இருந்தது. அந்த சிரமத்தைப் போக்குகின்ற வகையில் திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலத்தை அமைத்துத் தந்ததற்காக நெல்லை மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிகளுக்கு சாலை பராமரிப்பு மானியமாக 1.13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தச் சாலை பராமரிப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை நகராட்சிக் கட்டடத்திற்குப் பின்னால் உள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்து, அரசு அலுவலகக் கட்டடங்களைக் கட்டவேண்டு மென்று ஏற்கெனவே நகராட்சியில் தீர்மானம் போட்டு, அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் ப்ரப்போசல் ரொம்ப நாட்களாக இருந்துவருகிறது. உடனடியாக ஆர்ஜிதம் செய்து பல கட்டடங்களைக் கட்ட வேண்டும். பல கட்டடங்களைக் கட்டி, பல்வேறு இடங்களிலே இருக்கின்ற அரசு அலுவலகங்களை தாலூகா ஆபீஸ், கல்வி அதிகாரியின் அலுவலகம் போன்றவைகளை அங்கே கொண்டுவந்தால், பணிபுரிகின்ற அலுவலர் களுக்கும் பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப் பாளையம்பேட்டை போன்ற இடங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு மாநகராட்சி அமைப்பது சிறப்பாக இருக்கும். வருங்காலத்தில் இது மிக முக்கியமான ஒரு திட்டமாக இருக்கிறது. அதற்கு இப்போதே



1974 ஏப்ரல் 3] [திரு. பொ. பத்மநாபன்]

முயற்சி செய்து, ஒரு நீண்டகால திட்டமாக அதை ஆராய்ந்து, பரிசிலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

நெல்லையைச் சுற்றிப் பல குளங்கள் இருக்கின்றன. அத்தனை குளங்களும் பராமரிப்பு இல்லாமல், பாழாகியிருக்கின்றன. பலர் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி எல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லியும் கூட அவை பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடியாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுத்து, அந்தக் குளங்களைப் பராமரித்து, நீர் தேங்கச் செய்தால் நகரத்திற்கே நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் துறைமுகம் இருப்பதால், ஸ்பிக் தொழிற்சாலை வந்திருப்பதனால் அங்கே ஒரு விமான தளம் அமைப்பது நலமாக இருக்கும். தெய்வச்செயல்புரம் அல்லது வாகைக்குளத்தில் ஒரு விமான தளத்தை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இ. எஸ். தியாகராாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலத்துறை மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக—ஊராட்சித் தலைவராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் பணியாற்றி, நல்ல அனுபவத்தினைப் பெற்றிருக்கிற காரணத்தினால், இந்தத் துறையை நல்ல திறம்பட நடத்திச் செல்வதற் கான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இந்த சமுதாய நலத்துறை மானியத்தை அவர் கொண்டு வந்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

பல்லாயிரக்கணக்கான கிராமங்களின் வளர்ச்சியையும், முன் னேற்றத்தையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குவது சமுதாய வளர்ச்சித் திட்டங்கள். இன்றையதினம் செங்கை மாவட்டத்தில் பல கிராமங்களில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மழைப் பற்றாக்குறை காரணமாக—அந்த மாவட்டத்தில் பல கிராமங் களில் கிணற்றில் தண்ணீர் வற்றியிருக்கிறது. அந்தக் கிணறுகளை ஆழப்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராாசன்] [1974 ஏப்ரல் 3

அதுமட்டுமல்ல—நேற்றையதினம் இதே காரணத்திற்காக மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு 5 லட்சம் ஒதுக்கியிருப்பதாக அறிவித்தார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

செங்கை மாவட்டத்திற்கும் அதுபோல நிதி ஒதுக்கித் தந்து, இந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் பல கிராமங்களில் ஏற்பட்டிருக்கிற தண்ணீர் பஞ்சத்தை நீக்க அரசு முன்வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நாடு முழுவதிலும் குழாய் மூலம் குடி தண்ணீர் சப்ளை செய்கிற திட்டத்தைச் செயல்படுத்தியாகவேண்டும். எப்படி எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட ஒரு தீவிர திட்டத்தைச் செயல்படுத்தினேமோ, அதுபோலவே குடிநீர் வாரியத்தின் மூலம் ஒரு தீவிர திட்டத்தை ஏற்படுத்தி எல்லாக் கிராமங்களுக்கும் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குகிற ஒரு ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு தீவிர திட்டத்தைத் தயாரித்து, நிதி ஒதுக்கி—மத்திய அரசிடம் இருந்தும் நிதி உதவி பெற தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று குடிநீர் வாரியத் தலைவர் அவர்களிடமும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, க்ராஷ் ப்ரோகிராம்—என்பதாக வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்திற்கு மத்திய சர்க்கார் கொடுத்துவந்த உதவி நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டம் நிறுத்தப்படு மானல் பல வேலைகள் பாதிக்கப்படும். இதுவரை செலவு செய்த பணமும் வீணாகப்போகும். ஆகவே மத்திய அரசு அதற்குத் தொடர்ந்து நிதி உதவி அளிக்க, நமது சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ரூரல் ரோட்ஸ் திட்டம்—இதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் எந்த எந்த ரோடுகள் எடுத்துக்கொள்ளப்படும் என்கிற பட்டியல் முடிவாகவில்லை என்று தெரிகிறது. மிக விரைவில் அந்த முடிவினைச் செய்துவிட வேண்டும்.



1974 ஏப்ரல் 3] [திரு. இ. எஸ். தியாகராசன்]

இன்றைக்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்—தீர்மானம் போடு வதோடு நிற்கிறது. அதனுடைய தீர்மானங்கள் எதுவும் நடை முறைக்கு வருவதில்லை. அதுபோல இல்லாமல் அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கும் சில அதிகாரங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் போகிற ரோடுகளை எல்லாம் ஹைவேசே எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அங்குப் போகிற பஸ்கள் மக்களுக்கு வசதியாக இருக்க முடியாது. ஆகவே, டவுஸ் போகிற ரோடுகளை ஹைவேஸ் இலாக்காவிலேயே எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நகர பஞ்சாயத்துக்களின் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருக் கின்றன. ஏ.ஆர்.சி. சிபார்சு செய்தபடி house tax -க்கு மாட்சிங் கிராண்டு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நலத்துறைப் பணியாளர்களையும், ரெவின்யூத் துறைப் பணியாளர் களையும் இணைத்துவிடவேண்டுமென்று ஏ.ஆர்.சி. சிபார்சு செய்திருப்ப தாகவும், அதை திரு. சுப்பையா முதலியார் அவர்கள் எதிர்த்திருப்ப தாகவும் அறிகிறேன்.

ரெவின்யூ துறையும், நலத் துறையும் சேர்ந்திருந்தால் எந்தவித மான நல்ல காரியங்களையும் கிராமங்களுக்குச் செய்ய முடியாது. நலத் துறை என்பது வளர்ச்சித் துறையாகும். ஆகவே, ரெவின்யூவில் இருந்து நலத் துறையைத் தனியாகப் பிரித்து இது வேறு, அது வேறாகச் செயல்படும்படியாக ஏற்பாட்டைச் செய்தால்தான் நல்லதாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. மு. இராசகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தைக் கோரியிருக்கிற அமைச்சர் அவர்கள் நல்லமுறையில் உள்ளாட்சித் துறை நிர்வாகத்தைப்பற்றி அறிந்தவர்கள். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

நான் உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்கிற முறையில்—அந்த ஊர் பற்றி குட ஓலையில் எழுதி வைக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல— தமிழகத்தில் 374 ஒன்றியங்கள் இருக்கின்றன என்றால்—அவை எல்லா வற்றையும்விட மிகப் பெரிய ஒன்றியமாகவும் இது இருக்கிறது

[திரு. க. மு. இராசகோபால்] [1974 ஏப்ரல் 3

என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 76 ஊராட்சி
களைக்கொண்ட ஒன்றியமாக இது இருக்கிறது. இதை உடனடியாக
இரண்டாகப் பிரித்தால்தான் வாழ முடியும். நல்ல பல பணிகளைச்
சிறப்பாகச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல—இன்றைக்கு ரெவின்யூ—உள்ளாட்சித் துறை
ஆகிய இரண்டும் ஒன்றாக இணைந்திருப்பதை இரண்டாக வெட்ட
வேண்டும். இல்லையென்றால் இதைவிட அடிமை ஆட்சிக்குட்பட்ட
நிலை உலகத்தில் எதுவும் இருக்க முடியாது. அந்த அளவுக்கு
ரெவின்யூ அதிகாரிகள் இந்த உள்ளாட்சித் துறை அதிகாரிகளை மிகக்
கேவலமாக மதிக்கிறார்கள் என்பதற்கு இரண்டு மூன்று எடுத்துக்
காட்டுகளையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்று திட்டம்
போட்டால் அதை ஆர்.டி.ஓ. பாஸ் செய்யவேண்டும், பின்னர்
கலெக்டருக்குப் போய் பிறகு இந்தத் துறைக்குப் போகிறது.
இங்கேயே எங்காவது கட்டிப்போட்டு வைத்துவிடுகிறார்கள்.
உள்ளாட்சித்துறை எதற்காக வருவாய்த்துறையோடு இணைந்திருக்க
வேண்டும்?

ஊராட்சி மன்றத்தினிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற புறம்
போக்கு நிலங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்—இந்த ஊராட்சி
எந்தவிதமான தீர்மானமும் போடாதிருக்கிறபொழுதே எடுத்து
பட்டா செய்து கொடுத்துவிடுகிறார். தீர்மானம்போட்டு அனுப்புகிற
இடத்தில் பட்டா கொடுக்க முடியாது என்கிறார்.

ஊராட்சி அனுமதி கொடுத்து வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிற
இடங்களில் ரெவின்யூ துறையினர் வந்து அந்த வீடுகளை இடித்துத்
தள்ளி அவர்களை வெளியேற்றுகிறார்கள். இன்ன இடத்தில் ஆக்கிர
மிப்பு இருக்கிறது, அதை வெளியேற்ற வேண்டும் என்று ஊராட்சி
சொல்கிற இடங்களில் அதுபோல ஆக்கிரமிப்பை வெளியேற்ற முன்
வருவதில்லை. இந்த அளவுக்கு மிகக் கேவலமாக உள்ளாட்சித் துறை
யினர்கள் நடத்தப்பட்டு வருகிறார்கள்.

இதைத்தான் உள்ளாட்சி, மக்களாட்சி, ஜனநாயகம் என்று
சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதை வைத்துக்கொண்டு கிராம
ராஜ்யம் வரும்—இன்னும் ராமராஜ்யம் வரும் என்றெல்லாம்
பேசுவது வேடிக்கையான கதை. உடனேயே உள்ளாட்சித் துறை
வேறு—வருவாய்த் துறை வேறு என இரண்டாகப் பிரிக்க வேண்டும்.
தனியாக உள்ளாட்சித் துறை இருந்தால்தான் நன்றாக இருக்கும்.



1974 ஏப்ரல் 3] [திரு. க. மு. இராசகோபால்]

ஆசிரியர்களை மாற்றுவதற்குக் கூட இவர்களுக்கு அதிகாரம்
இல்லை. காலை 9-30 மணிக்கு வந்தால் ஆசிரியர் வந்து தாம் மாற்றப்
பட்டிருப்பதாகச் சொல்கிறார். ஆணையரைப் போய்ப் பார்த்தால்
அவருக்கு அதிகாரம் இல்லை. சம்பளம் இவர்கள் கொடுப்பது—
ஆனால் இவர்களை இங்கே வேலை செய், அங்கே வேலை செய் என்று
சொல்கிற அதிகாரம் இவர்களுக்குக் கிடையாது. இப்படி உள்ள ஒரு
திட்டத்தில் உள்ளாட்சித்துறை எந்த அளவுக்குச் செயல்பட முடியும்?

கருத்தடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், எல்லா இலாக்கா
வினர்களுக்கும் தான் பொறுப்பு—ரெவின்யூத்துறையைச் சேர்ந்த
எந்த ஊழியராவது எங்காவது ஒருவருக்கு கருத்தடை செய்ய
நடவடிக்கை எடுத்தார்களா? இந்த உள்ளாட்சித் துறை அதிகாரி
களைத்தான் அவர்கள் மிரட்டுகிறார்கள். கேவலமாகப் பேசுகிறார்கள்.

பல கிராமங்கள் இன்றையதினம் குடிதண்ணீர் கூட இல்லாமல்
தவித்துக்கொண்டிருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு வந்து, முனிசி
பாலிட்டிகளுக்கு வந்து, மேஜர் பஞ்சாயத்துகளுக்கு வந்து—கிராமங்
களுக்கு குடிதண்ணீர் வர ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிடும் போலிருக்
கிறது.

நாட்டுப்புறங்களில் எல்லாம் ஆறு ஓடுகிறது. அங்கேயிருந்து
தண்ணீர் எடுத்து, 30 மைல், 20 மைல், 15 மைல் தள்ளி இருக்கிற
டவுனுக்குக் கொண்டுபோகப்படுகிறது. அவனும் மனிதன்தான்.
எல்லோரும் இந்நாட்டு மன்னராயிற்றே. இங்கேயிருக்கிற தண்ணீர்
அங்கே போகிறதென்றால், ஏன் என்று அவன் கேட்கிறான்.

வில்லிவாக்கத்திலிருந்து வண்டலூருக்கு எடுத்துக்கொண்டு
வருகிறோம். இது மிகக் கொடுமை. எங்களையும் கொஞ்சம் கவனித்து
அமைச்சர் அவர்கள் குடிநீராவதுக் கொடுக்கவேண்டுமென்று கேட்
டுக்கொண்டு ...... (மணி அடிக்கப்பட்டது) ...... அதற்குள்ளே
இப்படி அடித்து விட்டால் எப்படி? நான் ஏன், இப்படி பேசுகிறே
னென்று சொன்னால், மனசாட்சி எல்லா சட்டமன்ற உறுப்பினர்
களுக்கும் இருக்கிறது.

வி.எம். ரெவின்யூவிலே கையாடல் செய்கிறான். அவன் சஸ்பெண்ட்
செய்யப்படுகிறான், உடனே தாசில்தாரை, கலெக்டரைப் பார்த்து,
பணத்தைக் கட்டினால், விட்டுவிடுகிறார்கள். இதுதானே நடக்கிறது.

ஆனால், கிராம சேவக் தவறு பண்ணினால் உடனே போலீஸ்.
என்ன பாரபட்சம்? அதிலே சக்களத்தி மனப்பான்மை. மாற்றாந்
தாய் எண்ணம் அங்கே வளர்ந்திருக்கிறது.

[திரு. க. மு. இராசகோபால்] [1974 ஏப்ரல் 3

ஆகவேதான் உள்ளாட்சித் துறை தனியாக இருக்க வேண்டும். ரெவின்யூ டிபார்ட்மெண்டிடமிருந்து, உள்ளாட்சித் துறையைத் தனியாகப் பிரிக்கவேண்டும், தனியாகப் பிரிக்கவேண்டும், தனியாக பிரிக்கவேண்டும் என்று கேட்டு, இந்த மானியத்தை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : MR. Speaker, Sir, in support of the cut motion given by me, I wish to say a few words about community development.

The Demand had been moved by the Hon. Minister and I appreciate and admire his enthusiasm for the dapertment. I wish to offer a few suggestions to make the department work more efficiently.

There is no time and therefore I am only touching on important points.

The present indirect method of electing the Chairman of Panchayat Union Council should be done away with, once and for all, in the matter of democcratic set-up of administration. The young aspirant must be helped to grow and not be allowed to be stunted in his growth.

Government should be bold enough to bring in this measure. Heavens will not fall down if this is brought into being. Let Government bring in necessary changes in the method of election of Chairmen of Panchayat Union Council.

Coming to Education, the sooner the subject of education is taken away from Panchayats, the better. For inspection etc., there are no sufficient stac. Parallel Government is bring run there. The Block authorities do not have control over teachers. Every time there is quarrel between them just like husband and wife, all the time the children being allowed to suffer. So, I say, let the Education Department take away this subject of education from Panchayats.

The BMT scheme has not been introduced in Karumangalam in Hosue block. I hope it would be introduced.

Winter allowance has been sanctioned for Hosur and Denkanikota because they are hilly tracts. But that has not been extended to teachers there. That should be done quickly.



1974 ஏப்ரல் 3] [Thiru K. S. Kothandaramiah]

What is the position of MLA in the Block set-up? He is not consulted at all. No scheme comes to his knowledge. He is trated as an untouchable by this department. He is not consulted in the matter of appointment or transfer of the teachers.

Even when Ministers come, invitations are not sent to the MLA.

MLA should be given more facilities and he should be associated in the work of the block.

For instance there are 3 blocks in my constituency. I am a silent spectator and nobody consults me in the work of blocks.

The school buildings should be properly constructed.

திரு. என். கே. பழனிசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் வேண்டாம்.

திரு. என். கே. பழனிசாமி: சேர்மனுக்குப் பதில் எம்.எல்.ஏ.வை போட்டுவிடலாமா?

THIRU K. S. KOTHANDARAMIAH : Hosur and Denkanikota are bilingual areas. Now nursery classes have been introduced. But no Telugu teacher has been posted. It is necessary that the recommendation of the Linguistic Minority Commission is implemented. That has declared Hosur and Denkanikota as Telugu area. But only a Tamil teacher has been posted. He does not understand the pupils nor the pupils understand him. So, I request that a Telugu teacher be posted. That should be done in bilingual areas like Tiruvellore and Tiruttani also.

With these words I close my speech.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சியினர் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

கிராம முன்னேற்றத்திற்கு பஞ்சாயத்து ஆட்சி முறையை லட்சியமாகக் கொண்டு அதன் அடிப்படையில், அரசியல் சட்டத்தின் 40-வது ஷரத்தில் இந்த லட்சியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

[திரு. என். டென்னிஸ்] [1974 ஏப்ரல் 3

கிராம மக்களுக்கு ரோடு வசதி, கல்வி வசதி, குடிதண்ணீர் வசதி, கூட்டுறவு வசதி, மின்சார வசதி இவைகள் வேண்டும் என்று இவை களுக்கெல்லாம். கிராம ஆட்சியின்மூலம் இவற்றை நிறைவேற்ற திட்டம் வகுத்திருக்கிறோம். ஆனால், இது சரியாக நிர்வகிக்கப்படு கிறதா என்று பார்த்தால், மந்தமான முறையில் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

இந்த நிர்வாகம், நிலம் படைத்தவர்களுடைய நிர்வாகமாக இருக் கிற நிலை மாறவேண்டியது அவசியமாகும். இந்த கிராம நிர்வாகத் தில் சில மாறுதல்கள் அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறையிலிருந்து பிரிக்கப்பட வேண்டுமென்று இங்கு பேசியவர்கள் கூறினார்கள். இதை நான் வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஊராட்சிகள் பல, பொருளாதார நிலையில் மோசமாக இருக் கின்றன. ஆதலால், சில சிறிய பஞ்சாயத்துக்களைச் சேர்த்து, வயபிள் யூனிட்டாகச் செயல்பட வழி வகுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில், பல்ப் மாற்றுகின்ற அதிகாரத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சிப் பணிகளை நிறை வேற்ற முடியாத நிலையிருக்கிறது. ஆதலால், அவைகளுக்கு அதிக மானியம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, டவுன் பஞ்சாயத்துக்களுக்கு எஸ்டாபிளிஷ்மெண்ட் சார்ஜ் மிகவும் அதிகமாக இருக்கிற காரணத்தால், எஸ்டாபிளிஷ் மெண்ட் சார்ஜில் ஒரு பங்கை, அரசு மானியமாகக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊராட்சிகளுக்கு மாச்சிங் கிராண்ட் கொடுப்பதைப் போல், டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. என். டென்னிஸ்]

ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கிற அதிகாரம் போதுமானதாக இல்லை. சிறிய காரியங்களுக்கும் இன்று, ஆர்.டி.ஓ., கலெக்டர், அரசு முதலியவர்களை அணுக வேண்டியிருக்கிறது. ஆதலால், ஒரு காரியம் நடைபெற அதிகக் காலதாமதமாகிறது. அந்த நிலை மாற நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு மாத்திரம் பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை உபயோகிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவிலிருக்கிற பஞ்சாயத்து டெவலப்மெண்ட் கன்சல் டேட்டிவ் கமிட்டி மீட்டிங் ஆண்டுதோறும் நடக்க அரசு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த கன்சல்டேட்டிவ் கமிட்டி மீட்டிங்கில் எடுத்திருக்கின்ற, நிறைவேற்றியிருக்கின்ற தீர் மானங்களை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்கு, அங்கத்தினர்கள், பிரசி டெண்டுகள் வருகிறார்கள். அவர்களுக்கு 1962-ல் கொடுத்த ரூ. 2 தான் படியாக இருக்கிறது. அதை ரூ. 10 ஆக உயர்த்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று பஞ்சாயத்து யூனியன் பில்டிங்ஸ் ஹைவேஸ் நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தால், பஞ்சாயத்து யூனியன் பில்டிங்கை பழுது பார்க்கக் காலதாமதம் ஏற்படுகிறது. அந்த நிலைமை மாறவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

10 ஆண்டுகள் சர்வீஸ் ஆன கிராம சேவக்குகளுக்கு, செகண்ட் கிரேடிலிருந்து பர்ஸ்ட் கிரேடுக்கு புரமோஷன் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். சாலை மானியம் என்ற பெயரில், 1967-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி இருந்த சாலை நீளத்தின் அடிப்படையில், கொடுக்கிறார்கள். அத்தோடு, 1961 ஜனத் தொகையின் அடிப்படையிலே இந்த உள்ளூர் சாலை மானியம் கொடுக்கப்படுகிறது. இன்றிருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் ரோடின் நீளத்தின் அடிப்படையிலும், இன்றிருக்கிற ஜனத்தொகையின் அடிப்படையிலும் உள்ளூர் சாலை மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 3

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த உள்ளாட்சித் துறையில் ஆரம்பத்தில் இது எப்படி வளர்ச்சி அடைய வேண்டுமென்று தலைவர்கள் கருதினார்களோ அந்த அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். வளர்ச்சியடையவில்லை என்று குறிப்பிட்டார்களே தவிர ஏன் வளர்ச்சி அடையவில்லை என்பதைப்பற்றி கருத்தைத் தெரிவிக்கவில்லை.

இதை நாம் மிகவும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். இந்த ஊராட்சித் துறையின் சமுதாய வளர்ச்சி திட்டம் தான் இந்த நாட்டிலே பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தமுடியும் என்பதிலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த வளர்ச்சியில்லை என்றால் அடிப்படையிலே ஏதோ கோளாறு இருக்கிறது என்று ஆராய்ந்து அந்தக் கோளாறுகளை நிவர்த்தி செய்யாமல் வெறும் உத்தியோகஸ்தர்களை மாற்றுவது போன்ற காரியங்களைச் செய்தால் நாம் எதிர் பார்த்த அளவு நன்மை கிட்டாது.

ஆகவே இதற்கு என்ன நோய் என்பதை கண்டு பிடிக்கவேண்டும். நான் சென்ற ஆண்டு இந்த மானியத்தின் மீது பேசும்பொழுது குறிப்பிட்டேன். பஞ்சாயத்துக்கும், மக்களுக்கும், தொடர்பில்லாமல் போய் விடுகிறது. மக்கள் ஓட்டு போட்டதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கும் உரிமை மக்களுக்கு இல்லை. அவர்கள் வேண்டுமானால் 5ஆண்டுகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மீண்டும் ஓட்டுக் கேட்க வரும்போது அவர்களைக் கேட்கும் உரிமைதான் இருக்கிறது. இடையிலே கேட்பதற்கு அவர் களுக்கு சட்ட பூர்வமான உரிமை இல்லை.

அது மட்டுமல்லாமல் நாம் போடுகிற இடமெல்லாம் அதிகாரிகள் மட்டத்திலே போடப்பட்டு அங்கே மக்கள் மீது திணிக்கப்படுகிறதே தவிர, மக்கள் அதைப்பற்றி கருத்து கூற முடிவதில்லை, அந்தத் திட்டங்கள் தங்களுக்காக போடப்பட்டது என்பதை அவர்கள் உணரவில்லை. இதுதான் முழுக் காரணம் என்று என்னால் கூறமுடியாவிட்டாலும், இந்த நோக்கத்தோடு ஒரு காரியத்தைச் செய்தால் பலன் கிட்டுமா என்று பார்க்கவேண்டும் என்பதுதான் என் நோக்கம்.

ஆகவே பஞ்சாயத்து திட்டங்கள் போடுகிறபோது மக்களுடைய ஆதரவை அதற்குப் பெறவேண்டும். யார் யார் ஓட்டுப் போடுகிறார் களோ அவர்களெல்லாம் பொதுக் கவுன்சிலின் உறுப்பினர்களாக



1974 ஏப்ரல் 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இருக்கவேண்டும். பஞ்சாயத்து ஒரு நிர்வாக சபையாக இருந்து போடப்படுகிற திட்டங்களுக்கு மக்களுடைய ஆதரவைப் பெற முயற்சிக்க வேண்டும்.

அவர்கள் ஓட்டுப் போட்டுத்தான் பட்ஜெட் நிறைவேற்றப்பட வேண்டும். இன்று பஞ்சாயத்திலே பணம் ஒழுங்காக செலவழிக்கப் பட்டதா என்று கேட்க மக்களுக்கும் உரிமை கிடையாது. அந்த உரிமையை அவர்களுக்கு வழங்கினால் இதில் ஓரளவு பலன்—நூற்றுக்கு நூறு பலன் கிட்டாவிட்டாலும்—ஓரளவு பலன் கிட்டும் என்று நான் நம்புகிறேன்.

ஆகவே பஞ்சாயத்து, ஊராட்சி சட்டத்தை இதற்கேற்றவாறு திருத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் நான் ரொம்ப காலமாக சொல்லிக் கொண்டு வருவது ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு டெவலப்மெண்ட் பிளான். அதாவது விவசாயத்திற்கு என்ன செய்யவேண்டும், ரோடு வசதிக்கு என்ன செய்யவேண்டும், நீர்ப்பாசனத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு 3 அல்லது 5 ஆண்டுக்கு ஒரு முறை கூடி அரசாங்கம் எவ்வளவு மானியம் தருகிறது என்று மட்டும் பார்க்காமல் ஆங்காங்கே அவர்களாகவே நிதிவசதி ஏற்படுத்தித் தருவதற்கு அவர் களுக்கு வாய்ப்பு தரவேண்டும்.

இன்று பள்ளிக்கூடம் கட்டுவது என்று சொன்னால் அரசாங்கத்தின மானியம் இதிலே எவ்வளவு என்று பார்க்கிற நிலைமைதான் இருக் கிறது, அதற்கு மனுப் போடுகிற நிலையில் தான் இருக்கிறது. மனுப் போட்டு அது டி.ஆர்.ஓ.விற்கு வருவதற்குள் காலம் முடிந்துவிடு கிறது

இது மாதிரி சுயாட்சி, சுயாட்சி, பஞ்சாயத்துகள் சுயேச்சையாக இயங்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு நம்முடைய கையிலேயே மூக்கணாங் கயிறைப் பிடித்திருப்பதைப் போல எல்லா அதிகாரத்தை யும் வைத்திருப்பது சரியல்ல. பஞ்சாயத்துகளுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

அடுத்து பஞ்சாயத்துகளுக்கு நிதி வசதி போதவில்லை. இதில் அட்மினிஸ்ட்ரேடிப் ரிஃபார்ம்ஸ் கமிஷன் கூட சரியான கருத்தைச் சொல்லவில்லை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 3

பஞ்சாயத்துகளுக்கு வசூல் இருக்கிறது. ஆனால் இப்போது எவ்வளவு வசூலானாலும் அது போதவில்லை. பஞ்சாயத்துகளிலே ரோட் போடுவதற்குக்கூட அதிகமான பணம் ஆகிறது. ஆகவே பஞ்சாயத்தின் நிதி நிலையை அதிகமாக்குவதற்கு என்ன செய்யவேண்டு மென்று ஆலோசனை செய்யவேண்டும்.

இந்த சர்க்கார் வந்தவுடனே அடிப்படை நில வரியை எடுத்து விட்டார்கள். அது பூராவும் பஞ்சாயத்திற்கு இருந்தால் அவர் களுக்கு 3,000, 4,000 ரூபாய் அதிகம் கிடைக்கும். 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு இந்த வரி 12½ ரூபாய் வருகிறது. இதைச் கட்டினால் அவர்கள் என்ன கீழேயா விழுந்துவிடப் போகிறார்கள்?

ஆக இது ஏதோ ஒரு கொள்கை, மக்களுக்கு நல்லது செய்தோம் என்று பிரசாரம் செய்வதற்காகத்தான் செய்தார்கள். இதற்கு நாங்களும் ஆமாம் போட்டுக்கொண்டு இருக்கிறோம். இதுதான நிலைமை. தற்போது சிறிய சிறிய பஞ்சாயத்துகளாக இருக்கின்றன இவைகளை வயபிள் யூனிட்டுகளாக அமைப்பது நல்லது.

இப்படி கூட்டுறவு, பஞ்சாயத்து, ரெவின்யூ எல்லாமே மொத்த மாக ஒரு யூனிட்டாக வைத்து அதற்குள்ளே எல்லோருமே சேர்ந்து ஒரு கோஆர்டினேஷனை இயங்கினால் வளர்ச்சிக்கு அது நல்ல பணியாக இருக்கும்.

ரோடுகளை எடுத்துக்கொண்டால், இப்போது 1,500 மக்களைக் கொண்ட கிராமங்களுக்கு லிங்க் ரோடு போடுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். இது மாநிலம் பூராவும் செய்வது என்றால் 60 கோடி ரூபாய் ஆகிறது. இப்போது வருஷத்திற்கு 3 அல்லது 4 கோடி ரூபாய் அளவில்தான் பணிகள் நடக்கின்றன. இப்படியிருந்தால் இன்னும் 15 ஆண்டுகளுக்கு இந்தப் பணியைச் செய்யவேண்டியிருக்கும். ஆகவே இந்த அளவுத் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கி னால் இன்னும் குறுகிய காலத்தில் இந்த வளர்ச்சிப் பணிகள் முடிவு பெறும். இதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்தில் கல்வி, மருத்துவம் போன்றவையெல்லாம் இருக்கின்றன. இவைகளை ஒன்றியங்களின் நிர்வாகத்திலிருந்து எடுத்துவிட்டால் நல்லது என்று தோன்றுகிறது. இதை மற்றவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நினைக்



1974 ஏப்ரல் 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

கிறேன். முழுமையாக வளர்ச்சி திட்ட வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நல்லது செய்யமுடியும் என்று நான் நினைக் கிறேன்.

அடுத்து பஞ்சாயத்துகள் தனியாக இருக்கவேண்டுமே தவிர ரெவின்யூவிலே இருக்கக்கூடாது. அவைகளை ரெவின்யூ டிவிஷன் ஆளாமல் அவைகளுக்கு பஞ்சாயத்து ஆஃபீசரையே போட்டு அதைச் செய்யவேண்டும். அதை ரிஃபார்ம்ஸ் கமிஷன் ஒத்துக்கொள்ளவில்லை. அதை அதிகாரிகளும் ஒத்துக்கொள்ளவில்லை. அவர்கள் எப்போதும் அதற்கு ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

(பிற்பகல் 1.00)

அடுத்து, கிராம சேவக்குகள் பதவிக்கு வந்திருப்பவர்களுக்கு உத்தியோக உயர்வே இல்லாமல் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு ரெவின்யூ இலாக்காவிலே புகுந்திருந்தால் ஆர்.டி.ஓ. வாக வருகிறார்கள். ஆனால் கிராஜுவேட்டாக இருந்தும் வேலை யில்லை என்ற காரணத்தால் கிராம சேவக்காக வந்தார்கள். அவர்களுக்கு வேறு வழியே இல்லை என்றால் எப்படி உற்சாகம் இருக்கும்? சம்பள வாய்ப்புக்கூட குறைச்சலாகத்தான் இருக்கிறது. ஒரு வருஷம் டிரெயினிங் போனவர்களுக்குக்கூட அதிகச் சம்பளம், ஆனால் இரண்டு வருஷம் டிரெயினிங் போன கிராம சேவக்குகளுக்குக் குறைவாக இருக்கிறது. எனவே, அவர்கள் உற்சாகமாகப் பணி யாற்றுகின்ற அளவிலே புரமோஷன் வசதிகளையும், மற்ற வாய்ப்பு களையும் செய்ய வேண்டியது அவசியமாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில் சீக்கிரமாக முடி வெடுத்து விட்டார்கள். பல விஷயங்களில் முடிவெடுக்கவில்லை, " அன்டர் கன்சிடரேஷன் " என்று சொல்லியிருக்கிறார்கள். நேரடி யாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதுதான் முன்னேற்ற முங்கூட. ஏனென்றால் எங்கள் கட்சி வந்துவிடும், உங்கள் கட்சி தோற்றுவிடும் என்பதற்காகச் சொல்லவில்லை. இந்த ஆளைத் தூக்கிக் கொண்டு போகின்ற வேலை, மனிதனை மனிதன் தூக்கிகொண்டு போவது கேவலமானது. நேரடியாகத் தேர்தல் வைத்துவிட்டால் யார் வேண்டுமானாலும், எந்தக் கட்சி வேண்டுமானாலும் வரட்டும். எனவே, இந்த ஆள் தூக்கும் சமாச்சாரத்திற்கு முடிவு கட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 3

அடுத்தபடியாக, நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களுக்கான தேதி அறிவிக்கப்பட வேண்டும். அதை ஒத்தி வைக்கக்கூடாது. இன்னொரு மசோதா இங்கே வராமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக கொள்கை விஷயமாகச் சில பிரச்னைகளை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கும் விதத்தில் பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நானும் நினைவுபடுத்துகிறேன். குறிப்பாக, பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தலை எப்படி நடத்த வேண்டுமென்பதிலே பெரும்பாலான அங்கத்தினர்களின் கருத்து அது நேரடியாக வாக்கெடுப்பின்மூலம் நடத்தப்பட வேண்டும், பஞ்சாயத்துத் தலைவர்களைக் கொண்டு நடத்தக்கூடாது என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்களும் அதைப்பற்றிச் சிந்தித்திருப்பார்கள், அமைச்சர் அவர்களும் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். நானும் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் குறைந்த பட்ச தீமைகள் இல்லாமல் இருக்கும். அரசியல் வாதிகள் யோக்கியமாக இருந்தால் நாடும் யோக்கியமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அரசியல் பாழ்படுவதற்குக் காரணமே அரசியல்வாதிகள் நாணயமாக இல்லாததுதான். இந்த அடிப்படையில் நேரடியான தேர்தல் வைத்தால் ஓரளவுக்கு ஜனங்கள் மத்தியில் அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்கின்ற நிலைமை ஏற்படும். எனவே, பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலை அவசியம் அப்படி நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் உதவி சேர்மனுக்கும் பவர்ஸைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். சில நேரங்களில் பஞ்சாயத்து யூனியன் தலைவர் இல்லாவிட்டால் அவர் தலைமை வகிக்கும் நிலைமை இருக்கிறது என்ற அடிப்படையில் இருக்கக்கூடாது. திட்டவட்டமாக அவர்களுக்கு அதிகாரத்தில் ஓரளவிற்கு பங்கு கொடுக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அதனால் வேலையும் சுலபமாக நடக்கும், எனவே பஞ்சாயத்து யூனியன் உப தலைவருக்கு அதிகாரத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. மணலி சி. கந்தசாமி]

அடுத்தபடியாக, ரெவின்யூ இலாக்காவையும் அபிவிருத்தி இலாக்காவையும் சேர்ப்பதைப்பற்றி என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து என்னவென்றால் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதைப்போன்றதுதான். ஒன்றுக்கொன்று பொருந்தாது. அதிகார தோரணையிலே இருக்கும் ரெவின்யூ இலாக்காவிலே இருப்பவர்களையும், ஜனங்களோடு பழகி ஜனநாயக முறையில் இருக்கின்ற வளர்ச்சித் துறையில் இருக்கும் ஒரு பிரிவினரையும் சேர்ப்பது நிச்சயமாக இரண்டையுமே பாதிக்கும் விதத்தில்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே அழுத்தந்திருத்தமாக, நிச்சயமாக எவ்வளவு சீக்கிரத்தில் பிரிக்கிறீர்களோ அவ்வளவு சீக்கிரம் அபிவிருத்திக்கும் நல்லது. ரெவின்யூ இலாக்காவும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

இன்றைக்கு கல்வி, சுகாதாரம் இதெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியில் இன்னும் தனியாரின் மேனேஜ்மெண்ட் ஸ்கூல் ஏன் இருக்கவேண்டுமென்று தெரியவில்லை. கல்வி பூராவையும் ஏன் பஞ்சாயத்துகளுக்கே ஒப்படைக்கக்கூடாது? அந்த அளவிற்கு ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்துக்களிடமே ஒப்படைத்து உதவுவது என்பது சாலச்சிறந்ததாக இருக்கும்.

மருந்தகங்களைப் பொறுத்தவரையில், ஆஸ்பத்திரிகள் அல்ல, டிஸ்பென்சரிகளைப் பொறுத்தவரையில் அவைகளைப் பஞ்சாயத்துக்களிடம் கொடுப்பது நல்லது. அதனால் பரவலாக பந்தங்களை ஏற்படுத்தி, குறைந்தபட்சம் ஹோமியோபதி, யூனானி, சித்தா இப்படிப்பட்ட மருந்தகங்களை பஞ்சாயத்துக்களே நடத்தும் விதத்தில் ஏற்பாடுகளைச் செய்தால் அலோபதிக்கான பிரஷர் குறையும் என்ற அடிப்படையில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உள்ளாட்சித் துறை முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரும் பஞ்சாயத்துக்கள் என்றால் குறைந்த பட்சம் எவ்வளவு எண்ணிக்கை இருக்கவேண்டும், அதிகபட்சம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட வேண்டும். மிகப்பெரிய அளவில் 7,000 அல்லது 8,000 என்று இருக்கும் பஞ்சாயத்தும் ஒரு பஞ்சாயத்தாக இருக்கிறது. அவைகளைப் பிரித்தால் நிர்வாகம் திறமையாக நடப்பதற்குச் சிறப்பாக இருக்கும். ஆகவே, குறைந்தபட்சம் எவ்வளவு இருக்க வேண்டும், அதிக பட்சம் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைப்பது சாலச்சிறந்ததாக இருக்கும். நிர்வாகத் திறமைக்கும் அது உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சி. மணலி கந்தசாமி] [1974 ஏப்ரல் 3

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனில் பல்வேறு எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். கிராம சேவக்குகளைப்பற்றி இங்கே சொன்னார்கள். கிராம சேவக்குகள் கடைசி நிலையில் இருக்கிறார்கள், அவர்கள் முன்னேறுவதற்கான புதிய திட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், கிராம சேவக்குகள் ஒவ்வொரு கிராமத்திலும் சிறப்பாகச் செயல் பட்டிருக்கிறார்களா என்று கணக்குப் பார்த்தால் சரிவர இல்லை என்பது என்னுடைய கருத்து. ஒரு கிராமத்திலே விவசாயத்திற்காக எக்ஸ்டென்ஷன் ஆபீசர் போட்டிருக்கிறோம், கிராம சேவக்குகளைப் போட்டிருக்கிறோம் என்றால் விவசாயத்திலே அவர்களுக்கு எந்த அளவிற்குத் தகுதியிருக்கிறது, அதிக விளைச்சல் வருமா என்பது போன்ற விஷயங்களில் கூர்மையாகக் கவனிக்கும் அளவில் கண்காணிப்பு இருக்க வேண்டும். ஆனால் அந்தக் கண்காணிப்பு இப்பொழுது இல்லை.

எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் சம்பந்தமாகவும், கிராம சேவக்குகள் சம்பந்தமாகவும் அவர்கள் எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி, அவர்களுடைய வேலையைப் பற்றி ஒரு குறிப்பு இருப்பது அவசியம். அந்த அளவில் ஏற்பாடு செய்யத் தக்க நிலைமை பஞ்சாயத்து ஒன்றியங்களிலே நிச்சயமாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக எடுத்துக்கொண்டால், காண்ட்ராக்ட். காண்ட்ராக்ட் என்பது 21 சதவிகிதம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். பண வீக்கத்தைப் பார்க்கும்பொழுது அதுவொன்றும் பெரிய தொகை இல்லை. 4 கோடி ரூபாய்தான் மானியம் கொடுப்பது என்று சொன்னால் அது மிகையாகாது. இதிலே உள்ளாட்சித் துறையில் காண்ட்ராக்ட் பெரிய அளவில் உள்ளே வரும் ஆபத்து இருக்கிறதே அது சரியல்ல. கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு சில எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்தே வேலையில்லாத மக்களை கூட்டுறவு முறையில் சொசைட்டி ஏற்படுத்தி, காண்டிராக்டர்களுக்கு விடாமல் அந்த டிபார்ட்மெண்டே செய்யும் அடிப்படையில் ஏற்பாடுகளைச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்கலாம், சிக்கனமாகவும் முடியும். அதிக வேலைகளையும் செய்ய முடியும். அதைப்பற்றியும் தக்க முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 3] [திரு. சி. மணலி கந்தசாமி]

க்ராஷ் ப்ரோக்ராமை ஒருமுறை கொடுத்துவிட்டு நிறுத்துவது தப்பு. அதைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் இல்லாமல் செய்துவிட வேண்டும். க்ராஷ் ப்ரோக்ராமில், ஒரு வருஷம் வேலை கொடுத்துவிட்டு அடுத்த வருஷத்தில் நிறுத்துவது சரியல்ல. எனவே, மத்திய சர்க்காருக்கு எழுதி அதைத் தொடர்ந்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில் மிகவும் லஞ்சம் இருக்கிறது என்று துணிந்து கூறுகிறேன். கட்சி வித்தியாசம் இல்லாமல் பல பஞ்சாயத்துக்களில் அநியாயமாக, ஒதுக்கியிருக்கின்ற குறைந்தபட்ச பணத்தையும்கூட திருடக்கூடிய நிலைமை இருக்கிறது. சீராகச் செலவழிக்க வேண்டிய பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது அதுசம்பந்தமாக மேலேயிருந்து வரும் அதிகாரிகளோ பெருமளவுப் பணத்தைச் சீரழிக்கிறார்கள். ஒருமுறை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே நான் கேட்டேன். அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டச் சொல்வதற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர அவர்கள்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இல்லை என்று கூறினார்கள். (குறுக்கீடு) சர்சார்ஜ்.

இம்மாதிரி இருப்பவர்களைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இந்தத் தீமைகளை ஒடுக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களிலிருந்து லஞ்சம் ஆரம்பித்தால், அத்தகைய ஒரு மனோபாவம் ஏற்படுமேயானால் அதனால் சமுதாயச் சீரழிவு அல்லது ஒழுக்கக்கேடு ஏற்படுவதைக் காணலாம்.

இன்னும் சொல்லப்போனால் ஒன்றியங்களைக் கவனிப்பதற்கு கோவாப்பரேட்டிவில் போட்டிருப்பதைப்போல் ஸ்பெஷல் பிராஞ்ச் போட்டால்கூடத் தப்பு இல்லை. ஏனென்றால் பஞ்சாயத்து என்பது அடித்தளத்திலே இருப்பது, அந்த அடித்தளத்திலேயே ஒழுங்காக இல்லை, மோசமாக இருக்கிறது என்றால் மேலே போகப் போகக் கேட்க வேண்டியதில்லை. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் இந்த தேசிய வளர்ச்சித் திட்ட மானிய விவாதத்தின்மீது கலந்துகொண்டு 19 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால் அவைகளையெல்லாம் என்னிடத்திலே கொடுத்துவிடு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 3

வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதாலே அவைகளையும் சேர்த்து நிச்சயமாகக் கவனிப்பேன் என்பதை முதன்முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தில் முக்கியமாக கலந்துகொண்டவர்கள் அத்தனை பேர் கூறிய பொதுவான ஒரு கருத்து, நேரடித் தேர்தல் நடைபெற வேண்டும், இந்த இலாக்கா தனித்து இயங்க வேண்டும், பெரிதாக இருக்கும் ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும். பெரிய ஊராட்சி மன்றங்களாக இருப்பவற்றைப் பிரிக்க வேண்டும் என்ற இப்படிப்பட்ட கருத்துக்களை எல்லோருமே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக நேரடித் தேர்தலைப் பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையோடு கூட இன்னும் சிலவற்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நேரடித் தேர்தல் முறையை ஏற்கனவே கொண்டு வர வேண்டுமென்று பல முறை வலியுறுத்தப்பட்டு இறுதியாக சென்ற தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முடிவெடுத்து ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு அப்போதே ஒன்றியத் தலைவர்கள் தேர்தலையும் நடத்திவிடலாம் என்று பரிசீலித்தபோது, இது எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்று பார்த்துவிட்டு அதற்குப் பிறகு அதைச் செய்யலாம் என்று நிறுத்தி வைக்கப்பட்டது.

இன்றையதினம், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தலையும் நடத்திவிடுவது நல்லது; ஆள் தூக்குகின்ற நிலைமை எல்லாம் இருக்கிறது என்பதை இங்கே உறுப்பினர்கள் குறிப்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆள் தூக்கும் பிரச்சினை பஞ்சாயத்துக்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றில் மாத்திரமல்லாது எல்லாவற்றிலும் இந்த ஆள் தூக்கும் பிரச்சினை இருந்து கொண்டு வருகிறது. அதைப் போக்க வேண்டியது அவரவர்களைப் பொறுத்து இருக்கிறது.

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள், ஒரு தலைவராவது ஆள் தூக்காமல் வந்திருக்க முடியுமா என்று கேட்டார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன். நான் இரண்டு முறை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இரண்டு முறையும் யாரையும் தூக்கிச் சென்றது கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் எதிர்க் கட்சியில் இருந்த சிலர் கூட இவர் வந்தால் நலமாக இருக்கும், போட்டி கூடத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்கள்.



1974 ஏப்ரல் 3] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

போட்டி தவிர்க்க முடியாத ஒன்றாகி தேர்தல் நடைபெற்றது. யாரையும் தூக்கிக்கொண்டு போகவில்லை. இங்கே சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த சத்தியமூர்த்தி அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தால் கூட அவர்களுக்குக் கூடத் தெரியும். ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் நிற்கும்போதே சொன்னேன். எல்லோரும் சேர்ந்து சொன்னால் நிற்கிறேன் என்று சொன்னேன். அதைப் போல் பல தலைவர்கள் வந்திருக்கக் கூடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நம்முடைய அமைச்சருடைய கேஸ் விதி விலக்காக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இருந்தாலும் அந்த நிலைமை இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அதையொட்டி என்ன செய்யலாம் என்று யோசிக்கவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் குறிப்பிட்டது போல் ஒரு ஊராட்சி மன்றத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் வேறு கட்சியைச் சார்ந்தவர்கள். அதனால் ஊராட்சி மன்றமே இயங்காமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு மதிப்பு இல்லாமல் அவரை மாவட்ட ஆட்சித் தலைவர் நீக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார். சட்டத்தில் அது திருத்தம் செய்யப்படவேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியை மாவட்ட ஆட்சித் தலைவர் தனக்கு இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு நீக்குவது என்றால் அது யோசிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் யாரும் கூட்டத்திற்குப் போகவில்லை. இவரால் கூட்டம் நடத்த முடியவில்லை; கூட்டம் நடந்தாதது டிஸ்குவாலிபிகேஷன் என்று குறிப்பில் இருக்கிறது. மூன்று நான்கு கூட்டங்களை நடத்தாததால் தகுதியற்றவராக ஆகிவிடுகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை இறக்கும் நிலைமை இருக் கிறது. அதையும் பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம்.

பஞ்சாயத்துச் சட்டத்தில்கூட மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னது போல் சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 3

ஒரு ஊராட்சி மன்றத்தில் யாராவது தேர்ந்தெடுக்கப்பட்டால் தோற்ற ஒருவர் அவரிடத்தில் மினிட் புத்தகத்தைக் கொடுப்பது கிடை யாது. அதற்காக அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போக வேண்டுமே தவிர வேறு எந்தக் கோர்ட்டுக்கும் போக வழியில்லை. இதற்கெல்லாம் சட்டத்தில் மாற்றம் செய்ய ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. உரிய நேரத்தில் மாற்றம் செய்யப்படும்.

அதைப் போல் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றி ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டும் சரி, முதல்வர் அவர்களிடத்திலும் கருத்துக்கள் எல்லாம் விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய முக்கிய பிரச்சினை இருக்கிறது என்று சொன்ன காரணத்தால் "அண்டர் கன்சிடரேஷன்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல.

அடுத்து, இங்கு பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். தனித்து இயங்க வேண்டுமென்பதிலே கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் தங்கள் கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். பிரிவினை கூடாது என்று இருந்தாலும் பிரிவினையிலே ஈடுபட்டுத்தான் ஆகவேண்டுமென்று எல்லோரும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு சீனிவாசன் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யச் சொன்ன காரணத்தால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

வருவாய்த் துறையில் பணியாற்றக் கூடியவர்களுக்கு எங்கே வேலை இருக்கிறது, அதை ஏன் இதோடு இணைத்து விடக்கூடாது; அதற்காகத் தனியாக இருக்கவேண்டுமோ என்ற கருத்தைக் கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் சென்ற 27ம் தேதியே இந்தக் கருத்தைச் சொல்லி எல்லோரும் இணைந்து வேலை செய்தால் என்ன, அவரவர்கள் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கேட்கிறார்களே தவிர மக்களுடைய உயர்வுக்கு என்ன செய்கிறார்கள்? மக்களுக்கு உயர்வு அளிக்க எல்லோரும் இணைந்திருப்பது நல்லது. வருவாய்த் துறையில் இருப் பவர்கள் தங்களுடைய சீனியாரிட்டி—சின்சியரிடி பற்றியல்ல—பற்றிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். எந்த அளவுக்குத் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்று பார்க்கிறார்கள்.

அதைப் போல் வளர்ச்சித் துறையில் பணியாற்றக் கூடியவர்களும் இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பதால் முதலமைச்சர் அவர்கள் எந்த முடிவையும் சொல்லாமல் தீவிரமாகப் பரிசிலீத்துக் கொண்டி ருக்கிறார்கள். அதனால்தான் இப்போது சொல்ல முடியவில்லை.



1974 ஏப்ரல் 3]

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக முக்கியமான பிரச்சினை களில் அமைச்சர்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவேண்டும். எல்லோரும் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார் கள். ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டிலும் சேர்ந்திருக்க வேண்டுமென்று இருக்கிறது. உறுப்பினர்கள் சேர்ந்திருக்கக்கூடாது என்பதற்கான விவரங்களைச் சொன்னார்கள். முடிவை இப்போது கொடுக்காது போனாலும் சீக்கிரத்தில் சொல்லவேண்டும். சஸ்பென்சில் வைத் திருப்பது சரியல்ல.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: என்ன செய்வது என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். உடனடியாகச் சொல்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்த்து வேண்டியவற்றைச் செய்யவேண்டும்.

நாங்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் வேண்டி அவர்களும் தீவிரமாகக் காலம் கடத்தாமல் பரிசீலனை செய்துகொண்டிருக் கிறார்கள். பாதிக்கப்படுகிறவர்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றித் தீவிரமாக ஆலோசித்து பரிசீலித்துக் கொண்டிருக் கிறோம்.

மற்ற பல திட்டங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினைகளைப் பற்றியும் மற்றப் பிரச்சினைகளைப் பற்றியும் சொன் னார்கள். திரு. மாரிமுத்து அவர்கள் கூட கிராமத்திலுள்ள பற்று காரணமாக கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரை—25 ஆண்டு காலமாக குடிப்ப தற்குத் தண்ணீர் இல்லை என்று இருக்கிற நிலை மாறவேண்டும்; 25 ஆண்டு காலமாக முயற்சித்தும் முடியவில்லை. டாக்டர் கலைஞர் முதலமைச்சர் பொறுப்பேற்றதற்குப் பிறகு சில தீவிர திட்டங்களைக் கிராமங்களுக்குச் செயல்படுத்தியாகவேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும்; 1973-ம் ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்; எல்லாக் கிராமங்களுக்கும் குடிக்கத் தண்ணீர் கொடுக்க வேண்டும்; பாது காக்கப்பட்ட தண்ணீர் கொடுக்க வேண்டும்; குடிக்கத் தண்ணீர் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது; பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஏழாண்டுத் திட்டம் தீட்டி குடிநீர் வாரியத்திடம் ஒப்படைத்து துரிதமாக நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி வேலை நடைபெற்று வருகிறது.

குடிக்கத் தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டும்; அதற்குப் பிறகு கிணறு வெட்டி நீர்ப் பற்றாக் குறையாக உள்ள கிராமங்களுக்குச் சலுகை வழங்க வேண்டும்; பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொடுப்பதை மூன்றாவதாகக் கவனிக்க வேண்டும். இப்படி ஒரு திட்டத்தைத் தீட்டி ஏழாண்டுக் காலத்தில் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் தொகை அதிகமாக ஒதுக்கி வருகிறார்கள்.

திரு. கோவை செழியன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிதண்ணீர் கொடுக்க முயற்சி செய்வதாகச் சொன்னார்கள். அரசாங்கம் அந்த நல்ல கருத்தைக் கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் கிணறு வெட்டி அங்கக் கிணற்றிலே இருந்து தண்ணீரைக் கொண்டு போக பஞ்சாயத்தில் பணம் இருந்து, செய்தாலும் கூட ஹெல்த் டிப்பார்ட்மெண்டில் இருப்பவர்கள் கிணற்றுத் தண்ணீரைக் கொண்டு போய் டெஸ்ட் செய்து விட்டு நல்ல தண்ணீர் இல்லையென்று சொல்லி விடுகிறார்கள். சிறுவாணித் தண்ணீரையே நல்ல தண்ணீர் இல்லையென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த முறையில் அங்கு போகாமல் நீங்களாகவே அனுமதிக்க முன்வருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அமைச்சர் அவர்கள் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கொடுக்கவேண்டுமென்று வேகமாகச் சொன்னார்கள். அதை வரவேற்கிறோம். இப்போது எடுத்துக் கொண்டால் 73,000 கிணறுகள் உள்ளன. ஓவர் ஹெட் டாங்க்ஸ் 4,600 இருக்கின்றன. இருக்கிற கிணறுகளுக்கு எல்லாம் டாங்க்ஸ் போட்டு தண்ணீர் கொடுக்க அமைச்சரவை வேலை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சோற்றுக்கு உப்பு இல்லை என்று சொல்பவர்களும் காப்பிக்கு சர்க்கரை இல்லை என்று சொல்பவர்களும் ஒன்றாக இணைவார்கள் என்று சொல்ல முடியாது. குடிக்கவே தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு முதலில் அதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது கிணறுகளுக்கு பாதுகாக்கப்பட்ட வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று சொல்வது இயலாத ஒன்றாகும் குடிக்கவே தண்ணீர் இல்லாத கிராமங்களுக்கு முதலில் குடிநீர் வசதி செய்துகொடுக்கவேண்டும். பிறகு வற்றிப் போகிறவற்றிற்கு உதவி செய்யவேண்டும். மூன்றாவதாக இதைக் கவனிக்கவேண்டும். ஆனால் இடையிடையே அதற்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.





திரு. செழியன் அவர்கள் சொன்னார்கள், எனக்குச் சாதகமாகச் சொன்னார்கள். விதிமுறைகளில் அப்படி பரிசோதனை செய்ய வேண்டும் என்று இருக்கிறது. சிறுவாணி தண்ணீர் பற்றிக்கூடச் சொன்னார்கள். அதை நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கலாம். நல்ல தண்ணீர் கொடுப்பதற்கு முயல்கிறோம்.

சில விதிமுறைகளைக் கூட தளர்த்தியிருக்கிறோம். அதைப் பற்றி நான் பிறகு சொல்கிறேன்.

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில், நான் பொறுப்பேற்ற போதே முதல் அமைச்சர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். 500 மக்கள் தொகை இருந்தாலும் அதுவும் கிராமமே, அவர்களுக்கும் சாலை வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். எனவே எவ்வளவு கிராமங்கள் இருக்கின்றன என்று கணக்கு எடுங்கள் என்று சொன்னார்கள்.

நான் தலைமைப்பொறியாளரிடம் சொல்லி கிராமங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று கேட்டேன். தமிழ் நாட்டில் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போட ஏறத்தாழ 11,000 கிலோ மீட்டர் தேவைப்படுகிறது. அதை எவ்வளவு ஆண்டுகளில் போடலாம் எப்படிப் போடலாம் என்பதுபற்றி ஒரு திட்டம் தயாரித்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் எவ்வளவு சாலைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கு எடுத்து ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்துவிட்டேன். பிறகு திட்டத்தை அனுப்பும்போது இந்த ஆண்டு சேர்க்கப் படவில்லை.

மத்திய அரசு கொடுத்த திட்டமும் அவர்கள் உறுதியளித்த பணமும் வந்து சேரவில்லை. ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு கோடியாவது அதிகம் கொடுங்கள் என்று கேட்டு இந்த ஆண்டு பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு ஒரு கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது.

ஆயிரம் முதல் 1,500 வரையில் மக்கள் தொகை கொண்டவற்றிற்கு இணைப்புச் சாலைகள் போடவேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச்சாலைகள் போடவேண்டும், பெரிய பெரிய சாலைகளுக்கு மேலும் மேலும் தார் போட்டுக்கொண்டிருப்பதை விட, அனத சற்று ஒதுக்கிவிட்டு, கிராமச் சாலைகள், இணைப்புச் சாலைகள் போடவேண்டும் என்று சொன்னார்கள்.

இந்த ஆண்டு ஆயிரம் மைல் பெருவழித்துறையினர் எடுத்து அதில் ஒன்றியச் சாலைகளையும் எடுத்துக்கொண்டு—பஸ் ரூட் சாலைகளை எடுத்துக்கொண்டு—சாலைகள் போட்டும் பராமரிக்கப்படமுடியாமல் இருக்கிற கிராம பஞ்சாயத்து சாலைகளுக்கு அதற்கு ஓரளவு தொகை ஒதுக்கவேண்டுமென்று அதுவும் இன்று ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. சாலை அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

திரு. முனுசாமி அவர்கள் தன் தொகுதி பற்றி மட்டும் சொன்னார்கள். அவர்களது தொகுதியில் பல வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் இதர சாலைகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து 856 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு நான்காவது திட்டத்தில் இதற்காக ஒதுக்கியது 190 லட்சம். ஐந்தாவது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு, புது வேலைகளுக்கு, நிதி ஒதுக்கீடு இதுவரையில் ஒன்று இல்லை. எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் முடிக்கப்படவில்லை. எடுத்த வேலைகளை முதலில் முடித்து விட்டு பிறகு புது வேலைகளைத் துவங்குவது நல்லது.

திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். இப்போது ரூரல் மான்பவர் ஸ்கீம் 72 ஒன்றியங்களில் செயல்பட்டுவருகிறது. 1961–62-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு வட்டத்திலும் ஐந்து ஆண்டுகள் வேலை நடைபெறும். பிறகு புதுத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே அவர்கள் சொன்னதை எல்லாம் விட்டு விடுவதாக இல்லை.

திரு. கிட்டப்பா அவர்கள் பெருந்தலைவர்கள் மட்டுமல்ல, நகராட்சித் தலைவர்கள் தேர்தல் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படுகிற நேரத்தில் அது அறிவிக்கப் படும்.

அடுத்து, இந்த விவாதத்தைத் துவக்கும்போது கட்சி மாச்சரியம் அற்ற முறையில் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் துவக்கத்தில் கட்சி எந்தெந்த வகைகளில் தலையீடு செய்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களும் சேர்ந்திருந்த காலத்தில் விருதுநகர் ஒன்றியத்தைச் சார்ந்தவர்களால் குறைபாடுகள் சொல்லப்பட்டன. எதிர்கட்சியில் இருந்தவர்கள்



நீங்கள் இதைக் கேட்கக்கூடாதா என்று கேட்டு நாங்களும் அவர்களிடம் கேட்டோம். இருப்பதை வைத்துத்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னார்கள். நான் ஆளும் கட்சியைச் சார்ந்தவன், மாயூரம் நகரசபையில் எனக்கு மரியாதை இல்லை என்று சொன்னார்கள். தேர்தல் பற்றியும் சொல்லப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள். ஊராட்சி, நகராட்சிகளில் அரசியல் கூடாது என்று. அரசியல் என்றில்லாமல் கட்சி சார்பற்ற முறையில் போட்டியிடலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். அப்போது அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் எல்லோரும் கலந்து பேசி முடிவு செய்யலாம் என்று சொல்லி பிறகு முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிராமத் எல்லோரும் சேர்ந்து ஜெனரல் பாடி போட்டு வேலைகளைச் செய்யலாம். அப்படியில்லாவிட்டால் தலைவர்களை திருப்பி எடுத்துக் கொள்ள அதிகாரம் வேண்டும் என்றும் கருத்து சொல்லப்பட்டது. அதைத்தான் சிலர் இன்று கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட திருப்பி எடுத்துக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட திருப்பி அழைப்பது என்றால் ஜனநாயகம் எப்படி போய் முடியுமோ. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் இவர்களை எடுத்துக்கொண்டால் ஒரு ஊரில் ஓட்டு போடாவிடில் இன்னொரு ஊரில் ஓட்டுபோட்டு வெற்றிபெற்று விடலாம். ஆனால் இவர்கள் பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தல்களில் கூட தோற்றுப் போயிருக்கிறார்கள். இது பலருக்குத் தெரியும். கிராம மக்கள் அங்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக என்ன செய்கிறார்கள், என்னென்ன நடக்கின்றன என்பதை கிராமங்களில் மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர் மணலி அவர்கள்கூடச் சொன்னார்கள். லஞ்சம் பஞ்சாயத்துகளில் இருந்து தொடங்குகிறது என்று. இப்போது லஞ்சம், லஞ்சம் என்று சொல்வது பாஷனாகிவிட்டது என்று கருதுகிறேன். அவரவர்கள் தகுதிக்குத் தகுந்தபடி அவரவர்கள் லஞ்சம் பற்றி இன்றையதினம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டு ஆயிரம் மைல் பெருவழித்துறையினர் எடுத்து அதில் ஒன்றியச் சாலைகளையும் எடுத்துக்கொண்டு—பஸ் ரூட் சாலைகளை எடுத்துக்கொண்டு—சாலைகள் போட்டும் பராமரிக்கப்படமுடியாமல் இருக்கிற கிராம பஞ்சாயத்து சாலைகளுக்கு அதற்கு ஓரளவு தொகை ஒதுக்கவேண்டுமென்று அதுவும் இன்று ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. சாலை அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

திரு. முனுசாமி அவர்கள் தன் தொகுதி பற்றி மட்டும் சொன்னார் கள். அவர்களது தொகுதியில் பல வேலைகள் செய்யப்பட்டிருக் கின்றன. இந்தத் திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் இதர சாலைகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து 856 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு நான்காவது திட்டத்தில் இதற்காக ஒதுக்கியது 190 லட்சம். ஐந்தாவது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு, புது வேலைகளுக்கு, நிதி ஒதுக்கீடு இதுவரையில் ஒன்று இல்லை. எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் முடிக்கப்படவில்லை. எடுத்த வேலைகளை முதலில் முடித்து விட்டு பிறகு புது வேலைகளைத் துவங்குவது நல்லது.

திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். இப்போது ரூரல் மான்பவர் ஸ்கீம் 72 ஒன்றியங்களில் செயல்பட்டுவருகிறது. 1961–62-ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு வட்டத்திலும் ஐந்து ஆண்டுகள் வேலை நடைபெறும். பிறகு புதுத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே அவர்கள் சொன்னதை எல்லாம் விட்டு விடுவதாக இல்லை.

திரு. கிட்டப்பா அவர்கள் பெருந்தலைவர்கள் மட்டுமல்ல, நகராட்சித் தலைவர்கள் தேர்தல் கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படுகிற நேரத்தில் அது அறிவிக்கப் படும்.

அடுத்து, இந்த விவாதத்தைத் துவக்கும்போது கட்சி மாச்சரியம் அற்ற முறையில் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் துவக்கத்தில் கட்சி எந்தெந்த வகை களில் தலையீடு செய்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களும் சேர்ந்திருந்த காலத்தில் விருதுநகர் ஒன்றியத்தைச் சார்ந்தவர்களால் குறைபாடுகள் சொல்லப்பட்டன. எதிர்கட்சியில் இருந்தவர்கள்

 



நீங்கள் இதைக் கேட்கக்கூடாதா என்று கேட்டு நாங்களும் அவர் களிடம் கேட்டோம். இருப்பதை வைத்துத்தான் செய்யவேண்டு மென்று சொன்னார்கள்.

திரு. கிட்டப்பா அவர்கள் சொன்னார்கள். நான் ஆளும் கட்சியைச் சார்ந்தவன், மாயூரம் நகரசபையில் எனக்கு மரியாதை இல்லை என்று சொன்னார்கள். தேர்தல் பற்றியும் சொல்லப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே சொன்னார்கள். ஊராட்சி, நகராட்சிகளில் அரசியல் கூடாது என்று. அரசியல் என்றில்லாமல் கட்சி சார்பற்ற முறையில் போட்டியிடலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். அப்போது அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் எல்லோரும் கலந்து பேசி முடிவு செய்யலாம் என்று சொல்லி பிறகு முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிராமத் எல்லோரும் சேர்ந்து ஜெனரல் பாடி போட்டு வேலைகளைச் செய்யலாம். அப்படியில்லாவிட்டால் தலைவர்களை திருப்பி எடுத்துக் கொள்ள அதிகாரம் வேண்டும் என்றும் கருத்து சொல்லப்பட்டது. அதைத்தான் சிலர் இன்று கூறுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் களைக்கூட திருப்பி எடுத்துக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட திருப்பி அழைப்பது என்றால் ஜனநாயகம் எப்படி போய் முடியுமோ. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர் கள் இவர்களை எடுத்துக்கொண்டால் ஒரு ஊரில் ஓட்டு போடாவிடில் இன்னொரு ஊரில் ஓட்டுபோட்டு வெற்றிபெற்று விடலாம். ஆனால் இவர்கள் பஞ்சாயத்து உறுப்பினர் தேர்தல்களில் கூட தோற்றுப் போயிருக்கிறார்கள். இது பலருக்குத் தெரியும். கிராம மக்கள் அங்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக என்ன செய்கிறார்கள், என்னென்ன நடக்கின்றன என்பதை கிராமங்களில் மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர் மணலி அவர்கள்கூடச் சொன்னார்கள். லஞ்சம் பஞ்சாயத்துகளில் இருந்து தொடங்குகிறது என்று. இப்போது லஞ்சம், லஞ்சம் என்று சொல்வது பாஷனாகிவிட்டது என்று கருது கிறேன். அவரவர்கள் தகுதிக்குத் தகுந்தபடி அவரவர்கள் லஞ்சம் பற்றி இன்றையதினம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

பஞ்சாயத்து மெம்பரைப் பார்த்து வோட்டு போட்ட மக்கள் லஞ்சம் வாங்குகிறன் என்று சொல்கிறார்கள். அவர்கள் தலைவரைப் பார்த்து லஞ்சம் வாங்குகிறார் என்று சொல்கிறார்கள். இப்படி படிப்படியாகப் போய் தலைமை அமைச்சர் வரை இது போய்க் கொண்டிருக்கிறது.

ஆகவே, இதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியல் இல்லை என்று கருதுகிறேன். அது ஒரு பாஷனகப் போய் விட்டது.

ஒன்றியங்களில் நடைபெறுகிற சச்சரவுகள் பற்றிச் சொன்னார்கள். அவை நிச்சயமாக தீர்த்து வைக்கப்படும். அதற்கு எத்தகைய ஏற்பாடுகள் சட்டதிட்டங்கள் செய்யலாம் என்பதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

பல கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்து சொல்லியிருக்கிறார்கள். நேரமாகிவிட்டதால் தனித்தனியாக பதில் சொல்ல எனக்கு நேரமில்லை. அவர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் நினைவில் கொள்ளப்படும். அவற்றை எல்லாம் ஆராய்ந்து முடிந்ததை நிறை வேற்றலாம்.

(பிற்பகல் 1-30)

நம்முடைய உறுப்பினர்கள் தற்போது ஊராட்சிகளில் தெரு விளக்குகளுக்கு மீட்டர் ஏதும் பொருத்தப்படாது மின்சார வசதி அளிக்கப்படுகின்றது. ஆகவே, தெருவிளக்குகள் எரிவதைவிட அதிகமாகக் கட்டணம் வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். அதனைப் பரிசீலித்து, ஊராட்சி தெருவிளக்குகளுக்கு ஒரு வருடத் திற்குள் மீட்டர் பொருத்தி கிராமங்களின் தேவைக்கும், நிதிநிலைக்கும் ஏற்ப குறைந்த கட்டணத்தில் மின்சக்தி வழங்க முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

வழக்கம்போல், மின் கம்பங்களையும், மின் சாதனங்களையும் மின் வாரியமே நிறுவி வரும். ஊராட்சி ஒன்றியம் குமிழ்களை வாங்கி வைத்துக்கொள்ளவும், குமிழ்களை மாற்ற தேவை ஏற்படும்போது அவைகளை ஒன்றியம் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு வழங்கவும் ஆகிய பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியத்துடன் ஒப்படைக்க, கொள்கை யளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கு மீட்டர் பொருத்திக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அதைப்போலவே, நகராட்சியிலிருந்து பணியாற்றி ஓய்வு பெற்ற வர்கள்—14—1—1970க்கு முன் ஓய்வு பெற்ற நகராட்சி பணியாளர் அனைவருக்கும் தற்காலிக ஓய்வூதியத்தை 10 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதென அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்று மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் தலைமை எழுத்தர் 1, இளநிலை உதவியாளர்கள் 6, தட்டச்சர் 1, காசாளர் 1, ஆகியோர் இதுவரை பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களாக பணியாற்றி வந்தனர். அவர்கள் 1—4—74 முதல் அரசுப் பணியாளர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், ஒன்றியத்தில் பணியாற்றுகிற எல்லா கட்டத்திலுள்ள பணியாளர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுகிற எல்லா விதமான சலுகைகள், பென்ஷன், கிராசுடி போன்ற சலுகைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம சேவக் நிலை பற்றிச் சொன்னார்கள். 877 பேர் இளநிலையில் இருக்கிறார்கள். அவர்களை முதல் நிலைக்குக் கொண்டுவருவதற்காக ஏற்கனவே ஒரு விகிதாச்சாரம் வைத்து ஐந்தாண்டுக் காலத்தில் முதல் நிலைக்கு உயர்த்துவது என்று முடிவெடுத்தது. ஆனால் நம்முடைய முதல்வர் ஆணைப்படி இப்போது அந்த 877 இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களில் 1974–75-ம் ஆண்டில் 450 பேரையும் அடுத்த நிதி ஆண்டில் மீதியுள்ள 377 பேரையும் முதல் நிலைக்கு உயர்த்துவது என அரசு முடிவெடுத்து இருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் உபரித் தொகையிலிருந்து—மாண்புமிகு செழியன் குறிப்பிட்டதுபோல்—சில வேலைகளுக்கு சிலரிடத்தில் காத்துக்கிடக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, அவை களுக்குள்ள உபரி நிதியை கொஞ்சம் ஒதுக்கி வைத்து, குடி தண்ணீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூடம் போன்ற பணிகளுக்கு—டி.ஆர்.டி.க்கு வரவேண்டியதில்லை—கலெக்டரே சாங்ஷன் செய்வதற்கு, கலெக் டருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு உள்ள பயணப்படி பற்றிச் சொன்னார்கள். தற்போது ரூ. 100 பயணப்படியாக அவர்களுக்குத் தரப்படுகிறது, அது போதவில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள்.

1—4—74 முதல் எல்லா ஒன்றியத் தலைவர்களுக்கும் ரூ. 100-க்கு பதிலாக ரூ. 200 வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களான ஊராட்சித் தலைவர்களுக்கும் மற்ற ஒன்றிய உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்படும் பிரயாணப்படி போக மேற்கொண்டு ஒன்றிய கூட்டங்களுக்கான வருகைப்படி "சிட்டிங் பீஸ்" ஒரு நாளைய கூட்டத்திற்கு ரூ. 5 வீதம் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. (குறுக்கீடு) அவர்களுக்கு போக்குவரத்து டி.ஏ. வந்தாலும், சிட்டிங் பீசாக ரூ. 5 வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல பல்வேறு கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து விரைவில் நடவடிக்கை எடுத்து அந்தந்தக் காரியங்கள் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பாசி குத்தகை ஊராட்சிக்குத் தேவை என்று சொன்னார்கள். கூட்டுறவுக்குக் கொடுத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். குட்டை குளங்களில் மீன் குத்தகை ஏலம் விடும் அதிகாரம் பஞ்சாயத்துக்கு வழங்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்திருப்பது தெரிகிறது. மாநகராட்சி, நகராட்சி தேர்தல் என்ன ஆயிற்று என்று கேட்பார்கள் என்று தெரியும். அவருக்கும், நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா நகராட்சிகளுக்கும், மதுரை மாநகராட்சி உள்பட—சென்னை மாநகராட்சி நீங்கலாக—ஜூலை இறுதி வாரத்தில் தேர்தல் நடைபெறும். அது வரை நகராட்சி உறுப்பினர்கள் பதவியில் இருப்பவர்கள் பதவி காலம் நீட்டிக்கப்படும். அதற்கான மசோதா இந்த அவையில் விரைவில் கொண்டு வரப்படும். ஜூலை இறுதி வாரத்தில் 28, 29, 30, 31 தேதிகளில் இருக்கலாம். நிச்சயமாக நடைபெறும். யாரும் சந்தேகப்படவேண்டாம். தேர்தல் நிச்சயம் நடைபெறும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கார்ப்பரேஷன் நீங்கலாக என்று சொன்னார்கள். கார்ப்பரேஷன் நிலைமை என்ன? சட்டத்தில் சொல்லியிருப்பது என்னவென்றால் 6 மாதம், அதற்குள் வழக்கு முடிய வில்லை என்றால் இன்னொரு 6 மாதம்? எப்போது வழக்கை முடிட்





பார்கள், எப்போது அதற்குத் தேர்தல் நடத்தப்போகிறீர்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. அதற்கும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : எதற்கெடுத்தாலும் சந்தேகப்படக்கூடாது. சந்தேகமே வேண்டாம். தேர்தல் நடக்கும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விளக்கங்களுக்குப் பிறகு தங்களுடைய வெட்டுப் பிரேரேரணைகளை வற்புறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, வற்புறுத்தமாட்டார்கள் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்று கருதி, அவர்கள் தந்த நல்ல கருத்துக் களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் பதிலில் நான் ஒரு விளக்கம் எதிர்பார்த்தேன். நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் சூரமங்கலம் நகர பஞ்சாயத்து பற்றி குறிப்பிட்டு இருக் கிறேன். அங்கே பஞ்சாயத்து தலைவர் உண்ணாவிரதம் இருக்கிறார். அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதைச் சுருக்கமாகச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது சம்பந்தமாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த சூரமங்கலம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கிற நேரத்தில் அங்கே சேலம் இரும்பாலை சேர்ந்த ஒரு பகுதியையும் சேர்த்து, டவுன்ஷிப்பாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை சேர்த்தோ, சேர்க்காமலோ தனியாகவோ நகராட்சியாக்க அரசு முடிவெடுத்து இருப்பதால், அந்த முடிவை அறிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஹாண்டே அவர்கள் சொன்ன மாதிரி அங்கே இருக்கிற ஆணையர் அங்கிருந்து உடனடியாக மாற்றப்பட்டு, அவர் பேரில் உள்ள குற்றச்சாட்டுகளை இப்போது நாம் விசாரித்து வருகிறோம். நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது. நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று கூறி, இதை வலியுறுத்திப் பேசவேண்டாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் பதில்சொல்கிற போது மீன் குத்தகை பற்றிச் சொன்னார்கள். இப்போது விதிமுறை களில் பஞ்சாயத்துக்கு சேராது, கூட்டுறவுகளுக்கு கொடுக்கவேண்டு

மென்று இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதை மாற்றியிருப்பதாகச் சொன்னார்கள். அதே நேரத்தில் பஞ்சாயத்து எல்லையில் இருக்கும் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான குளம், ஆறுகளில் மீன் பிடிக்கும் உரிமை பஞ்சாயத்துகளுக்குத் தருவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது சிறிய குட்டை, குளங்களைத்தான் சேரும். கூட்டுறவுத் துறைகளுக்குக் கொடுத்து விடுவதால் பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் போதவில்லை, எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அதனால் தான் பஞ்சாயத்துகளுக்கு ஏலம் விடும் அதிகாரத்தைக் கொடுக்கிறோம். கூட்டுறவுத்துறையும் வேண்டுமானால் அதில் கலந்துகொண்டு அவர்கள் கேட்கலாம். குத்தகைத் தொகை யார் அதிகமாக கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அதைக் கொடுக்கவேண்டும். பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஆறு, குளங்கள் இதிலே சேரவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இப்பொழுது டவுன் பஞ்சாயத்து ஈட்டு மான்யத்தைப்பற்றி கேட்டிருந்தோம். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்று கேட்டுக்கொள்வதோடு, ஒன்றியத் தலைவர்களுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 200-ஆக ஆக்கப்படும் என்றும், அதே போல முனிசிபாலிடித் தலைவர்களுக்கும் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் டவுன் பஞ்சாயத்து தலைவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்கள் விஷயத்திலும் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை கவனிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, பேரூராட்சி மன்றங்களின் நிதி நிலையைப்பற்றி ஆராய்வதற்கு என்று அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்னும் வராத காரணத்தினால் இப்பொழுது சொல்லவில்லை. நிச்சயம் நிதி நிலைமை பரிசீலிக்கப் பட்டு பிறகு அறிவிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வில்லிவாக்கம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. அது பற்றி கூட வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாக அரசின் முடிவு என்ன?

அதே மாதிரி ஆவடியில் லட்சத்திற்கு அதிகமான ஜனத்தொகை இருப்பதினால் அதை டவுன்ஷிப்பாக அல்லது முனிசிபாலிடியாக ஆக்குவது பற்றி என்ன முடிவு என்பதையும் அறிவிப்பார்களா?



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வில்லிவாக்கம் பிரச்னையைப்பற்றி வில்லிவாக்கத்தை நகராட்சியாக ஆக்கவேண்டும் என்று ஒரு தீர்மானமும், அதற்குப் பிறகு அதை மாநகராட்சியோடு இணைக்கவேண்டும் என்று ஒரு தீர்மானமும், ஆக இரண்டு தீர்மானங்களும் வந்திருக்கின்றன. அதைப் பரிசிலனை செய்து எதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். ஆகவே, அதைப் பற்றி இப்பொழுது முடிவு எடுக்கவில்லை.

ஆவடி டவுன் ஷிப்பாகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் ஆ. கு. சுப்பையா, என். மருதாசலம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டவையாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. எ. வகாப், பி. வெங்கடசாமி, கே. எஸ். கோதண்டராமையா, ஏ. சுப்பிரமணியம், கே. பி. கோபால், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,83,71,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

222. Notification issued with G. O. R. No. 2250, Revenue, dated the 15th December 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Andhra Bharathi Harijana Sangam, Madras, on 30th December 1973 at Star Talkies Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

223. Notification issued with G. O. Rt. No. 385, Revenue, dated the 12th March 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the film shows organised by the Principal, Bishop Corrie High School, Madras, on 2nd March 1974 and 20th April 1974 at Crown Talkies, Madras to raise funds for the school building. (Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

224. Notification issued with G.O. R. No. 113, Revenue, dated the 28th January 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Alumni Association of Indian Institute of Techonology, Madras, on 24th January 1974 to raise funds for the Association. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

225. Notification issued with Memo. No. 7683, Housing/FI/73-11, dated the 20th February 1974, in regard to amendment to the Tamil Nadu Slum Clearence Board Non-technical Subordinate Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearence) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

226. Notification issued with G. O. Ms. No. 2394, Agriculture, dated the 11th December 1973, in regard to declaration of notified market area for Kurinjipadi market in respect of groundnut, gingelly, cotton, paddy, etc. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



### B. *Reports, Notifications and Other Papers.*

% 154. Policy Note on Demand No. 28. Community Development and Panchayat Development 1974-75 (English and Tamil).

% 155. Financial Supplement to Demand under Community Development 1974-75 (English and Tamil).

% 156. The Constitution (Thirty-Third Amendment) Bill, 1973—As introduced in Lok Sabaha.

% 157. The Constitution (Thirty-Third Amendment) Bill, 1973—As passed in Lok Sabha.

% 158. The Constitution (Thirty-Second Amendment) Bill, 1973—As passed by the Houses of Parliament.

% 159. Corrigenda to the Constitution (Thirty-Second Amendment Bill, 1973—As Introduced in the Lok Sabha.)

% 160. Lok Sabha Debate on the Constitution (Thirty-Third Amendment) Bill, 1973.

% 161. Rajaya Sabha Debate on the Contitution (Thirty-Second Amendment) Bill, 1973.

@ 162. Speech of Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Reveneue on Demand No.—1 Land Revenue Department, Demand No. 2 State Excise Department, Demand No. 4 General Sales Tax and Other Taxes and Duties Administration and Demand No. 5, Stamp Administration, (English and Tamil).

@ 163. Procedure to be followed at check-posts.

---

% Despatched to Members on 1st April 1974.
@ Laid on the table of the House on 1st April 1974.

## இணைப்பு 1

(15-ம் பக்கத்தில் 731 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) & (இ) : முதற்கண் மினி சூப்பர் மார்க்கெட்டிற்கு ஏழு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. பின்பு பொது மக்களின் முறையீட்டின் காரணமாக மூன்று தனி நபர்கள் ஐந்து வார்டுகளுக்கு நியமிக்கப்பட்டனர். ஆனால், மினி சூப்பர் மார்க்கெட் அதிகாரிகள் முறையீட்டின் பேரில், இந்த மூன்று தனி நபர்களின் நியமன உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டது.

இப்பொழுது மேற்கண்ட ஏழு வார்டுகளில் மினி சூப்பர் மார்க்கெட் மூன்று வார்டுகளிலும், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தினாலும் நிர்வாகம் செய்யப்படும் கடை மற்ற நான்கு வார்டுகளிலும் விநியோகம் செய்துவருகின்றன.

லாயல் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு இரண்டு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. நெருக்கடிபற்றி பொதுமக்கள் முறையிட்டனர். ஆனால், இப்பண்டகசாலை வேறு ஒரு கடை திறக்க இயலாதெனக் கூறியதை அடுத்து ஒரு வார்டுக்கு திரு. செல்வராஜ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

லட்சுமி மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு நான்கு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. இதில் 18 ஆம் எண் தெரு மக்கள், ஆலைத் தொழிலாளர்களுக்கு மட்டும் விநியோக முறையில் சலுகை காட்டுவதாகக் கூறி வந்த முறையீட்டின் பேரில் பொதுமக்களுக்கு மட்டும் விநியோகிக்க திரு. கொம்பைய்யா என்பவருக்கு உரிமை வழங்கப்பட்டது.

அண்மையில், ஏற்கனவே இயங்கிவரும் கூட்டுறவுக் கடைகளின் செயல் திறனை விரிவாக்கவும், புதிய கூட்டுறவுக் கடைகளை லெவி சர்க்கரை விநியோகப் பொறுப்பில் ஈடுபடுத்தவும் வேண்டுமென அரசு பிறப்பித்த ஆணையையடுத்து, கோவில்பட்டி நகரில் மேற்குறிப்பிட்ட தனிப்பட்ட வியாபாரிகளையும் நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமர்த்தப்பட்டுள்ளன. ஆக தற்போது கோவில்பட்டி நகரில் லெவி சர்க்கரை விநியோகப் பணி முழுவதும் உணவுப் பொருள் வழங்கல் கழகமும், கூட்டுறவுப் பண்டகசாலைகளும் மட்டும் செய்து வருகின்றன.





## இணைப்பு 2

(23-ம் பக்கத்தில் 736 ஆம் இண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) & (இ) : ஆம். இத்திட்டத்தின்கீழ் சென்னையிலுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் எட்டு மண்டலங்களாகவும், வெளியூரிலுள்ள குடியிருப்புகள் பல பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட இடங்களுக்கு வீட்டு வசதி வாரியம், மாநகராட்சி, மின்துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை ஆகியவற்றின் அலுவலர்கள் வருகை தருவார்கள். அந்தந்தப் பகுதி மக்களுக்கும், மக்கள் சங்கங்களுக்கும், சட்டமன்றப் பேரவை, மேலவை, பாராளுமன்றம், நகராட்சி, மாநகராட்சி உறுப்பினர்களுக்கும் தகவல் கொடுக்கப்படும். அந்தந்தப் பகுதி மக்களின் தனிப்பட்டோர் பிரச்சனைகளையும், பொதுப் பிரச்சனைகளைப் பற்றியும் கேட்டறிந்து அங்கேயே முடிவு எடுக்கக் கூடியவைகளை உடனே நிறைவேற்றி வைக்கப்படும். மேற்கொண்டு பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியவைகளைப்பற்றி அந்த கூட்டத்திற்கு வந்திருக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் குறிப்பெடுத்து ஆவன செய்து, அடுத்து வரும் கூட்டங்களின்போது விவரங்களைத் தெரிவிப்பார்கள்.

(a) & (b) . Yes. According to this programme, the Housing Board colonies in Madras City have been divided into 8 zones, and the mofussil centres have been divided into several units. The officials of the Tamil Nadu Housing Board, Corporation of Madras, Electricity Department, Transport department and the Police department will visits each month the specified centres on the specified days. Information is given to the residents of each area as well as to the Associations of the residents in each area and to M.L.As., M.L.Cs., M.Ps. and Municipal or Corporation Councilors of each area. Representations of the residents relating to their individual problems as well as public problems are heard in these Mass Contact Programme meetings. Wherever, it is possible to take on the spot decisions, they are taken. If the problems require further examination by the other departments like the Corporation or Transport or Electricity Department, the concerned departmental officials who attend these meetings will take note of the representations and pursue further follow-up action so that the decision could be announced in the subsequent meetings.

தமிழ் நாடு சட்டப் பேரவை

---

வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 4.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### நடமாடும் நூல்நிலையங்கள்

* 742 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நடமாடும் நூலகங்கள் தற்போது எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடமாடும் நூலகங்கள் இயங்கி வருகின்றன.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நடமாடும் நூல் நிலையங்கள் பெரிதும் பெண்களுக்குப் பயன்படுகிற காரணத்தால், அதைத் தீவிரப்படுத்துவதற்கான திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவினர், அவரவர்களுடைய நிதி வசதிக் கேற்ப, இந்த நடமாடும் நூலகங்களை இயக்கி வருகிறார்கள். நிதி வசதி சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூரில்தான் ஓரளவு இருந்ததன் காரண மாக அவர்கள் அதைச் செய்து தந்திருக்கிறார்கள். வேறு எந்த மாவட்டத்தையும்விட கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் ஐந்து வாகனங்கள் பயன்பட்டு வருகின்றன.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, நடமாடும் நூலகங்கள் என்ற பெயரில் மோட்டார் வாகனங்களின் மூலம் பெரிய நகரங்களில் எல்லோருக்கும் நூல்கள் விநியோகம் செய்கிறார்கள். சிறிய நகரங்களிலும் பெரிய பஞ்சாயத்துக்களிலும் சைக்கிள் போன்ற வாகனங்களை வைத்து அங்கிருக்கின்ற மக்களுக்கும் நூல்களைத் தர ஏற்பாடு செய்யப்படுமா ?

[1974 ஏப்ரல் 4

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Various kinds of libraries are available in cities. A number of facilities are there. But in rural areas and in taluk headquarters there is only small libraries of the Local Library Authority. Mobile libraries are necessary only in these rural areas. So, will the Hon. Minister give his attention to this problem and see that mobile libraries are arranged in village areas?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்டத்திலிருக்கும் கிராமப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நடமாடும் நூல் நிலையங்கள் போகவேண்டும் என்ற கொள்கையும் கருத்தும் அரசுக்கு உண்டு. ஆனால், மாவட்ட நூலக ஆணைக் குழுவினர்தான் இதனைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் நிதி வசதியைப் பொறுத்து இந்த நடமாடும் நூலகங்களை அமைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட ஆணைக் குழுவினுடைய நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம், அதனுடைய நிர்வாகத்தை எப்படியெல்லாம் சீரமைக்கலாம் என்று ஆராய, திரு. சுப்பராயன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்த பிறகு நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம் என்பதுபற்றியும் நடமாடும் நூலகங்கள் எல்லா மாவட்டங்களுக்கும் கிடைக்க எந்த வகையில் செய்யலாம் என்பதுபற்றியும் நாம் ஆராய வேண்டிவரும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில்தான் இந்த நடமாடும் நூலகங்களினுடைய தேவை அதிகமாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் எந்தெந்த மாவட்டங்கள் தங்களுடைய சொந்த நிதியைக்கொண்டு இம்மாதிரி நடமாடும் நூலகங்களை ஏற்படுத்த முடியவில்லையோ அவர்களுக்கு ஓரளவு அரசு மானியமாகவும் கடனாகவும் தொகை கொடுத்து, இம்மாதிரி நடமாடும் நூலகங்களை ஏற்படுத்தும் அளவுக்கு வகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு அவர்கள் செஸ் மூலமாக வரும் தொகைக்குச் சமமான ஈட்டுத் தொகையை அரசாங்கம் கொடுத்து வருகிறது. அதிலிருந்துதான் அவர்கள் பல்வேறு கிளை நூலகங்களைப் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனுடைய நிர்வாகச் செலவுகளை



1974 ஏப்ரல் 4]

அவர்கள் சரிக்கட்டியாக வேண்டும். ஆகவே, எங்கே ஓரளவு நிதி மிச்சப்படு கிறதோ அந்த இடத்தில் நடமாடும் நூலகங்களை அமைப்பதற்கான வாகன வசதி எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. மாவட்ட ஆணைக் குழுவின் நிதி வசதிகளைப் பெருக்குவதில் கருத்து செலுத்த வேண்டியவர்களாக இருக் கிறோம். ஆகவேதான், குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று குறிப்பிட்டேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, தற்போது நடமாடும் நூல கங்களில் எவ்வளவு புத்தகங்கள் வைக்கப்பட்டு கொண்டு போகப்படுகின்றன ? அவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் என்ன ? எந்த எந்த பொருள் குறித்த புத்தகங்கள் அதில் இருக்கின்றன ? நூலகங்கள் சம்பந்தமான அறிக்கை வரும், வரும் என்று பல காலமாக இங்கே சொல்லப்படுகிறது. அந்த அறிக்கை எப்பொழுதுதான் வரும் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சென்னையில் 4,000 நூல்களைக் கொண்ட ஒரு இயங்கும் நூலகம் இயங்கி வருகிறது. திருநெல்வேலியில் 3,000 நூல்களைக் கொண்ட ஒரு இயங்கும் நூலகம் இயங்கி வருகிறது. கோயம்புத்தூரில் 500 நூல்களைக் கொண்ட மூன்று வாகனங்களும், 3,000 நூல்களைக் கொண்ட ஒரு வாகனமும், இரண்டா யிரம் நூல்களைக் கொண்ட ஒரு வாகனமும் இயங்கி வருகின்றன. திரு. சுப்ப ராயன் அவர்கள் தலைமையில் ஒரு குழு நான்கைந்து மாதங்களுக்கு முன்புதான் அமைக்கப்பட்டது. அவர்கள் சென்னை, மதுரை, இன்னும் வேறுபல இடங் களுக்கும் சென்று ஆங்காங்கே விசாரித்து பல்வேறு கருத்துக்களை அறிந்து வந்தார்கள். கிட்டத்தட்ட சனவரி, பிப்ரவரி மாதத்திற்குள் அறிக்கை தரும் படியாகக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், அவர்கள் மேலும் சில விவரங்களை பல இடங்களில் கேட்டு அறிய வேண்டும் என்றும், இன்னும் சென்னையில் நூலகங்களில் ஈடுபாடு உள்ளவர்கள், நூலகங்களில் அக்கறை கொண்டுள்ளவர்கள், நூலகங்களைக் கண்காணித்து வருகிறவர்கள் ஆகியோர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்றும், மே திங்களில் அறிக்கை தந்துவிடுவோம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். மே திங்களுக்குள்ளாக அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

[1974 ஏப்ரல் 4

## கன்னியாகுமரி மாவட்டத்தில் நூலகங்கள்.

*743 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1948-ம் ஆண்டின் பொது நூலகங்கள் சட்டம் அமுலாக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) & (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1948-ம் ஆண்டின் பொது நூலகங்கள் சட்டம் இன்னும் அமுலாக்கப்படவில்லை. பொது நூலகச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராய, ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளை மனதிற்கொண்டு பொது அமைப்பில் மாற்றங்கள் செய்யும்போது, குமரி மாவட்டத்திற்கு சட்டத்தை விரிவாக்குவது பற்றியும் முடிவு செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருசில நூலகங்கள் இருக்கின்றன. ராஜ்யம் பிரிக்கப்படுவதற்கு முன் கொடுத்துவந்த கிராண்ட்தான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான கிராண்டும் கொடுக்கவில்லை. அந்த நூலகங்களையும் இதோடு ஒருங்கிணைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய தன்மையில் வருகின்ற சட்டத்தை அமைக்க அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1948-ம் ஆண்டு இயற்றப்பட்ட பொது நூலகங்கள் சட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் அதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம். நிபுணர் குழுவிற்கும் அந்த யோசனை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. நூலகங்களை எந்த முறையில் மற்ற மாநிலங்களோடு இணைந்த முறையில் கொண்டுவரலாம் என்று ஆலோசிக்கும்படியாகக் கூறியிருக்கிறோம். அதனுடைய அறிக்கை வந்தபிறகு அதுபற்றிய நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த நூலகங்களுக்கு சர்க்கார் தரும் தொகை போதவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, பொது மக்களில் நல்ல கல்வியறிவு படைத்தவர்கள், மக்கள் கல்வி அறிவு பெற



1974 ஏப்ரல் 4]

வேண்டும் என்று விரும்புகிறவர்கள், இதற்கு 'டொனேஷன்' தர சித்தமாக இருக்கிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு நூல்கள் வாங்கிக் கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே செஸ் மூலமாக மூன்று காசு கொடுத்தால் அரசாங்கம் மூன்று காசு தந்து இந்த நிதியை வைத்துக்கொண்டு மாவட்ட நூலக ஆணைக்குழு இயங்கி வந்தது. அண்மையில் நாம் அந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவந்து, ஐந்து காசு செஸ் மூலம் வருவதோடு அரசாங்கம் ஈட்டு மானியமாக ஐந்து காசு தந்து இப்பொழுது பத்து காசு அளவுக்குப் பெற்று வருகிறது. அந்தத் தொகையில் நூல்கள் வாங்குவதற்கென்று ஓரளவு—ஒரு குறிப்பிட்ட சதவீதம்—ஒதுக்கமுடியுமா என்று ஆராயும்படி குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படிக் கிடைக்கின்ற தொகை புதிய புதிய நூலகங்களைத் திறப்பதற்கும், புதிய புதிய நூல்களை வாங்குவதற்கும் செலவழிக்கப்படுவதைவிட அதிகமாக நிர்வாகச் செலவுக்கே போய் விடுகிறது. இதுகுறித்து ஆராய்ந்து, ஒரு குறிப்பிட்ட சதவீதம் நூல்கள் வாங்குவதற்கும், மாகசின்கள் போன்றவை வாங்குவதற்கும் செலவழிக்கப்படவேண்டும், ஒரு குறிப்பிட்ட சதவீதம் நிர்வாகச் செலவுக்குப் போகவேண்டும் என்ற முறையில் வரையறை செய்யும்படியும், அதற்கு எவ்வளவு நிதி இருக்கவேண்டும் என்று ஆராயும்படியும் நிபுணர் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல், தனியார் யாரோவும் நன்கொடை தர முன்வந்தாலும் அல்லது நூல்கள் தர முன்வந்தாலும் அவையெல்லாம் பெரு மகிழ்ச்சியோடு, நன்றியுணர்வோடு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது லைப்ரரி சட்டம் இப்பொழுது நடைமுறையில் இல்லை. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் அங்கு லைப்ரரிகள் செயல்படாததால், லைப்ரரி கிராண்ட் கிடைக்கவில்லை. ஆகவே, லைப்ரரி ஆக்டை அந்தப் பகுதியில் அமுல் நடத்துகிறவரையில், ஸ்பெஷல் கிராண்ட் ஏதாவது அங்கு செயல்படுகிற லைப்ரரிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி இப்பொழுது யோசிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், இந்தப் பிரச்சினை குறித்து நிபுணர் குழுவை ஆராயும்படி சொல்லியிருக்கிறோம். அந்தக் குழுவின் அறிக்கை ஓரிரு மாதங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்தபிறகு அவர்கள் கூறுகிற காரண காரியங்களையொட்டி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

[1974 ஏப்ரல் 4

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட நூலகமானாலும், நடமாடும் நூலகமானாலும், அந்த நூலகங்களில், 80 சதவீதம் காதல் கதைப் புத்தகங்களாகவே இருக்கின்றன. அதையே மக்கள் படித்து பெரும்பாலோர் 'டயர்டு' ஆகிவிடுகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நூலகங்களில் கட்டுரைகள், கவிதைகள், இன்னும் பெரி மேசன் ஆகியோர் வருகிற கற்பனைக் கதைகள் போன்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்களை வாங்கி அந்த நூலகங்களில் வைக்க நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, காதல் உணர்வு என்பது உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து உயிரினங்களுக்கு இருந்து வருகிற இயற்கை இயல்பு. உலகத்திலிருக்கும் 300 சில்லரை கோடி மக்களுக்கும் அந்த உணர்வு உண்டு. எண்பது சத விகிதத்தினர் அதைப் படிக்கிறார்கள் என்றால் அந்த உணர்வு இல்லாதவர்கள் இல்லை என்றுதான் அது தெரிவித்துக் கொண்டிருக்கிறது. நூலகங்களில் எல்லா வகையான புத்தகங்களும் இருக்கின்றன. ஆனால், கூடுமானவரையில் தரம் தாழ்ந்த நூல்களை வைக்கக் கூடாது. காதலை ஒன்றும் தரம் தாழ்ந்ததாகக் கொள்ளமுடியாது. சங்க இலக்கியங்களைப் பார்த்தால் பெரும்பகுதி காதல் இலக்கியமாக இருக்கின்றன. உலகப் புலவர்களுடைய கதைகள் கவிதைகளையெல்லாம் பார்த்தால் அவற்றில் காதல்தான் அதிகமாக இருக்கும். காதல் இருக்க வேண்டும். காமம்தான் அதிகம் வரக் கூடாது. அப்படிப்பட்ட நூல்களெல்லாம் இருக்கக் கூடாது என்கிற தன்மைகளெல்லாம் குறிப்பிடப்படுகின்றன.

ஆனால், தற்போது அறிவியல் சம்பந்தமான நூல்கள், தொழில் சம்பந்தமான நூல்கள், தொழில் நுட்பம் சம்பந்தமான நூல்கள் ஆகியவற்றை அந்தந்தத் தொழில் வட்டாரங்களில் இருக்கும் தொழிலாளர்கள் படித்து, தொழில் அறிவு பெற்றுக்கொள்வதற்கான வகையில் முயற்சிகளை நூலக ஆணைக் குழுவினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த நூலகங்களுக்கு வாங்கப்படுகிற புத்தகங்கள் எந்த முறையில் வாங்கப்படுகின்றன? அது சம்பந்தமாக இன்று பத்திரிகையில் பெரிய ஊழல் நடந்துவிட்டது என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. 4 ரூபாய் விலையுள்ள புத்தகம் 40 ரூபாய் என்றும், ஒரு ரூபாய் புத்தகம் 20 ரூபாய், 30 ரூபாய் என்றும் விலை கொடுத்து வாங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் புத்தகங்களை பிரசுரம் செய்பவர்களிடமிருந்து நேரடியாக வாங்குகிறார்களா அல்லது வேறு முறைகளிலே வாங்கப்படுகிறதா? அதுபற்றிய கண்காணிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 4]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நூல்களைப் பொறுத்த மட்டிலும் அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவினரே வாங்குகிறார்கள். அந்தக் குழுவில் பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 25 அல்லது 30 பேர்கள் இருக்கிறார்கள். நூல்களை வாங்குவதில் தவறுகள் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்; பார்த்துக்கொள்கிறார்கள். நூலக இயக்குநரால் அனுமதிக்கப்பட்ட நூல்களையும் அவர்கள் வாங்குகிறார்கள். அரசு கொடுக்கிற உதவிப் பணத்தைக்கொண்டு இந்த இந்த வகையான நூல்களை வாங்கவேண்டும் என்று சொல்வதா அல்லது அந்தப் பணத்திற்கு புத்தகத்தை அரசாங்கமே வாங்கிக் கொடுத்துவிடலாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து சொல்லும்படி நிபுணர் குழு கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்தபின்னால் அதுபற்றி முடிவு செய்யப்படும்.

வாங்குகின்ற புத்தகங்களில் குறைபாடுகள் இல்லாத அளவுக்கு இருக்கின்றனவா என்பதை மாவட்ட நூலகக் குழுவினர் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்போது வாங்குவதில் சில பல கோளாறுகள் இருக்கின்றன. நூல்களை வெளியிடுகின்றவர்கள் தங்கள் தங்கள் புத்தகங்களை வாங்கும்படி சிபாரிசு செய்கிறார்கள். அந்தப் புத்தகங்களில் புத்தக விலை 5 ரூபாய் என்றால் நூலகத்திற்குக் கொடுப்பதில் 8½ ரூபாய் என்று அச்சிட்டு அந்த விலைக்கு கொடுத்துவிடுகிறார்கள்.

ஆனால் அதே புத்தகம் வெளியில் 5 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளும் இப்போது இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்குகின்ற வகையில் நிபுணர் குழுவின் அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**நூலகங்களின் பணியாளர்கள்.**

***744 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுவில் பணியாற்றி வரும் சிப்பந்திகளுக்கு அரசாங்க அலுவலர்களுக்குள்ள சலுகைகள் முழுவதும் அளிக்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், அகவிலைப்படி, பண்டிகை முன்பணம் முதலியவை நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. பிற சலுகைகள் நிதி நிலை அடிப்படையில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்தோறும் மாற்றத் திற்குரியனவாக உள்ளன.

## *Physical Education.*

* 745 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to set up special cells for the promotion of Physical education in this State; and

(*b*) if so, the details of the same ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, அனைத்து ஆசிரியர் பிரிவினர்களுக்கும் இப்போது செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஆனால் உடற்பயிற்சி ஆசிரி யர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் செலக் ஷன் கிரேடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். செகண்டரி கிரேடு ஆசிரியருக்குத் தகுதி பெற்ற சிறப்பாசிரியர்களும் 10 வருடம் பணியாற்றியிருந்தால் தேர்வு நிலையைப் பெறு வார்கள். அதிலே உடல் பயிற்சி ஆசிரியர்களும் வருவார்கள். ஆணையிலும் அது வரும்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, ஆசனப் பயிற்சி செய்வதால் உடல் வலிவு பெறுவது மட்டுமல்லாமல், சில வியாதிகளும் தீருவதாகச் சொல் கிறார்கள். குறிப்பாக சிரசாசனம் செய்தால் மாணவர்களுக்கு மூளை விருத்தி யடைந்து புத்தி கூர்மையாகும். ஆகவே ஆசனப் பயிற்சிகளை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உடற் பயிற்சிக் கல்லூரிகளில் ஆசனப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை வகுத்து பயிற்சி அளிக்கிறார்கள். அங்கே பயிற்சி பெற்று வருகிறவர்கள் மாணவர்களுக்கு அந்த பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். சிரசாசனப் பயிற்சியும் அதில் இடம்பெறும் என்று கருதுகிறேன். இப்போதே கூட சில பல பள்ளி களிலும் கல்லூரிகளிலும் ஆசனப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



## *Drug Testing Laboratory.*

* 746 Q.—THIRU N. DENNIS:
* 745 Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU P. SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken by the Government to set up a Drug Testing Laboratory in this State; and

(*b*) the details of the financial commitments for this project?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) மருந்துச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக அரசு ரூ. 1 லட்சம் அனுமதி வழங்கி யுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்திற்கு தேவையான கருவிகளை வாங்குவதற் காக மேலும் ரூ. 1 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கட்டிடங்கள், பணியாளர்கள், கருவிகள் ஆகிய வற்றிற்கான கூடுதல் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இது எங்கே கட்டப்படும், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, சென்னையிலே உள்ள நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தினுள் இது கட்டப்பட வேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அளவிலே 'பைல் ஃபௌண் டேஷன்' போடவேண்டுமென்றும், ஒரு தளம் கட்ட 5 லட்சம் ரூபாய் தேவை என்றும் கூறப்பட்டதால் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## *Maternity Centres.*

* 747 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether 'Ayahs' have been appointed in Maternity Centres and Sub Centres?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 2,348 ஆயாக்கள் தாய்சேய் நல மற்றும் துணை விடுதிகளில் பணி செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. என். டென்னிஸ் :** இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே இருக் கின்ற சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்படவில்லை. எல்லா சப்-சென்டர் களிலும் ஆயாக்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், அகவிலைப்படி, பண்டிகை முன்பணம் முதலியவை நூலக ஆணைக் குழு ஊழியர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. பிற சலுகைகள் நிதி நிலை அடிப்படையில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்தோறும் மாற்றத்திற்குரியனவாக உள்ளன.

*Physical Education.*

* 745 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to set up special cells for the promotion of Physical education in this State; and

(b) if so, the details of the same ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, அனைத்து ஆசிரியர் பிரிவினர்களுக்கும் இப்போது செலக்‌ஷன் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஆனால் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் செலக்‌ஷன் கிரேடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். செகண்டரி கிரேடு ஆசிரியருக்குத் தகுதி பெற்ற சிறப்பாசிரியர்களும் 10 வருடம் பணியாற்றியிருந்தால் தேர்வு நிலையைப் பெறுவார்கள். அதிலே உடல் பயிற்சி ஆசிரியர்களும் வருவார்கள். ஆணையிலும் அது வரும்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, ஆசனப் பயிற்சி செய்வதால் உடல் வலிவு பெறுவது மட்டுமல்லாமல், சில வியாதிகளும் தீருவதாகச் சொல்கிறார்கள். குறிப்பாக சிரசாசனம் செய்தால் மாணவர்களுக்கு மூளை விருத்தியடைந்து புத்தி கூர்மையாகும். ஆகவே ஆசனப் பயிற்சிகளை கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உடற்பயிற்சிக் கல்லூரிகளில் ஆசனப் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை வகுத்து பயிற்சி அளிக்கிறார்கள். அங்கே பயிற்சி பெற்று வருகிறவர்கள் மாணவர்களுக்கு அந்த பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். சிரசாசனப் பயிற்சியும் அதில் இடம்பெறும் என்று கருதுகிறேன். இப்போதே கூட சில பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசனப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



*Drug Testing Laboratory.*

* 746 Q.—THIRU N. DENNIS :
* 745 Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the steps taken by the Government to set up a Drug Testing Laboratory in this State; and

(b) the details of the financial commitments for this project?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) மருந்துச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக அரசு ரூ. 1 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்திற்கு தேவையான கருவிகளை வாங்குவதற்காக மேலும் ரூ. 1 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கட்டிடங்கள், பணியாளர்கள், கருவிகள் ஆகியவற்றிற்கான கூடுதல் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இது எங்கே கட்டப்படும், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, சென்னையிலே உள்ள நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தினுள் இது கட்டப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அளவிலே 'பைல் ஃபௌண்டேஷன்' போடவேண்டுமென்றும், ஒரு தளம் கட்ட 5 லட்சம் ரூபாய் தேவை என்றும் கூறப்பட்டதால் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

*Maternity Centres.*

* 747 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether 'Ayahs' have been appointed in Maternity Centres and Sub Centres?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 2,348 ஆயாக்கள் தாய்சேய் நல மற்றும் துணை விடுதிகளில் பணி செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. என். டென்னிஸ் :** இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்ற சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்படவில்லை. எல்லா சப்-சென்டர்களிலும் ஆயாக்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஒன்றியம் என்பதும் ஒரு பொறுப்புள்ள சமூக அமைப்புதான். தமிழகத்தில் மொத்தம் 2,603 துணை விடுதிகள் இருக்கின்றன. அதில் 2,348 துணை விடுதிகளில் ஆயாக்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மிச்சமுள்ள இடங்களிலும் அந்தத் தாய்மார்கள் பணியாற்ற, ஏற்படுகின்ற செலவில் 2/3 பங்கை அரசாங்கம் கொடுத்தும், 1/3 பங்கை ஒன்றியம் ஏற்றுக்கொள்ள முன்வராததால் நியமிக்கப்படவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஒன்றியத்திற்கு இந்தத் தன்மையை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### *Leprosy Survey Project.*

* 748 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any financial assistance from the City Council of Munich (West Germany) has been received for the leprosy survey project in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, மாநில அரசு இத்தகைய ஸ்தாபனங்களை உதவி கேட்டு அணுகியதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கேள்வி போட்ட தன்மையின் காரணமாக விடை மறுப்பாக வந்தது. தமிழக அரசுக்கு அவர்கள் நேரடியாக உதவவில்லை என்பது விடையினுல் பெறப்பட்டது. ஆனுல் இந்த மேற்கு ஜெர்மனியைப் பொறுத்தவரையில் இங்கே சில அமைப்புகளை அவர்களாகவே ஏற்படுத்தி, அதன் மூலம் தொழுநோய் தடுப்புப் பணிகளை செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட அமைப்பு வடசென்னை பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் தொழுநோய் தோன்றுகின்ற கட்டத்திலேயே அறிந்து அவர்களுக்கு சிகிச்சை செய்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மாநில அரசு நேரடியாக அவர்களை உதவி கேட்டு அணுக முடியாது. மத்திய அரசின் அனுமதி அதற்கு வேண்டும். அதனுல் நாம் அணுகவில்லை. சோஷியல் சர்வீஸ் என்ற முறையில் அவர்களாகவே முன்வந்து தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



### *Hospital Pharmacy.*

* 749 Q.—THIRU K. T. K. TANGAMANI AND THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Director of Medical Education has submitted a report regarding the starting of Hospital Pharmacy; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சென்ற ஆண்டு மதுரையிலுள்ள பி.பார்மஸி மாணவர்கள் இந்தக் கோரிக்கையையும், இன்னும் சில கோரிக்கைகளையும் வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போது ஆஸ்பத்திரி பார்மஸி ஆரம்பிக்கப்படும் என்று அந்த மாணவர்களுக்குச் சொல்லப்பட்டதே, அதை ஆரம்பிப்பதற்கு இன்னும் எத்தனை காலம் ஆகும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டு—அதற்காக நிபுணர்கள்—அந்தத் துறை சார்புடையவர்கள்—இன்னும் வரவு செலவு கணக்கில் தேர்ந்தவர்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு கடைசியாக அவர்களால் தரப்பட்ட அறிக்கை இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. புதியதாகத் தொடங்கப்படுகிற ஒன்று நல்ல முறையில் பரிசீலனை செய்யப்படாது, தேர்ச்சி இல்லாமல் தொடங்கப்படுமானுல் அதன் விளைவுகள் அவ்வளவு மகிழ்ச்சி தருவதாக இருக்காது. ஆகவே எல்லாவிதமான நுணுக்கங்களும் ஆராயப்பட்டு துவங்கப்பட வேண்டும் என்பதனுல்தான் காலதாமதம் ஆகிறது. எப்படியும் விரைவில் துவங்க வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த மருந்தகம் ஆரம்பிப்பதற்கான அறிக்கை அரசினிடத்தில் எப்போது தரப்பட்டது? அது இன்னும் எவ்வளவு நாட்களில் பரிசீலனை செய்யப்பட்டு துவங்கப்படும்? பி.பார்மஸி படித்தவர்களுக்கு வேலை தருவதற்கான காரணத்தை உத்தேசித்து அவசரமாக இதைச் செயல்படுத்த அரசு முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பி. பார்மஸி மட்டும் அல்ல—எந்தவிதமான தொழில் பயிற்சி படித்தவர்கள் எல்லோருக்கும் அரசே வேலை தருவது என்பது இயலாத காரியம். இதனுல் எல்லோருக்கும் வேலை கிடைக்கும் என்ற எண்ணம் ஏற்படத் தேவையில்லை. இப்படி சில அமைப்பு

[1974 எப்ரல் 4

களை ஏற்படுத்துவதிலேயே ஒருவகையான பயிற்சி தேர்ச்சி பெறுகிறவர்களுக்குக்
கிடைக்கக் கூடும் என்பது ஒரு காரணம், சிலருக்கு வேலை கிடைப்பதோடு கூட
பல்வேறு வகையில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஊக்கம் ஊட்டுவதாக இருக்கும்.
மற்றென்று—மருத்துவ மனைகளுக்குத் தேவைப்படுகிற நம்பகமான—தரமிக்க
மருந்துகளை உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. அது
பற்றிய ஆய்வுப் பணிகள்தான் இப்போது முடிந்திருக்கிறது. இன்னும் கட்டிட
பணிகள்—தேவையான கருவிகளைப் பெறும் பணிகள் பற்றி ஆராய்ந்தாக
வேண்டும். 3—9—73-ல்தான் இவர்களது அறிக்கை அரசுக்குக் கிடைத்தது.
இதனை வெவ்வேறு கட்டத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டி
யிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** பி.பார்மஸி படித்த மாணவர்கள் வெளியில்
சொந்தமாக தொழில் துவங்க விரும்பினல்—அப்படித் தொழில் துவங்குவது
நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினல்—அரசு அவர்களுக்குச்
சலுகை வழங்க—மானியம் வழங்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாகவே இப்போது எதற்கெடுத்
தாலும் மானியம் வழங்கப்படுமா என்கிறர்கள். தொழிலுக்கு மானியம்
வழங்குவது என்பது இயலக்கூடிய ஒன்றல்ல. கடன் வேண்டுமானல்—கடன்
கேளுங்கள்—கேட்டால் கொடுப்பார்கள்—என்கிற அளவுக்கு திருமதி இந்திரா
காந்தி அம்மையார் ஏற்பாடு செய்திருக்கிறர்கள் வங்கிகளை தேசியமயமாக்கு
வதன் மூலம். அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**பதிவுத் துறை உதவிப் பதிவாளர்கள்.**

*750 வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய
வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) 1970ஆம் ஆண்டில் பதிவுத் துறையில் உதவியாளராகப்
(Assistant) பணியாற்றியவர்களில் மாநில முழுவதும் எத்தனை பேருக்கு
உதவிப் பதிவாளராக (Sub-Registrar) பதவி உயர்வு கொடுக்கப்பட்டது ?

(இ) 1971ஆம் ஆண்டில் பதவி இறக்கம் மீண்டும் செய்யப்பட்டது
உண்மையா ?



1974 எப்ரல் 4]

(உ) எவ்வளவு பேர் பதவி இறக்கம் செய்யப்பட்டனர் ?

(எ) அதற்கு உரிய காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) 1970ஆம் ஆண்டில் டிசம்பர்
திங்கள் முடிய 46 உதவியாளர்களுக்கு உதவிப் பதிவாளர் பதவி உயர்வு
கொடுக்கப்பட்டது.

(இ) ஆம். சிலர் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.

(உ) 1970ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்டவர்களில் ஐவரும்,
1971ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்டவர்களில் ஐவரும் 1971ஆம்
ஆண்டில் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.

(எ) 1970ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்ட தாழ்த்தப்பட்ட
வகுப்பைச் சேர்ந்த 5 பேர்களும், அவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்ட
சமயம் முழுத் தகுதி பெருதவர்கள் (not fully qualified) ; அதாவது
விதிகளிலுள்ளவாறு இரண்டாண்டு காலம் உதவியாளர்களாகப் பணியாற்ற
வில்லை என்பதால் அவர்களை பதவி இறக்கம் செய்யும்படி அரசு ஆணையிட்டது.
அதன்படி அவர்கள் 5 பேர்களும் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்.

1971ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச்
சேர்ந்தவர்கள் 5 பேர்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்ட சமயம்,
அவர்கள் முழுத் தகுதி பெருதவர்கள் என்ற காரணத்தால் பதவி இறக்கம்
செய்யப்பட்டனர்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அமைச்சர் அவர்கள் முழுத் தகுதி பெற
வில்லை என்றர்கள். முழுத் தகுதி என்ன ? இவர்களிடம் என்ன என்ன
தகுதி குறைவாக இருந்தது ? மீண்டும் அவர்களுக்கு பதவி உயர்வு தர
முயற்சிக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போது மீண்டும் பதவி உயர்வு
தரும்படியான நிலை பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** புதியதாக அமைக்கப்படுகிற பதிவு அலுவலகம் எந்த
அடிப்படையில் அமைக்கப்படுகிறது ? கழிந்த பல ஆண்டுகளாக வேற்
கிளம்பியல் ஒரு பதிவு அலுவலம் ஏற்படுத்த வேண்டுமென்று கோரப்பட்டு
வந்ததே, அது ஏன் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை ? அதற்கான காரணத்தை
அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏறத்தாழ 1,500-க்கும் அதிகமாக பதிவு ஆகக்கூடிய நிலை இருந்தால்தான் அங்கே ஒரு பதிவு அலுவலகம் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய இடம் பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தகுதி இல்லாதவர்களுக்கு ஏன் பதவி உயர்வு அளிக்கப்பட்டது? பதவி உயர்வு அளித்த பிறகு ஏன் பதவி இறக்கம் செய்யப்பட்டது? திரும்ப அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பதவி உயர்வு அளிப்பது ஐ.ஜீ. பொறுப்பு—அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன என்பதனால்தான் அது திரும்ப பரிசீலிக்கப்பட்டது. இப்போது அவர்களுக்கு தகுதி இருப்பதை ஆராய்ந்து பதவி உயர்வு அளிக்கப்படுவதைப்பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

## *East Coast Road.*

* 751 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the Central aid received for the East Coast Road from Madras to Kanyakumari as on this date?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கிழக்கடற்கரை சாலைக்காக மத்திய அரசிடம் பெற்ற உதவியின் விபரம் பின்வருமாறு :—

(1) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் மானியம் ரூ. 16 லட்சம்.

(2) மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு ரூ. 25 லட்சம்.

(3) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் கடனுதவி ரூ. 261 லட்சம்.

மொத்தம் ரூ. 302 லட்சம்.

**திரு. என். டென்னிஸ் :** இந்த வேலையின் மொத்த மதிப்பீடு எவ்வளவு அது எப்போது முடிவடையும் என்று எதிர்பார்க்கலாம்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீ ரூ. 302 லட்சம். மத்தியில் இருந்து கடனாகவும் மானியமாகவும் கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 28 வேலைகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.





**திரு. கே. டி. கே. தங்கமணி :** பாம்பன் பாலம் மாதிரி இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று. இது இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கிறது. இது எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த ரோடுக்கான முழுப் பணமும் கிடைக்கவில்லை. இடையில் இருக்கிற பாலங்களைக் கட்டுவதற்கான வேலைகள்தான் இப்போது நடைபெற்று வருகின்றன.

## *New bridge across Coleroon.*

* 752 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a new bridge at Coleroon connecting Srirangam and Tiruchirappalli; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை 45-ல் மைல் 193/2 (கி.மீ. 312/8)ல் கொள்ளிட நதியின் குறுக்கே 64,116 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மத்திய அரசு எப்போது அனுமதி அளித்தது? வேலை எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேசிய நெடுஞ்சாலையில் வருவதால் எஸ்டிமேட் தயாரித்து டெல்லி போக வேண்டும். பின்னர் டெண்டர் கால்பார் பண்ணி போக வேண்டும்—இப்படி ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஒப்புதல் பெற வேண்டியிருப்பதால் நம் மாநிலத்தில் மட்டுமல்ல—எல்லா இடங்களிலும் தேசிய நெடுஞ்சாலை வேலை தாமதம்தான் ஆகும். அதைத் தவிர்க்க முடியாது.

## *New over bridge at Coimbatore.*

* 753 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works with reference to question No. 82 answered on 11th August 1973 be pleased to state the estimated cost of the proposed construction work of the over bridge near the bus stand in Coimbatore town?

[1974 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மதிப்பீட்டுத் தொகை ரூ. 80 லட்சம் ஆகும்.

**திரு. நா. வீராசாமி :** 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கும் இந்தப் பாலத்தை மக்கள் எக்சிபிஷன் வந்து பார்ப்பது போல வந்து பார்க்கிறார்கள். அந்தப் பாலம் ஒரு மாதத்தில் இடிந்து விழும் என்றார்கள். ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. பாலம் இடிந்து விழவில்லை—அப்படி பிரசாரம் செய்து வந்தவர்கள் அதை உணர்ந்தார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது கட்டப்பட இருக்கிற பாலத்திற்கான மதிப்பீடு 80 லட்சம் என்று சொன்னேன். (சிரிப்பு).

உறுப்பினர் குறிப்பிடுவது 52 லட்சத்தில் கட்டப்பட்ட பாலம்—தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் அந்தப் பாலம் ஒரு மாதத்தில் இடிந்து விடும் என்று பிரசாரம் செய்ததை நானும் அறிவேன்—அது உண்மை. நிச்சயம் பாலம் விழாது—உறுதியாகத்தான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் ஏற்கனவே ஒரு முறை இடிந்து விழுந்த காரணத்தினால்தான் மக்கள் அப்படி பேசிக்கொண்டார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்விக்கு துணைக் கேள்வி போடுங்கள்.

**திரு. கோவை செழியன் :** கட்டுகிற பாலங்களைக் கட்டி முடிப்பதற்கு முன்னாடியே, திறப்பு விழா நடத்தி விடுகிறார்கள் ; பாதி வேலை பாக்கி இருக்கிறது. அதற்குள் அவ்வளவு அவசரமாக திறப்பு விழா நடத்தியிருக்கிறார்கள். ஏன் கட்டி முடித்த பிறகு திறப்பு விழா நடத்தியிருக்கலாமே ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மூலக் கேள்விக்குச் சம்பந்தப்படாத பாலம் பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். பாலம் பாக்கி இருந்தது என்பதல்ல. மேம்பாலம் முடிவடைந்து விட்டது. இரயில் போகிற பாலமும் கட்டி முடிந்துவிட்டது. கீழே, கை வண்டி இழுத்துச் செல்கிற இடத்திலே, தண்ணீர் ஊற்று வந்த காரணத்தினால், வேலையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலை பரிபூரணமாக முடிந்துவிட்டது. மக்கள் மேலே செல்வதற்காகவும், கார்கள், பஸ்கள், ஆட்டோரிக்‌ஷாக்கள் இவைகள் போவதற்காக, மேலே அந்தப் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது.



1974 ஏப்ரல் 4]

**திரு. செ. அரங்கநாயகம் :** கட்டவிருக்கிற பாலம், பஸ் ஸ்டாண்டுக்கு அருகாமையிலேயா அல்லது வட கோயம்புத்தூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு மேலேயா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பாலம் கோயம்புத்தூர் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்திலே என்றுதான் கேள்வியே.

**திரு. எம். தேவராசன் :** இந்தமாதிரி பெரிய நகரங்களில், லெவல் கிராசிங் இருக்கிற நெருக்கடியான இடங்களில் எல்லாம் பாலங்கள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கனவே, ஒரு துணைக்கேள்விக்கு பதிலளிக்கும்போது சொன்னேன். தமிழ் நாட்டில் எங்கெங்கே இப்படி லெவல் கிராசிங், ரயில்வே கிராசிங் இருக்கிறதோ அங்கேயெல்லாம் மேம்பாலம் அமைப்பது அரசின் நோக்கம். வேலைத் திட்டங்கள் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

## *Bridge on Marthandam-Panachamod road*

*754 Q.—THIRU J. JAMES :
THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether this Government have received a representation dated 8th July 1973 from the District Collector of Kanyakumari regarding the construction of a bridge at Gnaranvilaikadavu across Kuzhithurai river at Marthandam-Panachamod road; and

(b) if so, the action taken by the Government thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் சம்பந்தமாக முன்னால் பொதுப் பணித்துறை பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், இந்தப் பாலத்தை கட்டுவது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று இங்கே வாக்குறுதி அளித்தார்கள். பரிசீலனை என்பது அந்தப் பாலத்தைக் கைவிடுவதற்கா அல்லது கட்டுவதற்கா என்று கேட்பதற்கும் கட்டுவதற்கு என்றுதான் வாக்குறுதி அளித்தார்.

முன்னாள் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிற அளவிலாவது இன்னாள் அமைச்சர் அதனைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னது உண்மை. பரிசீலிக்கப் பட்டது. சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஆண்டு வேலை துவங்கப்பட இருக்கிறது என்பதை ஜேம்ஸ் மகிழ்ச்சி அடையாவது தெரிவித்துக் கொள்கி றேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, ரூ. 20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது என்று முன்பு கூறி, அது இப்பொழுது டெபர் செய்யப் பட்டிருக்கிறது என்ற ஒரு குறிப்பு இந்த அறிக்கையின் அடிப்படையிலே வந்திருக்கிறது. அதை டெபர் செய்ததற்கு என்ன காரணம்? இப்பொழுது, ஏதோ திறக்கப் போகிறார்கள் என்று கேட்டவுடன் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்த ஆண்டு நிச்சயமாக வேலை தொடங்கப்படுமா? அதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ரூ. 20 இலட்சத்தில் பாலம் கட்ட 1973-74-ம் ஆண்டு திட்டம் பரிசீலிக்கப்பட்டு நிதிநிலைப் பற்றாக்குறையின் காரணமாக கைவிடப்பட்டு 22-12-1973-ல் ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டியில் ஒப்பளிக்கப்பட்டு, ரூ. 25 இலட்சம் செலவாகும் என்று வேலையை ஏற்றுக் கொண்டு, 1974-75-ல் வேலையைத் துவங்க அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்த பால வேலையைத் துவங்க அரசு நாட்ட அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நண்பர் ஜேம்ஸ் அவர்கள் அழைக்கிறார்கள். அதைப் பரிசீலித்து ஒத்துக்கொள் கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Lands leased out to cinema studios*

*755 Q.—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the names of cinema studios in Tamil Nadu for which Government lands have been given on lease as on 1st July 1973;





(b) the lease amount collected from such studios per year: and

(c) the extent of land leased out to them?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

(அ) சத்தியா ஸ்டுடியோஸ் (பி) லிமிடெட், சென்னை-28.

(இ) ஆண்டு ஒன்றுக்கு குத்தகை தொகை ரூ. 6,820-65.

(உ) 1 காணி 14 மனை 2,340 சதுர அடி.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, நமது அரசாங்கத்தின் சார்பாக லீஸ் முறையிலே, சத்தியா ஸ்டுடியோவுக்கு நிலத்தைக் கொடுத்திருப் பதாகத் தெரிகிறது. எந்த நோக்கத்திற்காக அந்த நிலத்தை சத்தியா ஸ்டுடியோவினர் வாங்கினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்கிற ஒரு கருத்து இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு பை-இண்டஸ் ட்ரீஸ் ஸ்டார்ட் செய்வதற்காக அந்த நிலத்தை வாங்கினார்கள் என்று கேள்விப் படுகிறேன். அது உண்மையா? அதன் விவரங்கள் என்ன? அப்படி அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லையென்றால், உடனடியாக லீஸை கான்சல் செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சத்தியா ஸ்டுடியோ உரிமை யாளர்கள், 1968-ம் ஆண்டு ஜனவரியிலே எழுதிய கடிதத்திலே,

'It is quite contiguous to and adjoining our land R.S.4274/1 and the inevitable requirement is for the purpose of expansion of studio amenities, the provision of amenties for several producers who frequent our studios, for establishing an industrial centre as a bi-industry relating to the motion picture industry and for running an industrial training centre' என்று அந்த நிபந்தனைகளை அவர்களே கேட்டு, அதன்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினருடைய கருத்தின் அடிப்படையிலே அதிகாரிகள் அதைப் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது சத்தியா ஸ்டுடியோவுக்குப் பக்கத்திலே உள்ள அரசாங்க நிலத்தை அவர்கள் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். அதிலே, இப்பொழுது ஷூட்டிங் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே, சிறிய ஸ்டுடியோவுக்குச் சம்பந்தமான சிறு தியேட்டர்களைக் கட்டுவதற்கு அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆனால், அந்த நிலத்தை அரசாங்கத்திற்குத் தருவதற்குத் தயாராக இருந்தாலும், அந்த இடத்தை அப்படித் தந்தால், அங்கே ஒரு இரும்புப் பட்டறை வைத்து, ஷூட்டிங் நடத்துவதற்கு இடைஞ்சலாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** முதலிலே, அந்த இடத்தை கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து வெற்றி பெறுமானால் பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பற்றிப் பரிசீலிக்கலாம். அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம், அரசாங்கத்திற்கு வந்த பிறகுதான் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது சொல்லப்படுகிற அந்த நிலம் அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்று சொல்லி ரொம்ப நாளாயிற்றே, அதைக் கொடுப்பதிலே ஏதாவது தகராறு இருக்கிறதா? அல்லது, கொடுக்கிறேன் என்று சொன்னவர்கள் ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கிறார்களா? அதைப்பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா? அப்படிக் கொடுக்காவிட்டால், எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒரு செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு அதிகாரப் பூர்வமாகத் தகவல் ஒன்றுமில்லை.

## *Kuzhithurai House Mortgage Bank.*

*756 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Presidentship and Board of Directors of the House Mortgage Bank Y-335 Kuzhithurai, Kanyakumari district is kept vacant for a long time; and

(b) if so, the reasons for the delay?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) 4—10—1973 அன்று வீட்டு வசதி வாரியத் தலைவரால் (கூட்டுறவுப் பிரிவு) புதிய குழு ஓராண்டு காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு, தற்போது பொறுப்பேற்றிருக்கிறது.



புதிய குழு நியமிப்பதில் நிர்வாகக் காரணங்களால் தாமதம் ஏற்பட்டது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்ட பொழுது, குழித்துறை ஹவுஸ் மார்ட்கேஜ் பேங்க், தலைவர், டைரக்டர், மற்றவர்கள் ஓராண்டாக நியமிக்கப்படாமலிருந்தார்கள். அதனால், பில்டிங் லோன் அப்ளிகேஷன்ஸ் டிஸ்போசல் செய்யப்படாத நிலைமை இருந்தது. ஆதலால், இவ்வித காலதாமதம் ஏற்படாமல் இருக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருந்த நிர்வாகிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் மலிந்துவிட்ட காரணத்தினால் முதலிலே 3 டைரக்டர்கள் ராஜிநாமா செய்தார்கள். அதன் பிறகு, தலைவர் ராஜிநாமா செய்தார். அதெல்லாம் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு புதுக் குழு உருவாயிற்று. ஏறக்குறைய ரூ. 1,26,000 கடன்களும் பெற்று, பலபேர் வீடுகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Meeting of Labour Advisory Committee*

* 757 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the State Labour Advisory Committee has met about the end of Janury 1973; and

(b) if so, the details of the recommendations of the Committee?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) போவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** லேபர் லாஸ் அப்ளை செய்யாத நிறுவனங்களில் வேலை செய்கின்றவர்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுடைய வேலைக்கும் உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுடைய நிலைமையை கவனிக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

---

@ 273–274-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த வரையில் எல்லா தொழில்களுக்கும் குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்கின்ற ஏற்பாடுகளைப் படிப்படியாகச் செய்துகொண்டு வருகிறது. இப்பொழுது பல் வேறு துறைகளில் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சில சிறு தொழில்கள் விடப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். அப்படிப்பட்ட தொழிலையும் அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து, அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** 1973 ஜனவரியிலே, அதாவது 1¼ ஆண்டுக்கு முன்னாலே நடைபெற்ற லேபர் அட்வைசரி போர்ட் முடிவுகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. அதெல்லாம் நிறைவேற்றப்பட்டனவா? ஏனென்றால், நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பது, 18 வயதுக்குக் கீழேயுள்ள குழந்தைகளை நியமிக்காமல் இருப்பது, இதற்கெல்லாம் சட்டங்கள் இயற்றப்படும் என்று சொல்லப்பட்டது. அது இன்னும் இயற்றப்படவில்லை. எப்பொழுது நிறைவேற்றப்படும்? எப்பொழுது அறிவிப்பு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதங்களையெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக அதற்கான நடவடிக்கையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தற்போது தெரிவித்துக்கொள்கிறேன். பாக்டரிஸ் ஆக்டிலேயே 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான பாதுகாப்பு இருக்கிறது. அதல்லாத மற்றவைகளைப்பற்றி, நாம் அந்தக் குழுக் கூட்டங்களிலே பேசிய கருத்துக்களைப் பற்றி, மத்தியப் பேரரசுக்குப் பரிந்துரை செய்து, பாக்டரி சட்டத்திலே திருத்தம் செய்யவேண்டிய காரியங்களையும், வேலை வாய்ப்புச் சட்டத்திலே திருத்தம் செய்யவேண்டிய காரியங்களையும், வயது வரம்பை நிர்ணயிக்கின்ற காரியங்களையும் ஏற்பாடு செய்யும்படி நாங்கள் கேட்டு வருகிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர்களே, ஃபேக்டரிகளிலே 16 வயதுக்குக் குறைந்தவர்களை ஆங்காங்கே நியமனம் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அவர்களுக்குத் தர வேண்டிய எண்ணெய், சோப்பு போன்றவைகள் கொடுக்கப்படவில்லை. எனவே, இதைக் கண்காணிக்கின்ற வகையில் தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த இலாக்காவிலிருந்து அடிக்கடி சோதனை செய்து, அதைத் தீவிரமாக அமல் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அதற்குத் தக்க அதிகாரிகள் அடிக்கடி சோதனை செய்துகொண்டு வருகிறார்கள். குறிப்பாக ஏதாவது தகவல் இருந்தால் அதைக் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், தொழில் நிறுவனங்களில் இருக்க வேண்டிய நிலையான பணியாளர்களின் எண்ணிக்கையை வரையறுக்க வேண்டுமென்று சட்டம் கொண்டுவர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அந்த ஏற்பாட்டை முதலாளிகள் எதிர்த்தார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதே, அதை இந்த அரசே கொண்டு வரலாம் அல்லவா, அதற்கு டிராஃப்ட் பில் ஏதாவது தயாரித்திருக்கிறார்களா, அதற்கு அங்கீகாரம் பெறுவதற்காக மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கேஷுவல் ஓர்க்மென்-க்குப் பதிலாக ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது தொழிலாளர் ஆணையாளரின் ஆய்வில் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னுடைய கேள்வி, ஏதாவது ஒரு தொழிலுக்கு நிரந்தரமான தொழிலாளர்கள் இத்தனை பேர்தான் இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பது இந்த கவுன்சிலின் முடிவு. அதைத்தான் முதலாளிகள் எதிர்த்தார்கள். அந்தமாதிரிக் குறிப்பிட்ட தொழில் நிரந்தரமாக எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்பது போன்ற மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட மசோதா இதுவரையில் தயாரிக்கப்படவில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவிலே யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களை இவ்வளவு நாளைக்கு ஒருமுறை என்று தேர்ந்தெடுக்கப்படுகிறதா? அவர்கள் எந்தமுறையில் நியமனம் செய்யப்படுகிறார்கள்? இப்பொழுது ஒரு வேலை நிறுத்தம் அல்லது தகராறு என்று சொன்னால் அது நீண்டுகொண்டே போகும் நிலைமையிருக்கிறது. ஆகவே, மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக்குழு ஏதாவது ஒரு தகராறு ஏற்படுகின்ற நேரத்தில் இந்தக் குழுவே சென்று அதைத் தீர்த்து வைக்கவோ, வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுற்குக் கொண்டு வரச் செய்யவோ ஆகிய இப்படிப்பட்ட முறைகளிலே இந்தக் குழுவானது செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, யார், யார் இதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். முத்தரப்பிலே இருப்பவர்களும் இருக்கிறார்கள், அரசுத் தரப்பிலே தொழிலாளர் நல அமைச்சர், தொழிலாளர் நலச் செயலாளர் போன்றவர்களும், தொழிலாளர் தலைவர்கள் பலரும் இருக்கிறார்கள். அதைப்போலவே தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள். எனவே முத்தரப்பினரும் சேர்ந்த குழுவாக இது இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட பட்டியலாக இருக்கிறது. அதைப்படிக்க வேண்டுமென்றால் நேரமாகிவிடும். முக்கியமான பிரச்சினைகளுக்குக் கொள்கை வகுக்கும் குழுவாகத்தான் இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் முன்னிலையில் குறைகளை முறையீடு செய்து கொள்வதற்காகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கு விடுப்பு அளிப்பதற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த விடுப்பு அளிப்பதை ஊதியத்தோடு அளிப்பதற்( அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஊதியத்தோ கூடியதாக அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

*State Film Finance Corporation*

* 758 Q.—Thiru R. R. MUNUSAMI :

Thiru N. K. PALANISAMY : Will the Hon. th Minister for Electricity be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration ( the Government to institute a Film Finance Corporation in th State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) தென் பிராந்தியத்தி தனியாக, திரைப்பட நிதியுதவிக் கழகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இது குறித்து மத்திய அரசுக்( எழுதிக் கேட்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, நமது தமிழ்நாட்டில் இப்பொழு 'ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன்' இல்லாத காரணத்தால் பலபேர் தமி நாட்டிலே இருப்பவர்கள் தயாரிக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நேரத்தி



1974 ஏப்ரல் 4]

பம்பாயிலுள்ள சில மார்வாடிகள் 50,000 ரூபாய் கொடுத்துவிட்டால் 5 இலட்சம் ரூபாய் தருகிறோம் என்று பல மோசடிகள் நடந்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகளெல்லாம் இருக்கின்றன. எனவே, இங்கே இருப்பவர்களுக்கு வசதி செய்து தருகின்ற வகையில் ஒரு பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷனை சென்னையிலேயே அமைக்க மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, பம்பாயில் திரைப்பட நிதியுதவிக் கழகம் இருக்கிறது. அதை மத்திய சர்க்கார் ஆரம்பித்து இருக்கிறது. தென் மாநிலங்களில் உள்ளவர்களுக்கு அதிகக் கடன் வழங்கப்படவில்லை என்று கருதி சென்னையிலே இப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நமது அரசு மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டிருக்கிறது. முடிவை எதிர் பார்க்கிறோம்.

*Bamboo forests*

* 759 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to take over all the bamboo forests in the private sector in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இதனுடைய முழு விவரங்களை பொதுநன்மையைக் கருதி இப்பொழுது சொல்லாமல் இருப்பது நல்லது என்று அரசு கருதுகிறது.

Dr. H. V. HANDE : Once the question has been tabled in this House, the normal practice is to answer the question. If in the interests of the State the answer could not be given by the Minister, this question could have been disallowed at the earlier stage and need not have found a place in the list of questions. It could have been disallowed by the Hon. Speaker or the Hon. Minister could have stated to the Speaker earlier that it might be disallowed. But having admitted the question and when it comes before the House, I think it would not be right on the part of the Hon. Minister to say. பொது நன்மையைக் கருதி நாங்கள் சொல்லவில்லை என்று சொல்வதுமுறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறைகளில் அப்படி இருக்கிறது. 'அலவ்' செய்திருந்தாலும் அமைச்சர்கள் எந்த நேரத்திலும் விடையளிக்க மறுக்கலாம் என்று இருக்கிறது. எனவே, இதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எதுவுமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** துணைக் கேள்விகளையாவது அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு கேள்விக்கு விவரங்களைச் சொல் லாமல் இருப்பது நல்லது என்ற கருத்தைச் சொல்லிவிட்டபிறகு அதன் மேல் துணைக்கேள்விகளைப் போட்டால் அதே விடையைத்தான் சொல்ல வேண்டி வரும்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, நான் மானியக் கோரிக்கையின்பொழுது விடையளித்தபொழுதே சொல்லியிருக்கிறேன். எனவே, முழு விவரத்தையும் கூறுவது நல்லது அல்ல என்றுதான் சொல்கிறேன்.

### நெல்லித்துறை மின் நிலையத் திட்டம்.

*760. வினா—**திரு. மே. சி. தாயமணி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லித்துறை மின் நிலையத் திட்டப்பணிகளை விரைவுபடுத்த அரசு மேற் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, சி.டபிள்யூ பி.சி யின் அனுமதியைப் பெற்று, இப்பொழுது நெல்லித்துறை திட்டம் திட்ட ஆணைக் குழுவின் அனுமதிக்காகச் சென்றிருக்கிறது. வந்தவுடன் திட்டம் ஆரம்பிக்கப் படும்.

**திரு. மே. சி. தாயமணி :** தலைவரவர்களே, நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டத்திற்கு மொத்தம் எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டில் இந்தத் திட்டம் முடிவுறும் என்பதைத் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இதனுடைய முழுச் செலவின் அளவு 8 கோடியே 54 இலட்சம் ரூபாய் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய சர்க்காரின் சி.டபிள்யூ. பி.சி.யினால் அங்கீகரிக்கப்பட்டு கடைசியாகத் திட்ட ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெறு வதற்காகச் சென்றிருக்கிறது. ஒப்புதல் வந்தவுடன் வேலையை ஆரம்பிக் கலாம்.





**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருந்த ரிசோர்சஸ் எல்லாம் எக்சாசஸ்ட் செய்யப்பட்டுவிட்டதா ? இன்னும் பாக்கி யிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது பொதுவானதொரு கேள்வியாக இருப்பதால் தனியாகக் கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் தரலாம்.

### *Electricity Bills*

* 761 *Q*.—THIRU K. KANDASAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that bills claiming charges for electricity supplied to the Consumers in the State have not been despatched for the past 6 months; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) சென்னை மின் திட்டத்தில் 1-10-1973 அன்று வெளியிடப்படாமல் இருந்த மின் கட்டண பில்களின் மொத்த எண்ணிக்கை 2,49,000. இன்றைய தேதியில் எல்லா பில்களும் வெளியிடப் பட்டுவிட்டன.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த மின் கட்டணத்தை அவ்வப்பொழுது வசூலித்துவிட்டால் அதைக் கட்ட வேண்டியவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஒன்றாகச் சேர்த்துப் பல நேரங்களில் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டால் மின் சக்தியை உபயோகிப்பவர்களுக்கும் பெருந் தொல்லைகள் ஏற்படும். இப்பொழுது எல்லா பில்களும் வெளியிடப்பட்டு விட்டன என்று கூறினார்கள். எனவே, வருங்காலத்தில் இம்மாதிரி ஏற்படாமல் இருக்க அவ்வப்பொழுது அந்த பில்களைக் கட்டும்படியான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் அங்குள்ள பணியாளர்கள் பணியைச் செய்வதற்கு அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தொழிலாளர் பிரச்னைகளின் மூலம் இந்தச் சிக்கல் எழுந்தது. அது முடிக்கப்பட்ட பிறகு இந்தக் கோரிக்கை இப்பொழுது முடிக்கப்பட்டுவிட்டது—பிறகு இதுபோன்று நடப்பதுதான் நல்லது என்று கருதி அதன்படிதான் ஆலோசனை கூறப் பட்டிருக்கிறது.

[1974 ஏப்ரல் 4

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, பில் கொடுக்கும் நேரத்தில் இத்தனை நாட்களுக்கு ஒருமுறை என்று இப்பொழுதுகூட சரியாக இல்லை. சிலநேரங்களில் 30 நாட்களுக்கு ஒருமுறை வருகிறது, 1-ம் தேதியோடு 1-ஆம் தேதி என்று சிலநேரங்களில் வருகிறது, சிலநேரங்களில் 10-ம் தேதியோடு 10-ஆம் தேதி என்று இருக்கிறது. எனவே கொடுப்பதற்கு இத்தனை நாட்களுக்குள் கொடுக்கிறோம் என்று தெரியவில்லை. தவறாக வந்துவிட்டால் எந்த இடத்திற்குச் சென்று கம்ப்ளெயிண்ட் பண்ணுவது என்று உடனடியாகச் சொல்வதில்லை. அதற்கு ஏதாவது ஒரு அமைப்பை வைத்து, இத்தனை பில் போட்டிருக்கிறது. அதைக் கன்ஸ்யூமர்ஸ் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் எந்த இடத்தில் கம்ப்ளெயிண்ட் செய்ய வேண்டும், என்ன தகவலைக் கொடுப்பது என்ற முறையை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போது ஒருமுறை இருக்கிறது. எந்த முறையில் மாற்ற வேண்டுமென்று ஆலோசனை சொன்னால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** இப்போது விவசாயிகளுக்கு மாதந் தோறும் கட்டணங்கள் வசூலிப்பதை மாற்றி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களிடமிருந்து மின் கட்டணத்தை வசூலித்தால் நன்மை செய்வ தாக இருக்கும். அத்தகைய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கனவே, விவசாயிகள் கொடுக்கக் கூடிய கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த ஆண்டு நிலைமைகளை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். நிலக்கரி வருவதிலே சிரமம். அண்டை மாநிலங்களில் இருந்து மின்சாரம் பெறுவதிலே எல்லாம் விலையேற்றம். இந்த நிலைமையில் அந்தந்த மாதங்களில் கட்டுவதுதான் வாரியத்திற்கு நலமாக இருக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** மின்சக்தி கட்டண பில்கள் ஆறு மாதங்களாக அனுப்பப்படாமல் இருந்து இப்போது மொத்தமாகப் பாக்கி முழுவதையும் கட்ட வேண்டுமென்று சொன்னால் கட்ட முடியவில்லை. அப்படிக் கட்ட முடியாத இடத்தில் ஃப்யூஸைப் பிடுங்கி விடுகிறார்கள். ஆகவே, இதை ஆறு மாதத் தவணையில் கட்ட உத்தரவு பிறப்பிப்பதோடு ஃப்யூஸைப் பிடுங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பில்கள் பாக்கி என்ற நிலைமை சென்னையிலேதான் இருந்ததேதவிர, வெளியே இருந்ததாகத் தெரியவில்லை. ஆறு மாதமாக பில்கள் அனுப்பப்படவில்லை என்று சொன்னால் அதைக் கட்டு



1974 ஏப்ரல் 4]

வதற்கு ஆறு மாதத் தவணை பெறலாம். அதுபற்றிப் பத்திரிகைகளில் கூட விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. 2,40,000 பேர்களில் 10,000 பேர்தான் தவணை கேட்டார்கள். அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** பில்களைக் கன்ஸ்யூமர்சுக்கு அனுப்ப தனிச் சலுகை தரவேண்டுமென்று கோரிக்கை விடுகிறார்கள். ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட பில்கள் பாக்கி இருக்கும் காரணத்தால் இதை முறைப்படுத்தி உடனடியாக வசூல் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போது அந்தப் பிரச்சினை முடிக்கப்பட்டு விட்டது. எக்ஸ்ட்ரா ரெம்யூனரேஷன் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது இப்போது பில்கள் முறையாக அனுப்பப்பட்டு விட்டது. பிரச்சினை எழவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** சென்னை நகரத்தில் சிறு மூலதனத்தை வைத்து சிறு சிறு தொழில்கள் நடத்துபவர்களுக்குக் கடந்த ஆறு மாத காலமாக பில்கள் போய்ச் சேரவில்லை. இப்போது பவர் கட் வந்திருக்கும் நேரத்தில் மூன்று மாத காலம் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவைக் கொண்டு அளிக்கப்படுவதால் ஆறு மாதத்திற்கு மீட்டர் ரீடிங் பார்க்காத நிலையில் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்குச் சலுகை அளிப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்த விகிதத்தை நிர்ணயிப்பதில் சிக்கல் வராது. இந்த பில் வருவதற்கு முன்னால் இருந்த மாதங்களான ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பயன்படுத்திய மின்சாரத்தின் அளவை வைத்துத் தான் இந்த விகிதசாரம் நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** வீட்டுக்குக் கொடுக்கக்கூடிய மின்சாரக் கட்ட ணத்தை ஒரு நாள் கட்டவில்லை என்று சொன்னாலும் கூட ஐந்து ரூபாய் அபராதம் போடுகிறார்கள். இந்த அபராதம் இல்லாத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதெல்லாம் சட்ட திட்டங்களின் அடிப்படையில் பல ஆண்டுகளாக இருந்துவரும் விவகாரம். கட்டவில்லை என்றால் அதற்காக பெனல்டி முறை இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி யோசிப்பதற்கில்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** இப்போது விவசாயிகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு பில்களை ரெவின்யூ யூனிட் தயாரித்துக் கொடுக்கிறது. இதிலே பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அதிகாரிகள் ஆறு மாதங்களாக அனுப்ப வில்லை. விவசாயிகள் இதனால் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள். அந்த நிலைமையை மாற்றி ஏ.இ. அளவில் பில் போட்டு பணம் கட்டுவதற்கான முறையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது புதிய விதமான யோசனை. வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த மாதிரிப் பிரச்சினை எதுவும் வரவில்லை. எல்லா பில்களும் அனுப்பப்பட்டு விட்டன.

**திரு. கே. எ. வகாப் :** வட ஆற்காடு மாவட்டத்தில் அந்த நிலைமை இல்லை யென்று சொல்லுகிறார்கள். ஆனால் அது அனுபவித்துக் கொண்டிருக்கும் எங்களைப் போன்ற விவசாயிகளுக்கும் பொது மக்களுக்குந்தான் தெரியும். அங்கு போதிய அலுவலர்கள் இல்லையென்று காரணம் சொல்லுகிறார்கள். இனி மேல் அதிகமான கிளார்க்குகளைப் போட்டு இப்படிப்பட்ட காலதாமதங்கள் ஆகாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஓரிரு மாதங்கள் அந்த மாதிரி நிலைமை இருந்திருக்கலாம். இப்போது பில்கள் முழுமையும் கொடுக்கப்பட்டு விட்டன. பழைய முறைகள் இப்போது இல்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** பில் போடக்கூடியவர்களும் வசூலிக்கக்கூடியவர்களும் வேண்டுமென்றே காலதாமதம் செய்வதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு 8 அல்லது 9 கோடி ரூபாய் வசூல் பண்ணப்படாமலே இருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் ஓவர் டைம் வேண்டுமென்ற காரணத்தால் அவர்கள் வேலை செய்யவில்லை. இந்தக் குறைபாடு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். குறிப்பாக வேலூர் சிஸ்டத்தில் மட்டும் சில கிளார்க்குகள் மாதத்திற்கு 3500 ரூபாய் கூட ஓவர் டைம் பெற்றிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதை நீக்க அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பவர் கட் இருந்த காரணத்தால் பில் பாக்கி இருந்தது. அப்போது எத்தனை கிளார்க்குகள் நியமிக்க வேண்டு மென்று முடிவு செய்யவில்லை. இப்போது எல்லோரும் வேலைக்கு எடுக்கப்பட்டு அந்த வேலைகளை எல்லா மாவட்டங்களிலும் முடிவு செய்து விட்டார்கள். எட்டு கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். எட்டு கோடி அல்ல ஐந்து கோடி என்று கருதுகிறேன். இப்போது எக்ஸ்ட்ரா ரெம்யூனரேஷன் கொடுக்கும் முறை கைவிடப்பட்டிருக்கிறது.



**திரு. நா. வீராசாமி :** பில் கொடுப்பதிலும் வசூலிப்பதிலும் இப்போது காலதாமதம் இல்லை. ஆனாலும் வசூலாவதில் காலதாமதத்தைத் தவிர்க்க சென்னை போன்ற நகரங்களில் வங்கிகள் மூலமாக வசூலிக்கும் செயற்குறிப்பு அமைச்சரிடம் இருக்கிறதா ? அதை முறைப்படுத்தும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்படிப்பட்ட ஒரு நல்ல யோசனையைச் சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது எடுக்கப்பட்ட சில தனியார் மின்நிலையங்கள் பகுதியில் அந்த ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடை பெற்று வருகிறது. அதை மற்ற இடங்களுக்குப் புகுத்தலாமா என்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. கந்தசாமி :** ஊழியர்கள் ஓவர் டைம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் காலாகாலத்தில் பில்களைத் தயாரிக்காமல் தள்ளிப் போட்டு வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த ஊழியர்கள் சரியான விவரங்களை உயர்தர அதிகாரிகளுக்குக் கொடுக்காத காரணத்தால் இந்தக் காலதாமதங்கள் ஏற்பட்டன என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி கமிட்டி மூலமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் ஏற்கெனவே சொன்னது போல் இப்போது அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லை. இப்போது முறையாக பில்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற நிலைமை மறுபடியும் உருவா காமல் இருப்பது நல்லது. எல்லோரும் சேர்ந்து தொழிலாளர்களுக்கு ஆலோசனை கூறுவது, அறிவுரை கூறுவது நலம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இரண்டாண்டு காலத்திற்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளார்க்குகளுக்குப் பலபேருக்கு வேலை வரவில்லை; அவர்களுக்கெல்லாம் உடனடியாக வேலை கொடுத்து ஓவர் டைம் அபாலிஷ் செய்து ஒழுங்கான முறையில் கணக்குகளைக் கொண்டுவர இலாகா ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஓவர் டைம் இப்போது கொடுக்கப் படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 2. தகவல் கோரல்.

**தாங்கள் அறிவிக்கை கொடுத்திருந்த தீர்மானங்கள், ஒரு பொருள் குறித்து ஒரு மணி நேரம் விவாதம் வைத்துக்கொள்வது, அனுமதி மறுக்கப்பட்ட தீர்மானங்கள் ஆகியவை குறித்துச் சில உறுப்பினர்கள் தகவல் கோரியது குறித்து.**

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I asked for information regarding appointment of clerks also.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எல்லாம் முடிந்து விட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்தில் மின்சார வெட்டு சம்பந்தமாக விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்கலாம் என்று அரசின் தரப்பில் கூறப்பட்டது. அதிலே இதுவரை எந்த விதமான விவாதமும் கொண்டுவரப்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் கேட்டு அதன் பிறகுதான் முடிவு எடுக்க வேண்டும். எழுத்து மூலமாகக் கொடுக்க வேண்டும். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

(முற்பகல் 10-00)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எழுத்து மூலமாகவே வரவேண்டும் என்று தான் நான் தந்தேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வாக்குறுதி என்று சொன்னால் என்னுடைய வாக்குறுதியை நீங்கள் கேட்டு நடக்கவில்லை. நீங்கள் வெளி நடப்பு செய்துவிட்டீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** வெளிநடப்புச் செய்தால் மறுக்கப்படும் என்ற ரூல் இருக்கிறதா? அது எந்த அடிப்படையிலே நீங்கள் அறிவித்தீர்கள். அது தெரியவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே காரணம் காட்டப்பட்டிருக்கிறது, அந்தக் காரணத்தை நீங்கள் பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் அறையிலே ஒரு தீர்ப்புக் கூறிய பிறகு அதை இந்த அவையிலே விவாதிக்கக் கூடாது.

**திரு. கோவை செழியன்:** நான் கொடுத்ததிலே என்ன தப்பு இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பிரிவிலெஜ் மோஷன் கொடுக்கிறீர்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறீர்கள். அதன்மீது அறையிலே கொடுக்கிற தீர்ப்பை அவையிலே கொண்டுவந்து விவாதம் செய்யக்கூடாது. அதிலே ஒரு உறுப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அதை அறையிலே விவாதிக்கலாமே தவிர இங்கே வந்து விவாதிக்கக்கூடாது.

**திரு. கோவை செழியன்:** அதிலே என்னுடைய ரைட் பாதிக்கப்படுகிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையிலே அதை மீண்டும் விவாதிக்கக் கூடாது.

**திரு. கே. எ. வகாப்:** பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன் கிடையாது.

**திரு. கே. ஏ. வகாப்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி விட்டு பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன் கொண்டு வந்தால் நான் அதை அனுமதிக்க மாட்டேன். நீங்கள் பிரிவிலெஜ் மோஷன் கொண்டுவரலாம்.

**திரு. கே. எ. வகாப்:** நேற்றைய தினம் நகராட்சிகளுக்கு தேர்தல் என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகைகளில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் கூட தேர்தல் என்று வெளியாகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே தரப்பட்ட செய்திகள் தவறாக வெளியிடப்பட்டிருந்தால் அதற்கும் நீங்கள் பிரிவிலெஜ் மோஷன் கொண்டுவரலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இங்கே பட்ஜெட் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பட்ஜெட்டிலே பல்வேறு திட்டங்களுக்கான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி நேற்றே சொல்லியாகி விட்டது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இது புதிய விஷயம். பல்வேறு துறைகளுக்கும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

### 3. கவன ஈர்ப்பு.

### (அ) திருச்செந்தூர் வட்டம், செம்மரிக்குளம், புத்தன் தருவை கிராமங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து.

THIRU K. P. KANDASAMY : Under Rule 41 of the Tamil Nadu Assembly Rules, I wish to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the destruction of standing crops in Semmarikulam and Puthantharuvai villages in Tiruchendur taluk by the recent floods and the consequent distress of the farmers there.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த புத்தன் தருவை கிராமத்தில் 1973 டிசம்பரில் பெருமழை பெய்ததன் காரணமாக 98.84 ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கின. விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| நன்செய் | 60 | 76 |
| புன்செய் | 32 | 89 |
| தீர்வை விதிக்கப்பட்டதாக | 5 | 19 |
| மொத்தம் | 98 | 84 |

இதில் 59.88 ஏக்கா பரப்பளவில் விளைந்திருந்த நெற்பயிரும், வாழையும் சேதமடைந்தன. எஞ்சிய 39.96 ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டது. நன்செய் நிலங்கள் ஒருபோக நன்செய் நிலங்களாதும். சேதம் ஏற்பட்டதன் காரணமாக





இந்த நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அடிப்படைத் தீர்வை தள்ளுபடி செய்யப்படும். பாதிக்கப்பட்ட நிலங்களைப் பயன்படுத்துவதற்குக் கடன் கேட்டு தனிப்பட்டவர் எவரிடமிருந்தும் விண்ணப்பம் வரவில்லை.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் தள்ளுபடி செய்யக் கருதியுள்ள தொகை ரூ. 234.22 ஆகும். கடன் கேட்டு தனிப்பட்ட எவரிடமிருந்தும் விண்ணப்பம் வரவில்லை என்றும், ஆனால், கடனையும், நில வரியையும், வேளாண்மை வருமான வரியையும் வசூலிப்பதை ஒத்தி வைக்கலாமென்று புத்தன் தருவை ஊராட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். நிலவரி தள்ளுபடி செய்யப்படுவதன் காரணமாக நிலவரி குறித்துக் கேட்பு அறிவிப்பு ஏதும் அனுப்பப்பட மாட்டாது. கடன்கள், வேளாண்மை வருமான வரி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இவற்றை வசூலிப்பதில் வலுக்கட்டாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென சாத்தான்குளம், துணைத் தாசில்தாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

புத்தன்தருவைக் கிராமத்தில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் காரணமாக பயிர்கள் பொதுவாகப் பாதிக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இந்தச் சேதத்தை நிரந்தரமாக தடுப்பதற்காக ரூ. 7-18 லட்சம் செலவில் புத்தன்தருவை வடிகால் அடங்கல் திட்டத்தின் முதல் கட்டப் பணியை செயற்படுத்தக் கருதப்படுகிறது. மேற்சொன்ன திட்டத்தின்கீழ் புதியதோர் ஏரி அமைக்க நாங்குநேரி வட்டம், திசையன்விளை கிராமத்திலுள்ள 181.67 ஏக்கர் புன்செய் நிலத்தையும் திருச்செந்தூர் வட்டம், அரசூர் கிராமத்திலுள்ள 77.06 ஏக்கர் புன்செய் நிலத்தையும் கையகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் வெள்ளக் காலத்தில் பயிர்களுக்கு மேற்கொண்டு சேதம் எதுவும் ஏற்படாது.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த செம்மரிக்குளம் கிராமத்தில் 289.53 ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கியது; 208.05 ஏக்கர் நிலத்திற்கு ரூ. 1,050 வரி தள்ளுபடி வழங்குவது குறித்து தூத்துக்குடி மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் பரிசீலித்து வருகிறார். 89 பட்டாதார்களுக்கு சொந்தமான நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலங்களைப் பண்படுத்துவதற்கு அவர்களில் எவரும் கடனும், நிதியுதவியும் கேட்கவில்லை. அடுத்த பயிர் சாகுபடியின்போது மட்டுமே அவர்களுக்கு நிதி உதவி தேவைப்படலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவருக்குத் தெரியவருகிறது.

அடுத்த பயிர் சாகுபடியின்போது கடன் கேட்டு அவர்கள் விண்ணப்பம் செய்துகொண்டால் அவர்களது வேண்டுகோள் மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிசீலிக்கப்படும்.

இந்த வகையில் புத்தன்தருவை ஊராட்சித் தலைவரிடமிருந்தும், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பி. கந்தசாமி அவர்களிடமிருந்தும் வரப் பெற்ற முறையீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் செம்மரிக்குளம் கிராமத்தில் உள்ள படுகையிலுள்ள ஏறத்தாழ 80 பம்பு செட்டுகள் தண்ணீர்ப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாக மோட்டார் பம்பு செட்டுகளை நீக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகையினாலே தண்ணீருக்குள்ளே இருந்து அவை கெட்டுப்போய்விட்டன. இதையொட்டி அந்த விவசாயிகளுக்குப் பஞ்சாயத்து யூனியன், நிலவள வங்கி அல்லது விவசாய நாணயச் சங்கங்கள் கடன்களை ஓராண்டு ஒத்தி வைப்பது மட்டுமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது வெள்ள நிவாரண உதவி செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a Point of Order The floods have taken place in December 1973. But the Speaker has allowed the hon. Member to call the attention of the Hon. Minister in April 1974. If we give notice of some important matters, it does not find a place and see the light of the day.

THIRU K. P. KANDASAMY: It is not an adjournment motion but it is only Call attention notice.

### (ஆ) மண்ணெண்ணெய் பற்றாக்குறையால் ஏழை மக்கள் படும் அவதிகுறித்து.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏழைகள், நடுத்தர மக்கள் தினம் உபயோகித்து வரும் மண்ணெண்ணெய் கிடைக்காமல் அவதிப்படுவதுபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏழைகள், நடுத்தர மக்கள் தினம் உபயோகித்து வரும் மண்ணெண்ணெய் கிடைக்காமல் அவதிப்படுவது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு திங்களொன்றுக்கு தோராயமாக தேவைப்படும் மண்ணெண்ணெய் அளவு 30,000 மெட்ரிக் டன்கள் அல்லது 38,000 கிலோ லிட்டர்கள் என்று கடந்த ஆண்டில் கணக்கிடப்பட்டது. சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் வரை சற்றேறக்குறைய 30,000 மெட்ரிக் டன்கள் மண்ணெண்ணெய் இம்மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்தது. உலகமெங்கும் பெட்ரோலியப் பொருள்கள் பற்றாக்குறை, விலையேற்றம் இவற்றின் விளைவாக சென்ற ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அளவு கீழே குறிப்பிட்டபடி கொடுக்கப்பட்டது:—

| | டன்கள். |
|---|---|
| 1973 நவம்பர் | 27,716 |
| 1973 டிசம்பர் | 24,995 |
| 1974 சனவரி | 26,611 |
| 1974 பிப்ரவரி | 21,801 |
| 1974 மார்ச்சு | 22,011 |

சென்ற பிப்ரவரி திங்கள் தொடக்கத்தில் இம்மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் 20,301 டன்கள் தான் ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு அறிவிப்பு செய்தது. நமது முதலமைச்சர் மத்திய பெட்ரோலிய-ரசாயனத் துறை அமைச்சருடன் தந்தி மூலம் தொடர்பு கொண்டு தமிழ்நாட்டிற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அறிவிக்கப்பட்ட அளவைவிட பல மடங்குகள் அதிகமாக குறைக்கப்பட்டிருக்கிறதெனவும் இதனால் மக்களுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்படுமென சுட்டிக்காட்டினார். இதன் விளைவாக பிப்ரவரி திங்கள் ஒதுக்கீடு 20,301 டன்களிலிருந்து 21,801 டன்களாக உயர்த்தப்பட்டது.

டீசல் எண்ணெயின் விலையும் மண்ணெண்ணெய் விலையும் ஏறத்தாழ சமமாக்கப்பட்டதால், இவ்விரண்டினையும் கலப்படம் செய்வது தவிர்க்கப்பட்டு இந்த அளவிற்கு மண்ணெண்ணெய் மக்களுக்கு கிடைக்கிறது என்ற கருத்தினைக் கொள்ளலாம். இதனால் நமது தேவையை பூர்த்தி செய்ய ஏறத்தாழ 25,000 டன்கள் மண்ணெண்ணெய் கிடைத்தால் போதுமானது. இப்பொழுது கிடைத்துவரும் மண்ணெண்ணெய் தேவைக்கு குறைவான போதிலும்

சீராகவும் சிக்கனமாகவும் வழங்கினால் ஓரளவு சிரமமாக இருந்தாலும் பெருமளவு பற்றுக்குறை ஏற்படுவதற்கு நியாயமில்லை. இப்பொழுது மாநிலம் முழுவதிலும் மண்ணெண்ணெய் நிறுவனங்களின் ஒப்புதல் பெற்றவர்களும் மண்ணெண்ணெய் கட்டுப்பாடு உத்தரவின் கீழ் உரிமம் பெற்றவர்களுமான மொத்த வணிகர்களுக்கும் சில்லறை வணிகர்களுக்கும் மேற்சொன்ன நிறுவனங்கள் எண்ணெய் வழங்கி வருகின்றன. சில்லறை வணிகர்களின் விற்பனை கிடங்குகள் மூலமாகவோ தெருக்களில் கைவண்டிகள் மூலமாகவோ பொது மக்களுக்கு மண்ணெண்ணெய் விற்கப்படுகிறது. 6—2—1974 அன்று உணவுத் துறை செயலர் மண்ணெண்ணெய் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து பேசியதில் மேற்படி நிறுவனங்கள் சென்னை நகரிலும் மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப சரக்கு தாமதமன்னியில் வழங்கவும் ஒவ்வொரு நாளும் எந்த அளவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை உணவுப் பொருள் ஆணையருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரிவிக்க ஒப்புக் கொண்டனர். இதன் தொடர்பாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆங்காங்கு மக்களுக்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப் படுகிறதா எனவும், மொத்த வணிகர்கள் சில்லறை வணிகர்கள் இவர்களுடைய கணக்குகள், இருப்பு ஆகியவற்றை அடிக்கடி தணிக்கை செய்ய அறிவுரைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சென்னையிலும் மற்ற நகர்ப்புறங்களிலும் மண்ணெண்ணெய் வழங்கும் கைவண்டிகள் தெருக்களில் மக்களுக்கு வழங்குவதோடல்லாமல் நியாய விலைக்கடைகள் அருகிலும் குறிப்பிட்ட நேரங்களில் தங்கி தேவைப்பட்டவர்களுக்கு எண்ணெய் வழங்க வசதிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மண்ணெண்ணெய் விலை உயர்த்தப்பட்ட சமயத்திலும் அண்மையில் விலையை மேலும் உயர்த்திய சமயத்திலும் இந்த விலை உயர்வை பயன்படுத்தி மண்ணெண்ணெய் பதுக்கினால் தட்டுப்பாடு ஏற்பட்டதாக புகார்கள் இருந்தன. ஆனால் உடனடியாக ஆங்காங்கு காவல் துறையின் உணவுப் பொருள் பிரிவும் உணவுப் பொருள் வழங்கு துறையினரும் செயல் புரிந்து பதுக்கல் செய்தவர்களின் பேரில் நடவடிக்கை தொடர்ந்து எண்ணெய் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும்படி செய்யப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் 3 வியாபாரிகள் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சியாளரால் நிர்ணயிக்கப் பட்ட விலையான ரூ. 1.07, 1.12-க்கு மாறாக, ரூ. 2 வீதம் விற்றதாகக் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் தொடரப்பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களாக பதுக்கல், சட்டத்தை மீறுதல் போன்றவற்றினை ஒடுக்க காவல் துறையினரின் உணவு பிரிவு கடுமையான நடவடிக்கை எடுத்து நிலைமை சீரடைந்து வருகிறது. அரசு மண்ணெண்ணெய் வழங்கலை முனைப்பாக [illegible]



**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்திற்கு வருகிற மண்ணெண்ணெய்யை முறையாக விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கார்ட் விநியோகம் செய்து அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கக் கூடிய ரூ. 1.12-க்கு நியாய விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? கிராமப்புறங்களில் அறவே மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்ற புகார் நிறைய வந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அங்கு தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொடுப்பதே இல்லை. எல்லாம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கிறோம். மற்ற மாவட்டங்களில் அநேகமாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுப் பதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். சிலயிடங்களில் கூட்டுறவு சங்கங்கள் வழி விநியோகிக்க ஆங்காங்கு கிராமங்களுக்குள்ளே செல்ல முடியாத காரணத்தால் சிலயிடங்களில் தனிப்பட்ட முறையில் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதையும் மாற்றவேண்டுமென்று கலெக்டர்களுக்கு நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். அநேகமாக அவர்களுக்கு பெரிய கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் தொடர்ந்து இந்த மண்ணெண்ணெய் பஞ்சம் இருந்துகொண்டிருக்கிறது. இதைப் போக்க அரசு ஏதாவது தனி முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இரண்டு ரூபாய்க்கு விற்ற தாகச் சொன்னார்கள். விற்ற வியாபாரியைப் பிடித்து வழக்கு போட்டிருக் கிறோம். இன்று காலையில் கூட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசினேன். அப்படி ஒன்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு மக்கள் காத்திருக்கக்கூடிய அளவிற்கு இல்லை.

**(4) 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**(அ) நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள்.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,21,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to supply milk for the poor in the cities and major towns at a subsidised rate, I move—

'That the allotment of Rs. 3,00,21,700 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100'.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, பால் வாங்கும் கார்டுகள் இல்லாத பொது மக்களுக்கும் பால் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,21,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, பால் திட்டத்திற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அனுப்பும் பாலுக்கு நியாயமான விலை கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,21,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்த முன்மொழிகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, அரசு பால் பண்ணைகளில் பாலுடன் பவுடர் பாலைக் கலந்து விற்பனை செய்வதைத் தவிர்க்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,21,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பால் வழங்கு திட்டம் செயல்படவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,21,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to extend the Dairy Development Schemes to Hosur and Denkanikota taluks, I move—

'That the allotment of Rs. 3,00,21,700 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100'.

THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the need to start a separate Dairy Development Corporation for North Arcot District, I move—

'That the allotment of Rs. 3,00,21,700 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100'.

**(ஆ) நிதிக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 12—1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,09,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 12—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,09,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 1,09,24,000, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100'.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களைக் கோவில்களில் பாதுகாவலர்களாக நியமிக்கக் கூடாது என்பதுபற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,09,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, மயிலை கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் கடைகள் கட்டுவதற்குக் கொடுத்த டெண்டரில் நடைபெற்ற முறைகேடுகளை எடுத்துக் கூற—

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,09,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், குன்றத்தூர் கிராமம் திருவூரகப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான புஞ்சை சர்வே நிர். 1511/1-ல் உள்ள 40 சென்டு நிலத்தில் வீடுகள் கட்டி குத்தகைக்கு விடுவதில் ஏற்பட்ட தாமதத்தைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 12—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,09,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, திருமண மண்டபங்கள் அதிகமாக ஏற்படுத்த நிதி ஒதுக்குவது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,09,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss about the necessity to reconstitute the Kanyakumari Devaswom Board in the light of the abolition of the special privileges of the princes, I move—

'That the allotment of Rs. 1,09,24,000, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100'.



THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the need to lay a ghat road to Chandra Choodeswara Temple at Hosur in Dharmapuri district, I move—

'That the allotment of Rs. 1,09,24,000, under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100'.

### (இ) நிதிக் கோரிக்கை எண். 27—கதர்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 60,23,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 60,23,700 under Demand No. 27—Khadi—be reduced by Rs. 100'.

THIRU P. SOUNDARAPANDIYAN : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 60,23,700 under Demand No. 27—Khadi—be reduced by Rs. 100'.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 60,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 60,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, கதர்த்துணிகள் விற்பனையைத் தீவிரப்படுத்துதல் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 60,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, அம்பர் சர்க்காவில் நூல் நூற்கும் தொழிலாளர்களுக்கு கூலியை உயர்த்திக் கொடுக்காமல் இருப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 60,23,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

*** மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, பால் வழங்குத் துறை, அறநிலையத்துறை, கதர் வாரியம் ஆகியவைகளைப்பற்றிய விவரக் கொள்கை குறிப்புகள் @ மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப் பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் இந்த மூன்று துறைகளிலும் கடந்த காலத்தில் செய்துள்ள பல்வேறு சாதனைகளையும் எடுத்துச்சொல்லி, எதிர் காலத்தில் செய்ய இருக்கிற பல்வேறு திட்டங்களைப் பற்றியும் அதிலே விளக்கமாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். இருந்தாலும் ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

பால்துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலுள்ள உழவர் பெருங்குடி மக்களுக்கு அது ஒரு துணைத் தொழிலாகவும், சாதாரண ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் இருந்து வரும் தொழிலாகவும் இருப்பது பால் பண்ணைத் தொழிலாகும்.

இந்தத் தொழிலைப் பொறுத்த வரையில் தற்போது தமிழ்நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் சாதாரண ஏழை மக்களுக்கு, அன்றாட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்வதற்கும், அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு சத்துணவு கிடைக்கச் செய்யவேண்டு மென்ற அடிப்படையையும் மையக் கருத்தாகக் கொண்டுதான் இன்று தமிழ் நாடு பால் டெவலப்மென்டு கார்ப்பரேஷன், ஏற்கனவே இருந்து வருகிற பால் வளத்துறை ஆகியவற்றின் மூலம் ஏராளமான காரியங்களை நாம் செய்து வருகிறோம்.

குறிப்பாக, பால் பெருக வேண்டுமென்று சொன்னால், நல்ல கால்நடைகள் இருக்கவேண்டும். வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு இந்திய அரசாங்கத்தின் வாயிலாக, பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம்.

---

@ மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்களின் உரை இணைப்பு II ஆக 275 to 279 பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.



சென்ற ஆண்டு வெளிநாடுகளிலிருந்து கால்நடைகளை இறக்குமதி செய்து இனப்பெருக்கம் செய்து இருக்கிறோம். எதிர்காலத்தில் சுமார் 70 லட்சம் ரூபாய் செலவில் இந்தியா–நியூசிலாண்டு ஆகிய இரண்டு நாடுகளின் ஒப்பந்தத்தின்கீழ் ஜெர்சி பண்ணை ஒன்றைக் கொடைக்கானலில் அமைக்கும் ஏற்பாடுகளை மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டும், நியூசிலாண்டு அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டும் இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சீப் மினிஸ்டர் காதை ஆதி கடிக்கிறார். ஜாக்கிரதை. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இப்படிப்பட்ட திட்டம் அமுலுக்கு வருமானால் நிச்சயமாகத் தரமான கால்நடைகள் தமிழ்நாட்டில் உற்பத்தி யாகும். அதன் மூலம் அதிகமான பாலும் உற்பத்தியாகும். பாலுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலும் இருக்கும். அதிகமான பாலை உற்பத்தி செய்யும் வகையில் வருகிற 5 ஆண்டு காலத்தில் பல திட்டங்களைச் செய்து இருக்கிறோம். குறிப்பாக சுமார் 2 கோடி செலவில் ஈரோட்டில் குழந்தை பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று விரைவில் ஏற்படுத்தவேண்டுமென்று மத்திய சர்க்காரை பால்வள வாரியத்தின் மூலம் கேட்டு இருக்கிறோம்.

அதேபோல் மதுரையில் இப்போது தினசரி 1 லட்சம் லிட்டர் பால் பவுடர் செய்யக்கூடிய அளவுக்கு இயந்திரங்கள் நிர்மாணித்து வருகிறோம். இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த தொழிற்சாலையில் உற்பத்தித் தொடங்கும்.

கடந்த 4–5 ஆண்டுகளுக்கு முன்னால் தினசரி 50,000 லிட்டர் தான் சென்னை நகர மக்களுக்கு வினியோகம் செய்து வந்தோம். இன்று நாள் ஒன்றுக்கு 1¼ லட்சம் லிட்டர் வினியோகம் செய்கிறோம். சேகரிப்புத் திறனையும் அதிகரித்து இருக்கிறோம். இப்படி பல்வேறு வகைகளிலும் நாம் பால் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம்.

அதே நேரத்தில் பால் உற்பத்தி அதிகம் கிடைக்கவேண்டுமென்ற அளவில் சென்ற ஆண்டு 16—7—1973 முதல் பால் தரும் சொந்தக்காரர்களுக்கு உதவித் தொகை அளித்து வந்ததை ஒரு லிட்டருக்கு 10 காசிலிருந்து 15 காசு

[திரு. மு. கண்ணப்பன்] [1974 எப்ரல்

வரை அதிகப்படுத்தினோம். இருந்தாலும் விலையேறி இருக்கிறது, கால்நடை மாட்டுத் தீவனம் விலையேறி இருப்பதால் இன்று உற்பத்தியாகிற விலை கட்டுபடியாகவில்லை என்று கேட்ட காரணத்தால், அவர்களுக்கு நேற்று முன்தினத்திலிருந்து 10 பைசா விலை உயர்த்தி தமிழ்நாடு முழுவதும் தரப்பட்டிருக்கிறது. வாங்குகிற விலை தான் ஏற்றப்பட்டிருக்கிறதே தவிர பொதுமக்களுக்கு வழங்கும் விலையை ஏற்றவில்லை. கடந்த காலத்தில் இருந்து வந்த விலையிலேயே தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதோடு பால் வள வாரியத்தின் சார்பில் மாதவரத்தில் தயாராகிற சுவை யூட்டிய பால், பால்கோவா இப்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய நாட்டிலுள்ள மக்கள் எல்லாம் அதன் தன்மையை அறிந்து இருக்கிறார்கள். இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் லாபியில் வழங்கச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதியையும் பெற்று இருக்கிறேன். இந்தச் சுவையை நீங்கள் அறிந்து . .

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நம்முடைய அரசாங்க பால் நிறுவனத்திலே தயாரிக்கப்படுகின்ற அருமையான பால்கோவாவையும், சுவையூட்டிய பாலையும் எங்களுக்கு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று அறக்கட்டளை மானியமும் நடைபெறுகிறது. அங்கே செய்யப்படுகின்ற சுண்டல், பொங்கல் ஆகியவற்றையும் சேர்த்துக் கொடுத்தால் சுவை அருமையாக இருக்கும்.

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நன்றி. இது தொடர்ந்து தினந்தோறும் கொடுக்கப்படுமா ? அல்லது இன்று மட்டும் தானா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர், சார் இப்படி பால்கோவா கொடுத்து அவருடைய டிமாண்டை இனிமையாக்கி நிறைவேற்றி விடலாம் என்று பார்க்கிறார்களா ?

It will amount to bribing M.L.As.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அம்மையார் வேண்டுமானால் சாப்பிடாமல் கொஞ்சம் காரமாகப் பேசலாம்.

கோவில் பிரசாதம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். இதிலே கலந்து கொண்டு நல்ல முறையில் பேசுபவர்களுக்கு ஆண்டவன் அருளே கிடைக்கும் போது பிரசாதம் தேவையில்லை.



1974 ஏப்ரல் 4]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆண்டன் அருள் ஏதோ பாக்கெட்டில் வைத்துக்கொண்டு பேசுவது மாதிரி சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அறநிலையத்துறையைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டு செய்திருக்கும் சாதனைகளைக் குறிப்பிட்டு, இந்த ஆண்டு மேற்கொண்டு செய்ய இருக்கிற காரியங்களைப் பற்றியும் சொல்லி இருக்கிறோம்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் சார்பில் எடுத்துக் கொள்ள வேண்டிய அறநிலையங்கள் ஏராளமாக இருந்தாலும் 1974-ம் ஆண்டு வரை 15,068 அறநிலையங்களை அறநிலைய ஆட்சித்துறையின்கீழ் கொண்டு வந்திருக்கிறோம். வருகிற ஆண்டு சுமார் 26,000 புதிய அறநிலையங்களை இந்தத் துறையின் கீழ் கொண்டுவர இருக்கிறோம்.

அதேபோல் கோவில் திருப்பணி எடுத்துக்கொண்டாலும் 1967 முதல் 1973-ம் ஆண்டு வரை 6 ஆண்டுகாலத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற சுமார் 3,095 கோவில்களுக்கு திருப்பணி முடிந்தும், நடைபெற்றும் வருகின்றன. 1974-75-ம் ஆண்டில் 1,500 கோவில்களில் திருப்பணி செய்யவேண்டுமென்று திட்டமிட்டு இருக்கிறோம்.

(முற்பகல் 10-30)

அதேபோல திருப்பணி என்று சொல்லி அரசாங்கத்தினுடைய நிதி உதவி 1967-ல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 லட்சம் கொடுத்தோம். அதே திருப்பணிக்கான உதவி சென்ற ஆண்டு ரூ. 6 லட்சமாக உயர்த்தப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 1974-75-ம் ஆண்டுக்கு ரூ. 15 லட்சம் அரசாங்கத்தினுடைய நிதி உதவி திருக்கோவில்களினுடைய திருப்பணிக்காக அரசாங்கம் கொடுக்க இருக்கிறோம்.

அதேபோல புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட கோவில்கள் அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் வராமல் தனியாருடைய உடைமையில் இருக்கக்கூடிய கோவில்கள் 41,306 கோவில்களை இதுவரையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சில பகுதிகளில் கண்டு பிடிக்கவேண்டும் என்று சொல்லி அவர்களுடைய வேலையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்கள். 41,306 கோவில்களில் இந்தத் துறையினுடைய ஆளுகைக்குள் எடுத்துக்கொண்டிருக்கிற கோவில்கள 10,914 கோவில்கள். வருகிற ஆண்டில் இதனை 26,000 கோவில்களாக நாம் கொண்டுவர இருக்கிறோம்.

ஏற்கனவே சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட 10,914 கோவில்களைப் பொறுத்தவரையில், அவைகளுக்குச் சேர்ந்த 44,218½ ஏக்கர் நிலங்களையும் இந்தக் கோவில்களோடு சேர்த்து இந்தத் துறைக்காக நாம் எடுத்திருக்கிறோம். புதியதாக சேர்க்கப்பட்ட கோவில் களுக்கும், ஏற்கனவே இருந்த கோவில்களுக்கும் உட்படாமல் தனிப்பட்டவர்கள் அனுபவித்துக்கொண்டு வந்த நிலத்தைச் சேர்த்து அந்த அளவுக்கு நாம் எடுத்திருக்கிறோம். எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நிலத்தின் அளவு சுமார் 1½ லட்சம் ஏக்கருக்கு மேல் இருக்கும் என்று துறை அதிகாரிகள் கணக்குப் போட்டிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு நிர்வாகிகளாக இதுவரையில் தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பில் இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். திருவாங்கூர் மகாராஜாவினால் ஒரு உறுப்பினர் நியமிக்கப்படுகிறார். இப்படி மூன்று பேர் கொண்ட தேவஸ்வம் போர்டு இயங்கி வந்தது.

இந்த தேவஸ்வம் போர்டின் நிர்வாகம், சட்ட திட்டங்கள் சரியானபடி இல்லாத காரணத்தினால் நிர்வாகம் மோசமான நிலையில் வைத்திருந்தார்கள். தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களில் இருப்பதுபோல் கன்னியாகுமரி மாவட் டத்திற்கு இந்த அற நிலையத் துறையினுடைய சட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சென்ற ஆண்டு முடிவெடுக்கப்பட்டது. மத்திய அரசிடம் கடந்த 1½ ஆண்டுகளாக கேட்டதற்குப் பிறகு போன வாரத்தில் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இந்த அற நிலையத் துறை யினுடைய சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துவதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கோவில்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் சுமார் 50,000 பேர்களுக்கு சென்ற ஆண்டு அவர்களுக்கான சம்பளத்தையெல்லாம் நிர்ணயம் செய்து அறிவித்து, ஆண்டு தோறும் ரூ. 60 லட்சத்திற்கு மேலாக அதிகப்படி செலவானாலும், ஊழியர்களின் நன்மையைக் கருதி அந்தத் திட்டத்தை நிறை வேற்ற திட்டமிட்டோம்.

அப்படிப்பட்ட ஊழியர்கள் மற்றொரு கோரிக்கையையும் விடுத்தார்கள். லட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் கோவில்களுக்கும் மட்டும் வருங்கால வைப்பு நிதி தற்பொழுது இருக்கிறது. அதை ரூ. 10,000-க்கு வருமானம்





வருகின்ற கோவில்களுக்கும் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ரூ. 10,000 வருமானம் வரக்கூடிய கோவில் களில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி இந்தத் துறையினால் அளிக்கப்படும் என்ற மகிழ்ச்சி அளிக்கும் செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தனை அறிவிப்புக்கும், இத்தனை திட்டங்களுக்கும் மேலாக தமிழ் நாட்டிலே ஜாதி அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமானால் தமிழ் நாடு கோவில் களில் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகர்களாக அவர்கள் செல்லவேண்டும். அத்தகைய தகுதி சட்டபூர்வமாக அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்ற நம்முடைய அடிப்படைக் கொள்கையை பல முறை சட்ட மன்றத்தில் பேசி தீர்மானம் போடுவதாக எதிர்காலத்தில் இருந்தாலும், அதற்கான சட்டம் இயற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி, இன்றைக்கு நீதி மன்றத்தில் அது முடக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய சட்டம் நம்முடைய தமிழகத்தில் நிறைவேற்றப்படவேண்டு மானால் அரசியல் நிர்ணய சட்டம் திருத்தப்பட வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டு மக்கள் அத்தகைய கோரிக்கையை கிளப்பிக்கொண்டிருக்கும் காட்சியை நாம் நாட்டில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அத்தகைய சட்டம் திருத்தப்படுவதற்கு நம்முடைய சட்ட மன்றத்தில் கூட எதிர்காலத்தில் ஒரு தீர்மானத்தை இங்கே இருக்கிற அனைத்துக் கட்சியினுடைய உறுப்பினர்களின் ஒத்துழைப்பால் நாம் போட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பினால் நிச்சயம் அதற்குப் பரிகாரம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அதற்கும் எதிர்காலத்தில் உறுப்பினர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கதர் துறையைப் பொறுத்தவரையில் கிராமத்தில் இருக்கிற சாதாரண ஏழை மக்களுக்கு, லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு தந்து கொண்டிருக்கிற ஒரு இயக்கமாகும். 1966-67-ல் 7½ கோடி ரூபாய் அளவுக்கு இருந்த கதர் உற்பத்தி இந்த ஆண்டு 11 கோடியாக நாம் உயர்த்தியிருக்கிறோம். அதேபோல விற்பனையைப் பொறுத்தவரையில் 1967-ம் ஆண்டில் 9 கோடி ரூபாயாக இருந்தது, இந்த ஆண்டு 12 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந் திருக்கிறது.

அதேபோல ஒட்டு மொத்தமாக சுமார் 2½ லட்சம் பேர்களுக்கு இந்த வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு தந்திருக்கிறோம். 398 துறையினுடைய அலுவலகங்கள், 2,430 கூட்டுறவு நிறுவனங்கள் தமிழ் நாடு கதர் கிராமத்

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 4

துறையின் சார்பில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. வெளி நாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய வகையில் தூத்துக்குடியிலிருந்து பனம்தும்பு (ஃபைபர்) தொழிற்சாலை ஏற்றுமதியின் மூலம் சுமார் 9 லட்சம் வருமானம் வரக்கூடிய பனம்தும்புகள் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம்.

இந்த அளவுக்கு பல்வேறு திட்டங்களை கொள்கை குறிப்பிலே நான் கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இன்றைக்கு நம்முடைய நாட்டிலே இருக்கிற வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே கதர் கிராமத் தொழில்கள் பங்கு கொள்ளவேண்டும் என்று சொல்லி 1974-75-ம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்கு ரூ. 34.65 கோடி முதலீட்டில் ஒரு வேலை வாய்ப்புத் திட்டம் கதர் கிராமத் தொழில் துறையில் தீட்டப்பட வேண்டும் என்று சொல்லி, அரசாங்கத்தினிடம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

கதர் கிராமத் தொழில் துறை ஏற்றுக்கொண்டிருக்கிற 17 கிராமத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிற சுமார் 3 3/4 லட்சம் கைவினைஞர்கள் இதன் மூலம் பயன் அடைகிறார்கள்.

தமிழ் நாட்டு பஞ்சாயத்து யூனியன் கூட்டுறவு நிர்வாகத்தில் ஏற்படுத்திய கூட்டுறவு அமைப்புகளில் கைவினைஞர்கள் உறுப்பினர்களாக ஆக்கப்பட்டு, கைவினைஞர் ஒவ்வொருவருக்கும் அந்தக் கூட்டுறவு நிறுவனத்தில் ரூ. 12½ கொடுத்து உறுப்பினர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

காதி கமிஷனலிருந்து ரூ. 87½ அவர்கள் பங்கு கொள்வதற்கு உதவித் தொகையாகக் கொடுக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து நாம் ரூ. 100 கொடுக்கிறோம். ஒட்டுமொத்தமாக ரூ. 200 பங்குத் தொகையாக வைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து உறுப்பினர்களுக்கு ரூ. 2,000-க்கு மேற்படாத அளவுக்கு அவர்கள் தொழில்கள் துவக்குவதற்கு கடன் உதவி பெற்று, அவர்களுடைய தொழிலை மேம்பாடு அடையச் செய்வதற்கு திட்டங்கள் இந்த ஆண்டிலிருந்து தொடங்கியிருக்கிறோம்.

ஏற்கனவே மகாராஷ்டிரா மாநிலத்தில் இந்தத் திட்டம் தொடங்கி வெற்றிகரமாக செயல்பட்டிருப்பதால், அந்தத் திட்டத்தை நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் எல்லாவற்றிலும் ஆரம்பிக்கவேண்டுமென்று இருந்தாலும் சில மாவட்டங்களில் முன் மாதிரியாக ஆரம்பிப்பதற்கு கதர் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.



[திரு. மு. கண்ணப்பன்]

1974 ஏப்ரல் 4]

பல்வேறு திட்டங்களை இந்த நாட்டில் செயல்படுத்துவதற்கு நல்ல குறிப்புகளை இங்கே தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் இங்கே வழங்கி, எதிர் காலத்தில் இந்தத் துறைகள் இன்னும் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மான்யங்களின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நாட்டிலே பால் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறிப்புகளிலே நல்ல முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சத்துணவு மக்களுக்கு இருந்தால் தான் சத்தான கருத்துக்களைக் கொள்ளவும் வாழ்க்கையிலே அவர்கள் மேற்கொள்ள வேண்டிய வேலைகளை செம்மையாக நிறைவேற்றுவதற்கும் உதவிகரமாக இருக்கும் என்ற வகையில் பால் உற்பத்தித் திட்டத்தை இந்தத் துறை செம்மையாக செயல்படுத்திவர திட்டங்களை வகுத்திருக்கிறது என்பதை இந்தக் குறிப்பிலே நாம் அறிகிறோம்.

ஆனால், அதே நோக்கில் ஒரு ஏமாற்றமும் நமக்கு ஏற்படுகிறது. அமைச்சர் அவர்களுடைய குறிப்பைப் பார்த்தால், அனைத்து இந்திய பால் தேவையிலே நமக்குச் சரியான உணவுக்கு சராசரி தேவை என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது 300 கிராம் பால் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய அளவில் பார்க்கும்பொழுது 130 கிராம் தான் சராசரி ஒரு ஆளுக்குக் கிடைக்கக்கூடிய அளவில் இந்த நாட்டில் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை குறிப்பிட்டுவிட்டு, தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் அகில இந்திய சராசாரி அளவைவிட பாதிக்கும் குறைவாக 63 கிராம் தான் கிடைக்கிறது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் இது சராசரி கணக்குத் தான். தமிழ் நாட்டில் பால் குடிக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையை எடுத்து மொத்த ஜனத்தொகையை எடுத்து வகுத்துப்பார்த்தால் 63 கிராம் என்று வருகிறதே தவிர, தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை மக்களுக்கும் இன்றைக்கு பால் கிடைக்கிறது என்ற நிலை இருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை.

நகரங்களில் இருப்பவர்களும், பெரும் ஊர்களில் இருப்பவர்களும் பால் குடிக்கக் கூடிய வசதியைப் பெற்றிருக்கிறார்கள். நாடு பூராவிலும் பார்த்தால் யார் பால் உற்பத்தி செய்கிறார்களோ, மாடுகளை வைத்து வளர்த்து, பால்

கறந்து, பால் உற்பத்தி செய்கின்றார்களோ அவர்கள், அப்படி பால் உற்பத்தி
செய்பவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பாலை குடிக்காமல், பாலை விட்டுத்
தான் மற்ற உணவு வகைகளை உண்டு வாழக்கூடிய ஏழ்மையிலே இருக்கிறார்கள்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பாலை நம்முடைய மக்களுக்கு கொடுக்க
முடியாத நிலையில் நாம் இருக்கிறோம் என்று நினைக்கும்போது மிகவும் வருத்த
மாக இருக்கிறது. என்ன செய்வது? உண்ண உணவில்லை; பாலுக்கு எங்கே
போவது என்று சொல்லி நம்மை நாமே திருப்திபடுத்திக்கொள்கிறோம்.

பால் என்பது மனிதனுடைய பாலுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்ப
தாகும். ஆண்பால், பெண்பால் என்று சொல்கின்ற இந்த பால்களுக்கே
அந்தப் பால்தான் அடிப்படையாக அமைந்து இருக்கிறது என்பதை
எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம்; எடுத்துச் சொல்கிறோம். அந்தப் பால்
இல்லாவிட்டால் நாம் எல்லாம் பாலுக்கு அப்பாற்பட்டவர்களாகத்தான்
இருப்போம். ஆகவே, பாலுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்; பாலை
உற்பத்தி செய்வதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பைப் பார்த்தால் ஒருசில
மாவட்டங்களில்தான் பால் உற்பத்திக்கானத் திட்டங்களை வகுத்துத் தந்திருக்
கிறார்கள். எல்லா இடங்களிலும்—எந்தெந்த இடங்களிலே பால் உற்பத்தி
செய்ய, மாட்டுப்பண்ணைகளை வைக்க முடியும் என்று ஆராய்ச்சி செய்து, தீவிர
நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோமா என்று பார்த்தால் நிச்சயமாக
இல்லை என்றுதான் நான் சொல்வேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்
கிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய மதிப்பீட்டுக் குழு வடாற்காடு
மாவட்டத்திலே பால் உற்பத்தித் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்
கூறுகள் இருக்கின்றன என்று பரிந்துரைத்திருக்கிறது. அங்கே இருக்கின்ற
ஏலகிரி மலை மிக உயரமானது—4,000 அடி உயரம் உள்ளது. அங்கே ஜெர்ஸி
போன்ற நல்ல இன மாடுகளை வைத்து, பால்பண்ணை அமைத்து, பால்
உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று இதுவரையில் தெரியவில்லை.
அதைப்போலவே ஜவ்வாது மலையிலே பால் பண்ணை வைப்பதற்கான வசதி
களும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்பதை மிகத் தெளிவாக மதிப்பீட்டுக்
குழு தெரிவித்திருக்கிறது. மதிப்பீட்டுக் குழு பரிவுரை செய்து மூன்று ஆண்டு
களாகியும் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை



இந்த குறிப்பில்கூட சொல்லவில்லை என்பது வருத்தத்தை அளிக்கிறது. அந்த
இந்த குறிப்பில்கூட சொல்லவில்லை என்பது வருத்தத்தை அளிக்கிறது. அந்த
பரிந்துரைகளின்படி மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பகுதிகளை நல்ல
முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாட்டுப் பண்ணைகளை வைக்க
ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்; பால் உற்பத்தித் திட்டத்தை வடாற்காடு
மாவட்டத்தில் முன்னப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பால் துறையிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் நல்லமுறையில்
நடைபெறுகின்றனவா என்று பார்த்தால் அதுவும் இல்லை என்றுதான் சொல்ல
வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் கொள்கைப்படி அவை நடைபெற
வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற இப்படிப்பட்ட அமைப்புகளில் தலைவர்
களாகவும் உறுப்பினர்களாகவும் இருக்கின்றவர்கள் அந்த அமைப்பிலிருந்து
கடன்களை வாங்கக்கூடாது என்று பொதுவாக நாம் விதிமுறைகளை வைத்தி
ருக்கிறோம்.

ஆனால் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ, யார் தலைவராக இருக்
கிறார்களோ அவர்களே பாலை யூனியனிலிருந்து கடனைப் பெற்று, பணத்தை
திருப்பிக் கட்டாமல் 'டிபால்ட்டர்களாக' இருக்கிறார்கள். கொடுக்கவேண்டிய
பணத்தை திரும்பக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள்
தொடர்ந்து அந்தப் பதவிகளில் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருந்தால்
எவ்வளவு தூரம் இந்தத் துறை இயங்கமுடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய சக சட்ட
மன்ற உறுப்பினர் திரு. வெகாப் அவர்களுடைய தொகுதியாகிய வந்தவாசியில்
ஒரு பால் கூட்டுறவு யூனியன் இருக்கிறது. அந்த யூனியனில் இருக்கிற
தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லோரும் அதிலிருந்து பாலை கடனைப்
பெற்றிருக்கிறார்கள். அதற்கானப் பணத்தைக் கட்டாமல் அவர்கள்
டிபால்ட்டர்கள் என்று ரிக்கார்டு ஆகியிருக்கிறது.

வெகாப் அவர்கள் அதைப்பற்றி வடாற்காடு மாவட்டத்திலே வேலூரில்
இருக்கிற துணைப்பதிவாளர் அவர்களிடம் முறையீடு செய்தார்கள். நீங்கள்
100 ரூபாய் கட்டி, அதற்கான விண்ணப்பத்தைத் தந்தால்தான் விளக்கம்
தரப்படும்; சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் பணம் கட்டாமல் விளக்கம்
தரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொன்ன முறையீட்டை
கவனித்து ஆவன செய்கிறேன் என்று அந்த அதிகாரி சொல்லியிருக்கலாம்.

அதிகாரி என்றால் அதிகக் காரியங்களைச் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற அதிகாரிகள் அதிக காரியங்களைக் கெடுக்கக்கூடிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதிகமான காரியங்களை சாதிக்கக்கூடியவர்களாக இல்லாமல் கெடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதிகாரிகள் இந்தப் போக்கை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் அவர்களை மாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜாதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜாதி என்று சொன்னால் இன்றைக்கு எதையோ நினைக்கிறார்கள். கதர்த் துணியை உற்பத்தி செய்வது மட்டுமல்ல அதன் நோக்கம். காந்தியடிகள் 'கிராம உத்தியோக பவன்.' என்று இருந்த கதர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

நம்முடைய நாடு அரசியல் சுதந்திரம் பெற்றால் போதாது, பொருளாதார சுதந்திரமும் பெறவேண்டும். அதற்கு கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்ற முறையிலே இந்தத் திட்டத்தை காந்தியடிகள் கொண்டு வந்தார்கள். தன்னுடைய தேவைகளுக்கு மற்றவர்களை எதிர்பார்க்கக்கூடாது; உணவு, உடை, இதரப் பொருட்கள் எதுவானாலும் நம்முடைய தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்; சுய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் பொருளாதார சுதந்திரத்தை நான் அடையவேண்டும்.

நம்முடைய நாடு கிராமங்கள் நிறைந்த ஒரு நாடு; கிராமங்கள் வாழ்ந்தால் தான் இந்திய நாடு வாழும்; கிராமங்கள் சுய தேவை பெற்றால்தான் மக்கள் மக்கள் சந்தோஷமாக வாழ்வார்கள் என்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அதற்கானத் திட்டங்களை வகுத்தார்கள். அதற்காக சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

அது இன்றைக்கு எந்த அளவுக்கு நாட்டு மக்களிடம் பரவி இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நாட்டிலே நடைமுறை எப்படி இருக்கிறது? ஜாதிகள் இல்லை; இரண்டே இரண்டு ஜாதிகள் தான் என்று பாரதியார் சொன்னார். ஆண்பால், பெண்பால் என்ற இரண்டே ஜாதிகள்தான் சமுதாயத்தில் இருக்கிறது என்பது கற்பனையாகிவிட்டது.

இன்றைக்கு ஏழை பணக்காரன், தொழிலாளி முதலாளி, உயர்ந்தவன் தாழ்ந்தவன், சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் என்றெல்லாம் ஜாதிகள் இருக்கின்றன. எந்த ஜாதியாக இருந்தாலும் பணக்காரர்கள் எல்லாம் ஒன்றாக





சேர்ந்துவிடுகிறார்கள்; எந்த ஜாதியாக இருந்தாலும் சுரண்டல்காரர்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள். எந்த அரசாங்கம் வந்தாலும் இந்த நிலைதான் நீடிக்கிறது.

இந்த முறைகளை, இந்த ஜாதிகளை இந்த நாட்டிலிருந்து வேரறுத்து அகற்ற வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நம்முடைய தேசப்பிதா, மகாத்மா காந்தியடிகள் சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் இன்றைக்கு அதைப்பற்றி என்ன நினைக்கிறோம்?

கதர் துணியை உடுத்திக்கொண்டால் காந்தியடிகளின் தத்துவம் ஈடேறி விட்டதாக கருதுகிறார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற சுரண்டல்காரர்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற பித்தலாட்டக்காரர்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற சுயநலவாதிகள் இவர்களை ஒழிப்பதற்கு என்ன திட்டத்தை வகுத்திருக்கிறோம் என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தங்களுக்குத் தேவையான துணிகளை உற்பத்திச் செய்துகொள்வதற்கு மட்டுமல்லாமல் கிராம மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும் கதர் துறை ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு இந்த கதர் துறை அப்போது ஆரம்பிக்கப்பட்டது. அதே திட்டம் தான் இன்றைக்கு இருக்கிற கைத்தறித் துறையும். அதே நோக்கத்தோடுதான் இந்தத் துறையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டும் தனித்தனித் துறையாக இருக்க வேண்டுமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த இரண்டு துறைகளின் நோக்கத்தை உணர்ந்து, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, ஏதாவது ஒரு செயல்முறையை வகுக்க முடியுமா என்று நினைத்துப் பார்க்க வேண்டும். கதர் இயக்கத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று நாம் சொல்கிறோம்.

ஆனால் அதேநேரத்தில் கைத்தறியாளர்களின் நிலைமை என்ன? கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற லட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய அளவில் நூல் கிடைக்கவில்லை; தறி கிடைக்கவில்லை; பணவசதி கிடைக்கவில்லை. போதிய கூலியும் கிடைக்கவில்லை. அதனால் அன்றாட அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையை முன்னேற்ற நாம் என்ன செய்திருக்கிறோம்? எத்தனையோ காரியங்களைச் செய்தாலும் அவர்கள் துயர் தீரவில்லை. ஆகவே, இந்த மானியத்திலே ஒதுக்கிக்கொடுக்கின்ற பணத்தைக்கூட அதோடு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஏப்ரல் 4

இணைத்து, இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைத்து, கதர்-கைத்தறி தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற எல்லோருக்கும் உதவி செய்தால் நலமாக இருக்கும். அதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு காலத்திலே காந்தியடிகள் கதர் தொழிலை ஆரம்பித்த நோக்கத்தை நாம் அறிந்திருக்கிறோம். இந்த நாடு சுதந்திர நாடாக இல்லாமல் இருந்த போது, நம்முடைய மக்கள் தாமே தொழில் செய்து, சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்பதற்காக காந்தியடிகள் இந்த சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இன்றைக்கு நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகத்தான் கைத்தறி துறையும் ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, கைத்தறித் துறை, கதர் துறை இரண்டையும் ஒன்றாக இணைப்பதே பொருத்தமுடையது என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கதர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 'கிராம உத்தியோக பவன்' ஆரம்பிக்கப்பட்டது. கிராம உத்தியோகம் என்பதை மனதிலே வைத்து இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் கிராமங்களுக்குப் போக வேண்டும் கிராமங்களிலேதான் வேலை நடக்கிறது. அதிகாரிகள் இருந்து கண்காணிப்பது வேறு எங்கோ இருந்து, சென்னையிலும், திருநெல்வேலியிலும் உட்கார்ந்து கொண்டு கண்காணித்தால் போதாது. பரவலாக இத்தொழில் நடைபெறும் கிராமங்களுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து, எனது வாணியம்பாடி தொகுதியில் உள்ள முஸ்லிம் பெருங்குடி மக்களுக்கும், இந்து பெருங்குடி மக்களுக்கும் நான் தான் சட்டமன்ற உறுப்பினர். இந்த பெருங்குடி மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு இங்கே வர முடியாது—அவர்களது பிரதிநிதி என்ற முறையில் அவர்களது சில கோரிக்கைகளை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் பல கோயில்கள் பாலாற்றின் கரையில் இருக்கின்றன. காவேரிக் கரையிலுள்ள 65 கோவில்களைப் பற்றியே பேசுகின்றோம். ஆனால் நமது நாகரீகத்திற்கே மூலக் காரணமாக—பாலாற்றங்கரை நாகரிகத்தின் சின்னமாக—இன்றைக்கு பாலாற்றங்கரையில் எழில் குறைந்திருக்கிற கோயில்களை யெல்லாம் யாரும் சிந்தித்துப் பார்ப்பது இல்லை. காஞ்சீபுரம் ஏகாம்பரேசுவரர் கோவிலைப் பார்த்தால் இன்றைக்கு அழகு இழந்த நிலையில் அதன் கோபுரம் இருப்பதைக் காணலாம். காஞ்சீபுரம்



1974 ஏப்ரல் 4] [திரு. எம். ஏ. லத்தீப்]

எவ்வளவு பெரிய சிறப்பு மிக்க இடம். நமது சுப்பிரமணியம் சொல்வார்கள். பாரதி போன்ற பெரிய கவிகள் எல்லாம் புஷ்பேஷு ஜாதி-புருஷேஷு விஷ்ணு—நாரிஷு ரம்பா—நகரேஷு காஞ்சி என்றெல்லாம் சொல்வார்கள்.

தமிழகத்தின் நாகரிகத்திற்கே அடிப்படையாக இருந்தது காஞ்சி—தமிழ் நாட்டின் முதல் நாகரிகம்—பாலாற்று நாகரிகம்தான். கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகிற பாலாறு நமது மாநிலத்தில் நுழைவாயிலில்—பழைய வாணியம்பாடி தேவஸ்தானத்தில் சிறப்பான கோயில் ஒன்று இருக்கிறது. அங்கே எழுந்தருளியிருக்கின்ற பெருமான் பெயர் அதிதீஸ்வரன்—அதிதியாக—விருந்தினராக எழுந்தருளிய ஆண்டவன்—அந்த இடத்தில் எழில் கொஞ்சும் அழகைப் பார்த்து அங்கேயே தங்கிவிட்டார் என்பர்—அவ்வளவு பழமையான தலம். அதன் கோபுரத்தை இன்றைக்குப் பார்த்தால் மிகவும் சிதிலமாக இருக்கிறது. அந்தக் கோபுரத் திருப்பணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அங்குள்ள இந்து பெருங்குடி மக்களது கோரிக்கையாகும்.

அறநிலையத்துறை ஆணையாளர் பழைய வாணியம்பாடிக்கு வருகை தந்தார்கள். அதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிதீஸ்வரன் கோயில் கோபுரத் திருப்பணியை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதி மக்களும் ஒரு பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் ஏழை விவசாயிகள்—அது அவர்களால் முடியாது. அந்தப் பங்கினை நான் தான் தர வேண்டும் என்று என்னிடம் கேட்கிறார்கள். அவ்வளவு தொகை கொடுக்கக் கூடிய நிலையில் நான் இல்லை. ஆகவே, அறநிலையத்துறையே முழுப் பணத்தையும் ஒதுக்கி அந்த ஆலய கோபுரத்தைச் செப்பனிட்டுத் தர வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லிவாசல் என்ற இடத்தில் பகவதி அம்மன் ஆலயத்திற்கு 42 ஆயிரம் மானியம் அளித்திருப்பதை நான் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆலங்காயம் என்ற இடத்தில் மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதற்கு எதிரே ஒரு மைதானம் இருக்கிறது—சாட்டு மைதானம் என்று பெயர். இன்றைக்கு அந்த மைதானத்தை பலர் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டார்கள். அதன் காரணமாக திருவிழா நடைபெறவில்லை. திருவிழா நடைபெற முடியாத காரணத்தினால்தான் அந்தப் பகுதியில் மழை இல்லை—மக்களுக்குப் பல விதமான கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது

[திரு. எம். ஏ. லத்திப்] [1974 ஏப்ரல் 4

இணைந்து, இரண்டு துறைகளையும் ஒன்றாக இணைத்து, கதர்-கைத்தறி தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற எல்லோருக்கும் உதவி செய்தால் நலமாக இருக்கும். அதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு காலத்திலே காந்தியடிகள் கதர் தொழிலை ஆரம்பித்த நோக்கத்தை நாம் அறிந்திருக்கிறோம். இந்த நாடு சுதந்திர நாடாக இல்லாமல் இருந்த போது, நம்முடைய மக்கள் தாமே தொழில் செய்து, சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்பதற்காக காந்தியடிகள் இந்த சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்தார்கள். இன்றைக்கு நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகத்தான் கைத்தறி துறையும் ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, கைத்தறித் துறை, கதர் துறை இரண்டையும் ஒன்றாக இணைப்பதே பொருத்தமுடையது என்ற என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கதர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 'கிராம உத்தியோக பவன்' ஆரம்பிக்கப்பட்டது. கிராம உத்தியோகம் என்பதை மனதிலே வைத்து இந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் கிராமங்களுக்குப் போக வேண்டும். கிராமங்களிலேதான் வேலை நடக்கிறது. அதிகாரிகள் இருந்து கண்காணிப்பது வேறு எங்கோ இருந்து, சென்னையிலும், திருநெல்வேலியிலும் உட்கார்ந்து கொண்டு கண்காணித்தால் போதாது. பரவலாக இத்தொழில் நடைபெறும் கிராமங்களுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து, எனது வாணியம்பாடி தொகுதியில் உள்ள முஸ்லிம் பெருங்குடி மக்களுக்கும், இந்து பெருங்குடி மக்களுக்கும் நான் தான் சட்டமன்ற உறுப்பினர். இந்த பெருங்குடி மக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கு இங்கே வர முடியாது—அவர்களது பிரதிநிதி என்ற முறையில் அவர்களது சில கோரிக்கைகளை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் பல கோயில்கள் பாலாற்றின் கரையில் இருக்கின்றன. காவேரிக் கரையிலுள்ள 65 கோவில்களைப் பற்றியே பேசுகின்றோம். ஆனால் நமது நாகரீகத்திற்கே மூலக் காரணமாக—பாலாற்றங்கரை நாகரிகத்தின் சின்னமாக—இன்றைக்கு பாலாற்றங்கரையில் எழில் குறைந்திருக்கிற கோயில்களை யெல்லாம் யாரும் சிந்தித்துப் பார்ப்பது இல்லை. காஞ்சீபுரம் ஏகாம்பரேசுவரர் கோவிலைப் பார்த்தால் இன்றைக்கு அழகு இழந்த நிலையில் அதன் கோபுரம் இருப்பதைக் காணலாம். காஞ்சீபுரம்



1974 ஏப்ரல் 4] [திரு. எம். ஏ. லத்திப்]

எவ்வளவு பெரிய சிறப்பு மிக்க இடம். நமது சுப்பிரமணியம் சொல்வார்கள். பாரதி போன்ற பெரிய கவிகள் எல்லாம் புஷ்பேஷு-ஜாதி-புருஷேஷு விஷ்ணு—நாரிஷு ரம்பா—நகரேஷு காஞ்சி என்றெல்லாம் சொல்வார்கள்.

தமிழகத்தின் நாகரிகத்திற்கே அடிப்படையாக இருந்தது காஞ்சி—தமிழ் நாட்டின் முதல் நாகரிகம்—பாலாற்று நாகரிகம்தான். கர்நாடக மாநிலத்தில் இருந்து வருகிற பாலாறு நமது மாநிலத்தில் நுழைவாயிலில்—பழைய வாணியம்பாடி தேவஸ்தானத்தில் சிறப்பான கோயில் ஒன்று இருக்கிறது. அங்கே எழுந்தருளியிருக்கின்ற பெருமான் பெயர் அதிதீஸ்வரன்—அதிதியாக—விருந்தினராக எழுந்தருளிய ஆண்டவன்—அந்த இடத்தில் எழில் கொஞ்சும் அழகைப் பார்த்து அங்கேயே தங்கிவிட்டார் என்பர்—அவ்வளவு பழமையான தலம். அதன் கோபுரத்தை இன்றைக்குப் பார்த்தால் மிகவும் சிதிலமாக இருக்கிறது. அந்தக் கோபுரத் திருப்பணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அங்குள்ள இந்து பெருங்குடி மக்களது கோரிக்கையாகும்.

அறநிலையத்துறை ஆணையாளர் பழைய வாணியம்பாடிக்கு வருகை தந்தார்கள். அதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிதீஸ்வரன் கோயில் கோபுரத் திருப்பணியை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பகுதி மக்களும் ஒரு பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அங்குள்ளவர்கள் ஏழை விவசாயிகள்—அது அவர்களால் முடியாது. அந்தப் பங்கினை நான் தான் தர வேண்டும் என்று என்னிடம் கேட்கிறார்கள். அவ்வளவு தொகை கொடுக்கக் கூடிய நிலையில் நான் இல்லை. ஆகவே, அறநிலையத்துறையே முழுப் பணத்தையும் ஒதுக்கி அந்த ஆலய கோபுரத்தைச் செப்பனிட்டுத் தர வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லிவாசல் என்ற இடத்தில் பகவதி அம்மன் ஆலயத்திற்கு 42 ஆயிரம் மானியம் அளித்திருப்பதை நான் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆலங்காயம் என்ற இடத்தில் மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதற்கு எதிரே ஒரு மைதானம் இருக்கிறது—சாட்டு மைதானம் என்று பெயர். இன்றைக்கு அந்த மைதானத்தை பலர் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டார்கள். அதன் காரணமாக திருவிழா நடைபெறவில்லை. திருவிழா நடை பெற முடியாத காரணத்தினால்தான் அந்தப் பகுதியில் மழை இல்லை—மக்களுக்குப் பல விதமான கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது

என் தொகுதி இந்து வாக்காளர் பெருங்குடி மக்களது கருத்து. உடனடியாக, அந்த ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கோவிலில் திருவிழா நடைபெற வழி செய்ய வேண்டும்.

அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. ப. உ. ச. விடம் அதுபற்றித் தெரிவித்தற்கு ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு அந்த வருவாய்த்துறை பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர் அந்த மாரியம்மன் கோயில் மைதானத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆக்கிரமிப்பை அகற்றுவதனால் மாரியம்மனுக்குக் கோபம் வந்துவிடக்கூடாது ?

**திரு. எம். ஏ. லத்தீப் :** லட்சக்கணக்கான பக்தர்களுடைய வேண்டு கோளுக்காக ஒருசில ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றுகிறபோது மாரியம்மன் நிச்சயமாக கோபிக்கமாட்டாள். அந்தக் கவலைப்படாமல் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, சென்றும் கோயில் இருக்கிறது. இப்படி பாலாற்றங்கரையிலுள்ள கோயில்களை எல்லாம் நல்லமுறையில் செப்பனிட நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) நான் உட்காரமாட்டேன் என்று நினைத்து அவர்கள் சிரிக்கிறார்கள். தங்களுக்கு நன்றி தெரிவித்து நான் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி பேசுகின்ற உறுப்பினர்கள் 7 நிமிடத்திற்குமேல் எடுத்துக்கொள்ளவேண்டாம்.

**திரு. அ. தேவேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற அறநிலையப் பணியாளர்கள் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களது சங்கத் தலைவன் என்ற முறையில் எனக்குப் பேச கொஞ்சம் அதிக நேரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்த் தொழிலுக்கும் அலைகடல் தொடங்கி, முகில் போர்த்திருக்கும் மலைமுகடு வரை விண்ணூர்ந்த கோபுரங்கள் எண்ணிலாதன என்ற பெருமையோடு அறப் பயிர் வளர்க்கும் ஆயிரமாயிரம் நிறுவனங்களைக் கொண்ட இந்து சமய அற நிலைத் துறைக்கு 1¼ கோடி மானியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அழகு தமிழில் அவர்கள் தந்திருக்கிற விளக்கக் குறிப்பினை பாராட்டி, மானியக் கோரிக்கை வரவேற்று ஒருசில கருத்துக்களை சொல்லிட விரும்புகிறேன்.



நமது அரசு இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால்—1967-இல் வருவாய் மூணே முக்கால் கோடிக்கு இருந்தது என்றால் இன்றைக்கு 74-இல் 8 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே 67-இல் செலவினங்கள் திருக்கோயில் திருப்பணிக்காக அரசு மானியம் 3 லட்சம் என்றால் இன்றைக்கு 15 லட்சமாக அளிக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் அறநிலையங்கள் சினிமாக் கட்டிடங்களாக—நாடகக் கொட்டகைகளாக ஆகிவிடும் என்று சொன்னவர்கள் உண்டு.

அப்படி பேசியவர்களுக்கு சரியான சவாலாக இன்றைக்கு இந்தத் துறையில் பலவிதமான வளர்ச்சிகளை ஏற்படுத்தி—திருக்கோயில் திருப்பணிகளுக்காகவும் அரசு மானியத்தை உயர்த்தித் தந்துகொண்டுவந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

தமிழ் மக்களது ஏகோபித்த குரலுக்கிணங்க தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற சட்டம் போட்டு—நம்மை எதிர்த்தவர்களும் ஆதரிக்கக்கூடிய வகையில் அதைச் செய்திருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு கூடாது—அடிமை ஆண்டான் இருக்கக்கூடாது என்கிற அடிப்படையில் ஆலயங்களில் பரிவட்டம் கட்டுகிற முறை இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு சட்டத்தினையே நாட்டு மக்களுக்குத் தந்திருப்பதையே உள்ளபடியே பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

இன்னும் இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் எவ்வளவோ சொல்லலாம். தலைவர் அவர்கள் ஆரம்பத்திலேயே 7 நிமிடத்திற்குள் முடிக்க வேண்டுமென்று சொன்ன காரணத்தினால் அற ஆலயத் துறையில் பணியாற்றுகிறவர்களுடைய —குமுறல்கள் என்று சொல்லமாட்டேன்—வேண்டுகோள்களை—அவர்கள் சார்பில் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறநிலையத் துறை சார்பில் இன்றைக்கு குற்றாலம், பழனி, பூம்புகார் போன்ற இடங்களில் கல்லூரிகளை நடத்தி வருகிறோம். இந்தக் கல்லூரிகளில் அறநிலையத் துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு என்று குறைந்தபட்சம் 50 சதவிகிதம் சீட்டுகள் ஒதுக்கித் தரப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. தேவேந்திரன்] [1974 ஏப்ரல் 4

அடுத்து, மணியக்காரர் என்ற முறையில் இருந்து வேலை செய்கிற அத்தனை தொழிலாளர்களுக்கும்—பத்தாண்டுகள் வேலை செய்துவிட்டால் வேறு டிகிரி போன்ற எந்தத் தகுதியையும் பார்க்காது 25 சதவிகிதம் இ.ஓ. வேலைக்கு இடம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நமது அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 12 அம்சமாக திருக்கோயில்களைப் பிரித்து கிரேடு வாரியாக குறைந்தபட்சம் 10 ரூபாய் உயர்த்தவேண்டும் என்று சொல்லி விட்டார்கள். தமிழகத்தில் பல இடங்களில் அது நிறைவேறியிருக்கிறது என்றாலும் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை என்பதை நான் அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

(திரு. துரைமுருகன் தலைமை)

நிர்வாகத்திலே இருக்கிற ஒருசில குறைகளின் காரணமாக, நிர்வாகத்திலே சிலபேர் மந்தப் போக்கிலே இருக்கிற காரணத்தினால் அவர்கள் இதை முழுமையாகச் செயலாக்காமலிருக்கிறார்கள். ஆகவே, ஒரு ஜி.ஓ.வாகப் போட்டு விடுவோமானால், உடனடியாக சர்க்கார் உத்தரவு என்று செய்து விடுவோமானால் தான், அக்காரியங்கள் நிறைவேறும் என்று இந்த நேரத்திலேத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ரோடிலே வேலை செய்கிற கேங்க் ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கிப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம். அதைப் போல், இந்த ஊழியர்களை ஸ்டேட் சர்வீஸ் ஊழியர்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, வேறு துறையிலே கெஜெடட் ரீதியிலே வேலை செய்தவர்களாக இருந்தாலும், சாதாரணமாக இருந்தாலும், அவர்கள் ரிடையர் ஆன பிறகு, கோயில்களிலே வேலை செய்கிற நிலைமை மட ஆலயங்களிலே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. மட ஆலயங்களைக் கட்டுப்படுத்துவது கஷ்டம் தான் என்றாலும்கூட, நிச்சயமாக அப்படிப்பட்டவர்களை நியமிக்கக் கூடாது என்ற உத்தரவை நாம் விரைவிலே அமுலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, ஃபாரின் சர்வீஸ் என்ற வேறு இடங்களில் இருந்து, அயல் பணித் துறை என்று, கோயில் நிர்வாகத்திலே போடுகிறார்கள். சாதாரணமாக, பியூனைச் சேர்ந்து, அட்டெண்டராக ஆகி, கிளார்க்காகி.



1974 ஏப்ரல் 4] [திரு. அ. தேவேந்திரன்]

சூப்பரிண்டெண்டாக வரமாட்டோமா அல்லது ஹெட் கிளார்க்காக வரமாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், அயல்பணி என்று வெளியிலிருந்து யாராவது வந்து, நந்தியைப்போல் வழியை அடைத்துக் கொள்கிறார்கள். கிளார்க், அத்தோடு ரிடையர் ஆகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அயல் பணித் துறை இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அறநிலையங்கள், எங்களை ஒன்றும் கட்டுப்பாடு செய்யக்கூடாது, என்று எனக்குத் தெரிந்த வரையில், தர்மபுரம் ஆதினம் போன்ற இடங்களிலே 100 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள்; சரியாக வேலை பார்க்கவில்லை, சரியாக சமைக்கவில்லை, மைதானத்தில் வேலை செய்யவில்லை என்று சொத்தைக் காரணத்தை காட்டி, வேலையிலிருந்து நீக்குகிறார்கள். அதுபற்றி அரசாங்கத் திற்குச் சொல்வேன், அமைச்சரிடத்திலே சொல்வேன் என்று நான் சொல்லும் போது, அறநிலையத் துறை எங்களை ஒன்றும் செய்ய முடியாது, அமைச்சர் ஒன்றும் செய்ய முடியாது, என்ற பொருள்பட அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு) தருமபுரம் ஆதினம் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அப்படிப்பட்ட இடங்களில் சர்க்கார் ஒன்றுமே செய்ய முடியாது, இண்டியன் கான்ஸ்டிட்டியூஷனில், அரசியல் சட்டத்தில், வேறு சிலமாதிரியான உரிமைகள் இருக்கிற காரணத்தினால், தமிழக அரசோ, மற்ற அரசுகளோ ஒன்றும் செய்து விட முடியாது என்று பொருள்படப் பேசுகிறார்கள்.

நம்முடைய அரசு வந்தபிறகு, எல்லோருக்கும் சம்பள உயர்வு. எம்.எல்.ஏ.-க் களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தந்திருக்கிறார்கள். ஆகவே, அற நிலையத்திலே வேலை செய்கிறவர்களுக்கு 25 சதவிகிதம் ஆவது பஞ்சப் படியை உயர்த்தவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகள் எப்படி இருக்கின்றன, என்ன செய்தால், கோரிக்கைகள் இம்ப்ளிமெண்ட் ஆகும், என்ன செய்தால், உடனடியாக நிவாரணம் ஆகும் என்பதை எல்லோரும் சொல்வதைப் போல், என்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்லாது, கணபதியா பிள்ளை—ஒன் மேன்—கமிஷன் ஒன்றை, தஞ்சை மாவட்டத்திலே, கூலி நிர்ணயம் செய்யப்பட்டதைப்போல், இவர்களுடைய கோரிக்கையினை ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன் தரப்படுகிறது அதையும் அவர்களுக்குத் தந்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. தேவேந்திரன்] [1974 ஏப்ரல் 4

அவர்கள் ரிடையர் ஆகும்போது, பணிக்கொடை என்று 15 ஆண்டுகள் வேலை செய்தால்தான் தருகிற சூழ்நிலை இப்பொழுது இருக்கிறது. அதை ஓராண்டாக ஆக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களிலே பணி புரிகிற பல்வேறு கருத்து வேறுபாடு உடையவர்களும், அர்ச்சகர்களாக இருந்தாலும், கோவிலைப் பெருக்குகின்ற ஆயாவாக இருந்தாலும், அண்மையிலே கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நடந்த மாநில மாநாட்டில், நம்முடைய தமிழக தானைத் தலைவன் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் அண்ணன் அவர்கள் முன்னிலையில் எக்காரணத்தைக் கொண்டும் நாங்கள் ஸ்டிரைக் செய்யமாட்டோம்; எக்காரணத்தைக் கொண்டும் நாங்கள் வேறு காரியங்களிலே ஈடுபடமாட்டோம், இந்த அரசுக்கு விஸ்வாசமாக இருப்போம், ஆஸ்திகர்களுடைய மனம் புண்படும் அளவுக்கு நாங்கள் நடந்துகொள்ளமாட்டோம், கோரிக்கை என்றுகூட வைக்கவில்லை நிறைவேற்றுவீர்கள், செய்வீர்கள் என்ற நல்ல உணர்வோடு சொல்கிறோம் ஆகவே நீங்கள் அவசியம் செய்து தரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொண்டார்கள்.

'அட் ஒன்ஸ் எஃபெக்ட்' என்ற ஆங்கிலத்தில் சொல்வதுபோல், உடனடியாக சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. அதற்காக நன்றி தெரிவித்து செய்யவேண்டியவற்றை விரைவாகச் செய்யவேண்டுமென்று கேட்டு, சென்ற ஆண்டு அறிவித்த சம்பள உயர்வுகள் இன்னும் சில கோயில்களில் நிறைவேற்றப் படாமல் இருக்கின்றன, அவற்றை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டு, இந்த அருமையான மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கும், ஒரு நிமிடம் கூடப் பேசுவதற்கும் அனுமதி தந்ததற்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டுக்கான பால் வழங்கு திட்டம், அறநிலைய நிர்வாகம் ஆகிய இரண்டைப் பற்றியும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் வழங்கு திட்டம், ஏழை எளிய மக்களுக்கும், சமுதாயத்திலே நலிந்த மக்களுக்கும், சத்துணவைத் தருவதும், வருவாயைப் பெருக்குவதும் நோக்கம் என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும், இப்பொழுது வழங்கப்படுகின்ற பாலில் சத்து இருக்கிறதா என்றால், இல்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 4] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ஏனென்றால், வழங்கப்படுகின்ற பாலில் ஏற்கனவே வெண்ணெயை எடுத்துவிட்டு, இப்பொழுது வழங்கப்படுகிறது என்பதை நாம் அத்தனை பேரும் நன்றாக அறிவோம்.

இதேபோல், வழங்கப்படுகின்ற பாலில், பால் பவுடரும் கலக்கப்பட்டு, கலப்புப் பாலாகத்தான் இப்பொழுது பொதுமக்களுக்கு விநியோகிக்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம்.

குறிப்பாக, சென்னை மாநகரத்தில் எங்கெங்கே அரசாங்க நிறுவனத்திலிருந்து பால் வழங்கப்படுகிறதோ, அங்கங்கு, அத்தனை பால் புட்டிகளிலும் பவுடர் கலக்கப்படுவதை உள்ளபடியே நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அரசாங்கம் வழங்குகின்ற பாலில், இனிமேலாவது கலப்படம் இல்லாமல், தூய பாலைத் தருவதற்கு இந்த அரசு முறையாக நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் மட்டும் பால் பண்ணை வைப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை. மாவட்டத் தலைநகரங்களிலும், நகரங்களிலும் பால் பண்ணை வைத்து, ஏழை எளிய மக்களுக்கு உதவ இந்த அரசாங்கம் கொள்கையை வகுக்கவேண்டும். கால்நடைத் துறை, பால் வழங்கும் துறை ஆகிய இரண்டும் ஒரே நிர்வாகத்தின்கீழ் இருப்பது இந்த நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதை அரசாங்கம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறநிலையத் துறையை 1927-ம் ஆண்டுதான் முறையாக, சட்டப் பூர்வமாக செயல்படுத்த வேண்டுமென்று அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு சட்டத்தை வகுத்ததை நாம் நன்றாக அறிவோம். இதனுடைய நோக்கம் என்னவென்றால் வருமானத்தைக் கண்காணிப்பது, நிர்வாகத்தை முறைப் படுத்துவது, சீர்கேடுகளை அகற்றுவது ஆகிய இந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் அரசாங்கம் அப்பொழுது இத்துறையையும் சட்டத்தையும் துவக்கியது. இந்த நிர்வாகம் கல்வித் துறையில் அப்பொழுது இயங்கியது. ஆனால், இப்பொழுது வருவாய்த் துறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் நன்றாக அறிகிறோம். இதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

சங்ககாலத்திலும் சரி, அதற்கு பிற்பட்ட காலத்திலும் சரி, கோயில்கள் கல்விக் கூடங்களாகவும், கலைக் கூடங்களாகவும், பொதுமக்களுக்கு பலவகை களில் பயன்படும் இடங்களாகவும் இருந்ததை நாம் சரித்திரத்திலே பார்க்கிறோம். ஆனால், இப்பொழுது வருவாய் நோக்கத்தோடு, கோயில்களை நாம் பயன்படுத்துவது எந்தவகையிலே பொருத்தமாக இருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆகவே, இந்த நாட்டு மக்களுக்குப் பயனுள்ள வகையில், பயன்படும் வகையில், கல்வியையும், கலையையும் போதிக்கின்ற அளவில் கண்ணோட்டம் இருக்கவேண்டுமேயொழிய, கோயில்களுக்கு வருவாய் தான் முக்கிய குறிக் கோளாக இருக்கக்கூடாது என்பதை நான் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அறநிலைத் துறையைப் பொறுத்தவரையிலும் இன்னொன்றையும் நாம் பார்க்கவேண்டும். ஆட்சியில் நீதித்துறையும் நிர்வாகத் துறையும் தனித் தனியாக இயங்கவேண்டுமென்பதுதான் நம் எல்லோருடைய ஒருமித்த கருத்தாகும்.

ஆனால், அறநிலையத் துறையைப் பொருத்து எடுத்துக்கொண்டால், நிர்வாகமும் நீதியும் ஒருவர் கையில்தான் இருக்கிறது. இது முறையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கோயிலில் உள்ளவர்களுக்குள் தகராறு ஏற்படுகிற நேரத்தில், சொத்து தகராறு ஏற்படுகிற நேரத்தில், கோயில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுகிற நேரத்தில், அத்தனை புகார்களையும் கோயில் நிர்வாகத்திடம்தான் கொடுக்கிறோம். இலாகாவின் நிர்வாகத்தில் அதிகாரியே தீர்ப்பு வழங்குவதைப் பார்க்கிறோம். அப்படியிருக்கும்போது எங்கே நீதி கிடைக்கும், எப்படி நேர்மையான தீர்ப்பு வழங்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே இந்த அரசாங்கம் நிர்வாகத் துறையையும், நீதித் துறையையும் தனித்து இயங்கவிட்டிருக்கும்போது கோவில் துறையில் மட்டும் நிர்வாகத் தையும் நீதியையும் ஒன்றாக இயங்கவிட்டிருப்பது ஏன் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

புகார் கொடுப்பவர் அதிகாரி, பரிசீலனை செய்பவர் அதிகாரி. சாட்சி சொல்பவர் அதிகாரி. தீர்ப்பு வழங்குபவர் அதிகாரி. ஆக இப்படிப் பட்ட சூழ்நிலையில் அவர் எப்படி தீர்ப்பு தரமுடியும், சொத்துத் தகராறில்





எவ்வாறு நீதியை நிலை நாட்ட முடியும்? ஆகவே நிர்வாகத் துறைக்கும், நீதித் துறைக்கும் சம்பந்தம் இல்லாத அளவிற்கு தனிச் சட்டத்தை இயற்று வதற்கோ அல்லது சட்டத்தைத் திருத்துவதற்கோ முற்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த அரசாங்கம் கோவில்களை எடுப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இருந்தாலும் எடுக்கின்ற கோவில்களில் பொதுமக்களுக்கு துணை புரிய முடிகின்ற வழிகளைக் கவனிக்க வேண்டுமே தவிர காழ்ப்பு உணர்ச்சி களுக்கு இடமளிக்காமல் கோவில்களை எடுக்கவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில் கோவில்களில் இருக்கிற அணிகலன்களைப் பரிசோதனை செய்கிற பொறுப்பு அதிகாரிகளின் பொறுப்பாக இருக்கிறது. அவர்களுக்கு அணிகலன்களை செய்கிற துறையிலோ அல்லது அவைகளைப் பரிசீலனை செய்கிற துறையிலோ அனுபவம் இருக்கிறதா எனறு பார்த்தால் கொஞ்சம்கூட இல்லை.

ஆகவே போலி நகை இருந்தாலும் அல்லது வேறு நகையாக இருந்தாலும் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த துறையைப் பொறுத்தவரையில் அதிலே தேர்ச்சிபெற்றவர்களை நியமிப்பதில் எந்தவிதமான தவறுமில்லை. இப்படிச் செய்தோமானால் போலி நகைகள் அங்கே இடம் பெறுமலும் நகைகள் பத்திரமாக ஒரிஜினலாகவும் இருப்பதற்கு உத்தரவாதம் ஏற்படும். ஆகவே அறநிலையத் துறையைப் பொறுத்தவரை ஒரிஜினல் நகைகள் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்வதற்கு அந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களை நியமிப்பது சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

அடுத்து, கோவில்களுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அவைகளை ஒரே ஒரு குடும்பம் பல ஆண்டு காலமாக அந்தக் கோவில் நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு அதன் வருமானத்தை அடைந்து வருகிறார்கள். சமதர்ம சமுதாயத்தில் என்னைப் பொறுத்தவரையில் இது நியாயமில்லை. ஆகவே 3 ஆண்டு அல்லது 5 ஆண்டு என்று குத்தகைக் கெடு நிர்ணயித்துக்கொள்வது நியாயமானதாக இருக்கும். இந்த முறையில் அதைப் பங்கிட்டோமானால் அந்தக் கிராமத்தில் இருக்கிற பல குடும்பங்கள் அந்த நிலத்தைத் தன் குடும்பத் திற்குப் பயன்படுத்திக் குடும்பத்தின் பொருளாதாரத்தை உயர்த்திக்கொள் வதற்கு வழி வகை எற்படும். ஆகவே இந்த இந்த முறையையும் அரசு பின்பற்ற வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணியைப் பொறுத்தவரையில் அங்கே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரை அறங்காவலராக நியமித்தது இந்த அரசு. ஆனால் அந்த அறங்காவலர் மீது தவறான குற்றச்சாட்டு சாட்டப்பட்டு அதன்பேரில் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதில் உண்மை என்னவென்பதை இந்தத் துறை பரிசீலிக்கத் தவறிவிட்டது. தற்போது தீர்ப்பு வழங்கும் நிலையில் வழக்கு இருந்து வருகிறது. ஆகவே சர்க்கார் இந்த தவறுக்கு யார் காரணம் என்பதை முதலில் சிந்தித்துப் பார்த்து தவறு செய்கிறவர்களை தண்டிக்கவேண்டுமே தவிர தவறு செய்யாதவர்களை தண்டிப்பது பொருத்தம் ஆகாது. ஆகவே இந்தத் துறை மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து கோவில் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. கந்தசாமி :** தலைவரவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே கொடுத்திருக்கும் மானியத்தை ஆதரித்துப் பேசுகிற நேரத்தில் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே நான் சார்ந்திருக்கிற சாத்தான்குளம் தொகுதியைப் பொறுத்தமட்டில் இந்தத் துறை எந்த அளவிற்கு செயலாற்றி வருகிறது என்பதையும் இன்னும் எந்த வகையிலே செயல்படவேண்டும் என்பதையும்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். சாத்தான்குளம் தொகுதியில் பனைவெல்லத் தொழில் நிறைந்திருக்கிறது. அந்தத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையிலே நம்முடைய கதர் வாரியம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதற்கு முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியிலே அந்தத் தொழிலாளிகளுக்குக் கடனாக ஒரு வருஷத்திற்கு 200 ரூபாய் கொடுக்கப்பட்ட நிலைமை இருந்தது. ஆனால் இன்று அந்த உதவி அந்தத் தொழிலாளிகளுக்கு சேரவில்லை. இதற்குக் காரணம் காங்கிரஸ் ஆட்சி புரிந்த காலத்தில் பனைவெல்ல கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு கடனுதவி செய்து வந்தார்கள். அந்த கூட்டுறவு சங்கத்தின் தலைவர் காங்கிரஸ்காரராக இருந்தார்கள். அந்த காலத்திலே கொடுக்கப்பட்ட பணம் பெரும்பாலும் தொழிலாளர்களைப் போய்ச் சேரவில்லை.

ஆகவே, தொழிலாளிகளுக்காக அங்கே கொடுக்கப்பட்ட அந்தப்பணம் யாருக்கோ போய்ச் சேர்ந்த காரணத்தால் அது வாரியத்திற்கு வராமல் இருக்கிறது. நாம் இந்த வாரியத்தைக் கேட்டுக்கொள்ளவேண்டும்—அதற்காக ஒரு வழிமுறையை வகுத்து அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200 கடனாகத் தரவேண்டும் என்றும் அந்தப் பணம் தொழிலாளிகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற முறையை வகுத்து இந்த உதவியைத் தொழிலாளிகளுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.





இந்த வகையில் ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் பனைவெல்லத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்காக ஒதுக்கி ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் வழங்க திட்டம் இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எங்கள் தொகுதியிலே மொத்தம் 400 கூட்டுறவு சங்கங்கள் இருந்தால் அதிலே மூன்றில் ஒரு பங்கு சாத்தான்குளத்திலே இருக்கிறது. ஆகையினாலே ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் அதிகத்தொகை என்னுடைய தொகுதிக்கு சேரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொழிலாளிக்கு சற்று விதிமுறைகளை மாற்றி இந்த உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது தவிர அங்கே பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பனை நாரிலிருந்து ஃபைபர் தயாரிக்கப்படுகிறது. தூத்துக்குடியிலே மட்டும் 19 கோடி ரூபாய்க்கு பனை நார் தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். தும்பாக ஏற்றுமதி செய்வதைவிட பிரஷாக ஏற்றுமதி செய்தால் அதிலேயிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் கூடும். என்னுடைய ஊரான உடன்குடியில் 2 ஆண்டு காலமாக தும்பு தொழிற்சாலை நடைபெற்று வருகிறது. தும்பு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், சமீபத்தில் இந்த பாம்கர் பெடரேஷனைக் கலைத்துவிட்டு, ஸ்பெஷல் ஆபீசரை மாற்றிவிட்டு, அங்கு 'லிக்குடேட்டர்' என்பவரைப் போட்டு இந்தக் காரியம் நடைபெறும் நேரத்தில் அந்த வேலை கொஞ்சம் தாமதமாக தடங்கல் ஏற்படும் நிலையிலிருக்கிறது. ஆகவே, 40, 50 பெண்கள் வேலை செய்யும் வாய்ப்பிருந்தாலும் அதில் கொஞ்சம் பாதிப்பு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே, இந்த வாரியம் சற்றுக் கவனித்து அங்கே நடைபெறும் தொழிற்சாலையை மேலும் விரிவாகச் செய்யவகை செய்யவேண்டும்.

தவிர, எங்கள் பகுதியில் கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தால் நடைபெறும் ரூரல் டெக்ஸ்டைல் சென்டர்ஸ், அதாவது கிராமீய நூற்பு நிலையங்கள் 100-க்கு மேற்பட்டவை எங்கள் பகுதியில் ஆறு இடங்களில் இருக்கின்றன. ஏறத்தாழ 300-க்கு மேற்பட்டவர்கள், குறிப்பாகப் பெண்கள் அவைகளில் வேலை செய்கிறார்கள்.

[திரு. கே. பி. கந்தசாமி] [1974 ஏப்ரல் 4

இந்த அறிக்கையில் நான் பார்க்கிறேன், மொத்தத்தில் 2,24,000 பேர் வேலை வாய்ப்பு பெற்று ஏறத்தாழ 210 இலட்சம் ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப் படுகிறது. இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஆண்டு ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 200 ரூபாய் கொடுக்கும் வகையில் இயங்கி வருகிறது. இந்த ஊதியம் குறைவு என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இந்த நிலையங்களிலுள்ள வேலைமுறைகளை இன்னும் அபிவிருத்தி செய்து ஏதாவது ஒரு முறையிலே, கையினால் சுற்றும் அம்பை ராட்டைகள் இருக்கின்றன. அதை இயந்திரங்களைக்கொண்டு இயக்கும் முறைகளை உருவாக்கி அதன்மூலம் வருவாயைப் பெருக்கி அங்கே வேலை செய்யும் பெண்களுக்கு இன்று கொடுப்பதைவிட சற்று அதிக ஊதியத்தைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இதுவரை எங்கள் பகுதியில் ரூரல் ஃபேப்ரிக் செண்டர் பல நிலையங்களை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். வரும் ஆண்டில் 15 இடங்களில் இப்படிப்பட்ட நிலையங்களை, கிராமீய நெசவியல் நிலையங்களை உருவாக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். எங்கள் பகுதியைச் சேர்ந்த குலசேகர பட்டணத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. வாரியத்திலிருந்து என்னென்ன கேட்டார்களோ, நிலையத்திற்கான நிலத்தை இனமாகத் தர வேண்டுமென்று கேட்டார்கள், அதைக்கூட இனமாகக் கொடுத்துவிட்டார்கள். ஆகவே, அந்த இடத்திலே கிராமீய நெசவியல் நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பால்வளத் துறையைப் பற்றி அறிக்கையிலே பார்க்கிறேன். நெல்லை மாவட்டத்தில் வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'மில்க் ப்ராசசிங் யூனிட்' ஏறத்தாழ 36 இலட்சம் ரூபாய் செலவில் நெல்லை நகரில், இப்படிப்பட்ட ஒரு மில்க் பிராசஸ் செய்யும் பிளாண்ட், பால் பதப்படுத்தும் இயந்திர அமைப்பை உருவாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மாவட்டத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியிலிருக்கும் திருச்செந்தூர் முருகன் கோயில் மிகவும் நல்லமுறையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் மிகவும் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். முன்பு மற்றக் கோயில்களின் வருவாயை நம்பி கிட்டம் போ . நிலையும்



[திரு. கே. பி. கந்தசாமி]

1974 ஏப்ரல் 4]

ருந்தது. ஆனால் இன்றைக்கு அங்கே வரும் வருவாயிலிருந்து நல்ல திருப் ணிகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் ண் மருத்துவமனைத் திட்டம், தாய் சேய் நலத் திட்டம் ஆகியவை அந்தக் காயிலின் வருவாயிலிருந்து கிடைக்கும் உபரி வருவாயிலிருந்து திருச்செந்தூர் காத்திலே ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது நல்ல ணி கோயிலிலுள்ள வருவாயிலிருந்து அதிகமாகக் கிடைக்கும் இந்தப் பணத் லிருந்து இப்படிப்பட்ட சமூகப்பணிகளில் அரசு ஈடுபட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று இந்தத் துறை அப்படிப்பட்ட ஒரு பிரிவை, மருத்துவ னையை உண்டாக்குவதைப் பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக இந்தத் துறையில் பணியாற்றும் அதிகாரியை நான் பாராட்டுகிறேன். இந்தக் கருத்துக்களைச் சொல்லி, இத்தனை நேரம் பேசுவதற்கு அவகாசம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தமிழ் நாடு இந்து சமய அறநிலைய நிதி அறிக்கையின்மீது குறிப்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீரங்கம் தொகுதியிலிருக்கும் ஸ்ரீரங்கப் பெருமாளின் கோயிலைப் புதுப்பிப்பதற்காக வேண்டி யுனெஸ்கோ மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் யுனெஸ்கோ எய்ட் என்ன வந்தது என்றால் டெக்னிகல் அட்வைஸ், மற்றும் குறிப்பாக மெட்டீரியல்ஸ் கொடுத் தார்கள். அதைத்தவிர வேறு எதுவும் நிதியாக அவர்கள் கொடுக்காததால் அந்தக் கோபுரங்களில் இரண்டு கோபுரங்கள் முடிந்து, ஒரு கோபுரம் இன்னும் வேலைப்பாட்டிலே இருக்கிறது. 21 கோபுரங்கள் இன்னும் கட்டி முடிக்கப் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தினால்—எனக்கு ஞாபகம் இருக்கிறது— 1964 ஆம் ஆண்டு அரசாங்கம் இந்த வேலையை எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது அரசு முனிசிபாலிட்டி அதை எடுத்து அவர்களது உதவியோடு நடத்த வேண்டுமென்று கூறியது.

ஆனால், ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டியானது நூற்றாண்டு விழாக் கொண்டாடப் போகும் நேரத்திலேயும்கூட அதற்குப் போதிய அளவிற்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால் இந்த வேலைகளை எடுத்துச் செய்வதற்கு இயலாத ஒரு நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டது.

அத்துடன் அங்கேயிருக்கும் அந்த ஏழு ram part walls மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதைச் சுற்றிலும் மக்கள் வாழ்கின்ற சிறிய வீடுகள் இருக்கின்றன. அந்தச் சுவர் இடிந்து விழுந்தால் எந்த அளவில்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 ஏப்ரல் 4

சுற்றுப்புற மக்களைப் பாதிக்கும் என்பதைக் கருதி இதை உடனடியாகக் கவனித்து அதற்கு ஆவன செய்து, எல்லா ரிப்பேர் வேலைகளையும் செய்ய அரசு நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1964 ஆம் ஆண்டு அதற்கென்று கோயில் வேலைகளுக்கு போட்ட நிதி மதிப்பு ஏறத்தாழ 3 இலட்சம் ரூபாய். ஆனால் இன்றைக்கு பத்து ஆண்டுகள் சென்றதற்குப் பிறகு அது பன்மடங்கு உயர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில் என்பதால் அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேறுவிதத்தில் வருமானம் இல்லை. அங்கிருந்த 80 கிராமங்களை ஆங்கிலேயர் ஆட்சியில் இனும் லேண்டாக இருந்ததை எடுத்து, காம்பன்சேஷன் பத்தாண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டது 35,000 ரூபாய். அதன்பிறகு அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டபொழுது அரசாங்கத்தால் அதை 5,000 ரூபாய் கூடச் சேர்த்து கொடுக்கப்பட்டது. இந்த 5,000 ரூபாய் என்று உயர்த்திருப்பதற்கு நன்றி சொல்லும் இந்த நேரத்தில் அது போதிய அளவில் இல்லாததால் அதை சற்று உயர்த்தி 50,000 ரூபாயாவது அரசாங்கம் கொடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, நம்முடைய பெரியபாளையத்தில் இருக்கின்ற பவானியம்மன் கோயில். அந்தத் திருக்கோயிலுக்குச் செல்பவர்கள் குறிப்பாக ஆடி மாதத்திலே மிகவும் அதிகப்படியான மக்கள் செல்கிறார்கள், ஏழை மக்களும் அதிகமாக அங்கே செல்கிறார்கள். அங்கு பல ஆண்டுகளாகியும்கூட இன்னும் வசதிகள் அங்கு வரக்கூடிய யாத்திரிகர்களுக்குச் செய்யப்படவில்லை.

அங்கு குடிப்பதற்குக் குடிநீர்கூட கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அந்த கோயிலுக்கு வரும் நிதி எந்த அளவிலே உபயோகிக்கப்படுகிறது என்பதையெல்லாம் அரசு சற்றுக் கவனித்து ஆராய்ந்து அதற்குத் தக்க வகையில் ஆவன செய்ய வேண்டும். ஒழுங்கான டிரஸ்டிகளை அங்கே போட வேண்டும்.

பிரவேசக் கட்டணம் என்று 5 ரூபாய் வைத்திருக்கிறார்கள். அதிகப்படியான ஏழைகள் அங்கே வருகின்ற காரணத்தால் 5 ரூபாய் கொடுத்து அவர்கள் செல்ல இயலாத நிலைமை இருக்கிறது. எனவே 5 ரூபாய் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்கும் இந்த நேரத்தில் அங்கே வரும் யாத்திரிகர்கள் மட்டுமல்ல.

(முற்பகல் 11-30)

**திரு. கா. வேழவேந்தன் :** ஒரு பர்சனல் எக்ஸ்பிளனேஷன் மாண்புமிகு அம்மையார் அவர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கும் பெரியபாளையம் பவானி அம்மன் கோயிலைப் பற்றிப் பேசுகிறார்கள். பவானி அம்மன் கோயிலைம்



1974 ஏப்ரல் 4] [திரு. கா. வேழவேந்தன்]

பொறுத்தவரை முன்னேற்றத் திட்டங்களைக் கவனிக்க இந்த அரசாங்கம் பல்வேறு டிரஸ்டிகளை நியமிக்க உத்தரவு பிறப்பித்தது. ஆனால் பரம்பரை டிரஸ்டிகளாக இருப்பவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அதனால் அரசாங்க உத்தரவை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதைத்தான் தொடர்ந்து கூற நான் நினைத்தேன். அதற்குள்ளாக அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். இருந்தாலும் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்டே வாங்கியிருக்கும் விவரங்களுக்குள் எல்லாம் நான் போக விரும்பவில்லை. நல்ல முறையில நடக்கின்ற கோயில்களை எல்லாம் கூட அரசாங்கம் எடுத்திருக்கிறது. நல்ல முறையில் நடக்காத அந்தக் கோயிலை எடுத்துக் கொள்வது அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றதால் தாமதப்பட்டாலும் நமக்கும் உரிமை உண்டு என்ற காரணத்தால் தீர ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பெரியபாளையம் அம்மனின் கோவில் முக்கிய ஸ்தலமாக இருப்பதால் வசதிகள் பல ஏற்படுத்தி அரசு நிர்வகிக்க முன்வரவேண்டும்.

பரம்பரை டிரஸ்டிகளைப் பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை. அரசு முயற்சிகளை எடுத்து நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, இந்த அறநிலையம் பாதுகாப்பு, பால்வளம், காதி எல்லாவற்றுக்கும் மானியம் கோரியிருக்கிறார்கள். இந்த மானியங்களின் பேரில் ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்து அறநிலையப் பாதுகாப்பை எடுத்துக் கொள்வோமானால் இங்கு இருக்கக்கூடிய அமைச்சரவை கோயில்களுக்குத் திருப்பணி செய்கிறோம்; வருமானத்தைப் பெருக்கியிருக்கிறோம்; புதிய நிலங்களை எல்லாம் கையகப்படுத்தியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்துக்களின் உள்ளங்களில் என்ன தோன்றுகிறது என்றால் பக்தியே இல்லாதவர்கள் எல்லாம் அறநிலையப் பாதுகாவலர்களாகவும் அறங்காவலர்களாகவும் போடப்படுவதைப் பார்த்து வருந்துகின்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. காலம் முடிந்த பிறகும் அவர்களே தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற நோக்குடன் காலத்தை நீட்டிக்கின்ற முறையும் இருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** பக்தி என்பதை எந்த அளவில் டெஸ்ட் பண்ணிப் பார்ப்பது ?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆண்டவன் மேல் ஆசையுள்ளவர்களாக, பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ரஷ்யாவின் மேல் ஆசை உடைய வர்களைப் பக்தி உள்ளவர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆண்டவன் மேல் பக்தி உள்ளவர்களை, ஆலயங்களில் நம்பிக்கையுடையவர்களை அறங்காவலர் களாகப் போடுங்கள். வேறு வகையில் பக்தியுடையவர்களை வேறு நியமனங் களில் போடுங்கள்.

ஆலயங்கள் என்று வரும்போது மகமதியர்கள் ஆலயங்களாக இருந்தால் வக்ஃப் போர்டு கையில் இருக்கிறது; கிறித்தவர்கள் ஆலயங்கள் அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களிடந்தான் இருக்கிறது. ஆனால் இந்துக்களின் ஆலயங்கள், சொத்துக்கள் மட்டும் மதச் சார்பற்ற கட்சியில் சார்பில் இருக்கின்ற வர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஆலயங்களின் அறங்காவலர்களாக யாரைப் போடுவது என்று இல்லையா? என்னென்ன குற்றங்கள் செய்தவர்களை எல்லாம் அறங்காவலர்களாகப் போடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குளித்தலை வட்டாரத்தில் ராஜ திருக்காளீஸ்வரர் கோயிலுக்கு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை பெற்று வெளியே வந்தவரை அறங்காவலராகப் போட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் போட்டிருக்கிறார்கள்?

திருத்தணி இன்று மிக முக்கியமான ஆலயம். ஆறுபடை வீடுகளில் ஒன்று. அதிலே, சைதாப்பேட்டையில் தலைமையாசிரியராக இருப்பவரை அறங்காவலர் குழுவிலே போடுகிறார்கள். திருத்தணியிலே ஆள் இல்லையா? திருத்தணி சுற்றுப்புறத்தில் ஆள் இல்லையா? சைதாப்பேட்டை கனம் முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி என்ற காரணத்தால் அங்கிருந்து போட்டிருக்கிறார்களா?

**திரு. இ. எஸ். தியாகராசன்:** திருத்தணி நடேசன் அவர்கள் திருத்தணி தொகுதியைச் சேர்ந்தவர்தான். மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவராக இருந் தாலும் இன்றைக்கு என்ன செய்து கொண்டிருக்கிறார். சைதாப்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் இருவரும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நம் இரண்டு பேருக்கும் சென்னை இடம் கொடுத்து எம்.எல்.ஏ.க்களாக ஆக்கியிருக்கும்போது இங்கே இருப்பவர் திருத்தணியிலே அறங்காவலராக இருக்கக்கூடாதா?



**திருமதி த. ந. அனந்தநாயகி:** எம்.எல்.ஏ.க்களாகப் பணி புரிவது வேறு, அறங்காவலர்களாகப் பணி புரிவது வேறு. அது லோக்கல் என்டர்பிரைஸ். அந்தப் பணிகளுக்கெல்லாம் அந்த ஊரிலேயே இருக்கக்கூடியவர்களைத்தான் போட வேண்டும். அப்போதுதான் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் கண்காணிக்க முடியும். அந்த வகையில் அறங் காவலர்களைப் போடும்போது கட்சி அடிப்படையில் போடுவது சரியல்ல.

எங்கோ இருக்கிற பழனி கோயிலுக்கு மதுரையிலிருந்து கட்சி ஆள் டிரஸ்ட் சேர்மனைப் போடப்படுகிறார். பழனியில் ஆள் இல்லையா? பக்தி உள்ள வர்கள் குறைந்து விட்டார்களா? இதையெல்லாம் கட்சி அடிப்படையில் செய்யக்கூடாது. இதெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும். இன்றைக்கு இவற்றையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை ஸ்தாபனங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தப்படும் சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையை ஏற்படுத்துவது மிக மிகத் தவறு.

இதன் காரணமாகத்தான் கோயில் சொத்துக்களை ஒழுங்காகப் பராமரிக்க முடியவில்லை. கட்சியின் அடிப்படையில் இவர்கள் அறங்காவலர்களை நியமிப் பதன் காரணமாக அவர்கள் மூவாயிரம் ரூபாய்க்கும், இரண்டாயிரம் ரூபாய்க்கும் கோயில் சொத்துக்களை எடுத்துக் கொடுத்து விடுகிறார்கள். கோயில் பணிகளுக்காக சமுதாயத்திலிருந்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை ஒழுங் காகப் பராமரிக்க வேண்டாமா? கட்சி அடிப்படையில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தையும் கங்காதீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தையும் ஏழைகளுக்கு என்று சொல்லி குறைந்த விலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதே நேரத்தில் செட்டியார் டிரஸ்ட் நிலத்திற்கு 12,000 ரூபாய் கொடுக்கிறீர்கள். அப்படியானால் கபாலீசுவரரும் கங்காதீசுவரரும் இளித்தவாயர்களா? கடவுள் சொத்து என்றால் இளித்தவாய்ச் சொத்தா? இந்துக்களுக்கு இதைக் கேட்க உரிமை இருக்கிறது. ஏழைகளுக்கு வீடுகளைத் தாராளமாகக் கட்டிக் கொடுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை.

ஆனால் இதுவும் ஏழைகளுக்குத்தானே பயன்படுகிறது. கோயிலில் அய்யர்கள் பிழைக்கிறார்கள்; பூக்காரன் பிழைக்கிறான்; இசை வாத்தியக் காரர்கள் பிழைக்கிறார்கள்; ஓதுவார்கள் பிழைக்கிறார்கள். இப்படிப் பலர் பிழைக்கக்கூடிய கோயில் சொத்தை எடுத்து மூவாயிரம் ரூபாய்க்குக் கொடுக் கிறார்கள்; அதே நேரத்தில் தனி நபருக்கு 12,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆண்டவன் மேல் ஆசையுள்ளவர்களாக, பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ரஷ்யாவின் மேல் ஆசை உடைய வர்களைப் பக்தி உள்ளவர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆண்டவன் மேல் பக்தி உள்ளவர்களை, ஆலயங்களில் நம்பிக்கையுடையவர்களை அறங்காவலர் களாகப் போடுங்கள். வேறு வகையில் பக்தியுடையவர்களை வேறு நியமனங் களில் போடுங்கள்.

ஆலயங்கள் என்று வரும்போது மகமதியர்கள் ஆலயங்களாக இருந்தால் வக்ஃப் போர்டு கையில் இருக்கிறது; கிறித்தவர்கள் ஆலயங்கள் அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களிடத்தான் இருக்கிறது. ஆனால் இந்துக்களின் ஆலயங்கள், சொத்துக்கள் மட்டும் மதச் சார்பற்ற கட்சியில் சார்பில் இருக்கின்ற வர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஆலயங்களின் அறங்காவலர்களாக யாரைப் போடுவது என்று இல்லையா? என்னென்ன குற்றங்கள் செய்தவர்களை எல்லாம் அறங்காவலர்களாகப் போடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குளித்தலை வட்டாரத்தில் ராஜ திருக்காளீஸ்வரர் கோயிலுக்கு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை பெற்று வெளியே வந்தவரை அறங்காவலராகப் போட்டிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் போட்டிருக்கிறார்கள்?

திருத்தணி இன்று மிக முக்கியமான ஆலயம். ஆறுபடை வீடுகளில் ஒன்று. அதிலே, சைதாப்பேட்டையில் தலைமையாசிரியராக இருப்பவரை அறங்காவலர் குழுவிலே போடுகிறார்கள். திருத்தணியிலே ஆள் இல்லையா? திருத்தணி சுற்றுப்புறத்தில் ஆள் இல்லையா? சைதாப்பேட்டை கனம் முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி என்ற காரணத்தால் அங்கிருந்து போட்டிருக்கிறார்களா?

**திரு. இ. எஸ். தியாகராசன்:** திருத்தணி நடேசன் அவர்கள் திருத்தணி தொகுதியைச் சேர்ந்தவர்தான். மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவராக இருந் தாலும் இன்றைக்கு என்ன செய்து கொண்டிருக்கிறார், சைதாப்பேட்டையில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் இருவரும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நம் இரண்டு பேருக்கும் சென்னை இடம் கொடுத்து எம்.எல்.ஏ.க்களாக ஆக்கியிருக்கும்போது இங்கே இருப்பவர் திருத்தணியிலே அறங்காவலராக இருக்கக்கூடாதா?





**திருமதி த. ந. அனந்தநாயகி:** எம்.எல்.ஏ.க்களாகப் பணி புரிவது வேறு, அறங்காவலர்களாகப் பணி புரிவது வேறு. அது லோக்கல் என்டர்பிரைஸ். அந்தப் பணிகளுக்கெல்லாம் அந்த ஊரிலேயே இருக்கக்கூடியவர்களைத்தான் போட வேண்டும். அப்போதுதான் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் கண்காணிக்க முடியும். அந்த வகையில் அறங் காவல்களைப் போடும்போது கட்சி அடிப்படையில் போடுவது சரியல்ல.

எங்கோ இருக்கிற பழனி கோயிலுக்கு மதுரையிலிருந்து கட்சி ஆள் டிரஸ்ட் சேர்மனாகப் போடப்படுகிறார். பழனியில் ஆள் இல்லையா? பக்தி உள்ள வர்கள் குறைந்து விட்டார்களா? இதையெல்லாம் கட்சி அடிப்படையில் செய்யக்கூடாது. இதெல்லாம் கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும். இன்றைக்கு இவற்றையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை ஸ்தாபனங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தப்படும் சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையை ஏற்படுத்துவது மிக மிகத் தவறு.

இதன் காரணமாகத்தான் கோயில் சொத்துக்களை ஒழுங்காகப் பராமரிக்க முடியவில்லை. கட்சியின் அடிப்படையில் இவர்கள் அறங்காவலர்களை நியமிப் பதன் காரணமாக அவர்கள் மூவாயிரம் ரூபாய்க்கும், இரண்டாயிரம் ரூபாய்க்கும் கோயில் சொத்துக்களை எடுத்துக் கொடுத்து விடுகிறார்கள். கோயில் பணிகளுக்காக சமுதாயத்திலிருந்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை ஒழுங் காகப் பராமரிக்க வேண்டாமா? கட்சி அடிப்படையில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்கள் உங்கள் பேச்சைக் கேட்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தையும் கங்காதீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தையும் ஏழைகளுக்கு என்று சொல்லி குறைந்த விலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதே நேரத்தில் செட்டியார் டிரஸ்ட் நிலத்திற்கு 12,000 ரூபாய் கொடுக்கிறீர்கள். அப்படியானால் கபாலீசுவரரும் கங்காதீசுவரரும் இளித்தவாயர்களா? கடவுள் சொத்து என்றால் இளித்தவாய்ச் சொத்தா? இந்துக்களுக்கு இதைக் கேட்க உரிமை இருக்கிறது. ஏழைகளுக்கு வீடுகளைத் தாராளமாகக் கட்டிக் கொடுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை.

ஆனால் இதுவும் ஏழைகளுக்குத்தானே பயன்படுகிறது. கோயிலில் அய்யர்கள் பிழைக்கிறார்கள்; பூக்காரன் பிழைக்கிறான்; இசை வாத்தியக் காரர்கள் பிழைக்கிறார்கள்; ஓதுவார்கள் பிழைக்கிறார்கள். இப்படிப் பலர் பிழைக்கக்கூடிய கோயில் சொத்தை எடுத்து மூவாயிரம் ரூபாய்க்குக் கொடுக் கிறார்கள்; அதே நேரத்தில் தனி நபருக்கு 12,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

இந்து சமுதாயத்தின் சார்பில் இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். சமய சார்பற்ற கட்சி சமயத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து தங்க விருப்பப்படி செலவழிப்பது சரியல்ல. அப்படிச் செலவழிக்கும் நிலை இருப்ப வருந்தத்தக்கது.

அறநிலையத்திற்கு இருக்கக்கூடிய பணத்தை எப்படிச் செலவழிக் வேண்டும்? சில கோயில்களுக்கு அதிகமாக வரக்கூடிய பணத்தை எப்படி செலவழிக்க வேண்டும்? சிதைந்துத் கிடக்கும் கோயில்களைக் கணக்கெடுக் வேண்டும்; பாடல் பெற்ற ஸ்தலங்களை எல்லாம் எப்படித் திருத்தி அமைப்ப என்று திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

கோயில் பணத்தைக் கொண்டு கல்லூரி ஆரம்பிக்கிறோம், ஹைஸ்கூல் ஆர பிக்கிறோம் என்றெல்லாம் சொன்னால் அது சரியல்ல. அது ஸ்டேட் வே நான்-ரிலிஜியஸ் பர்பசஸ்க்கு செலவழிக்கக்கூடாது. அரசாங்கம் கல்விக்கா 108 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதிலிருந்து செலவழிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அவர்களுடைய கட்சியின் சார்பி கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை அம்மையார் அவர்கள் ஆதரித்து பேசுகிறாரா அல்லது எதிர்த்துப் பேசுகிறாரா என்பதைத் தெரிந்துகொள் விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கட்சியின் சார்பில் வெட்டுத் தீர்மானங்க கொடுக்கவில்லை. அங்கத்தினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திரு கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கோயில் வருமானத்தை எடுத் ஏழைகளுக்குச் செலவு செய்ய வேண்டுமென்று மதிப்பிற்குரிய உறுப்பின சுரேந்திரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை எதிர்த்துப் பேசுகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏழைகளுக்கு எப்படிச் செலவழிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். முதலில் சமயப்பற்று பொதுவாக இருக்க வேண்டும் . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கோயில்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய சொத்துக்களை விவசாயிகளுக்குக் கொடுப்பது அல்லது தேவையானால் அரசாங்கம் எடுத்துக் கொள்வதுபற்றி அம்மையார் அவர்கள் கருத்து என்ன என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** தமிழகத்தில் உள்ள கோயில்களின் சொத்துக்கள் எல்லாம் தமிழக அரசின் கையில்தான் இருக்கின்றன.

In Russia, State owns lands. Here through H.R. & C.E. the State owns lands. What is the difference?
எப்படி ரஷ்யாவில் ஸ்டேட் நிலங்களை எல்லாம் வைத்திருக்கிறார்களோ, அதே போல்தான் இங்கும் அரசாங்கம் கோவில் சொத்துக்களை வைத்துக்கொண் டிருக்கிறது. ரஷ்யாவில் எப்படி ஸ்டேட் ஓன்ட் என்றிருக்கிறதோ அதேபோல் தான் இருக்கிறது இங்கு கோவில் சொத்துக்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனித்தனியாக உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களே அல்லாது கட்சிக் கொள்கைக்கு சார்புடைய தல்ல என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இங்கு பழைய காங்கிரஸ் கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மா னங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை அவர்களின் கட்சிக் கொள்கையைப் பிரதிபலிக்கக்கூடியவை அல்லவா? கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை அவர்கள் கட்சிக் கொள்கையைப் பிரதிபலிப்பது அல்லவா? அவர்கள் அவை அவர் களது கட்சிக் கொள்கையைப் பிரதிபலிப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் மட்டும் நாங்கள் தனித்தனியாகத் தீர்மா னங்கள் கொடுத்திருக்கிறோம், அவை கட்சிக் கொள்கையைப் பிரதிபலிப்பவை அல்ல என்றால் அவை எந்த அளவிற்கு பிரதிபலிக்கிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவரவர்களுக்கு உரிமை உண்டு. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். மத அடிப்படையில் நாங்கள் எங்கள் கருத்துக்கள் என்னவோ அவற்றைத் தெரிவிக்கலாம். இது மதப்பற்றற்ற அரசாங்கம். அவரவர்கள் விருப்பப்படி மதப் பற்றுக்களைக் கடைப்பிடிக்கலாம். அவரவர் களுக்கு இஷ்டப்பட்டபடி அவரவர்கள் மதப்பற்றுக்களை நடைமுறையில் வைத்துக்கொள்ளலாம். ஆகவே இதில் கட்சியை இழுக்காதீர்கள். அரசியலுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவரவர்கள் இஷ்டப்படி ஆண்டவனை வணங்குபவர்கள் இருக்கலாம், வணங்காதவர்கள் இருக்கலாம். ஒரே கடவுள் என்று சொல்லலாம். இன்னும் பல கடவுள்கள் தேவை என்று சிலர் சொல்லலாம். அது அவரவர்களுடைய நெஞ்சைப் பொறுத்தது. ஆனால் இங்கே சட்டசபையில் இயங்குகிற நேரத்தில் ஒரு உறுப்பினர் தருகிற வெட்டுத் தீர்மானம் அந்தக் கட்சியின் கொள்கையைப் பிரதிபலிக்காதா?

திருமதி த. ந. அனந்தநாயகி : அவரவர்கள் சுவையிலிருந்து அது பிரதிபலிக்கும். இந்த டிமான்டைப் பொறுத்தவரையில் வேறு, மற்றவை எல்லாம் வேறு. It is a non-secular and non-religious State.

THIRU V. KRISHNAMOORTHY : It is a secular State.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I stand corrected. I am sorry. It is a secular and non-religious State. This Demand gives a religious freedom. ஆகவே, அவரவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதைச் சொல்லலாம் இந்தக் கொள்கை பற்றி. மற்றபடி பொருளாதாரச் சீர்திருத்தம் அல்லது மற்றவைகள் பொறுத்தவரையில் ஒற்றுமையாக இருக்கிறோம். What is our policy? So far as religion is concerned.

(Mr. Chairman sounded the gong).

THIRUMATHI T. N. ANANDANAYAKI : No. No. You must give me some more time. ஆகவே, இன்று கங்காதீஸவரர் கோவில், கபாலீஸ்வரர் கோவில் நிலங்களை எடுத்துக்கொண்டால் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் நஷ்டயீடு இவற்றிற்கும் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, ரெனவேஷன். ரெனவேஷனுக்காக 15 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உங்கள் வருமானம் கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் அளவிற்கு வருகிறது. சமய சார்பற்றக் காரியங்களுக்காக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்று சொன்னால் கோவில் திருப்பணிகளுக்காக 15 லட்சம் ரூபாய் செலவழிப்பது என்பது கடலில் கரைத்த பெருங்காயம்போல் ஆகும்.

இன்றையதினம் உள்ள விலைவாசியில் இந்த 15 லட்சம் ரூபாயில் என்ன திருப்பணிகள் செய்துவிட முடியும் என்று கேட்கிறேன். ஆகவே நான் சொல்வது என்னவெனில், கோவில் வருமானத்தில் திருப்பணிகளுக்கு முதல் இடம் தரவேண்டும்.

அடுத்தபடியாக மக்களுக்கு சமய போதனைகள் செய்வதற்காக செலவு செய்யவேண்டும். எதிர்க்கட்சியினர்கள் பேசுகிறார்கள் உபன்யாசம் செய்யவேண்டும் உபன்யாசம் செய்யவேண்டும் என்று. கோவில்களில் உபன்யாசங்கள் செய்வதற்கு நீங்கள் காசு கொடுக்கமாட்டீர்கள்.





திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : (நெல்லிக்குப்பம்) ஏதாவது ஒரு கோவிலில் அம்மையார் அவர்கள் உபன்யாசம் செய்தால் எனக்குச் சொல்லி அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நானும் வந்து கேட்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தாமரை மேல் சூரிய ஒளி பட்டால் அது மலரும். ஆனால் கல் தாமரைமேல் சூரிய ஒளி பட்டால் என்ன பலன் இருக்கும் ? உபன்யாசம் கேட்க வருகிற பக்தகோடிகள் கடவுளின் மேல் நம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பெரிய திருத்தலங்கள் திருத்தணி, பழனி, மதுரை, திருச்செந்தூர் போன்ற திருத்தலங்களில் எல்லாம் இன்று போதிய வசதிகள் இல்லை. வெளி நாடுகளில் இருந்து நம் நாட்டுக்கு வந்து கோவில்களைப் பார்க்கிறார்கள். எவ்வளவு அழகாக கல்லில் கலைவண்ணத்தைக் கண்டிருக்கிறான் தமிழன். அந்தக் கல்லுக்கு எப்படி தெய்வீகத் தன்மையை ஊட்டியிருக்கிறான் என்பதைக் காண வெளிநாடுகளிலிருந்து பலர் நம் நாட்டுக்கு வருகிறார்கள்.

அப்படி வெளிநாட்டினர் வந்து பார்க்கக்கூடிய இப்படிப்பட்ட இடங்களில் டிரெயினேஜ் (Drainage) பெஸிலிட்டீஸ் கிடையாது. 108 தங்கும் விடுதிகள் உள்ளன என்று சொல்கிறார்கள். கட்டிப் போட்டு என்ன பலன் ? ட்ரைனேஜ் வசதிகள் இல்லாத நிலையில் இருக்கின்றன. ஆகவே இப்படிப் பட்ட இடங்களில் ட்ரைனேஜ் வசதி, வாட்டர் வசதி, வடிகால் வசதி இவைகளை உடனடியாக இந்தத் திருத்தலங்களில் செய்து கொடுக்கவேண்டும். அடிக்கடி இந்தத் திருத்தலங்களில் திருவிழாக்கள் நடக்கின்றன. அப்போது அதிகப்படியான மக்கள் வருகிறார்கள். சுகாதார வசதிகள் குறைவாக இருப்பதன் காரணத்தால் அநேக நோய்கள் பரவக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே முதலில் அதில் போதிய அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தமிழ்நாடு கோவில் செல்வங்கள் விலைமதிப்பற்றவை என்பது நாடறிந்த உண்மையாகும். அதன் அடிப்படையில்தான் விலைமதிப்பற்றவையாக இருக்கிற இந்தக் கோவில் செல்வங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் நம் அரசு இருக்கிறது என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. இந்தக் கோவில் செல்வங்களை சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் களவாடிச் சென்றனர் வட நாட்டிலிருந்து வந்த மாலிக் காபூர், கஜினி முகமத், முகமத் கோரி

போன்ற மன்னர்கள். அப்படி கலைச் செல்வங்களை, கலைப் பொக்கிஷங்களை, தமிழ் நாட்டின் செல்வங்களை அவர்கள் களவாடிச் சென்றதாக நம் வரலாறுகள் கூறு கின்றன. அப்படி அவர்கள் களவாடிச் சென்ற அந்தச் செல்வங்களின் மீதி தான் இன்றுள்ளன.

அதுவும் விலை மதிப்பில்லாத அளவிற்கு பலகோடி ரூபாய் பெறக்கூடிய அளவிற்கு நம் கலைச் செல்வங்கள் உள்ளன. அப்படிப்பட்ட கலைச் செல்வங் களை எப்படி நம் அரசு பாதுகாக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள அறநிலையங்கள் எந்தளவிற்கு நம் அரசால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்று எண்ணிப் பார்த்தால் ஏறத்தாழ 15,000 அறநிலையங்கள் இன்று அரசின் பாதுகாப்பில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதிலும் இன்றைய அரசு பல சீர்திருத்தங்களை செய்கிற அளவிற்கு எண்ணம் கொண்டதாக இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் ஆண்டவனைப்பற்றிப் பேசும்போது அதில் கட்சிப் பாகு பாடு கூடாது என்று சொன்னார்கள்.

ஆண்டவனைப் பொறுத்தவரையில் கட்சிப் பாகுபாடு கூடாது என்று சொல்கிற நேரத்தில் ஆண்டவன் அறநிலையங்களில் அறங்காவலர்களை நியமிக்கும் போது மட்டும் ஏன் அது அவர்களது கண்ணை உறுத்துகிறது என்பதை நினைக்கும்போது உள்ளபடியே வருந்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் குறிப்பாக நல்ல முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட ஒரு இயக்கமாகும் என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, அப்படி சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டவர்கள் கோவில்களில் பொறுப்பேற்று நிர்வகிப்பதன் மூலமாகத்தான் அங்குள்ள இழிநிலைமைகளைப் போக்குவதற்கு வழி பிறக்கும் என்ற திண்ணமான நம்பிக்கையை இந்த அரசு கொண்டிருப்பதன் காரணத் தால்தான் அங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அறங் காவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தமிழ் நாட்டில் இன்னும் ஏழ்மை தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இதைக் குறிப்பிட்டுத்தான் புரட்சிக் கவிஞர்கள் எல்லாம் சொன்னார்கள். "பாலன் பசித்து பாழ்க்கும் வேளையில் பாழாய்ப் போன கல்லுக்கு பாலபி ஷேகமா" என்று சொல்லியிருக்கிறார்கள்.



அந்த நிலை மாறுபட்டிருக்கிறதா என்றால், இன்றும் அதே நிலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. தெய்வங்கள் என்று சொல்லி இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட கல்லுக்கு பால் அபிஷேகம் செய்யும் ஒரு அவல நிலை இன்னும் நம் நாட்டில் இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு இழி நிலை, மூட நம்பிக்கை இருந்துகொண்டிருந்தால் இந்த நாடு எப்போது உருப் படும்?

ஆகவே புரட்சிகரமானதொரு மாற்றத்தின் மூலம்தான் இதற்கு ஒரு பரிகாரம் காண முடியும். ஆண்டவன் பேரில், ஆண்டவன் பெயரைச் சொல்லி ஏமாற்றிக்கொண்டிருக்கிற கூட்டங்கள் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. அதைத் துணிவோடு சீர்திருத்துகிற ஒரு வாய்ப்பு இந்த அரசுக்கு இருக்கிறது, இந்த அரசினால்தான் அதைச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை நாட்டிலுள்ள முற்போக்காளர்களுக்கு இருக்கிறது.

ஆகவே தங்கள் மூலம் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அறநிலை யங்களைப் பொறுத்து புரட்சிகரமான மாற்றத்தை இந்த அரசு செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்க வேண்டும். இதில் இந்த அரசு பின்வாங்குமானால் இன்னும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளானாலும் இந்த அறநிலையங்களைச் சீர்திருத்தவே முடியாது என்பதை இந்த நேரத்தில் கூற நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இங்கிருப்பவர்கள் எல்லாம் ஆண்டவன் குழந்தைகள் என்பதை நாம் நன்கு அறிவோம். ஆண்டவன் குழந்தைகளாக இருக்கிற அத்தனை பேர்களுக்கும் இடையே ஒருமித்த ஆதரவு இருக்கவேண்டும்.

ஆண்டவனுக்குப் பக்கத்தில் இருக்கிற ஆமாம் சாமிகள் குறுக்கே நின்று கொண்டு ஜாதிப் பாகுபாட்டைத் திணிக்கவேண்டும் என்ற முறையில் இப்படிப் பட்ட கட்சி உருவாகிக்கொண்டிருப்பது கண்டு வேதனைப்படுகிறேன், வெட்கப் படுகிறேன்.

சில நாட்களுக்கு முன்பாக இந்த அவையில் ஜாதியைப் பற்றிப் பேசுகிற ஒரு அவல நிலை உருவாக்கப்பட்டது. அதைத் தட்டிக் கேட்பதற்கு நாதியற்ற முறையில் ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இந்து மதம் இந்த நாட்டிலே தோன்றிய பின்னாலே தான், வேதங்கள் தோன்றின. இந்து மதத்திற்குப் பின்னாலேதான் ஜாதிகள் தோன்றின. அதற்குப் பின்னாலேதான் அந்தக் கோவில்களில் நடக்கும் நடை முறைகளுக்கு நாம் முக்கியத்துவம் தருகிற நேரத்தில், நம்முடைய தமிழக அரசு பல புதிய புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுவந்து சட்டம் கொண்டுவந்தது.

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 ஏப்ரல் 4

அந்தச் சட்டத்தின் பயனாக ஆலயங்களில் இருக்கும் அறங்காவலர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டுமென்று சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசின் மூலம் ஒன்றை நான் கேட்டுக்கொள்கிறேன். களாக வருகிறவர்கள் பட்டமாக, அவர்கள் சுயேச்சையாக இயங்குவதற்கான நிலையை நமது அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சொல்கிற நேரத்தில் அறங்காவலர்களாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திய இந்த அரசாங்கம் இந்த நிலையையும் உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்கள் தலைமை அறங்காவலர்களாக வருவதற்கு வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது எல்லாம் ஆண்டவன் இருக்கும் இடத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வரக்கூடாது என்ற இழிநிலையை நீக்க, அர்ச்சகர் தாழ்த்தப்பட்டவராகவும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றித் தந்தது நம்முடைய அரசு. இன்று அதனுடைய நிலைமை என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக வரலாமா என்பது ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்று கொண்டு வரப்பட்ட சட்டம் மீது இன்று சுப்ரீம் கோர்டில் உத்தரவிடப்பட்டிருக்கிறது, இந்த இழி நிலையைப் போக்க மத்திய சர்க்கார், டெல்லி சர்க்கார் சட்டத் திருத்தம் தேவை என்று சொல்லியிருக்கிறது. இந்த இழி நிலையைப் போக்க மத்திய அரசாங்கம் மாற்றான் தாய் மனப்பான்மையோடு இருக்கும் மர்மம் என்ன என்பதை நான் உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இருக்கிற ஆட்சி சட்டம் கொண்டுவந்தபோது, இந்தச் சட்டமன்றம் ஒப்புதல் அளித்த பிறகும், டெல்லியில் இருக்கிற ஆட்சியாளர் இதற்குச் சட்டம் திருத்தம் கொண்டு வராமல் இருப்பதற்குக் காரணம் கேட்கிறேன்.

இன்றையதினம் எதிர்தரப்பு வரிசையில் இருப்பவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லாமல் இருக்கிறார்கள். சட்டம் ஏற்பட்டால் அதனால் யாருக்கு லாபம், யாருக்கு நன்மை? தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டால் அது நமக்குப் பாதகம் ஏற்படும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் டெல்லி சர்க்கார், மத்திய சர்க்கார் இதற்கு அங்கீகாரம் தர மறுக்கிறது என்று தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய முடிவு என்ன என்று தெரிவிக்கவேண்டும்.



1974 ஏப்ரல் 4] [திரு. வை. பாலசுந்தரம்]

ஒன்று, தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்று சட்டபூர்வமான அங்கீகாரம் வரவேண்டும். மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படவில்லையென்றால், அது இன்னின்ன காரணங்களால் மறுக்கப்படுகிறது என்று சொல்ல வேண்டும். அதற்குத் தகுந்த முடிவு கண்டால் ஒழிய அதற்குப் பரிகாரம் காண முடியாத சூழ்நிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? கேட்கிற நாதி இல்லை, காரணம் கேட்க ஆள் இல்லை என்கிற காரணத்தால்தான். இன்று தமிழக முதல்வர் நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த புரட்சிகரமான மாறுதலைச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிச் சொல்கிறபோது, டெல்லி சர்க்காரை, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன், இந்த மக்கள் மீது அனுதாபம் காட்டி சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். எதை அடிப்படையாக வைத்து இந்த கோவில்களில் பணியாளர் வேலை தரப்படுகிறது. கோவிலில் தரப்படுகிற வேலை விஷயங்களில் பணியாளர்கள் நியமிக்கப்படுவதில் தாழ்த்தப்பட்டவர்களையும் சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்ப்பதன் மூலம்தான் நல்ல பாகுபாடு அற்ற நிலைமை அந்தக் கோவிலில் உருவாகும்.

பதினெட்டு சதவிகிதம் பணியாளர்கள் இருக்கிற விதத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்கள் கர்ப்பக்கிரஹம் பக்கம் வரையில் உள்ளே போவதற்கும் சூழ்நிலை உருவாக்க வேண்டும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த அரசு மூலம்தான் இந்த ஆட்சியின் மூலம்தான் தாழ்த்தப்பட்டவர்கள் ஏற்றத்தாழ்வு அற்ற நிலையில் இருப்பார்கள். கோவிலில் நிர்வாக அதிகாரிகளாக தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கவேண்டும். பணியாளர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

கோவில் நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. கோவில் நிலங்களை சில கோமான்கள், ஜமீன்தார்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். புரட்சிகரமான இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலும் கூட அந்த பெரிய ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார்கள் இன்னும் கோவில் நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களைத் தைரியமாகக் கைப்பற்றிக்கொண்டு, ஆண்டவனுக்கு வழிபடுவதற்கு வசதியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக தங்கள் மூலம் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தக் கோவில்களில் ஆடம்பரத்தைத் தவிர்க்கவேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆடம்பரத்தைக் குறைக்கும் வகையில் அம்பாசிடர் காரில் போகிறார்.

இன்று கோவில்களில் வாண வேடிக்கைகளும், மற்றவைகளும் செய்வதைப் பார்க்கிறபோது ஆண்டவனுக்கு இதுவெல்லாம் தேவைதானா என்று ஆராய வேண்டும். இதையெல்லாம் சிக்கனப்படுத்தி, சீர்திருத்தவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அரசியல் மாநாடுகளில் தலைவர்களாக உள்ளவர்கள் வரும்போது வாண வேடிக்கைகள் செய்கிற போது, ஆண்டவன் திருவிழாக்களில் அதற்குச் செலவழிப்பதில் என்ன கெட்டுவிட்டது என்று கேட்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** நான் நாட்டிற்குத் தேவை என்று சொன்னேன். இந்த நாட்டு மக்கள் ஏழை மக்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதனால் இந்த வாணவேடிக்கைகளுக்குச் செலவு செய்ய வேண்டுமா, அதைவேறு எதற்காகிலும் பயன்படுத்தலாமா என்பதற்காகச் சொன்னேன்.

எனவே, புரட்சிகரமான நல்ல கருத்துக்களைக் கொண்டு நம்முடைய அரசு இதிலே செயல்படுகிறது என்று கூறி, இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** நம்முடைய அறநிலைய அமைச்சர் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பால் சம்பந்தமான விஷயத்தில் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியான விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயித்த விலை பாலுக்கு இன்னும் இருக்கிறது. இன்று புண்ணாக்கு விலை ரூ. 50 இருந்தது ரூ. 150 விற்கிறது. காபி, டீ விலையேறியிருக்கிறது. பருத்தி மூட்டை ரூ. 250 விற்கிறது. இப்படிப் பார்க்கிறபோது பால் விலை மட்டும் ஏறாமல் இருக்கிறது. மற்ற பண்டங்களின் விலை ஏறியிருக்கிற நேரத்தில் அவர்களுக்கும் ஏற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறநிலைய சம்பந்தமாக பல நண்பர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தங்கத்திலே 2 தேர் ஓடுகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய வாழ்நாளிலேயே முக்கால் பகுதி நாத்திகப் பிரசாரம் அதிலும் கோவில் சம்பந்தப்பட்ட வரையில் என்ன பேசினார்கள் என்பது நாடறிந்த ஒன்றாகும்.



“ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவிக்கையிலே
தேரோட்டம் உனக்கு என்னடா தியாகராசா”

என்று நாடு, நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் பேசினார்கள். அது நாட்டு மக்கள் மத்தியில் இன்னும் நினைவில் இருக்கிறது. இன்று அவர்கள், ‘தேரோட்டம் தியாகராசருக்கு நம்முடைய அமைச்சரவை தாலாட்டும் தம்பிகளாக இருக்கிறது’ என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் அப்படி ஒரு கவிதை எழுதியது உண்மை. ‘ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையில் தேரோட்டம் என்னடா’ என்று எழுதவில்லை. அவ்வளவு தரக்குறைவாக எழுத மாட்டேன். ‘தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராசா’ என்று எழுதினேன்.

அப்போது ஏன் அப்படி எழுதினேன் என்றால், ஏரோட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவித்தார்கள். நான் எழுதியது 20 ஆண்டுகளுக்கு முன்பு. அதற்குப் பிறகு அந்தத் தேர் ஓடவில்லை. இப்போது ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவிக்கவில்லை. ஆகவே, தேர் ஓடுகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** இன்னும் இரண்டு மாதங்களில் ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவிப்பது மட்டுமல்லாமல், அள்ளிக் கிழங்கிற்கும், கட்டிக் கிழங்கிற்கும் ஆலாகப்பறப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் எழுதினார்கள். “ஸ்ரீரங்கநாதரையும், தில்லை நடராஜரையும் பீரங்கியால் துளைக்கும் நாள் என்னாளோ அந்நாளே அண்ணாவின் பொன்னாள்” என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் எழுதியதாகச் சொன்னார்கள். ஒப்புக்கொண்டேன். எழுதாததைச் சொல்கிறார், நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய பாடலைச் சொல்கிறார்.

தலைவரவர்களே, நான் தங்கள் மூலமாக இந்த அவையில் இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஒன்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறநிலையத் துறை பற்றி விவாதிக்கும்போது ஆலயங்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களை ஒத்துக்கொண்டு, மக்களில் அதை நம்புகிற மக்களின் மனம் புண்படுகிற அளவுக்குப் பேசுவது நல்லது அல்ல என்று கருதுகிறேன். ஆளும் கட்சி

உறுப்பினர் திரு. பாலசுந்தரம் பேசும்போது கூட அந்த வாடைகள் இங்கே வீசியதை நான் கண்டேன். நாத்திகம் வேறு, ஆத்திகம் வேறு. அதனைப் பிரசாரம் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டிய இடம் வேறு. நாம் இந்த அவையை அதற்குப் பயன்படுத்திக்கொண்டால், உள்ளபடியே ஆத்திக, நாத்திக சம்வாதத்தில் இந்த அவையில் பேச்சுக்கள் போய் முடிந்துவிட்டால் வேறு விரும்பத்தகாத நிலைமை இந்த அவையிலிருந்து நாட்டு மக்கள் உள்ளத்தில் ஏற்படக்கூடும். நான் இதைச் சொல்கிற காரணத்தால் நான் ஒரு ஆத்திகவாதி என்று நிரூபிப்பதற்கு முயல்கிறேன் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஆனால், எனக்கென்று சில ஆத்திக, நாத்திக கொள்கைகள் உண்டு. நான் சுயமரியாதை இயக்கத்தில் இருந்து உருவாகி, இன்று ஒரு அரசியல் இயக்கத்தில் இருந்து வருகிறேன். என்பதையும் நான் அன்று என்னுடைய உள்ளத்தில் பதிய வைத்துக்கொண்ட சுயமரியாதை இயக்கக் கொள்கையை விட்டுவிடவில்லை என்பதை நாடு நன்றாக அறியும்.

(நண்பகல் 12.00)

அதே நேரத்தில் இங்கே பேசும் பொழுது இருக்கிற ஆலயங்களின் நிர்வாகப் பணிகளுக்காக செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எப்படி எப்படி செலவிடப்படுகிறது என்பதை அறநிலைய பாதுகாப்பு என்கின்ற அளவிலே இந்த காரியம் இங்கே பேசப்படுகிறது என்பதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பேசுவது நல்லது என்று நான் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். இல்லாவிட்டால், ஒரு ஆஸ்திக நாஸ்திக சம்வாதமாக இந்த மன்றம் மாறிவிடும். இப்படி மாறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன்.

திரு. கே. டி. கே; தங்கமணி : அறநிலையத்தை பாதுகாக்க வேண்டும் என்றால், அறங்காவலராக வரக்கூடியவர்கள் அந்த மதத்தின் பேரிலோ, சாமியின் பேரிலோ நம்பிக்கையுள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டும் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்பிக்கை உள்ளவர்களாக நடிப்பவர் களும் இருக்கிறார்கள். ஆகவே, அறங்காவலர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்த வர்களானாலும்—நான் அறிந்த வரை சுப்பையா அவர்கள் அறங்காவலராக இருப்பதாக எனக்கு நினைவு. அவர் கம்யூனிஸ்டு கட்சியில் இருந்தபொழுதே கூட சுப்பையா அவர்கள் அறங்காவலராக நியமிக்கப்பட்டார் என்று கருதுகிறேன். இப்பொழுது அவர் வேறு கட்சிக்குப் போயிருக்கிறார். அப்பொழுது அதைப் பற்றிப் பேசுவதில்லை.



நான் சொல்வதற்குக் காரணம் எந்தக் கொள்கை உடையவராக இருந் தாலும், நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகிறதா, ஆலயத்திற்குத் தேவையான காரியங்கள் நடைபெறுகின்றனவா, அதனை பாரம்பரியமாக நடைபெறுகின்ற காரியங்கள் எதுவும் பாதிக்கப்படாமல் நடைபெறுகின்றனவா என்கின்ற அளவில் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களா, இல்லையா என்று நாம் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

சில பேர் பட்டை பட்டையாக விபூதி பூசிக்கொண்டிருக்கலாம். ஆனால் உள்ளத்திலே கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். சில பேர் எந்த சின்னமும் அணியாமல் இருக்கிறார்கள். ஆனால் கடவுள் பக்தி உள்ளத்தில் கொண்டவர்களாக இருக்கலாம். இரு சாராரும் இருக்கிற காரணத்தினால் யார் உள்ளத்திலே கடவுள் பக்தி கொண்டவர், உண்மையான கடவுள் பக்தர் என்று கண்டுபிடிப்பது சிரமம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தி.மு.க.வைச் சேர்ந்த அறநிலைய அமைச்சர் அவர்கள் உள்ளத்தில் பக்தி இருக்கிறதா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில் அறங்காவலராக இருக்கக்கூடாது என்பதுதான் நிலை. ஏதோ சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். பொதுவாக எந்த இடத்திலும் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கோவில்களில் அறங்காவலராக இருக்கக்கூடாது என்று தான் முடிவு எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஒன்றாக இருந்தபொழுது சுப்பையா அவர்கள் அறங்காவலராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். வடிவேல் : என்னுடைய காலத்தை கிட்டத்தட்ட 10 நிமிஷம் எடுத்துக்கொண்டு விட்டார்கள். எனக்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் கொடுக்கவேண்டும்.

திரு. நா. இராசாங்கம் : உண்மையான கடவுள் பக்தர்கள், உண்மை யில்லாத கடவுள் பக்தர்கள் என்ற பாகுபாடு வேண்டியதில்லை. ஞானிகள், அஞ்ஞானிகள் என்று பிரித்துக்கொண்டு, அவர்கள் உள்ள உணர்வோடு பக்தி செலுத்துபவர்களாக இருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். படத்தை வைத்துக்கொண்டு, உருவத்தை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அரூபி, ஸ்வரூபி என்ற இலக்கணத்தின் கீழ் பக்தர்கள், பக்தர் அல்லாதவர்கள் வந்து விடுவார்கள். ஒரு மனிதனுடைய வேஷத்தைப் பார்த்தோ அல்லது கோவிலுக்குப் போவதைப் பார்த்தோ சொல்லக்கூடாது.

திரு. எஸ். வடிவேல் : நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பக்தர்கள் மனம் புண்படாத அளவுக்குப் போகவேண்டும், ஆஸ்திக நாஸ்திக பிரசாரத்தில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க—பல்வேறு வகையிலே பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்—அதையெல்லாம் விட்டுவிடுகிறேன்.

குறிப்பாக, கோவில்கள் இன்றைக்கு சுரண்டும் கூடாரங்களாக இருக்கின்றன என்பதை மட்டும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரிசனங்களுக்காக பாடுபட வேண்டும் என்று துடிப்போடு செயலாற்றினாலும், நீதி மன்றத்தில் வழக்குகள் போடப்பட்டு தடைப்படுத்தப்படுகின்றன. மத்திய அரசுடன் போராட்டம் நடத்தக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் அந்தப் போராட்டத்தைத் துவங்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக, அம்மையார் அவர்கள் தன்னுடைய ஆளும் கட்சிக்கு இதைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நிலம் சம்பந்தப்பட்ட வரையிலும் பல்வேறு மடங்களுக்கும் கோவில்களுக்கும் ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் ஜாதியை ஒழிப்பதற்காக இந்த அரசு முன் நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்கிறார்கள். உண்மையில் தீண்டாமையை மரணஅடி அடித்து சாவு ஓலைக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 5 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட ஏழை, நிலம் இல்லாதவர்களுக்கு கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தக் கோவிலையும் நிலம் வைத்துக்கொண்டுதான் பாதுகாக்க வேண்டும் என்ற அவசியமில்லை. திருப்பதிக் கோவிலுக்கு நிலம் இல்லை. பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் வரட்டும். சிதம்பரம் நடராஜா கோவிலுக்கு நிலம் இல்லை. பக்தி இருப்பவர்கள் கோவிலுக்குப் போகட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை.

கடவுள் வினை தீர்ப்பான் என்று நினைத்தால் கோவிலுக்குப் போகட்டும், காணிக்கை செலுத்தட்டும்.

ஆலயங்களை எடுத்துக்கொண்டால் பாட்டுக் கச்சேரி. முதல்நாள் சூலமங்கலம் சகோதரிகள், இரண்டாம்நாள் கே.பி.எஸ். இப்படி தினந்தோறும் பாட்டுக் கச்சேரி. ரத, கஜ, துரக பதாதிகளுடன் தினமும் சகல நெய்வேத்தியம். இதெல்லாம் தேவை தானா? 11 நாட்களுக்கு பாட்டுக் கச்சேரி தேவைதானா?



அதற்குப் பதிலாக ஒவ்வொரு கோவிலிலும் 11 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திருமணம் செய்விக்கலாம். 60 வயது, 40 வயது, 45 வயது வரையில் கல்யாணம் ஆவதில்லை. பெண் கொடுக்க ஆள் இல்லை. சொத்து இருந்தால்தான் கல்யாணம். பணம் கேட்கிறார்கள். ஆகவே, இப்படி 35 வயது, 45 வயது என்று கல்யாணம் ஆகாமல் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 11 ஆதித் திராவிட பையன்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தலைமையில் திருமணம் நடத்தினால், ஆலயம் அவர்களை ஏற்றுக்கொண்டது என்று சொல்லக் கூடிய அளவிலே அவர்கள் செய்வார்களேயானால் நிச்சயம் உள்ள பூர்வமான நல்ல காரியத்தை செய்தவர்களாவோம்.

பாட்டுக் கச்சேரி வைப்பது, தாளம் போடுவது, தலையை ஆட்டுவது, இதெல்லாம் கோவில்களில் தேவைதானா. நாஸ்திகம் பேசவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தாலும் நாடு இருக்கும் நிலைமையில் இதெல்லாம் கோவில்களில் தேவைதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

பள்ளி அறை, படுக்கை அறை, உட்கார அறை, பேச அறை, விளையாட்டு அறை, சாமி விளையாடுவதற்கு அறை இதெல்லாம் தேவைதானா? எல்லோருக்கும் உட்கார இடம் இல்லை, இருக்க இடம் இல்லை, கஞ்சி காய்ச்ச இடமில்லை, மாமியார் வந்தாலும் அங்கே, மருமகள் வந்தாலும் அங்கே, வேறு யார் வந்தாலும் அங்கே தான், இப்படி 50 பேர்கள் வந்தாலும் ஒரே அறையில் எல்லோரும் படுக்கவேண்டும். இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமை இருக்கையில், இதெல்லாம் கோவில்களில் வேண்டுமா?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the hon. Member is not speaking on the Hindu Religious and Charitable Endowments. He is speaking on a matter which has nothing to do with it. He cannot speak on it here but elsewhere.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வடிவேல் அவர்கள் வேகமாக ஆஸ்திகர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய அளவிலே இங்கே பேசுகிறார்கள். அதைப் பற்றி என்னைப் பொறுத்த அளவிலே நான் ஆட்சேபிக்கிறேன். இந்த ஆலயங்கள் அத்தனையும் அகற்றிவிட்டால் அவர்கள் கேட்கிற அந்த ராஜ்யம் வந்துவிடும் என்று நினைக்கிறார்களா? ஆலயங்கள் இதற்கெல்லாம் இடைஞ்சலாக இருக்கிறது என்று கருதுகிறார்களா? இவைகளையெல்லாம் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : ஆண்டவன் பெயரால் அக்கிரமங்கள் நடக்கின்றன என்று தான் சொல்கிறேன். காந்தி அடிகள் சொன்னார் அரிசன் என்று, அதாவது கடவுள் குழந்தை. தந்தை பெரியார் அவர்கள் அப்படிச் சொல்லி

வில்லை. தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லியிருக்கிறார். காந்திக்கு நேர் மாறாக சொல்லியிருக்கிறார். அரிஜன், ஈஸ்வரன் குழந்தை என்று சொல்லியிருக்கிறார் காந்தியடிகள். அவர்கள் இன்றைக்கு நிர்க்கதியாக நிற்கின்றார்கள். அப்படியிருக்கும்பொழுது கோவில்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறார்கள். 70 லட்சம் பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், 60 லட்சம் பேர்கள் நிர்க்கதியாக நிற்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன். கடவுளின் பெயரால், ஆண்டவன் பெயரால், திருக்கோவிலின் பெயரால் அவர்களுடைய உள்ளம் மலர, உள்ளம் வாழ—அவர்கள்தான் உழைக்கின்றவர்கள், அடித்தளத்தில் இருக்கின்றவர்கள்—அவர்கள் வாழ்வில் மாறுதல் ஏற்படுவதற்கு, மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு, சந்தோஷம் ஏற்படுவதற்கு ஆண்டவனுடைய திருக்கோவில்களை உபயோகப்படுத்திக்கொண்டால், அந்த நோக்கில் ஆஸ்திக, நாஸ்திகப் பிரசாரம் செய்வது குறையும்.

ஆஸ்திகர்களுக்கு வக்காலத்து வாங்கி பேசக்கூடாது. தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும், இதற்கு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மதிப்பீட்டுக் குழுவில் வடிவேல் அவர்களும் உறுப்பினர். அவர் ஒரு கோவில் கூட விடுவதில்லை. அவர் எல்லா கோவில்களுக்கும் வந்தார் எங்களோடு.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். யார் எழுந்து பேசினாலும், எந்த விதியின் அடிப்படையில் பேசுகிறார் என்று சொல்லிவிட்டு பிறகு பேசவேண்டும். ஒருவர் பேசும்பொழுது அடுத்தவர் எழுந்து குறுக்கே பேசக்கூடாது. (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) எழுந்திருந்தார்—நீங்கள் உட்காருங்கள். நான் நிற்கிறேன். ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இன்னொரு உறுப்பினர் குறுக்கிடுவதற்கு, பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர் ஈல்டான பிறகு தான் குறுக்கிடவேண்டும். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருந்தால் கேட்கலாம். எதுவுமே இல்லாமல் ஒவ்வொரு அங்கத்தினரும் மாறி மாறி எழுந்து பேசுவதை இந்த அவையில் அனுமதிக்கக் கூடாது. அது நல்ல மரபு அல்ல. யார் பேசினாலும், எந்த விதியின் அடிப்படையில் பேசுகிறார் என்று சொல்லிவிட்டுத்தான் பேசவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எந்த விதியின் அடிப்படையில் பேசுகிறீர்கள் என்று முதலில் சொல்லவேண்டும்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் நண்பர் வடிவேல் அவர்கள் மதிப்பீட்டு குழுவோடு சென்றபொழுது ஒவ்வொரு ஆலயத்திற்கும் சென்று வணங்கத் தவறியதில்லை என்று குறிப்பிட்டார்கள். திரு. வடிவேல் அவர்கள் அதற்கு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்ற வாய்ப்பில் பதில் சொன்னால் எங்களுக்குப் பயன் உடையதாக இருக்கும்.

**திரு. எஸ். வடிவேல்:** மதிப்பீட்டு குழுவோடு சென்றபொழுது ஒவ்வொரு கோவிலிலும் நான் ஒதுங்கி நிற்கவில்லை. நானும் அவர்கள் கூடவேதான் சென்றேன். ஆனால் கும்பிட்டேனா, கும்பிடவில்லையா என்பது வேறு விஷயம். அவர்களுடன் கூட இருக்கும்பொழுது நானும் இருந்தேன். நான் வேறு எங்கு போவது?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** சேர்மன் ஆப் தி கமிட்டி என்ற முறையில் நானும் கூட இருந்தேன். அவர் ஒவ்வொரு கோவிலிலும் கும்பிட்டார்.

**திரு. எஸ். வடிவேல்:** சரி, சந்தோஷம். விட்டுவிடுங்கள். கோவிலுக்கு போவது வேறு விஷயம், கும்பிடுவது வேறு விஷயம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் நாங்கள் சென்றிருந்த கோவில்களில் பிரசாதம் கொடுத்தார்கள். அதை அவர்கள் சாப்பிட எப்போதும் தவறவில்லை. அதனால் அவர்கள் பக்திமானாக கருதப்படுகிறார்கள். ஆனால் அங்கே பக்திமானாக இருந்துவிட்டு, இங்கே வந்து அதற்கு மாறுபட்டக் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அதுதான் விந்தையாக இருக்கிறது. வெளியில் ஆஸ்திகராக இருந்துவிட்டு, சட்டமன்றத்தில் நாஸ்திகராகப் பேசுவது என்ன முறை என்று தெரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** அவர்களுடைய கருத்தைச் சொல்கிறார்கள். அதை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சென்ற ஆலயங்களில் எல்லாம் பிரசாதம் வாங்கத் தவறவில்லை. அதனால் அங்கே பக்திமானாக இருந்தார்கள் என்று சொல்கிறார்கள். பிரசாதம் வாங்கி சாப்பிடுவதனால் பக்திமான் என்று கருதமுடியாது. பல கோயில்களிலே பிரசாதத்திற்காக ஏழை எளிய மக்கள் காத்து நிற்கிறார்கள் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அதற்கு பசிதான் காரணம்.

**திரு. சொ. காவேரிமணியம்:** நல்லகாலம், இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மூன்று மானியங்களையும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் ஆலயப் பணிகளை தன்னுடைய திருக்கரங்களிலே வைத்துக்கொண்டு, நமக்கெல்லாம் பாலை வார்த்து இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள். இந்த மானியங்களைப் பற்றி பேசும்போது முதலில் பால்பண்ணைத் திட்டத்தைப்பற்றி ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால், ஏழை எளிய மக்களுக்கு எந்த அளவுக்கு நல்ல பல காரியங்களைச் செய்திருக்கிறது என்பது இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். அதைப்போல சத்துணவு வழங்குதல், பால் வளத்தைப் பெருக்குதல் போன்ற திட்டங்களைச் செம்மையாக நடத்தி வருகிறது இந்த அரசு என்பதையும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, கிராமப்புறங்களானாலும் சரி, நகரப்புறங்களானாலும் சரி இம்மாதிரியான திட்டங்கள் மூலம் சத்துள்ள உணவு, சத்துள்ள பால் வழங்கப்படுகிறது என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற மாதவரம் பால் பண்ணையைப்போலவே, மதுரையிலும் ஒரு பால் பண்ணை இருப்பது அங்கத்தினர்கள் அனைவருக்கும் தெரியும். லட்சக்கணக் கான ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, பால் பண்ணைகள் நடைபெறுகின்றன அது மட்டுமல்ல; அங்கே பால் பவுடர் தயாரிக்கும் பணியும் நடைபெறுகிறது அங்கே ஏறக்குறைய 200-க்கு மேற்பட்ட அலுவலர்கள் பணியாற்றிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம்—அங்குள்ள நிர்வாகம் எல்லாம்—அ அதிகாரிகளின் கீழ் நடந்துவருகிறது என்பது அங்கத்தினர்களுக்கும் அமைச் களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியும். பல லட்சக்கணக்கான ரூபா முதலீடு செய்யப்பட்டு, நடைபெற்று வரும் பால் பண்ணைகளுக்கு இதுவரை ஒரு ஆலோசனைக் குழு கிடையாது. மக்களுடைய எண்ணங்களை பிரதிப கின்ற முறையில், அவர்களுடைய வேண்டுகோள்களை நிறைவேற்றுவத இம்மாதிரியான சிறந்த திட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழு இருப்பது மி அவசியமாகும். ஏனென்றால் மதுரையில் இருக்கக்கூடிய மீனாட்சி சு ஸ்வரர் தேவஸ்தானத்தை கவனிக்க அறங்காவலர் குழு இருக்கிறது.

அதைப்போலவே ஒவ்வொரு நிறுவனத்திலும் அதிகார பற்றற்ற ஒரு அமைக்கப்பட்டு, அவர்களுடைய சிறந்த கருத்துக்கள், யோசனைகள் கே பட்டு, செயல்பட்டு வருகிறது.



ஆகவே, மதுரையிலே இருக்கக்கூடிய இந்த பால் பண்ணை திட்டத்திற்கு ஒரு சிறந்த குழு அமைத்து, நிர்வாகத்தை மேற்பார்வை செய்வதற்கு அல்லது ஆலோசனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தத் திட்டத்தில் மிகச் சிறந்ததொரு திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள். அது என்னவென்றால், படித்து பட்டம் பெற்றவர் களுக்கு வேலையின்மையைப் போக்குவதற்கான திட்டம் உருவாக்கப்பட்டிருக் கிறது. படித்த பட்டதாரிகள் மாதவரம் பால் பண்ணையில் பயிற்சி பெறுவ தற்கு ஏற்பாடு செய்து, பயிற்சி காலத்தில் அவர்களுக்கு 150 ரூபாய் உதவிப் பணமும் கொடுக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் பயிற்சி முடிந்த பிறகு சொந்தத்திலே பால் பண்ணை அமைப்பதற்கும் ஊக்கமளிக்கப்படுகிறது. ஏற்கெனவே நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கப்படுகிறது; உயர்ந்த ஜாதி மாடுகள் வாங்கிக் கொள்வதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. மற்ற நிர்வாக உதவிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. ஆகவே, இந்தத் திட்டம் மிகச் சிறந்த திட்டம்; நல்ல திட்டம் என்று வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அறநிலையத் துறையைப்பற்றி பேசும்போது சென்ற கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களிடம் மிகப்பணிவோடு ஒரு கோரிக்கையைத் தெரிவித்தேன். அதாவது திருப்பரங்குன்றத்தில் சித்த மருத்துவமனை ஒன்றை அமைக்கவேண்டு மென்று கேட்டேன். என்னுடைய வேண்டுகோளை ஏற்று அங்கே ஒரு சித்த மருத்துவ மனையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கான நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அறங்காவலர்கள் நியமனம் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக அறங்காவலர்களாக நியமிக்கப்படு கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய பணியை எவ்வாறு செய்கிறார்கள்; எதற்காக அவர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்களோ அந்தப் பணி ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

ஆலயங்களில் நடைபெற வேண்டிய வழிபாடுகள், கடைப்பிடிக்கப்பட வேண்டிய மரபுகள், மற்ற விதி முறைகள் பின்பற்றப்பட்டு, விழாக்கள் நடை பெறுவதற்கு இடையூறு இல்லாமல் ஒழுங்காக நடைபெறுகின்றனவா, நிர்வாகம் சிறப்பாக இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டுமே அல்லாது அவர்

களுடைய உள்ளத்திலே என்ன இருக்கிறது; அவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அறங்காவலர்கள் எப்படி சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்பது பக்தர்களுக்குத் தெரியும். வழிபாட்டு முறைகள், விழாக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. கோவில் நிர்வாகத்தை இவர்கள் செய்கிறார்களா, அவர்கள் செய்கிறார்களா என்பதல்ல பிரச்னை. ஒழுங்காகச் செய்கிறார்களா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படிப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் எந்த முறையிலே பணியாற்றுகிறார்கள் என்பதை மட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மீது உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அவர்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களா அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்கக் கூடாது. அதனால் டிஸ்குவாலிபிகேஷன் ஆகக்கூடியவர் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் ஏதோ ஒரு காரணத்தால் எங்கோ ஒருவர் தவறு செய்திருக்கலாம்; அதற்காக எல்லோரையும் குறை சொல்வதில் பயனில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்புக்கு வந்த பிறகு கோவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழகத்திலே இருக்கின்ற பல நெறி முறைகள் யாராலும் அழிக்கப்படக் கூடியவையல்ல. யாரும் அழிக்கவும் முடியாது. அது மேலும் மேலும் நல்ல முறையில் வளர்க்கப்பட்டுதான் வருகிறது. யாராவது இவர்கள் வந்து அழித்துவிடுவார்கள் என்று நினைத்தால் அது தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்வதல்லாமல் வேறல்ல என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு அமைச்சரவர்களிடம் என்னுடைய வேண்டுகோள் ஒன்றைக் கூறி முடித்துக்கொள்கிறேன். பழனியிலே ஏற்கனவே கலைக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஆண்கள் கலைக் கல்லூரி என்றும், பெண்கள் கலைக் கல்லூரி என்றும் பல கலைக் கல்லூரிகளை பழனி தேவஸ்தானத்திலிருந்து நிறுவியிருக்கிறார்கள்.

நான் ஏற்கனவே ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தின் சார்பில் மதுரையில் பெண்களுக்கு என்று ஒரு கலைக் கல்லூரி நிறுவப்பட்டிருக்கிறது. அதைப்போன்று ஆண்களுக்கு என்று தனியாக ஒரு கலைக் கல்லூரியை அதன் எல்லைக்குட்பட்ட இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்த ஆலயத்திற்கு





நல்ல வருமானம் வருகிறது. அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர்களும் கல்லூரி அமைப்பதற்கு ஆதரவாக இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் அதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்கள் கலைக் கல்லூரியை நிறுவுகின்ற நோக்கில், பல லட்சக்கணக்கான ரூபாய்களைத் தருகின்ற திருப்பரங்குன்றம் பகுதியில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பக்தி இல்லாதவர்களை எல்லாம் அறங்காவலர்களாகப் போடலாம். நாங்கள் ஆஸ்திகர்கள்—எங்களில் பக்தி உடையவர்களும் இருக்கிறார்கள். இல்லாதவர்களும் இருக்கலாம். ஆனால் உங்கள் கட்சியில் திட்டவட்டமாக—ஆண்டவனிடத்தில் நம்பிக்கையில்லை என்று கொள்கை அடிப்படையில் பல முறை கூட்டங்களில் கூறி வந்திருக்கிறீர்கள். உங்களைச் சார்ந்தவர்களை அறங்காவலர்களாகப் போட்டால் கோயில்கள் சரியான முறையில் நடக்குமா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆண்டவனைப்பற்றி எங்களுடைய கொள்கை—ஆண்டவனை நாங்கள் நம்புகிறோமோ இல்லையோ ஆண்டவன் நம்மை நம்புகிற அளவுக்கு நாம் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான். ஆண்டவன் நம்புகிற அளவுக்கு நாங்கள் நடந்து கொண்டுதான் வருகிறோம். ஆனால் சிலர் ஆண்டவனை நம்புவதுபோல—நடித்துக்கொண்டு வாழ்கிறார்கள். அதற்கும், இதற்கும் இதுதான் வேறுபாடு. அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல "ஒன்றே குலம்—ஒருவனே தேவன்" என்பதுதான் எங்கள் கொள்கை. அம்மையார் சொன்னதுபோல நாஸ்திகக் கொள்கை அல்ல.

THIRU B. VENKATASWAMY: Sir, on the cut motion moved on behalf of our Party, I want to say a few words on the Milk Supply Scheme, Administration of the Hindu Religious and Charitable Endowments and Khadi and Village Industries.

In the beginning of his speech, the Hon. Minister himself has clearly stated that we are in large deficit so far as milk production in our State is concerned. I do not find any revolutionary changes proposed in his speech to make good the deficiency in milk production. I want to know the definite steps the Government have taken to improve the livestock wealth in Tamil Nadu. When the Animal Husbandry Demand was considered in this House, I have also pointed out that no proper step has been taken to improve the livestock. We must have good pedigree and exotic

[திரு. எம். கந்தசாமி]



நடக்கின்றன என்று சொன்னால்
செலவுத் திட்டத்திற்கு ஒரு நாள்—நல்ல அதற்காக தனியாக ஒரு அமைச்சர்—வரவு
இருக்கிற காரணத்தினால்தான் என்று சொன்னால் ஆணையாளர், மற்ற அதிகாரிகள்
மிகையாகாது.

1967-க்கு முன்னாலே இந்தத் துறை எவ்வளவு சீர்கெட்டிருந்தது,
ஏழு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு சீர்திருத்தங் கடந்த
களைச் செய்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது இந்தத் துறையை நிர்வ
கித்து வருகிற மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்களையும்,
மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறோம்.

1967-க்கு முன்னாலே கோயில்கள் நல்ல முறையில் நிர்வாகம் இல்லாத
தனாலும் அங்கே பல அக்கிரமங்கள் நடைபெற்ற காரணத்தினாலும்—கோயில்
கூடாது என்பதல்ல. கோயில்கள் கொடியவர்களின் கூடாரங்களாக இருக்கக்
கூடாது என்ற கருத்தினை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர்
அன்று சொன்னார்கள். அவற்றை எல்லாம் ஒழுங்குப்படுத்தி சீர்செய்ய வேண்டு
மென்றுதான் நல்ல திறமையுள்ள அறங்காவலர்களாகப் போட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக ஒவ்வொரு கோயிலிலும் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் அறங்
காவலராக இருக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்த பெருமையே
தமிழக அரசைச் சாரும். யாவரும் தமிழ்நாட்டுக் கோயில்களுக்குப் பக்தி
யோடுதான் செல்ல வேண்டுமென்று இல்லை. அங்கே உள்ள ஓவியங்கள்—
சிற்பங்களைக் காண இன்றையதினம் வெளிநாட்டவர்கள் எல்லாம் கூட வருகி
றார்கள். அந்த அளவுக்கு கலைவடிவங்கள் எல்லாம் இருக்கின்றன. நமது
பண்டைய நாகரீகத்தை வளர்க்கின்ற அளவுக்குக் கோயில்கள் சீர்படவேண்டு
மென்ற கருத்தை இந்தத் துறையினர் கொண்டிருப்பது பாராட்டுதற்குரியது.

(பிற்பகல் 12-30)

இருந்தாலும் இங்கேயுள்ள சிலைகளெல்லாம் களவிடப்பட்டு, இங்கிலாந்து
நாட்டிலே, தமிழ்நாட்டினுடைய விலை மதிக்க முடியாத சிலைகள் எல்லாம்
பகிரங்கமாக ஏலம் விடப்பட்டதாகச் செய்திகளைப் பார்க்கிறோம். அந்தக்
குறையைப் போக்குவதற்காக ஜுவல்ஸ் வெரிஃபிகேஷன் ஆபீஸர் என்று
நகைகளை வெரிஃபிகேஷன் செய்ய அதிகாரிகள் இருப்பதைப்போல், ஐடல்ஸ்
வெரிஃபிகேஷன் அதிகாரிகளை, இந்தச் சிலைகளைக் காப்பதற்காக, இந்தத்
துறை, நல்ல அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.





தஞ்சை மாவட்டத்திலே, 1967-க்கு முன்னாலே, தஞ்சை விவசாயிகள் என்று சொன்னால், பல விவசாயிகளை உள்ளடக்கி, பெரும் நிலச் சுவாந்தார்கள் எல்லாம் கோவில் நிலத்தை வைத்துக்கொண்டு, மாரோரியம் என்று வைத்துக் கொண்டு, அதனாலே குத்தகை பாக்கி அதிகமாக, கோயிலுக்குச் சேரவேண்டி யதை எண்ணி, அதற்கெல்லாம் மாற்று தெரிவித்து, நல்ல நிலையினை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

இன்றையதினமும் கூட, மக்கள் தொண்டுதான் மகேசன் தொண்டு என்ற அளவிலே, மனதிலே கொண்டு, மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை, கோயில்களினால் மட்டுமல்ல, கோயில்கள் மூலமாக என்னென்ன காரியங்களைச் செய்ய முடியுமோ, அது கண்ணொளி நிதியானாலும்சரி, பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதியானாலும் சரி, கல்விக் கூடங்களானாலும் சரி, நல்ல திருமண மண்டபங்களானாலும் சரி, ஏழை எளிய மக்களுக்கு நல்ல திருமணங்களைச் செய்து வைத்தாலும் சரி, இப்படி நல்ல காரியங்களை இந்த அறநிலையத் துறை கோயில் களிலே செய்து வருகிறது.

அங்கே பணியாற்றுகிற சிப்பந்திகளுக்கெல்லாம், முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களும் வாக்குறுதி அளித்தப்படி, அவர் களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டாலும், ஒருசில கோயில்களிலே உள்ளவர் களுக்கு இன்னும் கிடைக்காமல் இருப்பது உள்ளபடியே வருத்தமாக இருக் கிறது. அதையெல்லாம் கொடுக்க துரிதமாக நடவடிக்கை எடுத்து, சீக்கிரம் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், முன்பிருந்த நிலை மாறி, ஏழு ஆண்டுகளிலே, இதற்கு முன்னால் இருந்தவர்கள் இந்த ஆட்சி வந்தால், என்ன ஆகுமோ என்று உண்டாக்கிய நிலையைப் போக்கி, இது அல்லவா அரசு, இவர் களால் தான் அல்லவா செய்ய முடியும் என்ற முறையிலே இந்த அறநிலையத் துறை நல்ல காரியத்தை மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், முன்பெல்லாம் நடனக் கலைதான் கோயில்களிலே சிறந்த விளங்கிய நிலைமை இருந்தது. இப்பொழுது அது அறவே நிறுத்தப் பட்டு விட்டது. இசை போல நடனங்கள் இல்லாவிட்டாலும், நடனக் கலை தமிழ்நாட்டிலே எப்படி இருந்தது என்பதை நினைத்துப் பார்க்கக்கூடிய விதத்திலே கோயில்களிலே நடனக் கலையை கொண்டுவர வேண்டுமென்று இந்த நல்ல நோக்கிலே தெரிவித்துக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

*THIRU K. M. SUBRAMANIAM: I am confining myself, Sir, to religious endowments because sufficient has been spoken about dairy farming, milk supply and Khadi crafts.

It is embarrassing to me to speak on temple matters. The Hon. Chief Minister, a few minutes before, remarked that some people wear 'vibuthi' but they may not believe in God at all. I do not know how I am taken. Whatever it is, during 1967 when DMK came to power, I was one of those who really believed that religious endowments will be badly managed and even temples may be demolished. Not only myself, but many people like me, believed so.

But, from what has happened from 1967 to 1974, I find that I am pleasantly disappointed because the Religious Endowments Department has done very good work. They have discovered so many new temples. They have brought 15,000 temples under their purview. They have spent Rs. 12 crores on renovation and improvements during these years. I think it is wonderful. I should congratulate the Government for having done such a good work. I thought that the religious atmosphere in temples would be finished, when DMK came to power. But I find that religious atmosphere in many of the temples has steadily improved, compared to various temples in other parts of India. I think we have to pay a very good compliment to the Hindu Religious Endowments Minister or the Commissioner whoever it may be, as he has done very good work.

Various items have been listed about the work done to temples. I think the building of a wall and stopping of sea erosion by that in Tiruchendur temple is a very good thing. They have saved that temple from being washed by sea. That is really fine indeed.

Higher and lower caste do not exist in temples. I am not entering into controversy about asthikam and nasthikam. Ninety per cent of the Gods are non-Brahmins. Rama is not a Brahmin. Krishna is not a Brahmin. Subramanya is not a Brahmin. All these Gods are non-Brahmins. I want people to understand this. There are only two Brahmin avatars, viz., Vamana and Parasurama. There is no temple for Parasurama. I think there is a temple for Vamana in Kancheepuram. I honestly believe that caste should not enter into temples. In a progressive society, caste has no place.



I am one of those who believe in land reforms. Land reforms are entirely different. A temple or religious institution may own lands. But when land reform legislation is brought into bring, leaving what is necessary for the good management of the temple, lands of temples should not be exempt from land reforms. That is my firm conviction.

If a temple is well-manged, thousands of people will come. According to agamas if it is well-managed, thousands will come. I have been a trustee of a private temple for 25 years. We do not own a pie of property but we spent every year Rs. 30,000 because the worshippers pour in and they do so because the temple is well-managed.

There are the matathipathis. There was a time when matathipathis were doing good work. Even now some are doing good work but not all. I think their work should be properly supervised by the department. A correct supervision is absolutely necessary so that matathipathis will discharge their duties properly.

Only last year I brought to the notice of the House how a matathipathi bought a cheverlet car. Is it necessary? What is the use of music performances in temples? I had been to Sabarimalai temple recently. There, there is no distinction of caste at all. People come in lakhs and the collection is Rs. 48 lakhs a year. It is because it is well managed. I hope the Department would see to it that our temples are well-managed. If the country's character has to improve, two things should improve. Moral values should improve and Education should improve. Throughout the world, moral values have vanished, because there is no religious faith.

Another point is that so many things are done and Tamil Nadu has produced the greatest Vedic scholars, Tamil Nadu has produced the greatest Sanskrit scholars. One such scholar has been lent to Japan and a scholar from Tamil Nadu is the Sanskrit Professor there. There is a book published in 1905; this is the VII Vol. published by Harward University. Such previous works are going away.

*[திரு. கே. எம். சுப்பிரமணியம்]* *[1974 ஏப்ரல் 4*

The Hindu Religious and Charitable Endowments Board should take up this question of supporting Vedic Scholars and Sanskrit scholars. Sanskrit is not a Brahmin Language, I studied Sanskrit under a non-Brahmin, one Govindan, your name-sake Sir, Ezhava. So, it is not a Brahmin language.

I understand the Central Government is considering creation of five Universities for Sanskrit. I hope and trust our Chief Minister will definitely bargain and see that one University is established in Tamil Nadu, so that those who are willing to study Sanskrit, may do so. We need not compel anybody. Thank you Sir.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, அறநிலைய அமைச்சரவர்களின் இந்த மானிய கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பால்வளம் பெருக்கு திட்டம் தொடர்ந்து செயல்படும் என்ற நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். 1974-75-ம் ஆண்டில் மொத்தம் 3.08 கோடி ரூபாய் செலவிடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து இந்தத் துறைக்கு இருக்கிற முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம். 1972-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு 69,000 லிட்டர் பால் கிடைத்தது. இந்தத் திட்டத்தின் பலனாக 1,00,05,000 லிட்டர் பால் கிடைக்கிறது என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இருப்பினும் இது போதாது. இன்னும் பால் உற்பத்தியை அதிக அளவில் பெருக்க வேண்டும். ஸ்காண்டிநேவியன் நாடுகளுக்கும் நமது நாட்டிற்கும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நாம் தற்போது ஜெர்ஸி காளைகளை உபயோகித்து கன்றுகளை உற்பத்தி செய்கிறோம். இன்னும் அதிக அளவில் பால் தருவதற்கு ரெடேன் காளைகளைப் பயன்படுத்தி கன்றுகளை உற்பத்தி செய்தால் பலன் அதிகம் கிட்டும் என்று சொல்கிறார்கள்.

ஆகவே, நாம் ரெடேன் காளைகளைப் பயன்படுத்தி பால் தரும் மாடுகளை உற்பத்தி செய்ய வேண்டும். உதகையிலே சகல வசதியும் இருப்பதால் அங்கே ஃப்ரோசன் செமன் உற்பத்தி செய்ய வேண்டும். அது நீண்ட நாட்களுக்கு கெடாமல் இருப்பதால், உதகையில் அதற்கேற்ற தட்பவெட்ப நிலைகள் இருப்பதால், அங்கே ஒரு டிஸ்ட்ரிபியூஷன் சென்டரை ஏற்படுத்தி, அங்கேயிருந்து நாட்டின் மற்ற பகுதிகளுக்கு டிஸ்ட்ரிபியூஷன் செய்கிற அளவிற்கு, அங்கே அந்த சென்டரை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதகையில்



**1974 ஏப்ரல் 4]** *[திரு. எம். தேவராசன்]*

உற்பத்தி செய்யும் கன்றுகள் கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதை அரசு கண்காணித்து இது நடைபெறாமல் தடுக்க வேண்டும்.

மேலும் அந்தப் பகுதியில் வெட்டை நோய் அதிக அளவில் பரவுகிறது. அதன் காரணமாக நாட்டெருமைகள் வெட்டை நோயினால் பாதிக்கப்படுகின்றன.

இதைத் தடுப்பதற்கு அந்தப் பகுதியில் செக் போஸ்ட் அமைத்து கர்நாடக காடுகளிலிருந்து மாடுகள் தமிழகத்து எல்லைக்கு வராமல் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்க்கில் மலையில் ஒரு முருகன் கோவில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையிலும் அந்தக் கோவில் கட்டப்படவில்லை. அந்தக் கோவிலைக் கட்டி முடித்தால் உலகத்திலேயே அந்த முருகன் கோவில்தான் உயரமானதாக இருக்கும். அந்த உயர்ந்த கோவிலைக் கட்ட அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் மாண்புமிகு இந்து சமய அறநிலைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த இந்து சமய அறநிலையத் துறையானது மிகவும் திறமையாக செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக பல ஏக்கர் நிலங்களை மறைத்து வைத்திருந்ததை வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இன்னும் பல லட்சம் ஏக்கர் நிலங்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கண்டுபிடித்து, அவைகளையெல்லாம் எடுத்து பொதுவாக தேசத்திற்குப் பொதுவாகக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் நிலங்கள் கோவில்களுக்கோ அல்லது அறக்கட்டளைகளுக்கோ அல்லது மடங்களுக்கோ தேவையில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த நிலங்களையெல்லாம் வைத்துக்கொண்டு அந்த நிர்வாகங்கள் முறையாக நடத்தப்பட முடியவில்லை. அவர்களுக்கு அந்த நிர்வாகத்திற்குக் குத்தகை பாக்கியை வசூல் செய்கிற திறமையில்லை. ஆகவே, அதிக அளவில் குத்தகை பாக்கி இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்கு சென்று வசூல் செய்வதிலே ஒரு பாதியை வழக்காடுவதற்காக செலவழித்து விடுகிறார்கள். ஆகவே, அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அந்த நிலங்களையெல்லாம் அரசு மேற்கொண்டு விவசாயம் செய்பவர்களுக்குக் கொடுத்துவிட்டு அதற்குரிய தொகையைப் பெற்று கோவில்களுக்குப் பூஜை, நெய்வேத்தியம் போன்ற செலவைக் கொடுக்க

முடியும். அல்லது கேரளாவில் செய்வதைப் போன்று கோவில்களுக்கு தஸ்திக் அலவன்ஸ் கொடுத்து நல்ல முறையிலே நடத்த முடியும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக வருவதற்கு டெல்லி உயர்நீதி மன்றம் அனுமதிக்கவில்லை. இந்த மன்றத்திலே அதற்காக தீர்மானம் நிறைவேறியுங்கூட, அதை டெல்லி உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. மறுபடியும் இது ஏற்றுக்கொள்ளப்படுகிற வகையில் தமிழகத்தில் இருக்கிறவர்கள் சகல பேரையும் ஒன்று திரட்டி மனித ஜீவாதார உரிமைகளைப் பார்க்கிற வகையிலே இந்திய அரசியல் சட்டம் இருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவில்களுக்கு ஆயிரக்கணக்கானவர்கள் சிப்பந்திகளாக இருக்கிறார்கள். அவர்களிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய 18 சதவிகிதத்தை தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அளித்து அவ்வாறு உத்தரவிடுவதின்மூலம் அவர்களுடைய உரிமையைப் பாதுகாக்க முடியும். அவ்வாறு உத்தரவு பிறப்பித்து கோவில் நிர்வாகத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் சிப்பந்திகளாக வருகிறார்கள் என்ற நிலை இருக்கிறபோது, தீண்டாமை ஒழிவதற்கு அது உதவி செய்யும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பால் பண்ணை வளர்ச்சி சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் உழவர்களுக்கு பால்பண்ணை மிகவும் உதவியான ஒரு துறையாகும். உண்மையிலேயே கிராமப்புறங்களில் இருக்கும் உழவர்களுக்கு பசு மாடுகள் கிடைக்கச் செய்து பால் விநியோகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அமைச்சரவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கும் பிரகாரம் ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு 300 கிராம் பால் தேவை என்று சொல்லி, இந்தியாவிலே சராசரியாக 130 கிராம்தான் கிடைக்கிறது, தமிழகத்தில் 63 கிராம்தான் பால் கிடைக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கும் மக்களில் 70 சதவிகிதம் பேர்கள் பாலைப் பார்த்துக்கூட இருக்க முடியாது. அந்த அளவில் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்குப் பால் கிடைக்காத நிலைமையிருக்கிறது. தாராளமாக கிராமப்புற மக்களுக்குப் பால் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய, நல்ல வகையான மாடுகளை அவர்களுக்கு அளிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பேங்குகளில் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தக் கடன்கள் கிராமப்புற மக்களுக்குக் கிடைப்பதில்லை.





நகரத்தில்தான் கொடுக்கிறார்கள். நகரத்தில் எல்லை இத்தனை கிலோமீட்டர்கள் என்று எல்லை வைத்திருக்கிறார்கள். அம்மாதிரியில்லாமல் கிராமங்களில் இருப்பவர்கள் பசுமாடுகள் வளர்க்க, பால்பண்ணையை வைத்துக்கொள்ள வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து கதர், கிராமத் தொழில்கள் சம்பந்தமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு, அதற்கு முதலாண்டு கதர் கண்காட்சியை நடத்தி அதன் மூலமாக தேங்கியிருந்த கதர்த் துணிகள் விற்பனையாகப்பட்டிருக்கிறது. அம்மாதிரி வருஷாவருஷம் கண்காட்சி நடத்துவதன்மூலம் கதர்த்துணியை விற்பனையைச் செய்ய உதவிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். காதி போர்டிலே நியமனம் செய்யும்பொழுது அவர்கள் கதர் கட்டுவதிலே அதிக அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பதைப் பார்த்து நியமனம் செய்ய வேண்டுமென்பதைச் சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இ. எஸ். தியாகராசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரவர்கள் கோரியுள்ள பால்வளம், அறநிலையம், கதர் வாரியம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மேல் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிட விழைகின்றேன்.

பால்வளத்தைப் பெருக்குவதன் பயனாக மக்களின் உடல்நலம் பேணி வளர்க்கப்படும். கிராமங்களில் வாழும், ஏழை எளியவர்களின் வருமானம் வளரும். இதற்கு நல்வாய்ப்பாக அது அமைகிறது. கிராமங்களில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை உண்டாக்கி இன்றையதினம் ரிவைவ் ஆக்கப்படாமல் டார்மண்டாகப் பல சங்கங்கள் இருக்கின்றன. அவைகளை ரிவைவ் செய்தும் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்தும் அதன்மூலமாக பல ஏழை எளியவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்து அவர்களுக்குக் கடனும், மானியமும் தந்து, அவர்கள் மாடுகளை வாங்கி வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பை நம்முடைய அரசு மேலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 1964-ம் ஆண்டு சில சங்கங்கள் துவக்கப்பட்டு அந்த உறுப்பினர்களுக்கு 230 ரூபாய் வரையில் கடன் அளித்தார்கள். ஆனால் அங்கே ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக வசூலாகாமல் நின்றுபோய் விட்டது. இந்த பத்தாண்டுகளில் ஏறத்தாழ வட்டியாகவே இரண்டு பங்கு

செலுத்தும் சூழ்நிலை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டு, இன்றையதினம் அந்த அங்கத்தினர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்கின்ற, ஜப்தி செய்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கருணைகூர்ந்து அரசு அந்த ஏழை எளியவர்களிடமிருந்து வர வேண்டிய கடன் பாக்கியை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் நிறைய பால்வளத்தைப் பெருக்குவதற்கான நல்லதொரு வாய்ப்பிருக்கிறது. பள்ளிப்பட்டில் மில்க் சில்லிங் சென்டரைத் துவக்குவதற்காக திட்டமிடப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் ஏனோ துவக்கப்படாமல் நின்றிருக்கிறது. அதையும் இந்த ஆண்டாவது துவக்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி மிகவும் பிற்பட்ட பகுதி என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். கதர் வாரியத்தின் மூலமாக வேலையற்றோருக்கு வேலை வழங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன்கீழ் அங்கே ஒரு சென்டர் துவக்கப்பட்டு ஏழை எளியவர்களுக்கு வேலைதரும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கதர் வாரியத்திலே 9 கோடி ரூபாய் விற்பனையாக இருந்தது இன்றையதினம் 13 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதனால் அந்தக் கதரை நம்பியிருக்கின்ற ஏழை நெசவாளர்கள் நல்ல பயனைப் பெறுகிறார்கள். அந்த விற்பனையை மேலும் அதிகப்படுத்துவதோடு உற்பத்தியையும் அதிகப்படுத்தி ஏழை நெசவாளர்களுக்கு மேலும் வசதி வாய்ப்புகளை அளிக்கும் வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும். மேலும் பல நெசவாளர்களை அதில் சேர்த்துக் கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அறநிலைய மானியத்தில் என்னுடைய கருத்துக்கள் ஒன்றிரண்டைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் திருத்தணி கோயிலில் 1967-ஆம் ஆண்டில் 4 இலட்சம் ரூபாய் வருமானமாக இருந்தது இன்றையதினம் 22 இலட்சம் ரூபாய்க்கு வளர்ந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அது மட்டுமல்ல, அந்தக் கோயிலின் வளர்ச்சியிலே இன்றையதினம் நூற்றுக்கணக்கான அறைகளைக்கட்டி, ஆண்டவனைப் பார்க்க வருபவர்கள் மட்டுமல்ல, உல்லாசப் பயணிகளாக வருபவர்களுக்கும் வசதி செய்யப்பட்டு, நாட்டு வளர்ச்சியிலே பெரிதும் பங்கு கொள்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



அதே நேரத்தில் கோயிலில் பணியாற்றும் பணியாளர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கி அவர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு உள்ள எல்லா வசதிகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அறநிலைய அமைச்சரவர்கள் அவருடைய துறைகளைத் திறம்பட நடத்திச் செல்வதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மாண்புமிகு சபாநாயகரவர்களே, அறநிலையத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை எங்கள் தலைவரே விளக்கி விட்டார்கள், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று. ஆகவே, இதை வைத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டிய நிலையில் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஈடுபட மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். எங்கள் அமைச்சரே கண்ணப்பர்! கண்ணப்பர் என்றால் இறைவன் கண்ணிலேயிருந்து நீர் வடிவதைப் பார்த்து உள்ளங்கசிந்து ஆண்டவனுக்குக் கண்ணிலே ஏதோ கோளாறு வந்துவிட்டதே என்று எண்ணி தன்னுடைய கண்ணையே எடுத்து அப்பியவர்தான் கண்ணப்பர்.

ஆகவே, எங்களைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை. அம்மையார் அவர்கள் சொன்னதைப்போல் பாறை அல்ல. நெக்குவிடாப் பாறைகூட பசுமரத்து வேருக்கு நெக்குவிடும். ஆகவே, அம்மையார் அவர்கள் எங்களுக்கு இருக்கும் தெய்வ நம்பிக்கையின்மீது சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் அரிசன மக்கள் அர்ச்சகர்களாக வருவதற்கான தடையைப்பற்றிக் கூறினார்கள். இறைவன் மீது பக்தி கொள்வதற்கு ஐயர் என்றோ, முதலியார் என்றோ, நாயுடு என்றோ, அரிசனங்கள் என்றோ பேதம் இல்லை. பக்தி யாருக்கு இருக்கிறதோ அவர்கள் அர்ச்சகர்களாக வர வேண்டும். தர்மகர்த்தாக்களாக வர வேண்டும் என்பதில் அழுத்தந்திருத்தமான நம்பிக்கையை உடையவன் நான்.

தர்மகர்த்தாக்களாக வருபவர்கள் கடமைகளை மட்டும் செய்தால் போதாது. ஒரு கோயிலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். ஆண்டவனைத் தொழுகிறார்கள் என்றால் அவர்களுக்குப் பிரசாதம் கொடுக்கிறார்கள். விபூதி கொடுக்கிறார்கள், இன்னும் நெற்றியிலே அணியக்கூடியதெல்லாம் கொடுக்கிறார்கள். அப்படி அவர்கள் கொடுக்கும் சமயத்தில் டிரஸ்டியாக இருப்பவர்கள் நாம் அவைகளை அணிய மாட்டேன் என்று சொல்லி அதை வாங்கிப் பின்புறம்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஏப்ரல் 4

போடுகிறார்களா என்பதைத்தான் சேர்ந்து அந்த மக்கள் பார்ப்பார்கள். போகிறவர்கள் அமைச்சர்களானாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றாலும் சரி, நான் சென்றாலும் சரி அதைத்தான் மக்கள் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆகவே, டிரஸ்டியாக வருபவர்கள் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களா காங்கிரஸ்காரர்களா என்று பார்ப்பதைவிட டிரஸ்டிகளாக வருபவர்கள் நிச்சயமாக திருநீறு அல்லது நாமம் அல்லது பட்டை அணியக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அவர் மனதில் என்னயிருந்தாலும் கோயிலுக்குச் செல்லும் அவர் கோயிலுக்குச் செல்லும் சமயத்தில் அல்லது கும்பாபிஷேகத்திற்குச் செல்லும் நேரத்தில் எப்படிச் செல்ல வேண்டும்?

இன்றைக்குக்கூட அறுபத்துமூவர் திருவிழா நடக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பர் அவர்கள் செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம், அங்கே அவருக்குத் திருநீறு கொடுத்தால் அதை அவர் அணிகிறாரா என்றுதான் பக்கத்திலிருப்பவர்கள் பார்க்கிறார்கள். டிரஸ்டியாக இருப்பவர்களும் அப்படிச் செய்கிறார்களா என்றுதான் பார்க்கிறார்கள்.

ஆகவே, தயவு செய்து டிரஸ்டியாக வருபவர்கள் திருநீறு அணியக்கூடியவர்களாக இருக்க வேண்டும் அல்லது நாமம் வைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும் அல்லது அந்த வைதிகப் பற்று இருக்க வேண்டும். மனதிலேயும் இருக்க வேண்டும், வெளியிலேயும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆனால் யாராக இருந்தாலும் தெய்வத்தினுடைய சந்நிதானத்திலே அவர்கள் பக்தர்களாக இருக்க வேண்டுமென்பதைத்தான் நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரிசனங்கள் அர்ச்சகர்களாக வருவதா இல்லையா என்பதில் தகராறு இல்லை, அதுகுறித்து உயர்நீதி மன்றத்திற்கு, சுப்ரீம் கோர்ட்டிற்கு யாராவது சென்றால் அது தவறான வாதம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, பெரியார் அவர்களை வெங்கடப்ப நாயக்கர் ஒரு பிள்ளையார் கோயிலைக்கட்டி அதில் டிரஸ்டியாக வைத்தார்கள். அதில் அவர்கள் சாகும்வரைக்கும் டிரஸ்டியாக இருந்தார்கள். ஆனால் அவருக்குத் தெய்வ நம்பிக்கையில்லை, திருநீறு வைக்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட தத்துவங்கள் அறங்காவலருக்கு வேண்டியதில்லை. பெரியாரைவிட யோக்கியமாகக் கணக்கு கொடுத்தவர்கள் யாருமில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கையை அவர்கள் நடத்தினார்கள், அப்படிப்பட்ட தத்துவத்திற்கு இது புறம்பாக இருக்கிறது.



1974 ஏப்ரல் 4]

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரவர்கள் மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் அவர்களைக் கேட்டமாதிரி நான் கேட்கிறேன், இது அவருடைய சொந்தக் கருத்தா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கருத்தொற்றுமை இடையாது, கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆஸ்திகர்களாக இருக்கிறார்கள். மத நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கிறார்கள். இதைச் சந்தேகித்தால் என்ன அர்த்தம்? நீங்கள் எங்கள் கட்சியிலிருந்தபொழுது எத்தனை முறை கோயில்களுக்கு என்னோடு வந்திருக்கிறீர்கள். ஆகையால் அரிசனங்கள், அரிசனங்கள் அல்லாதவர்கள் என்ற வேற்றுமை இல்லை.

திருநாவுக்கரசரே சொல்லியிருக்கிறார்கள், இப்பொழுது அல்ல, அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். ஒரு பாட்டில். "சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்தாலும் நான் வேண்டேன்" என்று சொல்லிவிட்டுப் பிறகு சொல்கிறார். "அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" என்று சொல்கிறார். ஆகவே, யார் பக்தி வைத்திருந்தாலும் அவர்களை வணங்குவேன் என்று திருநாவுக்கரசர் அப்பொழுதே சொன்னார்கள்.

அதேபோல் பேயாழ்வார் யார். திருப்பாணாழ்வார் யார். அரிசனங்கள் தானே? எனவே, அரிசனங்கள் இந்து சமயத்திற்கு மாறுபட்டவர்கள் என்ற வகையில் யாரும் எண்ணவேண்டாம். (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான விவாதமாக இருப்பதால் தயவு செய்து இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். நீங்கள் நல்ல மனம் வைத்து மேலும் 5 நிமிஷம் கொடுப்பீர்கள் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

காஞ்சிப்பெரியவரைக் கேட்டால் கூட, பரம்பொருள் என்று ஒன்று உண்டு. அதைச் சிலர் முருகன் என்று சொல்லுகிறார்கள்; நாராயணன் என்று சிலர் சொல்லுகிறார்கள்; சிவன் என்று சொல்லுகிறார்கள். பல்வேறுபட்ட உருவங்களில் வழிபடுகிறார்கள். அதிலேதான் வேற்றுமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்

**திருமதி த. ந. அனந்தநாயகி**: கோயிலில் உபந்நியாசம் செய்ய சான்ஸ் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இங்கேயே உபந்நியாசம் பண்ண ஆரம்பித்துவிட்டாரோ ?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: உங்களுடைய பேச்சைக் கேட்டுக் கேட்டு நானும் உபந்நியாசம் பண்ண ஆரம்பித்து விட்டேன்.

"நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம்
பூசை கொள்ளவாராயோ பராபரமே"

என்ற தத்துவத்தை எல்லாம் பெரியவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தாயுமானவர் இறைவனுக்குப் பூச்சூட மலர் பறிக்கப் போகிறார், மலரைப் பார்த்தார் "பார்க்குமிடமெல்லாம் நீயே இருத்தியப் பனிமலர் பறிக்க நன்னேன்" என்று மலரிலே இறைவனைப் பார்க்கிறார்கள்.

இறைவன் இருக்கிறான். அந்த விதத்தில் தாயுமானவர் போன்றவர்கள் எல்லாம் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். சமய உணர்வு நமக்கு வேண்டும்; மற்றவர்களுக்கும் வேண்டும் எல்லோருக்கும் வேண்டும். நாம் இந்துக்கள்; இந்து சமயத்தை காப்பாற்றுவதற்காக நாம் இருக்கிறோம் என்ற உணர்வு மற்ற மதத்தினருக்கு இருப்பது போல் நமக்கு இருக்க வேண்டும்.

இறைவனை நினைப்பதால் மனம் அடங்குகிறது என்ற நோக்கத்தைக் கோயில்கள் வலியுறுத்துவதாக இருக்கவேண்டும். கோவிலுக்குப் போனால் மட்டும் போதாது.

அறுபத்திமூவர்கள் யார்? இந்து சமயத்தின் சார்பில் கடவுள் கொள்கையைப் பாடியவர்கள். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக் கரசர் மற்றும் நாயனார்கள் கோயில்களின் அவதாரமாக இருக்கிறார்கள். ...ங்கள் எல்லாம் இன்று மயிலாப்பூர் சென்று பார்க்க வேண்டும். 63 அடியார் ...ளுக்கும் வழிபாடு செய்கிறோம். இறைவனை வழிபடுவதன் மூலம் மனம் அடங்குகிறது.

ஆனால் சில மாணவர்கள் துணியை எல்லாம் அவிழ்த்துவிட்டு ஓடுகிறார்கள் காட்சியில். ஆண்டவனிடத்தில் பக்தி இல்லாத காரணத்தால்தான் அவர்கள் ...ரக்தியால் திசை திரும்பி விடுகிறார்கள். கல்வியில் கூட புதிய முறையில் ...கம் போதிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அந்த மாணவர்கள் பக்தி ...ல்லாமல் துணியின்றி ஓடுகிறார்கள் என்று சொன்னார்கள், திருஞான ...பந்தரும் அப்படித்தான் காட்சி அளித்தார்.





**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: எனக்குத் தெரிந்த வரையில் திருஞான சம்பந்தர் உலகத்தில் இருக்கும் ஆசைகளை வெறுத்து உலகத்தையே துறந்து கோவணாண்டியாக பற்றற்ற நிலையை அடைந்தார்கள்.

"உள்ளதே போது நான் எனக்குள்ள
ஒன்றை விட்டு ஒன்று பற்றி பாசக் கடற்குள்ளே
வீழாமல்
மனதற்ற பரிசுத்த அருள்வாய் . . .

பார்க்குமிடமெல்லாம் ஆண்டவனைப் பார்த்து கோவணாண்டியாகத்தான் பரிபூரண ஆனந்த நிலையை அடைந்தார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, இந்த அவைக்குத் தவறான தகவல் தரப்படுகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: திருஞானசம்பந்தர பாசம், ஆசை என்ற கடலிலே விழாமல் இருந்தார். கோவணம் கட்டியே இருந்தார். இப்போது ஓடியவர்களைப் போல் ஓடவில்லை. (மணி அடிக்கப்பட்டது—திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் பேச அழைக்கப்பட்டார்).

**திரு. கோவை செழியன்**: தலைவர் அவர்களே, தவத்திரு கிருஷ்ண மூர்த்தி அடியார் அவர்கள் இந்தப் பணியை எல்லாத் திருத்தலங்களுக்கும் சென்று செய்வார்களா; பிரச்சாரம் செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: எல்லாக் கோயில்களுக்கும் செல்வேன்; எல்லாக் கோயில்களிலும் பிரச்சாரம் செய்வேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவர் அவர்களே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாடிய பாட்டு திருஞானசம்பந்தர் பாடிய பாட்டா அல்லது வேறு யாராவது பாடிய பாட்டா என்பதை புலவர் என்ற முறையில் ஆராய்ந்து இன்றோ நாளையோ சொல்ல வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அது தாயுமான சுவாமிகள் பாட்டு.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: ஆம் தாயுமானவர் பாடிய தாகும்.

*** திரு. ஏ. ஆர். சுப்பையா**: தலைவர் அவர்களே, அறநிலைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். பால் பண்ணை வளர்ச்சி

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1974 ஏப்ரல் 4

எதிர்பார்க்கக்கூடிய நிலைமையில் நன்முக நடைபெற்று வருகிறது. இவ்வாறு
நல்ல முறையில் நடந்து வந்தாலும் அதில் இருக்கும் ஒன்றிரண்டு குறை
பாடுகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்செமினேஷன் சென்டர்ஸ் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி
செவ்வனே நடைபெற வேண்டுமானல் ஃப்ரோசன் செமன் மூலம் விநியோகம்
செய்தால்தான் பலன் ஏற்படும். முக்கியமாக ஃபீடிங் மெஷின் இன்னுவரை
செயல்பட்டதாகத் தெரியவில்லை.

ஃபாடர் டெவலப்மெண்ட் தேவை. மாடு வளர்ப்பவர்களுக்கு அதை
விநியோகம் செய்யவேண்டும். பட்டதாரிகளுக்குத் திட்டம் உருவாக்கப்
பட்டிருக்கிறது. செயல் முறையில் செயல்படுத்தவில்லை. அதைச் செய்ய
முன்வர வேண்டும்.

மதுரையில் ஏற்படுத்தக்கூடிய பால் பவுடர் யூனிட்டுக்கு ஒரு நாளைக்கு ஒரு
லட்சம் லிட்டர் பால் தேவை. அதற்கு திருநெல்வேலி, இராமநாதபுரம்,
மதுரை மாவட்டங்களில் உற்பத்தி செய்ய திட்டம் தேவை. இப்பொழுதே
அதற்கு வழிவகை செய்தால்தான் பால் வருவதற்கு 34 மாதங்கள் ஆகும்.
அதாவது. இனவிருத்தி செய்து, அதன்மூலம் அதிக பால் வரவேண்டும்.

காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரிஸ் பற்றி ஒரு வார்த்தை. ஒரு போர்டு
வைத்திருக்கிறேம். அது தவிர நம் மாநிலத்தில் காதி அண்டு வில்லேஜ்
இண்டஸ்ட்ரிஸ் கமிஷன் ஒன்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்படி
டியூயல் கன்ட்ரோல் ஆர்கனேசேஷன் அவசியமா? இதைப் பரிசிலனை செய்ய
வேண்டும்.

இப்போது நாட்டிற்கு ரொம்பத் தேவையானது சுண்ணும்பு. சிமென்ட்
தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. சுண்ணும்பை உற்பத்தி செய்ய நல்லதொரு
திட்டம் காதி போர்டில் இருக்கிறது. அதற்கு ஒரு ட்ரெயினிங் கொடுக்
கிறார்கள். மகாராஷ்ட்ராவில் ஒரு இடத்தில் ட்ரேயினிங் எடுக்கவேண்டு
மென்று சொல்கிறார்கள். அந்த ட்ரெயினிங்கை நம் மாநிலத்தில் வைக்க வழி
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லைம் உற்பத்தி செய்வதால் அதைக் கொண்டு பல பொருள்கள் செய்யலாம்.
சாக் பவுடர், ரெடிமேட் லைம் மார்டர், டிஸ்டெம்பர், லைம் டைல்ஸ், ப்ளீச்சிங்
பவுடர் போன்றவை செய்யலாம். நம் நாட்டில் எரி வாயு மிகவும் தேவையாக
இருக்கிறது. 20,000 சாண வாயு நிலையங்களை அமைக்க இருக்கிறார்கள்.
அதில் 2,000 நிலையங்கள் தமிழ்நாட்டிற்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்
டுள்ளது. அது வரவேற்கத் தக்கதாகும்.



1974 ஏப்ரல் 4] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

அடுத்தபடியாக, பட்டு உற்பத்திப் பண்ணையை உருவாக்கப் போவதாகத்
தெரிகிறது. பட்டு உற்பத்தி இப்பொழுது இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்
மென்ட்டும் செய்து கொண்டிருக்கிறது. காதி போர்டு மூலம் செய்வதும்
வரவேற்கத்தக்கது. இந்த இரண்டையும் இணைத்துச் செய்தால் செலவு
குறையும். இந்தத் திட்டத்தை நாம் விரிவாக்கலாம்.

அடுத்தபடியாக, இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றி ஒரு
வார்த்தை. கன்னியாகுமரி சம்பந்தப்பட்ட வரையில் அதை இணைக்க புதுச்
சட்டம் வருவதை வரவேற்கிறேன். கோவில்களில் வருவாய் குறைவாக
இருக்கக் காரணம், கோவில்களைச் சார்ந்த கட்டடங்கள் வாடகைக்கு விடப்படு
கின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என்ன வாடகை இருந்ததோ
அதைத்தான் இப்போதும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்ற
இப்போதுள்ள விதிமுறைகள் சரியாக இல்லை. இப்போதுள்ள சட்டப்படி
வாடைக்கு இருப்பவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். பழைய வாடகையே
கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். எனவே இதை மாற்றினுல் கோவில்
களுக்கு நல்ல வருவாய் கிடைக்கும். எனவே அதற்கேற்றபடி சட்டத்தை
திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த முக்கியமான
மானியங்களின்மீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய
வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழை
கிறேன்.

பால்வழங்கு துறை பற்றி ஒருசில புள்ளிவிவரங்கள் குறிப்பில் தரப்
பட்டிருக்கின்றன. 300 கிராம் சராசரி ஒரு நபருக்குத் தேவை, அப்போது
தான் போஷாக்கான உணவை உட்கொண்டதாக இருக்கும் என்ற விவரத்தை
அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியா முழுமையும் எடுத்துப்
பார்க்கும்போது 130 கிராம் என்றும், தமிழகத்தில் கிடைக்கும் பாலின்
அளவு சராசரி 63 கிராம்தான் என்றும் புள்ளிவிவரங்கள் எல்லாம் தந்திருக்
கிறார்கள். இது மிகவும் குறைவாக இருக்கிறது.

இப்போது வெண்மைப் புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று பிரமாதமாக
பேசிக்கொண்டிருக்கிறேமே தவிர கிராமப் பகுதிகளில் உள்ள ஏழை எளிய
மக்களுக்கு குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டத்தினுல்
என்ன பிரயோசனம் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்வது பொருத்த
மாக இருக்கும் என்று கருதுகிறேன். பொதுவாக இன்றையதினம் கிராம
மக்கள் வறுமையாலும் பசியாலும் பீடிக்கப்பட்டு வெகுவாகப் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு இந்தத் திட்டத்தில் ஊக்கம் அளிக்கும் வகையில் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஆங்காங்கு துவக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியான முறையில் இயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக இருந்து வருகிறது. இன்று பால் வழங்குவதற்கு பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பாக குழந்தைகள் உணவு வழங்குவதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை விரைவில் துவக்கவேண்டும். அதற்கான தீவிர ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையைப் பொறுத்தவரையில் அண்மையில் தரமான பால் வழங்கப்படவில்லை என்ற புகார் வந்த வண்ணம் இருக்கின்றது. பால் புட்டியில் எலி இருந்ததாக பத்திரிகையில் லெட்டர்ஸ் டு தி எடிட்டரில் பலரும் எழுதியிருந்தார்கள். இலாகா சார்பில் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்கள். இந்தமாதிரி வேண்டுமென்றே என்னவோ தெரியவில்லை பல புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

குறிப்பாக எங்கள் ஹாஸ்டலில் டோன்ட் மில்க் தருகிறார்கள். இதை சற்று ஜாக்கிரதையாக பொதுமக்களுக்கு விநியோகிக்க வேண்டும். என்ன சொல்கிறார்கள் என்றால், டிஸ்ட்ரிப்யூஷன் பாயிண்டில் போதிய கண்ட்ரோல் இல்லை, ஆகவே அதில் என்ன என்னவோ கோளாறுகள் ஏற்படுகின்றன என்றுதான் இலாகாவிலிருந்து சமாதானம் கூறியிருக்கிறார்கள். அதை நிச்சயமாக இந்த இலாகா ஆராயவேண்டும். அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு எந்தவிதமான இடமும் கொடுக்காமல் இந்த இலாகா டிஸ்ட்ரிப்யூஷன் பாயின்டிலும் நல்லமுறையில் பணியாற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, மதுரையில் மதுரை மில்க் ப்ராஜக்ட் க்ரிமினல் கான்ஸ்பிரஸி கேஸ் உருவாகியது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கூட சம்பந்தப்பட்டதாக விசாரணையில் இருந்து புலனாகியிருக்கிறது. அதுகுறித்து என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார்கள்? ஏன் அதில் காலதாமதம்? ஒருவேளை அவர்கள் மீது குற்றம் போதுமான அளவில் ருஜு ஆகவில்லை என்றால் அல்லது போதிய முகாந்திரம் இல்லை என்றால் அவர்களை விட்டுவிடுவது நலமாகயிருக்கும்.

அதல்லாமல் நீண்ட காலமாக இந்த வழக்கை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது உண்மையில் கண்டிக்கத்தக்கது.

அடுத்தபடியாக, இந்த பால்வழங்குத் துறையின்கீழ் பசுமாடுகள் கொடுப்பது இந்த இலாகாவோடு சேர்ந்து திட்டம் தீட்டுவது பொருத்தமாக இருக்கும். இப்போது மாடுகள் வாங்க கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து



கொடுக்கிற தொகை அன்றிருந்த விலைவாசிக்கு ஏற்ப இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே அந்தத் தொகையை அதிகப்படுத்தவேண்டும் என்ற என் ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, காதி இலாகாவைப் பொறுத்த வரையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையால் ஏற்பட்ட ஒருசில இழப்புகள் பற்றி கூறுவது என் கடமை என்று கருதுகிறேன். கள் இறக்கி வந்தோருக்கு மறுவாழ்வு—ரீஹாபிலிட்டேஷன் ஆப் டாடி டாப்பேர்ஸ்—என்பது பற்றிக் குறிப்பிடும்போது சுமார் 20,300 தொழிலாளர்கள், கள் இறக்குவோர் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இது மிகவும் குறைவு. அவர்கள் 40,000-க்கு மேலாக இருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் இந்த இலாகாவின் ஒரு மாநாட்டிற்குச் சென்றபோது கொடுத்தார்கள். இந்த நிவாரணத் திட்டத்திற்காக ஆகும் செலவு சுமார் ரூ. 40.60 இலட்சம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் உண்மையில் அந்தப் பணம் இன்று வரை அவர்களுக்குப் போய் சேரவில்லை. ரூ. 200 உதவி கொடுப்பதுகூட இன்னும் பல இடங்களில் கிடைக்கவில்லை.

கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் பல பகுதிகளில், மதுரை, சேலம், இராமநாதபுரம் மாவட்டங்களில் பல பகுதிகளில் அந்த உதவி கிடைக்காத ஒரு நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. 25 ரூபாய் கிரான்டாகவும், ரூ. 175 கடனாகவும் கொடுக்கிறார்கள்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தோர் இன்று மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு கொடுக்கப்படுகிற உதவிகள் அவர்களுக்கு நேரில் சென்று சேருவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும்.

இடைத்தரகர்கள் இடையில் இருப்பது கூடாது. அவர்களுக்காக கொடுக்கப்படுகிற பணம் அவர்கள் கையில் நேரடியாகப் போய், சேர வழிவகை காண வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவைகளைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் இந்த இயக்கத்தின்கீழ் வராத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த இலாகா மூலம் உதவிகளைச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போதுள்ள மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்களை எல்லாம் திருத்தல் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வேலை செய்து கொண்டிருக்கிறது. இந்த மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்களில் வேலை செய்த பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுவேலை நிச்சயமாக அளிக்கப்பட்டாக வேண்டும். விசேஷப் பயிற்சி பெற்றவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பனை நாரைக் கொண்டு தொழில் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை
விரிவுபடுத்த வேண்டும். இதற்கு பலயிடங்களில் பல யூனிட்டுகள் வைத்திருக்
கிறார்கள். அதற்கு போதிய ஊக்கம் அளிக்கப்படவேண்டும். பொதுவாக
இந்த ஏழை மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகள் அவர்களுக்கு நேரில்
சென்று சேரும் வண்ணம் வழிவகை செய்ய வேண்டும். அதேமாதிரி பனை
மரம் ஏறி கீழே விழுந்து இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய்
மானியம் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அதைக்
கூட்டுறவு இயக்கத்தில் சேராத மற்றவர்களும் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.
**பலருக்கு ஒரு வருஷம் இரண்டு வருஷம் ஆகியும் கொடுக்கவில்லை என்ற**
குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால் இந்த இலாகா மூலமாக
உடனடியாக துரிதமாகக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது பனைமரத்திலிருந்து விழுந்து அங்கஹீனமான
வர்கள் பலரும் இன்று கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக
**நெய்யாறு ஆஸ்பிடலில் 16 பேர் படுத்த படுக்கையாக இருந்து, கஷ்டப்பட்டுக்**
கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஏதாவது உதவி செய்ய முடியுமா
என்பதை தகுந்த முறையில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மிக முக்கியமான பிரச்சினை நம்முடைய அறநிலைய பாதுகாப்பைப் பற்றிப்**
பேசினார்கள். இதிலே பல விதமான கருத்துக்களை பலரும் எடுத்துக்
கூறினார்கள். இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரையில் எல்லோரும் அதை
...டித்துத் தூள் தூளாக ஆக்கும் நிலைமையைத்தான் உருவாக்கிக்கொண்டு
...ருக்கிறார்கள். மதத்தைக் காப்பாற்ற நம்மால் முடியாது என்ற நிலை நமக்கு
...ற்பட்டு இருக்கிறது. மக்கள் மனதை, அவர்களுக்கு இருக்கும் மத உணர்ச்
**...களை பாதிப்பதற்கான முறையில் சட்ட மன்றம் நிச்சயமாக இடம் அளிக்கக்**
...டாது.

இங்கே ஆத்திக, நாத்திகக் கொள்கை விவாதம் என்ற முறையில் சட்ட
...றத்தை ஆக்குவது பொருத்தமல்ல நியாயமல்ல என்று கூறிக்கொள்கிறேன்.
...வேளை ஆண்டவன் இல்லை, நம்பிக்கை இல்லை என்று பலருக்கு இருக்கும்.
...லிஜன் ஈஸ் எ ஓபியம்" என்று சொல்பவர்கள் இருக்கலாம். ருஷ்ய
...ச்தில் மதத்திற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்
...ற விவாதத்திற்குரிய பிரச்னையில் நான் இறங்க விரும்...ில்லை.



பொதுவாக தமிழ்நாட்டில் இருக்கும் மக்கள் பெரும் பக்தி, கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். இந்த இலாகாவில் அதிக ஆலயங்கள் இருக்கின்றன. தனியார் ஆலயங்களும் இருக்கின்றன. இந்த நிர்வாகம் என்ன முறையில் சீர்கெட்டு இருக்கிறது, அதை எப்படி சீர் செய்ய வேண்டுமென்று கூறினால் நன்றாக இருக்கும். கொள்கையை விட்டுவிட்டு ஒரு சிலர் வேறு விதத்தில் பேசியதற்காக உள்ளபடியே நான் வேதனைப் படுகிறேன். இந்தமாதிரி எள்ளி நகையாடக் கூடிய அளவிலும், பிறர் நம்மைப் பார்த்து சிரிக்கக்கூடிய அளவிலும் விவாதம் அமைய வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய பண்டைக் கால நோக்கம் என்ன? அந்த நோக்கங்களின் அடிப்படையில் ஆலயங்கள் நடைபெற்று வருகின்றன. அதை ஒட்டித்தான் நம்முடைய அரசின் சின்னமும் இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. **தமிழ்நாட்டு சின்னத்தைப் பார்த்தால் கோபுரம் தான் போட்டு இருக்கிறார்கள்.**

'வாய்மையே வெல்லும்' என்று நாம் எல்லோரும் எடுத்துக்கூறி இருக்கிறோம். இந்த நல்ல எண்ணங்களையெல்லாம் இந்த நேரத்தில் நாம் நினைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த அறநிலையத்தில் **அறங்காவலர்கள் நியமிப்பதில் பல ஆட்சேபனைகள் செய்தார்கள். எல்லா** சார்பிலும் உள்ளவர்களுக்கும் இதிலே பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அர்ச்சகர்களாக தாழ்த்தப்பட்டவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று சொல்லி, அதற்கு சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது. அதனால் தாமதமாகிறது, அது மக்களுடைய மனதில் பெருத்த கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்ற கருத்துக்களையெல்லாம் எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

இந்த அர்ச்சகர்களைப் பொறுத்த வரையில், எல்லோரும் ஆண்டவனுக்கு **அர்ச்சனை செய்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை, கருத்து வேறுபாடும்** இருக்காது என்று நினைக்கிறேன். ஏனெனில் ஜாதி இரண்டொழிய வேறு இல்லை என்று நாம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆண்டவனுக்கு எந்தவிதமான ஜாதியும் இல்லை. இங்கே கே.எம்.எஸ். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள். பலரும் பேசுகிறார்கள். இதையெல்லாம் விவாதத்திற்குரிய பிரச்னையாக்காமல், அவர்களுக்கும் நியாயம் வழங்கும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டும், சட்டத்தை நியாயமான முறையில் திருத்தி, நமது பாராளுமன்ற

உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் இருக்கிறது, முதலமைச்சர் இருக்கிறார்கள், அவர்களெல்லாம் இந்தச் சட்டத் திருத்தத்தை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எங்கள் ஊர் பிரச்னை. கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டை நீக்கம் செய்துவிட்டு, இங்கே இருக்கிற சட்டத்தை அங்கே கொண்டு வருகிறார்கள் என்பதற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த தேவஸ்வம் போர்டில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பது அந்த இலாகாவில் இருக்கிறவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அந்த தேவஸ்வம் போர்டில் 3 போர்டு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். தலைவர் ஒரு பக்கம், மன்னர் பிரதிநிதி ஒரு பக்கம், நம்முடைய அரசாங்கத்தினால் நியமனம் செய்த உறுப்பினர் ஒரு பக்கம் என்ற முறையில் 3 பக்கமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய தலைவர் 3 மாதத்திற்கு முன்னதாக ராஜிநாமா கொடுத்தார்கள்.

அங்கே கட்சி மாச்சரியங்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். அங்கே பல விரும்பத்தகாத நிகழ்ச்சி இருக்கிறது. அங்கே ஏ.சி.யாக இருக்கின்றவர் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் செக்ரடரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள். அந்த போர்டுக்கும் அவருக்கும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. இதுமாதிரி விரும்பத்தகாத நிகழ்ச்சி இருக்கிறது. அங்கே அகௌன்ட்ஸ் ஆபீசர் திரவியம் பிள்ளை என்பவர் சஸ்பெண்ட் செய்யப் பட்டார்கள். அடுத்த நாள் அதைக் கேன்சல் செய்து விட்டார்கள். இந்த மாதிரி நிலைமையேற்படுகிறது.

அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. பல விபரீதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒழுங்காக நடத்தவில்லை. இந்த போர்டு போவதால் சட்டப்படி 13 லட்ச ரூபாய் ஆண்டுதோறும் நமக்கு அந்த ஆலயங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பகுதி பக்தி பெருமக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஒன்பது ஏக்கர் நிலத்தை அங்கேயுள்ள கல்லூரி ஒன்றுக்குக் கொடுத்தார்கள். கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டுக்குக் கொடுத்தார்கள். குழித்துறையில் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கக் கொடுத்தார்கள். அந்த நிலத்தை இதுகாறும் அவர்கள் உபயோகிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ செய்யாமல் வேண்டுமென்றே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால் அரசியல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆண்டவனுடைய பக்தர்கள் ஒரு கல்லூரி ஏற்படுத்துவதற்காக ஒன்பது ஏக்கர் நிலத்தை மனமுவந்து கொடுத்து இருக்கிறார்கள் என்று



சொன்னால் ஏற்றுக்கொண்டு அந்தக் கல்லூரியை அமைப்பது பொருத்தமாக இருக்கும். ஆனால் அங்கேயுள்ள சிலர் அந்தக் கல்லூரிக்காகக் கொடுத்த இடம் இல்லாமல் வேறு இடத்திற்கு அந்தக் கல்லூரியைக் கொண்டு செல்வதற்கு அந்த போர்டில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் திட்டங்கள் போட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அந்த இடத்தில் இருந்த கல்லூரியை மாற்றினால் பொது மக்கள் பாதிக்கப் படுவார்கள். பெண்கள் கல்லூரி அது. இந்தக் கல்லூரி அமைப்பதை ஒரு பெரிய திருப்பணி செய்கிறோம் என்ற முறையில் அந்தக் கல்லூரியை அந்தப் பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் அங்கே இருக்கிற மக்கள் இதை ஒரு பெரிய விஷமப் பிரச்னையாக்கிவிடுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அங்கேயுள்ள மக்கள் எல்லோரும் மிகவும் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த இலாகாவால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆலயங்கள் பல இன்னும் இருக்கின்றன. தனியார் கையில் இருக்கிற ஆலயங்களைச் சொல்ல வில்லை. பொதுவாக இருக்கிற ஆலயங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். குடும்பக் கோவிலைப்பற்றிச் சொல்லவில்லை. பொதுவாக இருக்கும் ஆலயங்களை எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டுக்குச் சொந்தமாக ஏராளமான பழைய பாத்திரங்கள் இருக்கின்றன. 10 லட்ச ரூபாய்க்கு மேல் அந்தப் பாத்திரங்கள் இருக்கும். அது உபயோகம் இன்றி இருக்கிறது. மன்னர் ஆட்சி காலத்தில் அங்கே அந்தணர்களுக்கு சாப்பாடு போட்டார்கள். "ஊட்டுப்புறை" என்று சொல்லுவார்கள். அதற்காக அந்தப் பாத்திரங்களை வாங்கி வைத்து இருக்கிறார்கள். அந்தப் பாத்திரங்கள் இன்று அறையில் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தப் பாத்திரங்களை ஏலம் போட்டால் 10 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்கும். அதைக் கல்லூரிக்கோ அல்லது வேறு ஆலயப் பணிகளுக்கோ பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, அந்தக் காரியத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமானது இந்தத் தொடர் கூட்டத்திலேயே அந்தப் பகுதிக்கும் நீட்டித்துக்கொண்டு வரப்படும் என்று நம்பி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1974 ஏப்ரல் 4

(பிற்பகல் 1-30)

* * *

(பின்னர் அ.தி.மு.க-வினர் வெளிநடப்பு செய்தனர்).

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கும் துறையின் சார்பிலும், அறநிலையத் துறையின் சார்பிலும், கதர் துறையின் சார்பிலும் கோரப்பட்ட மானியங்களை வரவேற்று சிறப்பான கருத்துக்களை தெரிவித்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால் வழங்கும் துறையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு மக்களுக்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்து இந்தப் பேரவையிலே அவர் பேசுவதற்கு நேரம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதிலிருந்து அவர்கள் வாக் அவுட் செய்த நிகழ்ச்சி வரையிலும் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** சாதாரண கிராமப்புறத்து மக்களாக இருந்தாலும், நகர்ப்புறத்து மக்களாக இருந்தாலும், அவர்களுக்குத் தேவையான பாலை சத்து உணவு என்ற வகையிலே வழங்கவேண்டும் என்று, சாதாரண ஏழை மக்கள் அல்லது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற அத்தனை பேர்களுக்கும் துணைத் தொழிலாக இருக்கக்கூடிய இந்தப் பால் தொழில் தீவிரமான முறையில் செயல்படவேண்டும் என்று கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு டெய்ரி டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை தமிழகத்தில் ஏற்படுத்தி, இன்றைக்கு சிறப்பான முறையில் இந்த கார்ப்பரேஷனைச் சேர்ந்த பகுதியாக இருந்தாலும், சேராத மற்றப் பகுதியாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் திட்டமிட்டு நாம் ஏராளமாக அபிவிருத்திகளையெல்லாம் செய்திருக்கிறோம். ஏற்கெனவே நான் குறிப்பிலே சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டும் சிறந்த முறையில் செயல்படுவதற்கு மேலான யோசனைகளையெல்லாம் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிற மிக முக்கியமான திட்டங்களில் சேலம், நெல்லை ஆகிய இடங்களில் நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் வரை பதப்படுத்தக் கூடிய இயந்திரங்கள் ரூ. 30 லட்சம் செலவில் அமைக்க இருக்கிறோம். அதைப் போல 8 இடங்களில் பாலைக் குளிரவைக்கக்கூடிய நிலையங்களும் சுமார் 40 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க இருக்கிறோம். இங்கே பேசிய உறுப்பினர்கள் சென்னையிலும், மதுரையிலும் தவிர மற்ற இடங்களிலும் இப்படிப்பட்ட பால்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 4] [திரு. மு. கண்ணப்பன்]

துறையினுடைய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். அந்தக் குறையை நீக்குகின்ற வகையில் 8 பாலைக் குளிர வைக்கின்ற நிலையங்கள் 40 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்த இருக்கிறோம். சேலம், நெல்லை ஆகிய இடங்களில் ரூ. 30 லட்சம் செலவில் 20,000 லிட்டர் பால் பதப்படுத்தக்கூடிய இயந்திரங்களை நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மதுரை, முகவை, நெல்லை, குமரி, தஞ்சை, திருச்சி ஆகிய இடங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் பாலைப் பக்குவப்படுத்தக்கூடிய இயந்திரங்களை எதிர்காலத்தில் நாம் அமைக்க இருக்கிறோம். இப்படி எல்லா இடங்களிலும் இந்த இயந்திரங்கள் அமைக்கப்படுகின்ற நேரத்தில் ஆங்காங்கு கிடைக்கின்ற பாலைச் சேகரித்து அந்தப் பகுதி வாழ் மக்களுக்கு விநியோகம் செய்வதோடு மட்டுமல்லாமல், வேறு எந்தப் பெரிய நகரங்களில் தேவை இருக்குமானால் அங்கு அனுப்புவோம், அல்லது பவுடர் தொழிற்சாலைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்வோம். அப்பொழுது தமிழ் நாடு பூராவும் நிச்சயம் இந்தத் தொழில் சிறந்த முறையில் வளர்ச்சி அடையும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது.

அதைப்போல இன்னொரு குறையையும் சொன்னார்கள். இப்பொழுது ஈரோடு, வேலூர், தர்மபுரி மாவட்டம் ஒரு பகுதி, நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம் இப்படி பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்குப் பாலைக் கொண்டு வருகிறோம். சென்னையில் இரண்டு பால் பண்ணைகள் இந்த ஆண்டில் முடிக்கப் பட்டுவிடுகிற நேரத்தில் மேலும் அதிகப்படியாக நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் பாலை சென்னை நகரத்திலுள்ள மக்களுக்கு நாம் வழங்குவோம்.

அப்படி வழங்குகிற நேரத்தில் ஈரோடிலிருக்கிற பால் பண்ணையிலும், வேலூரில் இருக்கிற பால் பண்ணையிலும் தற்பொழுது இருக்கிற திறனைவிட திறனை அதிகமாக்கி நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் திறன் உள்ள அளவுக்கு அந்தப் பண்ணைகளை ஃபீடர் பண்ணையாக மாற்றப் போகிறோம்.

அதைப்போல ஏழைகளுக்குக் குறைந்த விலையில் பால் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். வெளி மார்க்கெட்டில் இருப்பதைவிட சென்னை நகரத்தில் விற்கின்ற பால்—மாதவரம் பால் பண்ணையிலிருந்து விற்கின்ற பால் குறைந்த விலைக்கு ஏற்கெனவே விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கும், பால் உற்பத்தியாளர்களுக்கும் பால் விலை கட்டுபடியாக வில்லை, அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைச் சொன்னார்கள்.

நான் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மேலும் 10 பைசா அதிகப்படியான விலையை தமிழ் நாடு பூராவும் இப்பொழுது பாலுக்காக உயர்த்தியிருக்கிறோம். ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை சென்ற ஆண்டு சொன்ன நேரத்தில் சென்ற ஏப்ரல் மாதத்தில் லிட்டர் ஒன்றுக்கு 10 பைசா முதல் 15 பைசா வரையில் அந்தப் பாலினுடைய சத்துக்குத் தகுந்தபடி நாம் விலையை ஏற்றினோம். இந்த ஆண்டு 10 பைசா விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஆனால் வாங்கிச் சாப்பிடுகிற மக்கள் பாதிக்கப் படாத வகையில் இந்தப் பாலினுடைய விலையை ஏற்றியிருக்கிறோம்.

அதோடு அல்லாமல் மதுரை நகரத்தில் அங்கே இருக்கிற பால் பண்ணைக்கு இயந்திரங்களையெல்லாம் 'யுனிஸெப்' நிறுவனம் நமக்கு நன்கொடையாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கிற ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் பால் கொடுக்கவேண்டும் என்று திட்டமிட்டுத் தான் இந்த இயந் திரங்களை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து மதுரை பால் திட்டத்தின் கீழ் 1973-74-ம் ஆண்டில் 14,000 குடும்பங்களுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு பால் விநியோகம் செய்கிறோம், குறைந்த விலையில். வருகிற ஆண்டில், 1974-75-ம் ஆண்டில் 14,000 குடும்பங்களுக்குப் பதிலாக சுமார் 20,000 குடும்பங்களுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, ஏழை மக்களுக்கு பாலைக் குறைந்த விலைக்கு விற்பதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கு நாம் செய்திருக்கிறோம்.

அதைப்போல, கால்நடை உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஏராளமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற போது பல கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக, லத்தீப் அவர்கள் ஏலகிரி மலையில் பால் பண்ணை அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஏலகிரிமலை கடல் மட்டத்திலிருந்து 4,000 அடி உயரத்தில் இருக்கிறது; உயர் ஜாதி மாடுகளை வளர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். கால்நடை வளர்ச்சிக்கு ஏற்ற சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிந்தால், எதிர் காலத்திலே அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வந்தவாசி கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தில் முறைகேடுகள் நடந்திருப்ப தாக மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி விசாரணை செய்யவேண்டுமென்று இதற்கு முன்னாலே என்னிடம் தெரிவித் தார்கள். அந்தச் சங்கத்தில் தவறு நடந்திருப்பதாகத் தெரிந்து, உடனடியாக கையாடல் செய்த பணத்தை திருப்பிக்கட்ட வேண்டுமென்று உத்தர விட்டிருக்கிறோம். பணத்தை கட்டியிருக்கிறார்கள்.



பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டால் மட்டும் அதற்கு பரிகாரம் ஏற்பட்டு விடாது; சம்பந்தப்பட்டவர்கள் சங்கத் தலைவராக இருந்தாலும், அதிகாரியாக இருந்தாலும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணை யருக்குச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் விசாரணை செய்து யார் தவறு செய்திருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் பவுடர் என்றாலே சத்து கிடையாது; கலப்படம் செய்யப்பட்டது என்று யாரும் எண்ணவேண்டியதில்லை. பால் பவுடர் என்றாலே மட்டம் என்று அர்த்தமல்ல. மிகுதியாக இருக்கின்ற பாலை உலர வைத்து, அதை நீண்டநாள் கெடாமல் பாதுகாப்பதற்கு என்று செய்யப்படுகின்ற ஒரு முறைதான் பாலை பால் பவுடராக மாற்றுவது. அதுவும் சுகாதார முறையிலே முழுவதும் இயந்திரங்களினாலேயே செய்யப்படுகிறது. எந்த இடத்திலேயும் அதைக் கையினால் தொடுவதுகூட கிடையாது. பால் பவுடராகி, டின்களில் அடைத்து சீல் வைப்பது வரையில் இயந்திரங்களினால்தான் நடைபெறுகிறது. ஆகவே, பால் பவுடர் என்றாலே கலப்படம் செய்வது என்று யாரும் கூறவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுதந்திராக்கட்சித் தலைவர் வெங்கடசாமி அவர்கள் நல்ல இன கால்நடை வளர்ச்சிக்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கூட அதைப்பற்றி சொல்லியிருக்கிறோம். வெளிநாடுகளிலிருந்து காளைகளை ஜெர்ஸி, ரெட்டேன் இன காளைகளை இறக்குமதி செய்து, கால்நடைகளின் தரத்தை உயர்த்தும் முயற்சிகளை பெருமளவில் மேற் கொண்டிருக்கிறோம். இந்த முயற்சி பால் வளத்துறையில் மட்டுமல்ல; கால் நடைத் துறையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்கு 'ஆப்ரேஷன் ப்ளொட் ஸ்கீம்' விரிவுபடுத்தப்படுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தை இத்திட்டத்தின் கீழ் சேர்த்து, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். கால் நடை அபிவிருத்திக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணகிரி, மாத்தூர் பகுதிகளில் கால்நடை வைத்திருப்பவர்களிடமிருந்து உற்பத்தியாகின்ற பாலை எடுத்துக்கொண்டு, நல்ல விலை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மற்ற மாவட்டங்களில் இல்லாத சிறப்பான பல வசதிகள் இருப்பதால் எதிர்காலத்தில் பால்வளத்தை அங்கே பெருக்குவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன. அந்த வகையிலே அங்கு கால்நடை அபிவிருத்தித் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

உதகைத் தொகுதி உறுப்பினர் தேவராசன் அவர்கள் ஜெர்சி இனங்களையும் ரெட்டேன் இனங்களையும் இறக்குமதி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே இறக்குமதி செய்திருக்கிறோம். ரெட்டேன் காளைகள் 12 சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டில் இறக்குமதி செய்திருக்கிறோம். அவைகளுடைய செமன், இன அபிவிருத்திக்காக தமிழ்நாடு பூராவும் அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உற்பத்தியாகின்ற உயர் இன கன்றுகள் வெளி மாநிலங்களுக்கு—கர்நாடக மாநிலத்திற்கு விற்பனை செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி விற்கப்படுவதாக இருந்தால் அதைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை அரசு பரிசீலனை செய்யும்.

அடுத்து, ஏ. கே. சுப்பையா அவர்கள் கிராமங்களுக்கு கடன் கொடுப்ப தில்லை என்று சொன்னார்கள். கூட்டுறவு மத்திய வங்கியின் மூலமாக இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வழி ஏற்படும். அதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக் கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவில் மத்திய வங்கித் தலைவரும் ஒரு உறுப்பினராக பொறுப்பேற்று இருக்கிறார். எதிர் காலத்தில் தஞ்சை மாவட்டத்திலே எந்தெந்த வகைகளிலே பால் திட்டத்தை விரிவுபடுத்தலாம் என்ற முறையிலே சிறந்த திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். மற்ற பகுதிகளிலும் கூட்டுறவு மத்திய வங்கி ஏராளமான அளவு நிதி உதவியும் செய்திருக்கிறது.

திருத்தணி பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் செயலற்றிருக்கின் றன என்று திரு. தியாகராசன் அவர்கள் கூறினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் சரியாகச் செயல்படவில்லை என்ற உண்மையை அதிகாரிகளும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளைச் செயல்பட வைக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள், இங்கு செமன் சென்டர்கள் நல்லமுறை யில் இல்லை; ப்ரோசன் செமன் சென்டர்களை உருவாக்க வேண்டுமென்று சொன் னார்கள். ப்ரோசன் செமன் சென்டர்களை நம்முடைய நாட்டிலே உருவாக்க



கால்நடைத் துறையின் மூலமாக ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. அதிலே ஒரு முடிவு கண்டபிறகு, நம்முடைய துறையிலும் ஏற்படுத் துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

கால்நடைத் தீவனத்திற்கான திட்டம் பற்றி இந்த குறிப்பில் எதும் சொல் லப்படவில்லை என்று பல உறுப்பினர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். குறிப்பில் விடுபட்டிருக்கும் என்று கருதுகிறேன். ஈரோட்டிலும், மதுரையிலும் இன்னும சில இடங்களிலும் கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களை வைத்திருக்கிறோம். அந்தத் தீவனம் தமிழ்நாட்டிலே இருக் கின்ற பால் கொடுக்கின்ற கால்நடைகளுக்கு போதாதா என்றால் நிச்சயமாக போதாது. ஆகையால், மாதவரத்தில் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் நாள் ஒன்றுக்கு 100 டன் உற்பத்தி செய்யக்கூடிய கால்நடைத் தீவன உற்பத்தி இயந்திரம் ஒன்றைப் பொருத்தியிருக்கிறோம். அடுத்த மாதம் அது செயல் பட ஆரம்பிக்குமானால் நமது தேவையை ஓரளவு பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

பால் பவுடர் தொழிற்சாலையை மதுரையில் ஆரம்பித்திருக்கிறோம். மற்ற இடங்களிலும் ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஏற் கெனவே திட்டம் போடப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத்திலும் எப்படியெப்படி முடியுமோ அந்தளவுக்கு கால்நடை வளர்ச்சி அல்லது கால்நடை இன அபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மேலும் செய்யப்படும். இப்போது உற்பத்தியாகிற பாலை மதுரை பால் திட்டத்தின்கீழ் வாங்குகிறோம். தேவைக்கு அதிகமாக அங்கே உற்பத்தியாகின்ற பாலை வாங்க முடியவில்லை. ஆகவே, ஒரு லட்சம் லிட்டர் பால் அதிகமாக கிடைக்கும் என்று தெரிந்து, பால் பவுடர் உற்பத்தி செய்யும் திட்டத்தை உருவாக்கியிருக் கிறோம். மற்ற இடங்களுக்கு விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகள் ஏற்பட்டால் விரிவுபடுத்தப்படும்.

பட்டதாரிகள் ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர் களில் யார் யார் பால்பண்ணை வைக்க ஆர்வத்தோடு இருக்கிறார்களோ அவர் களுக்கு மாதவரம் பால் பண்ணையில் மூன்று மாதம் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் மாதம் 150 ரூபாய் உதவிப்பணம் கொடுக்கப்படுகிறது. மூன்று மாத பயிற்சி முடிந்த பின்னும் மேலும் 9 மாதங்களுக்கு 150 ரூபாய் வீதம் உதவிப்பணம் கொடுக்கப்படுகிறது. அதன்பிறகு அவர்கள் மாதவரத்திலே பால் பண்ணை வைக்க விரும்பினாலோ அல்லது தமிழ்நாட்டிலே எந்த இடத்தில் பால் பண்ணை வைக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அங்கே பால்பண்ணை வைப்பதற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளோடு தொடர்பு

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 4

கொண்டு, போதுமான அளவுக்கு நிதி உதவி பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு
செய்திருக்கிறோம். இத்திட்டத்தை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக்
கொள்ளலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I want to seek one
clarification from the Hon. Minister. I want to know whether
he has got a scheme to recruit at least 50 per cent of the graduates
from among the women graduates, to set up dairy farm.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஐம்பது சதவிகிதம் என்பது கூட
அல்ல. விண்ணப்பம் போட்டால் பரிசீலித்து, பால் பண்ணை வைக்கத் தயாராக
இருக்கின்ற பெண்கள் யாராக இருந்தாலும், பெண் பட்டதாரிகள் யாராக
இருந்தாலும் எடுத்துக்கொள்ளலாம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஈரோடு
குழந்தை உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசிடம்
நாம் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றையும் இங்கேச் சொன்னார்கள். பாலிலே எலி கிடந்தது என்று
சொன்னார்கள். பாலிலே எலி கிடப்பது பற்றிக் குறிப்பிடுவது ஒவ்வொரு சட்ட
சபைக் கூட்டம் நடைபெறும் பொழுதும் வழக்கமாகிவிட்டது. சென்ற முறை
யும் இந்த மானியக் கோரிக்கை வரும்போது பாலிலே எலி வந்துவிட்டது
என்று சொன்னார்கள். அதேமாதிரி இந்தக் கூட்டத்திலும் சொன்னார்கள்.
எப்படி பாலுக்குள் எலி வருகிறது என்றுதான் தெரியவில்லை. மாதவரம் பால்
பண்ணைக்கு லாரி டாங்கர்களில் பால் கொண்டு வரப்படுகிறது. இங்கே வந்த
பின்னால் சிறிய சிறிய குழாய்கள் மூலமாக பல்வேறு இடங்களுக்கு பாலை
எடுத்துச் சென்று, பதப்படுத்தி பாட்டில்களில் அடைக்கிறார்கள். எந்த
இடத்திலும் மனிதர் கைகள் படுவதில்லை. சீல் வைப்பதுகூட இயந்திரம் தான்.
அப்படி இருக்கும்போது எப்படி எலி பாலில் வரும் என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும்.

இந்து பத்திரிகையில் இந்த செய்தி வந்தவுடன், நிச்சயமாக சட்டசபையில்
இதைப்பற்றிப் பேசுவார்கள் என்று தெரிந்து, அந்த பத்திரிகைக்கு இது
பற்றி கடிதம் எழுதியது யார் என்று பார்த்து, அவரிடம் விசாரித்தோம்.
அவர், ‘நான் நேரடியாகப் போய் பால் வாங்குவதில்லை; 10, 12 வீடுகளுக்கு
சேர்த்து ஒரு பையன் பால் வாங்கிவருவான். இடையிலே அந்த பையன் ஏதா
வது செய்திருக்கலாம்; நான் பால் துறையை குற்றம் சொல்லத் தயாராக
இல்லை’ என்று எழுத்து மூலமாகத் தெரிவித்திருக்கிறார். ஆகவே, பாலில் எலி
வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 4]

திருமதி த. ந. அனந்தநாயகி : பாட்டில்களில் பேப்பர் சீல் போட்டிருக்
கிறார்கள். அதைச் சுலபமாக எடுத்துவிட்டு, தண்ணீர் ஊற்றி மீண்டும் மூடி
விடலாம். ஆகவே பேப்பர் சீல் போடாமல் வேறு ஏதாவது முறையைக்
கையாள வேண்டும். இல்லை என்றால் மில்க் வெண்டார்கள் அதை சுலபமாக
“டாம்பர்” செய்து விடுவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த விபரத்தை இங்கே இப்படி
தெரிவித்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் இந்த விபரத்தைத் தெரிந்து
பலர் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பால் துறையைப் பொறுத்தவரையில்
இன்னும் எதிர்காலத்தில் நல்லமுறையில் செயல்பட யோசனைகள் பல சொல்லி
யிருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

கதர் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு கள் இறக்குவோர்
இருபதாயிரம் பேர்களுக்கு மேல் வேலை இழந்திருக்கிறார்கள் என்று சொன்ன
தற்கு இது அதிகப்படியாக இருக்கும் என்று திரு பொன்னப்ப நாடார்
அவர்கள் சொன்னார்கள். நாம் வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எண்ணிக்கையை
நேரிடையாக கேட்டு அறிந்துதான் இந்த விவரத்தைக் கொடுத்திருக்கிறோம்.
கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது என்றாலும் வேலை இழந்திருப்பதாகப் பதிவு
செய்து கொண்டிருக்கிறவர்கள் அனைவருக்கும் உதவி அளிக்க அரசு நிச்சயமாக
நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கினால் வேலை இழந்த 20 ஆயிரம் தொழிலாளர்களுக்கு உதவி செய்
வதற்காக காதி கமிஷன் பணம் நமக்குக் கிடைத்திருக்கிறது. மாநில
அரசாங்கமும், காதிக் கமிஷனும் இதுவரை 4,457 பேர்களுக்கு ஏழு லட்சத்து
அறுபத்து நான்காயிரம் ரூபாய் கடனாகவும், ஒரு லட்சத்து ஒன்பதாயிரம்
ரூபாய் மானியமாகவும் கொடுத்திருக்கிறார்கள்.

பனை மரத்தில் இருந்து விழுந்து இறந்தவர்கள் குடும்பங்களுக்கு உடனடி
யாக உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். உடன்
டியாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுண்ணாம்பு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்றும், சாண வாயு
திட்டத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றும் திரு. சுப்பையா முதலியார்
அவர்கள் சொன்னார்கள். சாண வாயுத் திட்டத்தைப் பொறுத்த அளவில்
இன்றைக்கு பெரிய ஸ்தாபனமாக இருக்கக்கூடியவைகள் உடனடியாக
வைத்துக் கொள்வது பயனுடையதாக இருக்கும். பராசக்தி மகளிர் கல்லூரியில்
கூட அது செயல்படுகிறது.

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 4

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 20 ஆயிரம் சாண வாயுத் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று காதி கமிஷன் திட்டம் போட்டிருக்கிறார்கள். உடனடியாக தமிழ்நாட்டில் இரண்டாயிரம் சாண வாயுத் திட்டத்தை 74-75-ம் ஆண்டிற்கு உருவாக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறோம். இதற்கு ஆகும் செலவை தேசியமாக்கப்பட்ட வங்கிகள் வழங்க முன்வந்திருக்கிறார்கள். சாணத்தில் இருந்து எரிவாயுவை எடுத்து அடுப்புக்கும் சரி, விளக்குக்கும் சரி பயன்படுத்திக்கொள்வதோடு அந்தச் சாணத்தை உடனடியாக எருவாகவும் பயன்படுத்தலாம். இப்போது எரி வாயு எடுக்கப் படாத சாணத்தை குழியில் தழைகளோடு போட்டுவைத்து ஆறு மாதங்களுக்குப் பிறகே எருவாகப் பயன்படுத்த முடிகிறது. அப்படியின்றி எரிவாயுவை எடுத்தவுடன் அந்தச் சாணத்தை எருவாகப் பயன்படுத்துகிறபோது இதில் கிடைக்கிற நைட்ரஜன் உரம் எரிவாயு எடுக்கப்படாத சாணத்திற்கு சரியாக இருக்கிறது என்பதனால் கிராமங்களில் உள்ள விவசாயிகளும் இதை வரவேற்கிறார்கள். ஆகவேதான் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இரண்டாயிரம் சாண வாயு நிலையங்களை உருவாக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்தில் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவேதான் கதர்த் துறையாக இருந்தாலும், கைத்தறித் துறையாக இருந்தாலும் வெளி மாநிலங்களில் இருந்துதான் பட்டு வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதை மாற்ற வேண்டும் என்பதற்கு இங்கேயே பட்டுப்பண்ணை ஒன்றை ஏற்படுத்தத் திட்டம் போட்டிருக்கிறோம். இது கதர்த் துறையும், தொழில் துறையும் இணைந்து செயல்படக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தொழில் துறையோடு இதுபற்றி கலந்து பரிசீலிக்க நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. கலந்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டத்தில் இருந்த தீப் பெட்டி தொழிற்சாலை மூடப்பட்டது குறித்து திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். தீப்பெட்டிகள் அங்கே சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்படவில்லை. சிறந்த தொழிலாளர்கள் அங்கே இல்லை என்ற காரணத்தினால்தான் அது மூடப்பட்டது. சிறந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து, சிறப்பான முறையில் தீப்பெட்டிகள் தயாரிக்க, இந்த ஆண்டு அதைத் திறக்க ஏற்பாடு செய்யப்படும்.

அடுத்து சாத்தான்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் பனை வெல்லத் தொழிலாளர்களுக்கு இதுவரை உதவி கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் 435 பேர்களுக்கு



1974 ஏப்ரல் 4] [திரு. மு. கண்ணப்பன்]

உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது வட்டாரத்தில் யாருக்காவது கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அங்கும் உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

அதோடு தொழிலாளர்களுக்கு நாம் உதவியாகக் கொடுக்கிற பணம் நேரிடையாக அவர்கள் கைக்குப்போய்ச் சேருவதில்லை, இடையில் உள்ளவர்கள் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்று சொன்னார்கள். பணம் கொடுக்கிற நேரத்தில் அதிகாரிகளே நேரிடையாக இருந்து அவர்களது கண்காணிப்பில் கொடுக்க இந்தத் துறையில் ஏற்பாடு செய்யப்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி வழியாக பனை நொங்கு மட்டும் 19 லட்சத்திற்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். இன்றைக்கு சுமார் 40 நாடுகள் நம்மிடம் இருந்து இந்தப் பனை நொங்கை எதிர்பார்த்திருக்கிறார்கள். வெளிநாட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு இன்னும் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்யவும் இந்தத் துறையில் நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இங்கேயே ப்ராசஸ் செய்யலாம் என்று சொன்னார்கள். அதையும் இந்தத் துறையின் மூலம் பரிசீலிக்கச் சொல்லலாம்.

'பாம் பெடரேஷன்' கலைக்கப்பட்ட காரணத்தினால் தும்பு தொழிற்சாலை வேலை நிதானமாகிவிட்டது என்றார்கள். இந்த பைபர் தொழிலில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இது நமக்கு அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது. ஆகவே இதற்கென்று ஒரு தனி அமைப்பையே ஏற்படுத்தலாமா என்பதுபற்றி நான் அதிகாரிகளுடன் கலந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இப்படி தனிப்பட்ட முறையில் இதைச் செய்வதற்கு அரசுக்கு எந்தவிதமான மறுப்பும் கிடையாது.

திரு. ஏ. ஆர். சுப்பையா: நமக்கு இணையாக பாரலலாக காதி கமிஷன் இதே வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கிற பணத்தை நம்மிடம் கொடுத்து நம்மையே செய்யச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஏற்கனவே இதுபோல கிடையாது. இப்போது புதிதாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். காதி கமிஷன் அதை நடத்துவது தேவையில்லைதான்.

கதர், கைத்தறி இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். இது இரண்டும் மாறுபட்ட தொழிலாகும். இவை இரண்டுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கிற காரணத்தினால் இவற்றை

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 4

இணைக்கிற சாத்தியக்கூறு இல்லை. கதர் உறபத்தியில் மட்டும் இல்லாது, கை
வினைப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பல பேர்கள் இருக்கிறார்கள்.
அவர்களுக்கும் எத்தனையோ உதவிகளைச் செய்து வருகிறோம். எதிர்காலத்திலும்
செய்ய இருக்கிறோம்.

அடுத்து அறநிலையத்துறையை எடுத்துக்கொண்டால் ஆண்டுக்கு ஆண்டு
அதிகமான கோயில்கள் இதன் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன, வருமானமாக
இருந்தாலும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்திருக்கிறது என்பதை இங்கே
இதுபற்றி கொடுத்த குறிப்பில் நான் கொடுத்திருக்கிறேன்.

இப்படி வருமானம் வரக்கூடியதை திரும்ப கோயில்களுக்கே பயன்படுத்த
வேண்டும், வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தைச்
சொன்னார்கள். கோயில்களின் திருப்பணி வேலைகளுக்குச் செலவிட்டதுபோக,
பாக்கியுள்ளதைத்தான் சமுதாயத்திற்குச் செலவழிக்கிறோம். நாட்டு மக்க
ளுக்குப் பயன்படுகிற வகையில்—பழனியில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
ஆங்கில முறை மருத்துவ மனை இருக்கிறது. அதில் மக்களுக்கு சிறந்த
மருத்துவ வசதி கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதைச்
சுற்றியுள்ள பகுதி ஏழை மக்களுக்காக—நகரத்துக்கு வர வசதி அற்றவர்
களுக்காக நடமாடும் மருத்துவமனை ஒன்றையும் பழனி கோயிலில் இந்த
ஆண்டு துவக்குவதாக இருக்கிறோம்.

திருச்செந்தூர் வட்டாரத்தில் கண் மருத்துவ மனையோ, தாய்சேய்
மருத்துவ மனையோ கிடையாது. அவற்றுக்காக அவர்கள் நாற்பது மைல்
கள் வரவேண்டியிருக்கிறது. ஆகவே அங்குள்ள மக்களுக்கு நிவாரணம்
அளிக்கிற வகையில் அங்கே தாய் சேய் மருத்துவமனை ஒன்றை இந்த ஆண்டே
துவங்குவதாக இருக்கிறோம்.

கண் மருத்துவ மனைகள் திருத்தணியிலும், சமயபுரம் மாரியம்மன் கோயி
லிலும், திருவேற்காட்டிலும் துவக்குவதாக இருக்கிறார்கள். இதை எல்லாம்
நாட்டு மக்களும் வரவேற்கிறார்கள்.

(பிற்பகல் 2.00)

அடுத்து சித்த மருத்துவ மனையை எடுத்துக்கொள்வோம். எதிர்
காலத்திலேயும் அதிகப்படியான மருத்துவ மனைகளைத் திறப்பதற்கு
அறநிலையத் துறையிலே திட்டங்களைத் தீட்டி, அதற்கான ஏற்பாடுகளை நாம்
செய்திருக்கிறோம்.



1974 ஏப்ரல் 4] [திரு. மு. கண்ணப்பன்]

இங்கே பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள்
யாண்புரிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தேவஸ்வம் போர்டிலே
இருக்கிற குறைபாடுகளை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். கடந்த ஓராண்டு,
ஒன்றரை ஆண்டு காலமாக, எப்படியாவது இந்தப் போராட்டக் களத்தால்
போதும் என்பதுதான் எங்களுக்கும் இருக்கிற பிரச்னை இப்பொழுதுதான்
மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி தந்திருக்கிறது. நிச்சயமாக இந்தத்
தொடர் கூட்டத்திலேயே அதற்கான திட்டம் சொன்னபடி நடவடிக்கை
எடுப்பதாக இருக்கிறோம். ஏனென்றால், மேலே இருக்கிற அதிகாரிகளுக்கும்
கட்டுப்படாமல், அவர்களாகவே ஏதேதோ செய்து கொண்டிருக்கிறார்கள்.
அர்ச்சகர்கள் சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். தேவஸ்வம் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். நிச்சயமாக அவ
ருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்படும். அந்தக் கல்லூரியை வேறு இடத்
திற்கு எடுத்துச் செல்லாமல் அருகிலேயே வைப்போம். இப்பொழுது அக்கல்
லூரிக்கு இட வசதி இல்லை. அந்தக் கட்டிட வசதி வந்தபிறகு, அறங்காவலர்கள்
நியமிக்கப்பட்டதற்குப் பிறகு, நிச்சயமாக அந்தக் காரியங்கள் எல்லாம்
செய்யப்படும். தேவஸ்வம் போர்டு செய்யாத காரியங்கள் எவையிருந்தாலும்
அவையெல்லாம் செய்யப்படும். குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும் என்று
இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் காரணமாக, வாடகைக் குறைந்திருப்
பதாகச் சொன்னார்கள். இந்துசமய அறக்கட்டளைக்கு உட்பட்டகோயில்களில்
மாத்திரமல்லாமல், முஸ்லிம் மதத்தைச்சேர்ந்த, கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த,
வீடுகள், கட்டிடங்கள், தொழுவங்கள், இவைகள் அனைத்தும் வாடகைக் கட்டுப்
பாடுச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கிற காரணத்தால், நகர்ப்புறத்திலே இருக்கிற
அந்தக் கட்டிடங்களுக்கு ஆயிரக்கணக்கிலே வரவேண்டிய வருவாய், நூற்றுக்
கணக்கிலேதான் கிடைக்கிறது என்று மதிப்பீட்டுக்குழுவினர் கூடப் பரிசீலனை
செய்தார்கள்.

வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து இந்து மதத்திற்கு மட்டுமல்ல,
முஸ்லிம், கிறிஸ்தவ மதமாக இருந்தாலும், அம்மத நிறுவனங்களது கட்டிடங்
களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்படும் என்று 3 மாதங்களுக்கு முன்னாலே
முடிவு செய்திருக்கிறோம். அதற்கான உத்தரவு, வெகு சீக்கிரத்திலேயே பிறப்
பிக்கப்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மற்றுமுள்ள நண்பர்களும் பல
கருத்துக்களைக் கூறி கோயில் அறங்காவலர்களை நியமிப்பதையும், நிர்வாகம்
சீரான முறையிலே நடப்பதையும் பாராட்டினார்கள். மடங்களுக்கெல்லாம்
தேவஸ்வம் தேவைதானா என்று கேட்டார்கள்.

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 4

கோயில் நிலங்களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுப்பது பற்றியும் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். கேரளாவில் இருக்கிற நிலை மைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே, சில கோயில்களுக்கு, வருமானம் இல்லாத நிலையில், இது கொடுக்கப்பட்டு, அவர்களால் அப்படியும் நிர்வகிக்க முடியவில்லை. ஏற்கனவே உள்ள, நிலச் சீர்திருத்தச் சட்டப்படி கோயில் நிலங்களுக்கு விதி விலக்கு வேண்டுமென்று கேட்ட காரணத்தினால், இதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன் னார்கள். ஆனால், நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு எந்த வகையிலும் ஊறு நேராத வகையில் இந்தத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்றும் முதல மைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோயில்களுக்குப் பாதகம் ஏற்படாத அள வில், எந்த அளவு செயல்படுத்த வேண்டுமோ, அந்த அளவு செயல்படுத்தப்படும் என்றும் சொன்னார்கள்.

கோயில் சிப்பந்திகளில் 18 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்டோராக இருக்க வேண்டுமென்று திரு. ஏ. கே. சுப்பையா அவர்களும், திரு பாலசுந்தரம் அவர் களும் கேட்டார்கள். இப்பொழுதுள்ள சட்டத்திலே கட்டாயம் நியமிக்க வேண்டுமென்று இல்லாவிட்டாலும், அங்கங்கே சில இடங்களில் நியமித்திருக் கிறார்கள். ஆனால், நியமிக்கப்படவேண்டுமென்பதற்குச் சட்டத் திருத்தம் தேவையா என்பதைப்பற்றி சட்டத் துறையிலே பரிசீலனை செய்துகொண்டிரு . கிறார்கள். தேவையென்றால், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோர் இருக்க, திருத்தம் கொண்டு வருவதாகவும், கொஞ்ச நாளைக்கு முன்னால், கேள்வி நேரத்திலே தான் குறிப்பிட்டிருக்கிறேன். அதை மீண்டும் இப்பொழுது சொ ல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மடாதிபதி யாரோ செவர்லெட் கார் ஓட்டிக் கொண்டிருப்பதாக, திரு. கே. எம். எஸ் அவர்கள் சொன்னார்கள் 2, 3 மாதங்களுக்கு முன்பும் அவர் இதைச் சொன்னார் யாருக்காவது, கார் வாங்குவதற்கு நம்முடைய ஆணையர், துறையிலே அனுமதி கொடுத்திருக்கிறார்களா என்பதைப் பார்க்கும் போது, யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார். ஆகவே, அவர்கள் எந்தக் கார் வாங்கி, எப்படி ஓட்டி இருப்பார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

கோயில் ஊழியர்களைப்பற்றியும், கோயில் ஊழியர்களுக்குச் செய்ய வேண்டிய பல்வேறு காரியங்களைப் பற்றியும் தம்பி தேவேந்திரன், பாலசுந்தரம், வடிவேல், கந்தசாமி ஆகியோர் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் உள்ளத்திலே கொண்டு. எதிர்காலத்திலே செயல் படுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



[திரு. மு. கண்ணப்பன்]

1974 ஏப்ரல் 4]

திருவரங்கம் கோயில் திருப்பணியும், பவானிபுரம் பெரியபாளையம் கோயில் திருப்பணியும் எப்பொழுது செய்யப்படும் என்று கேட்டு, அவற்றைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை உறுப்பினர் தெரிவித்தார். அந்தக் கோரிக் கையை ஏற்று, வெகு சீக்கிரத்திலே திருப்பணிகள் நடக்க நடவடிக்கை எடுப் போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருமதி அனந்தநாயகி அவர்கள் ரூ. 15 இலட்சம்தானா அந்தத் திருப்பணிக்கு என்று கேட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே ரூ. 50,000 தான் ஒதுக்கப்பட்டது. 1967-க்குப் பின்னர், அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. சென்ற ஆண்டு, அது ரூ. 6 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்படு கிறது. இது அரசு செலவழிப்பது. இது தவிர, அறநிலையத் துறையிலே, கோயிலிலே வருகிற கணக்கைப் பார்த்தால், கோடிக்கணக்கான ரூபாயை நாம் செலவழிக்கிறோம். ஆகவே, ரூ. 15 இலட்சம் என்று குறைத்து நாம் மதிப்பிட வேண்டிய அவசியமில்லை.

கோயில் அதிகாரிகளாக தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்களாக வருபவர்களை, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கிறோம். அவர்கள் என்ன என்ன விதி முறைகளை வைத்திருக்கிறார்களோ, அந்த அடிப்படையிலே, தாழ்த்தப்பட்டவர் களாக இருந்தாலும், பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், நிச்சயமாக அவர்களுக்குச் செய்யவேண்டியதைச் செய்கிறோம் அதைப்பற்றி யாரும் அச்சப்படத் தேவையில்லை.

இன்னும் பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எதிர் காலத்திலே, மிகச் சிறந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வகையில் (குருக்கிடு) மாநில அரசாங்க ஊழியர்களாக, கோயில் ஊழியர்களை மாற்ற வேண்டுமென்று மதிப்பிற்குரிய தியாகராசன் அவர்கள் கேட்கிறார்கள். கோயி லிலே வருகிற வருமானம் அவர்களுக்குத் தெரியும். அதில், அவர்களுக்கு எப்படி சம்பளம் கொடுக்க முடியும்? அவர்களுடைய நிலைமையை எல்லாம் பரிசீலனை செய்து, இந்த ஆண்டு எவ்வளவு செய்ய முடியுமோ. அந்த அளவு, கோயில்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பழமைக் கோயில்களிலுள்ள வருமானத்தை எடுத்து, வருமானமில்லாத கோயில்களிலுள்ள ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது. திருப்பணி வேண்டுமானாலும் செய்யலாம், அப்பணத்தை எடுத்து. ஆகவே, அப்படிப் பட்ட நிலைமையில், நாம் பல்வேறு தரப்பட்ட நிலைமைகளைப் பார்த்து, கோயில்

வருமானத்திற்குத் தகுந்தாற்போல் நிர்ணயம் செய்திருக்கிறோம். பல நூற்றாண்டுகளாகக் கொடுக்காத சம்பளத்தை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பாலாற்றங்கரைக் கோயிலைப்பற்றி சிந்திக்கவில்லையென்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி சிந்திக்கப்படும். அதிதீஸ்வரர் கோவில் திருப்பணிக்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று தெரிவித்துக்கொண்டு நல்ல கருத்துக்களைச் சொல்லிய உறுப்பினர்களுக்கு நன்றி சொல்லி, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் இந்த மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், எம். சுரேந்திரன் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 10-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், ஆ. கு. சுப்பையா, சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப், பி. வெங்கடசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,21,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு,** கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் எம். சுரேந்திரன், கே. ஏ. வகாப், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 12-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் ஆ. கு. சுப்பையா, கே. எஸ். கோதண்டராமையா, சோ. அழகர்சாமி, ஆர். பொன்னப்ப நாடார், பி. வெங்கடசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,09,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், ஏ. சுப்பிரமணியம், கே. ஏ. வகாப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 27-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் ஏ. சுவாமிநாதன், ஆ. கு. சுப்பையா, சோ. அழகர்சாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 60,23,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு,** கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-10 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

### 5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

**227.** Notification issued with G.O. Rt. No. 75, Revenue, dated the 21st January 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by Parry's Employees' Union on 26th and 27th January 1974 at Balu Touring Talkies, Ranipet, to raise

funds for the Employees' Union. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

228. Notification issued with G.O. Ms. No. 4189, Revenue, dated the 30th December 1971, and Memo. No. 9809/CTI (1)/72-2, Revenue, dated the 7th April 1972, in regard to setting up of check-post at Thavittapalayam—Karur taluk of Tiruchirappalli District. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

229. Notification issued with G.O. Ms. No. 7, Excise and Prohibition, dated the 9th January 1974, in regard to certain amendments to the Tamil Nadu Spirituous Essences Rules, 1972. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

### *B. Reports, Notification and Other Papers.*

* 164. Review of the Progress made in Co-operative Development Schemes, 1973-74 (English and Tamil).

* 165. Speech by Hon. Thiru Mannai. P. Narayanasamy, Minister for Food and Co-operative, on Demand No. 23—Co-operation (English and Tamil).

* 166. Note on Tamil Nadu Khadi and Village Industries Board (English and Tamil).

* 167. Policy Note on Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (English and Tamil).

* 168. Statement in regard to decision taken on recommendation of Administrative Reforms Commission on Panchayat Development Administration (English and Tamil).

† 169. Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations of the Committee contained in its earlier reports.

170. Sixth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1971 to 31st March 1972.

* Despatched to Members on 2nd April 1974.

† Laid on the table of the House on 3rd April 1974.



## இணைப்பு 1.

(21-ம் பக்கத்தில் 757-ஆம் எண்ணுள்ள வெளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

**(அ) மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு 1973-ஆம் ஆண்டு** ஜனவரித் திங்கள் இறுதியில் கூடியது.

(இ) இக்குழுவின் முக்கியமான பரிவுரைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

**தொழில் நிறுவனங்களில் இருக்கவேண்டிய நிலையான பணியாளர்களின் எண்ணிக்கையை வரையறுப்பதற்கு வகை செய்யச் சட்டம் கொண்டு வருதல்:**

தொழில் நிறுவனங்களில் நிலையான பணியாளர்களின் எண்ணிக்கையை வரையறுக்க ஒரு சட்டம் இயற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

**சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் (வேலைக்கமர்த்துவதற்கான குறைந்த அளவு வயதை மாற்றியமைத்தல்).**

சாதாரண வேலைகளில் சேருவதற்கான குறைந்த அளவு வயதை 16 ஆண்டுகளாகவும் அபாயகரமான வேலைகளில் சேருவதற்கான குறைந்த அளவு வயதை 18 ஆண்டுகளாகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

வேலைநிறுத்தங்கள் குறித்துத் தொழிலாளர்களும் அவர்களது தொழிற் சங்கங்களும் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை விதிக் கோவையை வகுத்தல் :

**வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகளின்போது தொழிலாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை விதிகள் குறித்து ஆய்வு செய்ய தொழிலாளர் நலச் சிறப்புத் துணை ஆணையாளரை தலைவராகவும், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் ஐவர், தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் ஐவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றை அமைப்பதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**திறமையாக மேற்பார்வையிடுவதிலும் குறைகளை நீக்குவதிலும் மலைத் தோட்ட இன்ஸ்பெக்டர்களுக்கு உதவி செய்ய தொழிலாளர்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்துதல்.**

மலைத்தோட்டங்கள் பார்வையிடப்படுவதற்கு முன்னர் அல்லது பார்வையிட்ட பின்னர், சம்பந்தப்பட்ட மலைத்தோட்டப் பணியாளர்கள் மலைத்தோட்ட இன்ஸ்பெக்டரைச் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்றும் இதனால் அவர்களது குறைகள் பற்றி ஆய்வு செய்து ஆவன செய்ய முடியும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் முன்னிலையில் குறைகளை முறையிடுவதற்குத் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு விடுப்பு அளிப்பது.**

**இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

(a) The State Labour Advisory Board met during the end of January, 1973.

(b) The details of the important recommendations of the Board are as follows :—

Legislation to provide for fixation of number of permanent workers in industrial establishments;

It was decided to enact a legislation to fix the permanent strength of workers in industrial establishments.

Employment of Children (Revision of minimum age for employment).

It was decided to raise the minimum age for employment to 16 years for ordinary occupations and to 18 years for hazardous occupations.

To formulate a Code of Conduct to be observed by workmen and their unions in respect of Strikes.

It was agreed to constitute a Committee to go into the question of the code of conduct for parties during strikes and Lockouts with the Special Deputy Commissioner of Labour as Chairman and with 5 employers' representatives and 5 employees' representatives as Members.

setting up of a committee consisting of employees' representatives to assist the inspectors of plantations in effective inspection and redressal of grievances.

It was decided to give an opportunity to representatives of the workmen in the Works Committees of the plantation concerned to meet the Inspector of Plantation either before or after making an inspection, so as to ensure that their grievances are/have been looked into.

Grant of leave to Workers' Representatives Who Represent Cases Before the Officials of the Labour Department.

This was accepted.



இணைப்பு

[182 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## கோரிக்கை எண் 12.

## தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அற நிலையச் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே !

ஆர்த்தொலிக்கும் அலைகடல் தொடங்கி, முகில் போர்த்திருக்கும் மலைமுகடு வரை விண்ணூர்ந்த கோபுரங்கள் எண்ணிலாதன என்ற பெருமையோடு அறப் பயிர் வளர்க்கும் ஆயிரமாயிரம் நிறுவனங்களைக் கொண்ட தமிழக இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் கொள்கைக் குறிப்பினை இப் பேரவையின் முன்வைத்து, இன்றுவரை முடித்த பணிகளை நினைவு கூர்ந்து, நாளை முதல் தொடங்க இருக்கும் பணிகளுக்கு அனைவரின் ஆதரவினைக் கோருவதிலே மகிழ்ச்சி யடைகிறேன்.

தமிழக இந்து சமய அற நிலையத் துறையின்கீழ் தற்போது 157 திருமடங்களும், 832 குறிப்பான அறக் கட்டளைகளும், 14,079 திருக்கோயில்களும் ஆக 15,068 அற நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வறநிலையங்களின் ஆண்டு வருவாய் ரூபாய் 7·86 கோடி என மதிப்பிடப்படுகிறது. தமிழகத் திருக்கோயில்களுக்கு உரிமையான நிலங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் பணியின் காரணமாக இவ்வாண்டு 6,541 திருக்கோயில்கள் இத் துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டன. இதில் 2,041 வரி விதிக்கக்கூடிய திருக்கோயில்களும், 4,500 சிறு அற நிலையங்களும் அடங்கும். இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் 26,000 புதிய திருக்கோயில்களை அற நிலையத் துறையின் ஆளுகைக்குள் கொண்டு வருவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதற்கு உரிய வகையில் தேவைப் படும் புதிய ஆய்வர்களையும், மற்ற உதவியாளர்களையும் பணியில் அமர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவர்களின் பணியின் காரணமாக

இவ்வாண்டு இறுதியில் திருக்கோயில்களின் வருவாய் இன்னும் 2 கோடி ரூபாய் அளவுக்கேனும் உயரும் நல் வாய்ப்புள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**துறையின் வளர்ச்சியும், தொடர் பணிகளும்:**

திருக்கோயில்கள் என்பவை வெறும் வழிபடும் இடங்களாக மட்டும் அமையாமல், கலை வளர்க்கும் நிலையங்களாய், பிணியகற்றும் மனைகளாய், அறியாமை இருள் நீக்கி ஒளி வழங்கும் இல்லங்களாய்த் திகழ்ந்து சமுதாயப் பணியாற்றும் நற் கூடங்களாய் அமையவே உருவாயின என்னும் உண்மையின் அடிப்படையில் தமிழகத்துத் திருக்கோயில்கள் இத் துறையின் மூலம் ஆற்றிவரும் சிறப்புமிக்க பணிகள் பலவற்றுள் சில வற்றினை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்—

(1) *1967-ல் அற நிலையத் துறையின் ஆளுகைக்குட் பட்ட அற நிலையங்களின் எண்ணிக்கை 9,600 என்ற நிலை மாறி, 1974-ல் 15,068 ஆக உயர்வு.

(2) *1967-ல் ஆண்டு வருவாய் ரூ. 3,98,52,754-லிருந்து 1974-ல் ரூ. 7,86,00,000 ஆக உயர்வு.

(3) *1967-ல் தொடங்கி 1973 இறுதி வரை ரூ. 12,44,00,000 செலவில் 3,095 திருக்கோயில்களில் திருப்பணி.

(4) *1967-ல் திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசு மானியம் ரூ. 3 இலட்சம் என்று தொடங்கி தற் போது 1974-75-க்கு ரூ. 15 இலட்சமாக உயர்வு.

(5) *தமிழ்ப் பெருமக்களின் ஒன்றுபட்ட வேண்டு கோளை ஏற்றுத் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத் திலும் தமிழ் வழிபாட்டு முறை விரிவு படுத்தப்பட்டது. சிலரின் எதிர்ப்புக் குரலும் இன்று நீங்கி அனைத்து கோயில்களிலும் தமிழ் வழிபாட்டு முறை நடைமுறை யில் உள்ளது.



(6) *சாதி மத பேதமற்ற முறையில் தகுதி அடிப் படையில் அருச்சகர் நியமன முறையமைய அரசியல் சட்டத் திருத்த முயற்சி.

(7) *சட்டபூர்வமான முறையில் தாழ்த்தப்பட்டோ ருக்கு அறங்காவலர் குழுவில் கட்டாயமாக இடம் ஒதுக்கீடு.

(8) *பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி உதவி—உயர்ந்தவராயினும் தாழ்ந்தவராயினும் வலியோராயி னும் எளியோராயினும் பணக்காரரெனினும் ஏழைய ரெனினும் ஆண்டவன் முன் அனைவரும் சமம். ஆகவே சமமாகவே நடத்தப்பட வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று "மிக முக்கியமானவர் களுக்கு" கோயில் "பரிவட்ட" மரியாதை தேவை யில்லை என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை ஏற்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(9) *கண்ணொளி இழந்தோருக்குக் கண்ணொளி வழங்க நிதி உதவி.

(10) *அண்மையில் தீயினால் பாதிக்கப்பட்டோ ருக்கு உதவி.

(11) *செவிடர் ஊமையர்க்கான பள்ளிகள் இரண்டு.

(12) *அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க அன்பு இல்லங்கள்.

(13) *சிறுவர் காப்பகங்கள் ஐந்து.

(14) *முதியோர் இல்லங்கள் மூன்று.

(15) *ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டம்.

(16) *ஏழை எளியோர்க்கான இலவசத் திரு மணங்கள்.

(17) *ஏழை எளியோருக்கு உதவிடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபங்கள் 73.

(18) *பணி தொடங்கப்பட்டு விரைவில் முழுமையடைய இருக்கும் திருமண மண்டபங்கள் 134.

(19) *அறிவு வளர்க்க அற நிலையங்களைச் சார்ந்த நூலகங்கள் 204.

(20) *சித்த வைத்திய மருத்துவ மனைகள் 23 ஆங்கில முறை மருத்துவ மனை ஒன்று.

(21) *திருக்கோயில்கள் மூலம் பராமரிக்கப்படும் கலைக்கூடங்கள் ஐந்து.

(22) *திருக்கோயில் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு.

(23) *ரூபாய் 3·5 இலட்சம் செலவில் திருச்செந்தூரில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம்.

(24) *இந்து சமய பண்பாட்டுக் கல்லூரி ஒன்று.

(25) *கீழ்த்திசை மொழிக் கல்லூரி ஒன்று.

(26) *கலைக் கல்லூரிகள் நான்கு.

(27) *மகளிர் கலைக் கல்லூரிகள் நான்கு.

(28) *உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகள் பதினான்கு.

(29) *நாதஸ்வர, ஓதுவமையர்க்கான பள்ளிகள் இரண்டு.

(30) *வழிபாட்டுப் பயணிகளுக்குப் பல்வேறு தலங்களில் தங்கும் விடுதிகள்.

(31) தங்கத்தில் தேர்கள் இரண்டு.



(32) *நியாயமான வருமானத்தை அற நிலையங்கள் பெறும் வகையில், தமிழ்நாடு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அற நிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் அனைத்திற்கும் விதிவிலக்களித்துள்ளது.

இவைகளன்னியில் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட வேண்டிய பணிகள் குறித்த குறிப்பினை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

சமயப் பெருமை மிக்க திருக்கோயில்களாக மதிக்கப்பட்டு பெருமையோடு எண்ணப்படும் கீழ்க்காணும் எட்டு திருக்கோயில்களில் கடந்த ஆண்டில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது.

1. அருட்திரு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

2. அருட்திரு பாடலீசுவரர் திருக்கோயில், திருப்பாப்புலியூர்.

3. அருட்திரு பிரளயகாலேசுவரர் திருக்கோயில், பெண்ணாடம்.

4. அருட்திரு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், பவானி.

5. அருட்திரு மந்தாரகிரி வேலாயுதசுவாமி திருக்கோயில், தென்சேரிமலை.

6. அருட்திரு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோவை.

7. அருட் திரு வள்ளீசுவரர் திருக்கோயில், மயிலை, சென்னை.

8. அருட்திரு கோமளீசுவரர் திருக்கோயில், சென்னை.

குறிப்பிடத்தக்க வகையில் பெருந்தொகைச் செலவில் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வரும் திருப்

பணிகள் சிலவற்றை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்—

1. அருட்திரு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

2. அருட்திரு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசுவரம்.

3. அருட்திரு ஆத்மநாதசுவாமி திருக்கோயில், ஆவுடையார்கோயில்.

4. அருட்திரு வேதபுரீசுவரர் திருக்கோயில், திருக்கழுக்குன்றம்.

5. அருட்திரு பூவராகசுவாமி திருக்கோயில், திருமுட்டம்.

6. அருட்திரு தியாகராசசுவாமி திருக்கோயில், திருவாரூர்.

7. அருட்திரு மாசிலா ஈசர் திருக்கோயில், தரங்கை.

8. அருட்திரு மாசிலாமணி ஈசர் திருக்கோயில், வடதிருமுல்லைவாயில்.

9. அருட்திரு கோணியம்மன் திருக்கோயில், கோவை.

10. அருட்திரு சங்கமேசுவரர் திருக்கோயில், கோட்டை, கோவை.

11. அருட்திரு கூடலழகர் திருக்கோயில், மதுரை.

12. அருட்திரு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில் அவிநாசி.

13. அருட்திரு வடபத்ரசாமி திருக்கோயில், திருவில்லிபுத்தூர்.

14. சேக்கிழார் பெருமை சேர்த்த அருட்திரு நாகேசுவரசுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம்.

15. நந்தன் புகழ் சேர்த்த அருட்திரு சிவலோகநாதசுவாமி திருக்கோயில், திருப்புங்கூர்.



(16) கூடல்மாநகர் அமைந்த அருட்திரு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(17) அருட்திரு கரும்புலீசுவரர் திருக்கோயில் இராசகோபுரத் திருப்பணி, குடியாத்தம்.

(18) அருட்திரு அருணாசலீசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

இவைகளன்னியில் இவ்வாண்டு சிறியனவும் பெரியனவுமாகிய திருக்கோயில்கள் பல நூற்றுக் கணக்கானவை திருப்பணி வேலைகளை மேற்கொண்டு நிறைவுறும் தருவாயில் இருக்கின்றன. வரும் ஆண்டில் திருக்கோயில்களின் நிதி உதவியுடனும், அரசு நிதி உதவியுடனும் ரூ. 4 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டுத் தொகையில் 1,500 திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு திருக்கோயில்கள் செம்மையுடன் காப்பாற்றப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

ஆண்டுதோறும் ரூ. 20,000-க்கும் அதிகமான வருவாயைபெற்று, அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளரின் நேரடி நிருவாகத்தின்கீழ் செயல்படும் சமய நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 377 என்ற எண்ணிக்கையிலிருந்து இவ்வாண்டு 428 ஆக உயர்ந்துள்ளது. சமய நிறுவனங்களின் வருவாய் பெருகி வருவதற்கு இது ஓர் சான்றாகும். இவ்வாறு பெருகி வரும் நிதிவாயில்களின் உதவியோடு வழிபடும் மக்களுக்கும், சமுதாயத்தின் கீழ்தட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் உதவும் வகையில், இனிவரும் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் பணிகள குறித்த சிறு குறிப்பினை இங்கு வழங்கிட விரும்புகிறேன்—

(1) பழனி நகரில் 108 அறைகள் கொண்ட ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் புதிய தங்கும் விடுதி.

(2) திருத்தணி நகரில் 100 அறைகள் கொண்ட புதிய தங்கும் விடுதி.

(3) பழனி நகரில் சுமார் 10 இலட்சம் மதிப்பீட்டில் ஆங்கில முறை மருத்துவ மனையின் விரிவாக்கம்.

(4) பழனியைச் சுற்றியுள்ள சிற்றூர் வாழ் பொது மக்களுக்கு உதவிடும் வகையில் " நடமாடும் மருத்துவ மனை ".

(5) திருச்செந்தூரில் சுமார் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண் மருத்துவப் பிரிவும், தாய்சேய் நலப் பிரிவும் கொண்ட பொது மருத்துவ மனை.

(6) நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் சார்பில் புதிய சித்த வைத்திய மருத்துவ மனைகள்.

(7) ஆண்டு வருவாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அனைத்துத் திருக்கோயில்களின் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்கும் திட்டம்.

(8) திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளி.

இவைகளோடு திருத்தணி, சமயபுரம், திருவேற்காடு முதலிய பெரிய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து கண் மருத்துவ மனைகள் தொடங்கவும் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல் பழனியில் மகளிர்க்கான ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றினைத் தொடங்கவும், கோவை மாவட்டம், பண்ணூரி அருட்திரு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் துவங்க திட்டமிடப்பட்டு அது ஆய்வில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்திரு தாயுமானசுவாமி திருக்கோயில் ; செங்கை மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருள்திரு வேதபுரீசுவரர் திருக்கோயில் ; வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் அருள்திரு இலட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில் ; சேலம் மாவட்டம், திருச்செங்கோடு அருள்திரு



அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் ; கோவை, மருதமலை அருள்திரு முருகன் கோயில் ஆகிய மலைக்கோயில் களுக்கு மின்விசையேற்றப் பொறி வசதி அளிக்க இத் துறை கருதி, விரைவிலேயே இப்பொறிகளை உள்நாட்டிலேயே தயாரித்து அமைக்க அனைத்து முயற்சி களையும் மேற்கொள்ள இருக்கிறது.

அடுத்து இவ்வாண்டு திருப்பணிக்காக வழங்கப்படும் ரூபாய் 15 இலட்சத்தில், கீழ்க்காணும் ஐந்து திருக் கோயில்களுக்கும் ஒரு இலட்சம் என்ற வீதத்தில் அளிக் கப்படவிருக்கிறது:—

(1) அருள்திரு தியாகராசசுவாமி திருக்கோயில், திருவாரூர்.

(2) அருள்திரு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேசுவரம்.

(3) அருள்திரு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

(4) அருள்திரு ரங்கநாதசுவாமி திருக்கோயில், திருவரங்கம்.

(5) அருள்திரு சுவாமி நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத் திருக்கோயில்களின் திருப்பணிகள் விரைந்து முடிவதற்கான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு திருப்பணிகளைத் தொடங்கி பழம்பெரும் திருக்கோயில்களைக் கண்ணே போல் காத்தல் மட்டு மின்றி, உபரி நிதியிலிருந்து பல்வேறு சமுதாயப் பணிகளை மேற்கொள்ளல் மட்டுமின்றி இத் துறை தனது கட்டுப்பாட்டிற்குள் இதுவரை சேராத திருக்கோயில் களைக் கண்டறிந்து அவைகளைக் கட்டுப்பாட்டுக்குள்

கொண்டுவரவும், திருக்கோயில்களின் நில உடைமைகள் உண்மையிலேயே திருக்கோயில்களுக்கு உரியனவாகி அவற்றின் பலன் திருக்கோயில்களேயே அடையவுமான வகையில் பல சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இதுபற்றிய விவரங்களைக் கீழே கொடுக்க விரும்புகிறேன்:—

வருவாய்த் துறையிலிருந்து நியமிக்கப்பட்ட தனிப் பணியாளர்கள் மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய ஆய்வு கடந்த ஆண்டு தொடர்ந்து நடத்தப்பட்டது. வடாற்காடு, மதுரை, முகவை, திருச்சி ஆகிய மாவட்டங்களைப் பொறுத்தவரையில் இப் பணியின் பெரும்பகுதி முடிவுற்றுவிட்டது. மற்ற மாவட்டங்களில் உள்ள எஞ்சிய பணி குறைந்த அளவுப் பணியாளர்களைக் கொண்டு, 1—3—1974 முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணி முழுவதும் இவ்வாண்டிலேயே முடிவுறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தொடக்கநிலை ஆய்வின் பலனாக 41,306 புதிய நிறுவனங்கள், 2,01,040 ஏக்கர் நிலங்களைக் கொண்டனவாக இருப்பதைச் சிறப்புப் பணியாளர்கள் கண்டறிந்து தெரிவித்தனர். இதன் அடிப்படையில் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கீழ்க் காணும் விவரம் பயன்தரத் தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்.



| | 1972–73 முடிய. | 1973–74 முடிய. | கூடுதல். |
|---|---|---|---|
| 1. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை. | 40,247 | 1,059 | 41,306 |
| 2. மேற்காணும் நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலச் சொத்தின் பரப்பளவு. | 1,98,920·53 (ஏக்கர்) | 2,422·61 (ஏக்கர்) | 2,01,343·14 (ஏக்கர்) |
| 3. அறநிலையத் துறையின் ஆளுகைக்கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட முதலறிக்கை எண்ணிக்கை. | 6,000 | 8,674 | 14,674 |
| 4. மேற்காணும் நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு. | 44,664·08 (ஏக்கர்) | 33,700·75 (ஏக்கர்) | 78,364·83 (ஏக்கர்) |
| 5. இத் துறையின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை. | 4,373 | 6,541 | 10,914 |

| | | 1972–73 முடிய. | 1973–74 முடிய. | ... முதல், |
|---|---|---|---|---|
| 1971–72 முடிய | .. | 2,211 | | |
| 1972–73 முடிய | .. | 2,162 | | |
| மொத்தம் | .. | 4,373 | | |
| *. இத்துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பெற்ற திருவனங்களின் நிலத்தின் பரப்பு. | | 16,000·50 (ஏக்கர்) (உத்தேசமாக) | 28,218·00 | 44,218·50 |



மேலும் இத்தனிப் பணியாளர்கள், அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களாயிருந்தும் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள 30,227 நேர்வுகளுக்குரிய 38,062 ஏக்கர் பரப்புள்ள நிலத்தையும் கண்டறிந்து தெரிவித்தனர். இவைகளில் 12,279 நேர்வுகளுக்குரிய 13,832 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை திருக்கோயில்களின் உண்மையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியவற்றையும் திருக்கோயில்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் முழுமையாகத் திருக்கோயில்களின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்படின், இதன் மூலம் ஆண்டொன்றுக்குத் திருக்கோயில்களுக்குக் கூடுதலாக ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

விலை மதித்தற்கரிய செப்பு, ஐம்பொன் மற்றும் கற்படிவங்கள் தமிழகத்தின் திருக்கோயில்கள் அனைத்தும் காணக்கிடக்கின்றன. இவைகளைக் கண்ணேபோல் காக்கவும், இவைகளுக்கு எவ்வகையாலும் ஊறு நேரா வண்ணம் தடுக்கவும், இவைகளைக் கடத்திடா வண்ணம் பாதுகாத்திடவும் அனைத்து முயற்சிகளும் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டன. எனினும் ஒரு சில இடங்களில் கடவுளர் சிலைத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நேரங்களில் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்புமுயற்சிகள் மிகவும் சீரான வகையில் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாண்டு தொடக்கத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய பொங்கல் சுற்றுலா விழாப் பொருட்காட்சியில் இத் துறை பங்கு கொண்டு, திருக்கோயில் வடிவில் அரங்கு ஒன்றை அமைத்து அதில் ...ரும் நூற்றாண்டு வரையிலான அரிய கலைப் பொருள்கள், வெண்கலப் படைப்புகள், தந்தப் பதுமங்கள் முதலியவற்றை அவற்றின் காலக் குறிப்போடு வைத்தது. ...ங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீர

50,000 பணியாளர்கள் பலனடைந்துள்ளனர். 1973-74 ஆம் ஆண்டில் திருக்கோயில்கள் இவ்வகையில் கூடுதலாக சுமார் 67·60 இலட்சம் ரூபாயை செலவிட்டுள்ளன.

இறுதியாக ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய் வருவாய் உடைய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மட்டுமே தற்போதைய விதிகளின்கீழ் வருங்கால வைப்பு நிதிச் சலுகை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. தற்போது ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டும் ஆண்டுவருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கும் இவ்வருங்கால வைப்பு நிதிச் சலுகை அளிக்க இப்போது முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமய நெறிமுறைகளில் எவ்வகையிலும் தலையிடாமல் தமிழகத்தின் கலைப்பெட்டகங்களாய் அமைந்துள்ள திருக்கோயில்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு அவைகளைப் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பில் முனைப்போடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து இப்பாதையிலேயே நடைபோடும் என்று கூறி, அதற்கு அனைவரின் ஒருமித்த ஆதரவு வேண்டும் வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை 22-ஆம் விதியின் கீழ் முதல் ஒரு மணி நேரம் " வினாக்கள்-விடைகள் " என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள " அரசினர் சட்ட முன்வடிவு " என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும் "

என்று நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய பட்டியலில் உள்ள வினாக்கள் 8—4—1974 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

### 2. அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

50,000 பணியாளர்கள் பலனடைந்துள்ளனர். 1973-74 ஆம் ஆண்டில் திருக்கோயில்கள் இவ்வகையில் கூடுதலாக சுமார் 67·60 இலட்சம் ரூபாயை செலவிட்டுள்ளன.

இறுதியாக ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய் வருவாய் உடைய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மட்டுமே தற்போதைய விதிகளின்கீழ் வருங்கால வைப்பு நிதிச் சலுகை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. தற்போது ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டும் ஆண்டுவருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கும் இவ்வருங்கால வைப்பு நிதிச் சலுகை அளிக்க இப்போது முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமய நெறிமுறைகளில் எவ்வகையிலும் தலையிடாமல் தமிழகத்தின் கலைப்பெட்டகங்களாய் அமைந்துள்ள திருக்கோயில்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு அவைகளைப் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பில் முனைப்போடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து இப்பாதையிலேயே நடைபோடும் என்று கூறி, அதற்கு அனைவரின் ஒருமித்த ஆதரவு வேண்டும் வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. அரசினர் தீர்மானம்

### வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை 22-ஆம் விதியின் கீழ் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்–விடைகள்" என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள "அரசினர் சட்ட முன்வடிவு" என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும்"

என்று நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய பட்டியலில் உள்ள வினாக்கள் 8—4—1974 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

## 2. அரசினர் சட்ட முன்வடிவு.

### தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய–அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய–அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (3) 1974–75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,39,97,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் முறைகேடுகளைத் தடுக்க தனிக் கண்காணிப்பு தேவை என்பதை வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,97,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்கு நியமன முறையைத் தவிர்த்து கூட்டுறவு அமைப்பு உறுப்பினர்களையே தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,97,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.



திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகள் அல்லாத மற்ற தொழிலாளர்களுக்கும் கடன் வழங்க வேண்டும் என்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,97,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன் வசூல் முறை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,97,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவைமுன் கொண்டுவரப்பட்டிருக்கும் "கூட்டுறவு" மானியத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேச இருக்கிறார்கள். மற்ற நாட்களைப் போல் அல்லாமல், இன்று இந்த விவாதத்திற்கு நேரமும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல கருத்துக்களையெல்லாம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரை, கூட்டுறவுத் துறை எந்த அளவுக்கு அதனுடைய பணிகளை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக்குறை இல்லாமல் சிறப்பாக இருக்கிறதென்று சொன்னால், அதற்குக் காரணம் வேளாண்மையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதும், அந்த வேளாண்மையில் அபிவிருத்தி ஏற்படுவதற்குக் கூட்டுறவுத் துறையின் மூலம் ஏழை எளிய விவசாய மக்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில், இரண்டு மத்திய வங்கிகளின்
மூலமாக ஏழை எளிய விவசாய மக்களுக்கு நல்ல முறையில் ஊக்கம்
தந்து, இன்றைக்கு விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்
பட்டு, உணவு தானிய அபிவிருத்தி நல்லமுறையில் செய்யப்பட்டிருக்
கிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். ஏழை எளிய மக்களுக்கு
குறைந்த வட்டியில் கடன் கொடுத்து ஊக்கப்படுத்தியிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், உர விநியோகம், சீனி போன்ற மக்களுக்கு
அத்தியாவசியமான பொருள்கள் விநியோகம் ஆகியவற்றைக்
கூட்டுறவுத் துறை மேற்கொள்வது என்று முடிவு எடுத்து, அந்தப்
பொறுப்பினைப் பெரிய அளவில் கூட்டுறவுத் துறையில் இருப்பவர்
களெல்லாம் ஏற்றுக்கொண்டு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அப்
படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து, தனிப்பட்ட வியாபாரிகளிட
மிருந்து மக்களைக் காப்பாற்றுகின்ற ஒரு நல்ல பொறுப்பை எடுத்துக்
கொண்டிருக்கும் கூட்டுறவுத் துறைக்கு நல்ல ஊக்கம் தரவேண்டு
மென்றும் கூட்டுறவுக் கொள்கை மேலும் சிறப்பாக நிறைவேறுவதற்
கான ஆலோசனைகளை வழங்கவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்
பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கொள்கை விளக்கக் குறிப்புகளும் @ மற்றவைகளும்
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை
இந்த அவையில் வைத்து என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்
கொள்கின்றேன்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே,
இன்றையதினம் இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிற கூட்டுறவு
மானியக் கோரிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கம் அரசியலுக்கு அப்பாற்பட்டு நடக்கவேண்டிய
ஒரு புனிதமான இயக்கம். இந்த இயக்கம் "எல்லோரும் ஒவ்வொரு
வருக்காகவும் பாடுபடவேண்டும், ஒவ்வொருவரும் எல்லோருக்காக
வும் பாடுபடவேண்டும்" என்ற உயர்ந்த லட்சியத்தைக் கொண்ட
தாகும். இதை ஆங்கிலத்தில் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால்
Each for all: all for each.
என்று சொல்லத்தக்க அளவுக்கு இந்த இயக்கம் நல்ல முறையில் நடை
பெறவேண்டிய ஒரு இயக்கமாகும்.

@ -ம் பக்கங்களில் மாண்புமிகு உணவு—கூட்டுறவு அமைச்சர்
அவர்களின் உரை இணைப்பாக I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 5] [திரு. துரை கோவிந்தராசன்]

இந்த இயக்கத்தை இரண்டு பிரிவுகளாக நாம் எடுத்துக்கொண்டு
பார்க்கும்போது ஒன்று, கூட்டுறவுத் துறை; மற்றொன்று கூட்டுறவு நிறு
வனம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது, கூட்டுறவுத் துறையி
னுடையதாகும். ஆனால், கூட்டுறவுத் துறையில் பல்வேறு அலுவல்
களில் ஈடுபட்டிருக்கிறவர்கள், சில நேரங்களில் அந்தக் கூட்டுறவு
நிறுவனங்களின்மேல் எடுக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகளை
எடுக்க முடியாமல் கை கட்டப்பட்டது போல், ஏதோ இங்கே
யிருக்கும் அதிகார துஷ்பிரயோகத்தின் காரணத்தால் பல்வேறு
நிலைமைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.
நிறுவனங்களைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு கூட்டுறவுத் துறையி

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கூட்டுறவுத் துறையை
மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப்
பின்னர் பல்வேறு ஊழல்கள் அதிலே நடந்திருக்கின்றன. குறிப்பாக,
அவர் வந்ததற்குப் பின்னர், ஊரிலே இருக்கின்ற எத்தனை பேராக
இருந்தாலும், அவ்வளவு பேர்களும் தலைவர், தலைவர், தலைவர் என்று
அழைக்கத்தக்க அளவுக்குப் பதவி உயர்த்தி அப்படிப்பட்ட
நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதைப் போல்,
"எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்று சொல்லத்தக்க அளவுக்கு
இருந்த ஒன்று மாறி, "எங்கும் ஊழல்; எதிலும் ஊழல்" என்று
சொல்லத் தக்க அளவுக்கு இன்றைக்கு தமிழகத்தில் கூட்டுறவில்
மட்டும் அந்த ஊழல்கள் மலிந்திருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

குறிப்பாக, கூட்டுறவுத் துறை ஒரு சிலரிடம் சிக்கிச் சீரழிந்து
கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற—இந்த
மன்றத்தில் முதலமைச்சராக இருக்கிற—மாண்புமிகு டாக்டர் கலைஞர்
அவர்களுடைய ஊரான திருவாரூரில் டி.ஸி.எம்.எப். என்ற ஒரு
நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தினுடைய தலைவராக
திரு. தியாகராஜ முதலியார் என்கிற சின்னஞ்சிறிய பன்னீராயிரம்
ஏக்கருக்குச் சொந்தக்காரரர் ஒருவர் அதன் தலைமையை ஏற்று நடத்தி
வந்திருக்கிறார்.

அந்தப் பன்னீராயிரம் ஏக்கர் சொந்தக்காரரர் தியாகராஜ
முதலியார் அந்த நிறுவனத்தை நடத்திவந்து, அங்கு ஏறத்தாழ பத்து
ரூபாய் அல்ல, நூறு ரூபாய் அல்ல, லட்ச ரூபாய் அல்ல, கோடிக்
கணக்கான ரூபாய்களை அந்த நிறுவனத்தின் மூலம் ஊழல் செய்து
விட்டு, அதற்குப்பின்னர் அந்த இடத்தில் அதைக் கண்காணிப்பதற்கு

[திரு. துரை கோவிந்தராசன்] [1974 ஏப்ரல் 5

மாநில அளவில் ஒருவரை—தாஸ் என்பவரைப் போட்டு, அவர் மூன்று ஆண்டு காலமாக அந்த இடத்தில் இருந்து, தற்காலிகமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டு, இதுவரை அங்கே என்ன நடைபெறு கிறது என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது. இது முதலமைச்சர் சொந்த ஊராக இருப்பதனல் இப்படி நடை பெற்றிருக்கிறதா என்று கூட எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இன்னும் சொல்லப்போனல், குறிப்பாக, என்னைப் பொறுத்த வரையிலும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடத்தவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இருக்கிறதா என்று ஐயப்பட வேண்டிய அளவுக்கு நிலைமைகள் எல்லாக் கூட்டுறவு நிறுவனங் களிலுமே ஊழல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக தஞ்சையில் இருக்கும் பால் வழங்கும் சங்கத்தில் ஏறத் தாழ 20 லட்ச ரூபாய் காணேம் என்று சொல்லத்தக்க அளவுக்கு நிலைமை இருக்கிறது.

அதற்கு அடுத்தாற்போல், தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கியில் மாணிக்கவாசகம் என்று ஒருவர் இருந்தார். அவர் இருக்கின்ற நேரத்தில் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் கையாடல் செய்துவிட்டதாக அவருக்குச் சம்பந்தமில்லாத ஒன்றைச் சொல்லி அவரை நீதிமன்றத்தின் முன்னல் நிறுத்தினர்கள். அது எப்படி நியாயமானது என்பதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை.

அரணிபட்டி என்ற இடத்தில் முந்திரிக்கொட்டை ஈட்டின்பேரில் இரண்டு லட்சத்து நான்காயிரம் ரூபாயைக் கடனகப் பெற்று அது கட்டப்படாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, வங்கியின் தலைவராக இருந்த மாணிக்கவாசகம் என்பவரை அவர் பெயரிலும் அவருடைய உறவினர்கள் பெயரிலும் திருச்சியிலேயிருக்கும் பேங்குகளில் பணம் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக மாணிக்கவாசகம் நீதி மன்றத்தின் முன்னல் நிறுத்தப்பட்டார். அந்த மாணிக்கவாசகம் அந்த மன்றத்தைவிட்டுப் போனபிறகு அப்பொழுது துணைத்தலைவராக இருந்து இப்பொழுது அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற நாடிய ராமய்யன் என்பவர் ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபாயை குருவிக் கரம்பை சொசைட்டியில் அவர் இருந்த நேரத்தில் கையாடல் செய்திருப்பதாகத் தெரிகிறது. மத்திய வங்கியின் தலைவராக



1974 ஏப்ரல் 5] [திரு. துரை கோவிந்தராசன்]

இருக்கும் ராமய்யனின் ஊருக்குப் பக்கத்தில் இருக்கிற அந்த வங்கியின் மேலாளர் அந்த ஊரிலேயிருக்கும் நாணயச் சங்கத்தில் நல்ல முறையில் நடக்காதவர்கள் என்று தெரிகிறது.

ஒரு லட்சத்து ஏழாயிரம் ரூபாயை, பட்டுவாடா செய்யும் நேரத்தில் செக் மூலமாக, குறிப்பாக கோயம்புத்தூர் பகுதியில் கொடுப்பதைப்போல் விவசாயிகளுக்கு செக்குகள் மூலமாகப் பணம் தர வேண்டுமென்று சொல்லியும் அந்த மத்திய வங்கியில் கேஷாகப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று பட்டுவாடா செய்ததில் 20,000 ரூபாய் பெற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. காரணமில்லாமல் மாணிக்கவாசகம் நிறுத்தப்பட்டதைப்போல் இதுவரையில் இப் பொழுது அந்த வங்கியின் அந்தப் பொறுப்பில் இருக்கின்ற நாடிய ராமய்யன் ஏன் நீதி மன்றத்தில் நிறுத்தப்படவில்லை, ஏன் கைது செய்யப்படவில்லை என்று தெரியவில்லை.

இப்படிப்பட்ட தவறுகளை, குறைபாடுகளைப் பார்க்கின்றபொழுது குறிப்பாக இந்த நிறுவனங்களின் தேர்தல்களை நடத்தும்பொழுது பல்வேறு முறைகேடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, என்னுடைய ஊரில் பக்கத்திலிருக்கும் என்னுடைய தொகுதியின் ஒரு இடத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளிக்கு அடிக்கல் நாட்டு வதற்காக இப்பொழுது கூட்டுறவுத் துறை அமைச்சராக இருப்பவர்கள் ஒருநாள் வந்தார்கள். அந்த நேரத்தில் வாண வேடிக்கைகளும், மேதாளங்களும் முழங்கின. அப்படி அந்த அடிக்கல் நாட்டுவிழா உயர்நிலைப்பள்ளியைத் துவக்குவதற்காக நடைபெற்றது. ஆனல் எனக்கு ஒன்றும் சொல்லவில்லை என்பதற்காக எனக்கு வருத்தமில்லை.

ஆனல் கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் வந்துவிட்டுப் போன தற்குப் பிறகு 160 யூரியா மூட்டைகளை அந்த விழாவை ஏற்பாடு செய்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர் உடனடியாக யூரியா மூட்டைகளை விற்று, மறுநாள் ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லி அந்த மூட்டைகள் பிடிக்கப்பட்டன. ஆனல் இதுவரையில் அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதை அந்தப் பகுதி யிலுள்ள மக்கள் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இப்படி யூரியா மூட்டைகள் விற்பது அமைச்சருக்குத் தெரிந்துதான் நடைபெறு கிறதோ என்று ஐயப்படும் நிலைமை அந்தப் பகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1974 ஏப்ரல் 5

ஆனால், வங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்கு ஒரு சில நன்மைகள் நடைபெறுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கின்ற அதே நேரத்தில், கும்பகோணம் கூட்டுறவு வங்கியில் இன்றைக்கிருக்கின்ற அலுவலாளர்களும், பயன்படுத்துகின்ற ஜீப் போன்றவைகளும் இன்றைக்கு எம்.எல்.சி.யாக இருக்கின்ற கோ. சி. மணி அவர்கள் வருகின்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாக்குகளைக் கேட்பதற்காகச் சுற்றி அலைந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட நிலைமைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக இருக்க வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது. அது தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தாலும் சரி அல்லது முன்னாள் கூட்டுறவு அமைச்சரது மாவட்டமாகிய திருநெல்வேலியில் இருக்கின்ற கூட்டுறவு மத்திய வங்கியாக இருந்தாலும் அவருடைய குடும்பத்திற்குச் சொந்தமாக்கப் பட்டிருக்கிறதே தவிர, ஏழை எளிய மக்களுக்கு அந்த வங்கிகள் நல்லமுறையில் பயன் அளிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்ததைப் போன்று கருநாக மனம் கொண்டவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக இருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டாகும். அந்த நிலைமைகளில் எத்தனையோ சங்கங்களுடைய பல வேறு நிலைமைகளைப்பற்றிக் குறித்துக் கொடுத்தாலும் அவைகளைப் பற்றி தகவல் இல்லை. தர்மபுரியில் நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தனி அதிகாரியாகப் போட்டு ஏழெட்டு லட்சம் ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. அதுபற்றி ஏதாவது நமக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. மொத்த விற்பனை பண்டகசாலை மூலம் கோயம்புத்தூரில் முனுசாமி என்பவர் தலைவராக இருந்து, சர்வாதிகாரப் போக்கிலே நடந்து, நிர்வாகக் குழுவைக் கூட்டாமல் வியாபாரம் நடத்தி இருக்கிறார்கள், ஊழியர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாவும் செய்யாமல் இருந்திருக்கிறார்கள்.

பரமக்குடியில் முகமது சாதிக் என்பவர் 30—6—1973ல் 30 மூட்டை சீனி கொடுத்ததை மக்களுக்குச் சரியாகக் கொடுக்கவில்லை. அதுபற்றி இதுவரை ஒன்றும் நடவடிக்கை இல்லை.



1974 ஏப்ரல் 5] [திரு. துரை கோவிந்தராசன்]

மதுராந்தகம் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவர் தலைவராக வந்து இன்றைக்கு முன்னாள் மாவட்டச் செயலாளரான மதிப்பிற்குரிய திரு. கே. டி. எஸ். மணி அவர்கள் மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் தலைவராக இருக்கிறார்கள்.

* * * *

திரு. கே. எ. வகாப்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இங்கே சர்க்கரை ஆலைத் தலைவரைப்பற்றியெல்லாம் பேசுகிறார்கள். அவர்கள் இந்த அவையில் இல்லாதது மட்டுமல்ல, ஆதாரபூர்வமாக இருந்தால் தங்களுடைய அனுமதியைப் பெற்று அந்த ரிக்கார்டுகளைக் காட்டிவிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களிடம் சொல்லியிருக்கிறார்களா? இந்த அவையிலே இல்லாத, பொறுப்பு வாய்ந்த சர்க்கரை ஆலைத் தலைவரைப்பற்றிக் குற்றஞ்சாட்டுவது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அமைச்சரவர்கள் சபையிலே இருக்கிறார்கள், அவர் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் கூடக் கேட்கவில்லை. அப்படியிருக்க நண்பருக்கு இவ்வளவு அக்கறை வந்திருப்பது ஏன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வகாப் அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அவர் என்ன சொல்லி முடிக்கிறார் என்பதற்குள் பாதி வார்த்தையை முடிப்பதற்குள் நீங்கள் எழுந்து நிற்கிறீர்களே. பொறுமை அவர்களுக்கும் இருப்பதைப் போல் நமக்கும் இருக்க வேண்டுமல்லவா?

திரு. எம். சுரேந்திரன்: நியாயம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதைச் சொல்வது பேரவைத் தலைவரின் பொறுப்பு. என்ன சொல்கிறார் என்று பார்ப்பதற்குள் பாதி வார்த்தையை முடிப்பதற்குள் நீங்கள் எழுந்து நிற்கின்றீர்களே.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1974 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அமைச்சர் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். எல்லாம் பேசி முடிந்தபிறகு, ரொம்பப் பிரச்னை இருக்கிறது என்று இருக்கிறேன். இருந்தாலும் பேசுவதில் நியாயம் இருக்கிறது. எல்லோரும் எழுந்து எல்லோருக்கும் கேட்கிறார்கள் என்றால் என்னைவிட அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே பிரச்னையில் நியாயம் இல்லாமல் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* * * *

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இப்பொழுது பேசுகின்ற பிரச்னை என்னுடைய கூட்டுறவுத் துறையில் இல்லை. அது இன்டஸ்ட்ரீஸ் இலாகாவில் இருக்கிறது. அதற்குப் பதில் சொல்ல வேண்டும். அவர் பேசுவது விளம்பரமாகிவிடும். ஆனால் அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. எனவே அந்தப் பிரச்னையைப் பேசுகிறார் என்றால் அதை அனுமதிக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்றத்தில் இருப்பவர்கள் மீதோ, வெளியிலே இருப்பவர்கள்மீதோ சொல்லும்பொழுது ஆதாரம் இருந்தால் அதைப் பேரவைத் தலைவரிடம் காட்டி அந்த ஆதாரத்திற்கு பேரவைத் தலைவர் ஒப்புதல் அளித்தபிறகு பேச வேண்டுமென்ற முறை இருக்கிறது. அவர் இந்த மன்றத்தில் இல்லாதவர். இல்லாதவரைப்பற்றிச் சொல்வது முறை அல்லை. [ * * * * * * ]

திரு. கே. டி. கே. தங்கமணி : சிறு கஷ்டம் இருக்கிறது. நமக்கு முன்னால் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளில் 1527-ல் " மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடைபெறும் முறை கேடுகள் குறித்து விவாதிக்க " என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் சொல்லவில்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலையைப்பற்றி, முறைகேடுகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டாமென்று சொல்லவில்லை.

* * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 5]

திரு. கே. எ. வகாப் : கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தொழில் துறையின் நிர்வாகத்தின்கீழ் வருகிறது. ஆகவே அதை அமைச்சர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் வருகிறது. ஆகவே அதை
அமைச்சர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் வருகிறது. ஆகவே அதை

திரு. கே. எ. வகாப் : கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தொழில்
அமைச்சர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் வருகிறது. ஆகவே அதை
இந்த வெட்டுப் பிரேரணையில் சேர்த்திருப்பது சரியான முறையா?
அது இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டீவ்ஸ்-ன் கீழ் வருகிறது.
ஆகவே இதை வெட்டுப் பிரேரணையில் சேர்த்திருப்பது முறையா
என்பது பற்றி தங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல கூட்டுறவுகள் இருக்கின்றன.
இது தொழில் சம்பந்தமான ஒரு கூட்டுறவு. ஆகவே இது தொழில்
துறையில் வந்திருக்கவேண்டும். ஆகவே அது எப்படி இதில் வந்திருக்
கிறது என்பதைப் பற்றி துறையில் விசாரித்துச் சொல்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : வெட்டுத் தீர்மானம் என்று வந்துவிட்ட
பிறகு அதைப் பற்றிப் பேசுவதில் என்ன தவறு இருக்கிறது? அதைப்
பற்றிப் பேசுவதற்குத்தடை இருக்கமுடியுமா? அதுவெட்டுத் தீர்மானத்தை
அனுமதித்த பிறகு அதைப்பற்றி [illegible] பேசக்கூடாது என்று
கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சட்டமன்றத் துறையில்
செய்த ஒரு தவறுதான். சட்டமன்றத் துறை செய்த ஒரு தவறுக்காக
அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்றால் எப்படி
முடியும்? (திரு. சோ. அழகர்சாமி அவர்கள் எழுந்து நின்றார்கள்.)
நான் உட்கார்ந்த பிறகு வேண்டுமானால் [illegible] ஆர் [illegible] எழுப்
புங்கள். நான் நின்றுகொண்டிருக்கும்போது [illegible] எழுந்து நிற்பது
என்றால்—நீண்ட நாட்களாக பாராளுமன்ற முறைகளைப்பற்றித்
தெரிந்தவர்களே இப்படிச் செய்வதென்றால் எப்படி? உறுப்பினர்
அவர்கள் குறிப்பிடுவது தொழில் துறை சம்பந்தமானது. அதற்கு
தொழில் துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் அளிக்கமுடியும்.
ஆகவே, அதைப்பற்றி இந்த மான்யத்தில் பேசுவது முறை அல்ல.

திரு. எம். சுரேந்திரன் : வெட்டுத் தீர்மானத்தை அனுமதித்த
பிறகு உறுப்பினர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால் இது அந்த
அமைச்சர் சம்பந்தப்பட்டது என்றுதான் கருதுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குத்தான் விளக்கம் சொல்
கிறேன். வெட்டுத் தீர்மானங்களை அனுமதிப்பது அமைச்சர்கள்
அல்ல. சட்டமன்றத் துறையில் ஒரு தவறு நடந்திருக்கிறது. இதில்

சேர்த்திருக்கக்கூடாது, சேர்த்திருக்கிறார்கள். அதற்காக, சட்ட மன்றத் துறை செய்த தவறுக்காக, அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. ஆகவே, அதைப்பற்றிப் பேசுவது முறையல்ல.

திரு. சோ. அழகர்சாமி : எத்தனையோ வகையான கூட்டுறவுகள் இருக்கின்றன. தொழில் கூட்டுறவு இருக்கிறது. கைத்தறிக் கூட்டுறவு இருக்கிறது. பால் கூட்டுறவு இருக்கிறது. இதை எல்லாம் சேர்த்துப் பேசவேண்டிவரும். இதில் வருவது ஒன்றைப் பற்றி மட்டும் பேசுவது என்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால் வழங்கு துறைக்கு ஒரு கூட்டுறவு இருக்கிறது. அதுபோல் தொழில் துறை கூட்டுறவு இருக்கிறது. ஆகவே அவைகளைப் பற்றி எல்லாம் இந்த மானியத்தில் விரிவாகப் பேசுவது என்பது முறையல்ல.

திரு. சோ. அழகர்சாமி : கூட்டுறவு என்று வரும்போது அவைகளைப்பற்றிப் பேசக் கூடாது என்று சொல்வது முறை அல்ல. கூட்டுறவு என்றால் எல்லாவற்றையும் பற்றித்தான் பேச வேண்டிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பால் வழங்கு துறை பற்றியதாக இருந்தால் அதைப்பற்றி நேற்றே பேசியிருக்கவேண்டும். சர்க்கரை ஆலைகள்பற்றி தொழில் துறை மானியத்தின்மீது பேசியிருக்க வேண்டும். கைத்தறிக் கூட்டுறவு பற்றி கைத்தறி மானியம் வந்த போது பேசியிருக்கவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : கூட்டுறவு என்பது பல தலைப்புக்களில் இருக்கின்றன. ஆகவே, இதில் வருவது பற்றி விரிவாகவும் மற்றவை பற்றி "டச்" செய்துவிட்டும் போகவேண்டிவரும். ஆகவே, அதைப் பற்றிச் சொல்லவே கூடாது என்றால் அது சரியாகாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி இன்டஸ்ட்ரிஸ் டிமான்டில் பேசியிருக்கவேண்டும். இப்போது உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றிப் பேசினால் அதற்குப் பதில் சொல்லித்தீரவேண்டும். அது என் துறையின்கீழ் வருவதல்ல.





[ * * * * ] எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாகச் செய்வதாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள நான் தயாராயிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய மானியக்கோரிக்கையின் மீதான விவாதம் முடிந்துவிட்டது. நிதி ஒதுக்க மசோதா வரும்போது வேண்டுமானால், அந்த நேரத்தில் ஒன்றிரண்டு சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். ஆகவே, இதில் அதைப் பற்றிப் பேசுவது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைகோவிந்தராசன் அவர்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டதால் அது அவைக்குறிப்பில் ஏறாது, பத்திரிகைகளிலும் வெளியிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : சிலவற்றை எடுத்துவிடுகிறீர்கள், அது தங்கள் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டீர்களே.

திரு. துரை கோவிந்தராசன் : கண் ஒளி வழங்கும் விழாவிற்காக ரூ. 50,000 வழங்கியிருக்கிறார்கள், சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்காக அந்தத் தலைவர் ரூ. 10,000 அந்த நிறுவனத்தில் இருந்து வழங்கியிருக்கிறார்கள். ஆக, கூட்டுறவு முறையில் நடைபெறும் இயக்கங்கள், நிறுவனங்கள் எல்லாம் இப்படி ஒரு சிலரைத் தலைவர்களாக வைத்துக்கொண்டு 50,000 ரூபாய், லட்சம் ரூபாய் என்று ஏழை விவசாயிகளின் பணம் சீரழிக்கப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அடுத்து, அரசாங்கத்தின் முறையற்ற கொள்கைகளினால் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவதில் டி.ஸி.டப்ளியூ.ஸி. போன்ற நிறுவனங்கள் சில ஒப்பந்தங்களின் அடிப்படையில் அவற்றின் தலைவர்களாக முதல் அமைச்சர் அவர்களைப் போன்றவர்களுக்கு வேண்டிய சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களை தலைவர்களாகக் கொண்டுள்ளது. அப்படிப்பட்டவர்களைத் தலைவர்களாகக் கொண்ட சில இடங்களில் சோம்பு, ஜீரகம்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. துரை கோவிந்தராசன்] [1974 ஏப்ரல் 5

தேங்காய், வெங்காயம் போன்றவைகளை வாங்கி அந்த நிறுவனத்தில் வைத்து விற்க வேண்டிய நேரத்தில் வாங்குவது ஒரு முறையில், விற்பது ஒரு முறையில் என்று லட்சக்கணக்கான ரூபாய் வியாபாரம் நடக்கும் பண்டகசாலைகளில் ஏறத்தாழ மாதம் ஒன்றுக்கு ரூ. 20,000, ரூ. 30,000 கமிஷன் என்ற பெயரால் பணம் பெறத்தக்க அளவிற்கு எங்கள் தஞ்சைப் பகுதியில்......

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எப்படி நீங்கள் இப்படிப் பேச அனுமதிக்கிறீர்கள்? குத்துமதிப்பாக ரூ. 20,000, ரூ. 30,000 என்று சொன்னால் எப்படி? அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அதை நிரூபித்து விட்டுப் பேசினால் நல்லது. ஆதாரம் இல்லாமல் பேசுவதை தயவுசெய்து அனுமதிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் விவரங்களை ஆதாரங்களோடுதான் பேசுகிறார்கள். ஏதாவது முறைகேடு இருந்தால் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொறுப்பேற்றுக்கொள்வது வேறு. ஒரு முறையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று அறிவித்திருக்கிறேன். குற்றம் சாட்டும்போது அந்தக் குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தை முதலில் பேரவைத் தலைவர் அவர்களிடம் எடுத்துக் காட்டி, அவர்கள் அனுமதி பெற்று குற்றஞ்சாட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அப்படி எடுத்துக்காட்டி அனுமதி பெறாமல், சோம்பு, ஜீரகம் வாங்கினார்கள், மாதம் ரூ. 30,000 கமிஷன் பெறுகிறார்கள் என்றெல்லாம் சொல்வது முறை அல்ல. அதைத்தான் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது நல்ல முறை அல்ல.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் சொல்வதுபோல் நிரூபித்தால் சரி. குற்றம் சாட்டுகிறபோது புள்ளி விவரங்களோடு பேசினால் நல்லது. சட்டமன்றத்தில் நாங்கள் புள்ளிவிவரங்கள் தயாரித்துக் கொடுக்கிறோம், அறிக்கைகள் வைக்கிறோம். அதேபோல் உறுப்பினர்கள் பேசும்போது, குறிப்பிட்டு குற்றஞ்சாட்டினால் நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.



1974 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தச் சங்கத்தில் எந்த நேரத்தில் வாங்கினார்கள் என்று சொல்லுங்கள்.

திரு. துரை கோவிந்தராசன்: டி.ஸி.டப்ளியூ.ஸி. நிறுவனத்தில் தஞ்சையில் இருக்கிற அந்த நிறுவனத்தில்,—அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்கள் கேட்கிறார்கள், ஆகவே சொல்கிறேன். விவசாயிகளிடம் தேங்காய் முக்கால் ரூபாய்க்கு வாங்கி நிறுவனத்தில் இருந்து ஒன்றரை ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒன்றேகால் ரூபாய்க்கு வாங்கியதாக "பில்" தயாரித்துக் கணக்கு எழுதிவிடுகிறார்கள். இப்படிப் பல்வேறு பொருள்களை வாங்கி விற்பதில் அவர்கள் நல்ல கமிஷன் பெறுகிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரங்கள் கேட்டால் அந்த நிறுவனத்தில்தான் அச்சடித்து.........

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்த விவசாயிகளிடம் முக்கால் ரூபாய்க்குத் தேங்காய் வாங்கிக்கொண்டு ஒன்றேகால் ரூபாய் என்று எழுதி வாங்கினார்கள் என்று சொன்னால் அதுபற்றி நான் விசாரணை நடத்துகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: தஞ்சைப் பகுதியில் விவசாயிகளிடம் முக்கால் ரூபாய்க்குத் தேங்காய் வாங்கிப் போயிருக்கிறார்கள் என்று விவசாயிகள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சொல்கிறார்கள், சொல்கிறார்கள் என்றால், யார் சொல்கிறார்கள் என்று சொல்லுங்கள். அப்படிச் சொல்லவில்லை என்று நான் சொல்கிறேன். இது ஒரு பெரிய விஷயம். மக்களை ஏமாற்றுகிற பிரச்னை. முக்கால் ரூபாய்க்கு வாங்கி ஒன்றேகால் ரூபாய் என்று எழுதி வாங்கினார்கள் என்றால், எந்த விவசாயி என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 75 காசுக்கு வாங்கி ஒன்றேகால் ரூபாய் என்று எழுதி வாங்கினார்கள் என்றால், அப்படி யாராவது உங்களிடம் தகவல் கொடுத்திருக்கிறார்களா?

திரு. துரை கோவிந்தராசன்: தகவலைத் தனியாக வைத்திருக்கிறேன்.

[1974 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தகவலைக் கொடுத்தால் சரி. அதல்லாமல் முன்னால் சொல்லிவிடுகிறேன். பின்னால் தகவல் தருகிறேன் என்று சொன்னால் எப்படி? தாங்கள் இந்த முறையில் அனுமதிப்பது சரியல்ல.

(முற்பகல் 9-30)

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, சிலவற்றை சொல்கிற நேரத்தில் ஆதாரம் தரவேண்டும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றம் சாட்டுபவர்களின் பொறுப்பு குற்றத்தை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிருபிப்பது. ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுவது, பின்னால் தருகிறேன் என்று சொல்வது முறை அல்ல. இந்த மன்றத்தில் ஒரு முறையைக் கடைப் பிடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிற நேரத்தில் அதற்கு மாறான போக்கைக் கடைப்பிடிப்பது சரியல்ல.

திரு. துரை கோவிந்தராசன் : அரசு ஒத்துழைத்தால்தான் குற்றச் சாட்டுகளை ஆதாரத்தோடு தரமுடியும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனையோ விவசாயிகள் இருக்கிறார்கள். ரூ. 20,000, ரூ. 30,000 கமிஷன் அடித்தார்கள் என்று கூறுகிறீர்கள். 75 பைசா கொடுத்துவிட்டு ரூ. $1\frac{1}{4}$-க்கு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் அந்த மாதிரி ஒரு ரசிது கூட இல்லாமல் பேசினால் எப்படி நம்புவது?

திரு. துரை கோவிந்தராசன் : அதோடு கூட, தலைவர் அவர்களே, இப்படி விவசாயிகளிடமிருந்து கையெழுத்து வாங்குவது என்பது ஒரு நிறுவனத்திற்குக் கஷ்டம் அல்ல. 40,000, 30,000 என்று சொல்கிறபொழுது ஒரு இடத்தில் சிறு விவசாயிகளிடமிருந்து இப்படி தேங்காய் விற்றதாகக் கையெழுத்து வாங்க முடியாதா? விவசாயிகளுக்கு பில் கூட கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கஷ்டமாக இருக்காது என்றால் ஏன் நீங்கள் ஒரு விவசாயியிடமிருந்து அந்த ரசீதை வாங்கிக் கொண்டு வரக்கூடாது? நீங்கள் சொல்கிற மாதிரி தவறாகக் கூட இருக்கலாம். ரூ. $1\frac{1}{4}$-க்கு எழுதி வாங்கியிருந்தால் ஏன் ஒரு ரசீதை யாவது கொண்டுவரக் கூடாது?



1974 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பொதுவாக சொல்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி, மற்றவர்களெல்லாம் பொதுவாகக் குறை கொள்முதல் செய்வதில், விநியோகம் செய்வதில் பொன்னப்ப நாடார் கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இப்பொழுது உறுப்பினர் அவர்கள் அவர்கள் கூட சொல்கிறார்கள். ரூ. 20,000 லாபம் பெற்றார். இவ்வளவு குறிப்பாகச் சொல்லுகிறார். இவ்வளவு ரூபாய்க்கு சிமெண்டு ரூபாய்க்கு கல் வாங்கினார், 2 லட்சம், 3 லட்சம் வாங்கினார், இவ்வளவு ரூபாய்க்கு வீடு கட்டினார், இவ்வளவு ரூபாயில் வீடு கட்டினார் என்றெல்லாம் சொல்கிறார்கள். சொல்ல விவரங்கள் சொல்கிறபொழுது வாங்கின இடத்தையும் இன்னாரிடமிருந்து வேண்டும், இன்னாரிடமிருந்து கல் வாங்கினார், இருக்கும். சிமெண்டு வாங்கினார் என்று சொன்னால் முறையாக குறிப் பொத்தாம் பொதுவிலே சொன்னால் நான் என்ன செய்வது? கவனத் பாக எந்தத் தவறு நடந்திருந்தாலும் அதை என்னுடைய பரிசிலனை ற்குக் கொண்டுவந்தால் நான் நிச்சயமாக அதைப் யோசனையாக செய்கிறேன். மற்ற விவரங்களை இங்கே தருவதற்கு உடனடியாக இருந்தால், தனியாக என்னிடம் கொடுத்தால், நான் டவடிக்கை எடுக்கிறேன்.

திரு. குழ. செல்லையா : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு தனியாக ஆதாரத்தோடு பேசவேண்டும் என்று சொல்கிறார்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்தில் அப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அவர் சொல்லவில்லை.

திரு. குழ. செல்லையா : நான் அன்றைக்கு ஒன்றைச் சொல்கிற பொழுது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அந்தக் கதை கதை வேண்டாம்.

திரு. குழ. செல்லையா : நான் ஆதாரத்தோடு பேசியிருக்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்பது வேறு நேரத்தில் கேட்க வேண்டும். மன்றத்தில் பேசும்பொழுது ஆதாரத்தோடு பேச வேண்டும் என்று சொல்வதில் திரு. செல்லையா அவர்களுக்கு எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை என்று கருதுகிறேன்.

[1974 ஏப்ரல் 5

திரு. குழ. செல்லையா : ஆதாரம் இல்லாமல் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கையில் ஆதாரம் இருக்கிறது. எந்த விவசாயி என்று இங்கே சொல்லாவிட்டாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தனியாக அவர்கள் விவரம் கொடுப்பார்கள். நான் இந்த மாமன்றத்தில் எடுத்துச்சொன்ன நியாயமான குற்றச்சாட்டின் பேரில் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நிலைமை வேறு.

திரு. குழ. செல்லையா : ஆதாரத்தோடு சொல்லிய குற்றச்சாட்டின் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கை எடுக்கப்பட்டதா, இல்லையா என்பது வேறு விவகாரம். மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் ஆதாரத்தோடு பேசவேண்டும்.

திரு. குழ. செல்லையா : இந்த மாமன்றத்தில் ஓரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் பால் பண்ணையில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை வேறு. அந்தக் குற்றச்சாட்டின்பேரில் நடவடிக்கை எடுத்தார்களா, இல்லையா என்பது வேறு விவகாரம். "நான் சொன்னேன், நடவடிக்கை எடுக்கவில்லை, ஆகவே இங்கே ஆதாரம் இல்லாமல் பேசலாம்" என்று சொல்வது முறையல்ல. இங்கே பேசும்பொழுது ஆதாரத்தோடு பேசவேண்டும். உங்களுடைய பிரச்னை வேறு. அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. குழ. செல்லையா : இரண்டும் ஒரே பிரச்னை தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னதின் பேரில் நடவடிக்கை எடுத்தார்களா, இல்லையா என்பது வேறு விவகாரம். இங்கே பேசுகின்ற நேரத்தில் உறுப்பினர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டும் என்ற நடைமுறை இருக்கிறது. திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் தேங்காய்க்கு 75 பைசா கொடுத்துவிட்டு ரூ. 1¼-க்கு கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்று சொல்லும்பொழுது அதைப்பற்றி ஏதாவது ஒரு ஆதாரமாவது வாங்கிக்கொண்டு வருவது பெரிது அல்ல.



1974 ஏப்ரல் 5]

திரு. துரை கோவிந்தராசன் : சில விவசாயிகள் சில நேரங்களில் சிலவற்றிற்கு வார்த்தையோடு, சொல்லோடு கிராமப்புறங்களில் நம்பிக்கை அடைவார்கள். சில இடங்களில் அரசாங்கத்தின் உத்தரவு அடிப்படையில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட பேச்சுக்களை இங்கே பேசுவது முறையல்ல. வேறு விஷயத்தைப்பற்றி பேசுங்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, மேலும் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்வதற்கு கார்டு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கார்டுகள் வழங்குவதிலே பெரிய அளவுக்கு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. குறிப்பாக அதிகாரிகளைப் போல கார்டு அடித்து, அதிலே கையெழுத்துப் போட்டு பல்வேறு இடங்களில் சீனி மூட்டைகளை அல்லது பல்வேறு பொருள்களை வாங்கிக்கொள்வதற்கு கார்டுகள் தயாரித்து அப்படி பல இடங்களில் விநியோகம் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி எடுத்துச்சொல்லியும் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. 50 அல்லது 60 கார்டுகளை ஒரு பெரியவர் கொடுக்கிறார். அந்தக் கார்டுகளை வைத்திருப்பவர்களுக்குக் காசு கொடுத்து அல்லது அவர்களிடத்தில் இருக்கிற ஏதோ ஒரு உரிமையைப் பயன்படுத்தி, அந்தக் கார்டுகளை ஒன்றாக வாங்கிவைத்துக்கொண்டு, மற்றவர்கள் வாங்க முடியாத அளவுக்கு நிலைமைகள் சில பகுதிகளிலே இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கிரெடிட் சொசைடிகள் உள்ள பகுதிகளில் சீனி மூட்டைகள், 10, 8 மூட்டைகள் தரப்படுகின்றன. பக்கத்தில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு.........

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு துரை கோவிந்தராசன் ஏறத்தாழ 30 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள்—ஆளும் கட்சி உறுப்பினர்கள்—பேசுகின்ற நேரத்தில் 3, 4 நிமிடங்களில் முடித்துவிடவேண்டும் என்று கடைசியாகச் சொல்லுகிறீர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது? இன்னும் மற்ற உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் பேசவேண்டும். இதைப் பற்றி ஒரு முடிவு எடுக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரம் நிச்சயிப்பது உறுப்பினரா என்பது தெரியவேண்டும். ஏற்கனவே அதே உறுப்பினர் யாரோ ஒருவர் கேட்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். யாரோ ஒருவர், யாரையோ என்றெல்லாம் பேசாமல் இருப்பதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது பேசுகிற உறுப்பினர் என்னைக் குறிப்பிட்டு யாரோ ஒருவர், ஏதோ கேட்டார், அன்றைக்கு நீங்கள் நேரம் கொடுத்தீர்கள் என்றெல்லாம் அப்படிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கத்தினர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சபாநாயகர் முடிவு செய்யவேண்டியது. உறுப்பினர்கள் வந்து இப்படிக் கேட்பது சரியல்ல. நான் அன்றைக்கே தலையிடவேண்டும் என்று நினைத்தேன்.

இம்மாதிரியாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திடீர் திடீரென்று எழுந்து எதிர்க்கட்சியினர்களை முறைகேடாகப் பேசுவதிலிருந்து எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது மாத்திரமல்ல, ஆளும் கட்சி முன்னவரிடத்தில் இம்மாதிரி உறுப்பினர்கள் தலையிடக் கூடாது என்று சொல்லி ஒத்தாசை பண்ணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவாதத்தைத் துவங்கி வைத்துப் பேசுகிறார். அவருக்குக் கொஞ்ச நேரம் கூடுதலாகக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 9-05-க்கு ஆரம்பித்தார். இப்பொழுது 9-35 ஆகிறது. ஆகவே, இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்து விடவேண்டும். குறுக்கீடுகளைக் கழித்தால் கூட நேரம் அதிகமாகியிருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : சில மத்திய வங்கிகளில் இருக்கிற தலைவர்கள், குறிப்பாக தஞ்சாவூர் மத்திய வங்கித் தலைவராகத் திரு. மாணிக்கவாசகம் இருந்து, குற்றம் சாட்டப்பட்டு, அதற்குப்



பின்னால் அந்த வங்கியில் 6 மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அரசாங்க உத்தரவு வாங்கிக்கொண்டு தேர்தல் நடைபெறாமல் இருந்தது. நான் அந்த வங்கியின் ஒரு இயக்குனராக இருந்தேன். வங்கி இயக்குனராக என்னை மட்டும் ஒதுக்கிவிட்டு மீதி உள்ள 5 பேர்களை நியமித்து அந்த வங்கி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

கூட்டுறவு ஸ்தாபனம் என்பது கட்சி சார்பற்ற முறையில் அரசியலுக்கு அப்பாற்பட்டு, குறிப்பாக எல்லோருடைய நலன்களையும் பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்டிருக்கிறது கூட்டுறவு இயக்கம். குறிப்பாக ஒரு கட்சியினரே வரவேண்டும் என்று பல்வேறு தேர்தல்கள் நடைபெறுகிற நேரத்தில் கூட இப்பொழுது புதியதாக ஆதித்தனார் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு பதவிகளை இப்பொழுது இருக்கிற நிறுவனங்களை கூட்டுறவுத் துறையின் மூலம் நிர்வகிக்கச் செய்து, லிஃப்ட் இர்ரிகேஷன் என்ற பெயரால், ஆயில் சொஸைடி என்ற பெயரால், பார்ம் சர்வீஸ் என்ற பெயரால் கூட்டுறவு யூனியன் என்ற பெயரால் பல்வேறு துறையிலே சங்கங்களை வைத்து மத்திய வங்கிகளில் தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் மட்டும் இயக்குனர்களாக வரவேண்டும் என்ற அடிப்படையில், அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கி, அங்கே இருக்கிற தலைவர்களுக்கே தெரியாமல் இரவோடு இரவாக கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களை, நிறுவனத்தில் உள்ளவர்களை, மெம்பர்களை நாடி இருக்கிற தலைவர்களை மாற்றிவிட்டு, மாற்றுத் தலைவர்களிடத்தில் போய் கையெழுத்து வாங்கி, நீங்கள் தலைவர் இல்லை என்று சொல்கிற அவலநிலை தஞ்சைப் பகுதியிலே பல்வேறு சிறு விவசாயிகள் சங்கம், பார்ம் சர்வீஸ் சங்கம் ஆகியவைகளில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை போக்கப்படவேண்டும். கடைசியாக...... (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கரிவேங்கடம் ......

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சில விஷயங்களைப் பற்றி உறுப்பினர் அவர்களுக்கு ரிப்ளை பண்ணுவதற்கு கடைசியில் நான் மறந்துவிடலாம். நேரம் இல்லாமல் போய்விடலாம். ஆகவே, இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். திருவாரூர், முதல் அமைச்சர் பிறந்த ஊர், வி.எஸ்.டி. தியாகராஜ முதலியார் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார் என்றெல்லா

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரம் நிச்சயிப்பது உறுப்பினரா என்பது தெரியவேண்டும். ஏற்கனவே அதே உறுப்பினர் யாரோ ஒருவர் கேட்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். யாரோ ஒருவர், யாரையோ என்றெல்லாம் பேசாமல் இருப்பதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது பேசுகிற உறுப்பினர் என்னைக் குறிப்பிட்டு யாரோ ஒருவர், ஏதோ கேட்டார், அன்றைக்கு நீங்கள் நேரம் கொடுத்தீர்கள் என்றெல்லாம் அப்படிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கத்தினர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சபாநாயகர் முடிவு செய்யவேண்டியது. உறுப்பினர்கள் வந்து இப்படிக் கேட்பது சரியல்ல. நான் அன்றைக்கே தலையிடவேண்டும் என்று நினைத்தேன்.

இம்மாதிரியாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திடீர் திடீரென்று எழுந்து எதிர்க்கட்சியினர்களை முறைகேடாகப் பேசு வதிலிருந்து எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது மாத்திரமல்ல, ஆளும் கட்சி முன்னவரிடத்தில் இம்மாதிரி உறுப்பினர்கள் தலையிடக் கூடாது என்று சொல்லி ஒத்தாசை பண்ணவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவாதத்தைத் துவங்கி வைத்துப் பேசுகிறார். அவருக்குக் கொஞ்ச நேரம் கூடுதலாகக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 9-05-க்கு ஆரம்பித்தார். இப்பொழுது 9-35 ஆகிறது. ஆகவே, இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்து விடவேண்டும். குறுக்கீடுகளைக் கழித் தால் கூட நேரம் அதிகமாகியிருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : சில மத்திய வங்கிகளில் இருக்கிற தலைவர்கள், குறிப்பாக தஞ்சாவூர் மத்திய வங்கித் தலைவராகத் திரு. மாணிக்கவாசகம் இருந்து, குற்றம் சாட்டப்பட்டு, அதற்குப்





பின்னால் அந்த வங்கியில் 6 மாதங்களுக்கு ஒரு முறை, மூன்று மாதங் களுக்கு ஒரு முறை அரசாங்க உத்தரவு வாங்கிக்கொண்டு தேர்தல் நடைபெறாமல் இருந்தது. நான் அந்த வங்கியின் ஒரு இயக்குனராக இருந்தேன். வங்கி இயக்குனராக என்னை மட்டும் ஒதுக்கிவிட்டு மீதி உள்ள 5 பேர்களை நியமித்து அந்த வங்கி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

கூட்டுறவு ஸ்தாபனம் என்பது கட்சி சார்பற்ற முறையில் அரசிய லுக்கு அப்பாற்பட்டு, குறிப்பாக எல்லோருடைய நலன்களையும் பாது காப்பதற்கு அமைக்கப்பட்டிருக்கிறது கூட்டுறவு இயக்கம். குறிப்பாக ஒரு கட்சியினரே வரவேண்டும் என்று பல்வேறு தேர்தல்கள் நடைபெறுகிற நேரத்தில் கூட இப்பொழுது புதியதாக ஆதித்தனார் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு பதவிகளை இப்பொழுது இருக்கிற நிறுவனங்களை கூட்டுறவுத் துறையின் மூலம் நிர்வகிக்கச் செய்து, லிஃப்ட் இர்ரிகேஷன் என்ற பெயரால், ஆயில் சொஸைடி என்ற பெயரால், பார்ம் சர்வீஸ் என்ற பெயரால் கூட்டுறவு யூனியன் என்ற பெயரால் பல்வேறு துறையிலே சங்கங்களை வைத்து மத்திய வங்கிகளில் தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் மட்டும் இயக்குனர்களாக வரவேண்டும் என்ற அடிப்படையில், அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கி, அங்கே இருக்கிற தலைவர்களுக்கே தெரியாமல் இரவோடு இரவாக கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களை, நிறுவனத்தில் உள்ளவர்களை, மெம்பர்களை நாடி இருக்கிற தலைவர்களை மாற்றிவிட்டு, மாற்றுத் தலைவர்களிடத்தில் போய் கையெழுத்து வாங்கி, நீங்கள் தலைவர் இல்லை என்று சொல்கிற அவலநிலை தஞ்சைப் பகுதியிலே பல்வேறு சிறு விவசாயிகள் சங்கம், பார்ம் சர்வீஸ் சங்கம் ஆகியவைகளில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலை போக்கப்படவேண்டும். கடைசியாக...... (மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கரிவேங்கடம் ......

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சில விஷயங்களைப் பற்றி உறுப்பினர் அவர்களுக்கு ரிப்ளை பண்ணுவதற்கு கடைசியில் நான் மறந்துவிடலாம். நேரம் இல்லாமல் போய்விடலாம். ஆகவே, இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். திருவாரூர், முதல் அமைச்சர் பிறந்த ஊர், வி.எஸ்.டி. தியாகராஜ முதலியார் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார் என்றெல்லாம்

சொன்னார்கள். அதற்கான தணிக்கை செய்து, கிட்டத்தட்ட ரூ. 1.17 கோடி அதிலே வரவு செலவில் வித்தியாசம் இருக்கிறது என்று கண்டு, நடவடிக்கை எடுத்து, 19—4—73-ல் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை நடந்துகொண்டிருக்கிறது.

இன்னொரு விவகாரம். ஒரு ஊருக்குப் போனதாகவும், முதல் நாள் ஏதோ ஒரு விழா நடந்ததாகவும், விழாவை நடத்திவிட்டு வந்த பிறகு 160 மூட்டை விற்பனை நடந்தது, விழாவை நடத்திய அந்த பிரஸிடெண்ட் ஏதோ தவறு செய்துவிட்டார், அதற்குப் பிறகு இவர் போய் அதற்கான தகவல் கொடுத்து பிடித்திருக்கிறார்கள். என்றெல்லாம் சொல்லி, ஏதோ அமைச்சர் பேரில் சந்தேகம் என்ற அளவில் கொண்டுவிடுகிறார். நான் அப்பொழுது கூட்டுறவு அமைச்சராக இல்லை. நான் அமைச்சராக இருந்தேன். விழாவுக்குக் கூப்பிட்டார்கள். விழாவுக்குப் போனேன். திரும்பி வந்தேன். தவறு செய்தவர் மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பல பேர் மேல் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதிலே எனக்கு என்ன தொடர்பு என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படி வீண் பழி சுமத்துவதைத் தவிர்ப்பதற்கெல்லாம் எதிர்க்கட்சி தலைவர்கள் ஒத்தாசை செய்யவேண்டும். எனக்கு அதிலே எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அந்தத் தலைவர் மேல் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கொண்டு விசாரணையில் இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணிக்கவாசகம் பிரச்சினையில் ரூ. 1,07,000 எடுத்துவிட்டதற்காக உடனடியாகப் போலீசாரால் கைது செய்யப்பட்டு மாஜிஸ்ட்ரேட் எப்.ஐ.ஆர். இல்லாமல் பெயிலில் விட்டு விட்டார்கள். அது தவறு என்று சொல்லி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறோம். நீதி மன்றம் ஒத்தாசை செய்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எப்.ஐ.ஆர். வருவதற்கு முன்பு எப்படி கைது செய்தார்கள் என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எப்.ஐ.ஆர். அல்ல சார்ஜ் ஷீட் கொடுப்பதற்கு முன்பு. அந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதற்கும் மாணிக்கவாசக பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. இந்தத் தலைவர் அவருக்கு மட்டு



காஷ் கொடுத்து மற்றவர்களுக்குச் செக் கொடுத்தார் என்று சொல்லுவது சரியல்ல. மாநிலம் பூராவும் செக் கொடுக்கும் முறையைத்தான் வைத்திருக்கிறோம்.

புதுக்கோட்டை மாவட்டம் தனியாகப் பிரிந்திருக்கும் காரணத்தால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் டைரக்டர்களாக இருந்த காரணத்தால் புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய இரண்டு இடங்களிலும் தலைவர் தேர்தலை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நீதி மன்றம் ஒத்தாசை செய்தது என்ற கருத்தைச் சொன்னார்கள். நீதி மன்றத்தின்மேல் குற்றம் சாட்டுவது போல் இருக்கிறது. மாஜிஸ்ட்ரேட்டுக்கு இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு ஜாமீனில் விட்டிருக்கலாம். அதற்கு மேல் அப்பீல் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையில் அப்படிப்பட்ட வார்த்தை தேவைதானா என்று அமைச்சர் அவர்களும் இந்த மன்றமும் பரிசீலிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் அவர்கள் சிறந்த வழக்கறிஞர். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பெயிலில் விட்டாலும் வக்கீல்களின் யோசனையில் பேரில்தான் ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : நீதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னது மாஜிஸ்ட்ரேட் பேரில் குற்றச்சாட்டு சொல்லுவது போல் தோன்றுகிறது. எஃப்.ஐ.ஆரிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை சார்ஜ் ஷீட் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஜாமீனில் வெளியே விட்டதால் ஹைகோர்ட்டுக்குப் போயிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நீதி மன்றம் ஒத்தாசை செய்தது என்று எப்படி காமெண்ட் பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். மறு நாளே பிடித்துக் கொண்டு வந்து ரிமாண்ட் கேட்டபோது போலீசிடம் கேட்காமலே மாஜிஸ்ட்ரேட் பெயிலில் விட்டு விட்டார்கள்.

பெயிலில் விட்டது தப்பு என்று சொல்லி ஹைகோர்ட்டுக்கு வந்திருக்கிறோம். இதைத் திசை திருப்புவது நல்லதல்ல. நீதி மன்றத்தைப் பற்றி உங்களுக்கும், எங்களுக்கும் திரு. கே. டி. கே. அவர்களுக்கும், எல்லோருக்கும் ஒரே கருத்துத்தான். அதிலே உங்களுக்கும் எனக்கும் வித்தியாசம் இருப்பதாகக் கருதவேண்டாம். அதைப்பற்றி விவாதம் தேவையில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய உறுப்பினர் பேசியதைத் திசை திருப்புவது போல் பேசுவது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : உறுப்பினர்கள் எல்லோரும் பேசி முடித்த பிறகு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டுமென்பதை ஒரு முறையாக வகுத்திருக்கிறோம். ஆனால் இன்றையதினம் அமைச்சர் அவர்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல முறை இவ்வாறு நடந்திருக்கிறது. சொல்லுகின்ற நேரத்திலேயே அமைச்சர்கள் எழுந்து விளக்கம் அளிப்பதற்கு, பதில் சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் துரை கோவிந்தராசன் அவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வப்போது பதிலளித்தார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர அச்சமடையத் தேவை யில்லை.

(திரு. கே. எ. வகாப்—தலைமை)

இந்த மன்றத்தில் ஆளுநர் பேருரையின்பேரில் உரையாற்றிய டாக்டர் ஹாண்டே அவர்களும், அனந்தநாயகி அம்மையார் அவர் களும் தர்மபுரி கூட்டுறவு வங்கியில் ஏதோ நகர்வாலா போன்ற ஊழல் நடந்து விட்டதாகவும், அங்கு கூட்டுறவுத் தலைவராக



இருந்தவர் ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர் என்றும் அந்த ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர் யார் என்று பெயரைச் சொல்லுவது சரியல்ல என்றும் 97 இலட்சம் ரூபாய் கையாடல் செய்துவிட்டது—கையாடல் என்று கூறவில்லை போன்றும் கூறினார்கள்.

மாணிக்கவாசகத்தைக் கைது செய்தீர்கள்; தர்மபுரி மத்திய வங்கித் தலைவரை ஏன் கைது செய்யவில்லை என்ற முறையில் குற்றம் சாட்டினார்கள்.

அந்தக் குற்றச்சாட்டு வலது கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஜனாதிபதியிடம் கொடுத்த குற்றச் சாட்டுகளுள் ஒன்று. அந்த வங்கியில் 52 இலட்சம் ரூபாய் அனாமதேயக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது குற்றச்சாட்டு. நம்முடைய அரசு அப்படி அனாமதேயக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்கு முகாந்திரம் எதுவும் இல்லை என்று சொல்லியிருக் கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு— 'May it be that there may be no benami loans but whether these loans are not given at the dictate of the D.M.K. President.' என்று சொல்லியிருக்கிறார்கள். அனாமதேயக் கடன்கள் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளலாம். இருந்தாலும்கூட அந்தக் கடன்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கட்டளையின் பேரில் கொடுக் கப்பட்ட கடன்களா இல்லையா என்று கேட்டிருக்கிறார்கள்.

அதே போல் 10.87 இலட்சம் ரூபாய் மீளாக்கடன்; 66.47 இலட்சம் ரூபாய் வாராக் கடன் வழங்கப்பட்டிருப்பதாக அனந்த நாயகி அம்மையார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் கூற்றுக் கெல்லாம் அந்தச் சட்ட மன்ற உறுப்பினர் நானாக இருக்கும் காரணத்தால் தன்னிலை விளக்கம் தருவது கடமையாகும். அப்படி யாராவது சந்தேகப்பட்டால் அதற்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்டவர் சட்ட மன்ற உறுப்பினர் பதவியில் இருக்க லாயக்கற்றவர், இருக்கக்கூடாது என்று கூறி இந்த நேரத்தில் ஒருசில விளக்கங்களை அளிக்க கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் பேசும்போது நான் இல்லை; நான் பேசும் போது அவர்கள் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய வங்கியில் எப்படி கடன் வழங்கப்படுகிறது என்ற முறையையும், மத்திய வங்கிக்குக்கீழ் எத்தனை அமைப்புகள் இருக்கின்றன என்பதையும் அறிந்திருந்தால்

உண்மையாகவே இந்தக் குற்றச்சாட்டை அவர்கள் மனந்திறந்து கூறியிருக்க மாட்டார்கள். அந்த மாவட்டத்தில் வட்டத்திற்கு ஒரு கூட்டுறவு வங்கி வீதம் இருக்கிறது. நான்கு கூட்டுறவு ஒன்றியங்கள் இருக்கின்றன. விவசாயிகள் கடன் வேண்டுமென்றால் நேரடியாக மத்திய வங்கியிடம் கடன் மனு போடுவதில்லை. கூட்டுறவு நாணயச் சங்கத்தில்தான் அவர்கள் பயிர்க் கடன் போன்ற கடன்களைப் போடு கிறார்கள். கூட்டுறவு நாணயச் சங்கத் தலைவரை நாடி அங்கிருக்கும் அதிகாரிகளை நாடி அதற்குப் பிறகு கடன் மனு அளிக்கப்பட்டு அளித்த பிறகு அதைக் குழுவில் வைத்து கடன் வழங்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப் படுகிறது.

கூட்டுறவு ஒன்றியத்திலே லோன் கமிட்டி—கடன் பரிந்துரைக் குழு—ஒன்று இருக்கிறது. அதற்கு அந்த ஒன்றியத்தின் தலைவர்— தலைவர். ஆகவே, அந்தக் குழு மத்திய வங்கிக்குப் பரிந்துரை செய்து, மத்திய வங்கியில் லோன் சேங்ஷன் என்ற பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவு கடன் மனுக்களைப் பரிசீலனை செய்கிறது. அந்தப் பிரிவிலே பரிசீலனை செய்யப்பட்டதற்குப் பின்னாலே அந்த கடன் மனுக்கள் கெசட் பதிவு பெற்ற துணைப் பதிவாளர் மட்டத்திலே அரசாங்கத்தின் துணைப்பதிவுச் செயலாளராக மத்திய வங்கியில் இருப்பவர் அதனை ஆழ்ந்து பரிசீலனை செய்து, அதற்குப் பின்னாலே மத்திய வங்கியின் தலைவருக்கு சுற்றுக்கு அனுப்புகிறார்கள்—அவசரமாக இருந்தால், அவசரம் இல்லை என்றால் நிர்வாகக் குழுவில் வைக்கிறார்கள். ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் குழுவில் இடம் பெற்று இருக்கிறார்கள்.

ஓசூர் ஒன்றியம், அந்த ஒன்றியத்தின் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்—முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் அப்பாவுப் பிள்ளை. அவர்களெல்லாம் பரிந்துரை செய்து, சிபார்சு செய்துதான் மத்திய வங்கிக்கு அனுப்புகிறார்கள்.

அடுத்தது கிருஷ்ணகிரி. அந்த ஒன்றியத்தில் கிருஷ்ணமூர்த்தி ஆபுடையார் தலைவர். அவர் கூட்டுறவு துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். கூட்டுறவில் அவரை "தாத்தா" என்று அழைப் பார்கள். அவர் ஒன்றியத்தின் தலைவர். அவரும் மனுக்களைப் பரிசீலனை செய்து, மத்திய வங்கி[illegible] ரை செய்கிறார்.





அரூர் ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், அங்கே தீர்த்தகிரி கவுண்டர் தலைவராக இருக்கிறார். மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களுக்காகவே தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராசினாமா செய்தவர். அவரும் இந்தக் குழுவில் இருக்கிறார்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ஒருவர் கட்சி மாச்சர்யங் களை வைத்துக்கொண்டு நியமனம் செய்கிறார்கள் என்று சொன் னார்கள். ஓசூர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். நான் மத்திய வங்கித் தலைவர். நிர்வாகக்குழுவில் அவர் ஒரு உறுப்பினர், தீர்த்தகிரி கவுண்டர் ஒரு உறுப்பினர். இவர்களெல்லாம் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களெல்லாம் இந்தக் கடன் மனுக்களைப் பரிசீலனை செய்து மத்திய வங்கிக்கு அனுப்பின பின்னாலேதான் மத்திய வங்கித் தலைவருக்கு பொறுப்பு வருகிறது. அந்தப் பொறுப்பும் என்னவென்றால் அந்தக் குழுவிற்குத் தலைமை வகித்து எல்லா அங்கத்தினர்களும் ஏற்றுக் கொண்டு, கடன் வழங்குவதற்கு அனுமதி அளித்தால் தான் மத்திய வங்கி அவர்களுக்குக் கடன் வழங்கும். அந்த நிர்வாகக் குழுவிலே துணைப்பதிவாளர், கூட்டுறவு நாணயச் சங்கம் ஒரு அதிகாரபூர்வமான அங்கத்தினர். அதிகார பூர்வமற்ற அங்கத்தினர் மாவட்ட கூட்டுறவு தணிக்கை அதிகாரி, டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் ஆடிட் ஆபீசர்.

நான் இரண்டாண்டு காலம் பதவி வகித்த நேரத்தில் அந்த உறுப்பினர்களாலும், அதிகாரிகளாலும் எந்த ஒரு கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கும் கடன் வழங்குவதற்கு யாரும் ஆட்சேபனை செய்தது இல்லை. கொடுக்கப்பட்ட கடன்கள் அத்தனையும் ஏகமன தாக தீர்மானிக்கப்பட்டு, அதன்படி கடன்கள் வழங்கப்பட்டிருக் கின்றன.

அந்தத் தீர்மானம் நிறைவேற்றிய உடனே மத்திய வங்கித் தலைவர் நேரடியாக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பது கிடையாது. அங்கே இருக்கும் டி. ஆர். செக்ரடரி ஒன்றியத்தின் தலைவருக்கு அனுப்பி, கூட்டுறவு நாணயச் சங்கத்தின் தலைவர் முறைப்படி தீர்மானம் போட்டு லோன் சேங்ஷன் ஆர்டர், (எல்.எஸ்.ஓ) கொடுக் கிறார்கள். கூட்டுறவு நாணயச் சங்கத்தின் தலைவர் முறைப்படி தீர்மானம் போட்டு, ஒன்றியத்திற்கு அது சென்று, அங்கே பரிந்துரை செய்து, மீண்டும் மத்திய வங்கியிலிருந்து பணம் பெற்று கூட்டுறவு நாணயச் சங்கத்தில் வங்கி ஆய்வாளர் முன்னிலையில் கடன் மனுதாரர் களுக்கு பட்டுவாடா செய்கிறார்கள். ஆகவே, இதை அருள் கூர்ந்து கவனிக்கவேண்டும். இதற்கு எப்படி மத்திய வங்கித் தலைவரைக்

[திரு. மா. வெ. கரிவேங்கடம்] [1974 ஏப்ரல் 5

கைது செய்ய முடியும்? (மணியடிக்கப்பட்டது) தலைவரவர்களே, தன்னிலை விளக்கமாக நான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் மீது இங்கே இப்போது இருக்கிற ஒரு உறுப்பினர் மீது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். ஆகவே, அருள் கூர்ந்து நான் மேலும் பேசுவதற்கு சிறிது நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்) :இங்கே நிறையப் பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். கூடுமானவரையில் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) ஆளும் கட்சியிலும் பல பேர் பேச இருக்கிறார்கள்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : எனக்கு முதல் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் எப்போதுமே தலைவரவர்கள் மணியடிக்கும் வரை பேசாதவன். இந்த ஆட்சி பாரபட்சமாக நடக்கிறது என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். கரிவேங்கடம் ஏன் கைது செய்யப்படவில்லை என்று கேட்கிறார்கள். ஆகவே, அதற்கு விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அருள் கூர்ந்து சிறிது நேரம் தரவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி பேசியதாகச் சொன்னார்கள். இன்னும் அவர்கள் பேச வில்லை. எப்போது அவர்கள் பேசினார்கள் என்று தெரியவில்லை.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : அவர்கள் ஆளுநர் பேருரையின் மீதும், சென்ற ஆண்டு கூட்டுறவு மானியத்தின் மீதும் பேசியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு அந்த விவாதம் நடக்கிறபோது நான் இங்கே இல்லை. ஆகவே தான் இப்போது விளக்கம் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

97 லட்ச ரூபாய், 52 லட்ச ரூபாய் என்று கேட்டார்கள். அதற்காகச் சொல்கிறேன். 97 லட்ச ரூபாயிலே, ஏறக்குறைய 46 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. கரிவேம்கடத்திடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறதா, கிடையாது. கடன் வாங்கிய பலரிடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது. அருள் கூர்ந்து என்னைக் கைது செய்யவேண்டுமென்று கோரியவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



1974 ஏப்ரல் 5] [திரு. மா. வெ. கரிவேங்கடம்]

அந்த மத்திய வங்கித் தலைவராக நான் நியமிக்கப்படுவதற்கு முன்னால் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாகராஜ மனேகார் தலைவராக இருந்திருக்கிறார். அவர் இருந்த காலத்திலும் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன்கள் நாளது வரையில் வசூலிக்கப்படவில்லை. அதற்கு ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. அதை அத்தனையும் நான் படிக்க விரும்பவில்லை. ஒரு சில சங்கங்களின் பெயர்களை மட்டும் கொடுக்க ஆசைப்படுகிறேன். இன்று வரை நிலுவையில் இருக்கிற சங்கங்கள் சின்னகவுண்டன்பட்டி என்ற சங்கத்தில் 1 லட்சத்து 5,093 ரூபாய் நிலுவை இருக்கிறது. இன்னும் அந்தக் கடன் வசூலிக்கப்படவில்லை. கீழ்மொரப்பூர் என்ற சங்கத்தில் 3 லட்சத்து 36 ஆயிரத்து 379 ரூபாய் நிலுவை இருக்கிறது. இன்னும் வசூலிக்கப்படவில்லை.

அதற்கு முன்னாலே எங்கள் மாவட்டம் ஒன்றாக சேலம் மாவட்டத்தோடு சேர்ந்து இருந்தபோது கே. எஸ். மணி கவுண்டர் தலைவராக இருந்து இருக்கிறார். ஒட்டஹள்ளி என்ற கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு 4 லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது. அது வட்டியும் முதலுமாக 4 லட்சத்து 37 ஆயிரத்து 447 ஆகியிருக்கிறது. அதே போல் பச்சப்பணட்டி என்ற சொசைடிக்கு 3 லட்சத்து 85 ஆயிரத்து 745 கொடுக்கப்பட்டது. இன்னும் வசூலாக வில்லை. அதேபோல் கௌவள்ளி என்ற சங்கத்திற்கு 3 லட்சத்து 25 ஆயிரத்து 364 கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அது வசூலாக வில்லை.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, மற்ற தலைவர்கள் தவறு செய்து இருக்கிறார்கள். நான் தவறு செய்யவில்லை என்பதை எடுத்துச் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : மற்ற தலைவர்கள் தவறு செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை, அவர்கள் தவறு செய்தார்கள் ஆகவே, நான் தவறு செய்கிறேன் என்றும் நான் சொல்லவில்லை. அங்கத்தினர் அவர்கள் அருள் கூர்ந்து கவனிக்கவேண்டும். அரசாங்கத்திலேயே கடன் கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். கிராம அதிகாரி கொடுக்கிறார் ஒரு சர்ட்டிபிகேட், அதற்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கையெழுத்திடுகிறார், தாசில்தார் சர்ட்டிபை செய்கிறார். கலெக்டர் அந்தக் கடனை வழங்குகிறார். கீழே இருக்கிறவர்கள் யாராவது தவறு செய்துவிட்டால் அதற்காக கலெக்டரை கைது செய்யச்சொல்வது சரியா, இல்லையா. அவர்கள் மத்திய வங்கியின் தலைவரைக் கைது செய் என்று கேட்டார்கள். இப்படி

யெல்லாம் இருக்கிறது அவர்கள் மட்டும் கொடுக்கவில்லை. பரிந்துரை செய்துள்ளதன் அடிப்படையில் தான் கொடுத்திருக்கிறார் என்று சொன்னேன்.

நான் ஏற்கெனவே சொன்னேன், நான் தலைவராக இருந்த நேரத்தில் யாரும் எந்தவித ஆட்சேபணையும் கிளப்பவில்லை நிர்வாகக் குழுவில், கொளஹத்தூர் கூட்டுறவு நாணயச் சங்கம் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் அதிலே முக்கியப் பொறுப்பில் இருந்தவர். அவர் சங்கம் 100-க்கு 100 தவணை கட்டவில்லை. அவர்கள் கடன் கேட்டார்கள். நான் தர மறுத்திருக்கிறேன். எனக்கு முன்னாலே பதவியில் இருந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மத்திய வங்கியின் தலைவர் தவறு செய்கிறார் என்று சொன்னால் நிச்சயமாக நாகராஜ மனேகார் தவறு செய்து இருக்கிறார்கள், மணி கவுண்டர் தவறு செய்து இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தவறு செய்து இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. இப்படி தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் யாரும் எந்தப் பதவியிலும் இருக்கமுடியாது. ஆகவே, கீழே வரும் பரிந்துரைகளை வைத்துக் கொண்டு தான் மேலே இருக்கிறவர்கள் கடன் மனுக்களை அனுமதிக்கிறார்கள். ஆகவே, தவறாக நடப்பதற்கு மேலே உள்ளவர்கள் பொறுப்பேற்க முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.00)

அடுத்தாற்போல் இந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்த வலது கம்யூனிஸ்ட் சார்புடைய கூட்டுறவு நாணய சங்கம் ஏதாவது இருக்கிறதா என்றால் செம்மாண்டிகுப்பம் கூட்டுறவு நாணய சங்கம் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரை தலைவராகக் கொண்டது. அந்தச் சங்கத்திற்கு மத்திய வங்கியிலிருந்து 2,93,000 ரூபாய் வழங்கப்பட்டது. அந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு என்ன காரணமென்றால் கடன் வாங்கியுள்ளவர்கள் கடனை ஒத்துக் கொண்டார்கள். இதிலே காழ்ப்புணர்ச்சி ஒன்றுமில்லை. அங்கே கடன் பெற்றவர்களெல்லாம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நடவடிக்கை எடுக்கவில்லை.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கி சம்பந்தமாகக் கலெக்டர் என்ன அறிக்கை கொடுத்தார் என்று கூறமுடியுமா?



திரு. மா. வெ. கரிவேங்கடம் : அங்கு கலெக்டர் தான் தலைவராக இருக்கிறார். அந்தக் காரணத்தால் அவர் அறிக்கை கொடுப்பதில்லை. அறிக்கை முதலானவைகளையெல்லாம் தணிக்கை செய்வது ரிசர்வ் வங்கியாகும். அறிக்கைகளை சமர்ப்பிக்கிறார்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அங்கே ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் கூட்டுறவு சங்கத்திற்கு அவர் தலைவராக இருந்த நேரத்தில் 1,49,000 ரூபாய் நிலுவை இருந்திருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை: இதற்குக் காரணம் அந்தச் சங்கத்தில் இருக்கிறவர்கள் கடனை ஒத்துக்கொண்டார்கள்.

ஆகவே கட்சி பாகுபாடு இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மற்ற எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எங்கெங்கே கையாடல் இருக்கிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், இங்கே ஒரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு செய்தால் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினருக்கு தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்கு வாய்ப்பு தரப்படுமா என்பதற்கு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்) : உறுப்பினர் தன்னிலை விளக்கம் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : ஆகவே இதிலே கட்சி சார்பற்ற முறையில் கழகமா, ஸ்தாபன காங்கிரசா என்று பார்க்காமல் எங்கெங்கே தவறு இருக்கிறதோ அங்கேயெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

* திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் நமது மன்றத்தில் வைத்திருக்கிற மானிய கோரிக்கை மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. மா. வெ. கரிவேங்கடம்] [1974 ஏப்ரல் 5

யெல்லாம் இருக்கிறது அவர்கள் மட்டும் கொடுக்கவில்லை. பரிந்துரை செய்துள்ளதன் அடிப்படையில் தான் கொடுத்திருக்கிறார் என்று சொன்னேன்.

நான் ஏற்கெனவே சொன்னேன், நான் தலைவராக இருந்த நேரத்தில் யாரும் எந்தவித ஆட்சேபணையும் கிளப்பவில்லை நிர்வாகக் குழுவில், கொளஹத்தூர் கூட்டுறவு நாணயச் சங்கம் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் அதிலே முக்கியப் பொறுப்பில் இருந்தவர். அவர் சங்கம் 100-க்கு 100 தவணை கட்டவில்லை. அவர்கள் கடன் கேட்டார்கள். நான் தர மறுத்திருக்கிறேன். எனக்கு முன்னாலே பதவியில் இருந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மத்திய வங்கியின் தலைவர் தவறு செய்கிறார் என்று சொன்னால் நிச்சயமாக நாகராஜ மனேகார் தவறு செய்து இருக்கிறார்கள், மணி கவுண்டர் தவறு செய்து இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தவறு செய்து இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. இப்படி தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் யாரும் எந்தப் பதவியிலும் இருக்கமுடியாது. ஆகவே, கீழே வரும் பரிந்துரைகளை வைத்துக் கொண்டு தான் மேலே இருக்கிறவர்கள் கடன் மனுக்களை அனுமதிக்கிறார்கள். ஆகவே, தவறாக நடப்பதற்கு மேலே உள்ளவர்கள் பொறுப்பேற்க முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.00)

அடுத்தாற்போல் இந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்த வலது கம்யூனிஸ்ட் சார்புடைய கூட்டுறவு நாணய சங்கம் ஏதாவது இருக்கிறதா என்றால் செம்மாண்டிகுப்பம் கூட்டுறவு நாணய சங்கம் வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரை தலைவராகக் கொண்டது. அந்தச் சங்கத்திற்கு மத்திய வங்கியிலிருந்து 2,93,000 ரூபாய் வழங்கப்பட்டது. அந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு என்ன காரணமென்றால் கடன் வாங்கியுள்ளவர்கள் கடனை ஒத்துக் கொண்டார்கள். இதிலே காழ்ப்புணர்ச்சி ஒன்றுமில்லை. அங்கே கடன் பெற்றவர்களெல்லாம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நடவடிக்கை எடுக்கவில்லை.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, தர்மபுரி மத்திய கூட்டுறவு வங்கி சம்பந்தமாகக் கலெக்டர் என்ன அறிக்கை கொடுத்தார் என்று கூறுவாரா?



1974 ஏப்ரல் 5]

திரு. மா. வெ. கரிவேங்கடம்: அங்கு கலெக்டர் தான் தலைவராக இருக்கிறார். அந்தக் காரணத்தால் அவர் அறிக்கை கொடுப்பதில்லை. அறிக்கை முதலானவைகளையெல்லாம் தணிக்கை செய்வது ரிசர்வ் வங்கியாகும். அறிக்கைகளை சமர்ப்பிக்கிறார்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அங்கே ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் கூட்டுறவு சங்கத்திற்கு அவர் தலைவராக இருந்த நேரத்தில் 1,49,000 ரூபாய் நிலுவை இருந்திருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை: இதற்குக் காரணம் அந்தச் சங்கத்தில் இருக்கிறவர்கள் கடனை ஒத்துக்கொண்டார்கள்.

ஆகவே கட்சி பாகுபாடு இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மற்ற எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எங்கெங்கே கையாடல் இருக்கிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர், இங்கே ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு செய்தால் அந்தக் குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினருக்கு தன்னை நிரபராதி என்று நிரூபிப்பதற்கு வாய்ப்பு தரப்படுமா என்பதற்கு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்): உறுப்பினர் தன்னிலை விளக்கம் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, அதில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: ஆகவே இதிலே கட்சி சார்பற்ற முறையில் கழகமா, ஸ்தாபன காங்கிரசா என்று பார்க்காமல் எங்கெங்கே தவறு இருக்கிறதோ அங்கேயெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் நமது மன்றத்தில் வைத்திருக்கிற மானிய கோரிக்கை மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 ஏப்ரல் 5

கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள் ஆங்கிலத்திலே கூறுவதைப் All for each; each for all என்ற அமைப்பு அப்படியே இருக்கவேண்டும்.

ஆனல் இந்தக் கூட்டுறவு இயக்கத்திற்காக நாம் போட்டிருக்கிற பை-லா வானது அந்த இயக்கம் ஆரம்பத்திலிருந்து அதை எடுத்துப் பார்த்தால் ஆண்டுதோறும் திருத்தங்கள் (அமெண்ட்மெண்ட்ஸ்) வந்து கொண்டே இருப்பதைப் பார்க்கலாம்.

குறிப்பாகச் சொல்லப் போனல் முன்னல் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆதித்தனர் காலத்தில் ஏற்பட்ட திருத்தங்கள் இருக்கிறதே அது ஜனநாயக அமைப்புக்கே மாறு பாடான நிலையில் [ * * * ] புகுத்தப்பட்டு விட்டது. அந்தப் பெருமை அந்த அமைச்சரையே சாரும்.

கூட்டுறவுத் துறையில் ஏடுத்துக்கொண்டால் முதலில் மாநில வங்கி, அதற்கு அடுத்தாற்போல் மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கிகள், அதற்குக் கீழேயிருக்கிற பிரைமரி சொசைட்டீஸ் இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதிலே இருக்கிற அங்கத்தினர்கள் ஜனநாயக முறையிலே தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அரசாங்கம் பணம் வழங்கு கிறது என்ற காரணத்தாலே ஒரு சில அதிகாரிகள் வேண்டுமானல் நியமன உறுப்பினர்களாக இருக்கலாம். ஆனல் இங்கே என்ன நிலைமை? கட்சிக்காரர்களுக்கு பதவி கொடுக்கவேண்டும் என்ற முறையில் மத்திய வங்கிக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே அது ஒரு பொது ஸ்தாபனம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, காங்கிரசுக்கோ சொந்தமான ஸ்தாபனமல்ல. அப்படியிருக்கும்போது தற்போதைய அமைப்பால் அங்கே அந்த "ஆல் ஃபார் ஈச், ஈச் ஃபார் ஆல்" கொள்கை இல்லை.

இன்றிருக்கிற அமைப்பிலே அது திராவிட முன்னேற்றக் கழகத் தின் கட்சி அலுவலகமாக இருக்கிறது என்று சொன்னல் அது மிகையாகாது. அடிமட்டத்தில் செயல்படும் கிராம கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்கள் அதேபோல நெசவாளர் சங்கங்கள் இவைகளுக் குத்தான் அதிகப் பொறுப்பு. மத்திய வங்கி பணத்தைக் கடனைக்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 5] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

கொடுக்கிறது. அந்தக் கடனைப் பெறுவதற்குரிய விண்ணப்பங்களை தயாரிக்கவேண்டும். அந்தக் கடன் சரியான புள்ளிக்கு சேருகிறதா என்று பார்த்துக் கடனை கொடுக்கவேண்டும். அது 6 மாதம் என்ருல் 6 மாதத்திலே கொடுத்தக் கடனை வசூலிக்கவேண்டும், 1 வருஷம் என்ருல் 1 வருஷத்திலே வசூலித்தாக வேண்டும். மூன்று வருஷம் என்ருல் 3 வருஷத்திலே வசூலிக்க வேண்டும். இதிலே கிராம சங்கங்களுக்குத்தான் அதிக பொறுப்பு இருக்கிறது. அதற்கு மேல் மத்திய வங்கி. அதற்கு மேல் மாநில வங்கி இருக்கிறது. ஆனல் பொறுப்பு அதிகமாக இருக்கிற கிராம சங்கங்களின் தலைவர்களுக் கும், அங்கே இருக்கிற அங்கத்தினர்களுக்கும் எந்த விதமான மதிப்பும் இல்லை. இவர்களெல்லாம் அடிமைகளாக செயல்பட வேண்டியிருக் கிறது. அது எங்கள் பகுதியிலேயிருக்கிற நிலவரம், இங்கேயிருக்கிற அமைப்பும் அதுபோலத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இதிலே கொடுக்கப்படுகிற கடன்களுக்குரிய வட்டியிலே ஒரு பகுதி தான் கிராம கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போகிறது : பெரும் பகுதி மத்திய வங்கிகளுக்கு தான் போகிறது. மத்திய வங்கியில் இருப்பவர் கள் அனுபவிக்கிற வசதி கிராம சங்கத்திலே இருப்பவர்களுக்குக் கிடையாது.

இந்தச் சங்கங்களில் நியமிக்கப்படுகிற பணியாளர்களுக்கு செலவுத் தொகையாக உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று அறிக்கையில் காணப்படுகிறது. நான் ஒரு கூட்டுறவு சங்கத்தின் தலைவன். எங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் ரூபாய்தான் கடன் வழங்க தொகை அளிக்கப்படுகிறது. ஆனல் அதிலே வருகிற செலவைப் பார்த்தால் அதிகமாகவுள்ளது. ஒரு செகரட்டரி இருக்கிருர். அவரை நியமிக்கும் பொறுப்பு கிராமச் சங்கங்களுக்குக் கிடையாது. மத்திய வங்கிக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது. அப்படி யிருக்க வேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுகிறேன். அதை நான் வரவேற்கிறேன்.

ஆனல் அவருக்கு சம்பளம் கொடுக்கக்கூடிய பொறுப்பு கிராம சங்கத்திற்கு இருக்கிறது. கிராம சங்கத்திற்கு அதற்கு வசதி கிடை யாது. அவர்களுக்கு கொடுக்க வேண்டிய முழுச் சம்பளத்தையும் மத்திய வங்கியே கொடுக்கவேண்டும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : அவர் கூட்டுறவு சங்கத்தின் ஊழிய ராக இருக்கும்போது அவருடைய சம்பளத்தை மத்திய வங்கி எப்படித் தரமுடியும்?

[1974 ஏப்ரல் 5

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, விளக்கம் பொருத்தமானதாக இல்லை. பிரைமரி சொஸைட்டீசைவிட அதிகப் பொறுப்பு எடுக்கவேண்டியது மத்திய வங்கியாகும். கிராமச் சங்கங்களை அதிகாரிகள் தினசரி சோதனை போடுகிறார்கள். அது போதாது என்று டைரக்டர்கள்கூட பிரைமரி சொஸைட்டீஸ்களுக்கு இன்ஸ் பெக்ஷனுக்கு வருகிறார்கள். பிரைமரி சொஸைட்டிஸ்தான் வருவாயைப் பெருக்கி டைரக்டர்களுக்கும் செலவு செய்கிறது.

ஆகவே பிரைமரி சொஸைட்டியில் இருக்கிற ஊழியர்களுக்குக்கூட மத்திய வங்கிதான் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லையென்று சொன்னால் கிராம சங்கங்கள் அழிந்துபோய்விடும். அவைகளுக்கு போதிய வருமானம் இல்லை.

அடுத்தது இந்த நியமனங்களைப் பொறுத்தவரையில் மத்திய வங்கிப் போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது. தங்களுக்கு வேண்டியவர்களை தற்போது நியமிக்கிறார்கள். ஆகவே ஒரு கட்டாயமான உத்தரவை அரசு பிறப்பிக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை தேடித்தரும் ஸ்தாபனம் இருக்கிறது. அங்கேயிருந்துதான் ஊழியர்களை எடுக்கவேண்டும். அப்படி அதைச் செய்கிறார்களா?

நான் கேட்கிறேன்; எங்காவது எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் ஆட்களை எடுக்கிறார்களா? இல்லையே. அப்படியானால் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சுகளுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கூட்டுறவு அமைப்புகளில் அவர்கள் இஷ்டம்போல் ஆட்களை எடுத்து நியமிப்பது கூடாது. இப்படிப்பட்ட இயக்கங்களில் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் ஆட்களை எடுக்காவிட்டால் தனியார் இயக்கங்களில் எப்படி எடுப்பார்கள்? எனவே, கட்டாயமாக எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் மத்திய வங்கிகளுக்கும் மற்ற கூட்டுறவு அமைப்புகளுக்கும் பணியாளர்களை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, மத்திய வங்கிக்கு ஒரு போர்டு—ஆட்சிக்குழு இருக்கிறது. அந்தக் குழுவுக்கு தேர்தல் மூலம் வருவது 6 பேர்கள்தான். மற்றவர்கள் எல்லாம் நாமினேஷன் மூலம் வருகிறார்கள். இது எவ்வளவு அநியாயமானது? இது எங்கே போய் நிற்குமோ என்ற பயம் எங்களுக்கெல்லாம் இருந்துகொண்டிருக்கிறது.. மத்திய வங்கியில் இப்படி இருக்கும்போது, பிரைமரி சொஸைட்டிகளில் இருக்கின்ற எங்களின் நிலைமை எப்படி இருக்கிறது? பிரைமரி



1974 ஏப்ரல் 5] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

சொஸைட்டிகளில் மூன்று மாதம் கடன் வசூலாகாமல் நின்றுவிட்டால் எங்களுடைய பதவி போய்விடும். ஆனால் நீங்கள் நாமினேஷன் செய்கின்றவர்கள் எப்படியானாலும் 3 வருஷங்களுக்கு காலத்தை ஓட்டிவிடுவார்கள். இந்தமாதிரி பைலா இருக்கிறது. அந்த அளவுக்கு பைலாவை திருத்தி, திருத்தி, அடித்தளத்தில் இருக்கின்றவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லாமல் போய்விட்டது. இந்த நிலைமையை மாற்றவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் 2, 3 நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்): நீங்கள் 10 நிமிடம் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக வரக்கூடியவர் தேர்தல் மூலம் வந்தவராகத்தான் இருக்க வேண்டும். இப்போது வரக்கூடியவர்கள் அப்படி அல்ல. அரசாங்கத்தில் இருந்து உத்தரவு வருகிறது. மத்திய வங்கியில் ஒரு டைரக்டராக நீங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று உத்தரவு வருகிறது. கூட்டுறவு இயக்கம் என்றால் என்ன என்றே தெரியாதவர்கள் டைரக்டராக இருந்து, அவர்களே தலைவராகவும் வந்துவிடுகிறார்கள். இது மிகவும் தவறான ஒரு கொள்கையாகும். கீழே இருக்கின்ற சங்கங்களின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்தான், கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள்தான், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் தலைவராக வரவேண்டும். நீங்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் நாமினேட் செய்துகொள்ளுங்கள்; கவலை இல்லை. ஆனால் தலைவராக வரக்கூடியவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராகத்தான் இருக்க வேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் தொடர்புடைய ஒருவர்தான் தலைவராக வரவேண்டும்.

இனி, இந்தத் தேர்தல் வரும்போது பணம் எவ்வளவு விரயம் ஆகிறது தெரியுமா? அதற்கு ஒரு கணக்கு வழக்கு கிடையாது. மத்திய வங்கியின் சொந்தக்காரருக்கு ஆகின்ற செலவு போன் சார்ஜ் இக்கணக்குகளை மட்டும் நீங்கள் பாருங்கள். தேர்தல் சமயத்தில் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பது தெரியும். அதனால் பணம் எப்படி விரயமாகிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் தேர்தலில் தேர்தல் அலுவலகமாகவே நெல்லை மத்திய வங்கி செயல்பட்டது. அப்போதைய போன் பில்லைப் பார்த்தால் உண்மை விளங்கும். கூட்டுறவு மத்திய வங்கிப் பணம்தான் முழுக்க முழுக்க தேர்தல் காலங்களில்

செலவிடப்படுகிறது. போன் சார்ஜை மட்டும் பார்த்தாலே இந்த விபரத்தைத் தெரிந்துகொள்ளலாம். இப்படி செலவிடக்கூடாது. அதை தடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

இன்னும் ஒன்றை மட்டும் கூறிவிடுகிறேன். உரம் எல்லாம் இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கொடுக்கிறோம். ஆகவே, எல்லாக் கூட்டுறவு சங்கங்களுக்கும் கிட்டங்கி இருக்கவேண்டும். அப்படியானால்தான் உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், இதர விவசாயக் கருவிகளை வாங்கிவைத்து, விநியோகம் செய்யமுடியும்.

எங்கள் பகுதியில் முட்டைக்காடு கிராமத்தில் ஒரு நல்ல சொசைட்டி இருக்கிறது. அது பலவகையில் 50,000 ரூபாய் லாபம் ஈட்டியிருக்கிறது. அந்தப் பணத்தை அவர்களாகவே கடன் கொடுக்க, தனியாக உரங்கள் வாங்கி விநியோகம் செய்ய இன்னும் பிறவழிகளில் செலவு செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். இப்போது அந்த சங்கம் F.A.C.T. உரங்களை விநியோகம் செய்கின்ற முறைகளை மாற்றியிருக்கிறார்கள். நேரடியாகச் சங்கங்களுக்கு வருவதில்லை. அப்படிப்பட்ட உரங்களையெல்லாம் அவர்கள் நேரடியாக வாங்கி, அவர்களுடைய லாபத்தில் இருந்து வாங்கி—விநியோகம் செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசல், விராலிமலை, விளாத்திக்குளம் போன்ற இடங்களில் மழை இல்லாததால் பயிர்நிலங்கள் கரிந்துபோய்விட்டன. அதனால் அவர்களுக்கு கடனை சீராகத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. ஆகவே, கடன் வசூல் செய்வதில் கெடுபிடி இல்லாமல், தள்ளிப்போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆரம்பத்தில் முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களை * * என்று குறிப்பிட்டார் கள். * * ரொம்பநாள் ஆகிவிட்டது அவருடைய கொள்கையும் மறைந்துவிட்டது. ஆகவே, ஒரு அமைச்சரை * மாதிரி இருக் கிறார் என்று சொல்வது சரியல்ல. அந்த வார்த்தையை சபைக் குறிப் பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





திரு. ஏ. சுவாமிதாஸ்: [ * ] இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. தமிழ்நாட்டிலே இந்த இயக்கத்தில் [ * ] இருக்கக்கூடாது. இந்த அமைச்சர் காலத்திலாவது அது ஒழிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, [ * ] என்று அவர்கள் சொல்லிய வார்த்தையை குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. எ. வகாப்): சட்ட மன்றத்தில் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவது சரியல்ல. ஆகை யால் சபைக் குறிப்பிலிருந்து அந்த வார்த்தையை எடுத்துவிட உத்தர விடுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: [ * ] ரொம்ப நல்லவர். அவருடைய பெயரைச் சொல்வதில் தவறில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இன்னும் [ * ] [ * ] கொள்கைகளையும் ஆதரிக்கின்றவர்கள் இங்கே இருக்கிறார் கள் என்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. மு. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர் கள் சமர்ப்பித்திருக்கின்ற கூட்டுறவு இயக்க மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கூட்டுறவு இயக்கமானது, சமுதாயத்திலே உயர்ந்தவன்–தாழ்ந்தவன், ஜாதி–மதம், ஏழை–பணக்காரன் என்ற பாகுபாடு களின்றி, மக்கள் சமுதாயத்தில் ஒருமைப்பாட்டை வளர்க்கக்கூடிய இயக்கமாக இன்று இருந்துகொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த இயக்கமானது 1904-லே இந்த நாட்டிலே ஆரம்பிக்கப் பட்டாலும் கூட அது தமிழ்நாட்டிலே தான் சீராகவும் சிறப்பாகவும் முன்னேற்றமடைந்து மக்களுக்குப் பயன்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[திரு. மு. சண்முகம்] [1974 ஏப்ரல் 5

ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டிலே இந்த இயக்கமானது இவ்வளவு
முன்னேற்றம் அடைவதற்கு காரணமாக இருந்தது இங்கே தொழில்
வளம் இல்லாமல் இருந்ததுதான். இங்குள்ள மக்கள் எல்லாம்
விவசாயத்தையே ஜீவாதாரமானத் தொழிலாகக் கொண்டிருக்
கிறார்கள். விவசாயத் தொழிலில் ஈடுபட்ட மக்கள் ஏழ்மையிலும்
வறுமையிலும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது இந்த இயக்கம்
தோன்றி, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆதரவாக இருந்தது. இந்த
இயக்கத்தைக்கொண்டு, விவசாயிகள் கடன் பெறவும், பொருட்களை
குறைந்த விலைக்கு—நியாயமான விலைக்கு வாங்கிக்கொள்ளவும் வசதி
செய்யப்பட்டது. கிராமப்புற சங்கங்கள் மூலமாக அவர்கள் பெரும்
பயன் அடைந்துவருகிறார்கள். அதனால் ஓரளவு விவசாயத் துறையிலே
ஈடுபட்டவர்கள் நலம் பெற்று, அவர்களுடைய வாழ்க்கைத்தரம்
உயர்ந்தது.

எப்போதும் கடன் கஷ்டத்திலேயே விவசாயிகள் வாழ்க்கை
சென்று கொண்டிருந்தது. எந்த நாளும் கடன் தொல்லைகள் இருந்த
தால் அவர்கள் ஒரு நிம்மதியற்ற வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்
தார்கள். வாங்கியக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை.
அரசாங்கம் கொடுத்த சிறு கடனுதவியைப் பெற்று, கடனைத்தான்
திருப்பிக் கொடுக்க முடிந்ததே ஒழிய அவர்கள் வாழ்க்கை முன்னேற
வில்லை. இந்தக் கஷ்டங்களை எல்லாம் போக்கவேண்டுமென்று கருதி,
அரசு கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தி, நீண்டகால கடன்களை
கொடுத்தார்கள். அந்தக் கடனை பெற்ற விவசாயிகள் 15, 20 ஆண்டு
காலத்தில் சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த நிலவள
வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் இப்போது
விவசாயிகள் கடன் தொல்லைகளிலிருந்து ஓரளவு விடுபட்டு, அவர்
களுடைய வாழ்க்கை முன்னேற்ற பாதையில் சென்றுகொண்டிருக்
கிறது. இப்போது அவர்கள் தனியார்களிடம் கடன்படும் நிலைமை
இல்லை.

இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களில் 80 சதவிகிதம் பயிர்த்
தொழிலில் ஈடுபட்டிருந்தும் உணவுத் துறையில் பற்றாக்குறை இருந்து
வந்தது. இந்தப் பற்றாக்குறையை போக்குவதற்கு நிலவள வங்கிகள்
மூலமாக விவசாயிகளுக்கு விவசாயக் காரியங்களுக்கான வசதிகளைச்
செய்துகொடுக்க அரசாங்கம் முன்வந்தது. உணவு உற்பத்திப்
பெருக்கத்திற்கு, விவசாயிகளுக்கு உதவி செய்ய இந்த நிலவள
வங்கிகள் முன்வந்துள்ளன. அதன்படி கடந்த நான்காண்டு காலத்தில்
83 கோடி ரூபாய்க்குமேல் விவசாயக் காரியத்திற்காக கூட்டுறவு



1974 ஏப்ரல் 5] [திரு. மு. சண்முகம்]

மூலம் கடன் கொடுத்திருக்கிறோம். அதில் 60 கோடிக்கு மேல் கிணறுகள் புதியதாக ஏறபடுத்துவதற்கும், மின்சார பம்பு செட்டுகளை அமைக்கவும் கடன் கொடுத்ததன் விளைவாகத்தான்—கரம்பு நில மாகக் கிடந்தவைகள் எல்லாம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு—தமிழகம் தன் பற்றாக்குறை நிலைமையில் இருந்து, தன்னிறைவு பெற்றிருப்பதோடு கூட, பிற மாநிலங்களுக்கும் அரிசி வழங்கக்கூடிய நிலைமையில் உணவு உற்பத்தியில் வெற்றி கண்டிருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் காரணம் கூட்டுறவு இயக்கம்—கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நிலவள வங்கிகளை ஏற்படுத்தி விவசாயப் பெருமக்களுக்கு கடன் வழங்க தீவிரமாகச் செயல்பட்டு வருவதுதான்.

குறிப்பாக, பூமிக்கு அடியிலுள்ள நீரை வெளிக்கொணர்ந்து சாகுபடி செய்கிற முயற்சியில்—உலக வங்கித் திட்டத்தின் மூலம் முழுவதும் பயன் அடைய முடியாது தாமதம் ஏற்படுவதற்குக் காரணம்—அவர்கள் ஒரு கிணற்றுக்கும்—இன்னொரு கிணற்றுக்கும் இடையில் குறிப்பிட்ட தூரம் இருக்கும்படியாக கண்காணித்துக்கொள்ள வேண்டும் என்று போட்டிருக்கிற விதியாகும். இதனால்தான் அதிகமான கிணறுகள் தோண்ட முடியாமல் போய்விட்டன. இன்றைய தினம் நில நீர் ஆய்வாளர்கள் உதவி மிகவும் தேவைப்படுகிறது. அவர்கள் எங்கெங்கு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை சீக்கிரமாக—துரிதமாக ஆராய்ச்சி செய்து க்ளியரன்ஸ் சர்டிபிகேட் கொடுப்பார்களானால் நிலவள வங்கி மூலமாகக் கடன் பெற்று, கிணறுகளை வெட்ட வாய்ப்பு ஏற்படும்.

இன்னும் விவசாய மக்களது வாழ்வை வளம்படுத்த தென்னை, பாக்கு, போன்ற தோட்டங்களையும், பழத்தோட்டங்களையும் உற்பத்தி செய்ய கடன் கொடுத்து வருகிறோம். நிலவள வங்கிகள் மூலம் இந்தக் கடனைக் கொடுப்பதற்கு முன்பு தோட்ட வளர்ச்சிக்கு தமிழகத்தில் கடன்கள் கொடுக்கப்பட்டதில்லை. நான்கைந்து ஆண்டுகளாகத்தான் கூட்டுறவு இயக்கத்தின் ஆதரவில் நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. கிணறுகள் தோண்டவும் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

முன்காலத்தில் சாதாரணமாக மாடுகளைக் கட்டி கவலையேற்றம் மூலமாகத் தண்ணீர் இறைத்துவந்தோம். மீண்டும் அதுபோன்ற முறையைத்தான் இன்றைக்கு அநேக இடங்களில் பயன்படுத்தும் நிலைமை இருக்கிறது. இதற்கு உலக வங்கித் திட்டத்தின் மூலம் அவர்கள் உதவி செய்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

[திரு. மு. சண்முகம்] [1974 ஏப்ரல் 5

1973-லே குத்தகை, சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உரிமை
மாற்றம் செய்யக்கூடிய சட்டத்தில், அந்த நிலங்கள் நிலவள வங்கி
களில் அடகு செய்யப்பட்டிருந்தால்—கடனுக வைத்துக்கொள்ள
முடியாத நிலைமை இருந்தது. கூட்டுறவுச் சட்டத்தின் மூலப்
இத்தகைய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டிய நிலைமை
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நாம் விவசாயிகளுக்கு 20 ஆண்டுத் தவணையில்
கடன் கொடுப்பதற்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடமைப்பட்டவர்
களாக இருக்கிறோம். அரசு இதைச் செய்வதற்கு முன்வரவேண்டும்.
கூட்டுறவு இலாக்காவில் உள்ளவர்கள்—நிலவள வங்கிகள் சரியான
முறையில் நாளடைவில் செயல்படுவதற்கு இடையூருக இருக்கிருர்கள்
என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். இதைப் பரிசீலனை செய்து
நிலவள வங்கி அலுவலர்களே இதைக் கவனித்துக்கொள்வதற்கு
வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
இந்த மானியத்தை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு
அடிப்படையான காரணம் கூட்டுறவு இயக்கம்தான். இதில் ஒருசில
குறைபாடுகள் இருந்தாலும் கூட—விவசாயிகளுக்குப் பலவகையிலும்
-தவிட வேண்டும் என்கிற மனப்பான்மையில் செயல்பட்டு வருகிற
காரணத்தினுல்தான் நம்மிடையே இருந்த அரிசிப் பஞ்சம் அகற்றப்
பட்டு, பிற மாநிலங்களுக்கு அனுப்புகிற நிலையைக் கூட நாம் அடைய
முடிந்திருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. மற்ற மாநிலங்
களில் படி அரிசி 6 ரூபாய் விற்கிறபோது, பக்கத்திலுள்ள சிலோனில்
லிட்டர் அரிசி 14 ரூபாய் விற்கிறபோது—தமிழகத்தில் பசுமைப் புரட்சி
லம் உற்பத்தி செய்து குறைந்தவிலையில் மக்களுக்குக் கிடைக்கும்
டியான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். இதற்குக் காரணமே
ட்டுறவு இயக்கந்தான். இதற்காக கூட்டுறவுத் துறையைப்
ராட்டாமல் இருக்க முடியாது. பிற மாநிலங்களோடு ஒப்பிடுகிற
ாது கூட்டுறவுத் துறை நம் மாநிலத்தில் நல்ல வெற்றியினைக்
ண்டிருக்கிறது. இங்கே குறைகளும் மற்ற இடங்களைவிடக் குறை
கத் தான் இருக்கிறது. இதனைப் புள்ளிவிவரங்கள் காட்டும்.
ற மாநிலங்களில் இருந்து வருகிறவர்களும் ஒப்புக்கொள்கிருர்கள்.
க வங்கியைச் சேர்ந்தவர்களே இங்கு வந்து இதனைப் பாராட்டு
ர்கள்.



1974 ஏப்ரல் 5] [திரு. கே. எ. வகாப்]

குறிப்பாகச் சொன்னுல் இருக்கிற ஒன்றிரண்டு குறைபாடுகளை எடுத்துச் சொன்னவுடன்—நமது அமைச்சர் அவர்களும் உடனடியாக அதைப்போக்க நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். இந்த நிலை நீடித்தால் ஓராண்டில் அனைத்துக் குறைகளும் அகற்றப்படும் என்று நம்புகிறேன்.

தொழில்துறை கூட்டுறவு என்று சொல்கிறநேரத்தில் அதைப்பற்றி அதிக விமர்சனம் செய்யப்பட்டது. அவர்கள் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப்பற்றிச் சொன்னுர்கள். நானும் அதில் பங்கேற்று இருக்கிறேன் என்ற காரணத்தினுல்—அதன் இயக்குநரில் ஒருவன் என்ற முறையில் சொல்லவில்லை—யாரையும் ஆதரிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. லாபம் வருகிறது என்ருல் அதன் தலைவரேவா எடுத்துக்கொண்டு போகிருர்? அதில் என்ன உங்களுக்கு அக்கறை என்று கேட்டார்கள்.

(முற்பகல் 10-30)

பொறுப்பான உறுப்பினர் என்ற முறையில் அவருக்குள்ள அக்கறை அனைத்தும் எனக்கும் இருக்கிறது என்ற முறையில்தான் சொன்னேன். வெறும் புழுதியை வாரித் தூற்றிவிட்டுப்போவதில் பயன் இல்லை. அது சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்திவிடாது.

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. அங்கே நிர்வாகம் என்று வருகின்றபொழுது, கூட்டுறவு நிலவள வங்கியாக இருந்தாலும் சரி, சென்ட்ரல் பாங்காக இருந்தாலும் சரி, மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருந்தாலும் சரி, அவற்றிலே ஆட்களை நியமிப்பதைப்பற்றி வெளியிலே தவருகப் பேசப்படுகின்றது. அதற்கு ஏதாவது கட்டுப்பாடு கொண்டு வரமுடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டும். சொல்லுகின்ற நேரத்திலே ஆதாரத்தோடு சொல்லவேண்டுமென்ருல், சில நேரங்களில் முடியாத நிலைமை இருக்கிறது. கொடுத்தவர்கள் சொல்வதற்கோ, அல்லது வாங்கியவர்கள் சொல்வதற்கோ முடியாத நிலைமை இருக்கிறது.

நான் கூடச் சட்டமன்றத்திலே கேள்வி கேட்டேன். ஆனல் அதை மறுத்துவிட்டார்கள், சட்டமன்றத்திற்குச் சம்பந்தம் இல்லை யென்று சொல்லி. கூட்டுறவுத் துறைக்குச் சம்பந்தமான கேள்வி, சட்டமன்றத்திற்குச் சம்பந்தம் இல்லையென்ருல், அதைப்பற்றி இங்கே பேச விரும்பவில்லை, அந்த நியமனங்கள்பற்றி நீங்கள் நல்ல முடிவு

எடுக்கவேண்டும். பரவலாக, தகுதியாகப் படித்தவர்களுக்கு
நியாயமாக கிடைக்கவேண்டிய நியமனங்கள் கிடைக்க அரசு முயற்சி
எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இங்கே நிலவள வங்கியைப் பற்றி பேசப்பட்டது.
இன்று, நிலவள வங்கி நல்லமுறையில், விவசாயிகளுக்குக் கடன்களை
கொடுத்து வருகிறது. ஆனல், அவர்கள் விதிக்கின்ற நிபந்தனைகளை
விவசாயிகளால் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.
இத்தனை ஆயிரம் அடிகள் முன்னல் இருக்கவேண்டும் ;

அது மாத்திரமல்ல, எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள்
சொன்ன மாதிரி, நில நீர் ஆய்வுக் 'குழு, சர்ட்டிஃபிகேட் கொடுத்
தால்தான் கிணறு எடுக்கவேண்டும். அப்படி சர்ட்டிஃபிகேட்
கொடுத்த பிறகுதான் கடன் பெறமுடியும். வந்தவாசி போன்ற இடங்
களில் நல்ல நீர்வளம் இருக்கிறது. ஆனல், அந்த சர்ட்டிஃபிகேட்டைப்
பெறுவது பெரிய சிரமமாக இருக்கிறது. பார்த்துவிட்டுப் போகிற
அதிகாரி மேலோட்டமாகப் பார்க்கிறார். விவசாயிக்குத் தெரியும்,
இங்கு தோண்டினல் துரவுக் கிணருக இருக்கும், இங்கு தோண்டினல்,
மண் கிணருக இருக்கும் என்று அனுபவ ஞானத்தை வைத்துச் சொல்
கின்றபொழுது, நிலநீர் வளம் நல்லமுறையில் இருக்கிறது.
ஆராய்ச்சிகளை எல்லாம் ஆராய்ச்சி அளவில் வைத்திருக்கிறார்கள்
போல் இருக்கிறது. அதை நல்லமுறையில் அனுபவ ரீதியாகச் செயல்
படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிரு
அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும்.

பொதுவாக, இங்கே நியமனங்கள் குறித்துச் சொன்னர்கள்.
உண்மையிலே, எல்லா வங்கிகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் நீங்கள்
நியமனம் செய்கிறீர்கள். வங்கிகளிலே பங்குபெறவேண்டிய
மைனரிட்டி சமுதாயத்திற்கு நிச்சயம் நியமனம் இருக்கவேண்டும்.
மற்றவர்கள் எல்லாம் ஓட்டுமுறையிலே வந்துவிட முடியும். நிலவள
வங்கியிலே 56 மெம்பர்கள் இருக்கிறார்கள்.

மைனரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கேட்கிறார்கள் என்று
சொல்லும்போது அதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும், அதற்குத்
தயாராக இருக்கவேண்டும்.



மற்றவர்கள் சொன்னதுபோல், கட்சிக் கண்ணேட்டத்தோடு நீங்கள் செய்கிறீர்கள் என்று சொல்லவில்லை. அதே நேரத்தில், தகுதியானவர்களைப் பொறுப்பானவர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்மீது, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல அனுதாபமும், பாசமும் கொண்டுள் ளார்கள். நாட்டிலே அவர்களுக்கும் ஒரு பங்குவேண்டும். தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த வங்கியிலே அவர்கள் அங்கம் வகிக்க முடியாது. மக்களுடைய குறைகளைச் சொல்கிற நேரத்திலே, அதை எடுத்துச் சொல்வதற்குப் போதிய அவகாசத்தை அளிக்கவேண்டும். அதற்கு வேண்டிய எல்லாவிதமான ஏற்பாடு களையும் செய்யவேண்டும்.

என்னுடைய வாலாஜாபேட்டை தொகுதியிலே, கூட்டுறவு வங்கி, 1972-லிருந்து செயல்படாமல் இருந்துவருகிறது. நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னர்கள். தங்கத்திற்குப் பதிலாக, இரும்பை வைத்துவிட்டார்களென்றெல்லாம் இந்த மன்றத்திலே சொல்லப் பட்டது. அந்த நகர கூட்டுறவு வங்கி வாலாஜாபேட்டையிலே இருக்கிறது. அது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. வங்கி யினுடைய தலைவர் இந்தக் கட்சியினுடைய அங்கத்தினராக இல்லாமல் இருந்தார். ஆனல், அவர்மேல் கேஸ் போட்டபிறகு, இந்தக் கட்சி யில் சேர்ந்திருப்பதாக நண்பர்கள் சொல்கிறார்கள்.

கட்சிக் கண்ணேட்டத்தோடு பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றல், அவர் எனக்கும் நெருங்கிய நண்பர்தான். தவறு செய்பவர்கள் எந்தப் பக்கத்தில் இருந்தாலும், அவர்களைத் தட்டிக் கேட்கத் தவறிவிட்டால், நிச்சயமாக மக்கள் நம்மீது சந்தேகப்பட ஆரம்பித்துவிடுவார்கள். அதைச் சீர்திருத்தி, அந்த வங்கி நல்லமுறையிலே செயல்பட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறி கேட்டுக்கொண்டு, கடன்களைத் தள்ளுபடி செய்வது சம்பந்தமாக இந்த வங்கிகள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. எஸ். நடராசன்</u>: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

[திரு. எஸ். நடராசன்] [1974 ஏப்ரல் 5

இங்கே பேசியவர்கள், கூட்டுறவு இயக்கத்தைச் சாட வேண்டுமென்று எண்ணியவர்கள், ஊருக்கு இளைத்தவன் என்று பழமொழி சொல்வதுபோல், கூட்டுறவு இயக்கத்தைக் குறைசொல்லிப் பேசுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டுறவு இயக்கம் இந்த ஆட்சியில் வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பது கிராமத்தில் போய்ப்பார்த்தால் நன்றாகத் தெரியும். 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த வயல் ஏழையின் வயல், இந்த வயல் பணக்காரன் வயல் என்று கண்டுபிடிக்கக் கூடிய அளவுக்கு ஏழைகள் கடன் வாங்க வசதியில்லாமல் கஷ்டப்பட்டக் காலமாகயிருந்தது. ஆனால், கூட்டுறவுத் துறை வழங்குகின்ற கடன், தேவைக்கேற்றபடி கொடுக்கின்ற கடன், குறித்த காலத்திலே கொடுக்கின்ற முறை, இவைகளின் மூலமாக, இன்றைக்கு விவசாயத்திலே முன்னேறி, விவசாயத்திற்கு அதிக வட்டிக்குக் கடன் வாங்குகிற முறை மாறி, பசுமைப் புரட்சி ஏற்பட்டு, தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்றால், அது கூட்டுறவுத் துறையில் இந்த அரசு செய்ததாகும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், மொத்த விற்பனைப் பண்டகசாலை பற்றி குறை கூறினார். மொத்த விற்பனைப் பண்டகசாலை, தமிழகத்தில் பல இடங்களில் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. மொத்த விற்பனைப் பண்டக சாலை, பொருள்களை விலை ஏற்றம் செய்யமுடியாமல், தனிப்பட்டவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு விலையை ஏற்றமுடியாமல் விலையை ஒரு கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குச் செய்திருக்கிற சாதனை மிக முக்கியமானது. அது இல்லாவிட்டால், தனிப்பட்டவர்கள் தாங்கள் வைத்ததுதான் விலை என்ற நிலை உருவாகியிருக்கும்.

இன்றைக்கு விலை ஓரளவிற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. பற்றாக் குறை இருந்தாலும், அந்தப் பொருள்கள் எல்லாம் ஓரளவிற்குக் கிடைக்கிறது என்றால், அது மொத்த விற்பனைப் பண்டகசாலைகளால்தான் என்று சொன்னால் மிகையாகாது.

மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்குச் சில இடையூறுகளும் இருக்கின்றன. அதனுடைய வியாபாரம் பெருக முற்படுகிற நேரத்தில், கிளைகள் வைக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகள் கிளைகளை வெவ்வேறு பெயரில் ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் எல்லா கிளைகளையும் ஒரே பெயரில் ஆரம்பித்துவிடுவதால், வரித் தொல்லை அதிகம் ஏற்படுகிறது. அதிக



1974 ஏப்ரல் 5] [திரு. எஸ். நடராசன்]

வரியைக் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ரூ. 10 இலட்சத்துக்கு மேல் வியாபாரம் செய்தால், 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் வரை சர்சார்ஜ் விதிப்பதால், மொத்த விற்பனைப் பண்டக சாலையைப் பாதிப்பதாக அது இருக்கும்.

மொத்த விற்பனைப் பண்டகசாலை, சிறப்பங்காடி ஆகியவற்றிற்குக் கட்டிடம் கட்டுவதற்கும், அங்கங்கே உற்பத்தி செய்கின்ற எண்ணெய் முதலியப் பொருள்களுக்குத் தொழிற்சாலை அமைத்துக்கொள்வதற்கும் வழங்குகின்ற கடன், ஊக்குவிக்கின்ற தன்மை, இன்றைக்கு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மிகச் சிறந்தமுறையில் இயங்க ஏதுவாக இருக்கும். அது இன்னும் நல்லமுறையில் இயங்க சர்க்கார் பங்குதொகை அதிகமாகக் கொடுத்துவிட்டால், இன்னும் சிறப்பாக இருக்கும். அதற்கு அளிக்கின்ற கடனையும் அதிகமாக அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அரசு நிர்வாகங்கள் டெண்டர் பெறுகின்றபொழுது மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு 5 சதவிகிதம், 6 சதவிகிதம் கூடுதல் நிலையில் கொள்முதல் செய்தால், விற்பனைப் பண்டக சாலைகளை ஊக்குவிப்பதாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். டெண்டர் பெறுகிறவர்கள் குறைந்த விலைக்கு டெண்டர் பெற்று, கலப்படம் செய்கிறார்கள். ஆனால், அந்தக் கலப்படம் என்ற பேச்சுக்கே, மொத்த விற்பனைப் பண்டகசாலையில் இடமில்லை. ஆதலால், குறித்த விலைக்கு விற்பனைப் பண்டகசாலையில் வாங்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர வங்கிகள் சிறந்த முறையிலே இயங்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். காப்பு நிதி, பிக்ஸட் டெப்பாசிட் இரண்டையும் நகர வங்கிகள் மத்திய வங்கியிலே போடுகின்றன. அப்படி போடுகின்றபொழுது, அதற்கு அளிக்கப்படுகின்ற வட்டி $5\frac{1}{2}$ சதவீதமாக இருக்கிறது. ஆனால், நகர வங்கிகள் தம்முடைய டெப்பாசிட்டர்களுக்கு 9 சதவிகிதம் வட்டி கொடுத்தும், மத்திய வங்கியிலே காப்பு நிதியாகக் கொடுக்கும்போது, குறைந்த வட்டியே பெறுகின்றன. 8 சதவிகிதம், $8\frac{1}{2}$ சதவிகிதம் என்று அவர்கள் வட்டி கேட்கின்ற நேரத்தில், நகா வங்கிகள் போடுகிற தொகைக்கும் அதே வட்டி கொடுக்க அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். நடராசன்] [1974 ஏப்ரல் 5

நகர வங்கிகளிலே மாநிலம் பூராவும் வேலை செய்கின்ற ஊழியர்களை ஒரே கேடரில் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, அவர்களுக்கும் வைத்திய வசதி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. நகர வங்கிகளில் நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள் இது போன்ற நிறுவனங்கள் தங்களுடைய நடப்புக் கணக்கை தொடங்குவதற்கு அரசு அனுமதி அளிக்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, நமது மாண்புமிகு உறுப்பினர் துரை கோவிந்த ராசன் பேசுகிறபோது ஏதோ தஞ்சை மாவட்ட கூட்டுறவு சங்கத்திலே தேங்காய் கொள்முதல் செய்ததில் தவறு ஏற்பட்டதாகக் குறிப்பிட்டார். அதற்கு பல விதிமுறைகள் இருக்கின்றன. தேங்காய் கொள்முதல் செய்வதற்கு ஒருவர் போகமுடியாது, 3 பேர் போவார்கள். விலைகளை விசாரிப்பார்கள். எந்த இடத்தில் விலை குறைவாக இருக்கிறதோ அங்கேதான் வாங்குவது வழக்கம். அப்படி அதிலே ஏதாவது தவறு நடந்திருக்குமானால் அதைச் சுட்டிக் காட்டினால், அதன் தலைவர் என்ற முறையில், அதன்மீது நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்பெனிகளிடத்திலிருந்து வாங்கினால் அவர்களிடத்தில் கொட் டேஷன் வாங்கலாம். விவசாயிகளிடத்தில் பில் புக் எதுவும் கிடையாது. ஆகவே, அவர்களிடத்தில் கொட்டேஷன் வாங்க முடிவதில்லை. அதிலே தவறு இருந்து அதைச் சுட்டிக்காட்டினால் அதைக் கண்டிக்க, நடவடிக்கை எடுக்க இருக்கிறேன். துரை கோவிந்தராசன் அவர்கள் டைரக்டராக ஆக வேண்டும் என்பதற்காக கட்சி மாறி திரும்ப இந்த கட்சிக்கு மாறி வந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையில் ஒருவரைப் பற்றி சொல்லக் கூடாது. அந்தக் கட்சியிலிருக்கிறார். இந்தக் கட்சியிலிருக்கிறார் என்று அப்படி விளக்கம் தரக்கூடாது.

திரு. துரை கோவிந்தராசன் : பதவியை வாங்கிக்கொண்டு போயிருக்கிறார் என்று சொன்னால் அந்தப் பதவி என்ன பதவி என்று தெரியவேண்டுமல்லவா? அது என்ன பதவி என்று எனக்குத் தெரிய வில்லை. இது என் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் அதைச் சொல்ல வேண்டும்.



1974 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையில் விமரிசனங் கள் பண்ணவேண்டாம். அவர் சொன்னதற்கு மட்டும் விமரிசனம் செய்யுங்கள்.

திரு. எஸ். நடராசன் : மற்றொன்று. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கழகத்துக்கு அரசு வழங்கும் கடனின் வட்டி ஒரு பகுதியை ரிசர்வ் பேங்கு கொடுத்து உதவுவதைப் போல மாநில அரசு கூட்டுறவு பண்டக சாலைகளுக்கு வட்டிச் சலுகை அளிக்கவேண்டும். கட்டுப்பாடான பண்டங்களை வழங்குவதில் கூட்டுறவுத் துறைக்கு நஷ்டம் ஏற்படு கிறது. உதாரணமாக, ஜீனி, மண்ணெண்ணெய் போன்ற பண்டங்களை விற்கும்போது வேறு பொருள்களை விற்க முடியவில்லை. அதனால் ஏற்படுகிற நஷ்டம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது. ஆகவே, அந்த நஷ்டத்தைப் போக்க அரசு ஒரு நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு மானிய அமைச்சரவர்கள் இந்த அவையின் முன் வைத்த கூட்டுறவு மானிய கோரிக்கையின் மேல் எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சபையின் முன்னுள்ள மானியத்தின் மீது கூட்டுறவு பால் விநியோகத்தைப்பற்றி சில ஆலோசனைகள் சொல்லலாம் என்று கருதி யிருந்தேன். ஆனால் நீண்ட நேரமாக இந்த அவையில் நடந்த விவாதத்திலே பால் விநியோகத்தை இன்னொரு துறையிலே இருப்ப தாலே அமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்லாத நிலையில் இருப்பதாலே அங்கத்தினர்கள் அனைத்துத் துறையைப்பற்றி பேசுவ தற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறைகளையெல்லாம் ஒரே அமைச்சரின் துறையில் இருந்தால் அங்கத்தினர்களுக்கு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கும். இப்போது அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆகவே, எல்லா துறை களையும் ஒரே அமைச்சரின் துறையிலே வந்தால் நல்லதாக இருக்கும் என்ற என் பணிவான ஆலோசனையைக் கூறிக்கொள்கிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்] [1974 ஏப்ரல் 5

அடுத்தபடியாக கூட்டுறவுத் துறையிலே பல காலமாக தேர்தல் முறையிலே இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல் புரிந்து வந்தன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயக்குநர்களை நியமன முறையில் தேர்ந்தெடுப்பதைப் பார்க்கிறோம். முதலில் அதிக மான மெம்பர்களை தேர்ந்தெடுத்துவிட்டு பிறகு தேர்தலிலே குறைந்த மெம்பர்களைத் தந்தால் அதிலே ஜனநாயகம் இருக்கமுடியாது. அப்படிச் செய்தால் நாம் அந்த ஜனநாயகத்தைக் கொலை செய்ததாகத் தான் ஆகும். ஆகவே நியமனம் என்பது கட்சி நோக்கத்தோடு செய்யப்பட்டது என்றுதான் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். ஊரிலே இருக்கிறவர்களும் இதே கருத்தைத்தான் சொல்கிறார்கள்.

ஆகையினால் இங்கே பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. எல்லா சங்கத்திலும் இருப்பதாக நான் சொல்லவில்லை. சில சங்கங் களிலே இருக்கிறது. உதாரணமாக சொல்வதானால் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் என்று ஒன்று இருக்கிறது. அந்த கூட்டுறவு சங்கத்தில் அங்கம் வகிக்கும் இயக்குநர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய சில நபர்களை அங்கத்தினர்களாக ஆக்கி எரு போன்ற வற்றை அவர்களுக்குள்ளே வழங்கிக் கொள்கிறார்கள். அது எந்த சங்கம் என்பதை அமைச்சரவர்களிடத்தில் தனியாக இது முடிந்த பிறகு சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறப்பு அங்காடிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளை சொல்லிக் கொள்கிறேன். இதிலே இருக்கிற அன்றாடம் உபயோகிக்கிற பொருட்களின் விலைவாசி அதிகமாக இருக்கிறது. ஆனால் மார்க்கெட்டிலே குறைவாக இருக்கிறது. அமைச்சரவர்கள் சொல்லலாம் அங்கே சுத்தம் செய்து கொடுக்கிறார் கள். அதனால் விலை அதிகமாக இருக்கிறது என்று. இருந்தாலும் விலைவாசி அங்கு அதிகமாக இருக்கிறது.

உதாரணமாக மண்ணெண்ணெய் போன்ற பொருட்கள் அங்கே கிடைக்கவில்லை. லாங்கிளாத் கொடுக்கிறார்கள் என்று சொல்லி குறிப்பிட்ட 4, 5 பேருக்குக் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அது எங்கே போகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. ஆகவே இதைக் கண்காணிக்கவேண்டும்.



1974 ஏப்ரல் 5] [திரு. கு. அ. பொம்மன்]

அடுத்து, நிலவள வங்கியைப் பொறுத்தவரையில் எங்கள் கூடலூரில் போன வாரம் சர்வ கட்சி கூட்டம் போட்டு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்றனர். அதிலே ஏழை விவசாயி களுக்கு எந்தவிதமான உபகாரமும் இல்லையென்பதைச் சொல்லி யிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை அமைச்சரவர்களிடத்தில் கொடுத்திருக்கின்றேன். அதற்கு அமைச்சரவர்கள் பரிகாரம் காண் பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கூட்டுறவு சங்கத்திலே வாகனங்கள் (வெஹிகில்ஸ்) இருக் கின்றனவே அவைகளை மிஸ்யூஸ் பண்ணுகிறார்கள். அவர்களுடைய கட்சி காரியங்களுக்காக பயன்படுத்துகிறார்கள். இது மக்களுக்கு நன்கு புரிகிறது. இதை ஒரு கட்டுமானத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் மழை வந்து சில நேரங்களில் கெடுதல், வெள்ளாமைக்கு ஏற்பட்டு விடுகின்றது. அந்த நேரத்திலே கூட்டுறவு சங்கங்களாலே ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட கடன்களை கண்டிப்பாக தர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே ஏற்கனவே நஷ்டம் ஏற்பட்டு பணம் கட்டமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகையினாலே அதைப் பரிசீலனை செய்து வெள்ளாமை கெட்டுப் போன விவசாயிகள் மனுக் கொடுத்தால் காலம் தள்ளி கடனை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணம் கட்டவில்லை என்று சொன்னாலும் அவர்களுக்கு மீண்டும் பண உதவி செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணம் கட்டவில்லை என்று சொன்னால் பெனால்ட்டி, தண்டத் தீர்வை போடுகிறார்கள். இதை ரத்து செய்தால் அவர்களுக்கு நன்மையாக இருக்கும்.

இப்பொழுது இம்மாதிரி பணம் கொடுக்கவில்லையென்றால் விவசாயிகள் பாவம், இரண்டு மாடுகள்கூட இல்லாமல் இருக்கிறார் கள், அவர்கள் வைத்துள்ள மண்வெட்டி, முள்தான் இருக்கிறது, அந்தத் தட்டுமுட்டு சாமான்களை அதிகாரிகள் ஜபர்தஸ்தின் மூல மாக ஜப்த்தி செய்து அதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கை மிகவும் மோசமாக ஆகிவிடுவதால் வசூல் செய்ய வேண்டாமென்று நான் சொல்லவில்லை, ஆனால் சாந்தமாக தவணை முறையில் பணத்தை வசூலிக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்] [1974 ஏப்ரல் 5

அடுத்து, இந்த உரங்களைப் பற்றிப் பார்க்கும்பொழுது 1969–70-ல் சுமார் 42 கோடியே சொச்சமாக இருந்தது 60 கோடியே சொச்ச மாக சுமார் 18 கோடி அளவில் உயர்ந்திருக்கிறது. யூரியாவை எடுத்துக்கொண்டால் அன்று 42 ஆக இருந்தது. இப்போது 68 ஆக ஆகியிருக்கிறது. சூப்பர் பாஸ்பேட் 36 ஆக இருந்து 60 ஆக உயர்ந் துள்ளது.

பணம் அதிகமாக இல்லாததால் நடுத்தர விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே இந்தப் பணத்தை அதிகமாக ஒதுக்க வேண்டு மென்றும், விவசாயிகளின் நன்மைகளைக் கருத வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பு. செ. முத்துச்செல்வன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இன்றையதினம் கூட்டுறவுத்துறை எல்லோராலும் பாராட்டத் தக்க அளவிற்கு ஒரு மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறை முன்பெல்லாம் பெரிய செல்வந்தர்களிடத்திலேயும், மிட்டா மிராசுதார்களிடத்திலேயும் இருந்து வந்தது. அப்படி யிருந்துவந்த ஒரு இயக்கத்தை மாண்புமிகு முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள், சாதாரண, சாமான்ய ஏழை எளிய பாமர மக்களையும், அரிசன மக்களையும் அதில் ஈடுபடுத்தி இன்னும் குறிப்பாக பெண்களை அதிலே உறுப்பினர்களாக நியமித்து, அவர்களையும் ஈடு படுத்தி அதை மக்கள் இயக்கமாக மாற்றியிருக்கிறார்கள். அந்தப் பெருமை முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரையே சாரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைத்தொடர்ந்து இன்றையதினம் உள்ள கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். இங்கேயுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலபேர் அவரை ஜனநாயக சக்திக்கு விரோதமானவர் என்றெல்லாம் படம் பிடித்துக் காட்டினார்கள். ஆனால் உள்ளபடியே ஜனநாயகம் என்றால் சாமான்ய மக்களை நியமிப்பதுதான் ஜனநாயகமே தவிர செல்வந்தர் களை ஈடுபடுத்தி, கூட்டுறவுச் சட்டத்தின்படியும், கூட்டுறவுத் துணை விதிகளின்படியும் சாமான்யர்கள் அதிலே வரமுடியாதபடி செய்த



1974 ஏப்ரல் 5] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

நிலைமைகளை மாற்றி இன்றையதினம் அந்தச் சட்டத்தைத் திருத்தியது தவறு அல்ல, அது ஜனநாயகக் கொள்கைக்கு உகந்ததுதான் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக அவர்களைப் பாராட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு இயக்கத்தில் கிராம நாணயச் சங்கங் கள் பெரும்பாலான கிராமங்களில் பணியாற்றுகின்றன. அந்த கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் சில "நான்–வயபிளாக" இருக்கிறது. அதன் செலவுக்குச் சரிக்கட்ட முடியாத நிலைமையிருக் கிறது. எனவே பத்து மைலுக்கு ஒரு ரூரல் பேங்கை ஏற்படுத்தி, அக்ரிகல்சுரல் பேங்க் என்று ஒவ்வொரு பத்து மைலுக்கும் ஏற்படுத்தி, ஒவ்வொரு ஒன்றியத்திலும் நான்கு அல்லது மூன்று அக்ரிகல்சுரல் பேங்குகளை ஏற்படுத்தி அதிலே டெபாசிட் செய்யவும், பணத்தைப் போடுவதற்கும், பணத்தை எடுப்பதற்கும் பாஸ் புக்கை விவசாயி களுக்குக் கொடுத்து விவசாயிகள் பேங்குகளுக்குச் செல்லும் பழக் கத்தை உருவாக்கித் தர வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் இந்த சிறிய கூட்டுறவுக் கழகத்தில் அந்தத் தலைவரின் பொறுப்பிலே எல்லாக் காரியங்களும் நடைபெற வேண்டியிருக் கிறது. அதற்கென்று தனியாக அலுவலகம்கூட இல்லை. ஒருவருடைய சொந்த வீட்டிலேயே அந்த அலுவலகத்தை வைத்துக்கொள்கிறார்கள். அந்த மினிட் புத்தகத்தை அவர்கள் இஷ்டப்படி காரியமாற்றப் பயன் படுத்திக்கொள்வார்கள். இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளி லிருந்து காப்பாற்ற இதுபோன்ற ரூரல் பேங்குகளை, அக்ரிகல்சுரல் பேங்குகளை நிறுவி "பெய்ட் செக்ரட்டரி"யையும் நியமித்தால் இன்னும் சிறப்பாக இந்த இயக்கம் வளரும்.

மாநில நிலவள வங்கிகள் 6, 7 ஆண்டுக்காலத்திலே ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்குமேல் கடன் வழங்கியிருக்கிறது. அந்தப் பெருமை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசையேதான் சேரும். இன்றைக்கு நான் சார்ந்திருக்கிற மாநில நிலவள வங்கியில் கடன் அளித்தது ஏறத்தாழ 138 கோடி ரூபாய் என்று சொல்லும் பொழுது அதனால் ஏறத்தாழ 138 லட்சம் ரூபாய் லாபம் வருகிற அளவில் இந்த வங்கி இயங்குகிறது. பணியாளர்களுக்கு மட்டும் சுமார் 69 லட்சம் ரூபாய் செலவாகிக்கொண்டு இருக்கிறது.

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1974 ஏப்ரல் 5

அரசு சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் அலுவலாளர்களுக்கு ஏறத் தாழ 25 லட்சம் அல்லது 30 லட்சம் ரூபாய் வரையில் செலவாகிக் கொண்டிருக்கிறது. எல்லா அலுவலாளர்களையும் எங்கள் வங்கியின் மூலமாகவே நியமித்தால் இன்னும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கும். ஏனென்றால் இந்த மாநில நிலவள வங்கிகளில் நாங்கள் எவ்வளவுதான் கடன்கொடுத்தாலும் அதைச் செயல்படுத் தும்பொழுது பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதை அக்ரோ எஞ்ஜினியரிங் சர்வீஸ் ஃபெடரேஷன் என்றும், லிஃப்ட் இர்ரிகேஷன் சொசைட்டி என்றும், மாநில அளவிலே 3 பகுதிகள் இருக்கின்றன. ஸ்டேட் ஜியாலஜிஸ்ட் என்ற அமைப்பில், நில நீர் ஆய்வுக் கழகம் இருக்கிறது. ஒன்றுக்கொன்று எஸ்டிமேட் தயாரித்து, எல்.சி.இ. போன்றவர்களெல்லாம் அரசுச் சார்பிலே நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

ஏ.ஆர்.சி. சார்பிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், வங்கியின் சார்பிலேயும் நியமிக்கிறோம். இப்படிப் பல முனைகளில் பணியாற்றும் பொழுது சீரான முறையில் பணியாற்றுவதற்கு வழியில்லாமல் இருக் கிறது. அதை மாற்றும்வகையில் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தி மாநில நிலவள வங்கியின் கட்டுக்கோப்பின்கீழ் லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டியையும், மாநிலத்திலே உள்ள அக்ரோ எஞ்ஜினியரிங் சர்வீஸ் ஃபெடரேஷனையும் (ஸ்டேட் ஜியாலஜிஸ்ட்), நில நீர் ஆய்வுக் கழகத்தையும் எங்கள் கட்டுப்கோப்பிலே கொண்டு வந்து விட்டால் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற முடியும், இந்த அரசு நல்ல பெயரை வாங்குவதற்கு நல்லமுறையில் அமையும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11–00)

நிலவள வங்கிகள் மூலமாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் டிஸ்ட்ரிக்ட் லெவலில் ரிவியூ கமிட்டியை மாதந்தோறும் கூட்டி உத்தரவிட்ட உடனே கடன் கொடுக்கிறோம். அதிலே அவர்களே கூட ரெவியூ செய்து இந்தக் காரியங்களை நிறைவேற்றவில்லை என்று கண்டித்தாலும்கூட நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அதை ஒருமுகப்படுத்தி மாநில நில வள வங்கிகளின் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வந்தால் சிறப்பாக அமையும்.

நீரேற்றுக் கழகங்கள் நம்முடைய மாநிலத்தில் சிறப்பாக அமைந் திருந்தாலும்கூட, இதைவிட மகாராஷ்டிர மாநிலத்தில் நீரேற்றுக் கழகங்களுக்கு அடித்தளத்திலிருந்து மானேஜிங் டைரக்டரை



1974 ஏப்ரல் 5] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

நியமிக்கும் பொறுப்பையும், மற்ற நிர்வாகஸ்தர்கள், பணியாளர்களை நியமிக்கும் பொறுப்பையும் வைத்திருக்கிறார்கள். அதனால் உடனடி யாக காண்டிராக்ட் விட்டு காரியங்களை நிறைவேற்ற முடிகிறது. பிரம்மாண்டமான திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக் கிறார்கள். நாங்கள் எல்லாம் போய்ப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஐந்தடி விட்டமுள்ள குழாய்களைப் பதித்து தண்ணீர் கொண்டு சென்று இரண்டாயிரம் ஏக்கர், மூவாயிரம் ஏக்கர், ஆறாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுக் கொண்டிருக்கின்றன. குன்றுப் பிரதேசங்களில் அவர்கள் அப்படிச் செய்யும்போது அதைவிட நம்முடைய சமவெளிப் பிரதேசங்களில் குறைந்த செலவில் செய்ய முடியும்.

மேல் மட்டத்திலிருந்து ஆரம்பிக்காமல் மாநில அளவில் இருந்து உத்தரவிடாமல் அடித்தளத்திலிருந்து நீரேற்றுக் கழகத்தின் பொறுப்பிலே பணியாளர்களையும், நிர்வாகத்தையும் அமைத்தால் அதிகமான நிலங்கள் பாசன வசதி பெற வசதியாக இருக்கும்.

எங்களுடைய மாவட்டத்தில் வேலாயுதம்பாளையும் கூட்டுறவு நீரேற்றுக் கழகம் சிறப்பாகப் பணியாற்றுகிறது. ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம் ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதித் திருக்கிறார்கள், அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மூன்று நான்கு கூட்டுறவுக் கழகங்களை ஆரம்பிக்க இரண்டாண்டுகளுக்கு முன்பே ஏற்பாடு செய்தோம். ஆனால் நான் அந்தத் துறையிலிருந்தும்கூட, இரண்டு ஆண்டு காலமாக அனுமதி வரவில்லை. நில நீர் ஆய்வுக் கழகத்தின் அனுமதிகூட வரவில்லை. கல்பாளையம் நீரேற்றுக் கழகம் கொள்ளிடம் படுகையில் குழாய்க் கிணறுகளை அமைத்து சிமெண்ட் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் கொண்டு சென்றால் ஆயிரம் ஏக்கருக்கு மேல் சாகுபடியாக வசதி ஏற்படும். சிறுகாம்பூர் அருகில் கொள்ளிடம் ரிவெர்பெட்டில்—அதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது; கீழ் இருக்கும் விவசாயி களுடைய ரைப்பேரியன் ரைட்சுக்குப் பாதகம் ஏற்படாது—அந்த மாதிரி அமைத்துத் தந்தால் 500 ஏக்கர் நிலம் சாகுபடியாக வசதி இருக்கும்.

வார்த்தலையில் ஐயாற்றங்கரையில் எப்போதும் தண்ணீர் இருந்து கொண்டிருக்கிறது. காவிரியின் பாக்வாட்டர்ஸ்—யாருக்கும் பயன் இல்லாமல் இருக்கிறது. அங்கு ஒரு நீரேற்றுக் கழகம் அமைத்துக் காரியமாற்றினால் இரண்டாயிரம் ஏக்கர் சாகுபடியாக வழிவகைகள் இருக்கின்றன.

இதையெல்லாம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அதிகாரிகளிடத்தில் சொல்லி ஏற்பாடுகளைச் செய்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு கூட்டுறவு மானியத்தை ஆதரித்து வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவுத் துறை பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும், நாட்டு உயர்வுக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்திலே ஆரம்பித்தார்கள். ஆனால் இன்று கூட்டுறவுத் துறையில் அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு இடம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஆளுகின்ற கட்சியினுடைய கிளை ஸ்தாபனங்களாக மாறிவிட்டன என்பதை அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த கூட்டுறவு அமைச்சர் மிகவும் கெட்டிக் காரர். எப்படி இதை கட்சி ஸ்தாபனமாக மாற்றலாம் என்று ஆராய்ந்து அதற்காக லிப்ட் இரிகேஷன் ஸ்கீமை ஆரம்பித்தார்கள். இப்படிப் புதிதாக ஆரம்பிக்கும்போது டைரக்டர்களாக எவ்வளவோ கட்சி ஆட்களைக் கொண்டு போய் போட்டார்கள். இயக்குநர் செல் வாக்கு கடைசி வரை வந்து முழுக்க முழுக்க கட்சியின் கிளை ஸ்தாபனங்களாக மாறிவிட்டன என்பதை வருத்தத்தோடு தெரிவித் துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை மக்களின் இயக்கமாக மாற்றப்பட வேண்டு மென்றால் அரசாங்கம், ரிஜிஸ்ட்ரார், பை-லா மூலமாக நியமனம் செய்யும் அதிகாரத்தை ஒட்டுமொத்தமாக எடுத்தெறிந்துவிட்டு தேர்தல் மூலமாகத்தான் வரலாம் என்று செய்யவேண்டும்.

(உறுப்பினர் பேப்பர் வெயிட்டைக் கையில் வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்)





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கீழே வைத்துவிட்டுப் பேசுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதை நான் உபயோகப்படுத்த மாட்டேன். (சிரிப்பு)

ஆகவே, இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் ஜனநாயகத்தைப் புகுத்த வேண்டுமென்றால், கட்சியின் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் நாமினேஷன் செய்யும் அதிகாரத்திற்குக் கட்டாயமாக முடிவு கட்டினால்தான் முடியும்.

திரு. டி. கணபதி: அங்கத்தினர் அவர்கள் பெண்களுக்கு இருக்கும் நாமினேஷனும் வேண்டாமென்று சொல்லுகிறார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: யாரா இருந்தாலும் நாமினேஷனே வேண்டாம். உங்கள் ஆட்சியில் It is all partisan பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும் நாமினேஷன் அதிகாரமே இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அப்போதுதான் கூட்டுறவு இயக்கம் ஒழுங்காக நடக்கும். இல்லை என்றால் கூட்டுக் கொள்ளை ஸ்தாபனமாக ஆகிவிடும்.

அந்தக் காலத்திலேயே, எங்கள் ஆட்சி இருந்த காலத்திலேயே சொன்னேன். இரண்டு முறைக்கு மேல் யாரும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் தலைமைப் பதவியில் இருக்கக்கூடாது. அமெரிக்கத் தலைவரே இரண்டு டர்முக்கு மேல் இருக்கக்கூடாது என்று இருக் கிறது. அப்படி இருக்கும்போது இங்கே ஒன்றும் கெட்டுப் போகாது. புதிதாக வரக்கூடிய நிலைமை இருக்குமானால் பழைய பெருச்சாளிகள் நீடித்து இருக்க முடியாத நிலை ஏற்படும். எங்கள் ஆட்சி இருந்த போதும் சொன்னேன்; அவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை; உங்கள் ஆட்சியிலும் கூறி வருகிறேன். நீங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த அளவுக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களாக இருக்கக்கூடியவர் களும் மற்றவர்களும் சாமர்த்தியமாக இருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

குடும்பமே கூட்டுறவுத் துறையில் வந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் இப்போது உடைத்தெறியப் போகிறார்களா; இல்லையா?

சமதர்மம் பேசிக் கொண்டிருக்கும் நீங்கள் பழைய ராஜாக்களை ஒழித்துவிட்டு இன்று இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலம் புதிய ராஜாக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையிலேயே இவர்களைத் தூக்கி எறிய உங்களுக்குத் தைரியமிருந்தால் ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவர்கள், சமதர்மத்தில் நம்பிக்கை யுடையவர்கள் என்று கூற முடியும். உங்களுக்கு அந்தத் தைரியம் வருமா என்பது சந்தேகம். எங்களுடைய அமைச்சருக்கு தைரியத் திற்குப் பஞ்சம் கிடையாது. அவர்கள் அடுத்த ஆண்டே அந்த முறையில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைப் போக்க முடியும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> இவ்வளவு அமைச்சர்கள் இருந்தும் இந்த அமைச்சரை மட்டும் "எங்கள்" அமைச்சர் என்று சொல்லக் காரணம் என்ன?

<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> எங்கள் மாவட்ட அமைச்சர்: நீங்கள் கூட எங்கள் மாவட்டந்தான் என்றாலும் அவர்கள் எங்கள் ஊர். அப்படிச் சொன்னாலாவது இந்தக் காரியம் நடக்குமா என்று பார்க்கிறேன். கோவாப்பரேட்டிவ் டைனஸ்டி போல் குடும்பம் குடும்பமாக இதிலே இருந்து கொண்டிருப்பது உடைத்தெரியப் படுமா? அவ்வாறு செய்ய தைரியத்துடன் முன்வருவார்களா?

கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய குறைகளைக் கூற விரும்பு கிறேன். தலைமைச் செயலகத்தின் கண்ணுக்கு நேராக இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கத்திலேயே கொள்ளையடிக்கப்படுகிறது. இங்கே இருக்கும் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தில் இதற்கு முன்னால் ஒரு அதிகாரி தலைவராக இருந்தார். அவர் கையாடல் செய்து விட்டார். பிறகு ஸ்பெஷல் ஆபீசர் போட்டார்கள். ஆனால் அந்த அதிகாரிக்கு ப்ரோமோஷன் கொடுத்து ஒரு இலாகாவுக்கு செக்ரடரியாக இருக் கிறார். இப்போது அதே கூட்டுறவு சொசைட்டியில் 30,000 ரூபாய் 40,000 ரூபாய் அளவுக்கு காசாளரே கையாடல் செய்திருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னே இருந்த அதிகாரி தவறு செய்தபோதே கடுமை யாக நடவடிக்கை எடுத்து தண்டனை அளித்திருந்தால் பின்னால் வருபவர்களுக்குப் பயம் இருக்கும். முன்னே தவறு செய்தவருக்கு ப்ரோமோஷன் கொடுத்தால் பின்னே இருப்பவர்கள் எப்படி ஒழுங் காக இருக்க முடியும்? தமிழகத்தின் தலைநகரில் இருக்கக்கூடிய





கூட்டுறவுச் சங்கத்திலேயே இந்த நிலை என்றால் மற்ற இடங்களில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி விவரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை. உடனடியாக இப்படிப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட கிரெடிட் சொசைட்டியில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று ஊழல் குற்றச் சாட்டிலேயே பார்த்தோம். எழுபத்தாறு இலட்சம் ரூபாய் பாழாகி இருக்கிறது. எழுபத்தாறு இலட்சம் ரூபாயை யாருக்குக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

<u>திரு. மா. வெ. கரிவேங்கடம்:</u> இதுபற்றி மாண்புமிகு அங்கத்தினர் சென்ற முறையே பேசினார்கள். அவர்கள் இன்று காலையில் இல்லை. நான் விளக்கம் தந்திருக்கிறேன். விளக்கத்தைப் படித்துப் பார்த்து விட்டு குற்றச்சாட்டைச் சொல்லட்டும்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> ஊழல் புகாருக்கு விளக்கம் கொடுத்ததைப் பார்த்தேன். அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். எழுபத்தாறு இலட்சம் போகும் வரை ஆடிட் டிப்பார்ட்மென்ட் என்ன செய்து கொண்டிருந் தது? எழுபத்தாறு லட்சம் பாழாகிவிட்ட பிறகு கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

<u>திரு. மா. வெ. கரிவேங்கடம்:</u> அந்த மாவட்ட வங்கி பிரிக்கப்படு வதற்கு முன்னால் தர்மபுரி—சேலம் இணைந்திருந்தபோது 20 லட்சம் ரூபாயைச் சேலம் மத்திய வங்கியின் தலைவராக இருந்த மணி கவுண்டர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இதுவரை வசூலிக்கப்பட வில்லை. ஐந்து லட்சம் 10 லட்சம் வசூலானது போக 22 லட்சம் ரூபாய் தவணை பாக்கி இருக்கிறது. பத்து ஆண்டு கடன்களாக வசூலிக்கப்படுகிறது. எனக்கு முன்னால் நாகராஜ மணியகார் தலைவ ராக இருந்தார். பத்து லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் வசூலிக்கப்படாமல் இருக்கிறது. "பேட் அண்டு டவுட்புல் டெட்ஸ்" என்பதிலே இவை எல்லாம் அடங்குகின்றன. மத்திய வங்கி என்பது—கூட்டுறவு நாணயச் சங்கத் தலைவர், ஒன்றியத் தலைவர் பரிந்துரை செய்து மத்திய வங்கிக்கு வந்த பிறகு குழுவில் வைக்கப் பட்டு அனுமதிக்கப்பட்ட கடன் மீண்டும் கூட்டுறவு நாணயச் சங்கத் தலைவருக்கு வந்து பட்டுவாடா செய்யப்படுகிறது. மத்திய வங்கித் தலைவருக்கும் பட்டுவாடாவுக்கும் சம்பந்தம் இல்—

[1974 ஏப்ரல் 5

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவருக்குப் பொறுப்பில்லை என்று சொல்லுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? எழுபத்தாறு லட்சம் ரூபாய் சாப்பிட்டிருக்கிறார்கள். ஊழல் புகாருக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்தில் கூட ஒத்துக் கொண்டார்கள். இப்போதுதான் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: எழுபத்தாறு லட்சத்தைப் பற்றிய விவரங்கள், விளக்கங்கள் எல்லாம் இருக்கின்றன. கலெக்டரைத் தலைவராகப் போட்டு இப்போது வசூல் நடந்து கொண்டிருக்கிறது. சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக எல்லாம் போய்விட்டது என்று சொல்ல முடியாது. எது எது போய்விட்டது, எதையெதை வசூல் செய்ய முடியும், யார் யார் கடன் பெற்றுக் கொடுக்கவில்லை. தலைவர் யார் என்று பார்த்து நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் அவர்கள் சொல்லுவது உண்மையா அல்லது திரு. கரிவேங்கடம் அவர்கள் சொல்லுவது உண்மையா?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: நான் ஒன்றும் வித்தியாசமாகச் சொல்லவில்லை. நான் சொன்ன அதே கருத்தைத் தான் அவரும் சொல்லியிருக்கிறார். எந்தெந்தக் கூட்டுறவு நாணய சங்கத் தலைவர்கள் எந்தெந்த ஆண்டில் இப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் எல்லாம் திட்டவட்டமாக எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி சில விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட பணம் வசூல் செய்ய முடியாமல் இருக்கிறது. ஓரிரு இடங்களில் பினாமி டிரான்சாக்ஷன்ஸ் கண்டு பிடிக்கப்பட்டு தலைவர் மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவுத் துறையில் பினாமி டிரான்சாக்ஷன்ஸ் அதிகமாக இருக்கிறது. எழுபத்தாறு லட்சம் ரூபாய் போகும் வரை விடலாமா? தவறு நடக்கும்போது இந்த இலாகாவில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி: தற்போது பை-எலக்ஷன் நடந்த வட ஆர்காடு மாவட்டத்திலுள்ள வங்கியில் ஒரு கோடி ரூபாய் பினாமி டிரான்சாக்ஷன் நடந்திருக்கிறது. தி.மு.க. ஆட்சி வந்தவுடன் பவர்



1974 ஏப்ரல் 5] [திரு. நா. வீராசாமி]

தூக்குப் போட்டுக் கொண்டார்கள். அதெல்லாம் அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குத் தெரியும். அதையும் சேர்த்துப் பேசினால் நலமாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: திரு. வீராசாமி அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள் பினாமி டிரான்ஷாக்ஷன்ஸ் இருக்கின்றன என்று. ஆகவே அதைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடிட் செக்ஷனைப் பலப்படுத்த வேண்டும். ஆடிட் செக்ஷனையும் சூப்பர்வைசிங் செக்ஷனையும் பிரிப்பது நல்லதல்ல. சூர்ப்பர்வைசர்களுக்குத்தான் எங்கெங்கே நெளிவுசுளிவுகள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க முடியும். வெறும் ஆடிட் மட்டும் என்றால் எட்டு ப்ளஸ் மூன்று பதினொன்று, சரி என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள்.

பின்னர், தேர்தல். தேர்தல் நடத்துவதில் எவ்வளவோ கோளாறுகள் இருக்கின்றன. தி.மு.க.வில் உள்ள ஒரு முக்கியஸ்தர் சென்று பயமுறுத்தி சப்-ரெஜிஸ்ட்ரார் ஒன்பது மணி நேரம் வெளியே நின்று பின்னர்தான் வந்திருக்கிறார்கள். ஆகவே, தேர்தல் நடக்கும்போது செல்வாக்கைப் பயன்படுத்துவது, பயமுறுத்துவது என்பவையெல்லாம் வருந்தத்தக்கவையாகும். இப்படி பயமுறுத்துவது என்றால் தேர்தல்கள் எப்படி ஒழுங்காக நடக்கமுடியும்? ஆகவே, கூட்டுறவுத் துறையை சுத்தப்படுத்துவதன் மூலமாகத்தான் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியுமே தவிர சுத்தப்படுத்தாமல் மேலும் மேலும் அசுத்தப்படுத்தினால் மக்களின் நம்பிக்கையை இழந்து விடுவீர்கள்.

இந்தத் துறை புனிதமானதொரு துறை. ஆகவே அதைத் தூய்மைப்படுத்த என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்ய வேண்டும்.

அதேமாதிரி திருவாரூரில் உள்ள மல்டி பர்பஸ் கூட்டுறவு சொசைட்டி பற்றிச் சொன்னார்கள். ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள சாக்குப்பைகளைக் காணோம். என்ன பதில் சொல்லியிருக்கிறார்களென்றால், காணாமல் போய் விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். காணாமல் போய் விட்டன. இயக்குநர்கள் ராஜினாமா செய்துவிட்டார்கள், நாங்கள் என்ன செய்வது என்று . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தவருன வியாக்கியானம் வேண்டாம். யார் யார் இயக்குநர்கள், யார் யார் தவறு செய்தார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதம் நோட்டீஸ் எல்லாம் கொடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே நடவடிக்கைகள் ஒன்றுமே எடுக்கவில்லை என்ற தவருன தகவலைக் கொடுக்க வேண்டாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மாதம்தான் நோட்டீஸ் போகப் போகிறது. இவ்வளவு நாட்கள் என்ன பண்ணினீர்கள்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஒரு கோடிக்குமேல் தவறு செய்திருக்கும்போது தணிக்கை செய்து, எது எது சரியான கணக்கு, எது எது தவறு என்று பார்த்து செய்யவேண்டியிருக்கிறது. ஒரு க்ரிமினல் கேஸ் போனுல்கூட மூன்று நான்கு மாதம் வக்கீல் பீஸ் வாங்குகிருர்கள். இது ஒரு பெரிய கணக்கு. ஆகவே, இவ்வளவு நேரம் ஆகும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஜஸ்டிஸ் டிலேட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைட் என்று சொல்வார்கள். காலதாமதம் ஏற்பட்டால் நீதி செத்து விடும். இந்தத் துறையில் காலதாமதம் செய்வது மிக மிக ஆபத்து. (மணியடிக்கப்பட்டது.) குறுக்கீடுகளுக்கும் சேர்த்து டைம் கொடுங்கள்.

வரதராஜன் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் போகிருேம் என்று சொன்னுர்கள் சட்டசபையில். இதுவரையில் எந்த நடவடிக்கையும் கிடையாது. அவர் உங்கள் கட்சிக்குள் சேர்ந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

பின்னர், ஹான்ட்லூம் கோவாப்பரேட்டீவ்ஸ், பிஷரீஸ் கோவாப்பரேட்டீவ்ஸ், இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டீவ்ஸ், மில்க் கோவாப்பரேட்டீவ்ஸ் என்று பல கோவாப்பரேட்டீவ்ஸ் உள்ளன.

திரு. நா. வீராசாமி: வரதராஜன் மீது நடவடிக்கைகள் கிடையாது என்று சொல்கிருர்கள். நடவடிக்கை எடுத்து கைதுசெய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்திருக்கிருர்கள். எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதல்ல. தவறு செய்த திராவிட முன்னேற்றக்



கழகத்தைச் சார்ந்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சொல்வது அபாண்டமான பொய். தவறு செய்யாத தி.மு.க. கழகத்தின்மீது கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மகிழ்ச்சி. பல கூட்டுறவு சொஸைட்டீஸ் உள்ளன. பிஷரீஸ் கோவாப்பரேட்டிவ்ஸ், மில்க் கோவாப்பரேட்டிவ்ஸ் என்று பல இருக்கின்றன. மில்க்குக்காக ஒரு டெப்டி ரெஜிஸ்ட்ரார் போட்டால் அவர்கள் எங்கெங்கு டையரீஸ் இருக்கின்றனவோ அவற்றைக் கவனிக்கிருர்கள். ஆகவே நான் சொல்வது ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு டெப்டி ரெஜிஸ்ட்ரார் போட்டு என்னென்ன கோவாப்பரேட்டீவ்ஸாக இருந்தாலும், பிஷரிஸ் கோவாப்பரேட்டீவ்ஸாக இருந்தாலும், ஹாண்ட்லூம் கோவாப்பரேட்டீவ்ஸ் ஆக இருந்தாலும், அல்லது மில்க் கோவப்பாபரேட்டீவ்ஸ் ஆக இருந்தாலும் ஒரு எல்லைக்குள் உள்ள எல்லாவற்றையும் அவர் கண்காணிப்பது என்ருல் நிர்வாகச் செலவு குறையும். ஆகவே, இந்த அடிப்படையில் செய்தால் நன்ருகயிருக்கும்.

அடுத்தபடியாக, கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ்ஸ். கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ்ஸ் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இப்போது விலைவாசிகள் விஷம்போல் ஏறி வருகின்றன. கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ்ஸ் மூலமாகத்தான் அதைக் கட்டுப்படுத்தமுடியும். குறிப்பாக, பெண்கள் இந்த கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டீவ்ஸில் அதிகப் பங்கெடுத்துக்கொள்ள வசதி செய்துகொடுத்தால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

சிறப்பு அங்காடிகளில் உள்ள சேல்ஸ் செக்ஷனில் உள்ளவர்களுக்கு இன்ஸென்டீவ் போனஸ் கொடுக்கவேண்டும். இன்ஸென்டீவ், போனஸ் என்று ஐந்து பைசா கொடுத்து பஸ்ஸே உட்காரும் அளவிற்கு ஒவ்வொரு ஸ்டாப்பிலும் நிறுத்திப் போகிருர்கள் அல்லவா. அதேமாதிரி இந்தச் சிறப்பு அங்காடிகளிலும் சேல்ஸ் செக்ஷனில் வேலை பார்க்கிறவர்களுக்கு இன்ஸென்டீவ் போனஸ் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அவர்கள் வருகிறவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்பார்கள். உப்பு இருக்கிறதா என்ருல் உப்பு இல்லை என்று சொல்லாமல் பருப்பு இருக்கிறது வாங்கிக் கொண்டு போங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு சாமர்த்தியம் பெறுவார்கள். இல்லையென்ருல் உப்பும் இல்லை பப்பும் இல்லை என்று சொல்லக்கூடிய . . .

[1974 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உப்பில்லாமல் பருப்பைப் பயன்படுத்தலாம் என்கிறார்கள் அம்மையார் அவர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பிஸினஸ் நாக் உங்களுக்கு தெரிய வில்லை. எதுவும் இல்லை என்று சொல்லக்கூடாது. உப்பு இல்லா விடில் பருப்பு இருக்கிறது என்று சொல்லவேண்டும். அதுதான் சாமர்த்தியம். ஆகவே அங்கு பணிபுரிகிறவர்களுக்கு இன்ஸென்டிவ் போனஸ் கொடுக்கவேண்டும். அப்போதுதான் வியாபாரம் நல்ல முறையில் முன்னுக்கு வரும். அப்போதுதான் நல்லமுறையில் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தமுடியும். பின்னர், பொருள் களை எல்லாம் ஸீஸன்களில் வாங்கி விற்கவேண்டும்.

Eighty per cent of the purchase is made in the open market.

ஸீஸனில் அக்ரிகல்ச்சரிஸ்ட்டிடம் சென்று வாங்கி பதப்படுத்தி வைக்கவேண்டும். நூற்று முப்பது பொருள்கள் வாங்கினால்போதும். உப்பு, மிளகாய் என்று வாங்கி வைக்கவேண்டும். அப்படிப் பொருள் களை ஸீஸனில் வாங்கி வைத்தால் விலைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

செங்கை கூட்டுறவு அங்காடியில் கண்ட்ரோல்ட் க்ளாத் போய் விட்டது என்ற செய்தியைப் படிக்கிறோம்.

மதுரையில் உர மூட்டைகள் கடத்தப்பட்டன என்று பார்க் கிறோம்.

ஆகவே தீவிரமான முறையில் கண்காணித்தால் இவற்றை எல்லாம் செம்மைப்படுத்தமுடியும், இல்லை என்றால் கூட்டுறவு மக்களின் நம்பிக்கையை இழந்து விடும்.

* THE HON. THIRU SJ. PA. ADITANAR: Sir, on a point of clarification.

அம்மையார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், நியமன தாகச் சொன்னார்கள். இது 1961-ம் வருடத்திய சட்டம். அதில் அதிகாரம்பற்றி. புதிதாக சட்டத்தைத் திருத்தி நியமனம் செய்த 27-வது செக்ஷனில் சொல்லியிருக்கிறது,

'The Government may nominate to the Committee such number of persons not exceeding three or one-third of the total number of the members of the Committee.'



[1974 ஏப்ரல் 5]

மூன்றில் ஒரு பங்கு என்பதை நாம் இன்னும் குறைத்திருக்கிறோம். ஐந்தில் ஒரு பங்கு 'One-fifth of the members can be nominated' என்றிருக்கிறது. பல ஆண்டுகளாக நியமன அதிகாரம் அரசின் கையில் இருந்தது மட்டுமல்ல. தாராளமாகப் பிரயோகித்துக் கொண்டும் வந்தார்கள். 1967-க்குப் பிறகு புதிதாகச் சட்டம் இயற்றியது மாதிரியாகவும், புதிதாக நாமினேட் செய்வதுமாதிரியும் சொல்வது உண்மை அல்ல. எவ்வளவோ வழக்குகள் ஹைகோர்ட் டுக்குக் கொண்டுபோனார்கள். நாமினேஷன் பாயின்டில் மட்டும் 30, 35 கேஸ்கள் கொண்டு போனார்கள். எல்லாக் கேஸ்களிலும் ஹைகோர்ட் நீதிபதிகள் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின்படி வழக்கறிஞர்கள் அனுசரித்து நடப்பது நல்லது. நாமினேஷன் அதிகாரம் 1961-ல் இருந்தே இருந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் செய்த தவறை நீங்களும் செய்தால் கூடிய சீக்கிரமே வெளியே போகப் போகிறீர்கள். அவர் கள் சட்ட நிபுணர், சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்கள் அவர் களுக்குத் தெரியும். தங்களுக்கு வேண்டியவர்களை நாமினேட் செய்து கொள்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அவர்கள் நாமினேஷன் பற்றிச் சொல்லியிருந்தால் நான் குறுக்கிட்டிருக்க மாட்டேன். அவர்கள் சொன்னது முன்பு இருந்த ஆட்சியில் நாமினேஷன் செய்ய வில்லை, இப்போதுதான் நாமினேஷன் பவர் புதிதாகப் புகுத்தப் பட்டிருக்கிறது என்ற முறையில் சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: "லூஃப் ஹோல்ஸ்" என்பதற்குத் தமிழில் என்ன சொல்வது? ஓட்டை உடைசல்கள் என்கிறோம். இஷ்டப்படி "பைலாஸ்" போட்டு அவர்களுக்கு வேண்டியவர்களை நாமினேட் செய்வது என்பதை அன்றும் கண்டித்தேன் இன்றும் கண்டிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "லூப் ஹோல்ஸ்" என்பதை ஓட்டை உடைசல் என்று சொல்வதற்குப் பதிலாக சந்து பொந்து என்று சொல்லலாம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சர்க்கார் பொறுப்பு இருந்தால் நாமினேட் செய்யவேண்டுமென்றிருக்கிறது. பல லட்சக் கணக்கான ரூபாய் பங்கு இருக்கும்போது சிலரை நாமினேட் செய்ய

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

வேண்டியிருக்கிறது. நாமினேட் செய்கிறவர்கள் தவறு செய்கிறவர்கள் என்றோ, அல்லது தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் யோக்கியமானவர்கள் என்றோ கணக்குப் போடுவது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆனால் ஜனநாயகத்தில் நியமனம் செய்யப்படுகிறவர்களை விட, தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் ஒரு படி உயர்ந்தவர்கள், அதைச் செய்யுங்கள் என்று சொன்னேன்.

திரு. செ. கந்தப்பன்: அப்படியானால் நியமனம் செய்யப்படுகிற ஆளுநர் அவர்களைக் கூட நியமிக்கக்கூடாது என்கிறீர்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: கூட்டுறவிற்கும், கான்ஸ்டிடியூஷனுக்கும் வித்தியாசம் இருக்கிறது. கூட்டுறவு முக்கியமாக மக்கள் நடத்துகிற இயக்கம், அதிலே மக்கள் பிரதிநிதி தான் இருக்க வேண்டும், கட்சிப் பிரதிநிதி இருக்கக் கூடாது.

* திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியததை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் கூட்டுறவுத் துறை மிட்டா, மிராசுகளின் ஏகபோக வாரிசாக இருந்த நிலை மாறி, ஏழை எளியவர்களும் இன்றைய தினம் அந்தத் துறையில் பங்கெடுத்துக்கொள்கிற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. ஒரு காலத்தில் ஏகபோகமாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களும், இன்று அங்கே இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்ற எரிச்சல் காரணமாக பல குறைகளை எடுத்துக் கூறிவருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் இந்த மன்றத்திற்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு காலத்தில் நிலவள வங்கியில் 50 ஏக்கர், 100 ஏக்கர் நிலச் சொந்தக்காரர்கள் தான் கடன் பெற்று வந்தார்கள். இன்றைய தினம், கழகம் பொறுப்பேற்ற பிறகுதான் சாதாரணமாக உள்ள 3 ஏக்கர், 4 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள் கூட, நிலவள வங்கி மூலமாகக் கடன் பெற்று கிணறு வெட்டுதல், ஆயில் இன்ஜின்



1974 ஏப்ரல் 5] [திரு. ந. நாச்சியப்பன்]

போடுதல் போன்றவற்றிற்குக் கடன் பெற்று, விவசாய உற்பத்தியைச் செய்து, அதனால் பயன் அடைந்து வருகிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. ஆண்டுக்காண்டு இந்த நிலவள வங்கி மூலம் சாதாரண விவசாயிகள் கடன் பெற்று விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற அடிப்படையில் கோடிக்கணக்கான ரூபாய்களை இன்றையதினம் வழங்கி வருகிறார்கள். அப்படி வழங்கி வருகிற நேரத்தில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

(திரு. கோ. இளங்கோவன்—தலைமை)

என்னுடைய பகுதியில் விவசாய மறுநிதிக் கழகத்தின் மூலமாக சிறு விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற திங்களில் 25 தேதிக்கு மேலாக யாருக்கும் கடன் வழங்கக் கூடாது என்று ஆணைபிறப்பித்து இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் பருவ மழை பெய்யவில்லை. அதனால் ஏரியில் தண்ணீர் இல்லை. மிகவும் வறட்சியாக இருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் கிணறு தோண்டி, தண்ணீர் இறவை செய்து புஞ்சைப் பயிர் செய்தால், கொஞ்சம் வசதியாக இருக்கும் என்ற கருத்தில் செய்வதற்காகக் கடன் கேட்டால், அந்த நேரத்தில் புதிதாகக் கடன் கொடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்து இருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். புதிய டீசல் இன்ஜின் வைப்பதாக இருந்தால், டீசல் இன்ஜின் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே மின்சாரப் பற்றாக்குறை இருந்த நேரத்தில், ஆயில் இன்ஜின் வைக்க அனுமதி கொடுத்து, மின்சாரம் வந்தவுடன் அந்த ஆயில் இன்ஜின் எடுத்து விட்டு மின்சார மோட்டார் பொருத்த வேண்டுமென்று ஒப்பந்தத்தின் மேல் ஆயில் இன்ஜின் கொடுத்தார்கள். ஆனால் இப்போது இருக்கிற நெருக்கடியான நேரத்தில் ஆயில் இன்ஜின் கொடுக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். கேட்டால், டீசல் நெருக்கடி இருப்பதால் இப்படிப்பட்ட உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், டிராக்டர்கள் வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். டிராக்டர்கள் மட்டும் டீசலில் ஓடவில்லையா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு நாளைக்கு டிராக்டருக்கு 40 லிட்டர் 30 லிட்டர் செலவாகும். ஆயில் இன்ஜினுக்கு 4–5 லிட்டர் இருந்தால் போதும்.

என்னுடைய பகுதியில் கிரசின் ஆயில் போட்டே ஆயில் இன்ஜின் ஓட்டுகிறார்கள். இன்றுள்ள நெருக்கடி நிலையில் கடன் கொடுக்கக் கூடாது, டீசல் இன்ஜின் கொடுக்கக்கூடாது என்று சொன்னால் எந்த அளவுக்கு விவசாய உற்பத்தி பாதிக்கும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய மறுநிதிக் கழகத் திட்டம் வருவதற்கு முன்னாலே சங்கராபுரம் கூட்டுறவு வங்கியில் 47 பேர் கடன் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் மனுதாரர்களுக்குக் கடன் வழங்கப்படவில்லை. அரசாங்கம் வரை அந்தப் பிரச்னையை எடுத்து வந்து சென்ற மாதத்திலே தான் அவர்களுக்குக் கடன் வழங்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. நிலவள வங்கிப் பெருந்தலைவரும் அனுமதித்தார்கள். கடனை வந்து பெற்றுச்செல்லுங்கள் என்று வங்கியிலிருந்து மனுதாரருக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்த உத்தரவு வந்து சேர்ந்து 3-வது நாளே, அரசாங்கத்திலிருந்து அந்தக் கடன் வழங்கக்கூடாது என்று கூட்டுறவுத் துறை மூலமாக ஆணையிடுகிறார்கள். 47 பேரும் ரொம்ப நாள் காத்திருந்தோம், இப்போது கடன் கிடைக்கிறது, வாங்கிச் செல்லலாம் என்று மகிழ்ச்சியோடு வருகிற நேரத்தில், அவர்களுக்குக் கடன் கொடுக்கமுடியாது என்று மீண்டும் கூறினால் அங்கே பொறுப்பில் இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு எவ்வளவு வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பருவ மழை பெய்யாததால் வறட்சியாக இருக்கிறது. கடன் வசூலை இந்த ஆண்டு தள்ளி வைத்தால் மிக நல்லதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கும் ஒரு சர்ட்டிபிகேட் கிராம கர்ணம் எழுதி வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் பல கிராமங்களில் இருக்கின்ற கணக்குப் பிள்ளைகளுக்குப் பல சங்கடங்கள் இருப்பதால் எழுதாமல் விட்டு விடுகிறார்கள். இன்றையதினம் அந்தப் பகுதியில் இருக்கும் அதிகாரிகள் எந்த அளவுக்கு அந்தப் பகுதியில் மழை இல்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிற காரணத்தால், கணக்குப் பிள்ளைகள் எழுதாவிட்டாலும், இருக்கிற நிலைமையை அனுசரித்து கொஞ்சம் தவணை தரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

வங்கியில் கடன் கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு இதுவரையில் வேலை நீக்கம் உத்தரவு வரவில்லை. எங்கள் வங்கியில் இரண்டு சார்





நிலைபதிவாளர்கள் இருக்கிறார்கள். நான்கு மேற்பார்வையாளர்கள் இருக்கிறார்கள். மதிப்பீடு தயாரிக்க மூன்று பொறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அங்கே வேலையில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே நிலவள வங்கியில் தவணை கட்டத் தவறிய மனுதார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானம் போட்டு அனுப்பினோம். இதுவரையில் அதிகாரிகளால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் தான், அடுத்து கடன் வாங்குகிறவர்கள் ஒழுங்காகப் பணத்தைக் கட்டுவார்கள். காரணம் கேட்டால், கூட்டுறவு சார் பதிவாளர் ஒருவர் தான் இருக்கிறார். அவர், கொடுக்கப்பட்ட கடன் மனுக்களையெல்லாம் பார்த்து சான்றிதழ் தருவதற்கும், மற்ற பணிகளைச் செய்வதற்கும் தான் முடிகிறது என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையைப் போக்குவதற்காக மேலும் கூட்டுறவு சார் பதிவாளர் நிலவள வங்கிக்கு நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலநீர் இயக்குநர் ஆய்வின் பேரில் நஞ்சைக்கு 350 அடி தூரத்திலும், புஞ்சைக்கு 600 அடி தூரத்திலும் இருந்தால் கூட்டுறவுத் துறை மூலம் கிணறு வெட்டுவதற்குக் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அந்த விவசாயிகள் தனிப்பட்டவர்களிடமிருந்து 36 சதவிகிதம், 40 சதவிகிதம் வட்டிக்குப் பணம் வாங்கி தனியார் கிணறு தோண்டி, ஆயில் இன்ஜின், மின்சார இணைப்பு கொடுத்துவிடுகிறார்கள்.

இப்படி தனியாரிடத்தில் கடன் வாங்கினால் அவர்களுக்கு ஒரு சட்டம், நிலவள வங்கியில் கடன் பெற்று கிணறு வெட்டுகிறவர்களுக்கு ஒரு சட்டமா, இரண்டு பேருக்கும் ஒரே விதமான முறையில் சட்டம் இருக்கவேண்டும். யார் புதிதாகக் கிணறு வெட்டுவதாக இருந்தாலும், யார் ஆயில் இன்ஜின் வைப்பதாக இருந்தாலும், மின்சார இணைப்புத் தருவதாக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே சட்டமாக இருக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாற்றி அமைக்கவேண்டுமென்றும் கூறிக் கொள்கிறேன்.

அதைப்போலவே இறவை கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத் திட்டத்திற்கு ஆரம்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1 ஏக்கர் $\frac{1}{2}$ ஏக்கர் விவசாயிகள் கூட நல்ல முறையில் வாழவேண்டுமென்பதற்காக அக்கறையோடு அந்தத் திட்டத்தைக் கொண்டு

வந்தார்கள். இன்றையதினம் நடைமுறையில் அது சரியான முறையில் இயங்குகிறதா என்று கூர்ந்து கவனித்ததாகத் தெரியவில்லை என்று கருதுகிறேன். எங்கள் பகுதியில் கூட்டுறவு இறவைப் பாசனக் கழகம் 5 ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. இந்த 5 கழகங்களில் 2 கழகங்களில் தான் கடன் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அனுமதிக் கப்பட்ட கடன்களும் இதுவரையில் அந்தக் கழகத்தால் நடை முறையில் செலவழிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம் அங்கு வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் மூலம்தான் அந்தப் பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த இயக்குநர் அங்கு இருக்கிற இறவை நீர்ப்பாசனக் கூட்டுறவு கழகத்திற்கு வந்து அக்கறையோடு அந்த வேலைகளைச் செய்வதற்கு முன்வருவதில்லை. இதையெல்லாம் மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மிக விரைவிலே சிறப்பான முறையில் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு நல்ல பலன் அளிக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. ஆனால், கீழே இருக்கிறவர்கள் ஒழுங்கான முறையில் செய்கிறார்களா என்று கண்காணிக்கின்ற பொறுப்பு இன்னும் அதிகமாக இருக்கவேண்டும், இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையானது மிக முக்கியமான ஒரு துறை. இன்றைக்கு இருக்கிற நெருக்கடியான காலகட்டத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியா வசியமான பொருள்களை, உணவுப் பொருள்களாக இருந்தாலும் சரி, விவசாயத்திற்குத் தேவையான உரம் ஏனைய பொருள்களாக இருந் தாலும் சரி, அதை சீராக விநியோகம் பண்ணுவதற்குரிய ஒரு நல்ல ஸ்தாபனமாக இது அமையவேண்டும் என்று அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

சமீபக் காலத்தில் நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு முன்னாள் கூட்டுறவு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் காலத்தில் இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பொறுத்தமட்டில் அவை கட்சியினுடைய கிளைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல் இந்த ஸ்தாபனங்களை



கட்சியின் கிளைகளாக மாற்றுவதில் மந்திரி அவர்கள் தன்னுடைய திறமையான அறிவைப் பயன்படுத்தி கட்சி ஆட்களை எப்படி நியமனம் பண்ணுவது என்பதில் மிகத் திறமையாக செயல்பட்டிருக்கிறார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: I am elucidating. நான் சொல்லுகிறேன். நீங்கள் ஹைகோர்ட்டில் திரும்பத் திரும்ப கேஸ் போட்டு, அதாவது கட்சி ஆட்களை நியமிக்கிறார்கள், ஆகை யினால் தவறு என்று சொல்லி, கோர்ட்டு தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்தக் கோர்ட்டு தீர்ப்பையாவது மதிக்கக்கூடாதா?

திரு. சோ. அழகர்சாமி: இது மாதிரி நியமனம் பண்ணுவது செல்லுமா, செல்லாதா என்ற கோர்ட்டுத் தீர்ப்பு எனக்குத் தெரியாது. நான் பணிவோடு அமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனை சொல் கிறேன். இப்பொழுது கூட்டுறவுத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் நியாயமான முறையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் செயல்படுகிறார் என்பதில் சந்தேகம் கிடையாது.

நான் சொல்கிற ஆலோசனை என்னவென்றால், இந்த போர்டுகள் பூராவையும் கலைத்துவிட்டு, சர்க்கார் ஆட்களையே எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் நிர்வாகஸ்தர்களாகப் போட்டு நடத்தினால், நல்ல முறையில் நடக்கும். இப்பொழுதுள்ள போர்டுகள் தேவையே கிடையாது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால் 5,000 மெம்பர் கள் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனம் இருந்தால், அந்த 5,000 மெம்பர் களும் சேர்ந்து தேர்ந்தெடுக்கக் கூடிய டைரக்டர்கள் மூன்று பேர்கள் தான். இன்டைரக்டாக, மறைமுகமாக 13 டைரக்டர்களாக உங்க ளுடைய ஆட்களையே நியமனம் பண்ணக்கூடிய ஒரு முறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

2,432 இறவைப் பாசன கூட்டுறவுக் கழகங்கள் இருக்கின்றன என்றால், அதிலே செயல்பட்டுக்கொண்டிருப்பது எத்தனை? 500 தான் செயல்படுவதாகச் சொல்கிறார்கள். எப்பொழுது செயல்படப் போகிறதோ தெரியாது. இந்த 2,432 கூட்டுறவு இறவை ஸ்தாப னங்களை எடுத்துக்கொண்டால், அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படு பவர்கள் எவ்வளவு பேர்கள் என்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

[திரு. சோ அழகர்சாமி] [1974 ஏப்ரல் 5

நாமினேடெட் டைரக்டர்கள் எவ்வளவு பேர்கள் என்பதும் தெரியும். அவைகளிலிருந்து செண்டிரல் பாங்குகளுக்கு டெலிகேட்கள், அதிலிருந்து மாநில வங்கிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

இப்படி எல்லாவிதமான கூட்டுறவு நிறுவனங்களிலும் தங்களுடைய ஆட்களையே நிரப்புவதற்குச் சரியான ஏற்பாடுகளை அவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நில வள வங்கி, மாநில கூட்டுறவு வங்கி, ஆகிய ஸ்தாபனங்கள் இருக்கின்றன. மாநில கூட்டுறவு வங்கி நிலவள வங்கிக்கு கடன் வழங்குகிறது. செண்டிரல் பாங்கிற்கும் நிலவள வங்கிக்கும் சம்பந்தம் கிடையாது. அங்கே யார் இருக்கிறார்கள்?

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :</u> அவர்களிடத்திலிருந்தும் கடன் பெறலாம்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> மார்க்கெட்டிங் சொஸைடிகள் இருக் கின்றன. தமிழகத்தில் 147 மார்க்கெட்டிங் சொஸைடிகள் இருக்கின்றன. லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகள் எந்தெந்த இடங் களில் துவங்கிவைக்கிறார்கள்? லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடி தோற்றுவிக்கவேண்டுமென்று கேட்டால், டி.ஆர்.ஓ.-வைக் கேட்டால் அங்கு என்ன சொல்கிறார்கள் என்றால், மேலே எந்த இடத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்கிறார்களோ அந்த இடத்தில் தான் ஆரம்பிக்க முடியும், வேறு இடங்களில் முடியாது என்று சொல்கிறார் கள். தங்களுக்கு வேண்டிய கட்சி ஆட்கள் இருக்கக்கூடிய இடங் களில் தான் இந்த சொஸைடிகளை ஆரம்பிக்கிறார்கள்.

சொஸைடிக்கு டைரக்டர்களை நியமனம் செய்கிறார்கள். நேரடி யாக நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் 3 பேர்கள் தான். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், 5,000 மெம்பர்கள் கொண்ட கூட்டுறவு சொஸைடியில், 5,000 மெம்பர்கள் பங்குத் தொகை போட்டிருக்கிறார்கள் என்றால் அந்த மெம்பர்களால் தேர்ந் தெடுக்கப்படும் டைரக்டர்கள் 3 பேர்கள்தான். நியமனம் பண்ணப் பட்டவர்கள் தான் அதிகம்.

அரசாங்கம் முதலீடு செய்திருக்கிறது, அரசாங்கத்திற்குப் பாதுகாப்பு வேண்டும். அரசாங்கத்தினுடைய கொள்கைகளை அமுல் நடத்தவேண்டும், அதற்கு நம்முடைய உத்தியோகஸ்தர்கள் அங்கே இருக்கவேண்டும், அதற்கு உத்தரவாதம் வேண்டும் என்று சர்க்கார்



1974 ஏப்ரல் 5] [திரு. சோ. அழகர்சாமி]

நியமனம் செய்கிறார்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. எத்தனை பேர்கள் 1/3. அதைப்பற்றிக் கூட அமைச்சர் அவர்கள் ரொம்ப சாமர்த்தியமாகச் சொன்னார். நியமனத்தைப் பொறுத்த வரையில் 1/3 என்று இருந்ததை 1/5 என்று ஆக்கியிருக்கிறோம் என்று கூறினார்.

நான் சொல்கிறேன். 5,000 மெம்பர்கள் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் 3 பேர்கள் தான். ஒரு தொகுதியில் 5 லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகள் தான் இருக்கும். அந்த 5 பேர்களும் சேர்ந்து 3 டைரக்டர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். அக்ரோ சர்வீஸ் செண்டரிலிருந்து ஒரு நாமினேடட் மெம்பர். இப்படி நாமினேஷன் மூலமாக வரக்கூடியவர்கள் 13 பேர்கள். மாநில வங்கியிலிருந்து ஒருவர் வரவேண்டும். டிஸ்டிரிக்ட் கோவாபரேடிவ் வங்கியிலிருந்து ஒருவர் வரவேண்டும். இப்படி 13 பேர்கள் தங்களுக்கு வேண்டிய ஆட்களாகவே நியமனம் செய்யப்பட்டால் யார் பிரசிடெண்டாக வர முடியும். யார் தலைவராக வரவேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ, அவர் தான் தலைவராக வர முடியும். மாவட்ட செயலாளரிடமிருந்து பிரஸிடெண்ட், டைரக்டர்ஸ் லிஸ்டு வரவேண்டும். அவர்களைப் போட வேண்டியது தான். நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் கூட்டுறவு ஸ்தாபனங்கள் சிறந்த ஒரு அமைப்பாக எதிர்காலத்தில் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்......

* <u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :</u> உறுப்பினர் அவர்கள் இந்த லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளைப் பற்றிச் சொன்னார்கள். இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை நான் விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நாம் சொல்கிறோம் பிராக்மெண்டேஷன் என்று. அரை ஏக்கர், முக்கால் ஏக்கர், 10 செண்டு இப்படி நிலம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் அவர்களுடைய நிலத்தில் கிணறு வெட்ட முடியுமா அல்லது வேறு விதத்தில் அவர்களுடைய நிலத்தை வளப்படுத்த முடியுமா? அரை ஏக்கர், முக்கால் ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று நிலம் வைத்துக்கொண்டிருக்கும் சிறிய விவசாயிகளுக்கு லிப்ட் இர்ரிகேஷன் கொடுப்பதற்குத் தான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறோம். வேறு வழி இருந்தால் சொல்லுங்கள். வேறு வழிகளை நாம் முயற்சி செய்து பார்த்தோம். அதில் தோல்வி தான் கிட்டியது.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1974 ஏப்ரல் 5

ஜாயிண்டு பார்மிங், அல்லது கலெக்டிவ் பார்மிங் உங்களுக்கு ஒரு வேளை ஏற்பட்டதாக இருக்கலாம். ஜாயிண்ட் பார்மிங் சொஸைடி களுக்கு ஆக்டில் தனியாக ஒரு சாப்டர் இருக்கிறது. அதை முயற்சி பண்ணிப் பார்த்த நேரத்தில் அது நிறைவேறாத காரணத்தினால் அதை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக சிறிய விவசாயிகளை ஒன்றாகச் சேர்த்து தண்ணீருக்கு மட்டும் ஜாயிண்ட் என்று வைத்திருக்கிறோம். வேறு வழி இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். சிறிய விவசாயி களுக்கு வேறு என்ன கதி மோட்சம்?

திரு. பெ. சீனிவாசன் : லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு சந்தேகம். அமைச்சர் அவர்கள் இவ்வளவு விளக்கம் சொன்னார்கள். அதை ஆரம்பித்த...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. இளங்கோவன்) : இது என்ன பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனா?

திரு. பெ. சீனிவாசன் : பாங்குகளில் டைரக்டர்களை நியமிப்பு தற்காகச் செய்கிறீர்கள். தேர்தலுக்காகச் செய்கிறீர்கள், விவசாயி களுக்காகச் செய்யவில்லை. லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடி இது வரையில் எந்த இடத்தில் வேலை செய்தது என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளைப் பற்றிப் பேசும்பொழுது கூட்டுறவு அமைப்புகளில் நிர்வாகஸ்தர்கள் எப்படி வருகிறார்கள், எந்த இடத்தில் இந்த சொஸைடிகள் வருகின்றன என்பதைப்பற்றித் தான் சொல்கிறேன். ஆரம்பிக்கப் பட்ட நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம். சிறிய விவசாயிகள் களின் நன்மைக்காக ஆரம்பித்திருக்கலாம். அது தப்பு என்று சொல்லவில்லை. லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளில் யார் டைரக் டர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

அவைகள் தோற்றுவைக்கப்பட்டிருக்கிற இடங்கள் யாவை என்பதைத் தான் பார்க்கவேண்டும். எங்கே தோற்றுவிக்கப்பட வேண்டும், எங்கே ரிஜிஸ்டர் பண்ணவேண்டும் என்று எங்கிருந்து உத்தரவிடுகிறார்களோ அந்த இடங்களில் தான் ரிஜிஸ்டர் செய்யப் படுகின்றன. இவர்களுக்கு வேண்டியவர்கள் தான் நிர்வாகஸ்தர்களாக வருகிறார்கள். மறைமுகமாக இதைச் செய்கிறார்கள். டிஸ்டிரிக்ட்





1974 ஏப்ரல் 5] [திரு. சோ. அழகர்சாமி]

கோவாபரேடிவ் பாங்க், மாநில கூட்டுறவு பாங்கு, மார்க்கெடிங் சொஸைடி இப்படி எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களிலுமே இவர் களுடைய ஆட்கள் தான் வரவேண்டும் என்று

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, when the hon. Member is going on saying things which are not correct, I am entitled to elucidate under Rule 65.

ஏதோ இந்த அரசாங்கம் சொல்லிய இடங்களில் தான் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ரிஜிஸ்டர் செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். இதை நான் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இந்தச் சட்டப்புத்த கத்தில் உள்ள 8-வது விதியின்படி பார்த்தால் 10 மெம்பர்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்தால் ரிஜிஸ்டர் செய்யவேண்டும். இது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். யாராவது 10 பேர்கள் கையெழுத்து போட்டால் ரிஜிஸ்டர் செய்யவேண்டும். எங்கேயாவது இப்படிக் கையெழுத்துப்போட்டுக் கொடுத்து, ரிஜிஸ்டர் செய்ய மறுத்திருக்கிறார்களா என்று சொல்லுங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள். தவறான தகவல்களை வேண்டுமென்றே திட்டமிட்டுச் சொல்கிறார். லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடி ஆரம்பிக்கின்ற நேரத்தில் குறிப்பிட்ட பாங்குகளுடைய டைரக்டர்கள் மெஜாரிட்டி வரவேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ.-க்களை—நான் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-வாக இருக்கும்பொழுதே சொன்னேன்— அவர் சொன்ன மெம்பரை நான் ஆதரிக்கமாட்டேன் என்று சொன்னேன்—அதனால் பார்ம் பண்ண மறுத்துவிட்டார்கள். கட்சி யில் உள்ளவர்கள் சொல்கிற இடங்களில் தான் ஆரம்பிக்கிறார்கள். தேர்தல் தான் நோக்கம். லிப்ட் இர்ரிகேஷன் எலெக்ஷன் சொஸைடி என்று தான் சொல்லலாம். இர்ரிகேஷன் நோக்கம் அல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : திரும்பத் திரும்ப தலையீடுகள் ஏற்படுகின்றன. எங்கள் கட்சியின் சார்பில் அழகர்சாமி ஒருவர் தான் பேசுகிறார். அவருக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : 2,432 சொஸைடிகள் இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் உங்களுக்கு வேண்டியவர்கள் தான் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். வேறு யாராவது தலைவராக வந்து இருப்பது எத்தனை இடங்களில் என்று சொல்லுங்கள். ஒருவர் [illegible]

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

கூட கிடையாது. ஆகவே, நமது மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்கள் கூறியபடி எந்த இடத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று தங்கள் கட்சி ஆட்கள் கூறுகிறார்களோ அந்த இடத்தில் தான் ஆரம்பிக்கப் படுகிறது.

எந்த நோக்கத்தில் ஆரம்பிக்கப்படுகிறது என்றால் மாநில வங்கி மத்திய வங்கி போன்ற கூட்டுறவு ஸ்தாபனங்களில் நிர்வாகத்தில் தங்களுடைய கட்சி ஆட்களைக் கொண்டு வரவேண்டும் என்ற அந்த நோக்கத்தில் தான் தோற்றுவிக்கப்படுகிறது. அதனால்தான் பல் வேறு கோளாறுகள் அங்கெல்லாம் ஏற்படுகின்றன.

மதுரையில் ரூ. 2 லட்சம் பெறுமான உரம் காணாமல் போய் விட்டது என்று சொல்லியும் அமைச்சர் அதற்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி</u>: இரண்டுமுறை பதில் சொல்லியிருக்கிறேன். அது குறித்து நடவடிக்கை எடுத்து, சொத்து அட்டாச்மெண்டு செய்து, அவரைக் கைது செய்து வழக்குப் போட்டு இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கிறது.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u>: அங்கு இருக்கக்கூடிய வாட்ச்மானைக் கைது செய்திருக்கிறார்கள். கோடவுனிலிருந்து 3,600 மூட்டைகள் காணாமல் போயிருக்கிறது. எங்கே போனது, யார் யார் அதைக் கொள்முதல் செய்து விற்றார்கள் என்பது போன்ற விஷயங்கள் வரவில்லை. வாட்ச்மானை அரெஸ்டு செய்திருக்கிறார்கள். அந்த சொஸைடியில் 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் பெறுமான உரம் விற்கப் பட்டிருக்கிறது. அம்மாதிரியான ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன. ஒரு சொஸைடி கோடவுனிலிருந்து 3,600 மூட்டைகள் மாயமாய் மறைந்த மர்மம் என்ன என்பது இன்னும் தெரியவில்லை. ஏதோ சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுத்து, வாட்ச்மானை மட்டும் அரெஸ்டு செய்து கேஸ் போட்டால் எப்படி நியாயம் கிடைக்கும்?

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி</u>: அங்கே கோடவுன் கீப்பர் இருக்கிறார். அவர் திருட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். யாராவது தவறு செய்வதாகத் தெரிந்தால் அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட அவர் பினாமி முறையில் கையெழுத்து போட்டு, அங்கிருந்த உர மூட்டைகளை எடுத்திருக்கிறார். அப்படி எடுக்கப் பட்ட 2, 3 நாட்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தொடர்ந்து இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் முடிந்ததும் யார் தவறு செய்திருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி</u>: தவறு செய்தவர்கள் தண்டிக்க முடியாதபடி மேல்மட்டத்தில் உள்ளவர்கள் தலையிடுகிறார்கள். தவறு நடப்பதே மேல்மட்டத்திலுள்ளவர்களின் செல்வாக்கைப் பயன் படுத்தித்தான். ஆகவேதான் தவறு செய்பவர்கள் சுலபமாக தப்பித் துக்கொள்கிறார்கள். அதிகபட்சம் போனால் வாச்மான், ஸ்டோர் கீப்பர்கள்தான் கிடைக்கிறார்கள்; மற்றவர்கள் எல்லாம் தப்பித்து விடுகிறார்கள். இந்த மாதிரியான ஒரு நிலைமை இருக்கக்கூடாது: மேல்மட்ட தலையீடு இருக்கக்கூடாது.

சேலம் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு மத்திய வங்கி இருக்கிறது. அங்கே 1,000 ரூபாய் மாதச் சம்பளம் கொடுத்து ஒரு லீகல் அட்வைசரைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களைப் பார்த்து டைரக்டர்களாகப் போடுகிறார்கள். அவர்களுக்கு ஏகப்பட்ட செலவு ஏற்படுகிறது. அதனால், விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதில்லை. மாநில வங்கியிலிருந்து 4 சதவிகித வட்டிக்கு கடனைப் பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது 9 சதவிகிதம், 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இடை யிலே இருக்கின்ற இந்த ஜில்லா மத்திய வங்கிகள்தான். இடையிலே இந்த அமைப்பு தேவையில்லை. மாநில கூட்டுறவு வங்கி யிலிருந்து நேரடியாகவே கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்குக் கடன் கொடுத்தால் இந்த வட்டிவிகிதம் இன்னும் குறைவாகத்தான் இருக்கும். அங்கே இருந்து 4 சதவிகித வட்டிக்கு வாங்கி, இங்கிருந்து 9 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற வட்டி வீதத்தில் கடன் கொடுப்பதா விவசாயிக்குச் செய்யும் நன்மை? ஆகவே, மாநில சங்கமே, ஜில்லா மத்திய பாங்கு இல்லாமல், அவர்களுடைய பிராஞ்சுகளை ஏற்படுத்தி நேரடியாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இப் போதிருக்கின்ற முறைப்படி மாநில சங்கத்திலிருந்து 4 சதவிகிதத்திற்கு வாங்கி, விவசாயிகளுக்கு 10 சதவிகிதத்திற்கு 6 சதவிகிதம் கூட்டிக் கொடுப்பது எந்த வகையிலும் நியாயமல்ல.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

கூட கிடையாது. ஆகவே, நமது மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்கள் கூறியபடி எந்த இடத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று தங்கள் கட்சி ஆட்கள் கூறுகிறார்களோ அந்த இடத்தில் தான் ஆரம்பிக்கப் படுகிறது.

எந்த நோக்கத்தில் ஆரம்பிக்கப்படுகிறது என்றால் மாநில வங்கி, மத்திய வங்கி போன்ற கூட்டுறவு ஸ்தாபனங்களில் நிர்வாகத்தில் தங்களுடைய கட்சி ஆட்களைக் கொண்டு வரவேண்டும் என்ற அந்த நோக்கத்தில் தான் தோற்றுவிக்கப்படுகிறது. அதனால்தான் பல் வேறு கோளாறுகள் அங்கெல்லாம் ஏற்படுகின்றன.

மதுரையில் ரூ. 2 லட்சம் பெறுமான உரம் காணாமல் போய் விட்டது என்று சொல்லியும் அமைச்சர் அதற்கு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இரண்டுமுறை பதில் சொல்லியிருக்கிறேன். அது குறித்து நடவடிக்கை எடுத்து, சொத்து அட்டாச்மெண்டு செய்து, அவரைக் கைது செய்து வழக்குப் போட்டு இன்வெஸ்டிகேஷன் நடந்துகொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : அங்கு இருக்கக்கூடிய வாட்ச்மானைக் கைது செய்திருக்கிறார்கள். கோடவுனிலிருந்து 3,600 மூட்டைகள் காணாமல் போயிருக்கிறது. எங்கே போனது, யார் யார் அதைக் கொள்முதல் செய்து விற்றார்கள் என்பது போன்ற விஷயங்கள் வரவில்லை. வாட்ச்மானை அரெஸ்டு செய்திருக்கிறார்கள். அந்த சொஸைடியில் 2 லட்சம், 3 லட்சம் ரூபாய் பெறுமான உரம் விற்கப் பட்டிருக்கிறது. அம்மாதிரியான ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன. ஒரு சொஸைடி கோடவுனிலிருந்து 3,600 மூட்டைகள் மாயமாய் மறைந்த மர்மம் என்ன என்பது இன்னும் தெரியவில்லை. ஏதோ சட்ட பூர்வமாக நடவடிக்கை எடுத்து, வாட்ச்மானை மட்டும் அரெஸ்டு செய்து கேஸ் போட்டால் எப்படி நியாயம் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அங்கே கோடவுன் கீப்பர் இருக்கிறார். அவர் திருட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். யாராவது தவறு செய்வதாகத் தெரிந்தால் அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட அவர் பினாமி முறையில் கையெழுத்து போட்டு, அங்கிருந்த உர மூட்டைகளை எடுத்திருக்கிறார். அப்படி எடுக்கப் பட்ட 2, 3 நாட்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தொடர்ந்து இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் முடிந்ததும் யார் தவறு செய்திருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தவறு செய்தவர்கள் தண்டிக்க முடியாதபடி மேல்மட்டத்தில் உள்ளவர்கள் தலையிடுகிறார்கள். தவறு நடப்பதே மேல்மட்டத்திலுள்ளவர்களின் செல்வாக்கைப் பயன் படுத்தித்தான். ஆகவேதான் தவறு செய்பவர்கள் சுலபமாக தப்பித் துக்கொள்கிறார்கள். அதிகபட்சம் போனால் வாச்மான், ஸ்டோர் கீப்பர்கள்தான் கிடைக்கிறார்கள்; மற்றவர்கள் எல்லாம் தப்பித்து விடுகிறார்கள். இந்த மாதிரியான ஒரு நிலைமை இருக்கக்கூடாது: மேல்மட்ட தலையீடு இருக்கக்கூடாது.

சேலம் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு மத்திய வங்கி இருக்கிறது. அங்கே 1,000 ரூபாய் மாதச் சம்பளம் கொடுத்து ஒரு லீகல் அட்வைசரைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களைப் பார்த்து டைரக்டர்களாகப் போடுகிறார்கள். அவர்களுக்கு ஏகப்பட்ட செலவு ஏற்படுகிறது. அதனால், விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதில்லை. மாநில வங்கியிலிருந்து 4 சதவிகித வட்டிக்கு கடனைப் பெற்று விவசாயிகளுக்குக் கொடுக்கும்போது 9 சதவிகிதம், 10 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இடை யிலே இருக்கின்ற இந்த ஜில்லா மத்திய வங்கிகள்தான். இடையிலே இந்த அமைப்பு தேவையில்லை. மாநில கூட்டுறவு வங்கி யிலிருந்து நேரடியாகவே கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்குக் கடன் கொடுத்தால் இந்த வட்டிவிகிதம் இன்னும் குறைவாகத்தான் இருக்கும். அங்கே இருந்து 4 சதவிகித வட்டிக்கு வாங்கி, இங்கிருந்து 9 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற வட்டி வீதத்தில் கடன் கொடுப்பதா விவசாயிக்குச் செய்யும் நன்மை? ஆகவே, மாநில சங்கமே, ஜில்லா மத்திய பாங்கு இல்லாமல், அவர்களுடைய பிராஞ்சுகளை ஏற்படுத்தி நேரடியாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இப் போதிருக்கின்ற முறைப்படி மாநில சங்கத்திலிருந்து 4 சதவிகிதத்திற்கு வாங்கி, விவசாயிகளுக்கு 10 சதவிகிதத்திற்கு 6 சதவிகிதம் கூட்டிக் கொடுப்பது எந்த வகையிலும் நியாயமல்ல.

[திரு. சோ. அழகர்சாமி] [1974 ஏப்ரல் 5

இந்த அறிக்கையிலே கூடச் சொல்லியிருக்கிறார்கள்.
வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து அவர்களைக் ஈவிரக்கமற்ற
பெரும்பங்கு வகிக்கிறது கூட்டுறவுச் சங்கங்கள் காப்பாற்றுவதில்
பட்டிருக்கிறது. ஆனால், இங்கே நடப்பது என்று சொல்லப்
காரர்களைவிட அதிகமாக கொடுமைப்படுத்தும் ஈவிரக்கமற்ற வட்டிக்
கிறது. இப்போது 10 சதவிகித வட்டி நிலைதான் இருக்
கொஞ்ச நாள் போனால் 12 சதவிகித அபராத வட்டி என்கிறார்கள்; இன்னும்
இதுதான் ஈவிரக்கமற்ற வட்டிக்காரர்களிடமிருந்து என்கிறார்கள்.
முறை! காப்பாற்றும்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் வட்டி அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
இதற்கு மத்திய கூட்டுறவு வங்கி இருப்பதுதான் காரணம்; மாநில
வங்கியே நேரடியாகக் கடன் கொடுத்தால் என்ன என்று கேட்கிறார்
கள். கேரள அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்
சென்ற ஆண்டிலே. ரிசர்வ் வங்கியில் டாக்டர் தாத்தே தலைமை
ஒரு கமிட்டியை அமைத்தார்கள். அந்தக் கமிட்டி பரிசீலனை செய்தது.
அவர்கள் ஆராய்ந்து பார்த்துவிட்டு, அப்படி வைத்தால் நிர்வாகம்
சரியாக நடைபெறாது; மாநிலம் முழுமைக்கும் இருக்கிற ஒரு வங்கி,
4,000-க்கு மேற்பட்ட சிறு வங்கிகளின் நிர்வாகத்தைச் சரியாக நடத்த
முடியாது; ஆகவே, மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குப்
போய், அங்கிருந்து கிராமச் சங்கங்களுக்குச் செல்வதுதான் சரி
யானது; அப்படியானால்தான் நிர்வாகம் ஒழுங்காக நடக்கும் என்று
தெரிவித்திருக்கிறார்கள். கிராம நாணயச் சங்கங்கள் கொடுத்த
கடனை ஒழுங்காக வசூல் செய்கிறதா, கொடுத்த பணம் சரியாக விநி
யோகம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு மாவட்ட
மத்திய வங்கி இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

கேரளம் சிறிய மாநிலம். அங்கே இருக்கக்கூடிய மத்திய வங்கிகள்
10 அல்லது 12 தான். நாம் 16 வங்கிகளை வைத்திருக்கிறோம்.
விவசாயிகளுக்கு ஒழுங்காகக் கடன் வழங்க வேண்டுமானால் இந்த
மூன்று அமைப்புகள் இருக்க வேண்டும் என்று அவர்கள் கருத்துத்
தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தான் நாம்
வைத்திருக்கிறோம்.

வட்டி அதிகமாக வாங்கப்படுகிறது என்று சொன்னார்கள். நாம்
அதிகமாக வாங்கவில்லை. ரிசர்வ் வங்கி எவ்வளவு கூடுதலாகக்
கேட்டார்களோ அந்த அளவுக்குத்தான் வட்டி வாங்கப்படுகிறது.
அதைவிட கூடுதல் வாங்கவில்லை.



1974 ஏப்ரல் 5]

திரு. சோ. அழகர்சாமி: பொதுவாக, இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்ற முறைகளைப் பார்த்தால் இந்த அமைப்பு களையே வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை வந் திருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், இந்தச் சங்கங்களே தேவையில்லை, பஞ்சாயத்துக் களுக்கு மாற்றிவிடலாம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டால் அவைகளின் நிர்வாகம் எப்படி இருக்கும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். வங்கி நிர்வாகஸ்தர்களைப் போட்டு விட்டால், அவர்கள் என்ன செய்தாலும் மாற்ற முடியாது. அவர்களை மாற்ற வேண்டுமானால் மெட்ராசுக்குத்தான் வரவேண்டும். இப்போதுள்ள விதிமுறைகள் அப்படி இருக்கின்றன.

கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் இன்றைக்கு ஒரு கட்சி ஆட்சி ஸ்தாபனமாகவே இருக்கின்றன. ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் தான் நிர்வாகத்தில் வரமுடியும்; மற்றவர்கள் வரமுடியாது. அவர்கள் தப்பு செய்தாலும் யாரும் கேட்க முடியாது. அவர்களை மாற்றவும் முடியாது.

நாமினேஷன் மூலமாக எத்தனை பேரை வேண்டுமானாலும் நியமித் துக்கொள்ளுங்கள். அதற்கும் ஒரு கணக்கு இருக்க வேண்டும். பத்து பேர் நியமிக்கப்பட வேண்டுமானால் 4 பேரை நாமினேட் செய்யுங்கள். 6 பேரை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் இப்போது 6, 7 பேரை நாமினேட் செய்துவிட்டு மற்றவர்களைத் தேர்ந்தெடுக் கிறார்கள். இந்த முறையை மாற்றவேண்டும். சமீப காலத்திலே உரம் கடன் கொடுப்பது மிகவும் குறைந்திருக்கிறது. நீண்டகாலக் கடன் 25 கோடி ஒதுக்கப்பட்டதில் 5 கோடிதான் கொடுத்திருக் கிறார்கள். மீதி கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முன்னைவிட 3 மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: சென்ற ஆண்டில் 68 கோடி ஒதுக்கப் பட்டதில் கிட்டத்தட்ட 60 கோடிதான் செலவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 78 கோடிக்குமேல் கொடுத்திருக்கிறோம்.

1974 ஏப்ரல் 5] [திரு. சோ. அழகர்சாமி]

திரு. சோ. அழகர்சாமி: கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 68 கோடி என்றும் வருமாண்டில் 75 கோடியாக இருக்கும் என்றும் அதற்கு அடுத்தாண்டு மேலும் உயரும் என்றெல்லாம் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் கூட்டுறவு மத்திய வங்கியில் லீகல் அட்வைசர் பீஸ் என்று மாதம் 1,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: எனக்கு வந்த தகவல் 1,000 ரூபாய் என்று. அது சரியா தவறா என்றுதான் கேட்டேன். முன்னூற்று ஐம்பது ரூபாய் என்றால் சரி. அதற்குமேல் நான் செல்லவில்லை.

இப்போது கிணறு வெட்டுவதற்கு, பம்புசெட் வைக்க கடன் கொடுக்கிறார்கள். ஆனால் உரிய காலத்தில் மின்இணைப்பு கிடைப்பதில்லை. அதனால் தண்ணீரும் இறைக்க முடியவில்லை; பயிர் செய்யவும் வழியில்லை. அந்த நிலையில் கடனை எப்படித் திருப்பிக் கட்ட முடியும்? கடனைத் திருப்பிக் கட்டமுடியாத நிலையில், எந்த பம்புசெட் வைப்பதற்கு கடன் கொடுத்தார்களோ அந்த பம்புசெட்டையே ஜப்தி செய்கிறார்கள். செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அப்படி நடந்திருக்கிறது. ஒழுங்காக மின்சார இணைப்பு கிடைத்து, பயிர் செய்து, விளைச்சல் இருந்தால்தானே கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்.

தொழிற்சாலைகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கிய பின்னால்தான், கடனை வசூல் செய்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்குக் கடன் கொடுத்த 12-வது மாதத்தில் விளைந்தாலும் விளையாவிட்டாலும் கடனை வசூல்செய்ய தொடங்கி விடுகிறார்கள். விளைச்சல் இல்லாமல் கடனைக் கொடுக்க முடியாவிட்டாலும் சட்டி பானை, மண்வெட்டி போன்ற சாமான்களைக்கூட ஜப்தி செய்து கொண்டுபோய்விடுகிறார்கள். ஈட்டிக்காரனிடம் கூட கொஞ்சம் கருணை இருக்கும். இந்த மாதம் இல்லை; அடுத்த மாதம் வட்டியைச் சேர்த்து தந்துவிடுகிறேன் என்றால் ஈட்டிக்காரன் போய் விடுவான். ஆனால் இங்கே அப்படியில்லை. அதைவிட மோசமாக இருக்கிறது.



1974 ஏப்ரல் 5] [திரு. சோ. அழகர்சாமி]

கூட்டுறவின் புனிதத்துவம் இன்றைக்கு இல்லை. அந்த புனிதத்துவம் காக்கப்பட வேண்டும். அந்த அளவுக்கு நிர்வாகம் நல்லமுறையில் இருக்கவேண்டும். நிர்வாகக் குழுவிலே வேண்டுமானால் 1/5 அல்லது 1/3 பங்கு உறுப்பினர்களை நியமனம் செய்துகொள்ளலாம்: மீதியுள்ளவர்கள் தேர்தல் மூலமே வரவேண்டும். இதிலே இப்போது இருக்கின்ற முறை கூடாது. ஷேயர் ஹோல்டர்கள் தான் டைரக்டர்களாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் விதிமுறைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். கந்தசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்னால், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டிலே விவசாயிகளிடையே நல்லதொரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் நீண்டகால கடன், நடுத்தரக் கால கடன், குறுகிய காலக் கடன் என்ற அளவிலே மாநில நிலவள வங்கியின் மூலமாகவும், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், ஏராளமான அளவில்—கோடிக்கணக்கிலே தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குப் பலனளிக்கக்கூடிய விதத்தில் கடன் தந்து, அதன் மூலமாக இன்றையதினம் தமிழ்நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றதோடு அல்லாமல் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் கொடுக்கக்கூடிய அளவிலும் இந்தத் துறையின் மூலம் இன்றையதினம் நல்ல பலனை நாம் கண்டிருக்கிறோம்.

கூட்டுறவு முறை இருந்தால்தான் நாட்டுயர்வு ஏற்படும் என்பார்கள். அதற்கிணங்க தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை நல்லமுறையில் சிறந்து விளங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1967-க்கு முன்னால் இருந்த தலைவர்கள் நேரடியாக தாங்களே தேர்தலை நடத்திக் கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களை வைத்துக்கொள்ளுகின்ற முறை நீண்டகாலமாக இருந்துவந்தது. அந்த முறையை மாற்றி, அதிகாரிகளை வைத்து தேர்தலை நடத்தி, தலைவர்களை தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது இந்த அரசு வந்தபின்னால்தான் அதேநேரத்தில் இன்னும் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாக இருக்கின்றவர்களே தாங்களே தலைமை ஏற்று தேர்தலை நடத்துகின்ற நிலைமை இப்பொழுதும் இருந்துவருகிறது. அதனால் பலமுறை

[திரு. எம். கந்தசாமி] [1974 ஏப்ரல் 5

தொடர்ந்து ஏற்கெனவே இருந்த தலைவரே இருந்துவருகிறார்கள் அந்த முறையை மாற்றியமைக்க வேண்டும். கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் சட்டத்தின் மூலமாக அந்த முறையை மாற்றி கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தலை அதிகாரிகள் மூலமாகவே நடத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே மாவட்ட தலைநகர் ஒவ்வொன்றிலும் சூப்பர் மார்க்கெட் என்று கூட்டுறவுத்துறையில்—மலிவான விலையில் தரமான பொருள்கள் மக்களுக்குக் கிடைக்க ஏற்படுத்தி வருகிறோம் அதேபோல வட்ட தலைநகர் ஒவ்வொன்றிலும் மினி சூப்பர் மார்க்கெட்டுகளை நடத்தினால் அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் மூலமாகத் தரப்படுகிற கடன் ஓராண்டில் திருப்பித் தரப்படவேண்டும் என்ற முறை இருக்கிறது உள்ளபடியே இந்த நிபந்தனைக்கு உட்பட்டு, அவசரத்தில் விவசாயிகள் கடனைப் பெற்றிருந்தாலும் ஓராண்டில் நிலம் சாகுபடிக்கு வர முடியாது போகிற நிலையில் கடனைத் திருப்பிக் கொடுக்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஏ.ஆர்.சி. (A.R.C.) ஸ்கீமாக இருந்தாலும், ஐ.டி.எஸ். (I.D.S.) ஸ்கீமாக இருந்தாலும் ஓராண்டுக்கு என்ற நிபந்தனையில் கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை இரண்டாண்டு கழித்துப் பெறக்கூடிய முறையில் நிலவள வங்கி மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத்துறையில் பல தவறுகள் நடப்பதாக ஆதாரம் இல்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறை சொல்கிறார்கள். அது சரியல்ல. உண்மையைப் பார்க்கிறபோது தமிழ்நாட்டில் தான் கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வதுதான். உள்ளபடியே இதை வரவேற்கத்தான் எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நல்லமுறையில் கூட்டுறவுத்துறை தமிழகத்தில் இயங்குவதால் தான் விவசாயிகள் கடனைப் பெற்று, உற்பத்தியைப் பெருக்க முடிந்திருக்கிறது. இல்லாவிட்டால் 67-க்கு முன்னிருந்த நிலைதான் இருக்கும். கூட்டுறவுத்துறை மூலமாகத் தான் விவசாய பெருங்குடி மக்களது வாழ்வை மேம்படுத்த முடியும் என்பதை உணர்ந்துதான்



1974 ஏப்ரல் 5] [திரு. எம். கந்தசாமி]

அறிஞர் அண்ணா அவர்கள் சிறு பாசன திட்டக் கடன் என்பதாகவும், நில அடமான வங்கி என்பதைமாற்றி—நிலத்தை வளப்படுத்த கடன்—நிலவள வங்கி மூலம் அளிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். லிப்ட் இர்ரிகேஷன் சொசைடிகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. Agro service centres ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர் மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் ஆரம்பித்த காரணத்தினால் இன்றைக்கு இந்தத் துறையில் பல வளர்ச்சிகளைக் கண்டிருக்கிறோம்.

எனது வட்டாரத்திலுள்ள லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடியை எடுத்துக்கொண்டால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் 2 பேர்கள் தான் என்றால் 10 பேர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 2 பேர்கள் இருக்கிறார்கள். ஆக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இருக்கிறார்கள் என்கிற புகார்கள் சரியல்ல. அதிகாரிகள் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று யார் யார்—அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும்—சொஸைடியை நடத்தத் தயாராய் இருக்கிறார்களோ அவர்களை வைத்துத்தான் சொஸைடியை ஆரம்பித்திருக்கிறார்கள். இங்குள்ளவர்களைக் கேட்டு அதிகாரிகள் செயல்படுவதில்லை. அமைச்சர் அவர்கள் ஏராளமான இர்ரிகேஷன் சொஸைடிகளை ஆரம்பித்தும், 500 இடங்களில்தான் செயல்படுகிறது என்று சொன்னார்கள்.

கூட்டுறவு சங்கத்தை ஆரம்பித்து நடத்துவதில்—ஆரம்பகாலத்தில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. திருச்சிமாவட்டம் வேலாயுத பாளையத்தில் Lift irrigation society நல்லமுறையில் நடக்கிறது. குளித்தலை வட்டம் வீரராக்கியத்தில் ஆரம்பிக்கப்பட்டும், பொதுப் பணித்துறை நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுக்காத காரணத்தினால் இன்னமும் செயல்படாத நிலை இருக்கிறது. அது செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவு விற்பனை நிலையங்களில் கார்டுகள் மூலமாகத்தான் உரமானாலும் சரி, சர்க்கரையானாலும் சரி கொடுக்கப் பட்டு வருகிறது. மத்திய அரசு ஒதுக்குகிற சர்க்கரையானாலும், உரமானாலும் மற்றப் பொருள்களானாலும் இதன் மூலம் ஒழுங்காக

இந்த இயக்கத்தில் இன்னும் மக்களுடைய ஒத்துழைப்பும் இலாக்காவின் ஒத்துழைப்பும் இருந்தால் இது இப்போது செயல் படுவதைவிட இன்னும் நல்லமுறையில் முன்னேறும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே பேசிய பலர் இது ஆளுங்கட்சிக்கே பயன்படக்கூடிய ஒரு துறையாக ஆகிவிட்டது என்று சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இந்தத்துறை விரிந்துகொண்டே போகக்கூடியது—கிராம நகர சாதாரண மக்களது பொருளாதாரத்தை வளம்படுத்தக்கூடியது என்பதை யாரும் மறுக்க முடியாது. சாதாரணமாக சோஷலிச பொருளாதாரத்தை அமைக்க கூட்டுறவுத்துறைதான் அடிப்படை என்பதைச் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நாம் இந்தத்துறையில் எல்லா மக்களும் பங்குகொள்ளக் கூடிய முறையில் மாஸ் பார்டிசிபேஷன்—ஏற்படக்கூடிய முறையில் சட்டங்களை மாற்றி அமைக்கவேண்டும். பத்துப்பேர், இருபதுபேர் என்று மற்ற கட்சிகளையும் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு சொஸைடிகளை ஆரம்பிக்க முன்வந்தால்தான் எந்தக் கட்சியின் ஆதிக்கத்தையும் நாம் தகர்க்கவும் முடியும், அப்போதுதான் ஜன நாயகம் மிளிரும். கூடுமான வரையில் ஏற்கெனவே காங்கிரஸ்காரர் கள் பிடியில் சிக்கியிருந்த இந்த சொஸைடிகளை—ஏகபோகமாக நெடும்பலம் முதலியார், மூப்பனார் போன்றவர்களிடம் இருந்ததை அமைச்சர் அவர்கள் ரொம்ப புத்திசாலிதனமாகத்தான் எடுத்தார்கள்.

(நண்பகல் 12-00)

அவர்களிடமிருந்து பிடுங்கமுடியும் என்று யாரும் கனாக் கண்டிருக்க முடியாது. அதை, நல்ல வேலையாக, புத்திசாலித்தன மாகச் செய்து இருக்கிறார். ஆனால், இதுவே தொடர்ந்து போய்க் கொண்டிருக்கக் கூடாது. பொது ஜனங்களை மெம்பர்களாக ஆக்கி, பல சொஸைட்டிகளை ஏற்படுத்தி, அந்த சொஸைட்டிகளை நன்றாக இயங்கச் செய்வதன் மூலம், புதிய ரூபத்திலே அந்தக் கூட்டுறவு சொஸைட்டிகளை வளர்ச்சி அடையச் செய்வோமானால், மாற்றுக்





கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள், பங்கு பெறச்செய்து, மாற்றம் செய்வோமானால், நிச்சயமாக சீர்திருத்தம் செய்ய முடியும் என்று சொல்லவிரும்புகிறேன்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த, சிலபேருக்கு, சில போஸ்ட்ஸ் கொடுப்பதற்காகச் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இது அவர்களுக்கே ஆபத்தாகக் கூட முடியும். எல்லோருக்கும் எல்லா வற்றையும் கொடுத்துவிட முடியாது. அதனால், அவர்களுக்குள்ளே காழ்ப்புணர்ச்சி வரும், போட்டி வரும். ஆகவே, அவர்கள் உஷாராக இருக்கவேண்டும். நான், இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புவது, பொதுஜனங்களை அதிக அளவில் சேர்ப்பிக்க, அதற்கேற்ற வகையில், இயங்க வைத்து, அவர்களைச் சேர்ப்பித்தால், நிச்சயமாக நாட்டிற்குப் பெரிய சேவை செய்தவர்கள் ஆவீர்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

வில்லேஜ் யூனிட்டிலிருந்து, மேல்மட்டம் வரையில், சாதாரண ஆட்கள்தான் வருகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமல்ல, கிராம சொஸைட்டி ஒன்றுக்குத் தலைவராக வருகிறார் என்றால், அவருக்கு 10 நாளைக்காவது படிப்பு சொல்லிக் கொடுக்கவேண்டும். சொஸைட்டி என்றால் என்ன, வேலை என்றால் என்ன என்று, குறைந்த பட்சமாவதுத் தெரிந்திட கல்வி கொடுக்கவேண்டும். எல்லா மட்டத்திலும், கிராம மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் டைரக்டர்களாக வரக்கூடியவர்களுக்கு குறைந்தபட்ச ஞானம் வழங்குகின்ற வகையில், ஜில்லாரீதியாகக் கல்வி கற்பிக்கின்ற திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்.

இன்றைக்கு இது பெரிய விஸ்வரூபம் எடுக்கிறது என்று சொன்னால், கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளும், புரட்யூசர்ஸ் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளும் மிகக் கேந்திர மான பங்கு வகிக்கின்றன. இந்நிலையில், தனி நபர் வியாபாரத்தைத் தடுக்காமல் இருந்தால், அது தனி நபர் வளர்ச்சியை உருவாக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். நுகர்வோர் இயக்கமும், உற்பத்தி செய்வோர் இயக்கமும் பிரதான பாத்திரம் வகிக்கின்றன என்று சொல்வோமானால், ஒரு சர்க்குலர் இஷ்யூ செய்து, நாடெங்கிலும் இலட்சக்கணக்கான அங்கத்தினர்களைச் சேர்த்து, பல்லாயிரக் கணக்கான சொஸைட்டிகளை ஏற்படுத்த கட்டளை இடவேண்டுமென்று கூட நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 ஏப்ரல் 5

விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, விவசாயத் தொழிலாளர்களுக்கு இதிலே எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கிராமத்திலே ஒரு சேரி இருக்கிறது என்று சொன்னால், ஒவ்வொரு சேரியிலும் கிளை வைக்கவேண்டும். அதற்கான வசதிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

நிலவளத்தை ஏற்படுத்தக்கூடிய வங்கிகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் இயக்குவதிலே, கண்டிப்பு, கரார், ஓரளவுக்குத்தான் இருக்க வேண்டுமே தவிர, லேவாதேவிக்காரனுடைய புத்தி, இந்த இலாகாவிற்கு இருக்கக் கூடாது. கிணறு வெட்டக் காலதாமதமாகிறது, அல்லது கிணறு வெட்டத் தவறிப்போகிறதென்றால், நிலைமைகளைப் பார்த்து, புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டுமே தவிர, கண்டிப்பான அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கக் கூடாது.

சொக்கனுக்குச் செட்டி அளவு என்று சொல்வார்கள். முன்பெல்லாம், போலீஸ்காரனைக் கண்டால் பயப்படுவார்கள். இப்பொழுது, கோவாப்பரேடிவ்காரனைக் கண்டால் பயப்படுகிறார்கள். கோவாப்பரேடிவ் ஜீப் வருகிறதென்றால், வீட்டிற்குள் ஓடி ஒளிந்துகொள்கிறான். ஆகவே, இவ்வளவு இருக்கக் கூடாது. அதற்காகப் பணத்தை விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அவனது முன்னேற்றம் பாதிக்காத அளவு, அதற்குத் தகுந்தவாறு செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

பண்டகசாலையைப் பொறுத்து, சமீபத்திலே, ஆனமலை கேஸ் பற்றி சொன்னேன். பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள், வியாபாரிகளால் சுரண்டப்பட்டு, நாசம் அடைகிறார்கள். அதைத் திருப்பி நடத்துவதற்குக் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறேன். அதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வேறு வழியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த நிர்வாகம் தவறாக நடந்ததால், வீழ்ச்சி அடைந்திருக்கிறதென்றாலும், அதைத் தூக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை தலைவர்—தலைமை]

முத்துப்பேட்டையில், மாஜி இராணுவத்தார், எக்ஸ்-சர்வீஸ்மென் நிலங்களை வாங்கி சாகுபடி செய்து லாபம் அடைவதற்காக கூட்டுறவு சங்கம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நிலத்தை வளப்படுத்துவதிலே



1974 ஏப்ரல் 5] [திரு. மணலி சி. கந்தசாமி]

தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால், அதை எல்லாம் அங்கீகரித்து, தர்மத்தினுடைய அடிப்படையிலே இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, பாங்கு பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு, இண்டியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், மற்றும் தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் பல்லாயிரக்கணக்கான கிளைகளை வைத்திருக்கின்றன. கிராமங்களில் கிளைகள் வைத்துள்ளன. நீங்கள் மட்டும் ஏன் இரண்டுமூன்று மட்டம் வைத்துக் கொள்ளவேண்டும். பத்து சதவிகிதம் வட்டி என்று சொன்னால், கூட்டுறவு என்று சொல்ல முடியாது.

அமைச்சர் அவர்கள் டென்மார்க், ஹாலந்துக்குப் போய் வரவேண்டும். அங்கெல்லாம் கூட்டுறவு துறை நன்கு வளர்ந்துள்ளதாகச் சொல்கிறார்கள், கூட்டுறவுத் துறையிலே சோஷலிசம் வளர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். பலவிதமான சிக்கல்கள் நிறைந்திருக்கின்ற தேசம் நமது தேசம்.

எந்த அடிப்படையிலே, அன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே சோஷலிசத்தைக் கொண்டு வரவேண்டுமென்று, முடியுமென்று அதற்கு முக்கிய அங்கம் அளிக்கின்ற வகையிலே, மிகத் திறமையாகச் செயல்படுத்தவேண்டும்.

இன்றைக்குக் கூட்டுறவு இல்லாத துறையே கிடையாது, இண்டஸ்ட்ரீயிலே இருக்கிறது, விவசாயத்திலே இருக்கிறது, நுகர்வோர் கூட்டுறவு, கடன் வழங்குவதிலே கூட்டுறவு, இப்படிப்பட்ட எல்லா துறைகளிலும் கூட்டுறவு புகுந்திருப்பதாலே, இந்தத் துறை செம்மையாக நடைபெற, அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை தெரிவித்து, நான் இத்தோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தின் பேரில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை நான் இங்கே சொல்ல முற்படுகிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஏப்ரல் 5

இந்த மன்றத்திலே பேசிய எல்லா எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், குறிப்பாக நம்முடைய பெரியவர் மணலி கந்தசாமி அவர்களைக் கூட உட்படுத்தி, இந்தக் கூட்டுறவு துறையிலே ஏராள மான குறைபாடுகள் இருக்கின்றன என்று அவர்கள் பேசி இருக் கிறார்கள். அந்தக் கருத்தினை நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் கள் எடுத்துச் சொல்கின்ற நேரத்தில், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அவற்றை மறுத்து, இதுவரையில் எதையும் கூறியதாக எனக்குத் தெரியவில்லை. எல்லாக் குற்றச்சாட்டுகளையும் சொல்கிற நேரத்தில், நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்றுதான் சொல்கிறாரே தவிர, சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற குற்றச் சாட்டுக்களிலே உண்மையில்லை, தவறில்லை என்று இந்த மன்றத்திலே சொல்லவில்லையென்பதை இங்குள்ளவர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.

நான் கூட்டுறவுத் துறை அமைச்சருக்காகப் பரிதாபப்பட கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் அந்தத் துறையை ஏற்று 6 மாதம்தான் ஆகிறது. அதற்கு முன்னாலே, அத்துறைக்குப் பொறுப் பேற்றிருந்த அமைச்சர், பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு சிரித்துக் கொண்டிருக்கிறார் . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 10 மாதம் ஆகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: 10 மாதமா, சரி, உங்களைப் போல அவ்வளவு அக்யூரேட்டாகச் சொல்லமுடியாது. எனக்கு அந்தக் கவலை கிடையாது. அமைச்சர் பதவியிலே உங்களுக்கு அவ்வளவு கவலை.

இதற்கு முன்னாலே பொறுப்பேற்ற நம்முடைய விவசாயத் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள், இந்தத் துறையை என்றைக்கு ஏற்றார்களோ, அன்றைக்கே அந்தத் துறைக்குக் கேடு வந்திருக்கிறது என்பதை நாட்டிலே உள்ளவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். கெட்டுப்போன காரியத்தை எடுத்து வைத்துக் கொண்டு, செத்துப்போன சவத்தை வைத்துக்கொண்டு, மாண்புமிகு மன்னை அவர்கள் உயிர்ப்பிக்க முற்படுவாரானால் அவர் நிச்சயம் தோல்வி காண்பார் என்பதிலே எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அத்துறையிலே ஊழல்கள் புறையோடிப் போயிருக்கின்றன. ஊழல்கள் புறையோடிப் போயிருக்கிற நேரத்தில், அறுவை சிகிச்சை செய்தால் கூட, சரிப்படுத்த முடியாது என்பதிலே நான் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன்.



1974 ஏப்ரல் 5] [திரு. க. உரொ. எட்மண்ட்]

அந்தத் துறை அதற்கு முன்னாலே ஆட்சிப் பீடத்திலே இருந்தவர் களால் எப்படி வைக்கப்பட்டிருந்தது என்று ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கூடச் சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் இதற்கு முன்னாலே ஆண்டு கொண்டிருந்தவர் களைக் காண்பித்து, அவர்கள் கையிலே இந்தத் துறை இருந்தபொழுது இந்தத் துறையிலே தவறு இல்லையா என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்களே தவிர, எதற்காக இப்பொழுது நாம் இப்பொறுப்பை ஏற்றிருக்கிறோம். முன்னாலே இருந்த சீர்கேடுகளைக் களையவேண்டும். அதிலே புதிய திருப்பங்களை உருவாக்கவேண்டும். அதன்மூலம் இந்தத் துறையைப் பயனுள்ளதாக ஆக்கவேண்டுமென்ற எண்ணம் இப்பொழுதுள்ளவர்களுக்கு இல்லையென்பதே அவர் களுடைய வாதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்வதாகும். அந்த அளவுக்கு ஊழல் மலிந்த துறையாக, நாட்டு மக்களுக்குப் பயன் அற்ற தாக இத்துறை நடமாடிக் கொண்டிருக்கிறது.

பெரியவர் மணலி அவர்கள் இப்பொழுது சொன்னார்கள். அந்த மக்களுடைய இயக்கமாக இதனை மாற்றவேண்டுமென்று. அந்த எண்ணம் ஆள்கின்ற பொறுப்பிலே உள்ளவர்களுக்கு இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எந்த பாங்கை எடுத்தாலும் சரி, எந்த சங்கத்தை எடுத்தாலும் சரி, எல்லாம் நியமன இயக்கங்கள்.

நம்முடைய மணலி கந்தசாமி கூட ஆதித்தன் அவர்களைப் பாராட்டினார்கள். உண்மையிலே அவர்கள் அதிலே திறமைசாலி. அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே திறமையாக காரியங்களைச் செய்திருக்கிறார்.

கூட்டுறவின் உயர்வே நாட்டுயர்வு என்று சொல்கிறோம். இப்போது கூட்டுறவின் உயர்வு நாட்டுயர்வு இல்லை. கூட்டுறவின் உயர்வு தி.மு.க.வின் உயர்வாக இருக்கிறது. எந்தக் காரியமாக இருந் தாலும் சரி அங்கே நியமிக்கப்படுகிறவர்கள் தி.மு.க.வினர் தான். நியமிக்கப்படுபவருக்கு அதற்குரிய தகுதி இருக்கிறதா, நிர்வாகத் திறமை இருக்கிறதா என்றெல்லாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. தி.மு.க.விலே எட்டணா உறுப் பினரா என்று பார்த்துப் போடுகிறார்கள். இதை அமைச்சரவர்கள் மறுக்கமுடியாது. தி.மு.க.விலே இருக்கிற எவரும் மறுக்கமுடியாது.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட்

அவர்கள் தி.மு.க. என்று இருந்தாலே கொடுத்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தி.மு.க.விலே இருக்கிற எல்லோருக்கும் கொடுப்பதில்லை. அவர்களுடைய குரூப்புக்குத்தான் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்ன விளக்கம்? இது ஒரு பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனா? நல்ல கருத்துக்களைச் சொல்லுங்கள். அவையின் தரத்தைக் காப்பாற்றுங்கள்.

திரு. கோவை செழியன் : உள்ளதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இயக்குநருக்கு என்ன தகுதி என்று எந்த விதிமுறையிலும் இல்லை. அதிகாரத்தில் இருப்பவர்களின் கருத்துக்கு தகுந்தாற்போல் அந்த முறையிலே வகுக்கிறோம். வேண்டுமென்றால் அதற்கு ஒரு பட்டியல் போடவேண்டும். இதைப்பற்றி கட் மோஷனிலே சொன்னால் நாங்கள் பதில் கொடுப்போம்.

கோவை செழியன் அவர்கள் அங்கே போய்விட்டதால்தான் அப்படிச் சொல்கிறார். அவர் எப்போதும் பிளவு எண்ணத்திலேயே இருப்பதால்தான் அதைச் சொல்கிறார். இப்படிச் சொல்லாமல் நல்ல சீர்திருத்தங்களைச் சொல்லவேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : கோவை செழியனுக்கு அனுதாபம், தி.மு.க.விலே இருக்கிற சிலருக்குத்தான் கிடைக்கும் என்பது. இந்தத் துறையை இன்னும் விஸ்தரிக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற பலரும் அதிலே டைரக்டர்களாக இருப்பார்கள். எங்கேயாவது ஒரு சங்கத்தை ஆரம்பிப்பார்கள் ஒருவருக்கு இடம் கொடுக்கவேண்டும் என்பதற்காக. அதிலே இடமில்லை என்றால் போகஸ் சங்கத்தை ஆரம்பிப்பார்கள். சங்கம் எங்கே இருக்கிறது? அதற்குத் தலைவர் யார் என்பதெல்லாம் தெரியாத அளவில் போகஸ் சங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன.

மேலும் சங்கத்திலே இயக்குநராக இருப்பவர்கள்தான் தி.மு.க.வை சேர்ந்தவர்கள் என்றால் அந்தச் சங்கத்தால் பலனடைபவர்களும் தி.மு.க. வாகத்தான் இருப்பார்கள்.

கடன் பெறவேண்டுமா? அவர் ஒரு தி.மு.க.வாகத்தான் இருக்க வேண்டும். வட்டச் செயலாளரின் சிபாரிசு வேண்டும். அல்லது மாவட்ட செயலாளர் சிபாரிசு செய்யவேண்டும், அல்லது அந்த





அமைச்சரின் சிபாரிசு செய்யவேண்டும். இன்னும் சிலருக்கு சலுகை கொடுக்கப்படுகிறது. அவர் தி.மு.க. இல்லை என்றால் உடனே அந்தச் சலுகை ரத்து செய்யப்படுகின்றன. இதற்கு ஒரே ஒரு உதாரணம் நெல்லை மாவட்டத்தில் உள்ள அம்பலிச்சேரி என்ற கிராமத்திலே பெருமாள் என்பவருக்கு நிலவள வங்கியிலேயிருந்து சீசனல் கடன் கொடுத்தார்கள். அவர் தி.மு.க. இல்லை என்பதற்காக அறுவடை முடிந்தவுடனே அதைத் திருப்பி செலுத்தச் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நிலவள வங்கியிலேயிருந்து சீசனல் கடன் கொடுப்பதில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : மத்திய வங்கி என்று சொன்னேன். தி.மு.க. விலிருந்தபோது கொடுக்கப்பட்ட கடனை அ.தி.மு.க. விற்கு வந்தவுடனே திருப்பிக் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். திருநெல்வேலியிலே மத்திய கூட்டுறவு வங்கியிலேயிருந்து ஒரு தனிப் பட்ட குடும்பத்திற்கு கடனாக போவதைப்போல் போய் இருக்கிறது. அந்த நிலம் ஆதித்தனுடைய அண்ணனுக்கு பாத்தியமாக இருந்து அதன் மூலம் ஒரு டிரஸ்டை அமைத்து, மனுப் போட்டு 7 நாட்களுக்குள்ளாக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை நான் புதிதாகப் பேசவில்லை. இன்று தி.மு.க.விலே உறுப்பினராக இருக்கிற திரு. சுப்பு அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்தபோது பேசினார்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேசுகிறபோது ஒரு அளவோடு பேசவேண்டும். இதற்கு முன்னால் என்ன நடந்தது என்று பேசவேண்டும். சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பேங்க் என்று சொல்கிறார்கள். அதற்கும் லேண்ட் டெவலப்மெண்ட் பேங்குக்கும் வித்தியாசம் தெரியாமல் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். முதலிலே இந்தக் கருத்து இங்கே சொல்லப்பட்டு, அது கோர்ட்டுக்குப்போய் அங்கே அவதூறு என்று தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது. திரும்பவும் அதைச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன பலன்?

திரு. க. உரொ. எட்மண்ட் : அந்தக் கடன் தரப்பட்ட பிறகு அந்தத் தொகை திருப்பி செலுத்தப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது அதிலே ஏதோ ஊழல் நடந்து இருக்கிறது என்றுதானே

[1974 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இப்படிச் சொல்கிறபோது
இந்த பாயின்ட் கோர்ட்டுக்குப் போனது. அதிலே அமைச்சருக்கு
சம்பந்தம் இருப்பதாக இங்கே பேசி, அது பத்திரிகையில் வந்து,
அது கோர்ட்டுக்குப் போய் அது உண்மையல்ல என்று தெரிந்துங்கூட
அதைச் சொன்னதாகவும், அது அவதூறு என்றும் தீர்ப்பாகி இருக்
கிறது. பிறகு அதைப் பற்றியே பேசி, அது பத்திரிகையிலே வந்து
மீண்டும் கோர்ட்டுக்குப் போகவேண்டுமா? முன்பே இது அவதூறு
என்று கோர்ட்டிலே தீர்ப்பாகி இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன் : " ஐ திங்க் தி ஹானரபிள் மினிஸ்டர் ஈஸ்
மிஸ்லீடிங் தி ஹவுஸ்". திரு எட்மண்ட் சொன்னார் கடன் திருப்பிக்
கட்டியதற்கு ஆதாரம் இருக்கிறது என்று சொன்னார். ஆகவே இதைப்
பற்றி தெளிவாகச் சொன்னால் நன்மையாக இருக்கும். இருபத்திரண்டு
லட்சம் ரூபாய் கடனை வாங்கப்பட்டதா இல்லையா என்று தெளி
வாகச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அந்த பாயின்ட்தான்
கோர்ட்டுக்குப் போனது. அமைச்சருக்கு சம்பந்தம் இருக்கிறதா,
இல்லையா என்ற பாயின்டிலேதான் போனது. அமைச்சருக்கு அதிலே
சம்பந்தம் கிடையாது. அமைச்சருக்கு சம்பந்தம் இருக்கிறது என்று
முன்பு சொல்லப்பட்டது. அமைச்சருக்கு சம்பந்தம் இல்லை என்று
சொல்லி வழக்கு போடப்பட்டது. அப்படி அவதூறு வழக்கு
போட்டு அதிலே தீர்ப்பாகியிருக்கிறது என்று சொல்கிறேன்.

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத்
தலைவரவர்களே, இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு
மன்னை நாராயணசாமி நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள்
இருக்கிறபோது தொட்டதற்கெல்லாம் இவர் எழுந்து பேசுகிறாரே!
அப்படியானால் அவருக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கின்றார்
களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது அவருடைய
பிரச்னை. ஆகவே அவர் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எட்மண்ட்
அவர்கள் பேசுகிறபோது ஆதித்தனர் அவர்களைக் குறிப்பிட்டுப்
பேசினார். ஆகவே அவர் விளக்கம் தருகிறார்.



1974 ஏப்ரல் 5]

திரு. க. உரொ. எட்மண்ட் : அவதூறு வழக்கு நடந்தது
எதற்காக? கடனை வாங்கியவர் அமைச்சர் ஆதித்தன் என்று
எழுதியதற்காக வழக்கு நடந்தது. இல்லை என்று தீர்ப்பாகியிருக்
கலாம். அந்த நிலம் ஆரம்பத்தில் யாருக்குச் சொந்தம்? ஆதித்தன்
டிரஸ்ட்டுக்குச் சொந்தமா, இல்லையா? பல சங்கங்களை அமைத்
திருக்கிறார்களா இல்லையா? அதன் உறுப்பினர்கள் யார் யார்?
நிலத்தின் சொந்தக்காரரர் யார்? தினத்தந்தி ஆபீசிலே வேலை
செய்பவர்கள், சன் பேப்பர் ஆலையிலும் வேலை செய்பவர்கள்
என்பதை நான் நிரூபித்துக் காட்ட முடியும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குடியிருப்
பவர்களுக்கு தாதன்குளம் நிலத்தில் எப்படி ஒட்டுமொத்தமாகக்
கிடைத்தது என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவரவர்கள் இருக்கின்ற
பக்கத்தில் தனித்தனியாகக் கிடைத்திருந்தால் இந்தச் சந்தேகம்
வராது. தினத்தந்தி பத்திரிகையிலும், சன் பேப்பர் ஆலையிலும் வேலை
செய்கிறார்கள். அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக இங்கே நிலம் இருக்
கிறது. சங்கமாக அமைத்து 22 லட்சம் ரூபாய்க்கு விண்ணப்பம் செய்
திருக்கிறார்கள். ஒரு வாரத்தில் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.
இப்படி சாதாரண விவசாயிகளுக்குக் கிடைக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, மீண்டும்
மீண்டும் அதையே திரும்பச் திரும்பச் சொல்வதால் அது உண்மை
யாகிவிடாது. உங்கள் தலைவர், பிரசிடெண்ட் அவர்களிடம் கொடுத்த
மர்மப் பேழையிலும் அது இருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ளுங்
கள். அந்த மர்மப் பேழையில் உள்ள குற்றச்சாட்டுகளைப் படித்துப்
பார்த்தால் தெரியும். இதை ஏன் சொல்கிறேன் என்றால், எனக்குச்
சம்பந்தம் இருப்பதாகக் கூறுவது மிக மிகத் தவறு. வெளியிலே
பத்திரிகையிலே போட்டு, என்னைச் சொன்னதாலே அவதூறு வழக்கு
போட்டு முடிந்து, அமைச்சருக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை
என்று தீர்ப்பாகியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : அமைச்சரவர்களின் காரியங்கள்
மர்மமான காரியங்களாக இருப்பதால் அவைகள் மர்மப் பேழைகளில்
தான் வரும். சொத்துக் கணக்கைக் கொடுத்தார்கள், அதில் கார்
இல்லை. வீடு இல்லை என்று கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி இப்பொழுது
சொல்லவேண்டாம்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்தச் சொத்துக்கணக்கைப்பற்றி நேரடியாகச் சொன்னதால்தான் சொல் கிறேன். திரு. எட்மண்ட் அவர்கள் சொத்துக்கணக்கைப்பற்றிச் சொன்னார்கள். சொத்துக் கணக்கை 1969-ம் வருஷம், 1970-ம் வருஷம், 1971-ம் வருஷம் என்று கொடுத்துக் கொண்டு வருகிறேன். அதை நிறுத்திவிடவில்லை. 1972-ம் வருஷம், 1973-ம் வருஷம் என்று ஆண்டுதோறும் கொடுத்திருக்கிறோம். அதிலே என்ன தவறு? எனக்குத் தனியாகக் கார் இல்லை என்று சொல்வதில் தவறு இல்லை. உள்ளபடியே இல்லை. (சிரிப்பு) நான் சொல்வதைக் கேளுங்கள். அப்படி இன்னொரு கார் தனியாக எனக்கு இருந்தால் அதனுடைய நம்பர் என்ன? அரசாங்கம் எனக்கு ஒரு கார் கொடுத்திருக்கிறது. எனக்கு ஒரு கார் கொடுத்திருக்கிறது. அதில் பயணம் செய்வதற்கான செலவைக் கொடுக்கிறது. டிரைவருக்குச் சம்பளத்தைக் கொடுக் கிறார்கள், ரிப்பேரானல் ஓட்டுவதற்கு வேறு காரைத் தருகிறார்கள்.

இன்னொரு கார் இருக்கிறது என்றால் ஒரு காரை இன்னொரு காருக்குள் வைத்துக்கொள்வதா? நான் திரும்பத் திரும்பச் சொல் கிறேன், அரசாங்கம் கொடுத்த காரைத் தவிர வேறு கார் எனக்குச் சொந்தமாக இல்லை என்பதை எழுதிக்கொடுக்கிறேன். இன்னொரு கார் இருக்கிறது என்றால் என்ன நம்பர் என்று சொல்லுங்கள். ஒரு முறையாவது அதை ருசுப்படுத்துவதற்கு முயற்சிக்கக் கூடாதா? இத்தனை வருஷங்களாகக் கணக்கு கொடுத்து வருகிறேன், கொடுத்த சொத்துக் கணக்கில் என்ன தவறு இருக்கிறது? கார் இல்லை என்று மீண்டும் சொல்கிறேன்.

இன்னொரு காருக்கு எனக்கு என்ன தேவை இருக்கிறது? எங்கே வேண்டுமானாலும் போகவும், டிரைவரைக் கொடுக்கிறார்கள், போட்ரோல் கொடுக்கிறார்கள். எனவே, இன்னொரு கார் எனக்குத் தேவை இல்லை. ஆகவே, அமைச்சரானவுடன் இரண்டு கார்களை வைத்துக்கொண்டு பயன்படுத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கூட்டுறவு மானியத்தைப் பற்றிப் பேசுங்கள். சொத்துக் கணக்கையெல்லாம் பற்றி இப்பொழுது பேசவேண்டாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : மர்மப் பேழை என்று அவர்கள் சொன்னதால் உங்கள் காரும் மர்மமாக இருக்கிறது என்பதற்காகத் தான் சொன்னேன். இதை வெளியே சொன்னல் மக்கள்



கள். இந்த மன்றத்தில் அவர்கள் கார் இல்லை என்று சொன்னவுடன் மன்ற உறுப்பினர்கள்கூடச் சிரிக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. அதைப்பற்றி மேற்கொண்டு பேச விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அதைத் திரும்பச் சொல்வ தால் சொல்கிறேன். எனக்கு இன்னொரு கார் இருக்கிறது என்று ருசுபடுத்திவிட்டால் நான் இராஜினமா செய்துவிட்டு எம்.எல்.ஏ. பதவியையும் இராஜினமா செய்துவிடுகிறேன். ஆனல் ருசுபடுத்த முடியவில்லையென்றால் அவர்கள் இராஜீனமா செய்கிறார்களா?

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆதித்தனர் அவர்களுக்கு ஒரு காரே போதும், இன்னொரு கார் அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, (மணியடிக்கப்பட்டது) நான் பேசிய நேரத்தைவிட அமைச்சர் பேசிய நேரம்தான் ஜாஸ்தியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12-07-க்கு ஆரம்பித்தீர்கள், 12-25 ஆகிவிட்டது. இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் திருநெல்வேலி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர். அவர்தான் அங்கே தலைவராக இருக்கிறார். நான் ஒரு நோட்டீஸ் வைத்திருக்கிறேன். யார் அடித்தது என்றால் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி ஊழியர்கள் முன்னேற்ற சங்கம், 122 ரிஜிஸ்தர் நம்பர். அவர்கள் நோட்டீஸ் அடித்து ஒருசில கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தலைவராக இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர். அவர் நிதிநிலை சரியாக இல்லை; ஆகவே, உங்கள் கோரிக்கைகளை என்னல் கவனிக்க முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டு 41 பேர்களை இப்பொழுது நியமனம் செய்திருக்கிறார்கள் [ * * * * ] இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் மாண்புமிகு முதலமைச்சரவர் களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்றுதான்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எதை வேண்டுமானாலும் பேசிவிடுவது என்ற அளவில் இந்தச் சட்டசபையில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வது முறையாகத் தெரியவில்லை [ * * * * ]எனவே இப்படிப் பேசுவது முறையல்ல. அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அங்கே கோரிக்கைகளை வைத்தார்கள், ஆனால் நிதிநிலை சரியாக இல்லை என்று சொன்னவர் பிறகு 41 பேர்களை எப்படிப் போட்டார்கள் என்று கேட்கிறீர்கள். அது இந்த மன்றத்தில் வர வேண்டியதுதான். ஆனால் பிறகு, [ * ] என்று சொன்னால் அது எப்படிச் சரியாக இருக்கும்? இந்த மன்றத்தில் ஒரு குற்றச் சாட்டைச் சொல்லும் நேரத்தில் எந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதன்கீழ் வர வேண்டாமா?

திரு. க. உரொ. எட்மண்ட் : என்னிடம் கொடுக்கிறார்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கிறவர்கள் எதைக் கொடுத்தாலும் அதை இந்த மன்றத்திலே சொல்லும் நேரத்தில் பொறுப்பேற்றுக்கொண்டு சொல்ல வேண்டும். எந்த ஸ்டேட் மென்டை உறுப்பினர்கள் சொன்னாலும் அதில் உள்ள பொருளுக்கு உறுப்பினர்கள் பொறுப்பை ஏற்க வேண்டும். அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளைச் சொல்லும்பொழுது எப்படிச் சொல்ல வேண்டுமென்ற ஒரு முறையை வகுத்துக் கொண்டிருக்கிறோம், அந்த முறையில் வர வேண்டும். ஆகவே, உங்களிடம் ஆதாரம் இருந்து குற்றச்சாட்டு களைக் கூறினால் அதை மறுக்கப் போவதில்லை. ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளைச் சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதை மன்ற நடவடிக்கைகளில் ஏற்றுவதும் நல்லதல்ல. ஆகவே, அதை திரு. எட்மண்ட் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது.

திரு. க. உரொ. எட்மண்ட் : அந்தப் பகுதியை மட்டும் [ * * ] என்ற பகுதியை மட்டும் நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வகையில் அதை பேரவை யின் நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்தும் நீக்கிவிடவேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





திரு. நா. வீராசாமி : திரும்பப் பெற்றுக்கொள்வது என்றால், பல முறை பத்திரிகைகளில் வருகிறதே. ஒருநாள் பொன்னப்ப நாடார் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இப்படி அர்த்தமில்லாமல் இருக்கிறதே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பப் பெற்றுக்கொண்டார் என்று சொல்லும் நேரத்தில் அதையொட்டிய நிகழ்ச்சிகள் நடவடிக்கைக் குறிப்பிலும் ஏறாது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். கடந்த 72-இல் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் தேர்தலில் இந்த மத்திய கூட்டுறவு வங்கியின் அலுவலகம் எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்று சொன்னார்கள். டி.என்.டி. 333 என்ற எண்ணுள்ள கார் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்காக வேலை செய்திருக் கிறது. மத்திய வங்கியிலிருந்து பெட்ரோல் கணக்கை எழுதியிருக் கிறார்கள். ஏதோ வங்கியின் விஷயமாகச் சென்றது மாதிரி கள்ளத் தனமாக எழுதிக் கொண்டு அந்தக் காரைத் தேர்தலுக்குப் பயன் படுத்தினார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதற்கு என்ன ஆதாரம்?

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆதாரம் என்றால் நான் காரை பிடித்துக்கொண்டு வர முடியுமா? நம்பர் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்பர் சொல்வது எதற்கும் சொல்லலாம், ஆனால் ஆதாரம் வேண்டும். யார் யார் அதில் ஏறிப் போனார்கள், எந்தத் தேதியில் போனார்கள், அதை நிரூபிக்க வேண்டும், அதை எழுதிக்கொடுத்தால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இல்லையென்றால் பொறுப்பை ஒத்துக்கொள் கிறேன் என்று சொல்ல வேண்டும்.

[1974 ஏப்ரல் 5

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த மன்றத்தில் நீங்கள் அனுமதித்தால், அந்த வங்கியின் கார் வேறு எந்தக் காரியத்திற்காகவாவது போனால் நாங்கள் நடுத்தெருவில் காரை மடக்கி அதன் சாவியைக் கொண்டுவரத் தயாராக இருக்கிறோம். நீங்கள் அதற்கு அனுமதி தருகிறீர்களா? அந்தக் கார் சென்னைக்குக்கூட வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எல்லாக் கார்களின் நம்பர்களும் எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். ஆகவே, கார் நம்பரைச் சொல்லிவிடுவதாலேயே அந்தக் குற்றச்சாட்டு ருசுவாகிவிட்டது என்று அர்த்தம் அல்ல. இதேபோல் யாரைக் குற்றம் சாட்ட வேண்டுமென்றாலும் கூறலாம், ஒரு உறுப்பினரின் கார் நம்பரைக் குறித்து வைத்துக்கொண்டு இந்த உறுப்பினர் இத்தனை மணிக்கு இந்தத் தவறைச் செய்தார் என்று கூறலாம். ஆகவே, கார் நம்பரைச் சொல்லிவிடுவதாலேயே அதை உண்மை என்று நம்பிவிட முடியாது. ஆகவே கார் நம்பரைச் சொல்வதால் மட்டும் குற்றம் ருசுவாகிவிடாது.

பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு பத்திரிகை நடந்தது, அந்தப் பத்திரிகையில் பீச்சிலே இந்த நேரத்தில் இந்தக் கார் நின்றது என்று கார் நம்பரையும் போடுவார்கள். அதைப் படிக்கின்ற பாமர மக்கள் கார் நம்பரைக்கூடச் சரியாகப் போட்டிருக்கிறார்களே, என்று பெரிய நடிகரைப்பற்றித் தவறாக கருதிக்கொண்டிருந்தார்கள்.

கார் நம்பரைச் சொல்லுகிற காரணத்தாலேயே குற்றம் ருசுவாகி விட்டதாகக் கூறமுடியாது.

(நண்பகல் 12-30)

திரு. க. உரொ. எட்மண்ட் : இதற்கு ஆதாரம் சொல்லக் கூடாதா என்று முதலமைச்சர் அவர்கள் கிளப்பிய காரணத்தால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்ட கழகத் தேர்தல் நடக்க இரண்டு நாட்களுக்கு முன்னால் என்னுடைய வீட்டிலிருந்து தொலைபேசி எண் 2341 என்ற எண்ணிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கால் போட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் பேசினார்கள். இந்த மன்றத்தின் உறுப்பினராக இருக்கக்கூடிய ஆலடி அருணா அவர்கள் பேசினார்கள். மாவட்டச் செயலாளர் திரு. ஏ. எல். சுப்பிரமணியம் அவர்கள் பேசினார்கள். இதையெல்லாம் மறுக்க முடியாது. இதற்கெல்லாம் ஆதாரம், ஆதாரம் என்று பேசினால், எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன செய்ய முடியும்?



தவறுகள் நடந்திருக்கின்றன என்று இந்த மன்றத்தில் சொல்ல முடியும். அதை விசாரித்து உண்மையா இல்லையா என்று நீங்கள் தான் சொல்லவேண்டும். அதை விட்டு விட்டு ஆதாரம் ஆதாரம் என்று சொன்னால் எப்படி? அடுத்த முறை ஆதாரங்கள் அத்தனையையும் கையில் எடுத்துக்கொண்டு வரத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆதாரம் கேட்டால் நான்தான் ஆதாரம் என்று சொல்லுகிறார். இது எப்போதோ நடந்தது; அப்போதே சொல்லியிருக்கலாம். அதற்கு இவர்களும் உடந்தையாக இருந்தார்களா? ஏதோ தொலைபேசியில் பேசியதாகக் குற்றம் சொல்லுகிறார். நிரூபிக்கும் வகையில் சொல்ல வேண்டும். ஒட்டு மொத்தமாகப் பேசுவது சரியல்ல. ஏதோ அவர்கள்தான் மிகுந்த யோக்கியர்கள் என்ற வகையிலே பேசுவது சரியல்ல. தலைவர் அவர்கள் இதையெல்லாம் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. செல்வராஜ் பேச அழைக்கப்பட்டார்)

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. திரு. செல்வராஜ்……

திரு. முனு ஆதி : அவர்கள் எங்கள் கட்சியின் துணைத் தலைவர். அவரை முடிக்கக்கூட விடக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எட்மண்ட் அவர்கள் 12-07க்கு ஆரம்பித்தார்கள். இப்போது 12-32 ஆகிறது. 25 நிமிடத்திற்கு மேல் ஆகிறது. என்னதான் குறுக்கீடு இருந்தாலும் இதற்கு மேல் நேரம் கொடுக்க முடியாது. ஒரு உறுப்பினருக்கு 10 நிமிடந் தான்.

திரு. க. உரொ. எட்மண்ட் : முடித்து விடுகிறேன். இந்த ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும்— 'Co-operative is equal to fraud' என்றுதான் நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு மக்கள் மத்தியில் எண்ணம், வளர்ந் திருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவுச் சங்கம் தி.மு.க. சங்கமாக இருக்கும் அளவுக்குத்தான் நிலைமைகள் இருக்கின்றன. 25 ஏக்கர் வைத்திருந்தால்தான் அவர்களுக்கு டிராக்டர் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். உச்ச வரம்பே 15 ஏக்கர் தான். இதை எல்லாம் மாற்ற வேண்டும்.

இந்தக் கூட்டுறவுத் துறையை நீங்கள் மக்களுக்குப் பயனுள்ளதாக மாற்றிக் காட்ட வேண்டும். அது உங்களால் முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. உங்களுக்கு அதிலே சீர்திருத்தம் உண்டாக்கி தவறுகளைக் களைய வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாகத் தெரிய வில்லை. இந்த ஆட்சியிலே முன்னால் இருந்தவர்கள் அப்படிச் செய் தார்கள்; அவர்கள் காலத்திலேயே தவறு நடந்திருக்கிறது என்று கூறி நாங்களும் தவறு செய்துகொண்டுதான் இருப்போம் என்ற நிலையில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கூட்டுறவுத் துறையைச் சீர்திருத்த நீங்கள் முயற்சிப்பீர்கள், நடவடிக்கை எடுப்பீர்கள் என்பதிலே எள்ளளவும் சந்தேக—நம்பிக்கையில்லை என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உண்மை உதட்டைக் கடித்துக் கொண்டு வெளியே வந்தவுடன் சமாளித்துக் கொண்டார். "எள்ளளவும் சந்தேகம்" என்று சொல்லிவிட்டு உடனே "நம்பிக்கை இல்லை" என்று சொன்னார். உண்மை வரத் துடிக்கிறது; உண்மைக்கு மாறானதை முந்திக் கொண்டு உண்மை வரத் துடிக்கிறது.

THIRU G. R. EDMUND : There is only spoonarism.

திரு. எம். செல்வராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கோரி இருக்கும் மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறுகிய காலத்தில் இந்த இலாகா பொறுப்பை ஏற்றிருந்தாலும் நீண்டகாலமாக அவர்கள் கூட்டுறவுத் துறையில் நாட்டம் உள்ளவர்கள். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இன்றையதினம் புதிய மாற்றங்களை உருவாக்கி விவசாயத்துறையில் புதிய புரட்சியை உருவாக்கி நல்ல முறையில் அபிவிருத்தி செய்து கொண்டு வருவதை பார்க்கிறோம்.

இங்கிருக்கும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் இந்தத் துறையிலே எங்கோ நடைபெற்ற ஒரு சில குறைகளை எடுத்து விரிவாகப் பேசி னார்களே தவிர, ஒட்டுமொத்தமாக இந்தத் துறை மூலமாக நல்ல பணி நடைபெற்று வருகிறது. அகில இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலேதான் கூட்டுறவுத் துறை நல்ல முறையில் நடந்து



வருகிறது. தமிழகத்திற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிர மாநிலமும், அடுத்து குஜராத், அரியானா மாநிலங்களும் இருப்பதைப் பார்க்கிறோம்.

மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் எல்லாம் இங்கு வந்து கூட்டுறவுத் துறை எப்படிச் செயல்பட்டு வருகிறது என்று பார்த்துச் செல்லுகிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் காழ்ப் புணர்ச்சி காரணமாக மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டு மென்றே குற்றச்சாட்டைக் கூறினார்கள். நம்முடைய அமைச்சரவர்கள் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

1965–66-ல் கிராமப்புற சங்கங்கள் மூலமாக எல்லாக் கடன்களும் சேர்ந்து—நிலவள வங்கி கொடுத்த கடன்கள் நீங்கலாக—கொடுக்கப் பட்டது 30 கோடி ரூபாய். 1973–74-ல் 75 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஏறத்தாழ 150 சதவிகிதத்தைக் கடன் வழங்குவதில் எட்டிப்பிடித்திருக்கிறோம். சிறு விவசாயிகளுக்கு மேம்பாட்டுத் திட்டம் என்று பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகள் கோடிக்கணக்கான ரூபாயை மானியமாகப் பெறுகிறார்கள்.

விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுக்கு சிறு விவசாயி களுக்கு வருமானம் போதாது, வேறு துறையில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் ஆடு வளர்ப்பது, மாடு வளர்ப்பது, கோழி வளர்ப்பது போன்ற திட்டங்களை உருவாக்கியிருப்பதற்காக இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டிலே 11,000 கடன் வழங்கு சங்கங்கள் இருந்ததை 4,685 ஆகக் குறைத்து வயபிள் யூனிட்டாக ஆக்கியிருப் பதன் காரணமாக ஒவ்வொரு சங்கத்திலும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் லேவாதேவி நடப்பதற்கு உதவிகரமாக இருக்கிறது. இது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இருபத்தைந்து ஆண்டு காலமாக இல்லாத புரட்சியைக் கூட்டுறவுத் துறையில் உருவாக்கி யிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் கூட்டுறவு வங்கியல் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே சிறு விவசாயி கள் இடம் பெற்றிருக்கிறார்கள்; பஞ்சாயத்துத் தலைவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்; பெண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அடி மட்டத்தில் இருக்கிற ஏழை எளிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அந்த இயக்கத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

[திரு. எம். செல்வராஜ்] [1974 ஏப்ரல் 5

பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இரட்டிப்பு பங்கு அளவுக்கு கூட்டுறவு இயக்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக் கிறார்கள். சில குறைகள் இருக்கலாம். அவற்றை எல்லாம் நாம் நிவர்த்தி செய்து கொள்ளலாம். அதிலே பங்கெடுத்திருப்பவர்கள் விரைவில் நிவர்த்தி செய்து தருவார்கள்.

இங்கு கடன் வசூலிக்கும் முறையைப் பற்றியெல்லாம் சொன்னார் கள். படிப்படியாக கொடுத்த கடனை வசூலிப்பதைப் பார்க்கும்போது 1971-ல் 16 சத விகிதம் கடன் பாக்கி இருந்தது, 1972-ம் ஆண்டில் 8.5 சத விகிதமாக குறைந்திருக்கிறது. அதனால் விவசாயிகளைக் கெடுபிடி செய்கிற நிலைமையும் இல்லை. அந்த அளவுக்கு எந்த விதமான நடவடிக்கையும் எங்கள் மாவட்டத்திலும், மற்ற பல மாவட்டங்களிலும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட்டி விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். விவசாயச் சங்கங் களில் கூடுதலான வட்டி விதிக்கப்படுகிறது என்றார்கள். அங்கு கிடைக்கும் வட்டி விவசாயிகளுக்குத்தான் போய்ச் சேருகிறது. அந்த உறுப்பினர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. லாபத்தில் பங்கு கிடைக்கிறது.

ஆங்காங்குள்ள மத்திய வங்கிகளைக் கலைத்து விடவேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. அப்படிக் கலைத்து விட்டால் 4,686 சங்கங்களை மாநில அளவில் இருப்பவர்கள் கட்டிக்காக்க முடியாது. இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய வங்கிகள் மூலமாக 30 கிளைகளை வைத்துக் கொண்டு இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிளைகள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. வருவாய் போதவில்லை என்று அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது மாநில வங்கியைக் கீழ்மட்ட அளவில் கொண்டு வந்தால் அந்த அமைப்பு சரிவர இயங்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்ட மத்திய வங்கியைப் பொறுத்தவரையில் நாங்கள் பொறுப்பேற்பதற்கு முன்னால் நான்கு லட்சமாக இருந்தது. இப்போது பத்து லட்சம் ரூபாய் அளவிற்கு ஆதாயத்தைப் பெருக்கி யிருக்கிறோம். அதனால் விவசாயிகள் நல்ல பலனைப் பெற்று வருகிறார்கள்.



1974 ஏப்ரல் 5] [திரு. எம். செல்வராஜ்]

இங்கு பேசும்போது சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக் குத்தான் கடன்கள் வழங்கப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் அதை மறுக்கிறேன். எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டு அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அவர்கள் அமைப்பில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எல்லாக் கட்சியினரும் கடன் பெற்றிருக்கிறார்கள். ஆகவே மக்களிடையே ஒரு தவறான எண்ணத்தை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு காலத்தில், ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக கூட்டுறவுத் துறை என்றாலே ஒரு மோசடியாக இருந்தது. அந்த எண்ணம் இப்போது நீங்கி கூட்டுறவுத் துறையில் எல்லோரும் ஈடுபடுகிற ஒரு எண்ணம் நாட்டு மக்களிடையே உருவாகியிருக்கிறது. நாம் இப்போது உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்றால், அதில் முக்கியமான அங்கம் வகிப்பது கூட்டுறவுத் துறைதான். அங்கு மிங்கும் சில தவறுகள் ஏற்படலாம்.

மத்திய வங்கி 20 இலட்சம் ரூபாய் கடன் கொடுத்ததாகச் சொன்னார்கள். நேரடியாக யாருக்கும் கடன் கொடுக்கமுடியாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைப்பு அப்படி இருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 457 சங்கங்கள் உள்ளன. அங்குள்ள நிர்வாகிகள் கடன் மனுக்களைப் பெற்று எங்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள். அவற்றை வங்கி அதிகாரிகள் பார்வையிடுகிறார்கள். சர்க்கார் அதிகாரிகளும் பார்வையிடுகிறார்கள். பிறகு வங்கிக்கு வந்து நாங்கள் அனுமதி வழங்குகிறோம். அப்படி அனுமதி வழங்கியபிறகு பட்டுவாடா செய்கிற பொறுப்பு கிராமத்தில் உள்ள சங்கத் தலைவருக்கு இருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் அந்த அமைப்பில் இருந்தபோது 45 இலட்சம் ரூபாய் அளவிற்கு பினமி டிரான்ஸ்ஸாக்ஷன்ஸ் இருந்தது. அதை ஓரளவிற்குக் கடுமையாக வசூல் செய்து குறைத்திருக்கிறோம். முன்பு அப்போதிருந்த தலைவர்கள் தங்கள் பெயரால் அல்லது தங்களுக்கு வேண்டியவர்கள் பேரால் கடன்பெற்று அனுபவிக்க சட்ட விதி இருந்தது. இப்போது அதிகாரிகள் அடிக்கடி சென்று பார்வையிடு கிறார்கள். ரிசர்வ் வங்கி அதிகாரிகள் ஒவ்வொரு மத்திய வங்கியாக முற்றுகையிட்டு கிராம வாரியாக, சங்க வாரியாக அலசி அலசிப் பார்த்து இன்றையதினம் ஆடிட் செய்கிறார்கள். என்ன என்ன குறை கள் இருக்கின்றனவோ, அவைகளைப் பற்றி எழுதி அவற்றை நிவர்த்திக்க

[திரு. எம். செல்வராஜ்] [1974 ஏப்ரல் 5

வேண்டுமென்று எழுதுகிறார்கள். நமக்கு எழுதுகிறார்கள், மாநில பதிவாளருக்கு எழுதுகிறார்கள். சர்க்காருக்கு எழுதுகிறார்கள், ரிசர்வ் வங்கிக்கு எழுதுகிறார்கள். ஒரு தவறு மத்திய வங்கியில் ஏற்பட்டால் ரிசர்வ் வங்கி கொடுக்கும் கடனை நிறுத்திவிடுவார்கள்.

மேலும், மத்திய வங்கிகளில் பணியாற்றுகிறவர்கள் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு அறிவித்துவிட்டால் போதும் உடனே எங்களிடம் வந்து கேட்கிறார்கள் சம்பள உயர்வு வேண்டுமென்று. நாங்களும் அப்படி அடிக்கடி கொடுத்துக்கொண்டிருந்தால் மத்திய வங்கியின் நிதி நிலைப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் இருக்கிறது. எனவே அந்த நிலையைப் போக்க மாநில அரசு தன் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு கொடுக்கும்போது மத்திய வங்கிகளுக்கும் அதற்கேற்ற மானியம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சங்கங்களின் பைலாக்களில் திருத்தங்கள் ஏற்பட்டால் மத்திய வங்கிக்கு வந்தபிறகு சம்பந்தப்பட்ட வட்டார துணைப் பதிவாளருக்குச் செல்லும்.

இப்போது ஒரு புதியமுறையை உருவாக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது சரிப்பட்டு வராது. கிராம சங்கங்கள் பைலாக்களை திருத்தி நேரடியாக துணைப்பதிவாளருக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக அவற்றிற்கும் மத்திய வங்கிக்கும் உள்ள தொடர்பு குறைந்துவிடும். கட்டுக்கோப்பு இருக்காது நாங்கள் பணம் கொடுக்கிறோம். எல்லைக்கு அப்பாற்பட்ட கிராமங்களைச் சேர்த்து அவர்கள் பைலாக்களை அமைத்துக் கொள்வார்கள். ஆகவே, அப்படிச் செய்ய விடக்கூடாது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் நெல்லை மாவட்டத்திலுள்ள பல கூட்டுறவு அமைப்புகளைப் பற்றி குறை கூறினார்கள். பல்வேறு அமைப்புகளில் அவர்கள் பல ஆண்டுகளாக மோதி மோதி அதில் தோல்வி கண்டு இப்படி, வேண்டுமென்று குறைபாடுகளையெல்லாம் சொல்கிறார்கள்.

சாதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தவிர வேறு எவருக்கும் கடன் கொடுப்பதில்லை என்று சொன்னார்கள். அநேகமாக சொத்து வசதி படைத்தவர்கள் எல்லாம் இதர கட்சி



1974 ஏப்ரல் 5] [திரு. டி. கணபதி]

களைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். நான் ஒரு நிலவள வங்கிக்குத் தலைவனாக இருந்தேன். நாங்குநேரியில் இரண்டு நிலவள வங்கிகள் இருக்கின்றன. அங்கு எல்லா சமுதாயத்தினருக்கும் எல்லாக் கட்சியினருக்கும் ஏராளமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுத்திருப்பதை விட, கடன்கள் அதிகம் பேருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே அ.தி.மு.க. என்ற பூச்சாண்டியைக் காட்டி அரசாங்கத்தை குறை கூற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் சொசைட்டி ரிஜிஸ்ட்ரேஷன் பாரம் கிடைக்கவில்லை, வேண்டியவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள் என்றார்கள். எங்கள் சொசைட்டி பகுதியில் டைப் அடித்த பாரங்களைத்தான் உபயோகப்படுத்தினோம். ஆகவே ஆர்வம் இருக்கிறவர்கள் செய்கிறார்கள். அச்சடித்த பாரம் வேண்டுமென்பதல்ல. ஆகவே தெருப் புழுதி வாரி இறைக்கும் முறையில் பேசக்கூடாது.

திரு. துரை கோவிந்தராசன் பேசும்போது கூட்டுறவுத் துறையில் நெல்லை மாவட்டத்தில் உள்ள அத்தனையும் ஒரு குடும்பத்திற்குச் சொந்தமாக இருக்கிறது, ஒரு அமைச்சரின் குடும்பத்திற்குச் சொந்தமாக இருக்கிறது என்று சொன்னது கண்டிக்கத்தக்கது. எந்த கூட்டுறவு ஸ்தாபனத்திலும் அந்த அமைச்சரின் உறவினர்களோ அல்லது ஆட்களோ இருப்பதாகத் தெரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமே தவிர, இவர் ஏன் சொல்லிக்கொண்டிருக்கிறார்?

திரு. டி. கணபதி: அம்மையார் அவர்கள் எனக்கு ஆதி காலத்தில் இருந்து தெரிந்தவர். அவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், பெண்களுக்கு நியமனம் வேண்டாம் என்று சொன்னார்கள். ஆறில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நியமனம் இருக்கிறது. ஆண்களின் பாதியாக இருக்கிற பெண்களுக்கு நாமினேஷன் இருக்கிறது. unrepresented interest க்கு ஒரு நியமனம் இருக்கிறது. இந்த மூன்று அமைப்புகளும் வேண்டாம் என்று அவர்கள் சொல்லுகிறார்களா? அவர்கள் எண்ணம் என்னவென்று அறிய விரும்புகிறேன். இந்தமாதிரி போலித்தனமாக பேசிக்கொண்டுபோவது நன்றாகயிராது.

[1974 ஏப்ரல் 5

திருமதி த. ந. அனந்தநாயகி: ஐ அப்ஜெக்ட். 'போலித்தனம்' என்று அவர்கள் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் தேர்தலில் நின்று வருகிறோம்.

திரு. டி. கணபதி: போலித்தனம் என்ற வார்த்தையை நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். முன்பிருந்த அமைப்பை மாற்றுவதை உறுப்பினர்கள் ஆதரிக்கிறார்கள். பெரியவர் மணலி அவர்கள் கூடச் சொன்னார்கள். சாதாரண மக்கள் ஆர்வத்தோடு கூட்டுறவுத் துறைக்கு வரும் வகையில் வகை செய்திருப்பதை எல்லோரும் வரவேற்க வேண்டும் என்றார்கள். கழக ஆட்சி சாமான்யர்களால் ஆனது. ஆதிக்கத்தாரும், மேல்தளத்தாரும் இருந்த அமைப்பை மாற்றியிருக்கிறோம். இதில் தவறென்ன? பாராட்ட வேண்டியதே. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 31—3—1974 வரையில் ரூ. 34.16 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 40.31 கோடி ஒதுக்கீடு செய்ய கருதப்பட்டுள்ளது. அதில் 1974–75-க்கு ரூ. 4.09 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. குறுகிய கால, நடுத்தரக் கடன்களாக 1965–66-ல் ரூ. 30 கோடி வழங்கப்பட்டுள்ளது.

1973–74-ல் இரண்டு பங்காக ரூ. 75 கோடிக்குமேல் உயர்ந்திருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் ரூ. 105 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இவை கூட்டுறவுத் துறை முக்கியத்தைக் காட்டுகிறது. நிலவள வங்கிகள் பசுமைப்புரட்சியை உண்டுபண்ண நீண்டக் காலக்கடன்களாக 83 கோடி ரூபாய் வழங்கியுள்ளது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்.

1973–74-க்கு 18 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். நாம் நமது உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு பெற்று வெளி மாநிலங்களுக்கு உணவுப் பொருள் அனுப்பக்கூடிய நிலையில் இன்றிருக்கிறோம்.

வள்ளியூர் நிலவள வங்கி மூலம் கிணறுகள் தோண்ட கடன் வாங்கியவர்கள் கிட்டத்தட்ட 300 பேர்கள். அதில் பெயில்ட் வெல்ஸ் மூன்றுதான். ரூ. 7,000 கடன் வாங்கி 15,000 ரூபாய் செலவு செய்தும் தண்ணீர் வரவில்லை. பாறை வந்துகொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட கிணறுகளுக்கு விதிவிலக்கு அளித்து அவர்கள் கடன்களை திருப்பச் செலுத்தவேண்டாம் என்றோ அல்லது அந்தக் கிணறுகளை அரசு செலவில் ஆழப்படுத்திக் கொடுத்து தண்ணீர்



1974 ஏப்ரல் 5] [திரு. டி. கணபதி]

எடுத்துத்தர வழிவகை செய்யவேண்டும். அப்படிப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்த அரசாங்கம் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிணறும் பம்ப் செட்டும் சேர்ந்திருந்தால்தான் கடன் தருவேன் என்கிறார்கள். பல கிணறுகள் தண்ணீர் வசதி இருந்தும், சொந்தச் செலவில் அடித்தும், பம்ப் செட் கடன் கொடுக்க நிலவள வங்கிகள் முன்வரவில்லை. தனியாக பம்ப் செட்டுக்கு மட்டும் என்று கடன் கேட்டாலும் கடன் வழங்குவது அத்தியாவசியம். கிணறுகளை ஆழப்படுத்தவும் கடன் வழங்க வேண்டும்.

என்னுடைய பகுதியில் கடலோரத்தில் 6 மைலுக்குள் நல்ல தண்ணீர் கிடைத்தாலும் கடன் கொடுப்பது இல்லை. ஆகவே, 6 மைல் தூரத்திற்குள்ளும் நல்ல தண்ணீர் கிடைத்தால், கடன் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிபுடி ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் சேர்மாதேவியில் வைத்து இருக்கிறார்கள். நாங்குநேரியில் 3 சட்டமன்ற தொகுதிகள், அம்பாசமுத்திரத்தில் இரண்டு சட்டமன்ற தொகுதிகள். இதற்கு சேர்மாதேவியைத் தலைநகராக வைத்து இருக்கிறார்கள். அதை மாற்றி எல்லோருக்கும் பொருத்தமான முறையில் இருக்கும் திருநெல்வேலியைத் தலைமையிடமாக வைக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,000 கிடங்குகளைக் கட்டத் தீர்மானித்திருக்கிறார்கள். 1974–75-ல் 200 கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. நெல்லை சூப்பர் மார்க்கெட் நல்ல விதத்தில், டாக்டர் பத்மநாபன் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் நன்றாக நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலும் மேலும் பல கிளைகளோடு அதை விஸ்தரித்து, அதற்குக் கூடுதலான நிதி ஒதுக்கி நல்ல முறையில் நடத்துவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு முற்படுகிறேன்.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில், பலரும் பல குற்றச்சாட்டுகளையெல்லாம் எடுத்துக் கூறினார்கள். அதற்கு அவ்வப்போது அமைச்சரவர்கள் பதில் கூறிக்கொண்டே வந்தார்கள். இந்த

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 5

மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் முன்பு இருந்த நிர்வாகத்தை விட இப்போது சற்று மேம்பாடு ஏற்பட்டு இருக்கிறது என்ற தன்மையில் பலரும் பேசினார்கள். நான் அந்த விவாதத்திற் குரிய பிரச்னைக்குள்ளே நுழைவதற்கு விரும்பவில்லை.

இந்த நியமன முறை அடியோடு தவிர்க்கப்படவேண்டுமென்று முதலில் கூறிக்கொள்கிறேன். நியமனம் என்ற பெயரால் பலரும் இன்று தங்கள் கட்சிக்காரர்கள் ஆனாலும் சரி, வேண்டப்பட்டவர் களானாலும் சரி அந்த இயக்கத்தில் புகுந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஒட்டுமொத்தமாக எல்லாத் தரப்பிலும் சொல்லுகிறார்கள். அதில் உண்மையில்லை என்று சொல்ல முடியாது. மறுத்தால் அது சரியல்ல என்று நான் திட்டவட்டமாக அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நிலவள வங்கியானாலும் சரி, மத்திய வங்கியானாலும் சரி, அது யாருடைய கையில் இருக்கிறது என்பது பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கூட்டுறவு இயக்கமானது இந்தக் கட்சிக் காரர்களின் இயக்கமாக மாறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை அனைவரும் கூறினார்கள். அண்மையில் நாகர்கோவிலில் கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற தேர்தல் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஓட்டர் லிஸ்ட்கள் சரியான முறையில் பிரசுரிக்கப்படவில்லை. யார், யார் எந்தெந்த சொசைடியில் இருக்கிறார்கள், எந்தெந்த உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்று திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. அதற்கு வாய்ப்புகள், வரம்புகள் நிர்ணயிக்கப் படவில்லை. யாராவது சொசைடிக்கு வேண்டப்படாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு ஓட்டு இல்லை. விதிமுறையில் அப்படி இருக்கிறதா? அந்த விதிமுறையைப் பின்பற்றி எல்லோருக்கும் ஓட்டு என்று தராமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் களுக்குத்தான் ஓட்டளிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் கட்சியைச் சேர்ந்த சுவாமிதாஸ் அவர்கள் கூட அந்தத் தேர்தலில் போட்டியிட்டார்கள். அவர் வெற்றியும் பெற்று இருக் கிறார்கள். அதைப்போலவே வேறு சிலரும் போட்டியிட்டார்கள். அங்கே என்ன நடந்தது?



1974 ஏப்ரல் 5] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அது கட்சித் தேர்தல் என்ற முறையில் அங்கே பல கார்கள் உபயோகப்படுத்தப்பட்டன. அதனுடைய நெம்பர்களையெல்லாம் எடுத்துக்கூறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. யாருடைய கார் எப்படி பயன்படுத்தப்பட்டது என்று அந்தப் பகுதி மக்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக இந்தமாதிரி தேர்தல் நடக்கும் போது, நிச்சயமாக அந்த பாங்க் கார் உபயோகிக்கக்கூடாது என்று அந்த வங்கியின் தலைமை அதிகாரி அறிவிக்க வேண்டும். அவர் களுக்குக் கொடுக்கப்பட்ட கார் இதற்கு உபயோகிக்கப்பட்டது. அப்படி உபயோகித்தால் ஒரு கிலோ மீட்டருக்கு இவ்வளவு கட்ட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

நான் ஏன் இதைச்சொல்கிறேன் என்றால், சொந்த உபயோகத்திற்கு பலரும் உபயோகித்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்கும் தெரியும். பல தடவை கார் நெம்பர் எல்லாம் சொல்லி யிருக்கிறேன். இப்போது பெட்ரோல் விலை அதிகமாக இருக்கிறது. தேய்மானம் அதிகமாக இருக்கிறது. இந்த நேரத்தில் டைரக்டர் என்ற பெயரால் தனிப்பட்ட உபயோகத்திற்கு இருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இனிமேலாவது அவர்களது அஃபி ஷியல் யூசிற்குத் தவிர, மற்ற நேரங்களில் உபயோகிக்கக்கூடாது என்று திட்டவட்டமான ஆணையிடவேண்டும்.

அங்கேயிருந்து கார் ஆரம்போலீ சென்று புல் கட்டு வாங்கி வந்தது எல்லோருக்கும் தெரியும். அந்தமாதிரி நிலைமை இருக்கக் கூடாது. முன்னாள் இருந்த தலைவர் முன்னால் இருந்த அமைச்சரை பல மாதிரியாக "திரடினிங் ஆட்டிடியூட்" எடுத்தது எல்லாம் இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். அவர்கள் இப்போது உங்கள் கட்சி யிலிருந்து வேறு ஒரு கட்சிக்குச் சென்று விட்டார்கள். அந்தப் பிரச்னைக்குள்ளே நான் மறுபடியும் போக விரும்பவில்லை. அந்த முறை தவிர்க்கப்படவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அவர்கள் ஒன்றியத்தின் துணைத் தலைவராக இருக்கிறார். அவரது சொந்த ஊர் பள்ளியாடி. பள்ளியாடியிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்வதற்கு அவர் டி.ஏ. போட்டி இருக்கிறார்கள். இந்தக் கட்டத்தில் திரு. சுவாமிதாஸ் அவர்கள் நிறுத்தி இருக்கிறார்கள். பாதிப்பணம் இந்த மாதிரி விரயம் செய்யக்கூடாது என்ற நடைமுறை சுட்டிக்காட்டி அந்த முறை தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். டி.ஏ. வாங்கு வதைப்பற்றி எந்த வித ஆட்சேபணையும் இல்லை. பொறுப்பில்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 5

இருக்கிறவர்கள் நல்லவராக இருக்கவேண்டும். கூட்டுறவுத் துறை நல்ல வகையில் இயங்க வேண்டுமானால், அங்கேயுள்ள அனைவரும் நல்லவர்களாகத் திகழச்செய்வதற்கு நாம் முயற்சி எடுக்கவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தில் பல கையாடல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கையாடல் குறித்து நடவடிக்கை எடுப்பதில் "டபிள் ஸ்டான்டர்ட்" என்ற முறையில் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்து கிறார்கள் என்று குற்றச்சாட்டு சொல்கிறேன்.

மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது திருவாரூர் சொசைடி பற்றி எடுத்துச்சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் கையாடல் செய்திருக்கிறார்கள். அவர்கள் மீது சர்சார்ஜ் போட்டிருக்கிறீர்களா? கிரிமினல் சட்டத்தின் கீழ் வழக்குப் போட்டிருக்கிறீர்களா? என்று அமைச்சர் அவர்கள் திட்டவட்ட மாகச் சொல்லவேண்டும். சர்சார்ஜ் என்று சொன்னால் அதிலே சட்டத்தில் இடம் இருக்கிறது. 71-வது பிரிவுப்படி சர்சார்ஜ் போடு வதற்கு வழிவகை இருக்கிறது. ஆறு வருஷம் இதற்குக் காலவரம்பு கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு உட்பட்டு வந்தால் ஒரு வேளை சர்சார்ஜ் செய்யலாம். அந்தச் சட்டப்படி செய்தால் நஷ்டம் ஏற்படுமா என்பதையும் பார்க்கவேண்டும்.

வேண்டியவர்கள் இந்த மாதிரி ஈடுபட்டால் சர்சார்ஜ், வேண்டாத வர்கள் ஈடுபட்டால் பிராசிகியூஷன். அந்த டபிள் ஸ்டான்டர்டு இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

சட்டத்தின் சந்து பொந்துகளிலே நுழைந்து கொண்டு பிராசி கியூஷன் செய்யாமல், சர்சார்ஜ் செய்யலாம். முன்னாள் அமைச்சர் சட்ட ஆலோசனை இப்படிச்சொன்னால் அது நியாயம் இல்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு நியாயம் நீதி என்று நடக்கிற அளவில் இதுமாதிரி டபிள் ஸ்டான்டர்ட் இருக்குமானால் அது அரசாங்கத்திற்கு நல்ல பெயரைத் தராது, அதன் நிர்வாகத்தில் இருக்கும் தலைவருக்கும் நல்ல பெயரைத் தராது என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, வேறு சில பாங்குகளைப் பற்றி நான் கூறவேண்டு மென்று கருதுகிறேன்.



1974 ஏப்ரல் 5] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வேலூரில் மத்திய கூட்டுறவு வங்கி பற்றி நான் பட்ஜெட் விவாதத்தின்போது ஒரு சில கருத்துக்களைக் கூறினேன். அதன் மீது என்ன நடவடிக்கையை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

குறிப்பாக, நியமனத்தில் டிரெய்னீஸ் தேர்ந்தெடுப்பதில் அதிகமாக ஆட்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அங்கே இருக்கும் ஆபீஸ் கார்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. இதை ஆரஅமர யோசித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். யாராக இருந்தாலும் அவர்கள் தவறு செய்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயங்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். இது கட்சிக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு அமைச்சரவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

சேலம் கூட்டுறவு வங்கி பற்றி பேசப்பட்டது, 1,000 ரூபாய் வழக்கு ஆலோசகருக்குக் கொடுக்கப்பட்டது பற்றி. ரூ. 350 தான் கொடுக் கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்த மாதிரியான வங்கிகளில் இவ்வளவு பெருத்த சம்பளத்தைக் கொடுத்து நாம் சட்ட ஆலோசகர்களைப் போட வேண்டுமா என்பதை நாம் ஆரஅமர சிந்திக்கவேண்டும். ஒரு வேளை அந்த ஆலோசகர் நிபுணராக இருக்கலாம். அவருக்கு ஒரு கேசுக்கு என்ன பீஸ் என்பதையும் சிந்திக்க வேண்டும். ஒரு மாதத்திற்கு ரூ. 350 என்று சொன்னால் அவர் தருகிற ஆலோசனை, ஒவ்வொரு வழக்கிற்கும் என்ன பணம் கொடுக்கிறீர்கள் என்பதையும் ஒட்டு மொத்தமாக கவனிக்கவேண்டும். இதை அவர்கள் விளக்கினால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் மத்திய வங்கியில் நியமிக்கப்பட்டுள்ள சட்ட ஆலோசகருக்கு "ரீடெய்னர்" பீஸாக மட்டும் ரூ. 350 தருகிறோம். மற்ற வாரியங்களில், எலெக்டிரிசிடி போர்ட், டிரான்ஸ்போர்ட் ஆகிய இடங்களில் இருக்கிறது. அதற் கெல்லாம் சட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதற்கு

இதை விடக் கூடுதலான தொகை வழங்குகிறார்கள். நாம் "ரீடெய்னர்" பீஸாக ரூ. 350 தருகிறோம். அதற்கு மேல் நாங்கள் தொகை தரவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் கூட்டுறவு மத்திய வங்கியில் டர்ன்ஓவர் ரூ. 10 கோடி இருக்கும். லாபம் மட்டும் ரூ. 20 லட்சம் ஒரு ஆண்டுக்கு வருகிறது. மற்ற வங்கிகளை விட சேலம் மத்திய வங்கியில் குறைவான "ரீடெய்னர்" பீஸ் தான் ரூ. 350 கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–00)

திரு. கே. டி. கே. தங்கமணி : ரிடெய்னர் என்று சொன்னால் அவர் கேஸுக்கு ஆஜரானாலும், ஆஜராகாவிட்டாலும் அவருக்கு ரூ. 350 கொடுப்பது என்று அர்த்தம். அதற்கும் மேற்கொண்டு குறிப்பிட்ட கேஸில் ஆஜரானால், மற்றவர்களுக்கு எப்படி பீஸ் கொடுக்கப்படுகிறதோ, அதைப் போலத்தான் இவருக்கும் கொடுக்கவேண்டும். திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னது போல் எங்களுக்குக் கிடைத்த விவரப்படி மாதம் ரூ. 1,000 அவருக்குக் கிடைத்திருக்கிறது. அவர் 2½ வருஷம் பணியாற்றியிருக்கிறார்கள். அந்த 2½ வருஷங்களில் கிட்டத்தட்ட ரூ. 30,000 அவருக்கு கிடைத்திருக்கும். Retainer is a fee which is paid to the advocate whether he appears for the case or not இந்தக் கூட்டுறவு வங்கிக்கு எதிராக அவர் ஆஜராகக்கூடாது என்பதற்காக அவருக்கு ரூ. 350 வழங்கப்படுகிறது. சிறு ஆலோசனைகளைக் கொடுப்பார்கள். ஆனால் ஏதாவது கேஸில் ஆஜரானால் தனியாக பீஸ் கொடுக்கவேண்டும். அம்மாதிரி கொடுக்கப்படுகிறதா இல்லையா என்பதைத் தான் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம் : தனியாக மத்திய வங்கியைப் பொறுத்த வரைக்கும் ஏதாவது வழக்காடவேண்டும் என்றால் கூட, சேலத்தைப் பொறுத்தவரைக்கும் ரூ. 350 தான். தனியாக ஏதாவது கருத்துக்களை, சட்ட சிக்கல்களை அவர்களிடம் கொடுத்து அனுப்பி ஆலோசனை கேட்டால், தனியாக அதற்கென்று பீஸ் தருவதில்லை. மொத்தமாக ரூ. 350 தான் நாங்கள் தருகிறோம்.





திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விளக்கத்திற்கு நன்றி. பொதுவாக கூட்டுறவுத் துறையில் இப்பொழுது உணவு தான்ய விநியோகம் செய்துகொண்டிருக்கிறார்கள், உர விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு விநியோகங்களிலும் பல கஷ்டங்கள் பல இடங்களில் இருந்துகொண்டிருக்கின்றன.

உதாரணமாக உர விநியோகத்திற்காக இப்பொழுது பல புதிய அமைப்புகளெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட அமைப்புகளிலிருந்து எனக்கு புகார் வந்திருக்கிறது. அதாவது நாமக்கல் தாலூகாவில் உர விநியோகம் ஒழுங்காக நடைபெறவில்லை என்று புகார் வந்திருக்கிறது.

நாமக்கல்லில் இருக்கிற விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. கூட்டுறவு நாணய சங்கத்தில் தாராளமாக யூரியா உரங்களெல்லாம் தேங்கிக்கிடக்கின்றன. ஆனால் அவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு உத்தரவு வரவில்லை என்ற காரணத்தினால், அந்த விவசாயிகளுக்கு விநியோகம் ஏற்படவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் நிச்சயம் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

நான்கு மாத காலமாக அவர்களுக்கு அமோனியம் சல்பேட், யூரியா போன்ற ரசாயன உரங்கள் விநியோக நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்ற புகாரும் வந்திருக்கிறது. இம்மாதிரி விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்கின்ற நேரத்தில் பல பகுதிகளிலிருந்து இம்மாதிரியான புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

"பூல், நான்- பூல்" என்று வைத்திருக்கிற காரணத்தினால் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்கள். கையிலே தாராளமாக ஸ்டாக் இருக்கும்பொழுது நான்கு மாதங்களாக விநியோகம் செய்யப்படாமல் இப்படி முடங்கிக் கிடக்கிறது என்ற நிலை நிச்சயம் இந்த அரசாங்கம் சரியான முறையில் இயங்கவில்லை என்பதற்கு ஒரு சான்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தாற்போல் நியமனத்தைப்பற்றி பார்க்கும்பொழுது மூன்றில் ஒன்று என்று இருந்தது ஐந்தில் ஒன்றாக செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினாலும், நியமனமே கூடாது என்று நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கிற நியமனங்கள்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல்

எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் சரி, அது விரும்பத்தக்கது அல்ல என்றுதான் நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒருவேளை அரிசனங்களுக்கு வேண்டுமானால் நியமனத்தை வைத்துக்கொள்ளட்டும், அதேமாதிரி பெண்களுக்கு வேண்டுமானால் நியமனத்தை வைத்துக்கொள்ளட்டும். அது அல்லாமல் மற்றபடி நியமன அதிகாரத்தை ரிஜிஸ்ட்ராரானாலும் சரி, அரசாங்கம் ஆனாலும் சரி, அதை உபயோகிப்பது பொருத்தம் அல்ல, நியாயம் அல்ல என்ற கருத்தைத் தான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இறவை சொஸைடி, லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடியை எடுத்துக்கொண்டால் எங்கள் பகுதியில் லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடி பேப்பர் சொஸைடியாக, காகிதத்தில் சொஸைடியாகத் தான் இருக்கிறது. அவைகளில் ஷேர் எவ்வளவு என்று சொன்னால் ரூ. 100, 110 தான். பத்து பேர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தவுடனே அவர்களுக்கு ரிஜிஸ்ட்ரேஷன் கொடுக்க வேண்டும் என்று ஒரு விதி. ஆனால் எப்படி ஏற்படுகிறது என்று சொன்னால், மத்திய வங்கி தேர்தல் நடப்பதற்கு முன்னால் இரவோடு இரவாக உத்தரவு பிறப்பித்து, ஒரு பெயர் பலகையும் கொடுக்கிறார்கள். இம்மாதிரியான சொஸைடிகள் இருப்பது நியாயம் அல்ல. அது ஒரு அநீதி என்று தான் நான் கூற விரும்புகிறேன். இத்தகைய "மிட்நைட் ஆர்டர்" என்ற முறையில் சாங்ஷன் செய்யப்படுகிறது.

அதிலும் இலாகாவின் ஜீப்பை உபயோகப்படுத்தி, ரிஜிஸ்ட்ரார் அவர்களைப் போய் கண்டு, உடனே ரிஜிஸ்ட்ரேஷன் வாங்கியிருக்கிறார்கள். இது எதற்கு என்று சொன்னால், தேர்தலில் அவர்களுக்கு எண்ணிக்கை பலம் பெருகுவதற்கு இம்மாதிரி சொஸைடிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதேமாதிரி தான் ஆயில் கிரஷிங் சொஸைடிகளும். அதற்கும் ஷேர் காபிடல் ரூ. 110 தான். அவைகள் இயங்குவதே இல்லை. ஏதாவது அவர்கள் வரவு-செலவு நடத்துகிறார்களா என்று சொன்னால் திட்டவட்டமாக இல்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் கருங்கல்லில் ஒரு சொஸைடி இருக்கிறது. அங்கே வட்டச் செயலாளர் தான் தலைவராக இருக்கிறார். அதற்கு ஷேர் காபிடல் ரூ. 110 தான். போர்டு மட்டும் தொங்குகிறதே



1974 ஏப்ரல் 5] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஒழிய வேறு எந்த வேலையும் அங்கு நடக்கவில்லை என்று பகிரங்கமாக நான் குற்றம் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டுமென்றால் பெயரைக் கூட சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதிரி நிலைமைகள் ஏற்படக்கூடாது.

நிலவள வங்கிகளின் நியமனம், நிலவள வங்கிகள் எப்படி உருவாயின, யார் யார் இருக்கிறார்கள், அந்தப் பணத்தையெல்லாம் காலாகாலத்தில் கட்டவில்லை என்ற புகார்களையெல்லாம் பற்றி நான் பல முறை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். முன்னாள் அமைச்சராக இருந்தவருக்கு வேண்டப்பட்டவர் அந்தத் தலைவர் பிரமோட்டராக இருந்தார். காலாகாலத்தில் கட்டவில்லை. அது குறித்து வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முஞ்சுரையில் எனது தொகுதியில் அப்படி நடந்திருக்கிறது. இப்பொழுது அவர் அரசாங்க உத்தியோகஸ்தராகப் போய்விட்டார். ஆகவே, இப்பொழுது அவரைப்பற்றி இங்கே எடுத்துக்கூறுவது சரியில்லை என்று கருதுகிறேன்.

காலதாமதம் ஆகியிருக்கிறது. பிரித்த பணத்திற்கு ஒழுங்காக கணக்கு இல்லை என்று புகார் இருக்கிறது. இது மாதிரி சீர்கேடுகள், தவறுகள் நடப்பது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக பினாமி லோன்ஸ் பற்றி ரொம்ப விரிவாக எடுத்துக் கூறினார்கள் . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேண்டப்பட்டவர் என்று காதில் விழுந்தது. திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தான் என்னை விட சற்று அதிகமாக வேண்டப்பட்டவர் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்கள் என்னை எதிர்த்து தேர்தலில் நின்றார்கள். அவர் எனக்கு வேண்டப்பட்டவர் என்று சொல்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இப்பொழுது அவர் உத்தியோகத்தில் இருக்கிறார். நன்றாக, சுகமாக இருக்கிறார், நன்றாக இருக்கிறார். மனமாற வாழ்த்துகிறேன். தேர்தலில் என்னை எதிர்த்து நின்றார்கள் என்பதற்காக எந்தவிதமான காழ்ப்பு உணர்ச்சியும் கிடையாது. அடுத்த தேர்தலிலும் வரட்டும். நாங்கள் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 5

அடுத்தபடியாக, லிப்ட் இர்ரிகேஷன் சொசைடியைப் பொறுத்த வரையில் தனி சட்டம் கொண்டு வந்தார்கள். ஆக்ட் 31 ஆஃப் 1970. அதிலே சாப்டர் 10-ஏ, செக்ஷன் 84-ஏ ஆன்வேர்ட்ஸ் இதெல்லாம் ஏப்படி உருவாயிற்று, எந்த முறையில் உருவாயிற்று, அதை எந்தெந்த முறையில் பிரயோசனப்படுத்துகிறார்கள் என்பதெல்லாம் இந்த மன்றத்திலுள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அதேமாதிரி தான் சென்ட்ரல் சொசைடி, அபெக்ஸ் சொசைடி இதற்கெல்லாம் 9-ஏ, 9-பி, 9-ஸி என்று சட்ட திருத்தங்களெல்லாம் வந்திருக்கின்றன. இதிலே எல்லாம் இந்த இலாகாவிலிருந்து எப்படி வார்த்தைகள் போட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கொஞ்சம் சீராக சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கெல்லாம் தெரியும். இதற்கெல்லாம் சட்டதிருத்தங்கள் வந்திருக்கின்றன. என்ன காரணத்திற்காக வந்தன என்பது முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர். மேல் நாடு சென்று பட்டம் பெற்ற நல்ல வழக்கறிஞராக இருக்கிற காரணத்தினால் சட்டபூர்வமாக காரியங்களைச் செய்வதிலே அதிக நுணுக்கமும் திறமையும் உடையவர்கள். அந்தத் திறமையினாலும், நுணுக்கத்தினாலும் திருத்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கட்சிக்காரர்களை கொண்டு வருவதற்கு அதிகமாக பிரயோசனப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

அதுமட்டுமின்றி அவர்களுக்கு வேண்டப்பட்ட அதிகாரிகளைத் தான் அங்கெல்லாம் போடுவார்கள். மற்றவர்களை உடனே மாற்றுகின்ற ஒரு தன்மை இந்த இலாகாவிலே தொன்று தொட்டு இருந்து கொண்டிருக்கிறது என்பது என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

எங்கள் பகுதியில் நடந்த ஒரு காரியத்தைப் பற்றி கூறவேண்டும் என்று நினைக்கிறேன். நாகர்கோவிலில் ஒரு சூப்பர் மார்க்கெட் இருக்கிறது. அந்த சூப்பர் மார்க்கெட் கமிட்டி கலைக்கப்பட்டது. அதை ஆட்சேபித்து நான் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறினேன். அந்தக் கமிட்டியை சூப்பர்ஸீட் செய்துவிட்டு, ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமனம் செய்தார்கள்.

அந்த ஸ்பெஷல் ஆபிசர் ஒரு சில ஆண்டுகளாக அதிலே அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள். அப்பொழுது ஏதோ முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று இப்பொழுது தலைவராக



1974 ஏப்ரல் 5] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இருப்பவர் எடுத்துக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள். இப்பொழுது தலைவராக இருப்பவர் அவர் கட்சியைச் சார்ந்த ஒரு எம்.எல்.ஏ. அவர் அதிகாரத்திற்கு வந்தவுடன் ஒரு சில முறைகேடுகள், தவறுகள் நடந்திருக்கின்றன என்று ஒரு சில சிப்பந்திகளுக்குத் தண்டனையும் கொடுத்திருக்கிறார்கள்.

அங்கே இருக்கிற ரிஜிஸ்ட்ரார் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், நீங்கள் நியமனம் பெற்ற உறுப்பினர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அல்ல, ஆகவே உங்களுக்கு இவர்களை தண்டிக்கின்ற அதிகாரம் இல்லை என்று அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இம்மாதிரியான தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அவரே கண்டுபிடித்து அவரே தண்டிப்பது பொறுத்தமல்ல.

நிர்வாகத்தில் இருப்பவர்களின் தலையீடு ஏற்படுகிறது என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான முறைகேடுகள் நடக்கக்கூடாது. யார் குற்றம் செய்தாலும் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இதோ, முடித்து விடுகிறேன். அப்படி தண்டனை கொடுப்பதற்கு பரிபூரண உரிமை இருக்கிறது என்பதையெல்லாம் நாம் உணரவேண்டும். இம்மாதிரியான நிலைமை நீடித்திருந்தால் நிச்சயம் அதைத் தவிர்க்க வேண்டும்.

கடைசியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். அபராத வட்டி பற்றி பலரும் சொன்னார்கள். "பீனல் இன்டரஸ்டை" கைவிட முடியாது. கேரளாவிலே இது சம்பந்தமாக நிபுணர் குழு ஆராய்ந்து கருத்து தெரிவித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சாதாரணமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, அவர்களுக்கு அபராத வட்டி விதித்தால் கஷ்டமாக இருக்கும். தவணை முறையில் ஒழுங்காகச் செலுத்தாவிட்டால், தவணை தாண்டி கடன் இருந்தால் அபராத வட்டி நிச்சயமாக விதிக்கப்பட வேண்டுமென்றிருந்தாலும் அதற்கு ஒரு வரம்பு வைத்துக்கொள்ள வேண்டும். அசலில் பாதிக்கு மேல் வட்டி வாங்கக்கூடாது என்ற ஒரு ரூலையாவது போடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அபராத வட்டி என்ற வகையில் அசலை விட அதிகமாகப் பெறுவது பொருத்தமல்ல; நியாயமும் அல்ல.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பல பிரச்னைகள் இருக்கின்றன. அது சம்பந்தமாக இந்தத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறவர்கள் பிரின்டட் டிமான்ட்ஸ் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 5

அவர்கள் தெரிவித்திருக்கின்ற ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நியாயமாக இருந்தால், அவைகளை நிச்சயம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கீழ் இந்தத் துறை சம்பந்தப்பட்ட எல்லா இலாகாக்களும் வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இண்டஸ்டிரீஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ், மில்க் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ், ஹவுசிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ், வீவர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ், ஃபிஷிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. பல அதிகாரிகளால் இவைகள் நிர்வகிக்கப்படுகின்றன. இவைகளை எல்லாம் ஒரே ரெஜிஸ்டிராரின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தால், நிர்வாகம் சிறப்பாக நடைபெறும் என்று சொல்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, செக்ஷன் 28-ன்படி 3 கூட்டுறவு நிறுவன அமைப்புகளுக்கு மேல் ஒருவர் பதவி வகிக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. அதைச் சரியாக அமுல்படுத்த வேண்டுமானால், ஒரே ரெஜிஸ்டிராரின் கண்காணிப்பில் இருந்தால்தான் முடியும்.

பொதுவாக, கூட்டுறவு இயக்கத்திலே இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இன்று இருக்கின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்த கூட்டுறவு இயக்கமானது பயன்பட வேண்டும். இப்போது ஒரு சில சங்கங்கள்தான் இதிலே முனைந்திருக்கின்றன. பரவலாக இதிலே இருக்கின்ற எல்லா சங்கங்களும் அன்றாடம் மக்களுக்குத் தேவைப்படுகின்ற பொருட்களை எல்லாம், குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்களை எல்லாம் நியாயமான விலையில் கொடுக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிறு சிறு முனிசிபல் நகரங்களில் மினி சூப்பர் மார்க்கெட்டுகளை ஆரம்பித்து, அத்தியாவசியப் பண்டங்களை நியாய விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 9 மணியிலிருந்து இப்போது 1¼ மணி வரையில்—4¼ மணி நேரம் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

நம்முடைய பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே முடிவு செய்திருக்கிறபடி உறுப்பினர்கள் எவ்வளவு நேரம் பேசலாம்; அமைச்சர்கள் எவ்வளவு நேரம் பேசலாம் என்று சபாநாயகர் அவர்கள் வரையறை செய்து கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் இப்போது 1¼ மணி ஆகிவிட்டது. நான் எவ்வளவு நேரம் பதில் சொல்வது; எது எதற்கு பதில் சொல்வது, எப்போது முடிப்பது என்று தெரியவில்லை. (குறுக்கீடு) திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் 15 நிமிடங்களில் முடித்துவிடச் சொல்கிறார்கள். அவர்களுடைய பசி அவர்களுக்கு. . கூடியவரையில் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக முடித்து விடுகிறேன்.

இந்த விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எதை எதை பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேனோ; எதை எதை கேட்பார்கள் என்று நினைத்தேனோ அதை அவர்கள் கேட்கவில்லை. இங்கே கூட்டுறவுத் துறை மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் ஒரு நல்ல கொள்கையை நம்முடைய சர்க்கார் வகுத்து, செய்து வந்திருக்கிறது.

ஏழு ஆண்டு காலத்திலே ஊழல், ஊழல், கூட்டுறவுத் துறையே ஊழல் என்று பேசுகிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும் நாளை வரப்போகிறது. இப்படிச் சொல்வதில் அவர்களுக்கு என்ன லாபமோ எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்வதால் மக்களுக்கு நன்மை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த இயக்கத்தைப்பற்றி தவறான எண்ணம்தான் மக்களுக்கு ஏற்படும். உண்மையிலே குறைகள் இருந்தால், எடுத்துச் சொல்லட்டும்; நாங்கள் நிவர்த்தி செய்துகொள்கிறோம். அதை விட்டுவிட்டு தவறான எண்ணங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அகில இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் கூட்டுறவுத்துறை சிறப்பாகச் செயல்படுகிறது என்று பாராட்டியிருக்கிறார்கள். அண்மையில் ஹைதராபாத்தில் கூட்டுறவு பற்றி நடைபெற்ற கூட்டத்தில் இப்படி பாராட்டியிருக்கிறார்கள். இங்கே உள்ள கூட்டுறவு அதிகாரிகளும் அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தார்கள். அகில இந்தியாவிலுள்ள கூட்டுறவு அதிகாரிகள் எல்லாம் வந்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் செயல்படுகின்ற முறைகளை கேட்டு அறிந்திருக்கிறார்கள். பலர் இங்கே

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

வந்து தனியாகக் கூட அறிந்து போயிருக்கிறார்கள். அவர்கள் மாநிலத்திலே இந்த முறைகளை பின்பற்ற முயற்சி செய்யப்போவதாகச் சொன்னார்கள்.

அப்படி அகில இந்தியாவிலுள்ளவர்கள் எல்லாம் நமது மாநிலத்தை பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கின்றவர்களுக்கு பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் இருக்கின்ற குற்றங் குறைகளை எடுத்துச்சொல்லிவிட்டு, பொதுவாக சர்க்காரின் கொள்கையைப் பாராட்டியிருக்கலாம்.

திரு. அழகர்சாமி அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களைப்பற்றி ஒரு முறை பாராட்டியிருக்கிறார்கள். கட்சியிலிருந்து ஏதாவது சொன்னார்களோ என்னவோ அதற்குப்பின்னால் பாராட்டுவது கிடையாது.

திரு. சோ. அழகர்சாமி: நல்ல காரியங்கள் நடைபெற்றால் பாராட்டுகிறேன்; இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச்சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கூட்டுறவுச் சங்க நடைமுறைகளைப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். பஞ்சாயத்துக்களில் இருந்து இதை நாம் மாற்றியிருக்கிறோம். பஞ்சாயத்தின் எல்லை அவர்களுக்குத் தெரியும். ஒரு பஞ்சாயத்தில் எத்தனை கிராமங்கள் இருக்கின்றன என்பது அவர்களுக்குத் தெரியும். அத்தனை கிராமங்களுக்கும் சரியான முறையில் விநியோகம் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஐ.எம்.எஸ். லோன் கொடுக்கும்போது யார் யார் என்னென்ன சொன்னார்கள் என்பதெல்லாம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு கிட்டத்தட்ட 4,000 கிராமங்களுக்கு மேல் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி, உரம் மற்றும் சில பொருட்களை எல்லாம் விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம்.

கிராம சங்கங்கள் மூலமாகக் கொடுக்கின்ற கடனுக்கு 9.7 சதவிகிதம் வட்டி வாங்குகிறோம். திரு. சுவாமிதாஸ் அவர்கள் ஒரு சதவிகிதம் வட்டிதான் அந்தச் சங்கங்களுக்கு கிடைக்கிறது; மீதி எல்லாம் மத்திய வங்கிக்குத்தான் போகிறது என்று சொன்னார்கள். அந்த விபரம் சரியல்ல. 2.2 சதவிகிதம் வட்டி கிராமச் சங்கங்களுக்குச் சேருகிறது. 75 சதவிகிதம் வட்டிதான் மத்திய வங்கிக்குப் போகிறது. மத்திய வங்கிகளுக்கு கீழே இருக்கின்ற கிராமச் சங்கங்களில் இருக்கின்ற சூப்பர்வைசர்களுக்கு ஏற்படுகின்ற செலவை



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

மத்திய வங்கியே கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். வட்டித் தொகையை அப்படியே மத்திய வங்கிக்குக் கொடுத்துவிடுவதாக இருந்தால் அந்தச் செலவை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளும். நான் இதை வாதத்திற்காகச் சொல்கிறேன். நடைமுறை அதுவல்ல. கிராமச் சங்கங்கள் ஒரு பங்கை எடுத்துக்கொள்வதால் அந்தச் சங்கங்களை சூப்பர்வைஸ் செய்கிறவர்களுக்கு அவர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள்.

இரண்டு லட்சத்திற்குமேல் டர்ன் ஓவர் வருகின்றது என்று குறிப்பிட்டார்கள். அப்படி வரவேண்டும் என்றுதான் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்போதுதான் நிர்வாகப் பணிச் செலவுகளை எல்லாம் சரிக்கட்ட முடியும். நஷ்டம் இல்லாமல் இயங்க முடியும். அதனால்தான் 2 லட்சம் ரூபாய்க்குமேல் டர்ன் ஓவர் வருகின்ற வகையில் இருந்த சங்கங்களை எல்லாம் குறைத்து 4,000 சங்கங்கள் என்ற அளவுக்கு கொண்டு வந்திருக்கிறோம்.

இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல் டர்ன் ஓவர் இருந்தால்தான் பணம் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த முறையில் 2 லட்சம் ரூபாய்க்கு குறைவாக டர்ன் ஓவர் வந்த ஒரு சில சங்கங்களுக்கு—அதாவது 1,800 ரூபாய் குறைவாக இருந்தால், அந்தப் பணத்தை அரசாங்கம் பாதியும் சம்பந்தப்பட்ட மத்திய வங்கியும், கிராமச் சங்கமும் பாதியும் போட்டு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அது இப்போது 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த 3,000 ரூபாயில் 1,500 ரூபாயை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்; 750 ரூபாயை கூட்டுறவு சொசைட்டியும், 750 ரூபாயை மத்திய வங்கியும் ஏற்றுக்கொள்ளும். 2 லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் காட்டி, இயங்க முடியாமல் இருந்த 900 சங்கங்களுக்கு இந்த முறையில் உதவி செய்து, இயங்க வைத்திருக்கிறோம். இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கும்போது, சரியாக இயங்கவில்லை; ஊழல் நடக்கிறது; குறைகள் இருக்கின்றன என்று பேசி தவறான எண்ணத்தை ஏற்படுத்துவது நல்லதல்ல.

கிட்டத்தட்ட 6,000 தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் இருந்த விநியோகத்தை பிடுங்கி, 4,000 சங்கங்களிடம் கொடுத்திருக்கிறோம். மீதமுள்ள வியாபாரிகளிடம் இருக்கின்ற விநியோகத்தையும் பிடுங்கிக் கொள்வதாகத்தான் இருக்கிறோம். தனிப்பட்டவர்கள் கையில்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

இருக்கின்ற வியாபாரத்தை மாற்றி, புதிய சோசலிஸ கொள்கையை அமைக்கும்போது, பெரிய மோசடி, ஊழல் நடந்துவிட்டது என்று சொல்வது பொருத்தமுடையதல்ல.

திரு. எட்மண்ட் அவர்கள் "இது இங்கே வாழ முடியாது; செத்த பிணம்" என்று எல்லாம் சொன்னார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் மக்களுக்கு இதில் எப்படி நம்பக்கை ஏற்படும்?

கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. கிராமச் சங்கங்களுக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற வர்களையே தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைத்தான் தேர்ந் தெடுக்கிறாகள் என்று எப்படிச் சொல்ல முடியும்? (குறுக்கீடு).

கிராமச் சங்கங்களில்தான் நாணயம் புழங்கும். அங்குதான் நாணய விநியோகம் நடைபெறுகிறது. மத்திய வங்கி கொள்கையை வகுக்கிறது. நாணயச் சங்கங்கள் நடைமுறைப்படுத்துகின்றன. அதனால் அங்கேதான் பினாமி லோன் முறைகள் எல்லாம் இருக்கும். தவறை யார் செய்தாலும் தண்டிக்க வேண்டியதுதான். கிராமச் சங்கத் தலைவர்கள்தான் இந்த மாதிரியான தவறுகளுக்கு காரணமாக இருப்பார்கள். அது சம்பந்தமாக தஞ்சாவூரில் மாணிக்கவாசகம் என்பவர் கைது செய்யப்பட்டார். யார் தவறு செய்தாலும் அவர் மீது நடவடிக்கை எடுப்பதில் தவறுவதில்லை. அப்படி நடவடிக்கை எடுத்து நல்லமுறையிலே இயங்கச் செய்கிறோம்.

<u>திரு. துரை கோவிந்தராசன்:</u> என்னைப் பற்றிய பேச்சு வருகிற காரணத்தினால்.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அவர் கொள்கை விளக்கத்திற்கு வருகிறார். நீங்கள் உட்காருங்கள். (திரு. டென்னிஸ் எழுந்திருந் தார்) டென்னிஸ் நீங்களும் உட்காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:</u> அவர்கள் கேட்டிரு எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியிருக்கிறேன். எனக்குக் கொடுத் திருக்கிற நேரம் 15 நிமிடங்கள் தான். விருந்திலே வடை பாயாசம் என்று எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டு மோரை எனக்குக்



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

கொடுப்பதுபோல—இருக்கிற நேரத்தில் பெரும்பகுதியை அவர்கள் எடுத்துக்கொண்டு எனக்குக் குறைந்த நேரம் கொடுத்திருப்பதனால் இடையீடு இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே இருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. திரு. சுவாமிதாஸ் கூட ஒரு சொஸைடியின் தலைவர் தான். எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். கட்சி சம்பந்தப்படாத வர்களும் இருக்கிறார்கள். நாமினேஷன் போடுகிற 200 சங்கங்களில் வேண்டுமானால் மாற்றம் இருக்குமே தவிர மற்றவற்றில் ஒன்றும் இல்லை.

1967-க்கு முன்னால் ஆண்டுதோறும் 35 கோடி ரூபாய் மத்திய வங்கி மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. மத்திய வங்கியில் முன்னால் இருந்த தலைவர் யார் என்று தெரியும். திரு. கே.டி.கே.-க்கு தெரியும். இப்போதுதான்—இந்தத் துறையை முன்னால் 2 வருடம் வைத்திருந்த அமைச்சர் 50 பேரைக் கொண்டுபோய் உட்கார வைத்தார்.

முன்னால் தஞ்சாவூரில் இருந்த வங்கியிலோ, கும்பகோணத்தில் இருந்த வங்கியிலோ—யாராவது உள்ளே போக முடியுமா? அங்கே இருக்கிற தலைவர் தான் தேர்தலுக்கு ஆளைப் பொறுக்கி எடுப்பவராக இருப்பார். பெருநிலச் சுவாந்தார்கள்—மத்திய வங்கிக்கு ஒதுக்கப் பட்ட பணம் யாருக்குக் கொடுக்கப்பட்டது? யாருக்குத் தெரியும்? எவ்வளவு லட்சம் ரூபாய், எப்படி எப்படி அவர்களே எடுத்துப் பயன் படுத்திக்கொண்டார்கள்?

இப்போது நாம் 74-75க்கு 99 கோடி ஒதுக்கியிருக்கிறோம். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகள் எல்லாம் எத்தனையோ பேர்கள் கடன் உதவி பெற்றிருக்கிறார்கள். குறுகிய காலக் கடன் 50 சதவிகிதம் சாதாரண விவசாயிகளுக்கே 67-க்குப் பிறகு கொடுக்கப்பட்டு வருகிறது. வேண்டுமென்றால் இதைப்பற்றி ஒரு கமிட்டி வேண்டுமானாலும் போட்டு பரிசீலிக்கலாம்.

தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு நெல் விளைந்தது என்றால் எப்படி விளைந்தது? நாம் இதுபோல மத்திய வங்கி மூலம் சாதாரண விவசாயிகளுக்கும் கூடக் கடன் கிடைக்க வழி செய்திருப் பதன் காரணமாகத்தான் அங்கே நெல் உற்பத்தியைப் பெருக்க முடிந்தது.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல்

நான் உள்ளபடியே சொல்கிறேன். 1967-க்கு முன்னுலே இருந்
நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். 1965–66-லே ஏ.டி.டி
27 வந்தது. சாதாரண விவசாயிகளுக்கு அந்த விதை கிடை
திருக்குமா? நான் திருவையாற்றில் இருந்த என் நண்பர் ஒரு
அதிகாரி மூலம் 6 மரக்கால் பெற நான் பட்ட கஷ்டம் எனக்குத்
தெரியும். ஆறு மரக்காலை வாங்கி அதைப் பெருக்கினேன்
அதுவும் நான் அப்போது அந்த மாவட்ட திராவிட
முன்னேற்றக் கழகச் செயலாளராக இருந்தவன்—வேறு யாருக்கு
அந்த விதை கிடைக்கும்? ஒரு விவசாயி கேட்டான் என்றுலும்
"அதற்கு 100 ரூபாய்க்குமேல் உரம் போட வேண்டுமே" என்பார்
அவன் 100 ரூபாய்க்கு எங்கே போவான்? 99 ஜீப்பிலே ஜப்பானிகா
சாகுபடியான இடத்தைப் பார்க்கப் போவார்கள் அது யார்
சாகுபடி செய்தது? இந்த ஏழை எளிய விவசாயிகள் எல்லாம்
அப்படியே அதை நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

மிராசுதார் வீட்டு நாய் கொழுகொழுவென்று இருப்பதை—
வடிச்ச கஞ்சியிலே உப்பைப்போட்டு குடித்து விட்டு நிற்கிற சின்னப்
பையன்கள் வேடிக்கை பார்ப்பதைப் போலத்தான் அன்றைக்கு
பெரிய மிராசுதார் ஜப்பானிகா போட்டிருக்கும் வயல்களைப் பார்த்துக்
கொண்டு நிற்பார்கள். இதெல்லாம் கே.டி.கே.-வுக்குத் தெரியாதா?
மணலிக்கு தெரியும்—இதெல்லாம், அப்போது ரொம்பத் தீவிரமாக
பாலிடிக்சில் இருந்தவர். அன்றைக்கு இரு போக சாகுபடி செய்த
வர்கள் யார்?

இன்றைக்கு 5 லட்சம் ஏக்கராவுக்குமேல் நாம் இரண்டுபோக சாகுபடிக்குக் கொண்டுவந்திருக்கிறோம் என்றுல் எப்படிக் கொண்டு வர முடிந்தது? சாதாரண ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா விவசாயிகளுக்கும் கூட கடன் கிடைக்க வழி செய்து, நல்ல பொறுக்குவிதை, உரம் கிடைக்க வகை செய்து—உண்மையிலேயே ஒரு சோஷலிசக் கொள்கையை செயல்படுத்தி வருகிற காரணத்தினுல்தான் பல லட்சம் ஏக்கராக்களை இருபோகமாக மாற்றியிருக்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம்.

இந்த நிர்வாகமும் இன்றைக்குச் சீராக இருக்கிறது. அகில இந்தியாவை எடுத்துக்கொண்டால் கடன் பாக்கி 37 சதவிகிதம் நிற்கிறது என்றுல் தமிழகத்திலே போன ஆண்டு 10.5 சதவிகிதம்தான். இந்த ஆண்டு 8.5 சதவிகிதம்தான். நாம் குறுகிய காலக் கடன்



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

என்றே கொடுக்கிறோம். ஆறு மாத குறுவை போட்டால், எட்டு மாத சம்பா போட்டால், கரும்பு போட்டால் முன்னுடியே கடன் கொடுத்து அறுவடை போது அதைக் கொடுக்க வேண்டும் என்கிறோம்.

கடனை வசூலிக்கிருர்கள் என்றுல் கடனை வசூலிக்காது அவர்களைக் கடனளியாக நின்று தவிக்க விட வேண்டுமா? மத்திய வங்கிக்கு கடன் ரிசர்வ் வங்கி தருகிறது. நாம் கடன் கொடுப்பதில் டிலே பண்ணுவதில்லை.

மேட்டூரிலே தண்ணீர் விட்டவுடனேயே—இன்ன தேதியில் இருந்து இன்னதேதி வரை மத்திய வங்கியில் கடன் கொடுக்கப்படும் என்று வானொலி மூலம் அறிவிக்கிறோம். பத்திரிகையிலே விளம்பரம் போடுகிறோம். நாம் கொடுக்கிற கடனில் 40 சதவிகிதத்திற்குமேல் ரிசர்வ் வங்கியில் இருந்து வாங்குகிறோம். இன்னும் காலத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க மத்திய வங்கி—தன்னுடைய லிங்குகளை அங்கங்கே வைத்துக்கொள்ள ஆறுயிரம் சப்சிடி கொடுக்கிறோம். இதெல்லாம் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்குத்தானே. கடனை வாங்கி விவசாயம் செய்கிற விவசாயிகளும் அறுவடை முடிந்தவுடன் அந்தக் கடனைத் திருப்பித் தரவேண்டும். அதை ஒத்திவைக்க வேண்டும் என்று நாம் சொல்வது சரியாக இராது.

இதையெல்லாம் பதினைந்து மாதங்களுக்கு முன் அங்கங்கே பாராட்டிப் பேசியவர்கள்தான்—நானும் எட்மண்டும் வேண்டுமானுல் ஒரே மேடையில் பேசியிருக்க முடியாது. மற்றவர்கள் பலருடன் நான் ஒரே மேடையில் பேசியிருக்கிறேன். அவர்கள் பேச்சை எல்லாம் கேட்டிருக்கிறேன். பதினைந்து மாதங்களுக்கு முன் இந்த மகத்தான சாதனைகளை எல்லாம் பற்றிப் பேசியவர்கள்தான்—இன்றைக்கு ஊழல், ஊழல்—எதற்கெடுத்தாலும், வீடு கட்டிவிட்டார்—ஊழல் என்று பேசுகிருர்கள். இதெல்லாம் காலத்தின் கோளாறு. கல்வித் துறையா—வீடு கட்டிய பிரச்சினை—விவசாயத் துறையா—வீடு கட்டிய பிரச்சினை—கூட்டுறவுத் துறையா வீடு கட்டிய பிரச்சினை என்று பேசுகிருர்கள்.

நான் ஒன்றும் வீடு கட்டவில்லை. நம்முடைய பொன்னப்ப நாடார், தங்கமணியைக் கேட்கிறேன். யார் வீடு கட்டியிருக்கிருர்கள் என்பது அவர்களுக்கும் தெரியும்.

[1974 ஏப்ரல் 5

(பிற்பகல் 1-30)

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடு கட்டியிருப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் தங்களைப்பற்றிச் சொல்லவில்லை.

திரு. துரை கோவிந்தராசன்: வீடு கட்டியதைப்பற்றிச் சொன்னவன் நான் தான். நான் ஊரில் வீடு கட்டியிருப்பது அமைச்சருக்குத் தெரியும். நான் எந்தச் சங்கத்திலும் உறுப்பினன் இல்லை. சங்கத் தலைவரும் இல்லை. எனக்கு வேறு எந்த நகரத்திலும் வீடுகளும் இல்லை. வேண்டுமானால் அமைச்சர் அவர்களுக்கு மன்னார்குடியில் இருந்தது—மற்ற இடத்தில் இருக்குமோ என்னவோ தெரியாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எனக்கு எங்கள் அப்பா சம்பாதித்து வைத்த 15 வீடுகள் தான் மன்னார்குடியில் இருக்கின்றன. வேறு எங்கும் வீடு இல்லை. சங்க உறுப்பினராக இருந்தால் கட்டக்கூடாது என்றால் எம்.எல்.ஏ. ஆக இருந்தால் கட்டலாமா? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் வீடு கட்டக் கூடாதா?

இது கூட்டுறவு பிரச்னை; எத்தனை மணி நேரம் விவாதம் நடந்திருக்கிறது. நான்கு மணி நேரம் பேசியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் போட்டு கூட்டிக் கழித்துப் பார்த்தால் என்ன என்ன பேசியிருக்கிறார்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லோரும் நிரம்பக் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற விவகாரங்களை நல்ல முறையிலே பேசுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால், தனிப்பட்ட முறையிலே அவர்களுடைய குடும்பத்தைப் பேசி, என் குடும்பத்தைப் பேசி, நான் விளக்கமாகக் கூடப் பேசியிருக்கலாம் என்று எண்ணுகிறேன். (குறுக்கீடு). ஆகவே, அதை விட்டுவிட்டுச் செல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக, இந்த விவாதத்திலே, கூட்டுறவைப் பற்றி, அதிலே அமுல் நடத்தக்கூடிய பல காரியங்கள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டன. இந்த மாதிரி நியமனங்கள்,



1974 ஏப்ரல் 5] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மற்றவைகள் எல்லாம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் சாதனைகளை எல்லாம் சொல்லிவிட்டேன். மெய்ன் சாதனை, பாராட்டுகிற சாதனை, இல்லாதவனுக்குச் செய்வது; உணவு உற்பத்தி செய்வது. அவன்தான் கஷ்டப்படுகிறான்; விவசாயிக்கு லாபம் கிடைக்கவில்லை. அவன் வாங்குகிறக் கடனுக்காவது குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வேண்டும், காலத்தில் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்டவைகளில் எந்த அளவுக்குக் கவனம் காட்டப்படுகிறது என்பதை நான் சொல்கிறேன். மற்றவர்கள் பலப் பிரச்னைகளைச் சொல்கிறார்கள்.

நம்முடைய தோழர் பம்ப் செட்களுக்குப் பணம் கிடைக்காதது பற்றி சொன்னார். டீசலுக்குக் கொடுப்பது நிறுத்தப்பட்டாகி விட்டது என்று சொன்னார். தற்பொழுது, 9,000 பம்ப் செட்டுகள் ஓடுவதற்கு ரெடியாக இருந்தாலும் கூட, மின்சாரத் துறையாலே, மின்சாரம் கொடுக்கின்ற அளவிலே மின்சாரம் உற்பத்தி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, 30—6—1974 வரையில், 5,000 பம்ப் செட்களுக்குத்தான் கொடுக்கப்போகிறோம். மத்திய அரசாங்கத்திடமிருந்து தாக்கீது வந்திருக்கிறது. டீசலைப் பயன்படுத்தி பம்ப் செட் வைக்க விவசாயிகளுக்குக் கடன் கொடுத்துவிடாதீர்கள். டீசலுக்கு பயங்கரத் தட்டுப்பாடு வர இருக்கிற காரணத்தினால், கடன் கொடுத்து, பம்ப் செட் வைத்து, பின்னால் டீசலுக்குத் தட்டுப்பாடு என்றால், அவர்கள் வாங்கிவைத்த பம்ப் செட்டுக்கான கடனைக்கூட கொடுக்காமல் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். அவர்கள் அந்தக் கடனைக் கொடுப்பதிலே கஷ்டம் வந்துவிடும். ஆகையினாலே அவற்றிற்குக் கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்ஸ்யூமர், ஜனங்கள் வாங்குகிற பொருள்கள், இந்த ஆண்டு ரூ. 60 கோடிக்கு பிஸினஸ் நடந்திருக்கிறது. இதிலே, தமிழ் நாட்டிலே நடக்கிற மொத்த வியாபாரத்திலே, 14 சதவிகிதம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நடைபெற்றிருக்கிறது. அதிலே 31 சதவிகிதம் மக்கள் நம்மிடம் வாங்கியிருக்கிறார்கள். 31 சதவிகிதம் மக்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பொருள்கள்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றால், இதை ஏழை எளிய மக்கள்தான் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை வளர்க்க வேண்டும். முந்தைய ஆட்சிக்காலத்தில், எவ்வளவோ தவறுகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அதை இப்பொழுது அம்மையார் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். பல ஆண்டுகளாக இருக்கின்றன என்று சொன்னார்கள். இப்பொழுது சீர்திருத்தம் செய்திருக்கிறோம் என்ற அந்த நிலைமைகளை நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். 1967-ம் ஆண்டு, கிட்டத்தட்ட 35,124 வழக்குகள் ஆடிட் பண்ணப்படாமல் இருந்தன. மூன்று வருஷத்திலே யிருந்து, 7 வருஷம் வரையிலே வழக்குகள் ஆடிட் செய்யப்படாமல் இருந்தன.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்பொழுதுகூட, கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டில், 7, 8 ஆண்டுகளாகக் கூட, ரிகன்சிலியேஷனுக்கு வருவது கிடையாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சொல்வதை கேட்டுக்கொண்டாவது பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு). நான் ரொம்ப அமைதியாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். அங்கே உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. எல்லோரையும் மாதிரி நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேன். அவரே முன்னாடி சொல்லி யிருக்கிறார். நான் கோபக்காரன் என்று. 35,124 வழக்குகள் 1967-க்கு முன்னாடி வரை ஆடிட் பண்ணாமல் இருந்தன. இப்பொழுது, பெண்டிங் ஆக உள்ளவை 1,495 கேஸஸ்தான் ஆடிட் ஆகாமலிருக்கின்றன. அதிலும், 852-க்கு ஆடிட் எடுத்துக் கொண்டோம். 743-க்குத்தான் கணக்குப் புத்தகங்கள், கிரிமினல் கேஸ்களில், கோர்ட்டில் இருக்கின்றன. ஆகவே, ஆடிட் செய்யப்படாமலிருக்கின்றன. ஆகவே, கிட்டத்தட்ட 34,000 வழக்குகள் ஆடிட் செய்யப்படாமலிருந்தவை எங்கள் காலத்திலே ஆடிட் செய்யப்பட்டுள்ளன. எங்கள் காலத்திலேயா ஊழல் நடந்தது? எங்கள் காலத்திலா நிறுத்திவைத்துவிட்டோம்? உங்கள் காலத்தில் ஊழல் இருந்தது. எங்கள் காலத்தில் இல்லை. உங்கள் காலத்தில் 35,000 பெண்டிங்காக இருந்தன. எங்கள் காலத்தில் 1,500 தான் பெண்டிங்கில் இருக்கின்றன.

ஆடிட் விங்கை விஸ்தரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆரம்பத்தில் 14 சர்க்கிள்கள் இருந்தன. இப்பொழுது தஞ்சாவூர், திருச்சி, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சர்க்கிளை அதிகப்படுத்தி,



1974 ஏப்ரல் 5] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இதன்னியில் நடப்பாண்டில் சில வட்டாரங்களில் கூடப் போட வேண்டுமென்று, செங்கல்பட்டு, மதுரையில் அதிகப்படுத்தி, கிட்டத்தட்ட 19 சர்க்கிள்களாக ஆக்கியிருக்கிறோம். இந்த வழக்குகளைப் பரிசீலனை செய்ய முன்பு போடப்பட்டிருந்த அதிகாரிகளைவிட, டி.ஆர். 5 பேரைக் கூடப் போட்டிருக்கிறோம். 270 பேர், சி.எஸ்.ஆர்களை 7 வருஷத்தில் கூடப் போட்டிருக்கிறோம். முதுநிலை ஆய்வாளர்கள், சீனியர் இன்ஸ்பெக்டர்கள், 306 பேர் அதிகமாகப் போட்டிருக்கிறோம். இளநிலை ஆய்வாளர்கள் 105 பேரைக் கூடப் போட்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஆடிட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை.

இதன்னியில், இப்பொழுது ஸ்குவாட் ஒன்று தலைமை அலுவலகத்திலே இருக்கிறது. அங்கு 12 சி.எஸ்.ஆர்களையும், 24 முதுநிலை ஆய்வாளர்களையும் போட்டிருக்கிறோம். இந்த நிலையினால்தான், வழக்குகள் 34,000-லிருந்து, 1,500 ஆகக் குறைந்துள்ளன. இவ்வளவு ஆபீசர்கள் போடப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு, வேகமாக கணக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், உங்களுக்கு ஒன்றிரண்டு அகப்பட்டால், அதை எடுத்துவைத்துக்கொண்டு, பிரமாதமாகப் பேசுகிற நிலைமைதான் இருக்கிறதே தவிர, தணிக்கை என்ற அளவிலே இந்த அளவிற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்ட வழக்கு பற்றி, சப் கோர்ட்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கிரிமினல் வழக்கிலும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மின் இணைப்பு பற்றி அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். மின் இணைப்பு கொடுக்காமலே ஜப்தி செய்கிறார்கள் என்று சொன்னார். சட்டமே போட்டாயிற்று. அங்கு கம்ப்ளீட் ஆகாமல் இருந்தால், யோசித்து பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்கிறோம். பயன்படுத்த முடியாது என்றால், ஜப்தி செய்வதில்லை.

வாலாஜாபேட்டைப்பற்றிச் சொன்னார்கள். கிரிமினலிலே வெளியே போயிருக்கிறார்கள். திருட்டுகளைக் கண்டு பிடிப்பது என்றால், சாமானியம் அல்ல. அப்படி கரப்ஷன் செய்திருக்கிறார்கள், போர்ஜரி பண்ணியிருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தலைமைச் செயலக ஸ்பெஷல் ஆபீசரைப்பற்றி நீங்கள் சொன்னீர்கள். அந்தச் சங்கத்திற்குத் தனி அதிகாரி போடப்பட்டிருந்தார். தவறு புரிந்தவர் ஒரு கேஷியர். அவர், மேலே சொன்ன மாதிரி, ரூ. 38,000 சாப்பிட்டார். அவரை அரெஸ்ட் பண்ணி, வழக்கு போட்டு, சொத்தையெல்லாம் ஜப்தி பண்ண நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1967-68-லே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே சொன்னதற்குப் பிறகு, ஸ்பெஷல் ஆபீசர் போடுகிற அளவுக்குத்தான் வந்திருக்கிறதே தவிர, யார் தவறு செய்தாரோ, அவர் பேரில் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. அவருக்குப் ப்ரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஒரு நாளும் கிடையாது. அவர் ஒன்றும் தி.மு.க. அல்ல. அவர் அதிகாரி. கோர்ட்டிலே போய் நிற்கவேண்டாமா? காஷியர், போர்ஜரி, ரூ. 38,000-க்குச் செய்திருக்கிறார்.........

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைமைச் செயலகச் சங்கத்திலே இரண்டு கேஸ். முன்னாடி, டெப்புட்டி செக்கரட்டரியாக இருந்தவர், தலைவராக இருந்தார். அவர் கையாடல் செய்தார் என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்குப் பதிலாக ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார். ஆனால், முன்னாலிருந்த அந்தத் தலைவர் ப்ரமோஷன் பெற்றுள்ளார். அதற்குப் பிறகு ஸ்பெஷல் ஆபீசர் காலத்திலிருந்த காசாளர் கையாடல் செய்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த ஸ்பெஷல் ஆஃபீசர் காலத்தில் தான் அந்தத் தவறு நடந்திருக்கிறது. அந்தத் தவறைச் செய்தவர் கேஷியர். ஆக அதிலே அந்த ஸ்பெஷல் ஆஃபீசருக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

அடுத்து, குருவிக்கரம்பை கேசைப்பற்றி சொன்னார்கள். அதிலே எஃப்.ஐ.ஆர். 14ந் தேதி கொடுக்கப் போகிறோம். அவர் 14ந் தேதி கோர்ட்டிலே சரண்டர் ஆகி இருக்கிறார். சரண்டர் ஆனவரை கோர்ட் நீதிபதி விட்டு இருக்கிறார். மறுபடியும் இதையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதால் நான் நீதிபதி மீது குற்றம் சொல்வதாக நினைக்கவேண்டாம். போலீசைக் கேட்காமல் விட்டு இருக்கக் கூடாது என்று ஹைகோர்ட்டிலே கொடுத்திருக்கிறோம். அதை எஸ்.டி.எம்.க்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே அதற்கும் மாணிக்க வாசகத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.



திரு. துரை கோவிந்தராசன்: மாணிக்கவாசகம் அரணிப் பட்டியிலே தலைவராக இருக்கிறார். அங்கே 40, 50 பேருக்குக் கடன் வழங்கியிருக்கிறார்கள். அவருக்கு மத்திய வங்கியிலே கணக்கு இருந்தது. அந்த வங்கிக்கு தலைவராக நாடிய ராமையன் என்பவர் இருந்தார். மாணிக்கவாசகத்தை அரெஸ்ட் செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாணிக்கவாசகத்தின் கணக்கு பேங்கிலே இருந்ததற்காக நடவடிக்கை எடுத்திருந்தார்கள் என்று உறுப்பினர் சொல்கிறார். அப்படியென்றால் நடவடிக்கை எடுத்தது தவறு என்று சொல்கிறாரா?

திரு. துரை கோவிந்தராசன்: தவறு என்று நான் சொல்லவில்லை. கூட்டுறவுத் துறையிலே பணம் பெற்றிருக்கிறார் அரணிப்பட்டி தலைவர்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தப் பிரச்னையைப் பற்றி பெரிதுபடுத்தி பேசுகிறார்கள். இரண்டு லட்சம் ரூபாயும் அவர் மேலே பாக்கியில்லை. அதிலே கொஞ்சம் தான் பாக்கியிருக்கிறது. கோர்ட்டிலே வழக்கு இருக்கிற காரணத்தாலே நான் விளக்கமாக சொல்லவேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

இப்போது நம்முடைய எட்மண்ட் அவர்கள் சொன்னார். டிராக்டருக்கு 25 ஏக்கராவாக வைக்கவேண்டுமென்று சொன்னார். எதிலேயிருந்து அதைப் படித்தார் என்று தெரியவில்லை. பிரைவேட்டாக நிலம் இருந்தால் போதும் என்று வைத்திருக்கிறோம். இதே மாதிரி தவறான கருத்துக்களைச் சொல்லி பொது மக்களை ஏமாற்ற வேண்டாம். 25 ஏக்கரா என்று எதிலும் குறிப்பிடவில்லை. அந்தத் தகுதியும் அவர்களுக்குத் தேவையில்லை.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

அடுத்து, இந்த டைரக்டர் நியமனம் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆரம்பத்திலிருந்து ஒருவர்கூட விடாமல் அந்த சப்ஜக்டைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். நியமனம் என்பதே தவறு, கூட்டுறவுத் துறை என்றாலே தி.மு.க. வாக இருக்கிறது என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் இதைச் சொல்கிறார்கள். அவர்கள் ஆளுகிற நாடுகளில் வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களைப் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் காங்கிரஸ் காலத்தில் மன்னை உனக்கு இதைத் தந்திருக்கிறேனே, ஏன் நீ நன்றி இல்லாமல் சொல்கிறாய் என்று சொன்னால் நன்றாக இருக்கும். இந்த முறை முன்பே இருந்து வந்ததுதான். நாங்கள் வந்த பிறகு அந்த சதவிகிதத்தை 3 சதவிகிதம் என்று இருந்ததை 5 சதவிகிதம் என்று ஆக்கியிருக்கிறோம்.

அடுத்து, இன்றைக்கு லிஃப்ட் இரிகேஷன் என்றாலே அதை பாவமானதாகக் கருதுகிறார்கள். அது தேவையில்லை என்பதை யாருமே சொல்லமுடியாது.

கோயம்புத்தூரிலே ஒரு கேணிக்கு 40,000 ரூபாய் கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு 5 அல்லது 6 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் சிறிய விவசாயிகளால் அதைப் பெற முடியவில்லை. ஆகையாலேதான் நம்முடைய ஆதித்தனார் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தைப் போட்டு சிறிய நிலச் சொந்தக்காரர்கள் 2 ஏக்கர் 3 ஏக்கர் வைத்திருப்பவர்களையெல்லாம் ஒன்று திரட்டி 100 ஏக்கர் என்ற அளவில் கொண்டுவந்து அந்த அளவிற்கு டெபாசிட் தொகை 2½ சதவிகிதம் என்று கொண்டுவந்தார்கள். இப்படி நல்ல நோக்கத்திலே ஆரம்பிக்கப்பட்ட சொசைட்டியை, முழுக்க முழுக்க சோஷலிசக் கொள்கையிலே ஆரம்பிக்கப்பட்ட அந்த சொசைட்டியை மத்திய வங்கியிலே தலைமைப் பதவி போடப்படுகிறது என்ற ஒரே காரணத்திற்காகக் குறை சொல்கிறார்கள் என்றால் அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

முதலிலே இந்த அம்மா சொன்னார்கள். முன்பு ஒரு ராஜா இருந்தார், இப்போது புது ராஜா வந்திருக்கிறார் என்று. அப்படி 6 மாதத்திற்கு ஒருவரைப் போடவேண்டுமென்றால் 80 வயதுக்காரரைத்தான் இங்கே கொண்டுவந்து உட்கார வைக்கவேண்டும். இங்கே வந்தவுடன் ஹார்ட் ஃபெயில்யூர் ஆகி காலம் ஆக வேண்டுமா?



1974 ஏப்ரல் 5]

திருமதி த. ந. அனந்தநாயகி: இரண்டு டெர்முக்கு மேலாக யாரையும் கன்டெஸ்ட் செய்யக்கூடாது என்று மாற்றுங்கள் என்று தான் நான் சொன்னேன். நான் சொன்னதை நீங்கள் புரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள். நான் இதைச் சொன்னால் என் மீது ஆத்திரப்படுகிறீர்கள். அமெரிக்க ஜனாதிபதிக்கே இரண்டு டெர்ம் என்றுதான் போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அமெரிக்க ஜனாதிபதிக்கு 2 டெர்ம்ஸ்தான் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இப்போது நீங்கள் எத்தனை டெர்மாக இந்த மன்றத்திலே இருக்கிறீர்கள்? எம்.எல்.ஏ.-க்கு எத்தனை தடவை கண்டெஸ்ட் செய்வது என்று கிடையாதா?

திருமதி த. ந. அனந்தநாயகி: எம்.எல்.ஏ.வாக இருப்பது வேறு. அமைச்சராக இருப்பது வேறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூட்டுறவுத் துறையைப் பற்றி பேசுகிறபோது அமெரிக்க ஜனாதிபதியை அழைப்பானேன், மாட்டிக் கொண்டு விழிப்பானேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் ஒவ்வொரு தொகுதியாக மாற்றி நின்று ஜெயித்து வருகிறீர்கள். எப்போதாவது ஒரே தொகுதியில் நின்று போட்டியிட்டு ஜெயித்து வந்திருக்கிறீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் முதலில் எந்தத் தொகுதியில் நின்று ஜெயித்தீர்கள்? இப்போது எந்தத் தொகுதியில் ஜெயித்தீர்கள்?

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலில் நான் பேசின் ப்ரிட்ஜில் ஜெயித்தேன். இப்போது மயிலாப்பூரில் ஜெயித்திருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சைதாப்பேட்டை தொகுதியில் இரண்டு முறை நின்று ஜெயித்தேன் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால் அம்மையார் அப்படியில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதிலே 2 ஆண்டுக்கு ஒரு முறை 15 பேரை தேர்ந்தெடுக்கிற நிலைமை இருக்கிறது. தற்போது அதற்கு சீட்டுப் போட்டு எடுக்கிற நிலையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே வேண்டுமென்றவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கவேண்டாம்.

வழக்குகள் நிரம்ப போட்டிருக்கிறோம். ஆகையினாலே எந்த வங்கியை எடுத்துக்கொண்டாலும் அதிலே தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், போடுகிற நியமனங்கள் எல்லாமே தி.மு.க.வினருக்குத்தான் என்று குறைப்பட வேண்டாம். அந்த நோக்கத்திலே நாங்கள் அதைச் செய்யவில்லை. நான் பூண்டி வாண்டையாரை மட்டும் சொல்லவில்லை, இன்னும் யார் யார் இருந்தார்கள் என்று பாருங்கள். யார் வந்தாலும், எந்த கட்சி வந்தாலும் அவர்களுக்கு வேண்டியவர்களைப் போட்டால்தான், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கடன்களைச் சரியாகக் கொடுக்க வேண்டும், உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். அதற்காக அந்த வங்கியின் தலைவர் வேலை செய்ய வேண்டாமா?

சீனி, மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். வேறு கட்சித் தலைவர் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார். முந்தாநாள்கூட ஒரு ரிப்போர்ட் வந்தது. தஞ்சாவூர் எம்.எல்.ஏ. பேசும்பொழுது சொன்னார்கள், லாபம் இல்லை, கட்டவில்லை என்று சொல்கிறார்கள்.

நூறுக்கு 90 சொசைட்டிகள் நஷ்டத்தில் ஓடுகின்றன. "நோ லாஸ் நோ பிராபிட்" என்று சொல்லும் அளவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நாங்கள் சொல்வதைக் கேட்பவர்கள் இருந்தால்தானே காரியங்கள் நடக்கும். ஆகவே, அந்தப் பிரச்னையில் இது குறை என்ற அளவில் சொல்லக்கூடாது.

நான் முன்பு சொன்னதைப்போல் நாட்டிலே அடிமட்டத்திலே உள்ள மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்கிறது. எந்தவிதமான நலனும் பெற முடியாமல் இருந்த மக்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வாழ்வு கிடைத்திருக்கிறது என்ற நல்ல நோக்கத்தை மனத்திற்கொண்டு எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் மனம் விட்டு ஆதரித்துப் பேசியிருக்கலாம்.





அம்மையார் அவர்கள் சிறப்பங்காடிகளைப்பற்றி யோசனை கூறினார்கள். பருப்பு கேட்பவர்களை உப்பு வாங்கிக்கொண்டு போ என்று சொல்ல வேண்டாம், பயத்தம் பருப்பைக் கொடுக்கச் சொல்கின்ற அளவில் புத்திசாலித்தனமாக உங்கள் வாதம் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. (குறுக்கீடு) அம்மாதிரி சொல்வது தப்பு என்றால் ஒத்துக்கொள்கிறேன்.

எல்லாப் பிரச்னைகளுக்கும் நான் பதில் சொல்லாவிட்டாலும்கூட மற்றவர்களைப் பொறுத்தவரையில் அறிக்கை வைத்திருக்கிறேன், கேள்வியெல்லாம் கேட்டிருக்கிறோம். எல்லோரும் சொல்கிறார்கள்.

நான் ஒரு விழாவிற்குப் போனதற்கும், எவரோ திருடி விட்டதற்கும் சம்பந்தம் உள்ளது மாதிரி இரண்டு முறை பேசிவிட்டார்கள். இந்த இயக்கத்திற்கு இப்பொழுது வந்தவர்கள் அல்ல நாங்கள். முப்பது, நாற்பது வருஷ காலத்திற்கு முன்பே, இந்தக் கட்சி ஜெயிக்குமா, ஓட்டு கிடைக்குமா என்ன பதவி கிடைக்கும் என்று வந்தவர்கள் அல்ல, பெரியார் அவர்கள் காந்தி இயக்கத்தில் இருந்த அப்பொழுதும் எதிர்க்கட்சியிலே இருந்தோம். பெரியார் கூடவே வந்தோம். பிறகு அண்ணாகூடவே வந்தோம். இன்றைக்கும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் சரி, சாதாரணத் தொண்டராக இருந்தாலும் சரி, அவர் தொண்டராக இருந்த காலத்திலேயிருந்தே எனக்குத் தெரியும்—முதலமைச்சராக இருந்தாலும்கூட, ஆளுங்கட்சியில் இருந்தாலும்கூட மானமாக, உறுதியாக, சுயமரியாதையோடு வந்தோம்.

நான் எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன், எங்களுக்கு நாணயமே இல்லையா? இரண்டு வருஷத்தில் குறைந்துவிட்டோமா? 1971-ல் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களோடு சேர்ந்திருந்தோமே, அப்பொழுது எங்களுக்கு நாணயமில்லையா? இரண்டு வருஷங்களில் அவ்வளவு ஊழல் செய்துவிட்டோமா? அப்படியென்றால் எனக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிடுங்கள். ஏனென்றால் இது தமிழ் நாட்டிற்கே அவமானம்.

உங்களுக்கும் எங்களுக்கும் கொள்கையில் வித்தியாசமில்லை. நீதிபதியைப் பற்றிச் சொல்கிறார்கள். எந்த அளவிற்குப் பேச வேண்டுமோ, உள்ளபடியே ஊழல் இருந்தால் சொல்லுங்கள்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 ஏப்ரல் 5

பொதுவாக ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன். என்னென்ன ப்பு என்று சொல்கிறார்கள் என்பதை இன்றைக்குப் பேசியதைப் ார்த்தால் தெரியும். இதில் பெரிய கஷ்டம் எதுவுமில்லை, எதிர்க் ட்சியிலே போய் உட்கார்ந்தால் காட்டிக்கொடுக்கும் வேலை கஷ்ட ாக இருக்காது. இராவணன்கூட வஞ்சகன் விபிஷணன் மாபழிக்கே ன்று என்றைக்குமே கலங்காத இராவணன், விபிஷணனின் அண்ண கப் பிறந்தோமே என்றுதான் கவலைப்பட்டான். எனவே, அங்கே போய் உட்கார்ந்துகொண்டவுடன் என்னென்ன பேசுவது என்ற லைமை இல்லை.

சுயமரியாதை உணர்வை இன்றைக்கும் இந்த அமைச்சரவையிலே உட்கார்ந்துகொண்டிருப்பவர்கள் விட்டுவிடவில்லை. எட்மண்ட் அவர்கள் வேகமாக வருகிறார்கள். என்னைப் பார்த்தவுடனேயே ஊழல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். சொன்னவரை எடை போட்டுப் பாருங்கள் என்று இதேமன்றத்தில் வந்தது.

ஊழல் என்று சொல்கிறார்கள், என்ன ஊழல்? கூட்டுறவு மானி பத்தில் மக்களுக்குப் பயன்படும் வகையில் இத்தனைகோடி ரூபாய் செலவழிக்கிறோம். சட்டமன்றம் 2 மாதம், $1\frac{1}{2}$ மாதம் நடந்து பத்திரிகைகளிலே வரும் தலைப்புகளையெல்லாம் பார்க்கிறேன். இந்த மானியத்தில் அப்படி இருக்காது என்று நினைத்தேன். இந்த மானியத் தில் எல்லோரும் ஆதரவாகச் சொல்லுவார்கள், தனியார் வியா பாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது, விவசாயிகளுக்கு நன்மைகள் செய்கிறது என்ற அளவில் ஆதரவோடு பேசுவார்கள் என்று நினைத் தேன். அதையெல்லாம் பேச வேண்டி வருமே என்று எண்ணியோ என்னவோ இன்றைக்கு கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசவில்லை.

ஆகவே, இனிமேலாவது உங்கள் ஆதரவைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் ஆதரவையெல்லாம் கேட்டுக் கொண்டு கட்மோஷன் கொடுத்தவர்கள் தயவுசெய்து அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், சோ. அழகர்சாமி, கு. அ. பொம்மன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.



1974 ஏப்ரல் 5]

திரு. கே. பி. கோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,39,97,600-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சி கள் இந்த அளவோடு முடிவுற்று 8—4—1974 திங்கட்கிழமையன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

' NIL '

B. Reports, Notifications and Other Papers.

@ 171. Policy note on Dairy Development Department 1974-75 (English and Tamil).

@ 172. Commercial Budget on Dairy Development Department 1974-75.

@ Despatched to members on 3rd April 1974.

## இணைப்பு

[294-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

"கூட்டுறவு" குறித்த மானியக் கோரிக்கையை சட்டப் பேரவை முன்வைத்து, மாண்புமிகு உணவு–கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் பரிந்துரைப்படி கோரிக்கை எண் 23—"கூட்டுறவு" என்பதன்கீழ் ரூபாய் 4,39,97,600-க்கு மேற்படாமல் மானியம் அரசுக்கு வழங்குமாறு நான் வேண்டுகிறேன்.

1973–74 ஆம் ஆண்டில், பல்வேறு கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியதில் கண்ட முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை ஒன்று தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறைக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 28.35 கோடி நிதி ஒதுக்கம் செய்திருக்க, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி நாளாகிய 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அளவில் இத்துறைக்கென்று ரூபாய் 34.16 கோடி செலவிடப்பட்டுள்ளது என்பதைக் கொண்டே நமது மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் மேன்மேலும் வலுவடைந்திருப்பதை அறியலாம். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இது உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 40.31 கோடி நிதி ஒதுக்கம் செய்யும் கருத்துள்ளது; இதில் முதலாம் ஆண்டாகிய 1974–75 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 4.09 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள், கடந்த இருபதாண்டுகளில் வெற்றி நடைபோட்டு நாட்டின் பொருளாதார வளம்காண இன்றியமையாப் பல துறைகளில் ஏற்றமிகு பணியாற்றி வந்துள்ளது. பெருமளவில் கடன் வழங்கல், வேளாண்மை இடுபொருள்களுக்கு ஏற்பாடு செய்தல், பொருள்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் இக்கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் வேளாண்மை உற்பத்தியில் புரட்சியை உருவாக்கியுள்ளது யாவரும் அறிந்ததே. வேளாண்மை கடன் வழங்கு சங்கங்கள் உழவர்களுக்கு உரிய காலத்தில் போதிய கடன் வசதியளித்து ஈவிரக்கமற்ற வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளன. கடன் வழங்கு



சங்கங்கள் 1965–66 ஆம் ஆண்டில் வழங்கிய குறுகியகால, நடுத்தரக் கடன் ரூபாய் 30 கோடி ஆகும். 1972–73 ஆம் ஆண்டில் இக் கடன் தொகை இருமடங்குக்கும் அதிகமாகியுள்ளது என்பதிலிருந்து இத் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற உண்மை புலனாகும். இத் தொகை, 1973–74 ஆம் ஆண்டில் ரூபாய் 75 கோடியாகவும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியாண்டில் ரூபாய் 105 கோடியாகவும் உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அதிக உழவர்களுக்கும் கடன் வழங்குவதற்கு ஏற்றாற்போல் வேளாண்மைக் கடன் வழங்கு திட்டங்களை விரிவுபடுத்துவதும், அமைப்பு முறையை வலுப்படுத்துவதுமே இவ்வெல்லாத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். வேளாண்மை கடன் வழங்கு சங்கங்கள் வலிமை பொருந்தியனவாய் இருக்க வேண்டும்; இல்லையெனில், கடன் வழங்கு முறையே நிலைகுலைந்து வேளாண்மைத் தொழிலே சீர்குலைய நேரிடும். இதற்கு வழிகாணும் பொருட்டு, விரயத்தில் இயங்கி வந்த சங்கங்களையும் நொடித்துபோன சங்கங்களையும் தனித்தியங்கக்கூடிய சங்கங்களாக சீரமைத்து, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 2 லட்சம் குறைந்த அளவு கடன் வழங்கும் வகையில் அவற்றை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளின் வாயிலாக 11,000 கடன் வழங்கு சங்கங்கள் 5,017 சங்கங்களாகக் குறைக்கப்பட்டு அவற்றில் 4,686 சங்கங்கள் தனித்தியங்கக் கூடிய அல்லது அதற்கேற்ற திறனுள்ள சங்கங்களாக்கப்பட்டன. இத் திட்டம் 31—3—1974-க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அக்கால அளவுக்குள் 4,750 சங்கங்கள் தனித்தியங்கும் அல்லது தனித்தியங்கும் திறனுள்ள நிலையிலிருக்கும். தனித்தியங்கக் கூடிய திறன் உள்ள சங்கங்களை அடுத்த ஈராண்டுகளில் தனித்தியங்கும் சங்கங்களாக மாற்றும் திட்டம் ஒன்று 1974–75-ல் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி தனது கிளைகள் பலவற்றையும், 223 தொடக்க நிலவள வங்கிகளையும் கொண்டு, உழவர்களின் நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்கிறது. கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் மற்றும் டிராக்டர்கள் வாங்குவதற்கும், நிலத்தைப் பண்படுத்தவும் நேரடியாகக் கடன்கள் வழங்கும் முறை நிறுத்தப்பட்ட பிறகு, அவை, தற்போது ஓர் அச்சாணிபோல் செயல்பட்டு வருகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்காண்டுகளில், நிலவள வங்கிகள், மொத்தம் ரூபாய் 83 கோடியை நீண்டகாலக் கடன்களாக வழங்கியுள்ளன. 1973–74 ஆம் ஆண்டில் ரூபாய் 18 கோடி அளவுக்குக்

கடன்கள் வழங்கும் திட்டம் உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் ரூபாய் 100 கோடிக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி கொள்வர்.

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள குறுகியகால, நடுத்தர, நீண்டகாலக் கடன் தொகைகளின் பெரும்பகுதி, சமூகத்தின் அடித்தளத்தில் உழன்று கொண்டிருக்கும் வறிய மக்களுக்கே சேர்ந்துள்ளது என்பது பெருமகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இம்மாநிலத்தில், தென் ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி, வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் "சிறு உழவர் வளர்ச்சி நிறுவனங்களும்" "ஓரளவு நிலம் பெற்றுள்ள உழவர், பண்ணைத் தொழிலாளர் வளர்ச்சி நிறுவனங்களும்" அமைக்கப்பட்டுள்ளன என்பதை ஈண்டு சிறப்பாகக் கூறலாம். அவை, வேளாண்மை உற்பத்தி வகையில், சிறு உழவர்கள், ஓரளவு நிலமுள்ள உழவர்கள் ஆகியோரின் கடன், இடுபொருள், பணித் தேவைகளை நிறைவு செய்கின்றன.

உழவர்கள் உற்பத்தி செய்துவரும் உபரி விலைபொருள்களை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இல்லையெனில், பசுமை புரட்சியில் கண்ட வெற்றியும், அதன் மூலம் வேளாண்மையில் கண்ட உற்பத்தி உயர்வும் பொருள்கள் தேங்கி மந்தநிலை ஏற்படும் சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். இன்றையதினம், வேளாண்மைப் பொருள் வணிகம் இடைத்தரகர்களிடமே அகப்பட்டுக் கொண்டுள்ளது. இதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள், வேளாண்மை உற்பத்தியுயர்வினால் உழவர்களும் பொதுமக்களும் நன்மை பெறமுடியாமல் தடைக்கல்லாக இருந்து கொண்டு, தாங்களே முழுப்பலனையும் அனுபவித்து வருகின்றனர். இடைத் தரகர்களை நீக்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒரு புறமும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றோர் புறமும் முக்கியப் பங்காற்றி வருகின்றன. இந்த நோக்கத்துடன் செயல்படும் கூட்டுறவு கடன்வழங்கு சங்கம், கூட்டுறவு விற்பனைச் சங்கம், செய்முறைச் சங்கம், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை தங்களுக்குள் ஒருங்கிணைந்த தொடர்பு கொண்டுள்ளன. பயிரிடுவோருக்கு நியாய விலை கிடைக்கும் வகையில், அவர்களது உற்பத்திப் பொருள்களை நேரடிக் கொள்முதல் செய்வதையே முக்கியமாகக் கொண்டு, பணிகளைப் பெருமளவில் பலதிறப்படுத்தும் பணியில் தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் முனைந்து செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் உடனுழைப்



புடன் நுகர்வோருக்குப் பொருள்களை நியாய விலையில் வழங்கி வருகின்றன. இச் சங்கங்களின் விலை ஏற்ற-இறக்க சிறப்பு நிதிக்கு அரசு உதவித் தொகை அளிப்பதன் மூலம், இச்சங்கங்களின் உறுப்பினர்களாயுள்ள சிறு உழவர்களிடம் இருந்து விளைபொருள்களை ஒட்டு மொத்தமாக வாங்கிக்கொள்ளவும் ஊக்கமளிக்கப்படுகிறது. உரங்கள் வழங்கு துறை திருத்தியமைக்கப்பட்ட பின்னர், விற்பனைச் சங்கங்கள் தமது நடவடிக்கைகளை பலதிறப்படுத்தும் பணிகள் தற்போது முக்கிய இடம் பெற்றுள்ளன. இந்த மாற்றியமைக்கப்பட்ட முறையின்படி வட்ட விற்பனைச் சங்கங்கள் உரங்களை நேரடியாக வாங்குவதில்லை என்பதும் மொத்த விற்பனையாளர்களாகச் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளம் அல்லது தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை சம்மேளனம் சில்லரை விற்பனையாளர்களாகச் செயல்படும், கிராமக் கடன் வழங்கு சங்கங்களுக்கு உரங்களை நேரடியாக வழங்குகிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர்.

கிராம கடன் வழக்கு சங்கங்கள் தமக்குக் கிடைக்கின்ற உரத்தை அடையாள அட்டைகளின் அடிப்படையில் உழவர்களுக்கு நியாயமான முறையில் வழங்குகின்றன. ஆளுநர் உரையிலும், முதல் அமைச்சரின் வரவு-செலவுத் திட்ட உரையிலும் குறிப்பிட்டதைப்போல, கிடைக்கின்ற உரங்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவாக உள்ளன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு மத்திய அரசு செவிமடுத்து, உரம் வழங்கும் பொறுப்பு முழுவதையும் மாநில அரசுக்கு வழங்கும் என நம்புவோமாக. உற்பத்தி குறைந்து அதனால் உருவாகியுள்ள கடும் பிரச்சினையையும் உணவுப் பொருள்களைச் சீரமைக்கப்பட்ட ஏற்பாட்டின் வாயிலாகவே வழங்க வேண்டிய நிலைமையையும் நமக்கு ஏற்பட்டிருக்கையில் உரங்கள் போன்ற இன்றியமையாப் பொருள்கள் வழங்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒப்படைக்கப்பட்டிருப்பது, கூட்டுறவு இயக்கத்திற்கே மிகப் பெருமை தரக்கூடியதொன்றாகும், என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

1972–73 ஆம் ஆண்டில் கூட்டுறவு விற்பனை சங்கங்களால் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ரூபாய் 22.02 கோடியாகும். 1973–74 ஆம் ஆண்டில் இந்த அளவு ரூபாய் 25 கோடி அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1974 ஏப்ரல் 5

ஐந்தாவது திட்டகாலத்தின் இறுதி ஆண்டில் இதன் மதிப்பு ரூபாய் 50 கோடியாக உயரும். உரம் வழங்குதல் வரையறுக்கப்பட்ட நிலையில் இருந்தாலும், 1973–74 ஆம் ஆண்டின் இறுதியில் இம் மாநிலத்தில் உள்ள இரண்டு விற்பனைச் சம்மேளனங்கள் மையத் தொகுதி ஏற்பாட்டின் கீழும் பிறவகையிலும் ரூபாய் 25 கோடி மதிப்புள்ள 2.5 லட்சம் டன் உரங்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு, கிராம அளவிலும், வட்ட அளவிலும் போதுமான கிடங்கு வசதிகளைச் செய்யவேண்டும். கிராமக் கடன் வழங்கு சங்கங்களால் 500 கிராமக் கிடங்குகளையும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனங்களாலும் தொடக்க விற்பனைச் சங்கங்கள் சிலவற்றாலும் 10 விற்பனைக் கிடங்குகளையும் ரூபாய் 1.66 கோடி செலவில் அமைக்கும் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக மத்தியக் கூட்டுறவுக் கிடங்குத் திட்டத்தின்கீழ், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நீண்டகாலக் கடனுகை, செலவில் $62\frac{1}{2}$ சத வீதத்தை வழங்கியுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,000 கிடங்குகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 200 கிடங்குகள் 1974–75 ஆம் ஆண்டுக் காலத்தில், தேசியக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக் கழகத்தின் அனுமதிக்குட்பட்டு அமைக்கப்படும்.

சேமிப்புக் கிடங்குகள் போன்ற பெரிய திட்டங்களுக்கு மட்டுமல்லாமல், விற்பனைச் சங்கங்கள் நிதி உதவும் வங்கிகளிடமிருந்து பெருமளவில் நடைமுறை மூலதனம் பெற இயலும் வகையில் விற்பனைச் சங்கங்களில் பங்கு மூலதனத்தை வலுப்படுத்தும் பொருட்டு இணைமானியமாகப் பங்கு மூலதன உதவியும் அவசியமான இடங்களில் மூன்றுண்டுகளுக்கு நிர்வாகப் பணியாளர் உதவித் தொகை, கருவிகள், பணியாளர்களுக்கான உதவித் தொகை போன்ற சிறிய, ஆனால் முக்கியமான இனங்கள் குறித்தும் உதவி அளிக்கப்படுகிறது. இவை பற்றிய விவரங்கள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

நன்கு அமைந்த கடன் வழங்கல்–விற்பனை அமைப்பு திறமையான பங்கீட்டு முறையுடன் இணைக்கப்படும்போது, விலைவாசி உயர்ந்து கொண்டே செல்லும் இந்நாட்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த வழிகோலும் செம்மையான அமைப்பாக அமையும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இன்றியமையாப் பொருட்களின் சில்லறை விற்பனையைப் படிப்படியாகக் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன்



1974 ஏப்ரல் 5]

தெரிவித்துக் கொள்கிறேன். பங்கீட்டுச் செலவைக் குறைப்பதற்காகவும் நாணயமான வணிகமுறைகளைக் கையாள வகை செய்வது குறித்தும் ஏனைய நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிஉதவி அளிப்பதற்கான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை ஐந்தாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயலாற்றப்படும். கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனை அமைப்புகளையும், தொடக்க அமைப்புகளையும் வலுவூட்டுவதற்கான திட்டங்களுக்கும் ஐந்தாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூபாய் 60 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவற்றால் பயனடைந்த மக்கள் தொகை 31 சதவீதம்; செய்யப்பட்ட சில்லறை விற்பனை 14 சதவீதம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டில் சில்லறை விற்பனையால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ரூபாய் 80 கோடிக்கு விற்பனையாகும் என இலக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்பொருள் தொழில்களைத் தொடங்க வேண்டும் என இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அறிவிக்கப்பட்ட தொழிற் கொள்கைகளில், வலியுறுத்தியுள்ளது. மேலும் வேளாண்மை உற்பத்திப் பொருளைப் பதப்படுத்துதல் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கொள்முதல் செய்த பொருள்களை விற்பனைக்குகந்தவாறு பக்குவப்படுத்திய பின்னர் அவற்றை நியாயமான விலையில் விற்க அச்சகங்களுக்கு இயலச் செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். இதன் தொடர்பாக சூரியகாந்தி விதைகளை பதப்படுத்துவதற்கான ரூபாய் 78.48 லட்சம் செலவிலான இரண்டு தொழிற்சாலைகளுக்கு 1973–74 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்டது என்பதையும், 1974–75 ஆம் ஆண்டில் இவ்விரண்டு தொழிற்சாலைகளும் செயல்படத் தொடங்கும் என்பதையும் அறிவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர் மகிழ்ச்சியடைவர். இவற்றில் ஒன்று தென் ஆற்காடு மாவட்டம் விருத்தாசலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனத்தால் நிறுவப்படும். மற்றொரு தொழிற்சாலை கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வழங்கல்-விற்பனைச் சங்கத்தால் நிறுவப்படும் (இச்சங்கம் கோயம்புத்தூரில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடியை நடத்தி வருகிறது) இந்த

[1974 ஏப்ரல் 5

இரண்டாவது தொழிற்சாலை கோயம்புத்தூர் மாவட்டம் சிங்கா நல்லூர் பேரூராட்சியில் உள்ள ஒண்டிப்புதூரில் நிறுவப்படும். ரூபாய் 1.14 லட்சம் செலவிலான உள்ளாடை தொழிற்பிரிவு ஒன்றும், திருப்பூரில், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

அயரா முயற்சியின் விளைவாகவும் மக்கள் மனமுவந்து நல்கிய ஒத்துழைப்பினாலும் கூட்டுறவு இயக்கம் குறிப்பிடத் தக்க அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. பெரிய அளவில் கடன் வழங்குவதன் மூலமும், வேளாண்மை இடுபொருள்களை வழங்குவதன் வாயிலாகவும், பசுமைப்புரட்சி மலர கூட்டுறவு இயக்கம் தன்னால் இயன்ற பணியைச் செய்து வந்துள்ளது. பரந்து விரிந்து அமைந்துள்ள விற்பனை நிலையங்கள் மூலம் விலைவாசி ஏற்றத்தை கட்டுப்படுத்த உதவியுள்ளது. பெருமளவில் மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருள்களை உற்பத்தி செய்து, அவற்றை நியாயமான விலையில் விற்பனை செய்வது இயலும் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் இப்பொழுது உற்பத்தித் துறையிலும் நுழைந்து அரிய பங்காற்றத் தயாராகியுள்ளது. இத்தகைய ஏற்றமிகு சாதனைகளை எய்தி பெருமை படைத்த கூட்டுறவுத் துறை, கடந்த கால சாதனைகளின் பலனாக ஏற்பட்டுள்ள நம்பிக்கை, ஊக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அடுத்து வரும் ஆண்டுகளில் வெற்றி நடைபோடக் காத்திருக்கிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

**திங்கட்கிழமை, 1974 ஏப்ரல் 8.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்**

*Prosperity Brigade Volunteers*

*762 Q.—THIRU M. SURENDRAN: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether there is any proposal under the consideration of the Government to appoint more number of volunteers of the Prosperity Brigade at important bus stops in the City of Madras to prevent cases of pick pockets?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, சென்னையிலிருக்கும் சில பஸ் நிலையங்களிலும் சினிமாக் கொட்டகைகளிலும் பிக் பாக்கெட்டுகள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை நடைபெறுவண்ணம் கண்காணிக்கும் வகையில் நமது சீரணிப் படையினரை அங்கே அமர்த்துவது ஓரளவு நலமாக இருக்கும் என்று கருதப்படுகிறது. ஆகவே, அவர்களை அங்கே நியமிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரி அவர்கள் சி.ஐ.டி.-க்களைப் போட்டு இந்தக் காரியத்தை நிறைவேற்றலாம் என்று தெரிவித்திருப்பதற்கேற்ப, ஏறத்தாழ 100 பேர் சீரணிப் படையினர் பணியாற்றியதற்குப் பதிலாக எழுபது பேர் பணியாற்றி வருகின்றனர்.

*Field Publicity Forum.*

*763 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether any communication from the Union Directorate of Field Publicity on the formation of the Citizens Information Forum has been received; and

(b) if so, the details thereof?

1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 764, 765, 766 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் அமைச்சருடைய வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகின்றன.

767, 768, 769, 770, 771 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

772, 773, 774 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் அமைச்சருடைய வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

*New Electricity Schemes.*

* 775 Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to set up special cells to formulate New Electricity Schemes: and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, மழைப் பற்றாக் குறை அடிக்கடி ஏற்படுவதன் காரணமாகத் தண்ணீர் குறைந்து விடுவதால், ஏற்கெனவே இருக்கக்கூடிய தண்ணீரை 'ரீ-பம்பிங்' செய்வதற்கான திட்டம் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியில் இதற்குப் பதில் வருகிறது. ஏற்கெனவே மின்சாரம் எடுக்கப் பயன்படுத்தப்பட்ட தண்ணீரை மீண்டும் மேலே ஏற்றி, மறு முறையும் அந்தத் தண்ணீரைக் கொண்டு மின்சாரம் எடுக்க வேண்டும் என்ற முறையில் காடம்பாறைத் திட்டம் என்கிற புதிய திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது.

---

@ 585–593-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 8]

**திரு. என். கே. பழனிசாமி:** இதுவரை சிறிய சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களிலிருந்து மின்சாரம் எடுப்பது குறித்து என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, நாம் மொத்தமாக தமிழ்நாட்டின் சார்பாக சி.பி.டபிள்யூ.டி.-க்கும் திட்டக் கமிஷனுக்கும் பல்வேறு திட்டங்களைத் தயார் செய்து அனுப்பி வைத்திருக்கிறோம். சுருளியாறு, காடம்பாறை, பாண்டி யாறு-புன்னம்புழா போன்ற திட்டங்கள் மத்திய சர்க்காரால் அனுமதிக்கப்பட்டு வேலை நடந்துவரக்கூடிய திட்டங்களாகும். இன்னும் பத்து திட்டங்களுக்கு மேல் நாம் அனுப்பியிருக்கிறோம். அவற்றுக்கெல்லாம் அனுமதி கோரி எழுதியிருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி:** காடம்பாறை திட்டத்தில் தண்ணீரை 'ரீ-பம்ப்' செய்து மின்சாரத்திற்குப் பயன்படுத்து வதற்கான ஏற்பாடு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றிப் பரிசீலனை செய்தாரா? அப்படி யென்றால், எல்லா இடங்களிலும் இம்மாதிரி வைப்பதன்மூலம் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்து பயன்படுத்தலாம் அல்லவா? அவ்வாறு செய்ய திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் செய்யக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படாது என்று தான் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். காடம்பாறைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், 'பீக் டிமாண்டு'-இன்போது இம்முறை கடைப்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பகல் நேரங்களில் தொழிற்சாலைகளும், விவசாய பம்ப் செட்களும் இயங்கிக் கொண்டிருக்கும்போது மின்சக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த நேரத்தில் பீக் டிமாண்டை சமாளிப்பதற்காகத்தான் இந்தப் புதிய திட்டம்—இந்தியாவிலேயே இந்தத் திட்டம்தான் முதலில்—அனுமதிக்கப்பட்டிருக்கிறது—என்று கருதுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவது தொடர்பான சிறப்புக் குழு என்ற தலைப்பின்கீழ், உட்குழு ஒன்று நியமனம் செய்திருக்கிறார்கள். அந்த உட்குழு அடிக்கடி சந்தித் தால் நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய மின்சாரப் பற்றா

[1974 ஏப்ரல் 8

குறையைப் போக்க நல்ல திட்டங்களைத் தீட்ட முடியும். ஆனால், அந்த உட்குழுவின் முதற்கூட்டம் 24—8—1973-இல் நடைபெற்ற பிறகு கூடியதாகத் தெரியவில்லை. ஆகவே, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்தக் குழு கட்டாயமாகக் கூடி, இந்த நாட்டில் என்ன என்ன வகையில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதை ஆராய்வதோடு, நெய்வேலி சுரங்கத்தின் இரண்டாவது கட்ட வேலையைச் சற்று துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நெய்வேலி திட்டத்தைக் குறித்து ஏற்கெனவே மத்திய சர்க்காரினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதிதாக முடிவு எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் அனுமதி தான் வர வேண்டும். அந்தத் திட்டத்தை நடத்துவதன் மூலமாகப் பல்வேறு நல்ல சாத்தியக்கூறுகள் அமையும். இது இலாபகர மானதும், தமிழ்நாட்டைத் தொழில்மயம் ஆக்கவும் மிகச் சிறந்த திட்டம் என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்திற்கு அனுமதி வந்தால் மிக விரைவில் நிறைவேறும் என்பதில் ஆட்சேபணை இல்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, தண்ணீரின் ஆவியிலிருந்துதான் மின்சாரம் எடுக்கப்படுகிறது. ஐந்து ஹார்ஸ் பவர் பம்ப் செட் ஓட்டுகிறார்கள் என்றால், அந்தத் தண்ணீர் வெளியே வரும்போது அதுவும் ஆவியாகத்தான் வருகிறது. அந்த ஐந்து ஹார்ஸ் பவர் பம்பிற்கு என்ன கரண்ட் தேவையோ அந்த கரண்டை அதே ஆவியிலிருந்து எடுத்துக்கொள்ள புதிய திட்டம் தயாரிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** புதிய யோசனை மட்டுமல்ல; புதுமையான யோசனையும்கூட, அப்படிப்பட்ட சாத்தியக்கூறு இருப்பதாக நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தெர்மல் ஸ்டேஷனைப் பொறுத்த வரையில்,

'It has also been associated with special committee on conversion of 2 Nos. 50MW boilers at Neyveli to oil firing . . . .

—— ' குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு இம்முறையில்



1974 ஏப்ரல் 8]

நெய்வேலி திட்டத்தை மாற்றியமைக்கக்கூடிய ஏற்பாட்டில் வெற்றி அடைந்திருக்கிறார்கள் ? அதற்கு ஏதாவது சிபார்சு செய் திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, மாற்றி யமைப்பதற்கு சமீபத்தில் மத்திய சர்க்கார் 36 கோடி ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். அதற்கு ஒப்புதல் வழங்கியிருக் கிறார்கள். மாற்றியமைக்கின்ற முறை நடைபெறும் என்று நாம் நம்பலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த ஆயில் ஃபயரிங் முறை லாபகரமாக இருக்குமா, அதிகச் செலவு ஏற்படுமா என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதற்கு மிக அதிகச் செலவாகும். வேறு வழியில்லாமல், செலவினத்தைக் கருதாமல் எப்படியும் மின்விசை பெறவேண்டும் என்றதனால் மத்திய சர்க்காரும் அந்த யோசனையைக் கூறியிருக்கிறார்கள். நமது வேண்டுகோளுக்கிணங்க மத்திய சர்க்காரும் இணங்கி இந்தப் பணத்தைத் தர இருக்கிறார்கள். மிக அதிகச் செலவினந்தான் ஏற்படும் என்று கருதுகிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, திட்டக் கமிஷனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்றையதினம் எந்த எந்தத் திட்டங்கள் தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன ? நேற்றையதினம்கூட..., இந்த நாட்டின் பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் விஜயவாடாவில் ஒரு தெர்மல் ஸ்டேஷனுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால், நாம் பல திட்டங்களை வற்புறுத் தியும் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. ஆகவே, இது குறித்து மத்திய அரசுக்கு அமைச்சர் அவர்கள். தெரிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் எடுத்துக்கொண்டிருக்கும் புதிய திட்டங்கள்— நான் ஏற்கெனவே சொல்லியதுபோல—சுருளியாறு, காடம் பாறை, பாண்டியார்—புன்னம்புழா போன்ற திட்டங்கள் ஆகும். நெல்லித்துறை, சேர்வலாறு போன்ற திட்டங்களெல்லாம் சி. பி. டபிள்யூ. டி. அனுமதிபெற்று, திட்டக் கமிஷனுக்குச்

செல்வதாக அறிகிறேன். மேட்டூரில் ஒரு அனல் மின் நிலையம், தூத்துக்குடியில் அணு மின் நிலையம், நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் இவைகளெல்லாம் முக்கிய திட்டங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் பூர்த்தி செய்தால் தான் பத்தாண்டு காலத்திற்கு தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை சரியாகும். இந்தத் திட்டங்களெல்லாம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் 300 கோடி ரூபாய் செலவில் நெய்வேலியில் இரண்டாவது 'மைன் கட்' திட்டத்திற்கு அனுமதி அளித்தால், அங்கு உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் மாநில சர்க்கார் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் என்று சமீபத்தில் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இன்னொன்று—30 கோடி ரூபாய் செலவில் புதிதாக மைன் கட்டுக்கு மேற்கு ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்துகொள்வதாகச் சொல்லப்படுகிறது. இதில் எதை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இரண்டாவது சுரங்கம் வெட்டுவதன் மூலமாக மொத்தமாக 600 முதல் 1000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கக்கூடிய நிலையம் அமைக்க முடியும். ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தியானாலும் அதை நாம் முழுதும் எடுத்துக்கொள்ள அரசு உத்தரவாதம் கொடுக்கத் தயாராக இருக்கிறது. வளரும் தேவையைக் கருதினால் எவ்வளவு மின்சாரம் கிடைத்தாலும் நெய்வேலியிலிருந்து வாங்கிக்கொள்ள நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது.

**திரு. ஏ. எம். இராஜா :** இரண்டு மின் நிலையங்களை அமைப்பதற்கான இடத்தை தேர்ந்தெடுக்கும் பணியும் இந்தக் குழுவிடம் ஒப்படைத்திருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை எந்த இடத்தில் வைக்கப் போவதாக அந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது ? அப்படி அமைக்கப்படப் போகும் அணுமின் நிலையங்கள் எவ்வளவு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டுள்ளதாக அமைக்கப்பட இருக்கின்றன ? பொதுவாக இரண்டாயிரம் மெகாவாட்க்கு மேல் உற்பத்தி திறன் இருந்தால் அது ஹைடலை விட சீப்பாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.



எனவே அந்த முறையில் இரண்டாயிரம் மெகாவாட்ஸ்க்குமேல் உற்பத்தி செய்யும் திறன் உள்ள அணுமின் நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மின்சார வாரிய அதிகாரிகள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தென் கோடியில் தூத்துக்குடி பகுதியில் இரண்டு மின் நிலையங்களை அமைக்க வேண்டிய திட்டத்தைத் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலேயே ஒரு அணு மின் நிலையம் கூட அமைப்பதற்கான செயற் குறிப்பு அவர்களிடம் இல்லை என்று தெரிய வருகிறது. ஆனால் இது கட்டாயம் வேண்டும் என்பதை நிபுணர்கள் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். நீர் மின்நிலையம், நிலக்கரி மூலம் உற்பத்தி செய்யப்படுகிற அனல் மின்நிலையம் கட்டுவதால் பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் சிக்கல்கள் ஏற்படும். ஆகவே அணு மின் நிலையம் அமைப்பதன் அவசியத்தை மத்திய அரசுக்கு நிபுணர்கள் தெரிவித்து வருகிறார்கள். நாமும் அப்படித்தான் கேட்கிறோம்.

* 776 Q.—THIRU N. K. PALANISAMI :
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state the progress made in the construction of Kadambarai Hydro-Electricity Scheme?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** போபாலில் உள்ள நிறுவனம் ஒப்பந்தப் புள்ளியைப் பெற்றிருந்தும் ஏன் மெஷினரிகளை அவர்கள் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கவேண்டும் ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதெல்லாம் க்ளோபல் டெண்டர் என்று சொல்வார்கள். இதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் இந்தியாவில் இன்டிஜீனஸ்-ஆக செய்யும் நிலையில் இல்லை. ஆகவே எந்த நாட்டில் இதுபோன்று நல்ல இயந்திரங்களை திறமைசாலிகள் செய்கிறார்கள் என்பதை விளம்பரப்படுத்தி அவை எல்லாம் வரப்பெற்று, மத்திய சர்க்காரின் அனுமதி பெற்றுத்

---

@ 594–602-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தான், இந்த நாட்டு இயந்திரம் சரியாக இருக்கும் என்று ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்கிறோம். மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் இவை செய்யப்படுகின்றன.

* 777 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Ministe for Electricity be pleased to state—

(*a*) whether power is being generated in Kothayaru Electri city System regularly; and

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) கோதையாறு மின்சாரத் திட்டத்தில் நிரந்தர உற்பத்தி நடைபெறுகிறது இடையில் சில இடர்பாடுகள் ஏற்பட்ட காரணத்தால், திடீல் சமயத் தில் சரியாக வேலை செய்யாததால், இயந்திரத்தில் பழுது ஏற்பட்ட தால் சில வேளைகளில் இயங்கவில்லை. இப்பொழுது முழுமையாக இயங்கும் நிலையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** 100 மெகாவாட் இரண் பவர் ஹவுஸிலும் உற்பத்தித் திறன் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் எவ்வளவு உற்பத்தித் திறன் இப்போது ஆகிறது என் விவரத்தைத் சொல்வார்களா? அதோடு, பழுதடைந்த மெஷி னரிகள் எல்லாம் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு விட்டனவா

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முழுமையாக இரண்டு பவர் ஹௌஸஸ்ஸும் ஓடுகிற நிலையில் இருக்கின்றன. கோ யாறைப் பொறுத்து, எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதல் 100 மெகாவாட் இருந்தாலும் தண்ணீரை வைத்துக்கொண் இவ்வளவு காலத்திற்கு தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும் என் தண்ணீர் நிறைய இருந்தால் நிறையச் செய்யலாம்—தண்ணீ குறைவாக இருப்பதால் கோடை காலத்தில் பகிர்ந்து வைத்து செய்கிறோம். ஒவ்வொரு நாளும் எவ்வளவு யூனிட் உற்பத் யாகிறது என்ற கணக்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவ மாகச் சொல்லலாம்.

**திரு. என். டென்னிஸ் :** பழுதடைந்த இயந்திரத்தை சீர்படுத்த பல காலமாகிறது. அதனால் குறிக்கோள்படி மி உற்பத்தியில் தடை ஏற்படுகிறது. ஆதலால் இயந்திரங்கள் பழு டைந்தவுடனே அவற்றை சீர்படுத்துவதற்கு அரசு நடவடிக் எடுக்குமா?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இருக்கிற சிக்கல் என்ன வென்றால், வெளிநாடு நிபுணர்கள் ஆலோசனைப்படி பொருத்தப் பட்டதாகும். திடீரென்று திடீல் சரியாக வேலை செய்யவில்லை என்றால் அது இந்த நாட்டில் சமயத்தில் கிடைப்பது சிரமம். வெளி நாட்டிலிருந்துதான் வரவழைக்கவேண்டும். நடைமுறைச் சிக்கல்களால் காலதாமதம் ஆகிறது. அந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு எந்தெந்த அளவில் முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் எடுத்து வருகிறோம்.

*Deers in Point Calimere forests*

*778 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state tre taken by the Government to preserve the deers in the Point Calimere forests near Vedharanyam in Thanjavur district?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** வன அலுவலர்கள் சற்று அதிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். சரணாலயத்திற்குச் சென்று விட்டு வெளியே வருகிறவர்களிடம் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் அந்தப் பகுதியில் வனவிலங்குகள், பறவைகள் இவற்றைச் சுடுவது சட்டம் மூலம் தடுக்கப்படுகிறது.

*Hand-pounded rice.*

* 779 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister fcr religious endowments be pleased to state the places where mills for the production of hand pounded rice are now run by the Government?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அரசு கைக்குத்தல் அரிசி தயாரிப்பு நிலையம் எதும் நடத்தவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** கைக்குத்தல் அரிசி என்று சொல்லிக் கொண்டே மெஷினில் அறைக்கிற அரிசியைப் பலயிடங்களில் சப்ளை செய்கிறார்கள். சென்ற ஆண்டு கூட இதுபற்றி சேலம் மாவட்டத்தில் நான் ஒரு புகார் கொடுத்தேன். அதுபற்றி இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, அதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படி கலப்படம் செய்பவர்களானால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். எந்த இடத்தில் அப்படிச் செய்கிறார்கள் என்பதுபற்றி உறுப்பினர் அவர்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 8

## Distribution of Ambar Charkas.

* 780 Q.—Thiru M. C. THOOYAMANI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken by the Government to supply Ambar Charkas to the Muslim women in Mettupalayam town?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : கோயம்பத்தூர் மாவட்ட கதர் கிராமத்தொழில்கள் அதிகாரி கிராமப்புற நூற்புக் கூடம் ஒன்றைத் தொடங்குவதற்குத் தகுந்த கட்டிடம் ஒன்றை மேட்டுப் பாளையம் நகரில் முஸ்லீம்கள் வாழும் பகுதியில் தெரிந்தெடுத் துள்ளார். அவர் நகராட்சியிடமிருந்து "மறுப்பின்மை சான் றிதழ்" பெற்றுள்ளார். அக்கட்டிடத்திற்கு மூன்று நிலை மின் இணைப்பு வழங்குமாறு தமிழ் நாடு மின்சார வாரியத்திடம் அவர் எழுதிக் கேட்டுள்ளார். மேற்படி அனுமதி கிடைக்கப் பெற்றதும் நூற்புக் கூடம் தொடங்கப்படும்.

**திரு. மே. சி. தூயமணி** : மேட்டுப்பாளையம் நகரில் கூடுதலாக இருக்கிற முஸ்லீம் தாய்மார்களுக்காக அமைக்கப்பட இருக்கிற அந்த அம்பர் சர்க்கா நிறுவனம் சிறிய அளவில்தான் இருக்கிறது. எனவே அதிகப்படியான வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் அதை விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : ஏற்கனவே தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், கிராமப்புறங்களில் நூற்புக் கூடங்கள் நடை பெறுவதன் அடிப்படையில் மேட்டுப்பாளையத்திலும் தொடங்கு கிறார்கள். தொடங்கிய பிறகு தேவையானால் விரிவுபடுத்தலாம்.

## Marriages conducted in temples.

* 781 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that there are proposals under the consideration of the Government to conduct a large number of free marriages in temples in this State out of temple funds; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : (அ) & (இ) ஏழை எளிய வர்களுக்கு திருக்கோயில்களின் சார்பில், பெரிய கோயில்களின் உபரி நிதிகளைக்கொண்டு இலவசத் திருமணம் நடத்தும் திட்டம் கடந்த ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படுகின்றது. திருக்கோயில்



1974 ஏப்ரல் 8]

களின் நிதிநிலைக்கேற்ப, ஒவ்வொரு திருமணத்திற்கும் செலவு ரூ. 150-க்கு மேற்படாமல், வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் இலவசத் திருமணங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் தொகையிலிருந்து மணமக்களுக்கு வேட்டிகள், புடவைகள், தாலி முதலியவை அளிக்கப்படுகின்றன. திருமணம் திருக்கோயில் வளாவு களுக்குள்ளேயே நடத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ், இது வரை 24 திருமணங்கள் நடந்துள்ளன. ஏழை எளியவர்கட்கு உதவி புரிய விழையும் இத்திட்டம் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றுவருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : இந்தச் சிறப்பான திட்டத்தில் மறுமணம் ஏற்படாத வகையில் செய்வதற்கு என்னென்ன விதி முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன? அது சம்பந்தமாக யாராவது ரெவின்யூ அதிகாரிகள் முன்பு அல்லது பொறுப்புள்ளவர்கள் இது முதல் திருமணம்தான் என்று சர்ட்டிபிகேட் வழங்குகிற அளவிற்கு விதிமுறைகள் உள்ளனவா? அப்படியிருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : திருமணம் செய்து கொள்ளவிரும்புகிறவர்கள் அந்தக் கோவில் நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்ததற்குப் பிறகு அந்த விண்ணப்பத்தின் பேரில் நிர்வாக அதிகாரி அதைப் பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்த தற்குப் பின்னால்தான் திருமணத்தை கோவிலில் நடத்த ஒப்புக் கொள்ளப்படுகிறது. திருமணம் நடத்துகிற நேரத்தில்கூட அதற்கான பதிவேடுகள் எல்லாம் வைக்கப்பட்டு தக்க சான்றிதழ் களோடுதான் திருமணம் நடத்தப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : இலவசத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு கோவிலில் இருந்து ஏதாவது சன்மானம் அல்லது பரிசுப்பொருள் வழங்க ஏதாவது திட்டமிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : இலவசத் திருமணத்திற்கு தாலியே கோவிலில் இருந்துதான் வழங்குகிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி** : கலியாணம் பண்ணிக்கொள்வ தற்கே பணம் வேண்டும். கலியாணம் பண்ணிக்கொண்டு எப்படி குடும்பம் நடத்துவார்கள் பணம் இல்லாமல்?

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கஷ்டப்பட்டுத் தான் நடத்தவேண்டும்.

**திரு. ஆ. பாந்தாமன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டி வருக்கிற பழனி கோவில், திருத்தணி கோவில், திருச்செந்தூர் கோவில் ஆகியவைகளுக்கு ஆண்டு தோறும் 15 லட்சம் ரூபாய்க்கு மேலாக வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோவில்களில் மாதத்திற்கு இரண்டு முறை இரண்டு தேதிகளை நியமித்து, அந்தத் தேதிகளில் இலவசமாகத் திருமணங்கள் நடைபெறும் என்ற ஒரு அறிவிப்பை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசாங்கத்தின் அறநிலையத் துறையின் அறிவிப்புப் படி வருமானத்தைப் பொறுத்த அளவில் இலவசமாக திருமணங்கள் செய்யலாம் என்ற கருத்தில் ஒவ்வொரு கோவிலுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 5,000 வருமானம் வரக்கூடிய கோவில்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு திருமணங்கள் இலவசமாகச் செய்யலாம் என்று வைத்திருக்கிறோம். அதேபோல ரூ. 5,000 முதல் 20,000 வரையில் மூன்று திருமணங்களும், ரூ. 20,000-க்கு மேல் 50,000 வரையில் நான்கு திருமணங்களும், இப்படி 15 லட்சத்திற்கு மேல் எந்தெந்த கோவில்களுக்கு வருமானம் வருகிறதோ அந்தக் கோவில்களில் ஆண்டு தோறும் 100 திருமணங்கள் இலவசமாகச் செய்யலாம் என்று ஏற்கனவே துறை அறிவுரை வழங்கியிருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** ரிஜிஸ்டர் ஆபீஸில் திடீர் திருமணம், திருட்டுத் திருமணம், இரண்டாவது, மூன்றாவது திருமணம் எல்லாம் நடத்த முடியாது. காரணம் 15 நாட்கள் நோட்டீஸ் தரவேண்டும். அதே போல் இப்பொழுது கோவில்களில் அப்படிப்பட்ட கட்டுப்பாடு இல்லாததால் சிரமம் இல்லாமல் யாருக்கும் தெரியாமல் இப்படிப்பட்ட திருமணங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். சில பெண்களுக்கு மூன்றாவது, நான்காவது கலியாணம் கூட செய்கிறார்கள். இது சினி உலகத்தில் சாதாரணமாக நடைபெறுகிறது. அப்படி நிகழாமல் இருப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னால் நோட்டீஸ் கொடுத்து, கோவில் அதிகாரிகள் அந்த நோட்டீஸை அவர்கள் குறிப்பிட்ட ஊரில் உள்ள முனிசிபாலிடியில் அல்லது ரிஜிஸ்டர் ஆபீசில் தொங்கவிட்டு, வைக்க



1974 ஏப்ரல் 8]

மறுப்பு வரவில்லை என்றால்தான் கோவில்கள் அந்தத் திருமணங்களை அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு நிலைமையை அரசு நடைமுறைக்குக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, சில பேர்கள் இரண்டு, மூன்று திருமணங்கள் செய்துகொள்கிற பிரச்சனை இதுவரையில் கோவில்களில் வரவில்லை. தனிப்பட்ட இல்லங்களில்தான் நடந்துகொண்டிருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கோ அல்லது கோவில் நிர்வாகத்திற்கோ தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய யோசனையைக் கருத்திலே கொண்டு அப்படிப்பட்ட தவறுகள் கூட எதிர்காலத்தில் நடக்காமல் கலியாணங்களுக்கு ஏற்கனவே நிர்வாக அதிகாரிகள் 15 நாட்கள், 20 நாட்கள் காலம் கொடுத்துத்தான் திருமணத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஏழை எளிய மக்களுக்கு இப்படிப்பட்ட திருமணங்களுக்கு அதிகப்படியான கட்டுப்பாடுகள் வைத்தாலும் கூட கோவில்களில் வந்து திருமணங்கள் செய்துகொள்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். ஏற்கனவே சலுகை வைத்தும் 26 திருமணங்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் உணர வேண்டும்.

**திரு. கு. காமாட்சி:** நம் நாட்டுக் கோவில்களில் இம்மாதிரி கள்ளத் திருமணங்கள் நடைபெறுவதைத் தடுக்க முடியும். ஆனால் திருப்பதிக்குச் சென்று சினிமா நடிகர்கள், சினிமா அதிபர்கள் கலியாணம் செய்துகொள்கிறார்களே, அதை எப்படித் தடுக்க முடியும்?

(பதில் இல்லை).

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, கோவில்களில் போய் இரண்டாவது, மூன்றாவது திருமணங்கள் செய்துகொள்வதைப் பற்றிச் சொன்னார்கள். ஆண்டவனே இரண்டு, மூன்று திருமணங்கள் செய்து கொண்டிருக்கிற காரணத்தினால் ஆண்டவனால் படைக்கப்பட்ட சாதாரண மனிதர்களுக்கு அந்த ஆசை வருகிறது. ஆகவே, அப்படி இரண்டாவது, மூன்றாவது திருமணங்கள் செய்து கொண்டால், அதற்கெல்லாம் தடை விதிக்காமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அவைகளெல்லாம் ஆண்டவனுடைய திருவிளையாடல்கள். மனிதனுக்கு அவை தேவையில்லை.

**திரு. தி. பொன்னுமலை:** திருமணம் என்றால், அதற்கென்று பஞ்சாங்கத்தில் ஒரு நாள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நாட்களில்தான் பெரும்பாலும் திருமணம் செய்துகொள்கிறார்கள். அப்படி ஒரு மூடப்பழக்கம் இருந்து வருகிறது. ஆனால் கோவில்களில் அப்படிப்பட்ட திருமண தேதி இல்லாத நாட்களில், வேறு நாட்களில் திருமணங்கள் செய்வதற்கு நமது அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து அப்படிப்பட்ட மணமக்களை அனுப்பிவைப்பார்களேயானால், கோவில்களில் எந்த நாளிலும் திருமணம் செய்து வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

*Panchayat Roads*

* 7c7 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal under the considtration of the Government to sanction special grant to the Panchayat Unions for the maintenance of Panchayat roads; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தமிழ் நாட்டிலிருக்கிற ஊராட்சி மன்றங்களில் இருக்கிற சாலைகளைப் பராமரிக்க போதுமான அளவுக்கு ஊராட்சி மன்றங்களில் பணம் இல்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இந்தப் பல நாள் கோரிக்கையை அருள்கூர்ந்து கவனித்து, இந்த ஊராட்சி மன்ற சாலைகளைப் பராமரிக்க ஊராட்சி மன்றங்களுக்கு ஒன்றியத்தின் சார்பில் போதுமான அளவுக்கு நிதி வசதியை ஏற்படுத்தித்தர அரசு ஆலோசிக்குமா?



1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சாலைகள் ஏறத்தாழ 28,061 கிலோ மீட்டர் இருக்கிறது. ஒரேயடியாக அவைகளைப் பழுதுபார்ப்பது என்றால் ரூ. 70,15,250 ஆகும் என்று தலைமைப் பொறியாளர் அவர்கள் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி விவாதிப்பதற்கு 'பார்ட் II ஸ்கீம்' இரண்டாம் கட்டத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசுக்கு அனுப்பி, இந்த ஆண்டு நிதிநிலை பற்றாக்குறை காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு ஒன்றியச் சாலைகளுக்கு சென்ற ஆண்டு கொடுத்து வந்த ரூபாய் 1.9 கோடியைவிட ஒரு கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், ஒன்றியச் சாலைகளில் பேருந்துகள் செல்லுமானால் பேருந்துச் சாலைகளை அரசாங்கமே பெருவழித் துறையிலே எடுத்துக்கொள்வதற்கு இசைந்திருக்கிற காரணத்தினால் அங்கத்தினர் அவர்கள் சொல்கிற அந்தத் திட்டம் செயல்படுவதற்கு ஆவன செய்யலாம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரோடு போடுவதற்கு ஒதுக்கப்படுகின்ற கிராண்டுகள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரே மாதிரியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது பஞ்சாயத்தினுடைய விஸ்தீரணம், அங்குள்ள ரோடுகளின் நீளம் இவைகளை அடிப்படையாக வைத்து ஒதுக்கப்பட்டிருக்கிறதா அல்லது யூனியன் ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் ஒரே மாதிரியாக ஒதுக்குவதாக இருந்தால், ஏரியாவை, விஸ்தீரணத்தைப் பொறுத்து நிதி ஒதுக்க இனியாவது அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** சென்ற ஆண்டு வரை ஜனத்தொகை அடிப்படையில்தான் நிதி ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது. 1974-75-ம் ஆண்டிலிருந்து அந்தச் சாலைகளினுடைய நீளம், அதனுடைய தேவைகளை அனுசரித்து நிதி ஒதுக்கலாம் என்ற திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு அதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது.

[1974 ஏப்ரல் 8

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற பொழுது பேருந்துகள் போகின்ற தடங்களை அரசு எடுத்துக் கொள்ளும் என்று கூறினார்கள். பேருந்துகள் போவதற்கு பாதைகள் செம்மையானதாக இருந்தால்தான் பேருந்துகள் போகும். ஆகவே பேருந்துகள் போகின்ற பாதைகள் எடுத்துக் கொள்வது என்பது சரியானது அல்ல, சாத்தியமானது அல்ல. பேருந்துகள் விடக்கூடிய பாதைகள் எது என்று தீர்மானித்து அந்தப் பாதைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு செப்பனிடு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேருந்துகள் செல்லும் தடங்களை எடுத்துக்கொள்வதற்காக ஏற்கனவே அந்தச் சாலைகளில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் செல்லுமானால், அப்படிப்பட்ட சாலைகளைத்தான் எடுத்துக்கொள்வதற்கு இப் பொழுது அரசு அனுமதித்திருக்கிறது. எல்லாச் சாலைகளையும் ஒரே சமயத்தில் எடுத்துக்கொள்வதற்கு இயலாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பல ஆண்டு காலமாக பழுதடைந்திருக்கிற பஞ்சாயத்து ரோடுகள் பல இருக்கின்றன. அவைகளை இப்பொழுது அரசாங்க பெருவழித் துறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று டி.டி.ஸி., போன்ற மன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றியும்கூட பல ஆண்டுகளாக எடுக்காமலேயே இருக்கின்றன. ஆகையால், அதற்கு முதன்மை இடம் கொடுத்து, அவைகளை முதலில் எடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய வழிவகைகளைச் செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அப்படி முக்கியமான சாலைகளை எடுத்துக்கொள்வதற்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் டாப் பிரையாரிடி கொடுத்து அனுப்புவார்களேயானால், அதைப் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. கு. காமாட்சி:** இம்மாதிரி தனித் தொகை ஒதுக்கப்படா விட்டாலும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு தரத்தை, கிளாஸிபி கேஷனை மாற்றி அமைப்பதற்கு பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்பொழுதே அவை ஆறு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த அடிப்படையில் அந்தந்த ஒன்றியங்களுக்கு நிதி வழங்கப்பட்டு வருகிறது.



1974 ஏப்ரல் 8]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in each Panchayat Union a number of roads have been laid under the Crash Programme, but they are not metalled and are useless. May I know from the Hon. Minister for Local Administration whether the roads would be done by the Panchayat Unions themselves or the Government or the Department in respect of metalling?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கடும் விரைவுத் திட்டத்தின் மூலம் போடப்பட்ட சாலைகளை ஒன்றியங்கள் எடுத்துக்கொள்வது என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கு உள்ளூர்ச் சாலை மான்யம் வழங்கப்படுகிறது. இந்த மான்யம் 1967-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் நீளத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் நீளத்தின் அடிப்படை யில் இந்த நிதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்பொழுது இருக்கிற சாலைகளின் நீள அளவிலேதான் அவை கவனிக்கப்படும்.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, சுகாதார சிப்பந்தி களுக்குக்கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற சில ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அப் போர்ப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு தனியாக சாதாரணமாக ஒரு மெயின் ரோடு வரும்பொழுது குறுக்கே ஒரு ஓடை வந்தால், இடையிலே சிறிய பாலம் கட்ட வேண்டுமென்றால் ரூ. 10,000. ரூ. 20,000 ஆகிறது. அதற்கு நிதி வசதி இல்லாமல் அந்தப் பஞ்சா யத்துக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அப்போர்ப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு தனியாக நிதி ஒதுக்கிடு செய்து தர வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஊராட்சி மன்றங்களில் அப்படிப்பட்ட சம்பளப் பட்டுவாடா பிரச்னை எழுவதில்லை. பல ஊராட்சி மன்றங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகின்றன. சிறிய கிராமச் சாலை அமைப்புத் திட்டத்தின் கீழ் அதற்குத் தனியாகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, மத்திய அரசு அனுமதி அளிக்காத காரணத்தால் மிகப்பெரிய ஊராட்சி ஒன்றியங்களையும் பிரிக்க முடியவில்லை. ஆகவே, அதிக அளவில் ஊராட்சிகள் சேர்ந்திருக்கின்ற பெரிய ஒன்றியங்களுக்கு மட்டுமாவது, சாலைக்கான சிறப்பு மானியங்கள் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அதனால்தான் ஜனத்தொகையின் அடிப்படையில் அல்லாமல் நீளத்தின் அடிப்படையில், தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்வது என்று மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 768, 769, 770 மூன்றும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படும்.

*New roads in Gummudipoondi*

*768 Q.—Thiru K. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the names of link roads which have now been formed in Gummudipoondi sub-taluk and Ellapuram Panchayat Union under the scheme of formation of link-roads to villages having a population above 1,500?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*769 Q.—Thiru K. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the reasons for the delay in implementing the scheme of black-topping the roads in Mukkarambakkam village in Gummudipoondi sub-taluk under Rural Roads Scheme, eventhough the population of that village is 1,500?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கிராமச் சாலைத் திட்டத்தின்கீழான வேலைகள் ஒவ்வொரு கட்டமாக செயல்படுத்தப் படுகிறது. நிதி ஒதுக்கீட்டை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின் கீழ் செயலாக்க வேண்டிய வேலைகள் அனைத்தும் படிப்படியாகத் தான் எடுத்துச் செயலாக்க இயலும்.

---

@ 603–606-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.



*Formation of road in Palavakkam.*

*770 Q.—Thiru K. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the proposal to take up the stretch of road from Palavakkam village in Ponneri taluk up to its terminal at Kavarai-pettai-Sathiavedu Highway under the Rural Road Scheme and to black-top it, is under the consideration of the Government; and

(b) if so, when it will be completed?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற விவர அறிக்கையில் பல ரோடுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் 1,500-க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் பல ரோடுகள் போடப்படவில்லை. ஆகவே, பேருந்துகள் செல்கிற சாலைகளையும், 1,500-க்கு மேல் மக்கள் தொகை உள்ள இணைப்புச் சாலைகளையும் கிராமச் சாலைத் திட்டத்தில் அரசு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டம் இப்போது 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதில் கும்முடிப்பூண்டிக்கு அதிகமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் 79 ஒன்றியங்களுக்கு மூன்றும் திட்ட நிலையில் முதலிடம் கொடுக்க வேண்டியிருப்பதால் வேறு பல சாலைகளை எடுத்துக்கொள்கின்ற குறிப்பு தற்போது இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது கும்முடிப்பூண்டிக்கு அதிகம் நிதி ஒதுக்கி யிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய ஆண்டிப்பட்டிப் பகுதியில் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவைகளை சீர்படுத்த, அரசாங்கமே அந்த ரோடுகளை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, நிதி இப்போது ஒதுக்கப்படவில்லை. ஏற்கெனவே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன 79 ஒன்றியங்களில் அவர்களுடைய பகுதி இடம் பெறுகிறதா என்று தெரியவில்லை. பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்கூட இந்த பஸ்கள் போகக்கூடிய சாலைகளை எல்லாம் ஹைவேஸ் அல்லது அரசாங்கமே எடுத்துக்கொள்ளும் என்று அறிவித்து இருந்தார்கள். அதற்கு அடுத்து வந்த இந்த அரசாங்கத்தில் அந்தக் கருத்து இருக்கிறதா? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இது நீண்டகாலமாகப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. பேருந்துகள் செல்லும் வழித்தடங்கள் எவை எவை என்று பார்த்து, எத்தனை ஆண்டுகள் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று பார்த்து, 5 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்குமானால் அந்தச் சாலைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருக்கிறோம். அதனால் இந்த ஆண்டு 1,000 மைல் அளவுக்கு எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் அதில் இணைந்திருக்கிறது. எல்லாச் சாலைகளையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ள முடியாததால் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் இந்த கிராம இணைப்புச் சாலைகளை முக்கியமாக பேருந்துகள் செல்லும் சாலைகளை பல திட்டங்கள் மூலமாக—ஹைவேஸ், நேஷனல் ஹைவேஸ், ரூரல் ஒர்க்ஸ் என்று பல துறைகள் மூலமாகச் செப்பனிட்டு வருகிறது. இப்படி தனித்தனியாகப் பிரித்துச் செய்வதால், பணம் பல வழிகளில் பிரிந்து போவதால் ரோடுகளைச் சரியாக சீர்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் நேஷனல் ஹைவேஸிலிருந்து அதிகமாகப் பணத்தைப் பெற்று ரூரல் ரோட்ஸ் பிரிவின் கீழ் ஒரே துறையின் மூலம் எல்லா ரோடுகளையும் பராமரிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் இந்த ஆண்டு ரோடுகள் செப்பனிடும் பணி நடைபெறுவது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாடு அரசு தொடர்ந்து அந்தப் பணியைச் செய்துவர வேண்டுமென்ற நோக்கத்தோடு செயலாற்றிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோலச் செயல்படுவதில் எந்த விதமான தவறும் வராது. அப்படிச் செயல்படுவது நல்லது தான்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதி இல்லை என்று சொன்னார்கள். இனி புதிய ரோடுகளை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் எடுத்துக்கொண்டுள்ள ரோடுகளை சீராக முடிப்பதற்கும் கல்வர்ட்டுகள், சிறு பாலங்கள் கட்டி முடிப்பதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் 12.80 கிலோ மீட்டர் புதிய சாலைகள் போடப்படும். 33.70 கிலோ மீட்டர்—இப்போதுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்படும். அதுபோலவே எல்லாபுரம் ஒன்றியத்தில் 10.5 கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கப்படும். விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கின்ற கிராமச் சாலைகள்—புதிதாகப் போடுகின்ற சாலைகள், இணைப்புச் சாலைகள் இவைகளைப் போடுவதற்காக ஒரு செப்பரேட் டிவிஷனை ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை அமைச்சரவர்களிடம் இருந்தது. அது எந்த அளவில் இப்போது இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் இரண்டு எஸ்.இ.-யின் கீழ் பணியாற்றி வருகின்றன. அதுவும் பெருவழி இலாகாவின் கீழ்தான் இருக்கிறது.

*Collection of Panchayat taxes.*

* 771 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a separate administrative body for the collection of Panchayat taxes; and

(*b*) if so, the details thereof?

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) ஊர். அலுவலர்களின் தயக்கம் காரணமாக ஊராட்சி வரி வசூலில் தாமதம் இருப்பதாக அரசு அறிவதால், வரி வசூலிப்பதற்காக புதிய அமைப்பு ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வில் உள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த அலுவலர்கள் பஞ்சாயத்தில் இணைந்து செயல்படுவார்களா அல்லது தனியாகச் செயல்படுவார்களா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, ஆய்வில் இருக்கிறது என்றுதான் குறிப்பிட்டேன். ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் ஊராட்சிக் குழு அமைக்க வேண்டிய தேவை இல்லை என்றும், இப்போது இருக்கிற கிராம கர்ணம், முன்சீப் போன்றவர்களே போதும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஏ.ஆர்.சி. ரிப்போர்ட் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே தான் இது ஆய்வில் இருப்பதாகக் குறிப்பிட்டேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, சிறிய பஞ்சாயத்துக்களுக்கு வருவாய் குறைவாக இருக்கிறது. ஆகவே, இதற்காகத் தனி ஏற்பாடு செய்து, ஒரு சம்பள ஏற்பாட்டைச் செய்தால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு மிகவும் கஷ்டமாகப் போய்விடும். ஆகவே, தற்போதுள்ள நிலைமைப்படி கிராம கர்ணங்கள், முன்சீப்கள் போன்றவர்கள் வரி வசூலில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு ஏதாவது கமிஷன் போன்று கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அப்படி வசூல் செய்வதற்காகத்தான் இப்போது கிராம கர்ணம், முன்சீப், வெட்டி, தலையாரி ஆகியோர்களுக்கு மாதம் 75 ரூபாய் ஆனரேரியம் கொடுக்கிறது அரசு. அதனால் இப்போது வசூல் கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது. பஞ்சாயத்துக்களில் வரி வசூல் பாக்கி இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. கர்ணம், முன்சீப் இவர்கள் மாத்திரமல்லாமல் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் ஒத்துழைத்தால் நிச்சயமாக பாக்கியில்லாமல் வசூல் செய்துவிட முடியும்.



1974 ஏப்ரல் 8]

**திரு. கு. அ. பொம்மன்:** தலைவரவர்களே, இப்போது பஞ்சாயத்துக்களுக்கு வரி பாக்கி இருப்பதால் மாச்சிங் கிரான்ட் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஆகையால் பஞ்சாயத்து வரி வசூல் செய்வதற்கு ஒரு பில் கலெக்டர் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நியமனம் செய்யப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பல பஞ்சாயத்துக்களுக்கு பில் கலெக்டர்களுக்கு பணம் கொடுக்கின்ற நிலைமை இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட யோசனை இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் பஞ்சாயத்துக்கள் சிறிதாக இருப்பதால் அதை பெரிதுபடுத்தி, வசூல் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற அமைப்பில் வசூலாகின்ற முறையிலும், செலவாகின்ற முறையிலும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. ஆகவே, இதை மாற்றி அமைக்க ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஏ.ஆர்.சி. ரிப்போர்ட்டின்படி சில கிராமப் பஞ்சாயத்துக்களை 'வயபிள் யூனிட்டாக' ஆக்குவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பேரூராட்சிகளின் நிதிநிலைமைகளை ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் அறிக்கை இன்னும் வரவில்லை. சிறிய சிறிய பஞ்சாயத்துக்களை பெரிதாக மாற்றுவதில் பல கஷ்டநஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகையால் ஏ.ஆர்.சி. ரிப்போர்ட் முழுவதும் இப்போது ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, village officers collect the Panchayat taxes. This is extra work and not normal work for them. As they do this work, may I know from the Hon. Minister for Local Administration, whether they will be given some remuneration so that they can do it with enthusiasm?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இப்போதே கொடுக்கப்பட்டு வருகிறது. கர்ணம், முன்சீப்புகளுக்கு வரி வசூலிக்கிற வேலை அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கம் 5 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கும், புஞ்சை நிலத்திற்கும் வரி இல்லை என்ற உத்தரவிட்டு இருப்பதால், அந்த வரி வசூலிப்பதில் அவர்களுக்கு அதிக வேலை இருப்பதாகச் சொல்லப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

[1974 ஏப்ரல் 8

**திரு. தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, இந்த பஞ்சாயத்து வரி வசூலிப்பதற்கு ஏற்கனவே பில் கலெக்டர்கள், ஓய்வு நேர எழுத்தர்கள் இருந்து வந்தார்கள். அவர்கள் அதை ஒழுங்காகச் செய்யவில்லை என்ற காரணத்தால்தான் கிராம முன்சீப், கர்ணம் வசூலிக்கவேண்டுமென்று செய்தார்கள். இப்போது கிராம முன்சீப் வசூலிப்பது நல்ல முறையில் இருக்கிறது. அப்படியே அவர்கள் கொஞ்சம் வசூலிக்காமல் இருந்தாலும் ஒரு வருடத்திற்கு ஒரு முறை ஜமாபந்தி நடக்கிறபோது வசூலித்து விடுவார்கள். ஆகவே, அந்த முறையைத் தொடர்ந்து செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, ரூரூப் கிளார்க் போட்டு அது சரியாக இயங்கவில்லை என்று தெரிவித்த காரணத்தால்தான் கிராம முன்சீப், கர்ணம் மூலம் வசூலிக்கிற முறையைக் கொண்டு வந்தோம். கர்ணம், முன்சீப்கள் தீவிரமான முறையில் பணியாற்றி இந்த ஆண்டு பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில்—பல மாவட்டங்களில்—நில் பாலன்ஸ் காட்டியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதல்களை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே பல கிராமங்களிலே இந்த பஞ்சாயத்து வரி வசூலிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் அங்கே இருக்கும் கிராம முன்சீப்களுக்கும், ஊராட்சித் தலைவருக்கும் இடையே உள்ள கோளாறு தான். குறிப்பாக பஞ்சாயத்துத் தேர்தலுக்குப் பிறகு ஒவ்வொரு கிராமத்திலும் இந்தச் சங்கடங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, தனியாக பில் கலெக்டரைப் போட்டு வசூலிப்பதற்கு அரசு உடனடியாக ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஊராட்சி மன்றத் தலைவர் டிமாண்டு நோட்டீசில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டால் உடனடியாக வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். பல ஊராட்சி மன்றத் தலைவர்கள் அடுத்த தேர்தல் வேலைகளில் கவனம் செலுத்தி விடுவதால் இது தாமதம் ஆகிறது. ஆனாலும் அந்த வசூலிக்கும் முறை இப்போது நல்லமுறையில் நடந்து வருகிறது.



1974 ஏப்ரல் 8]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்றங்களுக்கு அதிகப்படியான வருமானம் இல்லை. இப்போது முத்திரைத் தாள் வருமானத்தில் ஒரு பகுதி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அது முழுமையாகக் கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே இந்த மன்றத்தில் பலரும் கேட்டார்கள். அதை அதிகப்படுத்த அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பதிவுத் தாள் கட்டணம் மாத்திரமல்ல. சினிமா, பஸ் கட்டணங்கள் போன்றவற்றிலும் உதவித் தொகை ஏதாவது கொடுக்கலாமா என்பதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ச்சி முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது பஞ்சாயத்து வரி வசூல் செய்வதற்கு கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் சரிவர செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். மேலும், 5 ஏக்கர் நஞ்சைக்கு வரி இல்லை, புஞ்சை நிலத்திற்கு வரி இல்லை. ஆதலால் அவர்களுக்கு வேலை அதிகம் இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும், சர்சார்ஜ், செஸ் போன்றவற்றையும் இந்த வரி வசூல் மாதிரி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்போது கிராம அதிகாரிகள் செய்வது சரியாக இருப்பதால், அவர்களுக்கு இந்த அதிக வேலையைச் செய்வதற்கு தனியாக, ஸ்பெஷலாக ஒரு தொகை வழங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** ஊராட்சி வரி வசூலுக்கு என்று தனியாக அவர்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது. 75 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது ரூ. 10 கொடுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

### தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவருன தகவல் அளித்ததாக டாக்டர் ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3—4—1974 அன்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேரவையில் எழுப்பிய உரிமை மீறல் அறிக்கைமீது எனது தீர்ப்பைப் பிறகு அறிவிப்பதாக நான் கூறியிருந்தேன். இப்போது தீர்ப்பை அளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் 26—3—1974 அன்று எஸ்.ஐ.இ.டி. கல்லூரி நிர்வாகத்தினர் 80 ரூபாய் கட்டணம் வசூலிப்பதால் மாணவியர்க்கு உண்டாகும் கஷ்ட நிலையைக் குறித்து மாண்புமிகு கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர் கவனத்தை ஈர்த்தார். அதற்கு விடையாக அளித்த அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'தனியார் கல்லூரிகளின் கணக்குகளை இனிக் கல்வித்துறை தணிக்கை பிரிவு தணிக்கை செய்யும் என அரசு ஆணை இட்டது; அதற்கேற்ப எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் கணக்குகளைக் கல்வித் தணிக்கைப்பிரிவு சரிபார்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினர்; ஆனல் நிர்வாகம் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை; மேலும் துறைத் தணிக்கையாளர்களைக் கல்லூரிக்கு அனுப்பவேண்டாம் என்று நிர்வாகம் தெரிவித்தது. இப்பொருளில் அரசு ஆணை வரும்வரை புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தை எஸ்.ஐ.இ.டி. கல்லூரிக்கு வழங்காமல் இருப்பதாக இயக்குநர் அரசுக்குத் தெரிவித்தார்' என்று கூறினர்.

அதன்மீது விளக்கம் கேட்ட உறுப்பினர் 'இங்கே வாக்குறுதி கொடுத்தாலும், அங்கே நடைமுறையில் வேறு மாதிரி இருக்கிறது; ஆகவே, இதற்குப் பரிகாரம் காணும் வகையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டால் நலம்' என்று மட்டும்தான் கூறினரே ஒழிய, அமைச்சர் தந்த தகவல் தவறு என்று அன்றார் கூறவில்லை.

30—3—1974 அன்றைய 'இந்து' பத்திரிகையில் எஸ்.ஐ.இ.டி. கல்லூரி தாளாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் "மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை உண்மைக்கு மாறானது; அது





போன்று தணிக்கைக்கு உட்படுமாறு, நிர்வாகத்தை அரசுத் தரப்பில் கேட்கப்படவில்லை எனக் கல்லூரித் தாளாளர் அவர்கள் இந்துவில் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள், ஆகவே, தவருன தகவலைக் கொடுத்திருப்பதால், மாண்புமிகு கல்வி அமைச்சர் மீது ஓர் உரிமை மீறிய பிரச்சினை எழுப்புகின்றேன்" என்று 30—3—1974 அன்றே ஒரு அறிவிப்பை அளித்தார்கள்.

3—4—1974 அன்று அதை அவையில் எழுப்ப அழைத்தபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்னதாக அறிவிப்பில் கூறிய காரணங்களை மட்டுமே கூறினர்; தனக்கு ஆதாரமாக 'இந்து'வில் வந்த அறிக்கை ஒன்றைத் தவிர்த்து வேறு ஆதாரங்களைத் தரவில்லை.

அது மட்டுமன்று. "இது பற்றிய எல்லாத் தகவல்களையும் இந்த அவை அறிந்தாலல்லாது, கல்லூரித் தாளாளர் கூறியது சரியா; மாண்புமிகு அமைச்சர் கூறியது சரியா என்பதை உறுதி செய்ய இயலாது" என்றும் "கல்லூரித் தாளாளர் அறிக்கை வந்து நான்கு நாட்களாகியும், மாண்புமிகு அமைச்சர் அதற்கு மறுப்பு அறிவிக்காதிருப்பது ஒன்றே அமைச்சர் தந்த தகவல் தவறு என்பதற்கு போதிய சான்ருகும்" என்றும் மட்டுமே அவர் கூறினர்.

அன்று விடையளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'கல்வித் துறைத் தணிக்கைப் பிரிவு தணிக்கை செய்யும் என்ற அரசு ஆணை, கல்லூரி நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டது, அதைக் கல்லூரி நிர்வாகம் ஒப்புக்கொள்ளவில்லை; துறைத் தணிக்கையாளரை அனுப்பவேண்டாம் என மறுப்பும் தெரிவித்தது" என 26—3—1974-ல் தாம் அளித்த அறிக்கையில் கூறிய செய்திகளை உறுதி செய்யப் பல ஆவணங்களை அவைக்கு அளித்தார். தாளாளர் அறிக்கை 'இந்து' வில் வந்த அன்றே டாக்டர் ஹாண்டே அவர்கள் உரிமை மீறிய அறிக்கை கொடுத்து விட்டமையால், தாம் மறுப்பு அறிக்கை கொடுக்கவில்லை என்றும் கூறினர்.

ஆகவே, அமைச்சர் 26—3—1974-ல் அளித்த தகவல் உண்மையானது என்பதும், கல்லூரித் தாளாளர் 30—3—1974-ல் இந்துவில் விடுத்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையும் உண்மைக்கு மாறானது என்பதும் தெளிவாகும்; ஆகவே, உரிமை மீறிய நிகழ்ச்சி ஏதும் எழவில்லை என அறிவிக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 8

இந்நிலையில் இதுபோலும், உரிமை மீறிய நிகழ்ச்சிகளை இந்த அவையில் எழுப்பும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோலும் ஆதாரமற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வருவது இப்பேரவையின் மரபுக்கு இழுக்குத் தேடுவதாகும் என்றும் அத்தகைய முறைகளை மேற்கொள்ளவேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திராவிடக் கழகத் தொண்டர்கள் கைதானது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் that the House be adjourned to discuss a matter of urgent public importance, viz., that 150 Dravida Kazhagam volunteers were arrested on 3rd April 1974 in different parts of Tamil Nadu.

என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்பதைக் குறித்து விளக்கவேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, நான் கொடுத்து இருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது:

Unjustified arrest yesterday viz., 3rd April 1974 of peaceful Dravida Kazhagam volunteers throughout the State for demanding constitutional amendment for abolition of caste distinctions.

சார், இதை அன்றைக்கே எழுப்பினேன். எதிர்பார்த்துக் கொண்டு இருந்தேன். இது ரொம்ப முக்கியமான விஷயம். இதிலே இரண்டு மூன்று அம்சங்கள் இருக்கின்றன. அதைச் சொல்வதற்கு எனக்கு உங்களுடைய இன்டல்ஜன்ஸ் தேவை என்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

முதலாவதாக, பொதுவான ஒரு முக்கியமான பொதுஜன விஷயம் சம்பந்தமாக சில அரசியல் கட்சிகள் அமைதியான முறையில் மறியல் முதலிய போராட்டங்களை நடத்துகிறார்கள். அப்படி நடத்தக் கூடிய நேரத்தில் அரசு என்ன நிலை எடுப்பது என்பதைப்பற்றித் தெளிவாக இருக்கிறது. இதிலே என்ன முறை என்று பார்க்கிறபோது மதுரை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், இராமநாதபுரம், இராஜபாளையம் போன்ற இடங்களிலும் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களைச் சாதாரண கைதிகளைப் போல் நடத்துகிறார்கள்.

இங்கே நாம் பல முறை கேட்டு இருக்கிறோம், அப்படி யாராவது கைது செய்யப்பட்டு அவர்கள் ரிமாண்டு செய்யப்படுவார்களானால் அவர்கள் அரசியல் கைதிகள் மாதிரி நடத்தப்படவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இதுவரையில் அதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, அதற்கான முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்திச்செல்கிறபோது என்ன ஏற்படுகிறது என்று சொன்னால், முதலில் அவர்களைக் கைது செய்து விட்டு, 6 மாதத்திற்குப் பிறகு மீண்டும் அவர்களுக்கு சம்மன் போகிறது. இந்த முறை தவிர்க்கப்படவேண்டும்.

இரண்டாவதாக, இந்தச் சபையிலே 1970-லே அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் அந்தச் சட்டத்தை அமல் நடத்த முடியாமல் இருப்பதற்கு சுப்ரீம் கோர்ட்டில் மனு செய்தார்கள். மதம் சம்பந்தமான முறைகளில் பாதிக்கும் வகையில் சட்டம் இயற்ற உரிமையில்லை என்று சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பின் பேரில், மதச் சார்பற்ற என்ற நிலை வருகிறபோது—மதச் சார்புடையது என்று இல்லாவிட்டாலும்—இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் பொதுவாக நான் புரிந்து கொண்ட அளவுக்கு எந்த மதத்தையும் வளர்க்கக்கூடிய அளவுக்கு இருக்கக்கூடாது. 'இட் மஸ்ட் பி செகுலர்' என்று இருக்கிறது. மத சம்பிரதாயங்கள் என்பது மத்திய அரசின் கீழே கொண்டு வந்திருக்கிறார்கள். சாதாரணமாக ரேடியோவைப் பார்த்தால், கிட்டத்தட்ட சில சமயங்களில் மதப் பிரசாரத்திற்கு ரேடியோ வைத்து இருக்கிறார்களா என்று நினைக்கும் அளவுக்கு, மதப் பிரசாரம் செய்யும் அமைப்பாக இருக்குமோ என்ற நிலைமைக்கு வருகிறது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 8

இது சம்பந்தமாக அம்பேத்கார் அவர்கள் பிரசங்கத்தைக் கூடச் சமீபத்தில் படித்துப் பார்த்தேன். இன்னொரு மதத்தில் தலையிடக் கூடாது, புண்படுத்தக் கூடாது என்று தான் சொன்னார்களே தவிர, மதத்தினைப் பயன்படுத்தி மற்றவர்களின் உரிமை பாதிக்கப்படக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்கள். பெரியார் அவர்களும் அவ்வாறே உரிய உதாரணங்களை எல்லாம் கொடுத்து தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

மத உரிமை இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் எந்த அளவுக்குக் கேவலமான நிலைமை மத உரிமை என்ற பெயரால் வளர்ந்து வந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். மத உரிமை என்ற போர்வையில் சாதி வேறுபாடுகள், கட்டுப்பாடுகள் வலுவடைந்திருக்கின்றன. சில குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் தான் ஆஸ்பத்திரியிலும் மற்ற இடங்களிலும் துப்புரவு வேலையைச் செய்ய வேண்டுமென்ற நிலை வளர்ந்திருக்கிறது. வேறு எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் சாதாரணமாக ஆஸ்பத்திரியில் எல்லா வேலைகளையும் எல்லோரும் செய்வார்கள்.

குறிப்பிட்ட சாதிதான் இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்ற முறையில் அரசியல் சட்டத்தில் இல்லையென்றாலும் இந்த அமைப்பு நடைமுறையில் வந்திருக்கிறது. இந்த நடைமுறை இருக்கக்கூடாது என்ற வகையில் பொதுவாகத் தமிழ்நாட்டு மக்கள் கட்சி வேறுபாடு இல்லாமல் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், இயக்கம் நடத்துகிறார்கள் என்றால் அந்த இயக்கம் நடத்துகிறவர்களைக்கூட சட்டமும் பாதுகாப்பும் இருக்கிறது என்று கைது செய்வது என்ற முறை இருந்தால் எந்தவிதமான இயக்கமும் இந்த மாதிரி நடத்தக்கூடாது என்ற நிலைக்குப் போய் விடும்.

போராட்டத்தை நடத்தியவர்கள் பலாத்காரம் இல்லாமல் அமைதியாக நடத்தியிருக்கிறார்கள். இது பாராட்டத்தக்கது. அவர்களைக் கைது செய்ததன் மூலம் அரசு தவறு செய்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.



1974 ஏப்ரல் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசும், மாநில அரசும் உடனடியாகத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாகத் தலையங்கமே எழுதி இருக்கிறோம். இதிலே அரசின் நிலை என்ன, இப்பேர்ப்பட்ட கோரிக்கைகள் வரும்போது அரசு எம்மாதிரித் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கிறது, என்பதை எல்லாம் அறிந்து கொள்ளும் வகையில் இது பற்றி விவாதிக்க அவையின் மற்ற நடவடிக்கைகளை இரண்டு மணி நேரம் ஒத்தி வைத்து விவாதித்தால் அரசின் நிலையையும் அறிந்து கொள்ள முடியும், ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். ஆகவே, இதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, in addition to what my distinguished colleague, Mr. Thangamani has said, I would like to state that in almost three important districts—Rajapalayam in Ramanathapuram district, Periyakulam in Coimbatore district, Ariyalur and Lalgudi in Tiruchirappalli district, more than 150 Dravida Kazhagam volunteers have been arrested. In my opinion, this could have been avoided, especially because the picketing was done in a peaceful way.

It is the fundamental right of every citizen of the country to protest against actions of the State Government or the Central Government in a peaceful manner. It is customary to picket before the Collector's Office, if the protest is to be registered against the State Government and if it is a problem to be solved by the Centre, picketing will be before the Post Office and other places.

Sometime ago also, the Swatantra Party picketed the Post Offices and the Egmore Railway Station against the Central Government to protest against price rise in tickets. My submission is that it is the fundamental right of citizens to register protest against the Government. Therefore the arrests could have been avoided and the Government also could have come forward by giving solace to those indulging in this by telling that they were also persons interested in abolishing caste and creed distinctions and in their attempt to amend the Constitution. The most important point is to bring home to tht public is that we are all

one in this. All these things can be dicussed in a legitimate and detailed manner if the Speaker permits the other business of the House to be adjourned. With these words, I resume my seat, Sir.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்துள்ள திரு. கே. டி. கே. அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் போராட்டத்தின் நியாயங்களை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. தங்கமணி அவர்கள் இன்றைக்கு நாட்டிலே மத உரிமையின் பெயரால் செய்யப்படுகிற நடைமுறைக்கு ஒவ்வாத காரியங்களை இங்கே எடுத்துச் சொல்லி கண்டனத்தையும் தெரிவித்தார்கள். வானொலியில் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் கூட மதச் சார்பற்ற சர்க்காருடைய நிகழ்ச்சிகளாக இல்லாமல் மத சமரச நிலையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகச் சொல்லி அவர்களுக்குள்ள ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். அதைப் போன்ற உணர்வு எங்களுக்கும் உண்டு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் போராட்டத்தைக் குறித்து எழுந்துள்ள பிரச்சினை என்ற காரணத்தால் அதுபற்றிய சில விவரங்களை நான் கூற விரும்புகிறேன்.

சாதி இழிவைப் போக்க அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் திருத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் 1973 டிசம்பர் திங்கள் 8, 9 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தையொட்டி கூட பெரியார் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஒத்திவைப்புத் தீர்மானங்களும் இந்த அவையில் வந்ததை நாம் மறந்து விடுவதற்கில்லை. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், அறப்போர் முறையில் வன்முறைக்குச் சிறிதும் இடம் இல்லாமல் முதல் கட்டமாக அஞ்சல் அலுவலகங்கள் முன் ஒரு நாள் அடையாள மறியல் போராட்டம் 3—4—1974 அன்று நடத்திட வேண்டுமென்று 3—3—1974-ல் திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.





அந்தத் தீர்மானம்—தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அர்ச்சகர் சட்டத் திருத்தம் இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்ட காரணத்தால் தமிழ்நாடு சட்டப் பேரவையின் தீர்மானம் அமுலுக்கு வரத்தக்க வகையில் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்—என்று அந்தத் தீர்மானத்தினுடைய வாசகம் கூறுகிறது.

மேற்படி தீர்மானத்தின்படி 3—4—1974 அன்று மாநிலம் எங்கும் பல்வேறு இடங்களில் திராவிடர் கழகத்தினர் அமைதியான போராட்டத்தை நடத்தினார்கள். அன்று சென்னையில் திராவிடர் கழகத்தின் உறுப்பினர்கள் ஏறத்தாழ 200 பேர் திருமதி மணியம்மையார் அவர்கள் தலைமையில் பெரியார் திடலில் இருந்து ஊர்வலமாகச் சென்று அண்ணா சாலை அஞ்சலகத் தலைவர் அலுவலகத்தின் முன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அசம்பாவிதங்கள் எதுவும் இல்லாமல் போராட்டம் அமைதியாக நடந்து முடிந்தது. அதைப் போல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஈடுபட்டு இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. ஆனால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில இடங்களில் மாத்திரம் கைது செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது:—

| | |
|---|---|
| அரியலூர் | 56 பேர் |
| லால்குடி | 11 பேர் |
| கல்லக்குடி | 24 பேர் |
| ஆலங்குடி | 10 பேர் |
| அறந்தாங்கி | 13 பேர் |
| சின்னாளப்பட்டி | 4 பேர் |
| பெரியகுளம் | 20 பேர் |
| ராஜபாளையம் | 27 பேர் |

ஆக மொத்தம் 165 பேர் கைது செய்யப்பட்டார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டதற்குக் காரணம்—ஆயிரக்கணக்கானவர்கள் இந்தப் போராட்டத்தில் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஈடுபட்டிருந்தார்கள் என்றாலும் குறிப்பிடப்பட்ட இந்த இடங்களில் மாத்திரம் மத்திய அரசு அஞ்சலக ஊழியர்களை அவர்களின்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 8

குறுக்கே நின்று தடுத்து நிறுத்தினர் என்ற காரணத்திற்காக இ.பி.கோ. 143, இ.பி.கோ. 341 பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒருநாள் அடையாள மறியல் போராட்டம் என்ற வகையில் நடத்தியதால் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். அஞ்சலக ஊழியர்களைத் தடுக்கக்கூடிய அளவுக்குப் போராட்டத் தொண்டர்கள் சென்ற காரணத்தால் அவர்கள் கைது செய்யப்பட்டார்களே அல்லாமல் பல்வேறு பகுதிகளில் இந்தப் போராட்டத்தை அமைதியான முறையில் செய்த யாரும், மறியலில் ஈடுபட்டவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்தப் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள வெற்றியாகத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கே.டி.கே. அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் இங்கே கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள் என்று நானும் கருதுகிறேன்.

(முற்பகல் 10.00)

ஏற்கனவே நான் டெல்லியில் நிருபர் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்திலும், அலஹாபாத்தில் நடந்த தாழ்த்தப்பட்ட பின்தங்கியோர் நல மகாநாட்டில் தமிழக அரசு இந்தப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானம்—உச்ச நீதிமன்றத் தீர்ப்பினாலே செயலிழந்துவிட்ட நிலைமைக்கு ஆளான காரணத்தினால் இந்தத் தீர்மானத்திற்கேற்ப அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற வேண்டுகோள்—இந்த மகாநாட்டின் மூலமாகவும்—இன்னும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாகவும் டெல்லிக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாகக் கடிதங்களையும் டெல்லிக்கு எழுதியிருக்கிறோம்.

வேண்டுமானால் இந்த அவையில் கூட—மாநில அரசின் தீர்மானம் செயல்படுகிற அளவுக்கு மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த முன்வர வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கூட நாம் நிறைவேற்றலாமா என்ற எண்ணம் இருக்கிறது. இப்படி இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதில் இருந்து, அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் அது ஒருமனதாக நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று எடுத்துக் கூறி, தொடர்ந்து மேலும் இதில் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தங்களுக்கு உரைத்து அமர்கிறேன்.



1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) திருத்தணி வட்டத்தில் பருவ மழை தவறியதும் நில வரி கடன் வசூலை ஒத்திவைப்பதன் அவசியமும் குறித்து

THIRU A. PARANDHAMAN : Sir, I call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of land revenue, loans, etc., from the ryots of that area.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1383-ஆம் பசலி ஆண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் திருத்தணி வட்டம் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். 1383-ம் பசலி ஆண்டில் இந்த வட்டத்தில் கீழ்க்காணும் மூன்று ஏரிகளுக்கு மட்டுமே நீர் கிடைத்தது :—

1. ஹரிசந்திரபுரம்
2. வியாசபுரம்
3. பழையனூர்

ஏனைய ஏரிகள் அனைத்துக்கும் நீர் கிடைக்கவில்லை. திருத்தணி வட்டத்தில் 1969, 1970, 1971, 1972-ஆம் ஆண்டுகளில் முறையே 1,204.6 மி.மீ; 1,158.6 மி.மீ; 1,025 மி.மீ; 926 மி.மீ; மழை பெய்தது. 1973-ஆம் ஆண்டில் 745 மி.மீ. மழை பெய்தது.

திருத்தணி வட்டத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் ஒருபோக நன்செய் நிலங்களாகும். இந்த வட்டத்தில் 1383-ஆம் பசலி ஆண்டில் பயிர் விளைச்சலின் கீழ் உள்ள 12,083 ஏக்கர் நன்செய் நிலங்களில், 9,322 ஏக்கர்களில் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூபாய்க்கு 25 காசுக்கும் அதற்கு மேற்பட்டும் பலன் கிட்டியது. எஞ்சிய 2,761 ஏக்கர்களில் உள்ள பயிர்கள் சாவியாகி விட்டன. எனவே, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக முழு

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 8

தீர்வை விதிப்பதினின்றும் தள்ளுபடி வழங்குவதற்கு 13(2) ஆம் எண் வாரிய நிலை ஆணையின் கீழ் திருத்தணி வட்டம் தகுதியுடைய தாகும். அடிப்படை நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை ஆகியவற்றின் கீழ் தள்ளுபடி வழங்கப்படும் மொத்தத் தொகை தோராயமாக ரூ. 3,25,879 ஆகும்.

இந்த வட்டத்தில் தற்போது பயிரிடப்பட்டுள்ள வேர்க்கடலைப் பயிரின் இரண்டாம் போக பயிர் நிலைமையும் நன்றாக இல்லை. பாசன வசதியற்ற நிலையில் 1,210 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட வேர்க்கடலைப் பயிர்கள் மழையின்மையால் பாதிக்கப்படுகின்றன. 4,401 ஏக்கர் நிலத்தில் பாசன வசதியுடன் பயிரிடப்பட்ட வேர்க் கடலைப் பயிர்கள் பூச்சிகளாலும், நீர்ப்பற்றுக்குறையினாலும் பாதிக்கப்படுகின்றன. ஆனால், இந்த நிலங்கள் ஒரு போக நன்செய் நிலங்களாக இருப்பதால் இரண்டாவதாகப் பயிரிடப்பட்ட வேர்க்கடலைப் பயிருக்குத் தள்ளுபடி எதுவும் வழங்க மேற்படி பயிர் தகுதியுடையதாகாது.

இந்த வட்டத்தில் குடிநீர் கிடைப்பதைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட எல்லா கிராமங்களிலும் நீர்ப்பற்றுக்குறை இருப்ப தாகக் கூறலாம். வட்டத்தில் நிலவி வரும் குடிநீர்ப் பற்றுக் குறையை ஓரளவு நீக்க குடிநீர்க் கிணறுகள், குளங்கள், ஊரணிகள் முதலியவற்றை ஆழப்படுத்துவதற்குக் கடன் வழங்கு வதற்கான செயற்குறிப்புகளைத் தனியாக அனுப்புவதாக செங்கற் பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பேட்டை துணை வட்டம், பொன்னேரி துணை வட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், பொன்னேரி வட்டம், கும்மிடிப்பூண்டி துணை வட்டம், ஆகிய இடங்களில் நடப்பு பசலி ஆண்டில் மழையின்மையால் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். இப்பயிர்களுக்கும் தேவையான வரித் தள்ளுபடி வழங்கப்படலாம்.

வறட்சி, புயல் காரணமாக உழவர்கள் கடன் தவணைகளைத் திருப்பி செலுத்த முடியாத நிலையில் இருக்கும்போது மெதுவாக வசூல் செய்யும் கொள்கையை அல்லது அரசுக்குச் செலுத்த



1974 ஏப்ரல் 8] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

வேண்டிய தொகைகளை வசூல் செய்வதை ஒத்திப் போடுதல் என்ற நடைமுறையைப் பின்பற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்குக் கட்டளையிடப்படுவது அரசின் கொள்கையாக உள்ளது. பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நாட்டத்திற்கு வரும்போது, அப்பகுதிகளில் கடன் வசூலை தங்கள் விருப்பப்படி ஒத்திப் போடுவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன்** Sir, by way of elucidation. தலைவர் அவர்களே, பொதுவாகப் பார்க்கிற நேரத்தில் செங்கல்பட்டு, திருத்தணி வட்டங்களில் மழை பொய்த்துவிட்ட காரணமாகப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்களே சொன்னார்கள். நான் நடைமுறையில் உள்ள நிலைமையைக் கருதி மனவேதனையுடன் கூற விரும்புவது

'All the Tahsildars and Independent Tahsildars are requested to mobilise all the sources at their disposal and under the purview of the Revenue Recovery Act to achieve the target at any cost before 31st March 1974'.

என்று மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களுக்கு அறிக்கை அனுப்பி யிருக்கிறார்கள். இந்த அறிக்கையின் அடிப்படையில் அங்கங்கே ஜப்திகள் நடைபெறுகின்றன. உண்மையை உணர்ந்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு உடனடி யாக ரெமிஷன் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானமே—மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கும் வந்திருக்கிற காரணத்தினால்—நிலைமைகளைப் பரிசீலித்து விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படாத அளவுக்கு அவர் மேற் கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்பதை நான் உறுதி யாகத் தெளிவுபடுத்துகிறேன்.

**(ஆ) பேருந்து படிகளில் நின்று பயணம் செய்வதால் சென்னை மாநகரில் அதிகரித்து வரும் விபத்துக்கள் குறித்தும் அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும்.**

THIRU G. R. EDMUND: Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance namely, the increasing incidence of acridents in Madras City due to foot-board travelling in buses and the need to adopt steps to prevent it.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, according to sertion 82 of the Motor Vehicles Act, 1939 no person driving or incharge of a motor vehicle shall carry any person or permit any person to be carried on the running board or otherwise than within the body of the vehicles. Section 112 of the said Act provides that whoever contravenes any provisions of the said Act and the rules made thereunder shall if no other penalty is provided for the offence, punishable with fine which may extend to Rs. 100 or if having been previously convicted of any offence under the Act is again convicted of offence with fine which may extend to Rs. 300. It has been brought to the notice of the Government that there have been a few accidents due to the foot-board travel in Madras City. The Government have viewed this with great concern. They have decided that the prevailing practice of foot-board travel which is a menace to the public safety should be stopped and that only permitted number of passengers allowed into buses. Accordingly instructions have been issued to the Inspector-General of Police and the Commissioner of Police to take appropriate action against the offenders. The Pallavan Transport Corporation has also been requested to instruct the bus crew to prevent foot-board travel in City buses.

With reference to the above instructions the city traffic police are checking such hazardous driving and a Press Note has also been issued appealing to the public not to travel on running boards. Propaganda on the evils of travelling in foot-boards is made through slides exhibited in local picture houses. Between 5th March 1974 and 14th March 1974, 210 persons were prosecuted for travelling on running boards on Vepery High Road. A few were admonished and the others were fined, fines ranging from Rs. 2 to Rs. 15. As a result of the above action, travel on running board has gone down considerably. The drive will, however, continue.



## 5. அறிவிப்புகள்

**(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## 7. தகவல் கோரல்.

### வினா நேரத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கும் வினாக்கள் குறித்து.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்னாலே எழுப்பப்பட்ட பல பிரச்சினைகளுக்கு இன்று ஓய்வாகத் தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை 5 நாட்களுக்கு முன்னாலே எழுப்பினேன். ஆளுங்கட்சி உறுப் பினர்களுக்கு நீங்கள், கேள்வி நேரத்திலே எவ்வளவு நேரம் ஒதுக்கியிருக்கிறேன் என்று தீர்ப்பு வழங்குகிறேன் என்று கூறினீர்கள். எப்பொழுது தீர்ப்பு வழங்க இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பு இல்லை, தகவல்தான். மார்ச் 4-ம் தேதி முதல், மார்ச் 23-ம் தேதி வரைக்கும், ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கப்பட்ட கேள்விகள், ஒரு உறுப்பினருக்குச் சராசரியாக எவ்வளவு கேள்விகள் கொடுக்கப்பட்டன என்ற நிலையிலே சராசரி 10 கேள்வி வரும். அதிலே தி.மு. கழகத்திற்கு 6 கேள்விகள், காங்கிரஸ் (ஸ்தாபனம்) 21 கேள்விகள்; அ.தி.மு.க.விற்கு 19 கேள்விகள்; சி.பி.ஐ. 29 கேள்விகள்; பார்வார்ட் பிளாக்குக்கு 4 கேள்விகள்; முஸ்லிம் லீக்கிற்கு 18 கேள்விகள்; சுதந்திராவுக்கு 7 கேள்விகள்; காங்கிரசுக்கு 24 கேள்விகள்; தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சிக்கு 7 கேள்விகள்; தமிழ் அரசு கழகம் ஒன்றும் இல்லை; இன்டிபெண்டன்ட்ஸ் 10 கேள்விகள். ஒவ்வொரு கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் சராசரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 8. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

*நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,27,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 40,27,700 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100".

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 40,27,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, சட்ட மன்றம் கூடும் நாட்கள் குறைவாக இருப்பதால் வருடத்திற்கு ஆறு மாதங்களுக்கு மேல் கூட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 40,27,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்களின் இருக்கைகளில் மூன்று பேருக்கு நான்கு பேராக இருக்க வேண்டியிருப்பதை மாற்றி அமைக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 40,27,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, to discuss the need to provide a typist with a typewriter and an attendant in the room provided for the opposition group leaders, I move—

"That the allotment of Rs. 40,27,700 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF: Sir, to discuss the need to enhance the monthly salary of the legislators, I move—

"That the allotment of Rs. 40,27,700 under Demand No. 7—State Legislature be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the need to provide free travel in railways up to 10,000 miles, increased T.A., mileage and constituency allowance to members as in other States, I move—

"That the allotment of Rs. 40,27,700 under Demand No. 7-State Legislature be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to allot scooters to M.L.As. in Tamil Nadu in addition to the allotment of cars, I move—

"That the allotment of Rs. 40,27,700 under Demand No. 7 State Legislature be reduced by Rs. 100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு உள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அவைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் பேரில், எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற சில வெட்டுப் பிரேரேபணைகளை விளக்கிச் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன் பொதுவாக இந்தச் சட்டமன்றத்து நடவடிக்கைகள் சம்பந்தமாக மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படுவது சாதாரணமாக இல்லை. ஆனால், நமது மன்றத்திலே இது தொடர்ந்து விவாதிக்கப்படுவது என்பதிருக்கிறதே அது நல்ல முறை என்றுதான் நான் கருதுகிறேன்.

காரணம், இந்த மானியக் கோரிக்கையிலே நேரடியாக, உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய விஷயங்களைத்தான் நாங்கள் பேச வேண்டியிருக்கிறது. சில சமயத்தில் ஒரு சபாநாயகரை அகற்ற வேண்டுமென்பதற்காகச் சொல்லக்கூடிய சில காரணங்களை இங்கே எடுத்துச் சொன்னால் அது தவறு. தவறு என்று சொல்லமுடியாத நிலை இருக்கிற காரணத்தினால், சாதாரணமாக மற்ற மன்றங்களிலே வேறு எந்த மானியத்தின் பேரிலே விவாதம் நடத்தினாலும், இதைப் பொறுத்தவரையிலே, சபாநாயகருக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையை வைத்து, அதிகமாக இங்கே விவாதிப்பது கிடையாது





ஆனால், இங்கு பல வருஷங்கள் நடந்த விவாதங்களை எடுத்துப் பார்த்தேன். உறுப்பினர்கள் பொறுப்புணர்ச்சியுடன், சில முக்கியமான உரிமைகள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் விவாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, இந்த மானியத்தைப் பொறுத்த வரை, மூன்று விதமாகப் பிரித்து நான் பேசலாம் என்று கருதுகிறேன்.

முதலாவது, சபாநாயகர் அவர்கள், எங்களுக்கு அல்லது சபைக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்று வருகிறபொழுது, சாதாரணமாக இந்த பிரிவிலேஜ் மோஷன்ஸ், உரிமைப் பிரச்னைகள் இருக்கின்றன. இந்த உரிமைப் பிரச்சனைகளைப் பொறுத்த வரையிலே நம்முடைய விதிகளிலே, தாங்கள் அங்கீகாரம் கொடுத்தால்தான் சபைக்குக் கொண்டு வரவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், நாடாளுமன்றத்திலே இருக்கக்கூடிய விதியைப் பார்த்தால், 224-225-லே

A Member may with the consent of the Speaker raise a question of privilege

என்பதைச் சொல்லிவிட்டு, பின்னால் 225-லே ஒரு புரவிசோ—அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் ?

Provided that where the Speaker has refused his consent under Rule 222 or is of opinion that the matter proposed to be dealt with is not in order, he may if he thinks it necessary read the notice of question of privilege and state that he refuses consent or withholds consent and that the notice of privilege is not in order

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு புரவிசோவை அங்கே சேர்த்திருக்கிறார்கள். இதனுடைய நோக்கம் என்னவென்றால், சாதாரணமாக உரிமைப் பிரச்சனையை இங்கே சட்ட மன்றத்திலே, உறுப்பினர்கள் எழுப்பமாட்டார்கள். தனிப்பட்ட உறுப்பினர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கலாம், அல்லது சபையினுடைய உரிமை பாதிக்கப்பட்டிருந்தாலும் என்று இருந்தாலும்கூட தன்னுடைய உரிமை பாதிக்கப்படாமலிருந்தும்கூட, ஏதாவது ஒரு உறுப்பினருடைய உரிமை பாதிக்கப்பட்டாலும், சபையினுடைய உரிமை பாதிக்கப்பட்டாலும், ஒவ்வொரு உறுப்பினரும் முன்னோடியாக இருந்துகொண்டு வருவதற்காகத்தான் வைத்திருக்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 8

அது உரிமைப் பிரச்சனையாக இல்லாமல் இருந்தாலும்கூட, உங்களுக்கு ஒரு வசதி கொடுத்திருக்கிறார்கள். சபைக்கு முன்னால் வந்து, இப்படி ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள், நான் அதற்கு அங்கிகாரம் கொடுக்கவில்லையென்று சொல்கிற அளவுக்கு லோக் சபாவில் இருக்கிறது. அந்த முறையைப் பின்பற்றினால் உரிமைப் பிரச்னைகள் எந்த எந்த முறையிலே வருகின்றன என்பதை நாடு பூராவும் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும், சட்டமன்றத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல உறுப்பினர்கள், இரண்டு மூன்று அங்கத்தினர்கள், நம்முடைய விவாதம் அதிக நாள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். உறுப்பினர் சௌந்தரபாண்டியன் என்று நினைக்கிறேன். சட்டமன்றத்தை 6 மாத காலமாவது கூட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எங்கள் சார்பாக 100 நாட்களாவது கூட்ட வேண்டுமென்று சொல்கிறோம்.

சட்டமன்றத்திலேதான் அரசு தன்னுடைய நிலையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே மாதிரி அங்கங்கு இருக்கிற தம்முடைய தொகுதிகளுடைய நிலைமையைப் பற்றியும் நாட்டு நிலைமையைப் பற்றியும் எடுத்துச் சொல்ல ஒரு பெரிய வாய்ப்பு இருக்கிறது உறுப்பினர்களுக்கு. ஆகவே, அரசியல் சட்டத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனி அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால், அதிக நாள் விவாதிக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

லோக் சபா, வருடத்திற்கு மூன்று தடவை கூடுகிறது. ஒரு தடவை கூடினால், 3 மாதம், இன்னொரு தடவை 1½ மாதம், இன்னொரு தடவை 1½ மாதம் என்று பார்லிமெண்ட் கூடுகிறது. வருடத்திற்கு 150 நாள் வருகிறது. இங்கு 50 நாள், 55 நாள் என்ற நிலைதான் இருக்கிறது. ஒரு காலத்திலே 40 நாள் 50 நாள் விவாதம் இருந்தது. கரெக்டாக ஃபிகர் தெரியவில்லை இப்பொழுது விவாதிப்பதைவிட 1½ மடங்கு அதிகமாக இதே மன்றத்தில் விவாதித்திருக்கிறார்கள். ஆகவேதான் இந்த அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்களுக்கும், மற்ற கட்சிகளுக்கும் விஷயங்களை அதிக நாள் விவாதிப்பதற்குத் தயக்கம் காட்டக் கூடாது



1974 ஏப்ரல் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். இதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக்கூடிய முறையிலே வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சட்டமன்றம் கூடும் நாட்கள் ஆண்டுக்காண்டு ஓரளவு அதிகமாகித்தான் வருகிறது. 1962-ம் ஆண்டு 40 நாள் நடந்திருக்கிறது; 1963-லே 51 நாள் நடந்தது; 1967-லே 51 நாள் நடந்தது; சென்ற ஆண்டு 67 நாள் நடந்திருக்கிறது. இந்த ஆண்டு கணக்குப்படி கொஞ்சம் அதிகமாகத்தான் வரும் என்று கருதுகிறேன். இதைவிட அதிகமாக முன்னால் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 1952-லே பார்த்தால், அதிக நாட்கள் இருந்தது. ஆகவே, 1952-க்குப் பிறகு நம்முடைய சட்டமன்றம் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பத்து ஆண்டு கணக்கினை வைத்து, அவை முன்னவர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள், 40-லிருந்து, 60, 65 நாட்கள், என்று. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது, இரண்டு மூன்று மாநிலங்கள் ஒன்றாக இருக்கும்போது, விவாதம் அதிகமாகத் தேவைப்பட்டிருக்கலாம். அப்பொழுது கொஞ்சம் அதிகமாக இருக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எங்கள் நிலை என்னவென்றால் மற்ற மாநிலங்களில் கூட அதிக நாள் கூட்ட வேண்டுமென்பதுதான். இப்பொழுது கேரளாவில் கூட " " Vote on account " எடுத்து இப்பொழுது நீண்ட நாள் விவாதிக்கிறார்கள்.

பொதுவாக உங்களுக்குத் தெரியும். எதிர்கட்சிகள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் பல உறுப்பினர்கள் கூட எத்தனையோ விஷயங்கள் பேச வேண்டுமென்று விரும்பினார்கள் வாய்ப்பு கிடைக்கவில்லை என்று உங்களிடத்தில் நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வருங்காலத்தில் கவனிக்க வேண்டிய விஷயம். அதிக நாள் கூடுவது என்பது நாங்கள் எந்த அளவுக்குக் கடுமையாக விமர்சிக்க விரும்புகிறோமோ, அந்த அளவுக்கு பல விஷயங்களை அதிகாரத்தில் இருப்பதால் முழுமையாக எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்த மன்றம் அதிகமாக உபயோகப்படுத்தவேண்டு

மென்ற நிலையில்தான் உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். நானும் அதை மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

சட்ட மன்றத்தில் சீட்டுகள் சம்பந்தமாக நமது மைலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் 3 பேர் உட்காரக் கூடிய இடத்தில் 5 பேர் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதை பற்றி வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த இடத்தை பொறுத்த வரையில் கொஞ்சம் நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உறுப்பினர் யோசனை சொன்னால் நல்லது. இடம் விஸ்தரிப்பதை எப்படிச் செய்யலாம் என்ற யோசனை சொன்னால் அதை அரசு ஏற்று நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** எங்கள் பக்கத்தில் 1, 2 இடங்கள் காலியாக இருக்கிறது. முன்னாள் அமைச்சர்கள், சபாநாயகர்கள் எல்லாம் வந்து உட்காருவதற்காக இருந்தது. இந்த இடத்தை ஏற்பாடு செய்தால் கொஞ்சம் காலி கிடைக்கும்.

பெண் உறுப்பினர்களுக்கு ஓரமாக சீட் கொடுப்பது நல்லது. ஓரத்தில் வந்து உட்காருவது சௌகர்யமாக இருக்கக்கூடிய நிலையாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று. இந்த இடத்தில் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஒரு தனி ரூம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைப் பல உறுப்பினர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அது அவசியம் கொடுக்க வேண்டியது தான்.

நாங்கள் பல தடவை சண்டை போட்டு 2, 3 வருஷமாக தொடர்ந்து வற்புறுத்தி ஓரளவுக்கு இங்கு உங்களுடைய நிர்வாகத்தில் உள்ள செயலாளர்கள் ஒத்துழைப்பின் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர்கள் பூராவுக்கும் ஒரு ரூம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஓரளவுக்கு வரவேற்கக்கூடியது. என்ன நிலைமை ஏற்படுகிறதென்றால் அங்கே உட்காரும்போது இங்கே நடக்கக் கூடிய பிரசங்கத்தைக் கேட்கலாம். வேறு வேலை செய்வதற்கு முடியவில்லை.



ஆகவே ஒரு டைப்பிஸ்ட்—ஆண் டைப்பிஸ்டாக இருந்தால் நல்லது, என் அபிப்பிராயம் (சிரிப்பு)—ஒரு அட்டெண்டண்ட் இருந்தால் நாங்கள் அதிகாலையில் செய்யக் கூடிய வேலைகளை உடனடியாகச் செய்ய முடியும். நானும், திரு. மாரிமுத்துவும் கொண்டு வரக் கூடிய ஒத்திவைப்பு பிரேரணையை கையால் எழுதிக் கொடுக்கிறோம். இது முடியாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ஏற்பாட்டைச் செய்யலாம். இது எல்லா சட்டமன்றத்திலும் செய்கிறார்கள். அதைக் கொஞ்சம் செய்ய வேண்டும். நினைத்தவுடன் உத்தரவு போட்டால் கிடைக்கக்கூடிய விஷயம்.

அதே மாதிரி இந்த லாபியைப் பொறுத்த வரையில் எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் பின்னால் இருக்கிறோம். இந்த லாபி சரியாக இல்லை என்பது என் அபிப்பிராயம். எங்கள் லாபி is more or less a thoroughfare. அதற்கு பின்னால் போவதற்கு பதிலாக இந்தப் பக்கம் போனால் நல்லது என்று சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இந்த லாபியைக் கொஞ்சம் பின்னால் பிளாக பண்ணி காலி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால் லாபி என்ற முறையில் உட்கார்ந்து பேசுவதற்கு உதவிகரமாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பாஸை பொறுத்த வரையில் சில சமயத்தில் நம்முடைய உறுப்பினர்களுக்கு பொதுவாக அமைச்சர்கள் இந்த பாஸை அதிகமாக வாங்குவது என்பது நீங்கள், என்குரோச் பண்ணக் கூடியது என்று சொல்கிறேன். அவர்களுக்கு பல வசதிகள் இருக்கின்றன. அதை ஏற்கனவே திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் 1½ மணி, 1 மணி நேரம் உட்காருவதற்கு பதிலாக ரூமில் உட்கார்ந்து கேட்கலாம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லவில்லை. அவர்களைவிட உறுப்பினர்களைத் தேடிப் பல பேர் வருகிறார்கள். அப்படி வரக் கூடியவர்களுக்கு வந்தவுடனே பாஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். அந்த உறுப்பினர்களே பாஸ் கொடுக்கலாம் என்ற நிலையை ஏற்பாடு செய்யலாம் என்ற அந்த உத்தரவாதத்தை வைக்கலாம்.

திரு. கோபால் அவர்கள் அவருடைய அப்ளிகேஷனை வைத்துக் கொண்டு அங்கே இருக்கக் கூடிய உறுப்பினர்களையெல்லாம் தேடிக் கொண்டு வருகிறார்கள். அவரைத் தேடி 4 பேர்

வந்தால் 3 எம்.எல்.ஏக்களை தேடிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே பாஸ் விஷயத்தில் இன்னும் கொஞ்சம் அதிகம் டிஸ்கிரிஷன் உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நமக்கு கேள்விகள் எல்லாம் கொடுக்கிருர்கள். கேள்விகளை எல்லாம் சைக்கிளோஸ்டைல் பண்ணிக் கொடுப்பது மாதிரி பிரிண்ட் பண்ணிக் கொடுக்கலாம். பிரிண்ட் முறை நன்ருக இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்னுலே பூராவும் பிரிண்ட் பண்ணிஞல் அந்தக் கேள்விகளை பாதுகாப்பாக வைப்பதற்கு ஏதுவாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டைப் பண்ணி கொடுக்கும் புரொக்கிராம் சரிவர நடைபெறுவதில்லை. பிரிண்ட் செய்ய வேண்டுமென்ருல் 4, 5 நாளைக்கு முன் கூட்டியே பிரிண்ட் செய்ய வேண்டும். ஆகவே கேள்விகளை அதிகம் ஒத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் கேட்பது என்னவென்ருல் லோக் சபையில் நடக்கக் கூடிய விஷயம் காலிங் அடென்ஷனைப் பார்த்தால் பத்திரிகைகளில் போடுவார்கள், (The Minister was grilled) திணற அடிக்கிருர்கள். அது மாதிரி சில சமயத்தில் மந்திரிகளைத் திணற அடிப்பதற்கு உதவி செய்ய வேண்டும். இப்பொழுது 1 வாரம் கண்டிப்பாக வருவார்கள் என்ற நிலையை ஏற்பாடு செய்வதற்கு உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** திணற அடிக்க வேண்டுமென்ருல் வரும்போது நாங்கள் நிறைய சாப்பிட்டு வர வேண்டும். வரும்போது அதிகம் சாப்பிடாத காரணத்தால் காலை நேரத்தில் திணற அடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அது சபாநாயகரைப் பொறுத்திருக்கிறது. எந்த அமைச்சரையும் தொந்திரவு படுத்த முடியும் ஏனென்ருல் உங்களை எதிர்த்து யாரும் பேச முடியாது, நீங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலையை அவர் தான் பாதுகாக்கிருரே தவிர, உண்மையில் உங்களுக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தை விட இந்த அமைப்பில் சபாநாயகருக்கு அவ்வளவு



அதிகாரம் கொடுத்திருக்கிருர்கள். அந்த அதிகாரத்தில் பெரும் பகுதி எங்கள் பக்கத்திற்கு திருப்ப வேண்டுமென்பது தான் என் நோக்கம்.

பிறகு உறுப்பினர்கள் சம்பந்தமாக ஒன்று இரண்டு விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இப்பொழுது எங்களுக்கெல்லாம் ஹாஸ்டலில் ரூம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியாக வீட்டிலிருப்பவர்களுக்கு ஹாஸ்டலில் ரூம் இல்லாமல் இருக்கலாம். பல உறுப்பினர்கள் ஒரு மாதம் பூராவும் ரூம் எடுத்துக் கொள்ளுகிருேம்.

ரூம் எடுக்கும்போது நல்ல ரூமாக எடுக்க வேண்டுமென்ருல் மாதம் ரூபாய் 60 கொடுக்க வேண்டும். நான்கு மாதத்திற்கு அந்த ரூமை உபயோகப்படுத்த மாட்டோம். அப்படி இருந்தாலும் ரூபாய் 60 கட்ட வேண்டியிருக்கிறது. அதற்கு என்ன செய்யலாம் என்ருல் இப்போது சட்டமன்றம் கூடுகிற நேரத்தில் நமக்கு கட்டணம் கிடையாது. நிரந்தரமாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு ரூம் என்ற முறையில் வைத்து விட்டால் நல்லது. அப்படிச் செய்து இன்றைக்கு இருக்கக் கூடிய ரூபாய் 60-ஐ குறைக்கலாம். 30 ஆக்கலாம். அப்படி ஆக்கி ஒரு ரூம் ஒருவருக்குத் தான் என்ற முறையில் இருக்க வேண்டும். பார்லிமெண்டில் வீடு தனியாக கொடுத்திருக்கிருர்கள். அப்படி இந்த ரூம் இவர்களுக்குச் சொந்தம் என்ற முறையில் கொடுக்கப்பட வேண்டும்.

சில ரூம்களை வருகிற கெஸ்டுகளுக்கு ஏற்பாடு செய்யலாம். அப்போது ரூம்கள் நல்ல முறையில் இருக்கும். ஒரு தடவை ரூமை விட்டுப் போய் இன்னொரு தடவை வேறு ரூமுக்குப் போகும்போது வேருகப் போய் விடுகிறது. இவர் கவனித்து வைத்திருப்பார். பொதுவாக உங்களுக்குத் தெரியும். ஒரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை வீட்டை மாற்றிஞல் என்ன நிலைமை ஏற்படும் என்று தெரியும். ஆகவே நிரந்தரமாக ரூம் இருக்க வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றி கேட்டோம். பழைய ஹாஸ்டலுக்கு வருவீர்களாஞல் காங்கிரஸ் ஆபீஸ் இருக்கிறது, சுதந்திராக் கட்சி ஆபீஸ் இருக்கிறது, கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸ், பார்வேர்டு பிளாக் கட்சி ஆபீஸ் ஒரு இடத்தில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 8

இருக்கிறது. எங்களுக்கு டெலிபோன் வந்தால் இங்கிருந்து போக வேண்டியிருக்கிறது. எக்ஸ்டென்ஷன் அந்த நாலுக்கும் கொடுக்க வேண்டும். ஸ்தாபன காங்கிரஸ் ஆபீசுக்கு அவர்களுக்கு தனியாக டெலிபோன் வைத்திருக்கிறார்கள். அதே மாதிரி திராவிட முன்னேற்ற கழகம் அவர்கள் தனியாக டெலிபோன் வைத்திருக்கிறார்கள். எங்களுக்கெல்லாம் தனியாக டெலிபோன் வைக்கக் கூடிய அளவுக்கு பொருளாதார வசதியில்லை. அந்த நிலையில் நாங்கள் அங்கிருந்து பேசுவதற்கு அந்த எக்ஸ்டென்ஷன் கொடுக்க வேண்டும் என்று இன்றைக்கு உங்கள் மூலம் வற்புறுத்தி நான் கேட்டுக் கொள்கிறேன். பல வேலைகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ரூம்களுக்கு நியூ ஹாஸ்டலில் கொடுத்திருக்கிறார்கள். பழைய ஹாஸ்டலில் கிடையாது. எல்லா ரூம்களுக்கும் போன் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

பஸ் பிரச்னை. மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறேன். எம்.எல்.ஏ.-க்கு என்ற பஸ். அதே நேரத்தில் கெஸ்டுகளுக்கு இன்னொரு பஸ் வரட்டும். எம்.எல்.ஏ. பஸ்களில் பாஸ் ஹோல்டர்ஸ் இருக்க வேண்டும். கண்டக்டர் அதற்கு டிக்கெட் கொடுப்பது என்ற முறை இருக்கக் கூடாது, என்ற வெட்டு பிரோரேணையைப் பார்த்தோம். எப்படி ஒரு நல்ல காரியம் செய்தாலும் கண்டிக்கிறார்கள். அந்த நிலை சரிதான் என்று நினைக்கிறேன். பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் இருக்க வேண்டும். திரு. கந்தப்பன் பார்க்கிறார். அங்கு பார்லிமெண்டில் நம் வீட்டை நோக்கி தனி பஸ் வரும். வேறு யாரும் ஏறக் கூடாது என்ற எண்ணம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதி ஆட்கள் யாரும் வருவதில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கோளத்தில் யாரும் ஏறுவது கிடையாது. வர வேண்டாம் என்று சொல்லவில்லை. கெஸ்டுகள் வருவதற்கு தனியாக ஒரு ஏற்பாடு இருக்க வேண்டும், என்று அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த செஷன் நடக்கக்கூடிய காலத்தில் அந்த பஸ் தனியாக வரட்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1974 ஏப்ரல் 8]

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைத் தனியாக ஒரு கிளாசாக ஆக்கிவிடக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

When we want to create a classless society, why should we have a separate bus for M.L.As. only?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ஜாதி ஒழிப்பு வேண்டுமென்று சொல்லிக்கொண்டே பலபேர் ஜாதிகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எம்.எல்.ஏ. ஜாதி என்று வைத்துக் கொள்ளுங்களேன். அந்த எம்.எல்.ஏ. ஜாதியாக நான் பேசுகிறேன். எம்.எல்.ஏ. யாரைக் கண்டித்தாலும் எனக்குக் கோபம் தான்.

**திரு. நா. வீராசாமி:** ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களைக் கண்டித்தால் கோபம் வரமாட்டேன் என்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் சேர்த்துதான் சொல்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** லைப்ரரியில் அதிகப் புத்தகங்களை வைக்க வேண்டும்.

நியூ ஹாஸ்டலில் ஒரு லைப்ரரி இருக்கிறது. யாருமே அந்த லைப்ரரிக்குப் போவதில்லை, அதை உபயோகப்படுத்திக் கொள்வதில்லை, என்று எம்.எல்.ஏ.-க்களைப் பற்றிக் குறைத்துப் பேசும் விதத்தில் ஒரு பத்திரிகையில் வந்திருக்கிறது.

அந்த லைப்ரரியில் தினசரிப் பத்திரிகைகள்தான் வருகின்றன. தினசரிப் பத்திரிகைகள் ஒவ்வொரு ரூமிற்கும் வருகின்றன. எனவே, அந்த லைப்ரரியில் போய் படிக்க வேண்டுமென்றால் அங்கே பல மாகஸின்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருந்தால் போய் படிப்பார்கள். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரீடிங் ரூம் என்று வைத்துப் தினசரிப் பத்திரிகைகள் மட்டும் வருவதால், அங்கே ஆட்கள் வரவில்லை என்று பத்திரிகையில் நம்மைக் குற்றம் சொல்லும் முறையில் இருக்கிறது. அந்த இடத்தில் நல்ல மாகஸின் வரும் நிலைமைகளை உண்டாக்க வேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 8

கடைசியாக, இந்த அதிகாரிகள் சம்பந்தமாக 1971-லேயே பேசினேன். நாடாளுமன்றத்தில் இருந்த என்னுடைய அனுபவம் என்னவென்றால் அங்கேயுள்ள அதிகாரிகள் பூராவும் சபாநாயகரின் கண்ட்ரோலில் இருக்கிறார்கள். அங்குள்ள செக்ரட்டரிக்கும் கவர்ன்மெண்டுக்கும் சம்பந்தமில்லை. கவர்ன்மெண்ட் செக்ரட்டரிக்கு உள்ள கிரேடில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வசதிகளைச் செய்ய வேண்டுமென்றாலும் உங்களைப் பொறுத்துத்தான் என்று வைத்திருக்கிறார்கள். அதைப் படிப் படியாகத் தாங்கள் கொண்டு வரவேண்டும்.

இதே மன்றத்தில் பல செயலாளர்கள் இருந்து நல்ல பெயரைப் பெற்றிருக்கிறார்கள். மைசூரிலே செயலாளராக இருப்பவர் கூட இங்கே நல்ல முறையில் செயலாளராகப் பணியாற்றியவர் தான்.

சாதாரணமாக என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய ஸ்டாஃப் எஃபிஷியன்ட் ஸ்டாஃப் என்றுதான் சொல்வேன். சில குவாலிஃபிகேஷன்ஸ், டிஸ்குவாலிஃபிகேஷன்ஸ் வைத்திருக்கிறார்கள். ஒருவர் நல்ல சர்விஸ் செய்திருந்தால் அசிஸ்டெண்ட் செக்ரட்டரி, டெப்டி செக்ரட்டரி, செக்ரட்டரி என்று அவரைக் கொண்டுவர வேண்டுமே தவிர ஏதாவது ஒரு குவாலிஃபிகேஷனை வைக்கக்கூடாது.

டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் இல்லாமல் இங்கிருப்பவர்களே ப்ரமோஷனில் வர வேண்டும். ஏனென்றால் அவர்கள் வாழ்க்கை பூராவையும் இங்கே அர்ப்பணித்து இருப்பவர்கள். எனவே, இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வாட்ச் அண்ட் வார்டைப் பொறுத்தவரையில் குறைந்த டெய்லி அலவன்ஸ் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுக்குக் குறைந்தது 4 ரூபாயாவது கொடுக்க வேண்டும். தற்காலிகமாக அடிக்கடி வரக் கூடியவர்களை நிரந்தரமாக ஆக்கலாம்.

நான் ஆரம்பத்திலே சொன்னது மாதிரி நேரிடையாக உங்களுக்கு விடும் வேண்டுகோள்; ஆனால் உங்களால் பேச முடியாது என்பதால் நீங்கள் சபை முன்னவர் மூலம் பேசுகிறீர்கள். சில குறிப்பிட்ட விஷயங்களை வெட்டுப் பிரேரணைகளின்



1974 ஏப்ரல் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மூலமாகப் பேசுவதின் மூலம் அதில் வரும் விஷயங்களைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து நல்லமுறையில் நடக்கவும், உறுப்பினர்கள் எல்லோருக்கும் வசதி வாய்ப்புகள் இருக்கும் முறையிலும் அவருடைய பதிலும் ஒப்புதலும் இருக்க நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கோவை செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த ஒரு மானியத்திலேதான் ஆளுங் கட்சிக்காரர்களாகட்டும், எதிர்க் கட்சிக்காரர்களாகட்டும் ஏறத்தாழ ஒரே கருத்துக்களைச் சொல்கிறார்கள். இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலே கருத்து மாறுபாடு வருவதில்லை. அப்படி மாறுபட்ட ஓரிரு கருத்துக்களைச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமானால் சபாநாயகரவர்கள் பெரிய மனசு வைத்து அதற்கு இடம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் இங்கே வசதிக்காக ஒவ்வொரு கட்சியின் பெயரை வைத்துக் கொண்டாலும் சட்டப்படி எல்லோரும் எம்.எல்.ஏக்கள்தான், சட்டமன்ற உறுப்பினர்கள்தான். அதிலே ஒன்றும் வெளியிலே மாறுபாடு கிடையாது. ஆனால் ஒரு இயக்கத்திலேயிருந்து இன்னொரு இயக்கத்திற்கு வருகிறார்கள் என்றவுடன் அவருக்குப் பல சலுகைகள் மறுக்கப்படுகின்றன. அத்தகைய நிலையில் ஒரு பாதுகாப்பை பேரவைத் தலைவரவர்கள் முன்னாலிருந்து செய்து தரவேண்டும்.

இப்பொழுது என்னைப் பொறுத்தவரையில் நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். இதனால் என்னுடைய தொகுதியிலே பலவகையான பணிகள், பலவகையான உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவுடனேயே என்னுடைய தொகுதியிலே இருந்த போலீஸ்காரர்களையும், அதிகாரிகளையும் மற்ற அரசாங்க அலு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 8

கடைசியாக, இந்த அதிகாரிகள் சம்பந்தமாக 1971-லேயே பேசினேன். நாடாளுமன்றத்தில் இருந்த என்னுடைய அனுபவம் என்னவென்றால் அங்கேயுள்ள அதிகாரிகள் பூராவும் சபாநாயகரின் கண்ட்ரோலில் இருக்கிறார்கள். அங்குள்ள செக்ரட்டரிக்கும் கவர்ன்மெண்டுக்கும் சம்பந்தமில்லை. கவர்ன்மெண்ட் செக்ரட்டரிக்கு என்ன கிரேடில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வசதிகளைச் செய்ய வேண்டுமென்றாலும் உங்களைப் பொறுத்துத்தான் என்று வைத்திருக்கிறார்கள். அதைப் படிப் படியாகத் தாங்கள் கொண்டு வரவேண்டும்.

இதே மன்றத்தில் பல செயலாளர்கள் இருந்து நல்ல பெயரைப் பெற்றிருக்கிறார்கள். மைசூரிலே செயலாளராக இருப்பவர் கூட இங்கே நல்ல முறையில் செயலாளராகப் பணியாற்றியவர்தான்.

சாதாரணமாக என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய ஸ்டாஃப் எஃபிஷியன்ட் ஸ்டாஃப் என்றுதான் சொல்வேன். சில குவாலிஃபிகேஷன்ஸ், டிஸ்குவாலிஃபிகேஷன்ஸ் வைத்திருக் கிறார்கள். ஒருவர் நல்ல சர்விஸ் செய்திருந்தால் அசிஸ்டெண்ட் செக்ரட்டரி, டெப்டி செக்ரட்டரி, செக்ரட்டரி என்று அவரைக் கொண்டுவர வேண்டுமே தவிர ஏதாவது ஒரு குவாலிஃபிகேஷனை வைக்கக்கூடாது.

டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் இல்லாமல் இங்கிருப்பவர்களே ப்ரமோஷனில் வர வேண்டும். ஏனென்றால் அவர்கள் வாழ்க்கை பூராவையும் இங்கே அர்ப்பணித்து இருப்பவர்கள். எனவே, இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து வாட்ச் அண்ட் வார்டைப் பொறுத்தவரையில் குறைந்த டெய்லி அலவன்ஸ் இருப்பதாகச் சொல்லப்படுகிறது அவர்களுக்குக் குறைந்தது 4 ரூபாயாவது கொடுக்க வேண்டு தற்காலிகமாக அடிக்கடி வரக் கூடியவர்களை நிரந்தரமா ஆக்கலாம்.

நான் ஆரம்பத்திலே சொன்னது மாதிரி நேரிடையா உங்களுக்கு விடும் வேண்டுகோள்; ஆனால் உங்களால் பே முடியாது என்பதால் நீங்கள் சபை முன்னவர் மூலம் பேசுகிறீ கள். சில குறிப்பிட்ட விஷயங்களை வெட்டுப் பிரேரணைகளி



1974 ஏப்ரல் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மூலமாகப் பேசுவதின் மூலம் அதில் வரும் விஷயங்களைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து நல்லமுறையில் நடக்கவும், உறுப்பினர்கள் எல்லோருக்கும் வசதி வாய்ப்புகள் இருக்கும் முறையிலும் அவருடைய பதிலும் ஒப்புதலும் இருக்க நீங்கள் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கோவை செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த ஒரு மானியத்திலேதான் ஆளுங் கட்சிக்காரர்களாகட்டும், எதிர்க் கட்சிக்காரர்களாகட்டும் ஏறத்தாழ ஒரே கருத்துக்களைச் சொல்கிறார்கள். இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலே கருத்து மாறுபாடு வருவதில்லை. அப்படி மாறுபட்ட ஓரிரு கருத்துக்களைச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் வருமானால் சபாநாயகரவர்கள் பெரிய மனசு வைத்து அதற்கு இடம் தா வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் இங்கே வசதிக்காக ஒவ்வொரு கட்சியின் பெயரை வைத்துக் கொண்டாலும் சட்டப்படி எல்லோரும் எம்.எல்.எக்கள்தான், சட்டமன்ற உறுப்பினர்கள்தான். அதிலே ஒன்றும் வெளியிலே மாறுபாடு கிடையாது. ஆனால் ஒரு இயக்கத்திலேயிருந்து இன்னொரு இயக்கத்திற்கு வருகிறார்கள் என்றவுடன் அவருக்குப் பல சலுகைகள் மறுக்கப்படுகின்றன. அத்தகைய நிலையில் ஒரு பாதுகாப்பை பேரவைத் தலைவரவர்கள் முன்னாலிருந்து செய்து தரவேண்டும்.

இப்பொழுது என்னைப் பொறுத்தவரையில் நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். இதனால் என்னுடைய தொகுதியிலே பலவகையான பணிகள், பலவகையான உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவுடனேயே என்னுடைய தொகுதியிலே இருந்த போலீஸ்காரர்களையும், அதிகாரிகளையும் மற்ற அரசாங்க அலு

வலர்களையும் உடனடியாக மாற்றி விட்டார்கள். என்னுடைய தொகுதிக்கு நல்ல அதிகாரிகள் தேவை என்று முதலமைச்சருக்கு வேண்டுகோள் விட்டு அந்த அதிகாரிகளைப் போட்டார்கள். ஆனால் ஒரு மாத காலத்திற்குள்ளாக அவர்களையெல்லாம் மாற்றிவிட்டார்கள். இப்பொழுது அந்தத் தொகுதியினுடைய நிலைமை என்னவென்றால் நான் எம்.எல்.ஏ. என்ற முறையில் எந்த அதிகாரியிடத்திலே போய் ஒரு குறையைச் சொன்னாலும் அது எடுபடுவதில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** கனம் அருமை நண்பர் திரு. கோவை செழியன் அவர்கள் அவருக்கு வேண்டிய அதிகாரியாக அவருடைய தொகுதியிலே போட்டேன் என்று சொல்கிறார்கள். அவர் முன்னதாக திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கும் சமயத்தில் அவர் முதலமைச்சரிடம் சொல்லி, தனக்கு யார் சாதகமாக இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் போட்டிருக்கிறேன் என்று . . .

**திரு. கோவை செழியன்:** நல்ல அதிகாரிகள் என்றுதான் சொன்னேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** நல்ல அதிகாரிகளைப் போட்டேன் என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போனதற்குப் பிறகு அந்த நல்ல அதிகாரிகளை அவர்களுடைய கட்சிக்காகப் பயன்படுத்தி விடுவார்களோ என்று கருதித்தான் வேறு அதிகாரிகளைப் போட்டிருக்கலாம், இதில் என்ன தவறு ?

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, நான் ஒன்றைச் சொல்கிறேன். அவர்கள் சம்பந்தமில்லாமல் வேறு ஏதோ ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்த காலத்தில் என்னுடைய தொகுதியில் நல்ல அதிகாரிகள் தேவை என்று சொல்லி அப்பொழுது அவர்கள் போட்டுக் கொடுத்தார்கள், அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு மாத காலத்திற்குள்ளாக அவர்களை மாற்றிவிட்டார்கள்.



அதுமட்டுமல்ல, நல்ல அதிகாரிகள் வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர இன்ன அதிகாரிதான் வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களை மாற்றிவிட்டார்கள். இப்பொழுது என்ன நிலைமை என்னவென்றால் எந்த இடத்திலே போய் நான் சொன்னாலும் நான் சொல்வது எடுபடுவதில்லை.

என்னுடைய தொகுதிக்குப் பக்கத்துத் தொகுதி தி. மு. க. எம். எல். ஏ. சொன்னால்தான் காரியம் நடைபெறுகிறது. காரணம் என்னவென்றால் என்னுடைய தொகுதியில் சில அமைச்சர்கள் வந்து பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள், உங்களுக்கு எம்.எல்.ஏ. போய்விட்டார், இன்னொரு ஆள்தான், இன்னார்தான் உங்களுக்கு என்று குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இன்னமும் நான்தானே அந்த தொகுதி எம். எல். ஏ. அதிகாரிகள் அவர்கள் சொன்னால்தான் கேட்கிறார்களே தவிர நான் சொன்னால் கேட்பதில்லை. ஒருவேளை இவைகளெல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்கு வருகிறதோ இல்லையோ தெரியவில்லை. நான் அவரைக் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் சில ஜூனியர் அமைச்சர்கள், குட்டி அமைச்சர்கள் செய்யும் காரியங்களால் உங்களுக்குக் கெட்ட பெயர் வருகிறது. எனவே அந்த அமைச்சர்கள் மேல் ஒரு கண் வைத்துக் கொள்ளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** குட்டி அமைச்சர் என்று சொல்லலாமா ?

**திரு. நா. வீராசாமி :** குட்டியமைச்சர் என்று சொல்கிறாரே.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, குட்டி அமைச்சர்கள் என்று யாராவது அமைச்சர்கள் இருக்கிறார்களா என்பதை இந்த மன்றத்தில் விளக்கவேண்டும்.

**திரு. கோவை செழியன் :** ஜூனியர் அமைச்சர் என்பதற்குத் தமிழில் அப்படிச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குட்டியமைச்சர் என்று சொன்னதைத் திரும்ப பெற்று விடுங்கள்.

**திரு கோவை செழியன் :** திரும்ப பெற்றுக் கொள்கிறேன். அதற்கு என்ன தமிழ் என்று நீங்களே சொல்லுங்கள்.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இளைய அமைச்சர்கள் என்று சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன் :** இளைய அமைச்சர்கள்—வயதிலே சொல்லவில்லை, ரேங்க்படி சொல்கிறேன்—என்னுடைய தொகுதியிலே வந்து இப்படிச் செய்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதால் இந்த உரிமைகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன. உங்கள் மூலமாக முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இந்த முறையில் எதிர்கட்சிகளை வைக்கக்கூடாது. ஏனென்றால் நீங்கள் ஒருகால் எதிர்க்கட்சியாக வரலாம், நாங்கள் ஆளுங்கட்சியாகப் போகலாம். அப்பொழுது உங்களுக்கு இந்தத் தொல்லைகள் வரக்கூடாது என்று உங்களுக்குப் பாதுகாப்பிற்காகத் தான் சொல்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** இப்பொழுதே வந்து விடலாம் ஆளுங்கட்சிக்கு.

**திரு. கோவை செழியன் :** இத்தகைய இடைஞ்சல்களெல்லாம் ஒரு தொகுதியிலேயிருக்கும் எம். எல். ஏக்கு வராமல் பாதுகாப்புத் தர வேண்டும்.

நல்ல காரியங்களைச் சொல்கிறோம். என்னுடைய தொகுதியில் ஒரு ஊரில் ரோடு போட்டார்கள். நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்ததும் இந்த ரோடு வேலை நின்று விட்டது.

அதேபோல் அணை கட்டினார்கள். ஒரு இடத்திலே அணை கட்ட வேண்டுமென்று சொல்லி முன்னாள் பி. டபிள்யூ. டி. அமைச்சரும் இன்றைய ரெவின்யூ அமைச்சருமான திரு. சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரியும். அப்பொழுது கட்ட வேண்டிய இடத்தைச் சொன்னேன். இப்பொழுது தொகுதியையே மாற்றி விட்டார்கள்.

நான் இப்பொழுது பி. டபிள்யூ. டி. அமைச்சராக உள்ள மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களிடத்திலே கேட்டிருக்கிறேன். அவர்கள் நல்ல காரியம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.



1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் என்னிடத்திலே பேசினார்கள். அதைப்பற்றி நானும் விசாரித்தேன். அவர்கள் முறையிட்டுக் கொண்ட விவரத்தைச் சொல்லி அதைப்பற்றிப் பேசினோம். ஃபைலைப் பார்க்கும் நேரத்தில் ஏற்கனவே எந்த இடத்தில் போடுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்ததோ அந்த இடத்திலேதான் போடுவதாகச் சொன்னார்கள்.

**திரு. கோவை செழியன் :** அந்தப் பிரச்சனையை விட்டு விடுகிறேன். முன்னாள் பி. டபிள்யூ. டி. அமைச்சர் அவர்கள் கலந்தாலோசித்து நல்ல முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

தொகுதிக்கு அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால், அதிகார பூர்வமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்றால் அந்தத் தொகுதி உறுப்பினர் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் அவர் இல்லாமல் அதை நடத்தக்கூடாது என்ற முறையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் செழியன் அவர்கள் பேசுகின்ற இந்தக் கருத்துக்கள் அனைத்தும் 'ஹெட் ஆப் ஸ்டேட்—மினிஸ்டர்ஸ்' என்ற மானியத்தில் பேசப்பட வேண்டிய கருத்துக்கள். சட்டசபையைப் பொறுத்தவரை திரு. கே. டி. கே. அவர்கள் இந்த வட்டத்திற்குள் இருந்து பேசியதைப் போல் கருத்துக்களைச் சொல்லவேண்டும். அன்று பேசத் தவறி விட்டுப் பிறகு பேசுவது சரியல்ல. அவை முன்னவருக்குப் பதிலாக நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடும்.

**திரு. கோவை செழியன் :** உறுப்பினர்கள் உரிமை பற்றிய பிரச்சனை. வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, பேச வேண்டிய நிலைமை வந்தது. இது ஜனநாயக நாடு. உலகம் பூராவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நாடு ஆளப்படுகிறது, நிர்வகிக்கப்படுகிறது. அந்த நிலையில் பிரிட்டிஷ்காரர்கள் பழைய முறைப்படி Legislative Council கவுன்சில்கள் இருக்கின்றன. கவுன்சில்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாத அமைப்பாகும். அதை ஒழிக்கக் கட்ட வேண்டும் இந்தியாவில்

[திரு. கோவை செழியன்] [1974 ஏப்ரல் 8

பல மாநிலங்களில் இருக்கின்றன. ராஜ்ய சபாவும் இருக்கிறது. அதைப்பற்றி இங்கே பேசுவதற்கு உரிமை இல்லை. ஆகவே, அதை விட்டு விடுகிறேன். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுவும் ஓர் அவை. அந்த அவையைப் பற்றி விமர்சிப்பது நல்லதல்ல. கருத்தைச் சொல்லுங்கள். வேண்டாம் என்ற அளவில் சொல்லுங்கள். * *

என்ற முறையில் பேசுவது முறையல்ல. இங்கே அவர்களைப்பற்றி விமர்சித்து அவர்கள் நம்மைப் பற்றி விமர்சிக்கும் நிலை ஏற்பட்டால் அது நல்ல முறையல்ல. ஆகவே, செழியன் அவர்கள் அந்த அவையைப் பற்றிக் குறிப்பிட்ட சொற்களை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மேலவை இருக்கலாமா வேண்டாமா என்ற கருத்தைச் சொல்லலாம். அந்த உறுப்பினர்களைப்பற்றிய கருத்துக்களை மட்டும் சொல்லக்கூடாது.

**திரு. கோவை செழியன் :** மேலவை என்பது கூடாது என்பது என்னுடைய கருத்து. அதைத் தயவு செய்து நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து அழித்து விடாதீர்கள். ஜனநாயக நாட்டில் இத்தகைய முறைகள் கூடாது. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் இரண்டு முறை பரிசீலிக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அது தேவையில்லை. நாம் குழந்தைகள் அல்ல. வயது வந்தவர்கள்தான். நமக்கும் மெச்சூரிட்டி இருக்கிறது. இங்கு நிறைவேற்றப்பட்டவை முடிந்த முடிவாக இருக்க வேண்டும். கவுன்சில் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

சில சிறிய கோரிக்கைகளை இந்த மானியத்திலே சொல்ல விரும்புகிறேன். நிறையக் கேள்விகள் போட்டேன். 100, 150 கேள்விகளுக்கு மேல் போட்டேன். 3 கேள்விகளை மட்டும் தான் அனுமதித்திருக்கிறார்கள். நான் கேட்ட கேள்விகள் அரசாங்க நிர்வாகத்தைப்பற்றிய நியாயமான கேள்விகள். நீண்டகாலமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. இனிமேலாவது அத்தகைய நிலைமை வரக் கூடாது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சில கேள்விகள் மறுக்கப்பட்டிருக்கும். மறுக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் வந்திருக்கும். மறுக்கப்படாமல் இருக்கிற கேள்விகள் துறைக்குப் போயிருக்கும். விடை கிடைத்தவுடன் அவைக்குக் கொடுக்கப்படும்.

**திரு. கோவை செழியன் :** நீண்ட நாட்களாகப் பதில் வராமல் இருக்கிறது.

கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜர்ன்மென்ட் மோஷன்கள் கொடுக்கிறோம். நாட்டுக்குத் தேவையான காரியங்கள் பற்றிக் கொடுக்கிறோம். தயவு செய்து தாங்கள் அவற்றை அனுமதிக்க வேண்டும். அனுமதிக்காவிட்டாலும் பரவாயில்லை, என்ன தீர்மானங்கள் கொடுத்தோம் என்று இந்த மன்றத்தில் வாசித்து, இன்ன இன்ன காரணங்களுக்காக அனுமதிக்கவில்லை என்று சொல்லிவிட்டால் நாங்கள் எங்கள் கடமையைச் செய்தோம் என்பதை மக்கள் புரிந்து கொள்ளுவார்கள்.

எம்.எல்.ஏ.க்களுக்கு என்னென்ன வசதிகள் தேவை என்று எல்லோரும் சொன்னார்கள். அதிலே எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரே கருத்துத்தான். தருகிற சம்பளம், அலவன்ஸ் போதவில்லை. எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலபேர் பேச முடியாதவர்கள் என்னிடம் வந்து இந்தக் கருத்தைச் சொல்லச் சொன்னார்கள்.

என்னுடைய கருத்து ரூ. 250 ப்ளஸ் 100 ரூபாய் நிச்சயம் போதவில்லை. தினப்படி 35 ரூபாய் தருகிறார்கள். டாக்சிக்கே 35 ரூபாய் போய்விடுகிறது. அதற்கு மேல் வரும் செலவுகளுக்குத் தர்ம சங்கடமாக இருக்கிறது. ஓரளவு வசதியுள்ளவர்கள் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம். வசதி இல்லாதவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. சம்பளத்தை இன்னும் 200 ரூபாய் உயர்த்தலாம். எல்லோர் சார்பிலும் சொல்லுகிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு நிறையக் கடிதங்கள் வருகின்றன. கிளார்க் டைப்பிஸ்ட் தேவை. மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி ஒரு ஆண் டைப்பிஸ்ட் வேண்டுமென்று சொன்னார்கள். என்னைப்

பொறுத்தவரை எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. டைப்பிஸ்ட் தேவை, அவ்வளவுதான், இப்போது பல கடிதங்களுக்குப் பதில் எழுத முடியாத நிலைமை இருக்கிறது.

நிறைய ஃபோன் செய்ய வேண்டியிருக்கிறது. பல ஆபீசர்களுக்கு போன் செய்யவேண்டியிருப்பதால் தலைநகரிலும் தொகுதியிலும் ஒரு போன் பொறுத்தும் முழுச் செலவையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ட்ரெயின் பாஸ் இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வருஷமும் சொல்லிக் கொண்டு வருகிறேன். தொகுதியிலிருந்து சென்னைக்குக் கொடுத்தால் போதும். எம்.பி.க்களுககுக் கொடுத்திருப்பது போல் தேவையில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கொடுக்கவேண்டும். இந்த ஆண்டு நிச்சயமாக அதைப் பற்றி அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். இதனால் பெரிய செலவு வந்து விடாது. ஏழை எம்.எல்.ஏ.க்களுக்கு வசதியாக இருக்கும்.

ஏற்கனவே சொன்னார்கள்—ஸ்கூட்டர் தரவேண்டுமென்று. பெட்ரோல் விற்கும் விலையில் காரை விற்று விட வேண்டியதுதான். மாண்புமிகு டிரான்ஸ்போர்ட் மினிஸ்டரைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எம்.எல்.ஏ.க்கள் ஒவ்வொருவருக்கும் டீசல் எஞ்சின் தரச் சொல்லுங்கள். பணம் கொடுத்து விடுகிறோம். கார் இல்லாதவர்களுக்கு ஸ்கூட்டர் அலாட் பண்ணச் சொல்லுங்கள். வசதியாக இருக்கும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** குதிரை கொடுக்கச் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன் :** உங்களுக்கு வேண்டுமானால் குதிரை வண்டி வாங்கித் தரச் சொல்லுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குக் குதிரையேறிப் பழக்கம் போல் இருக்கிறது. குதிரையைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** மாதத்திற்கு ஒரு முறை தொகுதி மக்களைப் பார்க்கப் போவதற்கு வாகனம் இல்லை. பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை மாதத்திற்கு இரண்டு நாட்கள் தரவேண்டு





மென்று உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் சொல்லுங்கள். அந்த ஜீப்பை பெட்ரோலோடு தரச் சொல்லுங்கள். அப்படி மக்களைப் பார்க்கச் செல்லுகிறபோது யூனியன் அதிகாரிகள், தாசில்தார்கள், எலக்ட்ரிசிடி போர்டு அதிகாரிகள் ஆகியவர்களைக் கூட வரச் சொல்லுங்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஆபீஸ் தேவை. எல்லோருக்கும் ஆபீஸ் இருக்கிறது. எங்களுக்கு அட்ரசே இல்லாமல் இருக்கிறது. அங்கு ஒரு சிறு அறையை ஒதுக்கச் சொல்லுங்கள். பியூன்கள் கூட வேண்டாம்.

இந்த அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பல பேர் 1966-ல் இருந்து டெம்பரவரியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி லம்ப் அலாட்மெண்டில் வரக்கூடிய பியூன்களை எல்லாம் பர்மனென்ட் செய்யவேண்டும். ஹாஸ்டல் லிப்டில் ஏறும்போது காதைக் கடிக்கிறார்கள், சம்பளம் போதவில்லை என்று. அதைக் கவனிக்கவும்.

போடுகிற அப்பாயின்ட்மென்ட் முழுவதையும் செய்யூர் ஆட்களையே போட்டுவிடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அது உண்மையோ பொய்யோ தெரியவில்லை. அதையும் கொஞ்சம் கவனித்துப் பரவலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** செய்யூர் என்று ஒன்றுமில்லை, செய்யாறு என்றுதான் இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** 'செய்யார்' என்ற நிலைமையில் சொல்லவில்லை. செய்யாறு என்றுதான் சொல்லுகிறேன்.

எம்.பி.-க்கள் அங்கே அதிகாரிகளைப் பார்க்கச் சென்றால் அவர்கள் உடனடியாக வெளியே வந்து அந்த உறுப்பினர்களை அழைத்துச் சென்று மரியாதையோடு நடத்துகிறார்கள். இங்கே எம்.எல்.ஏ.-க்கள் மணிக்கணக்காக காவல்காரனைப்போல் வெளியே உட்கார்ந்து கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அமைச்சர்களுக்கு இதைப் பற்றித் தெரியாது. அவர்கள் கூப்பிட்டால் அதிகாரிகள் வந்து விடுகிறார்கள். அங்கத்தினர்கள் பலர் அதிகாரிகளைப் பார்க்கவே முடியவில்லை.

ஆகவே, அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி எந்த எம்.எல்.ஏ. வந்தாலும், வந்து பார்க்கவிரும்பினால் உடனடியாக அவர்களை வரவழைத்துப் பேசச் சொல்லவேண்டும்; கொஞ்சம் மரியாதையாக நடத்தச் சொல்லுங்கள். பல இடங்களில் அப்படி அதிகாரிகள் நடந்து கொள்வதில்லை.

மெடிக்கல் பெஸிலிட்டீஸ் எங்களுக்குச் செய்து தருகிறீர்கள். ஆனால் அந்த மருத்துவ வசதிகளை எம்.எல்.ஏ.-க்களின் குடும்பங்களுக்கும் அளிக்கவேண்டும். ஜி.எச்.-க்குப் போனால் பல நேரங்களிலும் ரூம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே எம்.எல்.ஏ.-க்களுக்காக ஒரு வார்டையே ஜி.எச்.-ல் ஒதுக்கிவிட வேண்டும். பட் என்று உயிர் போய் விட்டால் பை எலக்‌ஷனுக்குச் செலவாகும். அரசுக்கும் அதனால் செலவு ஏற்படும். ஆகவே ஒரு எமர்ஜன்ஸி வார்ட், நான்கு அறைகளை எம்.எல்.ஏ.-க்களுக்காக ஒதுக்கி வைத்து விடவேண்டும்.

நேரம் போதாததால் முடித்துக்கொள்கிறேன். அவர்கள் குறிப்பிட்டதுமாதிரி பட்ஜெட் செஷனை மூன்று மாதங்களுக்காவது வையுங்கள். பல கருத்துக்களை எங்களால் சொல்ல முடிவதில்லை. எனவே எங்கள் கருத்துக்களைக் கூறுவதற்காக பட்ஜெட் செஷனை கொஞ்சம் அதிக நாட்கள் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. ஓ. என். சுந்தரம்:** சபாநாயகர் அவர்களே, இந்த சட்டசபை மானியத்தின் மீது நான் ஒரு சில கருத்துக்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தங்கமணி அவர்கள் சொல்லிய கருத்துக்களை ஆதரிக்கிற வகையில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சட்டசபை கூட்டத்தைக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது கூட்டவேண்டும். அப்போதுதான் எங்களுக்கு பல கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பாக இருக்கும் என்று நானும் கருதுகிறேன்.

பட்ஜெட் கூட்டம் என்று சொன்னால் குறைந்தபட்சம் ஒரு அறுபது நாட்களுக்கு நடத்தினால்தான் பல கருத்துக்களை எங்களால் சொல்ல முடியும். உங்களுக்குத் தெரியும் சட்டசபையில் எங்களுக்கு ஒரு முறை அல்லது இருமுறைதான் பேச



வாய்ப்பு கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கின்ற வாய்ப்பும் கூட ஐந்து நிமிடங்களில் பேசி முடிக்கவேண்டுமென்று தாங்கள் சொல்கிறபோது எந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டும், எவை எவைகளை விடவேண்டும் என்ற ஒரு குழப்பமான நிலையில் எங்களுக்கு பேசமுடியாமல் போய்விடுகிறது. ஆகவே சட்டசபை பட்ஜட் கூட்டம் அறுபது நாட்கள் நடைபெற வேண்டும், பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு மூன்று மாதங்கள் நடத்துவதற்குண்டான நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சட்டசபை காலை 9 மணிக்கு கூடி 1-30-க்குக் கலைந்து நாங்கள் ஹாஸ்டலுக்குப் போகிறபோது 2-30 மணி ஆகிவிடுகிறது, மதிய சாப்பாடு சாப்பிடும்போது 3-30 மணி ஆகிவிடுகிறது. ஆகவே இந்த நிலையை மாற்றி 1967-க்கு முன்பு இருந்தது மாதிரி சட்டசபையைக் காலையில் 8-30-க்கு ஆரம்பித்து 1 மணிக்கு முடித்துவிட வேண்டும். சட்டசபை நாட்களை அதிகரிக்கிறபோது அரைமணி நேரம் குறைந்தாலும் உறுப்பினர்களுக்கு வசதியாகத்தான் இருக்கும். பொதுவாக என்னைப்போன்று நோய்வாய்ப்பட்டவர்களுக்கு 1-30 மணிக்குள் ஹாஸ்டல் போய் சேர்ந்துவிட முடியும். ஆகவே 1967-க்கு முன்பு இருந்த நிலையில் காலை 8-30 மணிக்கு சட்டசபையை ஆரம்பித்து 1 மணிக்கு முடித்துவிட வேண்டும் என்ற நிலையை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டசபைக்கு வரும்போது கான்டீன் தொலைவில் இருக்கிறது. மதிய நேரத்தில் ஒரு கப் காப்பி அல்லது டீ அல்லது டிபன் சாப்பிட வேண்டுமென்றால், நாம் சொல்லி அவர்கள் வாங்கி வருவது மதியச் சாப்பாடு நேரத்திற்குத்தான் வருகிறார்கள். காரணம் கேட்டால் சொல்கிறார்கள், கான்டீன் தொலைவில் இருக்கிறது என்று. ஆகவே லாபிக்குப் பக்கத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதியான இடத்தில் வெகு விரைவில் கிடைக்கக்கூடிய அளவிற்கு கான்டீனை அமைத்துக் கொடுக்கவும், நல்ல தரமான காபி, டிபன் கிடைக்கவும் வசதி செய்து தரவேண்டும் என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 ஏப்ரல் 8

இடவசதி பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். எப்படியாவது உள்ள இடத்தில் எந்த அளவிற்கு வசதிகளைச் செய்து தர முடியுமோ அந்த அளவிற்கு உறுப்பினர்கள் லாபியில் நல்ல முறையில் உட்காருவதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்களுக்கு வசதி வாய்ப்புகள் என்று சொல்லும்போது பஸ்ஸில் எல்லோருக்கும் அநேகமாகப் போக முடியாது. எனவே ரெயிலில் போக விரும்புகிற உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களுக்கும் போய் வர இரயில்வே பாஸ் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வைத்திய வசதி பற்றி திரு. செழியன் அவர்கள் சொன்னார்கள். ஹாஸ்டல் பக்கத்திலுள்ள மருத்துவ மனைக்குச் சென்றால் எந்த மருந்தும் கிடைப்பதில்லை. சாதாரணமாக ப்ளட். ப்ரஷர், டயபட்டிஸ் போன்ற வியாதிகளுக்கு உடனடியாக மருந்து தேவை என்று சொன்னால் ஜி.எச்.-க்கு போன் செய்து அந்த மருந்துகள் கிடைக்கவில்லை என்று பதில் சொல்கிறார்கள். இதை ஒவ்வொரு முறையும் சொல்லிக்கொண்டிருப்பது சாத்தியமில்லை என்று வெளியில் இருந்து வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே தேவை யான மருந்துகளை உறுப்பினர்களுக்கு அவசியம் கொடுப்பதற் கான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டசபை நடவடிக் கைகளில் சக்தியோடும் ஆரோக்கியத்தோடும் கலந்து கொள்ள முடியும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக, ஹாஸ்டல் வசதிகள் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நியூ ஹாஸ்டல், ஓல்ட் ஹாஸ்டல், E.N.H. ஹாஸ்டல் என்று மூன்று விதங்களில் உள்ளன. ஓல்ட் ஹாஸ்டலிலும், E.N.H. ஹாஸ்டலிலும் போன் வசதி நியூ ஹாஸ்டலில் உள்ளது போல் இல்லை. போன் செய்யவேண்டுமென்றால் சில நேரங்களில் திருப்பதி நேர்த்திக் கடன் போல் இருக்கிறது. போன் செய்வதற்கு மாடியில் இருந்து கீழே இறங்கி வரவேண்டியிருக்கிறது. வெளி ...ர்களில் உள்ளவர்களுக்கு அல்லது உள்ளூரில் இருக்கி...



974 ஏப்ரல் 8] [திரு. ஓ. என். சுந்தரம்]

...ண்பர்களுக்கு அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கு போன் செய்யவேண்டுமென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே ...யூ ஹாஸ்டலில் இருப்பதைப் போன்று—மாற்றான் தாய் மனப் ...ான்மை இல்லாமல்—ஒவ்வொரு ரூமிற்கும் போன் வசதி நிச்சயம் செய்து தரவேண்டுமென்று தங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள் ...கிறேன்.

இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசுவதற்காக ...ற்பட்டிருக்கிற கமிட்டியாகும் ஹௌஸ் கமிட்டி. அப்படி ...ட்டபூர்வமாக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதை ஏட்டளவில் வைத்துக்கொண்டு—அது உதவி சபாநாயகர் அவர்கள் தலைமையில் இயங்கும் கமிட்டி என்று நினைக்கிறேன்—சென்ற ஆண்டு பூராவும் அந்தக் கமிட்டி கூடவே இல்லை. அப்படிக் கூடி இருக்கும் என்று சொன்னால் அந்தக் கமிட்டியில் இப்படிப்பட்ட சின்ன விஷயங்களைப் பற்றி எல்லாம் நாம் பேசி குறைகளை நிவர்த்தி செய்திருக்கலாம். ஆனால் அது கூடவே இல்லை. காரணம் என்ன ...ன்று எனக்குப் புரியவில்லை.

அதேபோல் ஹாஸ்டல் கான்டீனைப் பொறுத்தவரையில் ...ரமான உணவு கொடுக்கப்படுவதில்லை என்ற புகார் எல்லாக் ...ட்சியினராலும் சொல்லப்படுகிறது. காரணம் கேட்கும்போது ...ாடகை அதிகமாக வசூலிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்ற காரணங்களைச் சொல்கிறார்கள். எனவே குறைந்த ...ாடகையை நிர்ணயம் செய்து ஹாஸ்டலில் உள்ள உறுப்பினர் ...ளுக்கு நல்ல தரமான, போஷாக்கான உணவு கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் ஹாஸ்டலுக்கு வந்ததில் இருந்து ...N.H. ஹாஸ்டலில் நான் தங்கி வந்துகொண்டிருக்கிறேன். நான் ...லமுறை எஸ்டேட் ஆபீசரிடம் இந்த விவரங்களை எல்லாம் ...டுத்துக் கூறியிருக்கிறேன். அவர்கள் கவனிக்கிறார்கள் ...ன்றாலும் நியூ ஹாஸ்டலில் உள்ளதைப் போன்ற பரிபூரண வசதிகள் இங்கு இல்லை. பூராவையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே ஒருவரால் செய்ய முடியாத காரணத்தால் அங்கு ஒரு தனி சூப்பரின்டென்டெண்ட், ஒரு தனி கண்காணிப்பாளரைப் போடவேண்டும். வெளியிடங் ...ளில் உள்ள லாட்ஜ்களில் இருப்பதைப் போன்று ஒரு தனி

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 ஏப்ரல் 8

கண்காணிப்பாளரைப் போட்டால் அவர்கள் நன்கு கவனித்து நல்ல முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். (மணியடிக்கப் பட்டது.)

ஒரு ஆண்டில் மூன்று முறைதான் பேசுகிறேன். பட்ஜெட் விவாதத்தின்போது இரண்டு முறையும் மற்ற சமயத்தில் ஒரு முறையும் என்று மூன்று முறைதான் பேசுகிறேன். அதற்காகத் தான் சட்டசபையை, பட்ஜட் கூட்டத்தை அறுபது நாட்கள் வைக்கவேண்டும் என்று சொல்கிறேன். ஒவ்வொரு மானியத் திற்கும் இரண்டு நாட்கள் பரிபூர்ணமாக ஒதுக்கவேண்டும். பெரிய மானியம் என்று சொன்னால் ஐந்து நாட்கள் விவாதம் செய்ய ஒதுக்கப்படவேண்டும். அப்போதுதான் சட்டமன்ற உறுப் பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லமுடியும். இப்போது அந்த வாய்ப்பில்லை.

தொகுதிக்குப் போனால் சட்டமன்ற உறுப்பினர் என்ன செய்கிறார், சுகமாக அங்கே போய் தூங்குகிறார், சீட்டு விளையாடு கிறார் என்று இப்படிச் சொல்லக்கூடிய நிலையை உண்டாக்கி விடுகிறார்கள் சபாநாயகர் அவர்கள். ஆகவே எங்களைப் புறக்கணிக்காமல் நல்ல வாய்ப்புகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை கட்சிக் கண்ணோட்டத்துடன் சொல்லவில்லை. (மணியடிக்கப்பட்டது). 234 உறுப்பினர்கள் சார்பாகச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தில் பார்வையாளர்கள் என்று சொல்லும்போது குன்னக்குடிக்கு காவடி எடுத்தது மாதிரி ஐந்து பேர்கள் தொகுதியில் இருந்து வந்திருக்கிறார்கள் என்றால் ஐந்து எம்.எல்.ஏ.க்களிடம் ரூம் ரூமாகச் செல்ல வேண்டியிருக் கிறது பாஸ் வாங்க. இந்நிலையைத் தவிர்க்க பார்வையாளர்களைத் தாராளமாக அனுமதிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஐந்து அல்லது ஆறு பேர்கள் என்று அனுமதிக்க வேண்டும்.

பத்திரிகையாளர்கள் மத்தியிலும் ஒரு அதிருப்தி இருக்கிறது. ரிப்போர்ட்டர்ஸ்க்கு சரியான இடவசதி இல்லை. அவர்கள் எல்லாம் பார்வையாளர்கள் காலரிக்குப் போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வசதி செய்து தரவேண்டும்.



1974 ஏப்ரல் 8] [திரு. ஓ. என். சுந்தரம்]

பத்திரிகைகள் வாயிலாகத்தான் சட்டமன்ற நடவடிக்கைகள் வெளியேபோகின்றன என்பது தங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதி வசதி என்று சொல்லும்போது சம்பளம் என்று மட்டுமல்ல, மெடிக்கல் வசதிகள், போன் வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளை உறுப்பினர்களுக்கு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறு கிறேன்.

(முற்பகல் 11.00)

*திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே. அவுஸ் கமிட்டி பற்றியும், ஆஸ்டல் பெசிலிட்டீஸ் பற்றியும் மாண்புமிகு உறுப் பினர்கள் சொன்னார்கள். இது நீண்ட நாள் பிரச்னை. என்னால் மட்டுமல்ல, எந்தச் சேர்மன் வந்தாலும் அதை நிவர்த்திக்க முடி யாது. காரணம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் அங்கே தங்கவேண்டும். இன்றைக்கு அங்கே 10 சத விகிதம் எம்.எல்.ஏ. க்கள் இருக்கிறார்க்ள். பொதுமக்கள் பலர் அங்கே தங்கியிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் உள்ள பொதுச் சிக்கல்.

அங்கே ஓட்டல் வசதி சரியல்ல என்று சொல்கிறார்கள். ஓட்டலுக்கு வாடகை கிடையாது. தண்ணீர் வரி கிடையாது. பொதுமக்கள் அதிகமாக வருவதால்தான் எம்.எல்.ஏ.க்கள் சரி யூான வசதி பெற முடியவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கே.டி.கே. தங்கமணி அவர்கள் இந்த சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் குறைந்தது இரண்டு மாதம் நடத்தவேண்டு மென்று சொன்னார்கள். நான் அதை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

பொதுவாக மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால் எந்த மாதிரி நடக்கிறது. கேரள மாநிலத்தைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, ஒவ்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஏப்ரல் 8

வொரு மானியத்தின் மீதும் இரண்டு நாள் விவாதம் வைத்து இருக்கிறார்கள். இங்கே பல தீர்மானங்களை நாம் கொடுக்கிறோம். அந்தத் தீர்மானங்களையெல்லாம் உடனடியாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. காரணம், காலம் குறைவாக இருப்பதுதான். சில அவசியமான, அவசரமான, முக்கியத்துவம் வாய்ந்த காரியங்களைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் நாம் கொடுக்கிறோம். அவசரத் தீர்மானம், அவசியத் தீர்மானம், அதிமுக்கியமான தீர்மானம் என்று கொடுத்தாலும், உடனடியாக அவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படா விட்டாலும் 2 வாரங்கள், 3 வாரங்கள் அதனுடைய நிலை என்ன ஆயிற்று என்று கூடத் தெரியாமல், நாம் மீண்டும் மீண்டும் சென்று கேட்டாலும் அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, பதில் வந்தால்தான் அதை எடுத்துக் கொள்ளமுடியும் என்று சொல்கிறார்களே தவிர, அதற்குரிய பதிலை உடனடியாக பெற்று, அமைச்சரவர்களுக்கு அதன் விளக்கங்களைத் தந்து, அது உடனடியாக சபையில் வைப்பதற்கு, ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். சாதாரண உறுப்பினர்களுக்குக் கஷ்டம் இருக்கலாம், ஒரு விவரம் கேட்டு அறிந்து கொள்வதற்கு. ஒரு அரசுக்கு, ஒரு துறைக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. தொலைபேசி வசதி இருக்கிறது. அதிகாரிகளுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் வசதி இருக்கிறது. ஆகவே, உடனடியாக அதற்குரிய பதிலை, விளக்கங்களைப் பெற்று இந்த அவையில் அதனை வைப்பதற்கு ஏன் தாமதம் ஏற்படுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது தவிர்க்கப்படவேண்டும்.

பல உறுப்பினர்கள் இந்த அவையில் பேச முடியாதநிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் அவர்களுடைய தொகுதி பிரச்னைகளை இந்த அவையில் விவாதிக்கவேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் தீர்மானம் கொடுக்கிறபோது, அந்தத் தொகுதி பிரச்னையிலே உறுப்பினர் அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்று மக்கள் அறியும் வகையில் பத்திரிகைகளுக்குச் செய்தி தரவேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாகச் சொல்லிக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

இங்கே ஒரு கருத்துகூட சொல்லப்பட்டது. ஒத்தி வைப்புத் தீர்மானம், ஏதாவது ஒரு காரணத்தால் அனுமதிக்கப்பட சாத்தியம் இல்லாமல் இருந்தால், அந்தத் தீர்மானத்தை பேரவைத் தலைவர் அவர்கள் அவையில் படித்து விட்டு, இதைத் தள்ளுபடி செய்கிறேன் என்று அறிவித்தாலும், அதை மக்கள் அறிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

தொகுதிகளில், பல தொகுதிகள் பெரிய தொகுதிகளாக இருக்கின்றன. அந்தத் தொகுதிகளில் இருக்கும் பல்வேறு கிராமங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களை மக்கள் அழைக்கிறார்கள். அவர்கள் வரவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். அப்படி விரும்பி அழைக்கின்ற நேரத்தில் கார் வசதி உள்ளவர்கள் செல்லலாம். சில தொகுதிகளில் கார் வைத்து இருந்தால் கூடச் செல்ல முடியாது.

உதாரணமாக, நான் காரில் வாணியம்பாடி நகர்ப் பகுதியிலும், ஆலங்காயம் வரையிலும் செல்லலாம். அதற்குப் பிறகு 50 மைல் மிகவும் காட்டுப்பகுதி. ஜீப்பில்தான் செல்லவேண்டும். கார் வைத்துக்கொள்ளவும் முடியாமல், வேறு வண்டி வசதி இல்லாதவர்கள் தொகுதிகளுக்குச் செல்வது தடங்கலாக இருக்கிறது. ஏற்கனவே ஒரு அரசாங்க ஆணை (ஜி.ஓ.) இருக்கிறது. அந்த ஜி.ஓ. படி ஒன்றியங்களில் இருக்கும் ஜீப்புகளை சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு சில நாட்களுக்குப் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. அந்த ஜி.ஓ.-படி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் அனுப்புங்கள் என்று கேட்டால் ஒன்றியத்தில் பல காரணங்களைச் சொல்லி ஜீப் அனுப்பாமல் இருந்து விடுகிறார்கள். இது வரையில் ஒரு நாள்கூட அந்த ஜீப் எனக்கு என் தொகுதியில் இருக்கிற ஒன்றியத்திலிருந்து அனுப்பவில்லை. ஒரே ஒரு தடவை நாட்றம்பள்ளி ஒன்றியத்திலிருந்து அனுப்பினார்கள். அது என்னுடைய தொகுதியில் இல்லை.

என்னுடைய தொகுதியில் இருக்கும் ஆலங்காயம் ஒன்றியத்தில் ஜீப் இல்லை. என்ன என்று கேட்டால், இரவு நேரத்தில் யாரோ சினிமா பார்க்க எடுத்துக்கொண்டு போனார்களாம். அங்கே ஆக்சிடெண்ட் ஆகிவிட்டது, அதற்குப் பிறகு அது ஒன்றியத்திற்கு [illegible]

வில்லை என்று சொல்கிறார்கள். அந்த ஜீப்புகளைக் குறைந்தது மாதத்தில் 4, 5 நாட்களாவது சட்டமன்ற உறுப்பினர்கள் பயன் படுத்திக்கொள்கிற வகையில் உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரப்பூர்வமாக தொகுதிகளில் சுற்றுப் பயணம் செய்கிறபோது ரெவின்யூ அதிகாரிகள், ஒன்றியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர் களுடன் செல்லவேண்டும். பலவிதமான கோரிக்கைகளை மனுக்களை மக்கள் கொடுக்கிறார்கள். எல்லா மனுக்களையும், கலெக்டருக்கோ, அமைச்சர்களுக்கோ கொண்டு போய் கொடுத்தால் அவர்களால் என்ன செய்யமுடியும்? ஆகவே, கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் அருகிலே இருந்தால் அந்த மனுக்களின் தன்மை அறிந்து உடனுக்குடன் அவற்றைப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, சட்டமன்ற உறுப் பினர்கள் அதிகாரபூர்வமாக சுற்றுப்பயணம் செய்யும்போது, சில அதிகாரிகள் அவர்களுடன் செல்லவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று நான் வலியுத்திக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய உறுப்பினர் விடுதி பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஏனெனில் நான் மிகுந்த தயக்கத்தோடு சில உண்மைகளைச் சொல்கிறேன். இந்த மானியத்தை எதிர்ப்பதா, ஆதரிப்பதா என்ற முறையில்கூட— சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம், மற்ற வசதி இதில் இருந்தாலும்—இதை நான் ஆதரிப்பதா, எதிர்ப்பதா என்ற தயக்கத்தில் இருக்கிறேன். அங்கே சட்டத்திற்குப் புறம்பாக பல காரியங்கள் நடக்கின்றன. அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று உள்ள அறையில் யார் யாரோ இருக்கிறார்கள். எங்களுக்கு வேண்டியவர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். நாங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம் என்ற காரணத்திற்காக எங்கள் அறைகளை எடுத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டு, மற்றவசதிகளையும் அவர்களுக்குக் கொடுத்து விடுவதா? இந்த மன்றம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மானியம் வழங்குகிறதா அல்லது மற்றவர்களுக்கு மானியம் வழங்குகிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மன்ற உறுப்பினர்களுக்கு மானியம்





வழங்கும்போது மற்றவர்கள் அந்த வசதியைப் பெறுகிறார்கள் என்றால் அது சட்டத்திற்குப் புறம்பானது. அந்தக் காரியம் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதை நினைத்துப் பார்க்கிறபோது இந்த மானியத்தை எதிர்க்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி எப்படியிருக்க வேண்டும். உறுப்பினர்கள் விடுதி கௌரவத்திற்கும், கண்ணியத்திற்கும் உறை விடமாக இருக்கவேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கௌரவமாக இருக்கிறார்கள், உயர்ந்த சிறப்புமிக்கப் பண்புடையவர்களாக, ஒழுக்கமுடையவர்களாக இருக்கிறார்கள் என்று மக்கள் பார்த்துச் சொல்லும்படி இருக்க வேண்டும். பல் வேறுபட்ட மக்கள் வருகிறார்கள். பல தரப்பட்ட மக்கள் வருகி றார்கள். * * ஒரு குடும்பத்தில் இருக்கும் என் மனைவி ஒருநாள் வந்து தங்கிவிட்டுப் போனால் பரவாயில்லை. என்னை மன்னிக்கவேண்டும். இங்கே அடக்கத்தோடு பேசவேண்டி யிருக்கிறது. பல காரியங்கள், பல குற்றங்கள், பீனல் கோடில் சொல்லப்பட்டிருக்கிறது 500 குற்றங்கள்—ஆனால் 500 அல்ல 5,000 குற்றங்கள்—சட்டமன்ற விடுதியில் நடக்கின்றன.

**திரு. கோவை செழியன்:** அவர்கள் வழக்கறிஞர். எனக்குச் சட்டம் தெரியாது. பீனல் கோடில் இருக்கும் குற்றங்கள் நடக்கின்றன என்று சொன்னார்கள். என்ன குற்றம் என்று சொன்னால் என்னைப்போல் உள்ள சாதாரண உறுப்பினர்களும் அறிந்துகொள்வார்கள். வழக்கறிஞர் அவர்கள் அந்த தங்கும் விடுதியில் என்ன குற்றம் நடைபெறுகிறது என்பதை தெளிவுபடுத்துவார்களா?

**திரு. எம். ஏ. லத்தீப்:** உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டதி லிருந்து அவர் ஏதோ புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரி கிறது. சில விஷயங்களைச் சொல்லித்தான் புரிந்து கொள்ள வேண்டும், சில விஷயங்களைச் சொல்லாமல் புரிந்துகொள்ளவேண்டி

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

யிருக்கிறது. நான் உள்ளபடியே மிகுந்த மன வேதனையோடு சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி தூய்மையின் இருப்பிடமாக இருக்க வேண்டும். * * * * * * நான் பல விஷயங்களைச் சொல்ல முடியும். பல நேரங்களில் திருட்டுப் போய் இருக்கிறது. சட்டையை மாட்டி வைத்திருந்தேன், கம்பியை விட்டு எடுத்துச் சென்று விட்டார்கள். 5,000 ரூபாய் களவு போய்விட்டது என்று இருக்கிறது.

இருபத்தைந்து நாட்களுக்கு முன்பு எங்களுடைய வியாபார சம்பந்தமாக என்னுடைய ஏஜண்ட் ஆலங்காயத்திலிருந்து என்னுடைய அறைக்கு வந்திருந்தார். நான் அவர்களிடத்தில் ரூபாய் 2,500 கொடுத்தேன். (குறுக்கீடு) அவர் என்னைப் பார்ப்பதற்கு வந்தார். என்னுடன் தங்குவதற்கு வரவில்லை. யாரையும் என்னுடைய அறையில் தங்க வைப்பதற்கு அவசியமில்லை. சென்னையில் தங்குவதற்கு பல இடங்கள் இருக்கின்றன. பல வியாபார இடங்கள் இருக்கின்றன. விடுதியில் வந்து தங்குவதற்கு அவசியமில்லை. அங்கே என்னுடைய ஆலோசனையை கேட்க வந்தார். அவரிடம் 2,500 ரூபாய் கொடுத்து அனுப்பினேன். லிப்டு வழியாக கீழே வந்திருக்கிறார். இரண்டு கட்டு ஆயிரம் ரூபாய் கட்டைக் காணவில்லை. 500 ரூபாய் கட்டு மட்டும் தான் இருக்கிறது என்று சொன்னார். லிப்டிலேயே நடந்திருக்கிறது. அசகாய சூரர்களாக இருக்கிறார்கள். மிகப் பெரிய திருடர்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவில் கூட அம்மாதிரி திருடர்கள் இருக்க முடியாது. அவர்கள் அங்கே சென்று பயிற்சி பெற்று வந்த திருடர்கள் மாதிரி இருக்கிறார்கள். நிரந்தரமாக அங்கேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் உடனே ஐ.ஜி.-க்குப் போன் செய்தேன். ஐ.ஜி.யும் உடனே நடவடிக்கை எடுத்தார்கள். ஏ.ஸி.யை அனுப்பி வைத்தார்கள். மற்றவர்களையும் அனுப்பி விசாரணை செய்கிறேன் என்று சொன்னார்கள். நான் இதை வெளிப்படையாக சொல்லக்கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். ஐ.ஜி. அவர்கள் நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி சொல்ல வேண்டாமா? அதற்குத்தான் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





ஐ.ஜி. அவர்கள் அங்கே தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். இன்றைக்குக் கூட அவர்கள் அங்கே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் தெளிவாகச் சொல்கிறேன். நான் வேண்டுமானால் பெயரைக்கூடச் சொல்வதற்கு தயாராக இருக்கிறேன். யார் யார் இப்படி நடந்து கொள்கிறார்கள், யார் யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் உங்களிடம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரை முருகன்:** யார் யார் திருடர்களாக இருக்கிறார்கள் என்று கேட்டால் கூட தான் சொல்வதற்கு தயார் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார். திருடர்களை தெரிந்து வைத்துக் கொண்டே அவர்களைப் பற்றி போலீசுக்குத் தெரிவிக்காமல் இருப்பது ஒரு குற்றம் என்பதை வழக்கறிஞராக இருக்கும் நண்பர் லத்தீப் அவர்கள் அறிவார்கள். இதுநாள் வரையிலும் அவர்கள் அதைப் பற்றி போலீசுக்குத் தெரிவிக்காமல் இருந்தது திரு. லத்தீப் அவர்கள் செய்த ஒரு குற்றம் ஆகும். அதற்குப் பிராயச்சித்தமாக யார் யார் இருக்கிறார்கள் என்பதை உடனடியாக அவை முன்னவரிடமோ—இங்கே சொல்லா விட்டாலும்—அல்லது தக்க அதிகாரிகளிடமோ போய் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** திரு. துரை முருகன் அவர்கள் சட்டத்தைப் பற்றி எனக்குச் சொல்கிறார்கள். அவர்கள் சட்டம் பற்றி பேசுவதில் எனக்கு மகிழ்ச்சி. என்னுடைய தம்பிமார்கள் சில விளக்கங்களை எனக்குத் தந்தால். . . . . . . . .

**திரு. துரை முருகன்:** இந்த அவையிலே அவர் உண்மைக்குப் புறம்பாக தகவல் தரக்கூடாது. அவர் என்னை தம்பி என்று சொல்கிறார். நான் தம்பி அல்ல. தவறான தகவலைத் தரக் கூடாது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அதிகாரிகளிடத்தில் சொல்ல வேண்டாமா என்று கேட்கிறார். அந்த விவரத்தையெல்லாம் இந்த மன்றத்தில் சொல்லி, அதனால் புலன் விசாரணைக்கு பாதகம் ஏற்படவேண்டும் என்று அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவார்களேயானால் நான் சொல்லத் தயாராக

இருக்கிறேன். நான் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற செயலாளரிடத்தில் இதைப்பற்றி சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறேன். ஐ.ஜி. அவர்களிடமும் நான் சொல்லியிருக்கிறேன்.

ஏன் இப்படியெல்லாம் நடைபெறுகிறது ? இதற்குக் காரணம் என்ன ? லா காலேஜ் மாணவர்கள், மற்ற காலேஜ் மாணவர்கள் அங்கே வந்து நிரந்தரமாக இருக்கிறார்கள். யாருக்கு இந்த மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது ? உறுப்பினர்கள் தங்கி வசதிகளைப் பெறுவதற்குத்தான் இந்த மான்யம் கொடுக்கப்படுகிறது. சட்டத்திற்குப் புறம்பாக எப்படி அரசு இவர்களை அனுமதிக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன். எங்களுக்குச் சம்பளம் கிடைக்காமல் போனாலும் இந்த மான்யத்தை எதிர்க்கிறேன் என்றுகூட சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

கேரளாவை எடுத்துக் கொண்டு பாருங்கள். நம்மைவிட சிறிய மாநிலம்தான். அங்கே யாராவது சட்டமன்ற உறுப்பினரை பார்ப்பதாக இருந்தால், ஒரு பெரிய காம்பவுண்டு கட்டியிருக்கிறார்கள், காம்பவுண்டிற்கு வெளியே வந்து ரிசெப்ஷன் கிளார்க்கிடம் சொல்ல வேண்டும். இன்னாரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால், அவர் வரலாம் என்று சொன்னால் தான் பார்க்க வந்திருப்பவரை அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் இங்கே என்ன நடக்கிறது ? ரிசெப்ஷனுக்குப் போகாமலே வந்துவிடுகிறார்கள். எல்லோரும் வந்துவிடுகிறார்கள். என்னென்னவோ நடக்கிறது. பார்க்கத் தகுந்ததும் நடக்கிறது. பார்க்கத் தகாததும் நடக்கிறது (மணி அடிக்கப்பட்டது). தயவு செய்து இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் பேசுவதற்கு அங்கத்தினர்கள் நிறைய இருக்கிறார்கள். எல்லோரும் பேசப் போகிறார்களே ?





**திரு. எம். ஏ. லத்தீப் :** ஒரு சில முக்கியமான விஷயங்களை மட்டும் பேசி முடித்து விடுகிறேன். அதுமட்டுமல்லாமல், தலைவர் அவர்களே, * * இது என்ன நிர்வாகம் என்று நான் கேட்கிறேன். இந்த சட்டமன்றத் துறையில் இருக்கிற அதிகாரிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். * * அந்த விடுதியைக் கண்டு நான் வெட்கம் அடைகிறேன். நம்முடைய கவுரவத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதையெல்லாம் எடுத்துச் சொல்கிறேன்.

அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் சம்பளத்தைப் பற்றியும், அவர்களுக்கு இருக்கிற வசதியைப் பற்றியும் சொன்னார்கள். 1966-ம் ஆண்டில் இருந்த ரூபாயின் மதிப்பு—நேற்றையதினம் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள்—அன்றைக்கு 100 பைசாவாக இருந்தது இன்றைக்கு 18 காசுகளாக மாறி இருக்கிறது. நான் சொல்கிறேன். . . .

**திரு. கோவை செழியன் :** ஏதோ பொழுது போகாவிட்டால் அங்கத்தினர்கள் சீட்டுக் கட்டை வைத்து சும்மா ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ பெரிய குற்றம் செய்துவிட்டதைப்போல பேசுகிறார்கள். இப்படிப் பேசினால் பொது மக்கள் மத்தியிலே—எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களானாலும் சரி * * என்ற பெயர் வந்துவிடும். பொழுது போக்காக சீட்டு ஆடிக் கொண்டிருப்பது பெரிய குற்றம் அல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு.** செழியன் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, லத்தீப் அவர்கள் சட்டமன்ற விடுதி இன்னும் ஒழுங்காக நடைபெறவேண்டும், செம்மையாக நடைபெறவேண்டும், அங்கே தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று பொதுவாக கருத்துக்களை வழங்கலாம். அதற்குப் பதிலாக சில வார்த்தைகளை இங்கே அடுக்கிக் காட்டியிருக்கிறார்கள். அவைகள் பத்திரிகைகளிலே வருமானால் பொது மக்கள் . மத்தியிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி மிக

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

இழிவான கருத்து உருவாகிவிடும். * * *

ஆகவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் தானாகவே முன்வந்து அப்படிப்பட்ட வார்த்தைகளை திரும்பப் பெறுவதோடு அல்லாமல். அவைகள் நடவடிக்கைக் குறிப்பிலே ஏறாமல் பார்த்துக்கொள்வதும் நலம் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் கூறவில்லை. மற்றவர்கள் இருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் என்று நான் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் மற்றவர்கள் இருக்கிற காரணத்தினால் இவ்விதமான தவறுகள் எல்லாம் நடக்கின்றன. அதைத்தான் நான் சொன்னேன். மற்றவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை அங்கேயிருந்து வெளியேற்றுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பல் பேர்கள் தங்களைக் காண வருகின்ற தொகுதி மக்கள் அங்கே தங்குவதற்கு வசதி செய்து தரவேண்டும் என்கின்ற கருத்தைச் சொல்லுகிறார்கள். சில உறுப்பினர்கள் அவர்கள் தங்கவே கூடாது என்ற கருத்தைச் சொல்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் நாம் ஹவுஸ் கமிட்டியில் சட்டப் பேரவைத் தலைவரையும், மாண்புமிகு அவை முன்னவரையும் வைத்துக்கொண்டு கலந்து ஆலோசித்து, இதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி—பொதுவாக எல்லாக் கட்சியினரையும் சேர்த்துத் தான் சொல்கிறேன்—பொதுவாக நாட்டிலே இருக்கிற பொது மக்கள் மத்தியிலே இழிவான எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் இங்கே நம்முடைய விவாதம் அமைந்துவிடக்கூடாது. உறுப்பினர்கள் 5, 6 பேர்கள் சேர்ந்துகொண்டு யார் தவறு செய்கிறார்கள் என்று பட்டியலைக் கொண்டு வந்து அவை முன்னவரிடமோ அல்லது என்னிடமோ கொடுத்தால்கூட அதைப்பற்றி விசாரிப்பதற்கும்,

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த வகையில் இந்தத் தவறுகளைக் களைவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமே அல்லாது பொதுமக்கள் மத்தியிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியைப்பற்றி ஒரு இழிவான அபிப்பிராயம் ஏற்படுகின்ற அளவுக்கு நிலைமையைக் கொண்டு போய் வளரவிடக்கூடாது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நான் சொல்லவில்லை . . .

**திரு. பெ. சீனிவாசன் :** முதல்வர் அவர்கள் சொன்ன மாதிரி ஹவுஸ் கமிட்டியிலே இதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். இந்தக் கமிட்டியில் ஆயிரம் தடவை இதைப்பற்றி பேசியிருக்கிறோம். கமிட்டியில் சில எம்.எல்.ஏ.-க்கள் யாரையும் தங்கவிடக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி தங்கவிடக்கூடாது என்று சொல்லிய எம்.எல்.ஏ.-க்களே அங்கு வந்து அந்த விதிமுறையை மீறி சிலரைத் தங்கவைக்கிறார்கள். இதற்காக ஒரு விதி முறையை ஏற்படுத்தி ஈ.ஓ. அவர்கள் ஒவ்வொரு ரூமாகச் சென்று செக் செய்து, வேறு யாராவது தங்கியிருந்தால் வாடகை வாங்குவது என்று வைத்தோம். * * எம்.எல்.ஏ. ஹாஸ்டல் ஊழியர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி ஒரு விதி ஏற்படுத்தினால் எல்லோரும் அதைக் கடைப்பிடிக்கவேண்டும். நிச்சயமாக எல்லோரும் அந்த விதியைக் கடைப்பிடித்தால்தான் நன்றாக இருக்கும். யாரும் கெஸ்டை எண்டெர்டயின் செய்யக்கூடாது என்று கண்டிப்பாக ஒரு விதிமுறையைக் கொண்டு வந்தால் ஒழிய இது நடைபெறாது. மொத்தமாக இங்கே பேசிவிட்டுப் போய் விட்டால் பலன் இல்லை. நான் இப்பொழுது அந்தக் கமிட்டியின் சேர்மனாக இல்லை. அதனால் எனக்கு அந்தப் பழி வராது. திருடர்கள் வருகிறார்கள் என்று பேசிவிட்டுப் போவது சாமர்த்தியமல்ல. சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி, விடுதியைப் பற்றி, பொது மக்கள் மத்தியில் தவறான எண்ணம் ஏற்படாத வகையில் நம்முடைய உறுப்பினர்கள் இதை விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு லத்தீப் அவர்கள் இங்கே கூறிய கருத்து இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துதான். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்று சொல்கிற கருத்தை யாரும் மறுக்க முடியாது. லத்தீப் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் இங்கே கூறிய அந்த நிலையை ஒட்டியும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய அந்த நிலையை ஒட்டியும், எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி எப்படி நடைபெறவேண்டும் என்று நினைக்கிறார்களோ அந்த அளவில் நடைபெறுவதற்கு நான் உறுதி அளிக்கிறேன். அந்த நிலையை ஒட்டி இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறிய கருத்து பத்திரிகைகளில் வருமேயானால் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி இழிவான அபிப்பிராயம் வெளியே உருவாகும். எல்லோருக்கும் சேர்த்துத்தான் உருவாகும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி பொது மக்களிடையே தவறான எண்ணம் உண்டாகும். பிறகு அவர்கள் சொல்கிற சொல்லுக்கே மதிப்பு இல்லாமல் போய் விடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். அந்த நிலையை இந்த மன்றம் ஏற்று, முதல்வர் அவர்களும் நானும் கொடுத்த உறுதியை ஏற்று, நம்முடைய லத்தீப் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி, விடுதியைப் பற்றி கூறிய அப்படிப்பட்ட வார்த்தைகளை திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றிச் சொல்லியிருந்தால் நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். நான் சொன்னது . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டால் இரண்டும் சேர்ந்து பத்திரிகையில் வந்துவிடக் கூடும். ஆகவே, அவர்கள் சொன்ன மற்ற கருத்துக்கள் எல்லாம் இருக்கட்டும். குறிப்பிட்ட சில சொற்களை மட்டும் அவர்கள் வாபஸ் பெற்றுக் கொண்டால் போதும்; அந்த சொற்களை அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்தும் நீக்கிவிட வேண்டும்.



74 ஏப்ரல் 8]

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, * * என்ற றையிலே சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடும்படி கேட்டுக் ாள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதோடு மட்டுமல்லாமல் * என்றும் சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் சரியல்ல. ,கவே, அந்தச் சொற்களும் * * என்ற வார்த்தையோடு தாடர்புடைய சொற்களும் * * என்ற வார்த்தை ளோடு தொடர்புடைய சொற்களும் அவைக் குறிப்பிலிருந்து க்கப்படுகின்றன. பத்திரிகைகளும் அந்தச் சொற்களை வெளியிட வண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** சட்டமன்ற விடுதிகளில் வெளியார் ரையும் அனுமதிக்கக்கூடாது. மாணவர்கள் சிறிய பருவத்தினர்; டிப்பதற்கு சில வசதிகள் அங்கே இருக்கலாம்; அதனால் அவர்கள் ருப்பதில் தவறில்லை; மற்றவர்களுக்கு அனுமதி அளிக்கக் டாது.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். ண்பர் லத்தீப் அவர்கள் யாரையுமே அனுமதிக்கக்கூடாது என்று சால்கிறார்கள். நான் சட்டமன்ற விடுதியில் இருக்கிறேன். ன்னைத் தேடி வருகின்றவர்கள் எங்கே போவார்கள்? சட்டமன்ற டுதியில்தான் தங்குவார்கள். அவர்களை அனுமதிக்கக்கூடாது ன்றால் அது எந்த முறையிலே சரியாகும்? அப்படிச் சால்வது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லத்தீப் அவர்கள் ஒரு ருத்தைச் சொன்னார்கள். அதைப்பற்றி ஹவுஸ் கமிட்டியிலே டிவு செய்து கொள்ளலாம். ஆகவே, அதைப்பற்றி மேலும் வாதிக்க வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ம்முடைய முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர் லத்தீப் அவர்கள் ட்டமன்ற விடுதியில் சீட்டாடுகிறார்கள் என்று சொன்னார்கள். . .

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கற்றப்பட்டது.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்ன அப்படிப்பட்ட வார்த்தைகளை எல்லாம் நீக்கியாகிவிட்டது. மேலும் நீங்கள் அதைச் சொன்னால் இனி இன்னொரு முறை நீக்க வேண்டிவரும். ஆகவே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட வார்த்தைகளை மீண்டும் சொல்ல வேண்டாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பொழுது போக்கிற்காக இன்டோர் கேம்ஸ் வைத்திருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் அதை அனுமதித்திருக்கிறார்கள். இன்டோர் கேம்ஸாக சீட்டாடுவதை அனுமதித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞராக இருப்பதால் அவர்களுக்கும் இது தெரிந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லத்தீப் ஒரு கருத்தைச் சொன்னார். அதை நாம் இங்கே ஏற்றுக்கொள்ளவில்லை. ஹவுஸ் கமிட்டியில் முடிவு செய்யப்போகிறோம். அப்போது உங்கள் கருத்தையும் சொல்லலாம். ஆகவே, இங்கே அதுபற்றி மேலும் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் சட்டமன்ற உறுப்பினர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். வெளியிலே இருந்தும் யாரும் வரக்கூடாது என்பது என்னுடைய எண்ணமல்ல. தொகுதி மக்கள் வரலாம். ஆனால் வெளியார் வந்து சட்டமன்ற விடுதிகளில் தங்கியிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

(திரு. முனு ஆதி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள். 'உட்கார், உட்கார்' என்று சபாநாயகர் சொல்கிறார் என்று சொல்லிவிடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டு, உட்காருங்கள் சொல்கிறேன். லத்தீப் அவர்கள் சொன்ன கருத்தை நாம் இங்கே ஏற்றுக்கொள்ளவில்லை. ஹவுஸ் கமிட்டியில் முடிவு செய்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டோம். அப்போது உங்களுடைய கருத்தையும் அங்கே சொல்லலாம்.



1974 ஏப்ரல் 8]

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்வதற்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பார்க்க வருகின்றவர்கள் சட்டமன்ற விடுதியில்தான் இருப்பார்கள். அப்படி வருகிறவர்களைப் பார்த்து, சட்டமன்ற விடுதியில் லீலைகள் ஆடுகிறார்கள் என்று எப்படி சொல்லலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லீலைகள் ஆடுகிறார்கள் என்று திரு. லத்தீப் சொல்லவில்லை; நீங்கள்தான் சொல்கிறீர்கள்.

**திரு. முனு ஆதி:** சட்டமன்ற விடுதியில் இருப்பவர்கள் சட்டமன்ற உறுப்பினரின் அனுமதி இல்லாமல் எப்படி இருக்க முடியும்? ஆகவே, அவர்களைப் பற்றி குறை சொல்லும்போது சட்டமன்ற உறுப்பினர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஹவுஸ் கமிட்டியில் முடிவு செய்யலாம் என்று சொல்கிறீர்கள். அங்கே என்னச் செய்யப்போகிறீர்களோ எங்களுக்கு எப்படி தெரியும்? வெளியார் யாருமே சட்டமன்ற விடுதிக்கு வரக்கூடாது என்றால் எங்களைத் தேடி வருகிறவர்கள் வேறு எங்கே போவார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லத்தீப் ஒரு கருத்தைச் சொன்னார். அதைப்பற்றி ஹவுஸ் கமிட்டியில் முடிவு செய்யப் போகிறோம். அதற்குள் இங்கே ஒரு விவாதம் வேண்டாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** வெளியிலிருந்து வந்து தங்குகின்றவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, இந்தப் பிரச்னையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

(திரு. ஏ. சி. நரசிம்மன் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நரசிம்மன் அவர்கள் ரொம்ப நேரமாக எதையோ சொல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் கேட்டுவிடுவோம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, இங்கே திரு. லத்தீப் அவர்கள் கூறிய கருத்தைப்பற்றி ஹவுஸ் கமிட்டியிலே முடிவு செய்துகொள்ளலாம் என்று சொன்னீர்கள். சென்ற ஆண்டில்

ஹவுஸ் கமிட்டி ஒரே ஒரு தடவைதான் கூடியது. இந்த ஆண்டில் கூடாமலும் இருந்துவிடலாம். அப்படி கூடாமல் போனால் எப்படி முடிவு செய்வது? * *

**திரு. எம். ஏ. லத்தீப்:** சட்டமன்ற விடுதியிலே உணவு விடுதி இருக்கிறது. இங்கே சிறிய அளவிலே இருக்கின்ற எங்களுக்கு அங்கே சாப்பிடுவதற்கு போதுமான வசதிகள் இல்லை. ஏனென்றால் நாங்கள் சாப்பிடுகின்ற ஒரு முறை இருக்கிறது. அந்த முறை அங்கே இல்லை. நாங்கள் சாப்பிடுவதாக இருந்தால் மீன் மட்டும் தான் சாப்பிட முடியும். கோழி சாப்பிட முடியாது. அவர்கள் கோழியை அறுக்கின்ற முறையில் நாங்கள் சாப்பிட முடியாமல் போகிறது. ஆகவே, எங்கள் முறைப்படி அறுப்பதற்கு ஏற்பாடு செய்தால் நாங்களும் சாப்பிடுவதற்கு வசதியாக இருக்கும்; அதனால் வேறு யாருக்கும் பாதகம் இல்லை. நாங்கள் சிறிய அளவிலே இருப்பதால் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அதற்கு ஏற்பாடு செய்தால் செய்யுங்கள். நீங்கள் 6 பேர்கள் தானே இருக்கிறீர்கள்; வெளியில் போய் சாப்பிட்டுக்கொள்ளுங்கள் என்றால் நாங்கள் வெளியிலே சாப்பிட்டுக்கொள்கிறோம். அதைப் பற்றி நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சென்ற தடவை சொன்னார்கள், 'கருணை இருக்கிறது; நிதிதான் இப்போது இல்லை' என்று. இப்போது இருக்கின்ற விலைவாசியில் சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (குறுக்கீடு). கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் 'அழுத பிள்ளைத்தான் பால் குடிக்கும்' என்பார்கள். அதனால் அதை மீண்டும் நான் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 400 ரூபாய் சம்பளம், 200 ரூபாய் கான்ஸ்டிட்யூன்ஸி அலவன்ஸ் கொடுக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்தில் 300 ரூபாய் சம்பளம். 200 ரூபாய் கான்ஸ்டிட்யூன்சி அலவன்ஸ் கொடுக்கிறார்கள். நமக்குப் பக்கத்திலே இருக்கின்ற கேரளத்தில் கூட 550 ரூபாய் சம்பளம், 40 ரூபாய் அலவன்ஸ் கொடுக்கிறார்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





மத்திய பிரதேசத்தில் டெய்லி அலவன்ஸ் 60 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே கொடுப்பது மிகவும் குறைவாக இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல பிரச்சனைகள் இருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பிரச்சனைகள் இல்லை. யார் வந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் பார்க்கிறார்கள். தேடி வருகின்றவர்களுக்கு சாப்பாடு, டிபன், டாக்ஸி சார்ஜ் எல்லாம் ஆகிறது. இதையெல்லாம் நாங்கள்தான் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஆரம்பத்தில் இந்த மானியத்தை நான் எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். பணமே ஒதுக்கவேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அவர்கள் பேசுகிற முறை வேறாக இருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் சொன்னது, பல குறைகள் இருக்கின்றன; அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக எங்களுடைய சம்பளத்தை வேண்டுமானாலும் விட்டுவிட தயாராக இருக்கிறோம். அதனால்தான் அப்படிச் சொன்னேன். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரயில்வே பாஸ் இருக்கிறது. அவர்களுக்கு ஒரு கிளார்க் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் போஸ்டல் அலவன்ஸ் என்று கொடுக்கிறார்கள். ஆகவே, இப்போது இருக்கிற நிலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் கொடுத்திருக்கிறார்கள்; அது மட்டும் போதாது: அவர்களோடு ஒரு கம்பானியனை அழைத்துச் செல்வதற்கும் பாஸ் கொடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கம்பானியனை அழைத்துச்செல்ல ரயில்வே பாஸ் கொடுத்திருக்கிறார்கள்; அவர்கள் பெரியவர்கள்; அவர்களுக்கு ரயில் இருக்கிறது. அதைப்போல எங்களுக்கு பஸ்களிலே ஒரு கிளார்க் அல்லது வேறு யாராவது ஒருவரை அழைத்துச் செல்ல பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஏப்ரல் 8

(முற்பகல் 11-30)

இங்கு சாதாரணமாக உறுப்பினர்களுக்கும் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதோடு கூட கம்பானியனையும் அழைத்துப்போக பாஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இதோடு என் கருத்தை முடித்துக்கொள்கிறேன்.

தவறான எண்ணத்தில் நான் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. நல்லெண்ணத்தில் தான் சொன்னேன். அதை நல்ல முறையில் ஹவுஸ் கமிட்டியில் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஹவுஸ் கமிட்டி கூடவே இல்லை என்று சொன்னார்கள். ஹவுஸ் கமிட்டியைக் கூட்டிப் பாருங்கள். எந்த விஷயத்திலும் அதில் நாம் ஒரு முடிவை எடுக்க முடியாது. தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. என்னைக் கேட்டால்—மாண்புமிகு பேரவைத் தலைவரே அதன் தலைவராக, மாண்புமிகு முதலமைச்சர், அவை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகப் போட்டு—கெஸ்டுகளை உள்ளே தங்க அனுமதிப்பதுபற்றி ஒரு முடிவை எடுத்தால் போதும். அப்புறம் எந்த விவகாரமும் இருக்காது.

***திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பக்கத்தில் இருக்கிற திரு. லத்தீப் அவர்கள் பல நேரங்களில் எனக்கு எதிராகத்தான் பேசுவார்கள். இன்றைக்கு என் கருத்துக்கு ஆதரவாகப் பேசியிருக்கிறார்கள். அதனால் என் வேலை சுலபமாக இருக்கும்.

பல்வேறு விஷயங்களில் தமிழகம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற நிலைமையில் இருக்கிறது என்றாலும், இது சிறப்பு மிக்க மாநிலம் என்றாலும் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் —இங்கு கூட்டம் நடப்பது, விவாதிப்பது, உறுப்பினர்களுக்குள்ள வசதிகள், ஹாஸ்டல் வசதிகள் ஆகியவற்றில் மற்ற மாநிலங்களை விடத் தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறது என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்



1974 ஏப்ரல் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

கேள்விகள் சம்பந்தமாக சட்டப் பேரவைத் துறை விதிகளில்—விதி 34 மிகத் தெளிவாக இருக்கிறது.

Questions shall ordinarily be admitted and forwarded to the Departments within fifteen days from the date of receipt of notice thereof by the Secretary.

என்றும், அப்புறம்

Provided that in case the answer to a question cannot be sent to the Secretary within forty-two days from the date of admission, the Speaker, may, if sufficient cause is shown, extend the time therefor not exceeding two weeks and after the expiry of such extended time the question shall be included in the list of questions;

என்றும் தெளிவாக இருக்கிறது. ஆனால் நான் இங்கே பார்க்கிறேன். சில உறுப்பினர்கள் போடுகிற கேள்விக்கு உடனே பதில் வந்துவிடுகின்றது. சில உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கு மாதக் கணக்கில் ஆனாலும் பதில்கள் வருவதில்லை. அவ்வாறு பாதிக்கப் பட்டவர்களில் நானும் ஒருவன்.

ஷார்ட் நோட்டீஸ் க்வஸ்டியன் கொடுத்தேன். அதற்கு விடை வருவதற்கே 21 நாட்களுக்கு மேலாகிறது. இப்படி மாதக் கணக்கில் தாமதம் ஆகிற நிலையில் எதற்காக இந்த விதியை வைத்திருக்கிறோம் என்றே புரியவில்லை.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

மானியங்களைப் பொறுத்தவரை—அது சம்பந்தப்பட்ட அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு முதல்நாள் கொடுக்கிறார்கள். முதல்நாள் இரவு கொடுத்து, மறுநாள் விவாதத்திற்கு எதைப் படித்து வருவது என்றே தெரியவில்லை. பேசுவதற்கே குறைவாக நேரம் தருகிற காரணத்தினால், அந்த அளவுக்குப் படித்தால் போதும் என்று நினைக்கிறார்களோ, என்னவோ, தெரியவில்லை. பார்லிமெண்டில் ஒரு வாரத்திற்கு முன்பே கொடுத்துவிடுகிறார்கள். அதுபோல இங்கும் ஒரு வாரத்திற்கு முன்பே உறுப்பினர்களுக்குக் கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டசபை கூடுகிற நாட்கள் போதவே போதாது. மிகமிக குறைவாக இருக்கிறது. ஒவ்வொரு மானியத்தின் மீது ஐந்து நிமிடம் பேசுங்கள், 6 நிமிடம் பேசுங்கள் என்கிறார்கள். ஆளுங்கட்சிக்காரர்கள் எங்களுக்கு நேரம் கொடுக்கவில்லை என்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் குற்றங் குறைகளை எடுத்துச் சொல்ல நேரம் கொடுக்கப்படவில்லை என்கிறோம். உறுப்பினர்கள் தொகுதிப் பிரச்சினையை எடுத்துச் சொல்லவே நேரம் இல்லை.

ஒரு மானியத்தின் மீது குறைந்தது 2 நாட்களாவது விவாதம் நடக்க வேண்டும். முக்கியமான மானியங்களாக இருந்தால் கூடுதலான நாட்கள் ஒதுக்கப்படவேண்டும். எனக்கு நினைவு இருக்கிறது. மைசூர் மாநிலத்தில் சென்ற வருடம் 3 மாதம் பட்ஜெட் கூட்டம் நடந்தது. கேரளம் போன்ற சின்ன மாநிலத்தில் கூட அதிகமான நாட்கள் நடக்கின்றன. முன்னைவிட இப்போது நாம் கூடுதலான நாட்கள் கூடுகிறோம் என்று சொல்லலாம். மசோதாக்களுக்கான நாட்களோடு சேர்த்துப் பார்க்கிறபோது இது மிகமிகக் குறைவு. ஆகவே இன்னும் சட்டப் பேரவை கூடுகிற நாட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நாடாளுமன்றத்தில் கன்சல்டேடிவ் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள். முக்கியமான விஷயங்களை அந்த கன்சல்டேடிவ் கமிட்டியில் விவாதிக்கிறார்கள். அதுபோலவே இங்கும் ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் கன்சல்டேடிவ் கமிட்டிகளை ஏற்படுத்துவது அவசியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிகுந்த வசதிகள் வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்குப் போதுமான வசதிகள் இருந்தாகவேண்டும்.

அதில் இந்த அலவன்சு ஒன்று—சின்ன கேரளத்தில் கூட கூடுதலாகக் கொடுக்கிறார்கள். நிச்சயமாக டெலிபோன் வசதி இலவசமாகச் செய்ய வேண்டும். ட்ராங்க்கால் வேண்டுமானால் அவர்களே அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளலாம். டெலிபோன் வாடகை, லோகல் கால்ஸ் ஆகியவற்றின் பொறுப்பை அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும். போஸ்டேஜும் இலவசமாக இருக்க வேண்டும்.





இன்னும் இங்கே—சட்ட மன்றத்தில்—உறுப்பினர்களுக்கு சீட்டிங் வசதி போதாது. ஒரு சீட்டில் நான்கு பேர்கள் உட்கார வேண்டியிருக்கிறது. இன்னும் எத்தனை பேர்களைப் போடுவார்களோ? இங்கு உறுப்பினர்கள் வசதியாக உட்கார வசதி செய்யப்பட வேண்டும்.

பாஸை எடுத்துக்கொண்டால் தொகுதி மக்கள் உறுப்பினர்களுடைய சிபார்சை நாடி வருவார்கள்—இன்றைக்கு ஒரு உறுப்பினருக்கு ஒரு பாஸ்தான் என்கிற ஏற்பாட்டினால் உறுப்பினர்களே, மற்ற உறுப்பினர்களிடம் சிபார்சுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி முன்போலவே ஒரு உறுப்பினர் எத்தனை பாஸ்களை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குக் கொடுக்கிற புத்தங்கள், அறிக்கைகள் ஆகியவற்றைப் படித்து, வந்து, தங்கள் ஆலோசனைகளைக் கூறுவதற்கு ஏற்ற வகையில் ஹாஸ்டல் இல்லை. மாணவர்கள் தங்கலாம்—பயணிகள் தங்கலாம் அந்த அளவுக்கு தான் ஹாஸ்டல் இருக்கிறது. வெளி ஆட்களைத் தங்கவிடுவது பற்றிக்கூடக் குறிப்பிட்டார்கள். யாரும் அங்கே வரக்கூடாது என்பதும் கஷ்டம்—தங்குகிற காரணத்தினால்—நானே டெலிபோன் செய்வது என்றால் கீழே இறங்கிவந்து ரிசெப்ஷன் ஹாலில் பண்ணவேண்டியிருக்கிறது. எக்ஸ்சேஞ்ஜ் கிடைக்க 5 நிமிடம், 10 நிமிடம் ஆகிறது. திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அவற்றையெல்லாம் நானும் என் கண்ணால் பார்க்கிறேன். இந்தக் குறைகளை எல்லாம் களைந்து, ஹாஸ்டல் நல்லமுறையில் செயல்பட ஹவுஸ் கமிட்டி தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக லைப்ரரி—இன்றைக்கு புத்தகங்களை எல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டிப்போட்டிருக்கிறார்கள். வைப்பதற்கு இடம் இல்லை. லைப்ரரியை ஒட்டி ஸ்டோர் ரூம் இருக்கிறது. அதை வேறு எங்காவது மாற்றிவிட்டு, லைப்ரரிக்கு அதையொட்டி அதிக இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

இன்னும் இங்கே உள்ள வாட்ச் அண்டு வார்டுக்கு ஒரு நாளைக்கு ரூ. 1⅓ அலவன்சு கொடுக்கிறார்கள். இங்கு வருகிறவர்களை அவர்கள் கையெடுத்துக் கூப்பி கூப்பிக்கொண்டிருப்பதற்கே வீட்டிற்குப் போய் மசாஜ் செய்துகொள்ளக்கூட இந்த ரூ. 1⅓ போதாது, குறைந்தது அவர்களது அலவன்சை 5 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 62-இல் இருந்து இங்கே டெம்பரரியாக இருக்கிற ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால் பின்னே வந்தவர்களை ஹாஸ்டலில் போட்டு நிரந்தரமாக்குகிறார்கள், முன்னே வந்தவர்கள் தற்காலிமாகத்தான் இருக்கவேண்டிருக்கிறது என்கிற குறை இருக்கிறது. இம்மாதிரியான அநீதி—பாரபட்சம் காட்டாது முன்னால் வந்தவர்களுக்கு முதலிடம் தரவேண்டும், எந்தச் சிபார்சுக்கும் இடம் இல்லாமல் பார்த்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஹாஸ்டலில் டெலிபோன் எக்ஸ்சென்ஜ் இருக்கிறது. அந்த இடம் எந்தமாதிரியாக இருக்க வேண்டுமோ அப்படி இல்லை. ஒரே எக்கோவாக இருக்கிறது. ஊழியர்களுக்கு, மலஜலம் கழிக்கக்கூட வசதி கிடையாது. ஆகவே எக்ஸ்சேன்ஜுக்கு ஏற்றதாக புதிய இடம் கட்டி—அங்கே அதை மாற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. கோவை செழியன் பேசும்போது கூட அதை ஹெட் ஆப் ஸ்டேட்ஸ் மானியத்தில் பேசலாம் என்றார்கள். அரசாங்கத்தின் கண்முன்னால் உறுப்பினர்கள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—ஒன்றாகவே பார்க்கப் படவேண்டும். தொகுதிகளில் பல வேலைகள் நடக்கின்றன—பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆளுங் கட்சி உறுப்பினராக இருந்தால்தான் தலைமை தாங்கப் போட வேண்டும். எதிர்க்கட்சிக்காரராக இருந்தால் விருந்தினராகத்தான் அழைக்கப்பட வேண்டும் என்கிற விதி இருக்கிறதோ என்னவோ. . .

உதாரணமாக, இப்பொழுது மேட்டூர் சட்டமன்ற தொகுதியிலே ஒரு போலீஸ் ஸ்டேஷன் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சி நடை பெற்றது. அதற்கு என்ன செய்திருக்கிறார்கள்? அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரைத் தலைமைதாங்கப் போடாமல்,





பக்கத்துக் தொகுதி சட்டமன்ற உறுப்பினரைத் தலைமை தாங்கப் போட்டு, இவரை விருந்தாளியாக அழைக்கிறார்கள். இம்மாதிரி பாரபட்சம் காட்டுகிற முறை ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல. ஜனநாயக வளர்ச்சிக்கு இம்மாதிரியான பாரபட்சங்கள் அகற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

மருந்துவ வசதியைப் பொறுத்து, பல நேரங்களிலே தேவையான மருந்து கிடைக்கவில்லை. எனக்கே அந்த அனுபவம் ஏற்பட்டது. எனக்கு ஆக்ஸ்டிடென்ட் ஏற்பட்டபொழுது, நான் வெளியே வைத்தியம் செய்துகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏராளமாக செலவாயிற்று. அதை ரீ-இம்பர்ஸ்மென்ட் செய்வதற்கு ஏராளமான விதிகள் இருக்கின்றன. வெளியிலே மருந்துகள் வாங்கிக்கொண்டால், ரீ-இம்பர்ஸ் செய்ய வசதிகள் நிச்சயமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மருத்துவ வசதி அளிக்கிறோமென்று சொல்வது பொருளில்லாது போய்விடும் என்று சொல்லிக்கொண்டு, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பு. செ. முத்துச்செல்வன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமன்ற மானியக் கோரிக்கையினை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக மாநிலச் சட்டமன்றம் மற்ற மாநிலச் சட்டமன்றங்களைவிடச் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருப்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். நம்முடைய சட்டமன்றத்திலேதான், நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சராக இருந்தபொழுது, நம்முடைய தமிழக மக்கள் தலைநிமிர்ந்து நடைபோடத்தக்க அளவுக்கு இந்த நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற பெயரினை தீர்மானமாக, தனியாக, அதற்கென்று சட்டமன்ற கூட்டத்தை கூட்டி, அந்த தீர்மானத்தை நிறைவேற்றி, இன்று தமிழகமெல்லாம் பெருமைபடத்தக்க அளவுக்கு, தமிழ் மக்களும் மற்ற மாநில மக்களைப்போல் தலைநிமிர்ந்து வாழத்தக்க அளவுக்கு, தமிழ்நாடு என்கிற பெயரினை பெற்றிருக்கிறோம். அதற்காக, நாம் நம்முடைய அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1974 ஏப்ரல் 8

நம்முடைய தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பொறுப்பேற்ற பிறகு, ரூ. 250 என்று சம்பளமிருந்ததை, ரூ. 100 அதிகப்படியாக, அலவன்ஸாகக் கொடுத்து, இன்று நாம் ரூ. 350 பெறுகிற அளவுக்கு வசதியைச் செய்து தந்திருக்கிறார். அதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் முன்பு ரூ. 15-ஐ டி.ஏ. வாக, பெற்றுக் கொண்டிருந்தோம். அந்தக் கஷ்டத்தையும் புரிந்து, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, படிப்படியாக உயர்த்தப்பட்டு, இன்று ரூ. 35-ஐ டி.ஏ. வாகப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்காகவும் நான் மாண்புமிகு முதல்வரை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநில சட்டமன்றம் பெருமைப் படத்தக்க அளவுக்கு, வருகின்ற 15-ந்தேதியிலிருந்து 3 நாட்கள் மாநில சுயாட்சியை விவாதிக்கின்ற நிலைமைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக எந்தக் காரியத்தைச் செய்தாலும், நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றுவதைப் பொறுத்துத்தான் பிற மாநிலங்கள் கடைபிடிக்கின்ற ஒரு முறையை, இந்த மாமன்றம் ஏற்படுத்த இருக்கிறது.

நம்முடைய மாமன்றத்திலே தான் பட்ஜெட் கூட்டத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கப்பல் போக்கு வரத்துக் கழகத்தை மற்ற மாநிலங்களுக்கெல்லாம், எடுத்துக் காட்டாக, அறிவித்து, மற்ற மாநிலங்களில் இதை நாளைடைவில் தொடரக்கூடிய நிலையை உருவாக்கியிருக்கிறார். இத்தகைய சிறப்புப் பொருந்திய, மாநிலச் சட்டமன்றத்தில் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம் என்ற பெருமையும் மன நிறைவும் நமக்கு ஏற்படுகிறது. இருந்தாலும், நம்முடைய இதே சட்டமன்றத்திலேதான்—இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களைக் குறை கூறுவதாக கருதவேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்கள், பெரும்பாலாக எல்லாக் கட்சிகளிலிருந்தும் கட்சித் தாவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்தக் கட்சியிலே யிருந்து, இன்னொரு கட்சிக்குச் செல்வதும், இன்னொரு



974 ஏப்ரல் 8] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

ட்சியிலிருந்து இந்தக் கட்சிக்கு வருவதும், அல்லது வேறு ட்சியிலிருந்து இந்தக் கட்சிக்கு வருவதும், இந்தக் கட்சியி ருந்து வேறு கட்சிகளுக்குச் செல்வதுமான தவறான நிலைமை ற்பட்டிருக்கிறது. அதற்காக வருந்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொன்னாலே, ண்ணியமிக்கவர்கள், கடமையோடு பணியாற்றுவார்கள், கட்டுப் ாடோடு இருப்பார்கள் என்ற முறையில், 5 ஆண்டுகாலத்திற் ாவது தன்னைத்தானே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ட்டுப்படுத்திக்கொள்ளவில்லையென்றால், அவர்களுக்கு வாக்களித்த க்கள் எப்படி ஒரே நிலையாக இருந்துவிட முடியும்? ஆகவேதான், பாதுத் தேர்தலிலே ஒரு கட்சி வெற்றி பெற்றாலும்கூட, துணைத் தேர்தலிலே வெற்றி வாய்ப்பை இழந்துவிடுகிறது. சட்டமன்ற, றுப்பினர் கண்ணியத்தினை, கடமையினை, கட்டுப்பாட்டை றத்தாழ ஒரு இலட்சம் வாக்காளர்களுக்குப் பிரதிநிதி என்ற றையிலே இங்கே நாம் அமர்ந்திருப்பதற்கேற்ப, கடைப்பிடிக்க வேண்டும். அந்த நிலையில், அவர்களையெல்லாம் மனதிலே வைத்து, இந்த 5 ஆண்டு காலத்திற்காவது நம்மை நாமே கட்டுப் படுத்திக் கொண்டு, நமக்கு நாமே ஒழுங்குமுறையை, டிசிப்லினை வகுத்துக் கொண்டால்தான் தமிழகம் பாராட்டும், மற்ற மாநிலங் களும் பாராட்டும்.

அதற்குச் சட்டம் நிறைவேற்றவேண்டுமா என்றால், அந்தச் சட்டத்தின் மூலமாக நாம் நிறைவேற்றிவிட முடியும் என்றுகூட நான் கருதவில்லை. கட்சித்தாவல் தடுப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்றாலும், அந்தக் கட்சியிலே உள்ளவர்களைப் பிரித்துச் சென்று ஆட்சியை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அவர்கள் அங்கே சென்று கட்சி தாவலாம் என்ற முறையை வைத்திருக்கிறார்கள். அது தவறான முறையாகும். அந்தச் சட்டம் இருந்தாலும்கூட, அந்தச் சந்து பொந்துகளிலே நுழைந்து, தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதனைத் தகர்க்கின்ற வகையில், தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு செயலாற்றி னால்தான், சிறப்பாகப் பணியாற்ற முடியும்.

இன்னும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவுதான் வசதி ஏற்படுத்தினாலும் கூட, ரெயில்வேயிலே பணம் கொடுத்து டிக்கட் ரிசர்வ் செய்தாலும்கூட, ரிசர்வ் செய்வது இல்லை.

டாப் பிரையாரிட்டி கொடுத்து ரிசர்வ் செய்ய ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலைமை இருக்கிறது. கேரள மாநிலத்திலே, 4,000 மைல் வரையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில், ரெயில்வேயுடன் பேசி 4,000 மைல் வரையில் பாஸ் கொடுக்க வசதி செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொகுதியிலே ஒரு அலுவலகம் இல்லாத நிலைமையிருக்கிறது. தொகுதியில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு அலுவலகம் என்று ஏற்பாடு செய்தாலும் சரி, அல்லது தலைமை இடத்திலே ஏதாவது ஒரு அலுவலகத்திற்கு ஏற்பாடு செய்தாலும் சரி, அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதியினுடைய பல காரியங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக அது அமையும். அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு முன்னவர் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று, பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Chairman, Sir,** I wish to say a few words about the present Demand—7. State Legislature. It is a very important Demand and it is managed by the Hon. Chief Minister so ably. I want to say a few words about this Demand so that things might be improved considerably.

With regard to mike arrangements, in the Assembly Hall for each row there are six seats but we got only two mikes. It is very difficult for members. I request the Government to kindly provide at least a mike for two seats so that members can move easily and approach the mike while speaking.

The second arrangement that I desire is tape-recording the speeches made by members in the House. This is done in so many Assemblies and in Rajya Sabha and Lok Sabha also. But only in this Assembly it is not done. The Hon. Minister may consider this sympathetically and allow tape-recording of speeches which will make things more ideal in this House.





Coming to the number of days, the Assembly meets, many other members have stated that the number of days should be increased. Only if the number of days are increased, members will be able to express their views in detail. Therefore that question may be considered.

Coming to office rooms for M.L.As. in their constituencies, as has already been suggested by other members, all the officers, even small officers have separate rooms. It is only the M.L.As. who do not have their own rooms to carry on their work. People who come to see the M.L.As. and the M.L.As. also experience lot of difficulties, they have no definite and convenient place to sit and discuss. Therefore there is necessity for an office room. In the Panchayat Union Council buildings, there are a number of rooms and one of them can be allotted to the M.L.As.

Next coming to the Library, I wish to point out that we have a very good library, but the books are old. Moreover, the space is quite inadequate. Therefore the space should be increase and also a Library Committee should be constituted. In Haryana State when we went there we learnt that there is a separate Library Committee. I suggest that upto date books may be supplied.

Further, the staff there have no work in the library when the Assembly and the Council meet late in the day. They have no proper accommodation there. The pay and the daily allowance to them may be increased.

Salary and daily allowance of M.L.As. have to be increased so that they may not feel any difficulty. I have given a number of cut motions about emoluments of members. All that reflects not only my idea, but the ideas of all other members here irrespective of party affiliations. I only express and they all feel.

The Hon. Speaker of the Lok Sabha also a few months ago has very clearly stated that the salary and allowances of M.L.As., M.Ps., etc. should be increased, as it is very difficult to carry on their work well in their constituencies.

We pass many Bills and discuss so many things in the Assembly and when we go back we have to explain all this to the people. Therefore facilities to Members should be increased.

My constituency, Hosur and Denkanikota are very hilly and I have to traverse forest areas also. It is very difficult to walk in those places. We have no vehicles and there are no good roads also. To provide all this may take some time. Therefore the emoluments of M.L.As. should be increased to meet the expenditure as stated by other members.

Our Assembly is considered to be an ideal Assembly. I therefore think that the difficulties of M.L.As. will be considered very kindly and all our requests would be met.

About questions. We give a number of questions. But when the Assembly is prorogued, all cease to have life. They lapse. We have to renew and again when the Assembly is prorogued, they again lapse. This should be put an end to. It should be arranged that questions do not lapse even though the Assembly is prorogued.

Coming to reading room in the Hostel, there is one. But all the journals and papers we get here are not placed there. Many members do not know what are the journals that are received. There is also lack of accommodation. I suggest that the area may be increased and all the journals and newspapers coming to the Library could be placed there.

I must say one word about the Hon Speaker also. When we express our difficulties, we should also speak about the Speaker. He has to discharge his duties in his constituency and therefore his salary may also be suitably increased.

With regard to letter heads and postage stamps, we get only a small number of envelopes and some white papers. I request that letter heads of M.L.As. may be printed by the Government and supplied to them. Also suitable covers may be supplied. Last year the envelopes supplied were very rough and it was difficult to write.

Regarding postage stamps we have to spend every day a good amount. Therefore I request that postage stamps may be supplied or some amount which Government feel convenient may be given. Everyday we have to go to the post office and get stamps. It is a costly affair.





Regarding pension to M.L.As., this is not the first time that this question has been referred. In other States they are considering this question, but they have not taken any decision; whatever it is, five years of the life of the M.L.As. is most important and whatever we are spending we are spending not for us, but for the people. Therefore as in some other States, the Hon Chief Minister and other Ministers may take this question into consideration. It is very necessary and desirable to pay pension to M.L.As. who work for the sake of the people.

With these. I close my speech.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்டமன்றம் நடக்கும் காலங்களில் சில குற்றச்சாட்டுக்களை சாட்டுகின்றோம். ஆனால் அது குறித்து எந்த விதமான நடவடிக்கையு எடுப்ப தாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மான்யக் கோரிக்கையிலும் சில அதிகாரிகள் மேலோ அல்லது பல சம்பந்தப்பட்ட இலாக்கர்க்கள் மீதோ நாங்கள் சில குற்றச்சாட்டுகளை சாட்டும்பொழுது சில குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளை சாட்டியிருக்கிறோம். அப்படியிருந்தும்கூட அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாக இதுவரையில் தெரியவில்லை.

(நண்பகல் 12.00)

மேலும் சட்டமன்ற நாட்களை அதிகமாக ஆக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கூறினார்கள். பட்ஜெட் கூட்டங்களிலாவது ஒவ்வொரு மானியக் கோரிக்கையை எடுக்கும்பொழுது, ஒரு முக்கியமான மானியக் கோரிக்கை வரும்பொழுது ஒரு நாள் என்பதை இரண்டு அல்லது மூன்று நாட்கள் என்று அதிகப் படுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள முற்படுகிறேன்.

பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிகளிலுள்ள கட்சி அலுவலகங்களில் டெலிபோன் வசதியில்லை. அங்கே பல ரூம்களில் மிகவும் அசுத்தமாக இருக்கிறது. எனவே அங்கே பாத் ரூம்களை அட்டாச் செய்து கொடுத்தால் தங்குவதற்கு ஏதுவாக இருக்கும். ஏனென்றால் பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பிரைவேட் ஆட்கள் அதிகமாக இருப்பதால் காலையில் 8 மணி,

8½ மணிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் புறப்பட வேண்டுமென்றால் முதலில் வந்து தங்கியிருக்கும் 'கெஸ்ட்' களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் குறிப்பிட்ட நேரங்களில் சட்டமன்றக் கூட்டத்திற்கு வர முடியாத அவல நிலைமை இருந்திருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ரூமிலும் பாத் ரூம் அட்டாச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பேசுவது குறித்து பத்திரிகை உலகில் சரியான முறையில் இருப்பதில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும் அத்தனை பேச்சுக்களையும் சட்டமன்றத்தின் மூலமாக ஒரு பத்திரிகையை ஏற்படுத்தி உலகுக்கு எடுத்துச் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற மாநிலங்களில் பத்தாயிரம் மைல்களுக்கு இலவச இரயில் வசதி செய்யப் படுகிறது. ஆனால் நமது மாநிலத்தில் பஸ்ஸுக்குத்தான் பாஸ் கொடுக்கப்படுகிறது. அதுவும் ஒருசில இடங்களில் சர்க்கார் பஸ் போகாத நிலைமையும் இருக்கிறது. அந்த இடங்களில் தனியார் பஸ்கள் செல்கின்றன. அந்த தனியார் பஸ்களில் இந்த பாஸ்களை உபயோகப்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, தனியார் பஸ்களிலும் உறுப்பினர்கள் செல்வதற்கு பாஸ் வசதியை ஏற்படுத்துவதற்கு முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மருந்துவ வசதியைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதி செய்யப்படுகிறது. ஆனால், அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பங்களிலுள்ள அத்தனைபேர்களுக்கும் இந்த மருத்துவ வசதியைச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் முதல் மாடியில் பல ரூம்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அங்கு பழுது பார்க்க முடியாத காரணத்தால் எப்பொழுது பார்த்தாலும் தண்ணீரில் நான் நின்று கொண்டு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே,





புது சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் முதலாவது மாடியிலுள்ள அத்தனை ரூம்களிலும் தண்ணீர் உடனடியாகப் போவதற்கு மிகவும் சீக்கிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் சுற்றிப் பார்ப்பதற்காக பஞ்சாயத்து யூனியன் ஜீப்பை மாதத்திற்கு இரண்டு நாட்களாவது ஒதுக்க வேண்டும். இல்லையென்றால் இப்பொழுது பெட்ரோல் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் யாருமே கார் வைத்துக்கொண்டு போக முடியாத சூழ்நிலை இருக்கிறது.

என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் ஒரு மையத்திலிருந்து கிளம்பினால் சுமார் 40 மைல்கள் போய்ச் சுற்றிப் பார்க்க வேண்டியிருக்கிறது. மலைப் பகுதியான இடங்களில் காரில் சென்றால்கூட போக முடியாத சூழ்நிலையிருப்பதால் அங்கெல்லாம் போவதற்கு வசதியாக பஞ்சாயத்து யூனியன் ஜீப் இருந்தால்தான் முடியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் மக்கள் பிரச்னைகளைக் கேட்டறிவதற்கு வசதியாக மாதத்திற்கு இரண்டு நாட்கள் ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பை உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய தொகுதியில் அலுவலகத்தில் டெலிபோன் வசதியைக் கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்கள் மக்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். சில சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்களுடன் மக்கள் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. பஸ் வசதியில்லாத இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பதால் மக்கள் சரியான முறையில் தொடர்பு கொள்ள முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, மக்களுடன் நேரடித் தொடர்பு கொள்ள டெலிபோன் வசதியிருந்தால்தான் நல்ல முறையில் இருக்கும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் டெலிபோன் வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு அறை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் கூறினார்கள். அதையே

[திரு. நா. வெ. குருசாமி] [1974 ஏப்ரல் 8

நானும் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சட்டமன்ற உறுப்பினருக்கு என்று தனியாக ஒரு அறை ஏற்படுத்த வேண்டும் அல்லது அப்படி அங்கு ஏற்படுத்த முடியவில்லையென்றால் அவர்கள் ஒரு ஆபீஸ் வைத்துக்கொள்வதற்காக பணத்தையாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Hon. Chairman, Sir, sufficient has been said about the difficulties experienced by the legislators. But what I have to say is this. An impression is gaining ground among the public that the legislators are paid high salary. Hon. Members might have also seen in some important papers from the letters to the Editors many important public men are questioning why these legislators should be paid such high salaries, as if they are paid high salaries.

I think the total income of a Legislator does not exceed Rs. 6,500 per year inclusive of all allowances. In some of the national newspapers, in some of the big and well established papers and well-informed papers letters are published as if the Legislators are paid Rs. 25,000 or 30,000 per year.

Another thing I would like to mention about is the importance given to the legislature proceedings. The importance given to the coverage of proceedings of the Legislature is dwindling in newspapers. Perhaps, it may be due to scarcity of papers or due to non-availability of papers. But we find in certain national newspapers, out of 10 pages, 6½ pages are given for advertisements and 3½ pages are set apart for publishing of news. For the Assembly proceedings only one or one and half columns are provided. I do not want to go beyond that. I can say only that much.

Regarding problems of M.L.As., particularly members in the City, I have to make a few representations because you are also coming from the City. I want to bring to the notice of the Government one thing. If I stay in the Legislators' Hostel, at least local calls are free to me. If I book calls from my house, I have to pay through my nose for all the calls that I make. Almost 90 per cent of the calls are made only in connection with the legislature



1974 ஏப்ரல் 8] [Thiru K. M. Subramaniam]

business or public business. I think the local M.L.As. also should have the right to free calls. I request the Government to pay at least a portion of the telephone bills so that the city M.L.As. need not pay the amount out of their pockets.

As regards allowances, we are paid Rs. 35 per day when there are Assembly meetings or Committee meetings and a salary of Rs. 350 per month or whatever you may call that. I think in to-day's cost of living it would be very difficult to manage. The cost of living is going up day by day—it is not for the sake of representation I am making this plea—I am making this appeal because of the difficulties that we experience as legislators.

Unless the salary of legislators is raised to Rs. 500 minimum per month, we will not be able to survive as M.L.As. at all. We should not feel shy to make our representations. After all, to-day a higher grade clerk is able to get Rs. 500 per month whereas we are getting only Rs. 350 per month. The pity is this. The people do not understand and appreciate our difficulties and the amount of work the legislators have to do.

We have to go through a number of books that are delivered at our houses at 9 O'clock in the night. We have to work late in the night to study the papers. Honestly I would like to submit that I have to work till 11 O' clock in the night. People think that 'M.L.As.' work is gambling. I would say that gambling is also a human activity. It is because of such scandalous talks an impression has been created among the general public that the M.L.As. are idling their time. I would say that the M.L.As. are neither idling their time nor wasting their time. Actually M.L.As. have to go through various papers and books whenever there is a discussion on a subject in the Assembly. I would like to say that for taking part in a discussion the M.L.As. have to work like school boys appearing for S.S.L.C. or Intermediate Examinations.

So that impression also has to be removed. So far as local M.L.As. are concerned, there is no room for them in the Legislators' Hostel and therefore their telephone bills must be met by the Government.

[Thiru K. M. Subramaniam] [1974 ஏப்ரல் 8

Definitely there is a case for the increase of salary. I think the Hon. the Chief Minister and the entire Cabinet should look into the matter. It is very difficult for an M.L.A. to live with Rs. 350.

Thirdly, with regard to conveyance, the district M.L.A.s have been asking that at least a jeep from the Panchayat Union should be provided for their use. But how can you Mr. Chairman, and I get jeeps? In the City we cannot get jeeps from the panchayat or municipality. So, I think there is a case for an extra conveyance allowance for City M.L.As. if they expect work from us and they do expect work from us. To be honest, I have to say that we have to fight out our case. Some Hon. Friends have mentioned that in other States more amenities are given to M.L.As. but I do not want to say anything on that. At the same time I want that there should be some prestige attached to M.L.As. They should live well. Of course, my Hon. Friend belonging to the Muslim League has stated that M.L.As. should live like saints. But we are all human beings and we have got certain failings. So long as those defects do not affect our work, I do not think that anybody will quarrel with us. What is wrong in playing cards in a City Club? There is nothing wrong in it.

Once again I request that the salary must be increased to Rs. 500.

Thank you, Sir.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சில கருத்துக்கள் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டசபை அங்கத்தினர்கள் இன்றைக்கு அவர்களுக்கு இருக்கக் கூடிய கடமைகளைச் செய்யக்கூடிய போது எந்த அளவுக்கு வசதி பெற்றிருக்கிறார்கள் என்ற கோணத்தில் இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டும்.

ஒவ்வொரு சட்டசபை அங்கத்தினரும் ஒரு லட்சம் வோட்டர் களைக் கொண்டிருக்கும் தொகுதியின் பிரதிநிதிகளாக வந்திருக் கிறார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் 100 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்த ஒரு லட்சம் மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்துப் பணி புரிவதற்கேற்ற வகையில் வசதி வாய்ப்புகள்



974 ஏப்ரல் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

ருக்கின்றனவா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகம் பூராவுக்கும் ல பொதுப் பிரச்சினைகளிலும் தங்களுடைய கருத்துக்களை டுத்துச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள் ன்பதையும் மறந்துவிடுவதற்கில்லை.

இந்த அடிப்படையில் பார்த்தால் இன்று இந்த சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம், படி—மற்ற நிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று சொல்ல ில்லை—ஆகியவை இன்றைக்குள்ள பண வீக்கத்தில் போதுமான ாக இல்லை என்பதை யாரும் மறுத்திட முடியாது. இன்றைக்கு ங்கு பார்த்தாலும் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக பஞ்சப்படி அதிகரிக்கப்பட வேண்டும், சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டு மென்று குரல் எழுப்புகிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களுக்கு ன்று இருக்கும் நிலைமையில் அவர்களுக்குக் கொடுக்கப்படக் டிய 250 ரூபாய் சம்பளம் 100 ரூபாய் படி ஆக 350 ரூபாய் பாதுமா என்று பார்க்கும்போது, உண்மையான ரூபாயின் திப்பு 18 காசு என்று கணக்கிடும்போது, பழைய 100 ரூபாய் அளவுக்குத்தான் வருகிறது என்பதைப் பார்க்க முடியும்.

சட்டசபையில் பலதரப்பட்ட அங்கத்தினர்கள் இருக் கிறார்கள். இயல்பாகவே பணக்காரர்கள் இருக்கிறார்கள். தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள். வக்கீல்கள் இருக்கிறார்கள். சட்ட சபை வேலையை கவுரமாக வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். ல்வேறு திறுசாக இருக்கும் நிலைமையில் அரசியலையே ாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்ய வண்டுமென்ற நோக்கத்துடன் இதுவரை காலம் தள்ளியிருப் வர்கள் தற்செயலாக சட்டசபையில் அமர்ந்திருப்பவர்கள் அவர் களுடைய கடமைகளைச் செய்வதில் பல கஷ்டங்கள் இருக் ின்றன.

தபால் கட்டணங்கள் ஏறிவிட்டன. போக்குவரத்துக் ட்டணங்கள் ஏறிவிட்டன. வாழ்க்கைத் தரம் ஏறிவிட்டது. ட்டசபை அங்கத்தினர்களுக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் ழுத வேண்டுமென்றால் தபால் செலவுக்கு குறைந்தது

30 ரூபாயாவது ஒதுக்கி வைக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிச் செய்யவில்லையென்றால் கடமையைச் செய்தவர்களாக முடியாது.

சட்டசபை அங்கத்தினர்கள் என்று சொல்லும்போது பணக்காரர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் வரும் வாக்காளர்களை அவர்கள் எப்படிப் பராமரிக்கிறார்கள் என்று பார்க்கும்போது என்னைப் போன்ற சட்டசபை அங்கத்தினர்கள் என் வீட்டுக்கு வருகிற பத்துப் பேருக்கு குறைந்த பட்சம் 10 டீயாவது கொடுக்க வேண்டும். சாதாரணமாக மனித தர்மம், தமிழ் நாட்டுப் பண்பு அடிப்படையில் சில அத்தியாவசியமான செலவுகளைச் செய்து தான் தீரவேண்டும். ஆகவே, சட்டசபை அங்கத்தினர்கள் தொகுதியில் இருக்கும் கடமைகளைச் செய்ய இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் ஓரளவு சம்பளத்தை உயர்த்தி மொத்தமாக எல்லாம் சேர்த்து 500 ரூபாயாவது கொடுக்கக்கூடிய நிலைமை வருகிறது. சுகபோக வாழ்வு நடத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. அத்தியாவசியமான கடமைகளைச் செய்ய வேண்டிய அளவுக்கு, திறம்பட வேலை செய்ய வேண்டிய அளவுக்கு இதனைக் கொடுக்க வேண்டும்.

சபை கூடுவதைப் பற்றிப் பல பேர் கூறினார்கள். சபை அதிக நாள் கூட வேண்டுமென்று சொல்லும்போது பாட்டா பணம் வாங்குவதற்காக என்ற முறையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. 234 அங்கத்தினர்களும் குறைந்த பட்சம் ஏதாவது ஒரு விவாதத்தில் 10 நிமிஷமாவது பேசக்கூடிய அளவுக்கு சபையை எத்தனை நாட்களுக்குக் கூட்டினால் அங்கத்தினர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற அடிப்படையில் பார்த்து நிச்சயமாக அதிகமான நாட்கள் கூட்ட வேண்டும். அப்போதுதான் இப்படி இரண்டு நிமிஷம், ஒரு நிமிஷத்தில் பேச்சை முடித்துவிடக் கூடிய நிலைமை மாறும். அந்தந்தக் கட்சியின் கருத்துக்களைத் திறமையாக எடுத்து வைக்க முடியும்.

குறிப்பாக, பட்ஜெட் செஷனையாவது குறைந்த பட்சம் முக்கியமான மானியங்களுக்கு எல்லாம் இரண்டு நாட்கள் ஒதுக்கி அதிகப்படியான நாட்கள் கூட்டவேண்டும். கணக்கைச் சொல்வதில் பயன் இல்லை. 1957-ல் 40 நாட்கள்தான் கூடிற்று, இப்போது





அதிகமான நாட்கள் கூடுகிறது என்று சொல்வதில் பயன் இல்லை. இன்று எண்ணிக்கை அதிகமாகிவிட்டது; பிரச்சனைகள் அதிகமாகி விட்டன. ஜனநாயகத்தில் பல பிரச்சனைகளை சட்டசபை அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, அதிகப்படியான நாட்கள் கூட்ட முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரயாணம் என்பது பெரிய பிரச்சனை. அங்கத்தினர்களுக்கு பஸ் டிக்கட் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்கள் அதிலே நீண்டதூரம் பிரயாணம் செய்து பார்க்கவேண்டும். அந்த அனுபவம் அவர்களுக்கு வேண்டும். திருத்துறைப்பூண்டியில் பஸ்ஸில் ஏறி இரவு முழுவதும் கண்விழித்து விடியற்காலை இங்கு வந்து சேர்ந்தால் மூன்று நாட்களுக்கு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும், மருந்து சாப்பிட வேண்டும், உடம்புக்கு வேண்டிய போஷாக்கு பண்ணிக்கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இதனால் நான் பஸ்ஸைக் குறை சொல்லுவதாக எடுத்துக் கொள்ளவேண்டாம். கூடுமான வரையில் அதிகப் பிரயாணத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் இவ்வளவு கிலோ மீட்டர் தான் ஒரு அங்கத்தினர் ஒரு வருஷத்தில் பிரயாணம் செய்யலாம் என்ற முறையில் ரயிலில் முதல் வகுப்பு பாஸ் கொடுத்தால் ஓரளவு அங்கத்தினர்கள் அவர்களுடைய கடமையைச் செய்ய வாய்ப்பு ஏற்படும். இதையும் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபை அங்கத்தினர்களுக்கு உள்ளபடியே ஒரு அந்தஸ்து இருக்கிறது. ப்ரோடகோலிலேயே பார்க்கலாம். உத்தியோக பூர்வமான ஃபங்க்ஷனில் முன்னாலே உட்கார வைக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்தஸ்து இருக்கும்போது பொது மக்கள் மத்தியில் நாங்களும் அந்தஸ்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்ற முறையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும்.

சிலபேர் பணக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சம்பளத்தை வேண்டாமென்று எழுதிக் கொடுத்து விடலாம். சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் 12 மணிக்கு அசெம்பிளியை முடித்து விட்டு ஒரு மணிக்கு ஹைகோர்ட்டுக்குப் போய் 500 ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 ஏப்ரல் 8

வர்கள் சம்பளத்தை வேண்டாமென்று எழுதிக் கொடுக்க ஆல்
இருக்கிறது. வசதியாக இருப்பவர்கள், வேறு தொழில் செய்து
சம்பாதிக்கக்கூடியவர்கள் சம்பளம் வேண்டாமென்று எழுதிக்
கொடுக்க முடியும். அப்படி எழுதிக் கொடுத்து விட்டால் வசதி
இல்லாதவர்களுக்கு இந்த வசதிகளை உயர்த்திக் கொடுக்கும்படி
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டசபை ஹாஸ்டல் பற்றி பேச்சு வந்தது
அது சரியல்ல என்பது என் அபிப்பிராயம். தனிப்பட்ட உறுப்பி
னர்களின் ஒழுக்கம் பற்றி பேசுவது washing dirty linen
in the public என்று சொல்வார்களே, அதுபோலாகும்
அது அவ்வளவு சரியானதல்ல. அதனால் சட்டசபை
உறுப்பினர்கள் மத்தியில் உள்ள உறவு கூட கெட்டுவிடும்.
வேண்டுமானால் அதுபற்றி தலைவர் அவர்களுக்கு எழுதியனுப்
பலாம், அல்லது முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுதியனுப்
பலாம், அல்லது சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் கூட்டி
முன்னவர் அவர்களை வைத்துக்கொண்டு நிலவரத்தைப் பற்றி
பேசித் தீர்த்துக்கொள்ளலாம். அதல்லாமல் சபையில் அதைப்
பற்றிப் பேசுவது என்றால் கரடு தட்டிப் போகும் அளவிற்கு, அது
நீடிக்கும் முறைக்குக் கொண்டுவந்துவிடும். ஆகவே இந்த
விவாதத்தில் அந்தப் பிரச்சனை வந்திருப்பது ரசிக்கக்கூடிய
வகையில் இல்லை. நண்பர்கள் என்ற முறையில் கூடிப் பேசி
தீர்த்துக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, உறுப்பினர்கள் தொகுதியில் சுற்றிப் பார்க்க
யூனியன் ஜீப்களை கொடுப்பது என்பதற்கு வசதி செய்து
கொடுக்கும் விதத்தில் சில விதிகளை ஏற்படுத்தி அந்த வசதியைச்
செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் மக்களிடையே
சென்று கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும். என்
தொகுதியில் இரண்டு பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன.
அங்கு சொல்லி அனுப்பினாலும் சில நேரங்களில் கார் வருவதில்லை,
அங்குள்ள ஜீப்களும் சரியான முறையில் ஓடாத நிலையில்
இருக்கின்றன. சொந்தத்தில் செலவழிப்பது என்றால் ஆயிரம்
ரூபாய் செலவழித்தால் தான் முடியும். டாக்ஸி, பெட்ரோல்
செலவு அந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே சர்க்காரின்
கடமையில் ஒன்று என்ற விதத்தில் எம்.எல்.ஏ.க்களுக்கு தங்கள்



1974 ஏப்ரல் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து உத்தியோகபூர்வமான
காரியங்களைக் கவனிக்கத் தக்க விதத்தில் தக்க ஏற்பாடுகளைச்
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி யூனியனில் ஒரு அறை கொடுப்பது. பஞ்சாயத்து
தலைவர்களைச் சந்திப்பது மக்களைச் சந்திப்பது என்ற அடிப்படை
யில் சில ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது சிறப்பாக இருக்கும்.

உறுப்பினர்கள் சிறப்பாக பணி புரிந்தால் இந்த அரசுக்குப்
பெருமை. உறுப்பினர்கள் சிறப்பாக பணிபுரிந்தால் தமிழகம்
நல்லமுறையில் போகிறது என்ற புது எண்ணத்தை ஏற்படுத்த
வசதியாக இருக்கும். முதல் அமைச்சர் அவர்கள் முதல் அமைச்ச
ராக வருவதற்கு முன்பு எம். எல். ஏக்களின் கடமைகளைப் பற்றித்
தெரிந்திருப்பார்கள் என்பதால் எனது கருத்துக்களை பரிசீலனை
செய்து ஆவன செய்வார்கள் என்று கூறி என் பேச்சை முடித்துக்
கொள்கிறேன்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, மாநிலச்
சட்டமன்ற மானியக் கோரிக்கையைப் பற்றி என் சார்பாகவும்
என் கட்சி சார்பாகவும் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத்
தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல முன்வருகி
றேன்.

தமிழக சட்டமன்றம் மிகப் பெரும் பாரம்பரியம் வாய்ந்தது
என்பதை நாம் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்கிறோம். இந்த
முறை தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என்பதற்காக நாம்
அனைவரும் ஒருமித்த கருத்தோடு இனிமேல் பாடுபடுவது சாலப்
பொருத்தமாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகி
றேன். நம் அரசியலமைப்பில் சட்டமன்றத் துறை, நிர்வாகத்
துறை, நீதித் துறை என்ற பிரிவுகளை ஏற்படுத்தி செயல்பட்டுக்
கொண்டிருக்கிறோம். நம்முடைய சட்டமன்றத் துறையைப்
பொறுத்தவரையில் தலைமைச் செயலாளர் கண்காணிப்பில் இருக்
கிறது என்பதை நாம் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளவதா, வேண்
டாமா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். எப்படி
நிர்வாகத்துறையும் நீதித் துறையும் தனித்தனியாக இருக்க
வேண்டுமோ அதேபோல் சட்டமன்றத் துறையும் ஒரு தனித்தன்
மையோடு இயங்கவேண்டுமென்பதில் நாம் சற்று சிந்தித்துப்
பார்ப்பது சாலப் பொருத்தமாக இருக்கும்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 ஏப்ரல் 8

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

பணி புரிகிற செயலாளர் யாருடைய கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இல்லாத அளவிற்கு தன்னுடைய கடமையை ஆற்றுவதற்கு நாம் வழி வகுக்கவேண்டும். பணியாற்றுகிற துணைச் செயலாளர்கள் நிர்வாகத்துறையின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இல்லாத அளவிற்கு சட்டப் பேரவைத் தலைவர், செயலாளர் ஆகியோருடைய கட்டுப்பாட்டின்கீழ் வருகின்ற அளவிற்கு நாம் இத்துறையின் அமைப்பை உருவாக்குவது நம்முடைய சட்டமன்றப் பணிகளை மேலும் செம்மைப்படுத்துவதற்கு நாம் வழிவகுத்தவர்களாவோம்.

இங்கு பணியாற்றுகிற இதர அலுவலர்கள் எந்தெந்தத் துறைகளிலிருந்து வந்து பணியாற்றுகிறார்கள், எத்தனை காலமாக பணியாற்றுகிறார்கள், என்ன அனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், பெற்ற அனுபவத்தை முழுக்க, முழுக்க, சட்டமன்ற துறைக்கு செய்கிறார்களா என்றால் திடீர் என்று வேறு துறைக்கு மாற்றப்படுகிற சூழ்நிலையும் வேறு துறைகளிலிருந்து இங்கு பதவி உயர்வு தருகிற சூழ்நிலையும் இருப்பதை இப்போதைய நிலையில் நாம் பார்க்கிறோம். ஆகவே சட்டமன்றத் துறை தனியாகச் செயல்படுவதற்கு நாம் வழிமுறை காண வேண்டும்.

சட்டமன்ற செகரட்டேரியேட்டை நாம் உருவாக்கினால் இந்தச் சூழ்நிலை இல்லாமல் நாம் பாதுகாக்கமுடியும் என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டமன்றத் துறையில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். டெல்லியில் பார்லிமெண்டரி அஃபேர்ஸ்-ஐக் கவனிப்பதற்காகவே ஒரு தனி அமைச்சரகத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் நம் மாநிலத்தில் இதுபோன்ற ஒரு அமைப்பு முறை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆராய்ச்சிப் பிரிவுக்குச் சென்றால் தகுந்த ஆலோசனைகள் வழங்குகிற அளவிற்கு அங்கு அனுபவம் உள்ளவர்கள், பயிற்சி பெற்றவர்கள் இல்லாத நிலையைப் பார்க்கிறோம். ஆகவே டெல்லி நாடாளுமன்றத்தில் இருப்பதைப் போல் இங்கும் ஒரு தனிப் பிரிவுக்கு ஏற்பாடு செய்து சட்டமன்ற



1974 ஏப்ரல் 8] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

உறுப்பினர்களுக்குத் தேவையான தகவல்களைத் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தமிழக சட்டமன்ற நூல் நிலையம் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது என்று நாம் ஒருகாலத்தில் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தோம். இன்று என்ன நிலைமை என்றால் அந்தப் பெருமை குறைந்து அதிக நூல்கள் இல்லை என்கிறநிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டு நாம் ரூ. 8,000 தான் ஒதுக்கியிருக்கிறோம். ஒதுக்கப்பட்ட தொகை போதாது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் பல மாநிலச் சட்டமன்ற நிகழ்ச்சிகளையும், பாராளுமன்ற நிகழ்ச்சிகளையும் நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்கிற அளவிற்கு இன்னும் பல நூல்களை வாங்கி நூலகத்தைப் பெருக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

சட்ட மன்றச் செயலாளர் அவர்களை வேறு எந்தப் பணியிலும் ஈடுபடுத்தக்கூடாது. சட்டமன்றப் பணியைத் தவிர வேறு எதையும் கவனிக்கிற அளவிற்கு ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கக் கூடாது என்பது என் தாழ்மையான வேண்டுகோளாகும்.

மேலும் குழுக்கள் அமைக்கிற நேரத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு துணைச் செயலாளரை நாம் போட்டு அந்தக் குழு ஆற்றுகிற பணிகளைக் கண்காணிக்கவும் சொல்கிற கருத்துக்களை நிறைவேற்றுவதற்கும் ஒரு நல்ல சூழ்நிலையை இனிமேலாவது உருவாக்க வேண்டுமென்று நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றம் கூடுகிற நாள் மிகமிகக் குறைவாக இருக்கிறது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டில் பிரச்சனைகளை ஆராய வேண்டிய நாம் கூடிக் கலைகிற நிலை இல்லாமல் பல நாட்கள் கூடி நம் விவாதத்தை விரிவுபடுத்தி நல்ல கருத்துக்களைக் கூறி என்னென்ன விளக்கங்கள் அளிக்கவேண்டுமோ அவற்றை அளிக்கும் விதத்தில் அதிக நாட்களை விவாதத்திற்காக ஒதுக்குவது சாலப் பொருத்தமாகயிருக்கும்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 ஏப்ரல் 8

ஒதுக்குகிறார்கள். இதிலும் பாகுபாடு காட்டப்படுவதாக வெளியில் பேசிக் கொள்கிற காரணத்தால் அந்தப் பாகுபாட்டைத் தடுப்பதற்கு பேரவைத் தலைவர் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சட்டப்பேரவைத் துறையைப் பொறுத்தவரையில், எத்தனையோ கேள்விகள் கேட்கிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வருகிறோம். உரிமைப் பிரச்னை எழுப்புகிறோம். இப்படிக் கொடுக்கிறபோது பேரவைத் தலைவர் உறுப்பினர் யார் என்று பார்க்கக் கூடாது. எந்தக் கேள்வியைக் கேட்டாலும் ஒரு காரணத்தைக் காட்டி, சில பல நேரங்களில் காரணத்தைக் காட்டாமலும், அவை திருப்பியனுப்பப்படுகின்றன என்று நான் சுட்டிக் காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் ஏராளமான கேள்விகள் கொடுத்து இருக்கிறேன். இருந்தாலும் பல கேள்விகள் திருப்பியனுப்பும் நேரத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருப்பதால் திருப்பியனுப்பப்படுகிறது என்று காரணம் காட்டுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், கல்லணைக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி டிஸ்அலவ் செய்ததைப் பற்றி சட்டசபையில் பேசக்கூடாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஏற்கனவே பல உறுப்பினர்கள் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாகச் சொன்னார்கள். கோவை செழியன்கூட 150 கேள்விகள் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார்கள். இந்தத் தொடர் கூட்டத்தில் 4 தான் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாகக் கேட்கிற நிலைமை வேறு. ஒவ்வொரு கேள்வியாக எடுத்துப் படித்து, அது டிஸ்அலவ் செய்யப்பட்டிருக்கிறது என்று பேசுவது முறையல்ல.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இப்படிப்பட்ட கேள்விகள் திருப்பியனுப்பப்படுகிற நேரத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அல்லாதவர்களிடமிருந்தும் கேள்விகள் வருகின்றன. அவற்றைப் பார்த்தும் பேரவைத் தலைவர் பரிசீலிக்க வேண்டுமா? யார் யாரோ



1974 ஏப்ரல் 8]

கேள்விகள் அனுப்புகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்களே கேள்விகளை அனுப்பவேண்டும். அதிலே சில கேள்விகள் எப்படியெப்படி வருகின்றன என்று தெரியும். அதற்கான விளக்கங்களையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அறையில் வந்து கேட்பது தான் சரி. இங்கே பேசுவது முறையல்ல.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களும் இந்தச் சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினர்தான். ஆகவே, உறுப்பினர்களுக்கு இருக்கின்ற எல்லா உரிமைகளும், கடமைகளும், பேரவைத் தலைவருக்கும் இருக்கிறது என்பதை நான் சில சான்றுகளைக் காட்டி சுட்டிக்காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். (குறுக்கீடு) தலைவரவர்களைப் பற்றி நான் குறிப்பிடப்படவில்லை. அவர்களுடைய நிகழ்ச்சியைப்பற்றி சிலவற்றைச் சுட்டிக்காட்டுவது நம்முடைய . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவது சரியல்ல. பாராட்டியும் பேசக் கூடாது, பழித்தும் பேசக் கூடாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பேரவையில் நடக்கும் சில முறைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். அவரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. நம்முடைய அவையில் நமக்கு ஒரு சில விதிமுறைகள் இருக்கின்றன. இந்த விதிமுறைகளைப்பின்பற்றி நம்முடைய சட்டமன்றத்தை நடத்துவது நம்முடைய மரபாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமைப் பிரச்னை எழுப்பிய நேரத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே பேசக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒரு சில பிரச்னைகளைப் பற்றிப் பேசுவதற்கு இந்த மானியக் கோரிக்கையைப் பயன்படுத்துங்கள் என்று தாங்களே சொன்னீர்கள். ஆனால் இன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையில் என்ன பேசலாம் என்று சொன்னால், இந்தத் துறை பற்றி பேச வேண்டும். பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பு, நடவடிக்கை பற்றி பேசக்கூடாது. சட்டமன்றத்துறை மானியமாக இருந்தாலும் அவற்றைப் பற்றி இதில் பேசக்கூடாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆகவே, நம்முடைய சட்ட மன்றத்திற்கு நல்ல பாரம்பரியம் உள்ளது என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே, அந்தப் பாரம்பரியத்தை தொடர்ந்து நடத்துவதற்கு நாம் ஒவ்வொரு உறுப்பினரும் உதவி புரிய வேண்டும்.

சட்டமன்ற விடுதியைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவர் சொன்ன கருத்துக்களை நாம் அத்தனை பேரும் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இருக்கின்ற குறைபாடுகள், நடக்கின்ற சில நிகழ்ச்சிகள், இவற்றை அப்படியே விட்டுவிட்டால் வரும் காலத்தில் நம்முடைய தமிழக சட்டமன்றத்தின் பாரம்பரியமும், பெருமையும் கொஞ்சம் கீழே இறங்கும் நிலை வந்து விடும். ஆகவே, பேரவைத் தலைவர் கண்காணிப்பாக இருந்து, அத்தனை உறுப்பினர்களும் கட்டுப்பாடு உணர்வோம், கடமை உணர்ச்சியோடும் செயலாற்றி தமிழகத்தில் ஒரு நல்ல பாரம்பரியத்தை உருவாக்குவதற்கு நல்ல யோசனை எடுத்து வைத்து செயலாற்றுவது சாலப் பொருந்தமாக இருக்கும். ஆகவே, அந்த முறையில் நம்முடைய அவை நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் சார். பெரியவர் கனம் மணலி பேசுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் வக்கீல் தொழில் செய்தும் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று சொன்னார்களாம். உண்மையிலேயே சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்வதால், வக்கீல் தொழில் செய்ய முடியவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொன்னார்களாம் என்றீர்கள், நீங்கள் கேட்கவில்லையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வழக்கறிஞர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதால் அவர்கள் வேறு வேலை செய்ய முடியவில்லை. அப்படி இருக்கும்போது, தவறான முறையில் அவர் சொல்வது சரியல்ல. ஆகவே, அவற்றை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது ஒன்றும் தேவையில்லை.

THIRU B. VENKATASWAMY : Mr. Speaker, Sir, I want to, offer a few remarks regarding the State Legislature Demand. Many members have spoken extensively on this Demand, spoken about the facilities to be provided for legislators, etc. I also wish to offer a few remarks regarding the facilities to the members, to the staff of the Legislature and also to the Ministers. Nobody has told about Ministers. They are also our colleagues and they must be given good facilities.

Regarding our honorarium, I am sorry to state that most of the members including ruling party members and Opposition party members are suffering a lot. The increase in cost of living has added to our burden. Previously people were not going to M.L.As. but now the story is different. So many people come to us and we have also to contact our constituency people often to hear their grievances and try to do the needful. So the burden of legislators has increased. So it is necessary that their facilities should be increased so that they could do justice to the people.

Regarding tape-recording, I wish to state that previously I was speaking in Telugu. But my speeches had not been recorded because there was no tape-recording system. It is necessary to record every word spoken and for that facilities may be provided by having tape-recorder so that the exact words spoken may be got. It will be very useful for members.

Regarding phone, all the party offices should be provided with phone as is done in Mysore. That will facilitate our doing good to the people.

Regarding peons working here, they have put in more than four or five years service but still they have not been confirmed. That should be done.

Regarding library, there are no good facilities. You must have good facilities if M.L.As. were to sit and read books calmly. But actually it is congested. It is better to give more facilities. Regarding peons working there, the daily batta of Re. 1/- is not at all sufficient. It is meagre. They are also working like us from morning to night and the daily allowance should be increased This may be considered.

Regarding railway passes, I hope the Hon. Minister will announce the same in his reply. That is very necessary. Today morning I came by bus. What amount of difficulty I underwent. Even now I am tired and I feel sleepy. Such thing will not be there if we travel by train. Our discomforts should be minimised. Then we can be more brisk and do more service to the people. I hope the Hon. Chief Minister will grant railway passes for us and announce the same in the House.

I regret to say that no facility has been given to M.L.As. for recreation. We require recreation to make our minds more alert. But facilities for recreation are not there.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரெக்ரியேஷனுக்கு நேரம் எங்கே தொகுதி மக்கள் விட்டு வைக்கிறார்கள்?*

THIRU B. VENKATASWAMY: In the evening time, facilities may be provided for playing of volley ball and some indoor games. That will improve our health.

Regarding the premises of the hostel, I want to say that more Whenever we want cloth or bed-sheet, it should be made available. Otherwise the reply of "no store-keeper, Sir, he will come tomorrow" is given. If one is there always by turns, it will facilitate things.

Regarding the premises of the hostel, I want to say that more gardens should be provided with benches, etc., so that we can sit there in the evening and enjoy good music and also 'pranthiya seithigal'. Now we have to sit on the parapet wall and hear the same. Gardens may be raised and maintained beautifully there.





One Manager should be posted to the hostel so that he could attend to calls of M.L.As. and provide them the necessary information they require about the State. He can act as guide to M.L.As. and provide us all the information we need.

We must also provide quarters for the staff working in the Hostel. The Hon. Minister in charge of Housing Board is there and he can consider this request.

I have given a cut-motion that we should be given scooters. I stressed it last year also. I hope the Hon. Chief Minister would agree to it this year. Many of us are not in a position to go in for a car in these days of petrol scarcity and high cost of petrol. When you are giving scooters to all why should the M.L.As. be deprived of that facility? Many of us would like to go in scooter. I hope the Hon. Leader of the House will consider this request sympathetically and do the needful.

With these words, I conclude my speech.

**திரு. நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவை முன்னவரால் கொண்டுவரப்பட்ட இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.*

*முதலாவதாக ஆளும் கட்சியினரின் சார்பிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. காலையில் நீங்கள் கொடுத்த விவரங்களிலிருந்து பார்த்தால்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நிச்சயம் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்—கேள்வி நேரத்தில் 100-க்கு 6 கேள்விகள் என்ற அளவுக்குத் தான் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு நேரம் கிடைத்திருக்கிறது. 100-க்கு 94 கேள்விகள் சராசரி எதிர்க்கட்சியினருக்கு போய் இருக்கிறது. நீங்கள் கொடுத்த பட்டியலிலிருந்து, உங்கள் அறிக்கையிலிருந்து நாங்கள் தெரிந்து கொள்கிறோம். எதிர்க்கட்சியினர்கள் உள்ளபடியே இவ்வளவு சலுகைகள் பெற்றதற்குப் பின்னாலே தொகுதிகளில் போய் ஆளும் கட்சி உறுப்பினர்கள் செயல்படுவதில்லை என்ற ஒரு எண்ணத்தை மக்கள் மத்தியில்*

ஏற்படுத்துகிறார்கள். அவையினுடைய தலைவர் என்ற வகையில் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து சமமாக எங்களுக்கு நேரம் ஒதுக்கித் தரவேண்டும். நாங்கள் அதிக எண்ணிக்கை உடையவர்களாக இருந்தாலும், ஐம்பது சத விகித நேரத்தை ஆளும் கட்சியினருக்கும், 50 சத விகித நேரத்தை எதிர்க் கட்சியினருக்கும் என்ற அடிப்படையிலாவது நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று நான் முதன் முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எதிர்க்கட்சியில் இருப்பதன் காரணமாக அவர்கள் சில சலுகைகளைப் பெறுகிறார்கள். விதி 42-ன் கீழ் அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொண்டு வருகிறார்கள். ஆனால் அன்றாடம் சில நேரங்களில் நடைபெறுகிற திடுக்கிடும் தகவல்கள். சில பரபரப்பான தகவல்கள் பற்றி அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே ½ மணி நேரமாவது 'ஸீரோ ஹவர்' என்று வைத்து, அதில் ஆளும் கட்சியினரும் பங்கு கொள்வதன் மூலம் நாட்டில் நடைபெறுகின்ற இப்படிப்பட்ட விவகாரங்களை ஆளும் கட்சியினரும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், திடீரென்று மின்சாரம் ஒரு ஊரில் நின்று போய்விட்டது, சில இடங்களில் மின்சாரம் கிடைக்கவில்லை என்றால், ஏதோ எதிர்க் கட்சிக்காரர்கள் தான் விவசாயிகளிடத்தில் அக்கறை கொண்டு இந்த மன்றத்தில் எடுத்துக் கூறுகிறார்கள் என்பது போலவும். ஆளும் கட்சிக்காரர்கள் அதைப்பற்றி கவலைப்படுவதில்லை என்பது போலவும் ஒரு எண்ணத்தை மக்கள் மத்தியிலே ஏற்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாகிறது. ஆகவே, ஆளும் கட்சித் தரப்பினர்களும் எங்கள் ஊரில் மின்சாரம் கிடைக்கவில்லை, மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது என்றால் அதை அவை முன்பு எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் வகையில் அரை மணி நேரமாவது 'ஸீரோ ஹவர்' என்று ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து நம்முடைய பேரவைத் தலைவர் அவை முன்னவரோடு கலந்து அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, இங்கே பல உறுப்பினர்கள் பல விஷயங்களைப்பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக சட்டமன்ற விடுதிகளில் சில வசதிகள் தேவை என்று சொன்னார்கள். அங்கே சில வசதிகள் செய்து கொடுப்பது வரவேற்கத் தக்கது என்று நான் நினைக்கிறேன். கோவை செழியன் அவர்கள் இதிலே கட்சி வேறுபாடு இல்லை என்று சொன்னார்கள்.

எம்.எல்.ஏ-க்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக இந்தப் பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு எந்த அளவுக்கு சம்பளம் இருந்தால் கட்டுப்படியாக இருக்கும் என்பது மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். அவர்கள்தான் நிதி அமைச்சராகவும் இருக்கிறார்கள். உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், அமைச்சர்களுக்குங்கூட சம்பளத்தை கொஞ்சம் ஏற்றிக் கொள்ளலாம். 480 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இதிலே ஒரு கோடி ரூபாயாவது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் செலவு செய்வதில் தவறில்லை.

ஆந்திராவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 300 ரூபாய் சம்பளமும் 200 ரூபாய் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். ராஜஸ்தானில் 300 ரூபாய் சம்பளமும் 200 ரூபாய் கன்சாலிடேட்டட் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். பஞ்சாபில் 500 ரூபாய் சம்பளமும் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். இமாச்சலப் பிரதேசம் ஒரு சுண்டைக்காய் மாநிலம்—அங்கே 500 ரூபாய் கொடுக்கிறார்கள். மத்தியப்பிரதேசத்தில் 400 ரூபாய் சம்பளமும் 200 ரூபாய் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்தில் 300 ரூபாய் சம்பளமும் 200 ரூபாய் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். குஜராத்தில் 300 ரூபாய் சம்பளமும் 150 ரூபாய் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். நாகாலாந்தில் 300 ரூபாய் சம்பளமும் 200 ரூபாய் அலவன்ஸும் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. சில வசதிகளை செய்து கொடுங்கள் என்று கேட்கிறோம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேசியதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தால் அவர்கள் எல்லாம் அவர்களைக் கொஞ்சம் சரிகட்டி வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்

[திரு. நா. வீராசாமி] [1974 ஏப்ரல் 8

நாங்கள் எல்லாம் தொகுதிக்குப் போகிறோம். இப்போது பஸ்ஸுக்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். எல்லா ஊர்களுக்கும் பஸ் வசதி இருந்தாலும் சில நேரங்களில் பகல் வேளையில் அலுவல் காரணமாக அதிகாரிகளையும் அமைச்சர்களையும் சந்தித்துவிட்டு—எங்களுக்காக அல்ல; தொகுதி மக்களுக்காக—இரவு வேளைகளில் தான் போக வேண்டியிருக்கிறது. இரவில் ரயில்தான் வசதியாக இருக்கும். ஆகவே, ரயிலில் இலவசமாக போய்வர வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் அப்படிக் கேட்கும்போது ஏதோ இங்கே உள்ளவர்களுக்கு புதிதாக உத்தரவு போட வேண்டுமென்று இல்லை. இன்றையதினம் இந்தியா முழுவதும் சட்ட மன்ற உறுப்பினர்கள் போய் வருவதற்கு சில மாநிலங்களிலே வழிவகை செய்திருக்கிறார்கள். குறிப்பாக கல்கத்தாவிலே ஒவ்வொரு உறுப்பினரும் ஆண்டு ஒன்றுக்கு 5,000 கிலோமீட்டர் அகில இந்தியாவிலும் சுற்றலாம். அவர்கள் மாநிலத்தில் எப்போது வேண்டுமானாலும் ரயிலில் போகலாம். பஞ்சாபிலும் அதைப்போல செய்திருக்கிறார்கள். ராஜஸ்தானில் 12,000 கிலோமீட்டர் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை போக வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு காஷ்மீர் எல்லாம் வேண்டாம். தமிழ்நாட்டிலே சுற்ற ரயில் பாஸ் கொடுங்கள்; போதும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் புன் சிரிப்பு செய்கிறார்கள். ஆகவே, அந்த வசதியைச் செய்து தருவார்கள் என்று நம்புகிறேன்; அதை இன்றைக்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டெலிபோன் கட்டணம் இருக்கிறது. டெலிபோன் அதிகமாக நாங்கள் பயன்படுத்துகிறோம் என்றால், அது எங்கள் சொந்த வேலைக்காக அல்ல. தொகுதி மக்களின் நன்மைக்காகத்தான் பயன்படுத்துகிறோம். நீங்கள் வேண்டுமானால் டெஸ்ட் பண்ணி பாருங்கள். பொதுமக்களுக்காகத்தான் போன் செய்கிறோம். அப்படி இருந்தாலும் நாங்கள் செய்கின்ற எல்லா கால்களுக்கும் உரிய கட்டணத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் குறைந்த பட்சம்—மினிமம் சார்ஜ் என்று ஒரு குவார்ட்டருக்கு இவ்வளவு என்று வரையறை செய்து, அதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 8] [திரு. நா. வீராசாமி]

எங்களுக்கு ஏராளமான தபால்கள் வருகின்றன. அந்த தபால்களுக்கு நாங்கள் பதில் எழுதி அனுப்ப வேண்டியிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக ஸ்டாம்ப் கொடுக்கிறார்கள். நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கவரும் லெட்டர் பாட்-ம் கொடுக்கிறார்கள். மத்திய அரசு ஸ்டாம்பு கொடுக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கவரும் தாளும்தான் கொடுக்கிறார்கள் என்று வருத்தப்படுகிறார்கள். ஆனால் இந்த அவையிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் ஆளுக்கு ஒரு பேனா கொடுக்க வழிவகை செய்யப்படும் (சிரிப்பு).

**திரு. நா. வீராசாமி:** பேனாவுக்கும் நன்றி சொல்ல வேண்டியதுதான். உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000 ரூபாய்க்கு ஸ்டாம்ப் கொடுத்து வையுங்கள். அந்த ஸ்டாம்பை தவறான வழியில் செலவிட மாட்டோம் என்று உறுதிமொழி தருகிறோம். 1,000 ரூபாய்க்கு ஸ்டாம்ப் கொடுத்தால் இந்த ஆண்டு எவ்வளவு செலவிடுகிறோம் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள். உதாரணமாக இந்த ஆண்டு 400 ரூபாய் ஸ்டாம்பை செலவிடுகிறோம் என்றால் அடுத்த ஆண்டுக்கு அந்த 400 ரூபாய்க்கான ஸ்டாம்ப் மட்டும் கொடுத்தால் போதும்.

அடுத்து, நம்முடைய சட்ட மன்றத்திலே பணியாற்றுகிற ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 'ஹை ஸ்பீடு' பாஸ் செய்துவிட்டு வருகிறார்கள். மொத்தமாக 20 ரிப்போர்ட்டர்கள் தான் இருக்கிறார்கள். பார்லிமெண்டில் இருக்கின்ற ரிப்போர்ட்டர்களுக்கு 1,000 ரூபாய், 1,200 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். இருந்தபோதிலும் ஸ்பெஷல் பே வேறு கொடுக்கிறார்கள். 'ஹை ஸ்பீடு' பாஸ் செய்வது மிகவும் கஷ்டம். எழுதுவதும் ரொம்ப கஷ்டமான வேலை. நீங்கள் ஒரு 10 நிமிடம் எழுதிப் பார்த்தால் தெரியும் எப்படி இருக்கிறது என்று. மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் ஒரு ரிப்போர்ட்டர் இருக்கிறார். அவர் எவ்வளவு சுறுசுறுப்பாகவும், திறமையாகவும் செயல்படுகிறார் என்பது அவர்களுக்குத் தெரியும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் இருந்தபோதிலும் அவர்களுடைய ஆயுள் காலம் குறைவு. அவர்களுடைய ஆயுளில் 25 சத

விகிதம் குறைந்துவிடுகிறது என்று ஒரு இங்கிலாந்து நாட்டுக்காரர் 1910 ஆம் ஆண்டில் கூறியிருக்கிறார். ஆகவேதான் டைப்பிஸ்ட், ஸ்டெனோக்களுக்கு ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆயுள் குறைவு என்பதை யார் கண்டுபிடித்தார், எப்போது கண்டுபிடித்தார்?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் இப்படி தவறான தகவலைத் தந்தால், ஸ்டெனோகிராபர்களுக்கு பஞ்சம் வந்துவிடும்.

**திரு. பெ. சீனிவாசன் :** இது தவறான தகவல் அல்ல. முற்றிலும் உண்மைதான். அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் அந்த வேலையை விட்டுவிட்டு, ஓடிவந்து விட்டார்கள் (சிரிப்பு).

**திரு. நா. வீராசாமி :** நான் தவறான தகவலை இதற்காக கொடுக்க வேண்டியதில்லை. டைப்பிஸ்டுக்கு 10 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள். ஸ்டெனோகிராபர்—சுருக்கெழுத்து லோயர் பாஸ் பண்ணியிருந்தால் 15 ரூபாய் கொடுக்கிறார்கள்; ஹையர் பாஸ் பண்ணியிருந்தால் 40 ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த 40 ரூபாய் கொடுப்பது, அவர்கள் பால், முட்டை வாங்கி சாப்பிட்டு திடமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். சத்துணவு சாப்பிட்டால்தான் மற்றவர்களைப்போல நன்றாக இருப்பார்கள். அதற்காகத்தான் ஸ்பெஷல் பே கொடுக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம்—போலீஸ் ரிப்போர்ட்டர்களுக்கு 79 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு இருந்த அடிப்படைச் சம்பளத்தை 225 ரூபாயிலிருந்து 425 ரூபாய்க்கு உயர்த்தி இருக்கிறது; 75 ரூபாய் ஸ்பெஷல் பேயும் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய குவாலிபிக்கேஷன் ஹையர் கிரேடு. நம்முடைய சட்டமன்ற ரிப்போர்ட்டர்கள் அதற்குமேல் 'ஹை ஸ்பீடு' பாஸ் பண்ணியிருக்க வேண்டும்; பாஸ் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் ஸ்பெஷல் பே கொடுக்கவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எத்தனையோ பேர்களுக்கு—அபிரக்கனைக்காளவர்களுக்கு இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வாரி வாரி கொடுத்திருக்கிறார்கள். இந்த 20 ரிப்போர்ட்டர்களுக்கும் 75 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுப்





பதினால் செலவு ஒன்றும் அதிகமாகிவிடாது. மிகக் குறைந்த தொகைதான் இதற்குச் செலவாகும். அவர்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் இருந்தாலும், இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய 'விப்' இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் விப் என்று வைத்திருக்கிறோம். ஆனால் மற்ற பல மாநிலங்களில் 'மினிஸ்டர் பார் பார்லிமென்டரி அஃபேர்ஸ்' என்று வைத்திருக்கிறார்கள். பஞ்சாப், மகாராஷ்டிரம், அரியானா, மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் அப்படி வைத்திருக்கிறார்கள். இந்த விப் பதவி ரொம்ப ஆபத்தான ஒரு பதவி. நெருங்கிய நண்பர்கள் அவரிடம் ஏதாவது பேசலாம் என்று போனால் கூட பேசுவதற்கு நேரம் கேட்கத்தான் வருகிறார் என்று நினைத்து ஓடிப்போய் விடுகிறார்கள். இந்த வகையில் நண்பர்களைக் கூட இழக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நம்முடைய கொறடாவுக்கு மினிஸ்டர் அந்தஸ்து கொடுக்கப்படா விட்டாலும் அவருடைய அந்தஸ்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு அதிக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அவர்களுடைய மாநாடு 1968-ல் சிம்லாவில் நடைபெற்றது; 1970-ல் சென்னையில் நடைபெற்றது; 1972-ல் போபாவில் நடைபெற்றது. அந்த மாநாடுகளிலே பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களை பரிசீலனை செய்து பார்த்து, இங்கே இருக்கக்கூடிய விப்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

480 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். இவ்வளவு தொகை செலவிடும்போது இந்தத் துறைக்கு 40,27,700 ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறோம். மொத்தச் செலவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 0.1 சதவிகிதம் தான் வருகிறது. நான் சொல்லியிருக்கின்ற கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றினால் கூட 0.12 சதவிகிதம் தான் வரும். அவ்வளவு குறைந்த செலவுக்கான கோரிக்கைகளைத்தான் நான் தெரிவித்திருக்கிறேன். ஆகவே, நான் குறிப்பிட்ட எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றி, சலுகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறுவது இன்று கடைசி நாள். ஆகவே, ஒரு மணியோடு இந்த மன்றத்தின் நிகழ்ச்சிகள் முடிவடைய வேண்டும். இன்னும் முடியாததால் அவையின் அனுமதியுடன் காலத்தை கொஞ்சம் நீட்டிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பில் இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை சுருக்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே, இந்த மன்றமானது அதிக நாள் கூட வேண்டுமென்று பல உறுப்பினர்களாலும் பேசப்பட்டது; பல தரப்பிலும் பேசப்பட்டது. அதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். ஏனென்றால் இப்போது பல உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிப் பிரச்சனைகள் பற்றி இந்தச் சட்ட மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்று புகார் சொல்கிறார்கள். ஆகையால் இந்த மன்றம் நடைபெறும் நாட்களை அதிகரிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மன்ற உறுப்பினர்கள் பற்றி எல்லாம் பல காரியங்களைச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே நாம் எப்படி நடந்துகொள்கிறோம் என்று ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை இது கொஞ்சம் கசப்பாக இருந்தாலும், பொறுப்புணர்ச்சியோடு இந்த மன்றத்திலே செயலாற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சில நேரங்களில் நமக்கு ஆவேசம் வரும்; ஆத்திரம் வரும்; கோபதாபங்கள் வரும். ஆனால் உடனடியாக அதைத் தணிப்பதற்கு சுவையான வார்த்தைகளை உபயோகப்படுத்தி நாம் எல்லோரும் ஒரே குடும்பம் என்ற நிலையை உருவாக்க வேண்டும். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி எல்லோரும் ஒரே குடும்பம் என்ற முறையிலே பரிமாறிக்கொள்வது மிகவும் நல்லதாக இருக்கும் என்ற காரணத்தால் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 8] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

(பிற்பகல் 1.00)

உதாரணமாக பலரும் சில உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் வேண்டுமென்றே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றும், பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன் என்றும்—சம்பந்தம் இல்லாத நேரத்திலும் கூட சபை நடவடிக்கையில் குறுக்கிடுவது ஒரு வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும்.

**திரு. துரை முருகன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் சொன்னார்கள். பேச்சில் குறுக்கிட வேண்டும் என்பதற்காக ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்புகிறார்கள் என்றார். சிலர் பேசுகிற நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பித்தான் தீர வேண்டியிருக்கிறது. அதற்கு பேரவைத் தலைவர் இருக்கிறார். தீர்ப்புச் சொல்கிறார். பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறபோது எனக்கு நானே அது பாயிண்ட் ஆப் ஆர்டரா இல்லையா என்பதைத் தீர்மானம் பண்ணிக் கொள்ள முடியாது. ஆக பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவதில் எந்தத் தவறும் இல்லை என்பது என்னுடைய எண்ணம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அவர்கள் பானல் ஆப் சேர்மென்னாக அந்த இடத்தில் உட்காருகிறபோது அந்தத் தீர்ப்பை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். வேண்டுமென்றே குறுக்கிடுவதனால்தான் அது கஷ்டமாக இருக்கிறது. யாரையும் புண்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. எப்படி இந்த மன்றத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கே அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சட்ட மன்ற விடுதிகளைப் பற்றி பலவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள். அங்கிருக்கிற வசதிகள் போதவே போதாது என்பதை நானும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பல ரூம்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படவில்லை. ப்ளஷ் அவுட் இயங்கவில்லை. பாத் ரூம்களில் இருந்து தண்ணீர் போகவில்லை. ஓட்டை உடைசல்களுடன் பல கப்போர்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டிடத்தை வெளியில் இருந்து பார்த்தால் அலங்காரமாக இருக்கும். உண்மையில் அறைகள் சரியான முறையில் இல்லை என்பதை பல உறுப்பினர்களும் ஒத்துக்

கொள்வார்கள். அதேமாதிரி இ.என்.எச். ஹாஸ்டலை பி.டபிள்யூ.டி-யிடம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதையும் நம் இலாக்காவே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருக்கிற காமன் லெட்ரின், காமன் பாத் ரூம் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு—ஒவ்வொரு அறைக்கும் பாத் ரூம், லெட்ரின் கட்டுவதற்கு அங்கே வசதி இருக்கிறது. 3 அறைகளை 2 அறைகளாக வேண்டுமானாலும் செய்யலாம். அதுபற்றி என்ஜினியர்களை வைத்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த இலாக்காவில் பணியாற்றுகிற ஊழியர்களைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பல ப்யூன்கள் இருக்கிறார்கள். 62 இல் இருந்து பணியாற்றி வருகிறவர்களை இன்னமும் நிரந்தரமாக்கவில்லை என்று அடிக்கடி எங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை வருகிற வேகன்சியிலாவது நிரந்தரமாக்க இலாக்கா நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லெஜிஸ்லேச்சர் செக்ரடேரியட்டைப் பற்றி இதற்கு முன்பாகவும் பல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இங்கு வேலைக்கு வருகிறவர்கள் க்ராஜ்வேட்டாக இருக்க வேண்டும். டபிள் க்ராஜ்வேட், லா க்ராஜ்வேட்டாக எல்லாம் இருக்கிறார்கள். இவர்களுக்கு பதவி உயர்வுக்கு போதுமான வாய்ப்பு இல்லை. செக்ரடேரியட்டில் மற்ற டிபார்ட்மெண்ட்களில் வேலை செய்கிறவர்களுக்கு நிறைய ப்ரமோஷனல் ஆப்பர்சூனிடீஸ் இருக்கின்றன. லெஜிஸ்லேச்சர் டிபார்ட்மெண்டில் பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இல்லை.

இவர்களுக்கு என்று தனி காடர் வைத்து ப்ரமோஷன் கொடுக்க வேண்டும். வெளியில் இருந்து அதிகாரிகளைக் கொண்டு வரவேண்டுமென்று முன்பு திரு. ராஜாஜி காலத்தில் ஒரு விதியைப் பிறப்பித்தார்கள். அந்த விதியின் அடிப்படையில் வெளியில் இருந்து மேல்பட்ட உத்தியோகஸ்தர்களைக் கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை அடியோடு தவிர்க்க வேண்டும். அந்த விதியை நிச்சயமாக எடுத்துவிட வேண்டுமென்று





வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். டபிள் டிகிரி வாங்கியவர்கள்—சட்டம் படித்தவர்கள் இந்த இலாக்காவிலேயே பல ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறபோது—இவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அண்மையில் பில் செக்ஷனுக்குப் போகிறபோது பார்த்தால் ஒரு அசிஸ்டென்ட் செக்ரடரி ரூம் மாதக் கணக்காக அப்படியே பூட்டப்பட்டு இருக்கிறது. தற்காலிக ப்ரமோஷன் கொடுத்தாவது—அந்தப் பதவிக்கு உத்தியோக உயர்வு கீழே இருக்கிறவர்களுக்குக் கொடுத்தால்தான் இவர்கள் மனத்திற்கு அவ்வளவாக கஷ்டம் ஏற்படாமல் இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு இந்த இலாக்காவில் க்ளார்க்காக வந்தால் க்ளார்க்காகவேதான் ரிடையராக வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது.

க்ராஜ்வேட்டாக இல்லாதவர்கள் டைப்பிஸ்டுகளாக வருகிறார்கள். ரிப்போர்ட்டர்களாக ஆக வேண்டுமென்றால் பத்து இருபது வருஷங்களாவது ஆகும். இவர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு கொடுக்கக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இலாக்காவில் இருக்கிறவர்கள் நல்லமுறையில் செயல்பட்டால்தான் எங்களுக்கும் நல்லமுறையில் செயல்பட அவகாசம் ஏற்படும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வாட்ச் அண்டு வார்டு இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கிற ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு தினசரி ஒரு நாளைக்கு கொடுப்பது 1½ ரூபாய், 2 ரூபாய், 2½ ரூபாய் என்ற அளவில்தான் இருக்கிறது. சாப்பாட்டுக்கே ஒரு வேளைக்குப் போதுமானது அல்ல. குறைந்த பட்சம் 3 ரூபாயில் ஆரம்பித்து 5 ரூபாய் வரையிலாவது அவர்களது படியினை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாட்ச் அண்டு வார்டாக இருக்கிறவர்களுக்கு பீக் காப் கொடுக்க வேண்டும். காந்திக் குல்லாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காந்திக் குல்லாயை ஆட்சேபிக்கவில்லை என்றாலும்—அவர்களுக்கு பீக் காப்—வெள்ளை கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 8

அடுத்தபடியாக இந்த மன்றத்தில் இருக்கிற வசதிகள் போதாது. சிட்டிங் வசதியை அதிகப்படுத்த வேண்டும். லாபியில் உட்கார்ந்து சாப்பிட டீ குடிக்கக்கூட வசதியில்லை. இரண்டு பர்லாங் போய் வாங்கி வருவதற்குள் ஆறிவிடுகிறது. எங்களுக்கு அருகாமையிலேயே அது கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வேறு ஒரு ஆலோசனை கூட கூற விரும்புகிறேன். ஸ்பீக்கரே ரொட்டேஷன் வைத்து, உறுப்பினர்களுக்கு டீ கொடுக்கிற ஏற்பாடு சில மாநிலங்களில் இருக்கிறது. அதேமாதிரி—நான் இங்கே இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கூடச் சொல்லவில்லை—சூடாக டீ உறுப்பினர்களுக்கு ரொட்டேஷனில் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். காலை 8½ மணிக்கு வந்து பிற்பகல் 1½ மணி வரை நாங்கள் இங்கே இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இங்கிருக்கிற அறைகளைப் பற்றி ஒரு வார்த்தை—எந்த பாத் ரூமிலும் டவல் கிடையாது—சோப்பு கிடையாது. வைத்தால் மறைந்து விடுகிறது என்றும் சொல்லலாம். நாங்கள் பல வெளி மாநில சட்ட மன்றங்களைப் போய்ப் பார்க்கிறபோது இந்தக் குறைபாடுகள் எல்லாம் நன்றாகத் தெரிகின்றன.

இன்னும், பெண்களுக்கு என்று ஒரு அறை இருக்கிறது. எங்களது துணைத் தலைவர் அதைச் சொல்கிறார்கள்—அதில் எந்தவிதமான வசதியும் இல்லை. அங்கே தொங்குகிற கர்டன் கூட பல வருடங்களுக்கு முன்னால் போடப்பட்டது. ஆர்க்கியாலஜிகல் டிபார்ட்மெண்டுக்கு அது தேவையோ என்னவோ. அங்கு ஒரு அம்மையார் இருக்கிறார்கள். அவர்கள் வயோதிக பென்ஷனுக்கு லாயக்காக இருக்கிறார்கள். சுறுசுறுப்பாக அங்கே வருகிற உறுப்பினர்களுக்கு உதவக் கூடியவர்களாக . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வயோதிகராக இருந்தாலும் ரொம்ப ரொம்ப சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். அவருக்குப் பாவம் எதற்காக. . . .

**(Interruption) Personally I know, I am there. She dces very well.**

THIRU R. PONNAPPA NADAR : If she loes very well, it is **very well.**



1974 எப்ரல் 8] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். நமது லைப்ரரி வசதிகள் போதாது, அங்கு இட வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அங்கு அதிகமான புத்தகங்களை வைக்க வேண்டும். லைப்ரரியில் உட்கார்ந்து படிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. அது மிகவும் கிராம்ப்ட் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக்கிறது. புதிய புத்தகங்களை நல்லமுறையிலே வரவழைத்து இன்னும் அதிக அளவிலே வசதிகள் செய்ய வேண்டும். ரூபாய் எட்டாயிரமோ என்னவோ ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது, அதிகமாக நிதி ஒதுக்கி, நல்ல நல்ல நூல்களை, புதிய நூல்களை, சட்டப் புத்தகங்களை எல்லாம் வரவழைக்க வேண்டும். பார்லிமெண்டிலே வருகின்ற எல்லா ரிப்போர்ட்டுகளையும் வரவழைக்க வேண்டும். இந்தமாதிரியான கருத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வெளி மாநிலத்திலிருந்து பல சட்ட மன்ற உறுப்பினர்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு இந்த ஈ.என்.எச்-சில் தான் ரூம் போடுகிறார்கள். புது ஹாஸ்டலில் கொடுக்கவில்லையென்று பலரும் கூறினார்கள். அவர்களுக்கும் நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும். நாம், பிற மாநிலங்களுக்குப் போகின்ற நேரத்திலே நமக்கு நல்ல வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். அந்த முறையில், தமிழ் நாட்டில் உள்ளவர்கள் மிகவும் பண்புள்ளவர்கள் என்ற வகையிலே நிச்சயமாக இதைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ-வுக்கு வருகிற கெஸ்ட்டுகளை எப்படி அமர்த்த வேண்டுமென்ற ஆலோசனைகளையெல்லாம் கூறி இருக்கிறார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த செஷன் நடக்கிற நேரத்திலே, யாராவது கெஸ்ட்டுகளை வைக்க வேண்டுமானால், அவர்களுக்கு அலவன்ஸ் கொடுத்தால் போதும். ரூ. 5 ஆவது அலவன்ஸாகக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கெஸ்ட்டுகளை தங்க ஏற்பாடு செய்தால் கஷ்டமாக இருக்கும் என்ற ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். தொகுதியிலிருந்து வருகின்ற

எல்லோருக்கும் அக்காமடேஷன் கொடுப்பது கஷ்டமாக இருக்கும். அதற்கென்று வேண்டுமானால், கெஸ்ட்கள் தங்குவதற்கும், குளிப்பதற்கும், மற்ற வசதிகளுக்கும், டார்மிட்டரி போன்ற ஏற்பாடுகளைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். ஆகவே, இந்த ஏற்பாடுகளைச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கு நமது மன்றத்தைப் பொறுத்த அளவிலே, மேலவை வேண்டாம் என்ற கருத்தை, கோவை செழியன் அவர்கள் தெரிவித்தார்கள். அரசியல் சட்டத்தின் 169 ஆவது ஷரத்துப்படி, மேலவை வேண்டாமென்று இந்த அவையிலே 2/3 நபர்கள் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி எடுத்துக்கொள்ளலாம். 'creation or abolition' என்று இருக்கிறது. அந்த விதிமுறைகள் எல்லாம் அதிலே இருக்கின்றன. மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது விவாதத்திற்குரிய கருத்தாக இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக, இன்று நமது இந்தியப் பாராளுமன்றத்திலே இரண்டு அவைகளிருக்கின்றன. பல ராஜ்யங்களிலும் இரண்டு அவைகள் இருக்கின்றன. மேலவை தேவை என்ற கருத்தை பல நிபுணர்கள் கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

உதாரணமாக, ஜான்ஸ் ஸ்டுவர்ட் மில் என்ற ஒரு பெரிய அறிஞர் இந்த மேலவையைப் பற்றி அவருடைய கருத்தைக் கூறி இருக்கிறார்கள்.

" A majority in a single assembly, when it has assumed a permanent character, when composed of the same persons habitually acting together and always assured of victory in their own house, easily becomes despotic and overweening if released from the necessity of considering whether its acts will be concurred by another constituted authority. The same reason which induced the Romans to have two Consuls makes it desirable there should be two chambers; but neither of them may be exposed to the corrupting influence of undivided power even for the space of a single year ".





என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்தக் கருத்தினைப் பார்க்கின்றபொழுது கூட, இந்த மன்றத்திற்கு அதிக அதிகாரம் இருக்கிறது. அதிக அதிகாரம் இருக்கிறது என்று சொன்னாலும், இந்த அதிகாரத்தைப் பற்றி நல்லமுறையிலே சிந்திக்க வேண்டும். பல சட்டங்களை இயற்றுகிறோம், ஆத்திரமாக இயற்றுகிறோம் என்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிப்பதற்கு மேலவை தேவை என்ற கருத்தை பல இடங்களில் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். துரிதமாக, சாதாரணமாக, சட்டம் இயற்றி விட்டார்கள் கீழவையினர் என்று சொன்னால், மேலவையினர் ஆறஅமர சிந்தித்து, நல்ல நிபுணத்துவம் வாய்ந்த கருத்துக்களை வழங்க அவர்கள் சித்தமாக இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இப்பொழுது மேலவையை நீக்க வேண்டுமென்ற முடிவிற்கு வர வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலவை சூப்பர்ஃப்லுவஸ் என்றெல்லாம் சொல்வார்கள். அந்தக் கருததோடு என்னைப் போன்றவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை யென்ற ஆலோசனையையும் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

பொதுவாக, நமது மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கு அதிக வசதிகள் வேண்டுமென்றெல்லாம் இங்கே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். நான் அவைபற்றியெல்லாம் விரிவாகக் கூறத் தேவையில்லை. நாங்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே இருக்கிறோம். பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியிலே இருக்கிறோம். இதற்கெல்லாம் இன்னும் கமிட்டி ஆபீஸ் போட்டு, அதற்குத் தனி அதிகாரியைப் போடுவது பொருத்தமாக இருக்கும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டிக்கென்று தனி அதிகாரியைப் போட்டு, அவருக்குப் போதிய ஸ்டாஃபைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியைப் போல், முக்கிய கமிட்டியாக இருக்கிற காரணத்தினால், அந்தக் கமிட்டிக்கு நிச்சயமாக தனி ஸ்டாஃப் போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான்

வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். முன்பு பலமுறை இந்தக் கருத்தினை வலியுறுத்திக் கூறி இருக்கிறேன். நிச்சயமாக, அதிலே இருக்கிறவர்களுக்கு அதிகமான வசதியினை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

பொதுவாக, நமது கமிட்டிகள் எல்லாம் கூடவில்லை. பிசினஸ் அட்வைசரி கமிட்டி அடிக்கடி கூறுகிறது. பிரிவிலெஜஸ் கமிட்டி அடிக்கடி கூடவில்லை, ஹவுஸ் கமிட்டி அடிக்கடி கூடவில்லை. இதைப்பற்றி எல்லாம் நான் யாரையும் குறைத்துப் பேசுவதற்காக வரவில்லை. இந்தமாதிரி இல்லாமல் அடிக்கடி கூடினால் இந்த இலாகாவிலே சுறுசுறுப்பான வேலை நடப்பதற்கு எல்லா சந்தர்ப்பமும் ஏற்படும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆக, பொதுவாக, சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம் மக்கள் மன்றத்திலே நல்லமுறையிலே செயலாற்றுவதற்கு அவர்களுக்குப் போதிய எல்லா வசதிகளும் கொடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற மானியக் கோரிக்கையின் மீது, இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் பலரும் இந்த மன்றத்திலே செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் பெற வேண்டிய வசதிகள் குறித்தும், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கி இருக்கிற விடுதியிலே செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்தும், இங்கே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டிய முக்கியமான கருத்து சட்ட மன்றம் நடைபெறுகின்ற நாட்கள் அதிகமாகப்பட வேண்டுமென்பது. அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆண்டுக்காண்டு ஓரளவுக்கு அதிகமான அளவுக்கு நாட்களை மிகுதிப்படுத்தி நடத்துகின்ற அளவுக்குத்தான் நம்முடைய செயல்கள் நடைபெற்று வந்திருக்கின்றன என்பதனை நான் முதலிலே குறிப்பிட்டேன்.





162-லே 40 நாட்கள் நடைபெற்றது, 1967–லே 42 நாட்கள், பிறகு 48 நாட்கள் நடைபெற்றது. சென்ற ஆண்டு 66 நாட்கள் நடைபெற்றது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 70 நாட்களுக்கு மேல்தான் செல்லக்கூடும். இதுவரையில், ஜனவரியில் நடந்தது, இந்தத் தொடர் கூட்டத்தைச் சேர்த்து கிட்டத்தட்ட 45 நாட்கள் வரக்கூடும். அதிக நாட்களாகக் கூடாது என்பது அரசினுடைய நோக்கமல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே எவ்வளவு நாள் வேண்டுமென்று கருதுகிறோமோ, அவ்வளவு நாட்களை ஒதுக்கு வதற்கான வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உறுப்பினர்கள் அக்கறை காட்டுகிறார்களோ, அதைப் பொறுத்துதான் இது அமையும். அந்த வகையில் உறுப்பினர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்ற வேண்டுகோளைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் இங்கே வருகின்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் விடையளிக்கும்போது, எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு பார்ப்போமானால், ஆர்வமும், அக்கறையும் மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பதைத்தான் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நாட்கள் அதிகமாக இருக்க வேண்டுமென்றுதான் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே முடிவு செய்து வருகிறோம். அதை ஆராய்ந்து எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து எந்த அளவு அதிகப்படுத்திக் கொள்ளலாமோ, அந்த அளவு அதிகப்படுத்தி நாட்களை ஒதுக்கலாம். ஆனால் தேவையான அளவுக்கு ஒதுக்க வேண்டியிருக்கிறோம். மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் அக்கறை காட்டுவார்களானால் அவ்வப்பொழுது அந்த அளவுக்கு ஆக்கிக்கொள்ளலாம்.

வேறு பல மாநிலங்களில் கிட்டத்தட்ட சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையிலும் இந்த 60, 40 நாள் என்ற அளவுகளுக்குத்தான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுக் காட்டினார். கேரள அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களிடத்தில் ஒரு 5, 6 நாளாக தந்தி மூலம் கேட்டபொழுது அவர்கள் நமக்குப் பதில் அனுப்பியிருக்கிறார்கள். கேரளாவில்கூட 1967-ஆம் ஆண்டில் 42 நாட்கள், 73-ஆம் ஆண்டில் 50 நாட்கள்,

72-ஆம் ஆண்டில் 54 நாட்கள், ஆனால் 71-ஆம் ஆண்டு 73 நாட்கள் கூடியிருக்கிறார்கள். ஆகவே அத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் படியான அவசியமில்லை.

சில இடங்களில் கூடுதலான நாட்கள் இருக்கலாம், குறைவாக வும் இருக்கலாம். நம்முடைய பணிகளைக் குறித்து இந்தப் பேரவை நிறைவேற்றித் தருகின்ற பணிகள் திட்டங்களுக்கு நாம் நாட்களை அதிகப்படுத்திக் கொள்வதில் கஷ்டம் ஒன்றுமில்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துத் தெரிவித்த மாதிரி ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அதிமான அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். நாட்கள் அதிகப்படுத்தினால் இந்தக் குறை நிறைவுபெறும் என்று மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஆகையினால் அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து நாட்களை அதிகமாக்குவது எந்த அளவுக்கு அதிகமாக்கலாம் என்பதை நிர்ணயிக்கும்போது அந்த அளவிலே நாட்கள் அதிகமாக்கிக் கொள்ளலாம் என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, வினாக்களைப் பொறுத்தும் மாண்புமிகு உறுப் பினர்கள் பலர் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இந்தத் தொடர் கூட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 20 கேள்விகளுக்கு நாம் விடை ஈர்ந்திருக்கிறோம். கேள்விகள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் கேட்கப்படுகின்றனவோ, அமைச்சர்கள் விடை ஈர்த்திருக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் விளக்கங்கள் பெறுகிறார்கள் என்ற முறையில் நாங்கள் அதை வரவேற்கத்தான் செய்கிறோம். அந்த முறையிலே வினாக்கள் பொறுத்த வரையிலும் துறைகளுக்குச் சென்று வருகின்றபோது, தலைமைச் செயலகத்திலே அல்லது ஒவ்வொரு இலாக்காவில் இருக்கின்ற அளவுக்கு விடைகளை சேகரிப்பது மிக எளிதாக அமைந்து விடும். சில சமயங்களில் கேட்கப்படுகின்ற வினாக்கள் எல்லா மாவட்டங் களுக்கும் சென்று எல்லா இடங்களிலிருந்தும் திரட்டிக் கொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது . . . . .

**திரு. கோவை செழியன்:** அதிகக் கேள்விகள் வருகின்ற காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட மாதிரி சில பேர் காசு வாங்கிக் கொண்டு



கேள்விகளைத் தருகிறார்கள். அந்த முறை எப்படியாவது ஒழிக் கப்படுமானால் உண்மையான கேள்விகளுக்குப் பதில் கொடுப் பதற்கு வசதியாக இருக்கும். அதற்குத் தேவையான முயற்சிகள் எடுப்பார்களா? மைலாப்பூர் வக்கீல் ஒருவர் இருக்கிறார். 15 காசுக்குக் கேள்வி எழுதிக் கொடுக்கிறார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வக்கீல்களைக் குறைவாகப் பேசுவதை நான் ஆட்சேபிக்கிறேன், என்ன அர்த்தம் என்று கேட்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** 15 காசுக்கு ஒரு வக்கீல் எழுதிக் கொடுக்கிறார் என்று கூறுவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எவ்வளவுதான் வாங்கிக் கொண்டு எழுதிக் கொடுக்கிறார் என்பதைச் சொல்ல வேண்டு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு கோவை செழியன் குறிப்பிட்டுக் காட்டியது உண்மை. ஆகவே, அவர் சொல்லுகிறார் என்பதற்காக எல்லா வழக்கறிஞர்களும் அந்த நிலைக்கு வருகிறார்கள் என்று எந்த வழக்கறிஞரும் ஏற்றுக் கொள்ள அவசியமில்லை. மாண்புமிகு முதலமைச்சர்கூட மேலவையில் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்கிற அளவுக்கு ஒழுங்குபடுத்தக்கூடிய சூழ்நிலை வரும் என்பதை நான் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெறும் காகிதத்தில் கையெழுத்து போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். மேலே ஒரு அங்கத்தினர் பெயரும், கீழே கையெழுத்து வேறொரு அங்கத் தினருமாக இருக்கிறது. அவையில் சொல்லக் கூடாது என்றாலும் சொல்லுகிறேன். அப்படிக் கேள்விகள் வருகின்றன.

**திரு. கோவை செழியன்:** நான் அப்படிக் குறிப்பிட்டதை அம்மையார் அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். அந்தக் யிருக்கிறார். எந்த மாதிரி கேள்விகளானாலும் நாங்கள் எழுதித் யிருக்கிறார். எந்த மாதிரி கேள்விகளானாலும் நாங்கள் எழுதி தருகிறோம், எங்களிடத்தில் வாருங்கள் என்று. வேண்டுமானால் தலைவர் அவர்களுக்கு அந்தக் கடிதத்தைத் தருகின்றேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர் ஒரு ஆர்டினரி பி.ஏ.பி.எல்., தான் அவர் வக்கீல் அல்ல.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த அளவிலேதான், கேட்கப்படுகிற கேள்விகளுக்கு உடனடியாக விடை வராமல் நீண்ட காலம் ஆவது அந்தக் காரணங்களால் ஏற்படுகிறது. ஆனால், அண்மையில் கூடிய விதிக் குழு ஒரு முடிவை எடுத்திருக்கிறது. 42 நாட்களுக்குள்ளாக விடை வர வேண்டுமென்றும், அப்படி வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் அந்தந்தத் துறை மேற்கொண்டு 15 நாட்கள் தவணை கேட்டு பெற்றுக்கொள்ளலாம் என்ற விதியை வைத்திருக்கிறோம். அதைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களும் எல்லா அமைச்சர்களுக்கும் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எல்லா அமைச்சர்களுக்கும், எல்லாத் துறையினருக்கும் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் வினாக்களுக்கு விடை ஈர்க்கத் தக்க அளவுக்கு நிலைமைகளை ஏற்பட்டு விடுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் குறிப்பிட்டது போன்று கேட்கின்ற கேள்விகள் விவரங்கள் பெறுவதற்கும் அல்லது குறைகளை சுட்டிக் காட்டி அல்லது குறைபாடுகளை சுட்டிக் காட்டி அதற்கு நாங்கள் பதில் ஈர்க்கத் தக்க சூழ்நிலை ஏற்படுமானால் நிர்வாகம் ஒழுங்குபடுத்தக் கூடிய நிலை ஏற்படும் என்ற அளவில் அந்த வினாக்களை வரவேற்கத்தான் நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட வினாக்கள் வருமானால் அந்த வினாக்களுக்கு விடை ஈர்ப்பதில் நமக்குப் பலன் ஏற்படும். ஒவ்வொரு வினாவிற்கும் சராசரி நாம் கணக்கிட்டுப் பார்த்தால் ரூபாய் 1,000-க்கும் மேற்பட்டு ஒவ்வொரு வினாவிற்கும் விடை ஈர்ப்பதற்காகச் செலவழிக்கப்படுகிறது. ஆக, கேட்கப்படுகின்ற வினாக்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதற்காக இந்த வாய்ப்பில் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி உறுப்பினர்களுக்கு வசதிகள், வாய்ப்புகள் இங்கே இருக்கக்கூடிய இருக்கை வசதி, இவை பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆக இந்த வசதி, வாய்ப்புகள் ஓரளவுக்கு நம்முடைய மாநிலத்து சட்ட மன்றம், பேரவை, மேலவையைப் பொறுத்த வரையிலும் குறைவாக இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.





வேறு பல மாநிலங்களில், இப்பொழுது கர்நாடக மாநிலத்தில் புதிதாகக் கட்டிடம் கட்டிய காரணத்தால் எல்லா வசதி, வாய்ப்புகளையும் மனதில் வைத்துக் கொண்டு அதற்கு ஏற்றபடி அந்தக் கட்டிட அமைப்புகளை அமைத்திருக்கிறார்கள். இப்போது சண்டிகரில் அதை மனதில் வைத்துக் கொண்டு அமைத்திருக்கிறார்கள்.

நம் மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் 60, 70 ஆண்டுகளுக்கு முன்னால், 100 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட கட்டிடங்கள். அந்தக் காரணத்தினால் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இங்கே சில பல வகைகளில் இருக்கின்ற இடங்களை நிறைவு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 20 இடங்கள் வெற்று இடங்களாக இருக்கிற தன்மை இருக்கிறது. அதைக் கூடுமானவரை ஒவ்வொரு வரிசைக்கும் ஒவ்வொரு வெற்று இடமாக, ஒவ்வொரு வரிசையிலும் அமையத்தக்க அளவுக்குக் குறிப்பிட்டிருக்கிறோம். அதை அவர்கள் சொல்லிய மாதிரி பெண் உறுப்பினர்கள் இருக்கிற இடத்தில் நெருக்கடி இல்லாமல் இருக்க வேண்டுமானால் அந்த இடத்தில் மட்டும் 4 பேருக்கு 3 பேராக போட்டு ஒரு இடத்தை வெற்று இடமாக்கினால் அங்கே நெருக்கடி இல்லாமலாக்கிக் கொள்வதற்கு வசதி ஏற்படும். அதை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் செய்யச் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன்.

மொத்தத்தில் 20 இடங்கள் வெற்று இடங்களாக இருக்கின்றன. அந்த வெற்று இடங்களை அதிகமான நெருக்கடி இருக்கிற இடமாக நிரப்புவதன் மூலம் அந்தக் குறைபாட்டை நீக்கிக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு கட்சிக்கும் தலைமைச் செயலகத்திலே கட்சிகளுடைய உறுப்பினர்கள் கூடுவதற்கு தனி அறை இருக்குமானால் நன்றாக இருக்குமென்று அவர்கள் கருத்துக்களை வெட்டுப் பிரேரணையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இங்கு அதற்கான இட வசதி இல்லாத காரணத்தினால் கட்சிகளுக்குப் பழைய விடுதியில் இடங்கள் ஒதுக்கி தரப்பட்டிருக்கின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 8

அந்த வகையில் விடுதியைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறைகளை, சட்ட திட்ட விதிகளை அமைத்துக்கொள்ள வேண்டிய வர்களாக இருக்கிறோம். அந்த வகையில் உறுப்பினர்களுக்கு மதிப்புத் தரத்தக்க அளவில், உறுப்பினர்களின் தரம் உயரத்தக்க அளவில், யாரும் குறைவாக மதிப்பிடத்தக்க ஒரு சூழ்நிலை ஏற்படாத அளவிற்கு நல்லதொரு சூழ்நிலையை வைக்கத்தக்க அளவிற்கு அந்த விடுதியை வைத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படிப் பார்க்கின்றபொழுது உறுப்பினர்களுக்கென்று ஒதுக் கப்பட்ட அறையை உறுப்பினர்கள் மட்டுமே பயன்படுத்துகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால் நல்லது என்பது என்னுடைய கருத்து. விருந்தினர்களுக்கு எந்த அளவில் செய்வது என்பதை முடிவு கட்ட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அந்த விடுதியைப் பொறுத்தவரையில் சூழ் நிலைகள், வசதி வாய்ப்புகள் மற்றவைகளையெல்லாம் எப்படிக் காப்பாற்றுவது என்பதைப் பற்றி ஆராய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களைக் கூறினார்கள். இங்கு அதற்கென்று அவைக்குழு வைத்திருக்கிறோம், அந்த அவைக்குழு ஆராய, அந்த அவைக்குழுவின் ஒரு கூட்டத் தைக் கூட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும், அவை முன்னவர் என்ற முறையில் நானும், எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனைபேரும் சிறப்பு அழைப்பினர்களாக அழைக்கப்பட்டு அத்தனைபேரும் இந்தப் பிரச்னை யைபற்றி ஆராய்ந்து, ஒழுங்காக சட்ட திட்ட விதிகளை வைத்து அதற்கு எல்லா உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டு மென்று வைத்துவிட்டால் இந்தக் குறைபாடுகள் எதிர்காலத்திலே இல்லாத அளவிற்கு நிவர்த்திக்கப்படலாம். என்னென்ன வசதிகளை, எப்படி எப்படி ஆக்குவது என்று ஒருநாள் அல்ல இரண்டு நாள் வேண்டுமானாலும் கூடி அந்த அளவில் முடிவெடுக் கலாம்.



1974 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதி செய்வதைப் பொறுத்த வரையில் விடுதிக் கட்டிடங்களில் சீர்படுத்தி ஒவ்வொரு உறுப் பினருக்கும் தனியாக அளிப்பதா என்ற பிரச்னை உள்பட எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் முடிவெடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைபேசி இணைப்பைப் பொறுத்தவரையில் புதிய கட்டிடம், பழைய கட்டிடம் ஆகிய இரண்டுக்கும் பொதுவான தன்மையை, அறைக்கு அறை செய்ய முன்பே நினைத்தோம். ஆனால் தொலை பேசி அலுவலகத்தில் அதற்கு வேண்டிய கருவிகள் இல்லாமல் இருப்பதால் செய்ய முடியவில்லை என்று கூறினார்கள். எப்படியும் இதைப் பொறுத்தவரையில் விரைவில் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிட்டார்கள், உறுப்பினர்கள் வருவதற் கான பேருந்துகள் வருவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பேருந்து வருகின்ற சூழ்நிலையைப் பொறுத்தும் ஒரு திட்டவட்டமான முடிவை நாம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பொழுது இரண்டு பேருந்துகள் விடப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற விடுதி இருக்கின்ற இடத்திலேயிருந்து இந்தச் சட்டமன்றம் நடைபெறுகின்ற இந்தக் கோட்டைப்பகுதி வரையிலும் இரண் பேருந்துகள் வருகின்றன.

இந்த இரண்டு பேருந்துகளுக்கும் நாம்தான் அதற்கான, உறுப் பினர்கள் வந்து போவதற்கான செலவை முழுவதும் சட்டப் பேரவைத் துறைதான் ஏற்றுக்கொள்கிறது. அந்தவகையில் 'டிடென்ஷன் சார்ஜஸ்' என்று ஒரு நாளைக்கு ஒரு பஸ்ஸுக்கு 300 ரூபாயையும், ரிசர்வேஷன் சார்ஜஸ் என்று 25 ரூபாயையும் இன்னும் மற்ற செலவுகளையும் சேர்த்து மொத்தத்தில் ஒரு பஸ்ஸுக்கு 355 ரூபாய் தருகின்றோம். அந்த வகையில் இரண்டு பஸ்களுக்கும் கிட்டத்தட்ட 700 ரூபாய்க்குமேல் தருகின்ற அளவில் இருக்கிறது.

அந்த பஸ்கள் எப்படி ஓடுகின்றன என்றால் காலை 8-15 மணியி லிருந்து 9-30 மணி வரையில் 15 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதமும், அதற்குப் பிறகு காலை 9-30 மணியிலிருந்து பிற்பகல் 1-00 மணிவரையில் 30 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து வீதமும் விடப்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 8

இதிலேயும் நாம் ஒரு கட்டுதிட்டமான முறையையும் ஏற்படுத்திக் கொள்வது மிகவும் நல்லது என்று கருதுகிறேன். இரண்டு பஸ்களிலே ஒரு பஸ்ஸில் உறுப்பினர்கள் மட்டும்தான் என்று வைத்துவிட்டால் உறுப்பினர்கள் மட்டுமேதான் அந்த பஸ்ஸிலே செல்ல வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் உறுப்பினர்களுக்கும் மதிப்பு கூடும். அப்படியில்லாமல் வருகின்றவர்களையும் ஏற்றிக் கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டால் பழைய விடுதியிலிருந்து கிளம்புகின்ற பஸ்ஸில் உறுப்பினர்களோடு விருந்தினர்களையும் ஏற்றிக்கொண்டு புதிய விடுதிக்கு வருகின்றபொழுது பஸ் முழுவதும் நிரம்பி இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால் புதிய விடுதியிலிருக்கின்ற உறுப்பினர்கள் பஸ்ஸில் ஏற முடியாத சூழ்நிலையில் தனக்கே இடம் கிடைக்கவில்லை என்று வேதனைப்படும் நிலைமை உறுப்பினர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே உறுப்பினர்களுக்கு என்று பேருந்தை ஏற்படுத்தினால் நல்லது.

மேலும், இந்த பஸ்ஸை காலை 9-30 மணியிலிருந்து அரை மணி நேரத்திற்கு ஒரு முறை என்று 1 மணி வரையில் விட வேண்டுமா என்பதையும் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். சபை கூடுவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக ஆரம்பித்து சபை கூடியதற்குப் பின்னால் 9¼ மணி அல்லது 9½ மணியிலிருந்து துவங்கி 10 மணி வரையில் கால் மணி நேரத்திற்கு ஒரு முறை என்று வைத்துக்கொள்ளவும், பிறகு 1½ மணிக்குப் போகும் பொழுது என்றும் வைத்துக் கொள்ளலாமே தவிர அரை மணிக்கு ஒரு முறை என்று விட்டால் சில சமயங்களில் 2 பேர், 3 பேர் என்று ஏறி வரும்பொழுது அனாவசியமான செலவுகளும், மற்றவைகளும் ஏற்படுகின்றன. எனவே, பொது பயணிகளுக்கு தனி பஸ்ஸை வேறு வகையிலே ஏற்படுத்தலாமா என்பதைப் போக்குவரத்து . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், விருந்தினர்கள் அங்கத்தினர்களுடன்தான் போக வேண்டுமென்று ஆசைப்பட்டால் பின்னாலே ஒரு டிரெய்லரைப் போட்டுவிட்டால் அவர்கள் கூடவே போகிறமாதிரி ஒரு ஃபீலிங் ஏற்படும், அந்த பஸ் கூடவே வந்துவிடலாம் அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி இருக்கின்ற தோட்டத்தை விட்டு அந்த பஸ் வெளியே வருமா என்பதே சந்தேகம்,



1974 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏனென்றால் அந்தச்சாலை அப்படிப்பட்ட வளைவுகளைக் கொண்டதாக இருக்கிறது. எனவே உறுப்பினர்களுக்கு என்று தனியாக ஒரு பஸ்ஸை விட்டு 'மெம்பர்ஸ் ஒன்லி' என்று வைத்து, அதே போல 'பப்ளிக்' என்று போட்டு இன்னொரு பஸ்ஸை பப்ளிக்குக்காக வைக்கலாம். எனவே இவைகளை எந்த அளவிற்கு நஷ்டம் ஏற்படாத அளவில் செய்யலாம் என்பதைப்பற்றி அவைக் குழுக் கூட்டத்தில் திட்டவட்டமாக முடிவெடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற நூலகத்தைப்பற்றி மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மற்ற பல உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். இப்பொழுது உள்ளபடியே நம்முடைய நூலகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு சட்டமன்றங்களையும் பார்த்தால் நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கின்ற நூல்களின் அளவிற்கு வேறு பல சட்ட மன்றங்களில் இல்லை. அவ்வளவு உயர்ந்த, பழமையான தேவைப்படும் நூல்கள் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

அண்மையில் நான் கர்நாடக மாநிலத்திற்குச் சென்றிருந்த பொழுது, இங்கே பல்லாண்டுக் காலம் சட்டப் பேரவைத் துறையில் செயலாளராக இருந்த திரு. ஹனுமந்தப்பா அவர்கள் தான் அங்கே செயலாளராக இருந்தார். அவர் தெளிவாகக் குறிப்பிட்டார், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருக்கின்ற நூலகம் மாதிரி வேறு எங்கும் கிடையாது, கர்நாடக மாநிலத்திற்கும்கூட அப்படிப்பட்ட நூலகம் இல்லை, மிகச் சிறப்பான நூலகம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இட வசதி இல்லாத காரணத்தினால் நான்கைந்து இடங்களில் பரப்பி வைத்திருக்கிறோம்.

இங்கேயுள்ள நூலகத்தில் அவர்கள் சொல்லியது மாதிரி போய் உட்கார்ந்து மிகவும் நிம்மதியாகப் படிக்கின்ற சூழ்நிலை இல்லை, காற்று வசதி இல்லை, இருந்து படிக்க வேண்டுமென்ற எண்ணம் வராத அளவில் சூழ்நிலைகள் இருப்பதை உணர்கிறோம். இங்கே ஒரு இடத்தில் நூலகம் என்று வைத்திருக்கிறோம், 'லௌஞ்ச் ரூமில்' கொஞ்சம் புத்தகங்களை வைத்திருக்கிறோம். இன்னும்

*[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 8*

யாருமே நுழைய முடியாத இடத்தில் இராஜாஜி மண்டபத்திற்குக் கீழே இருக்கிற, 'அம்யூனிஷன்ஸ்' எல்லாம் வைத்திருந்த இடத்திலே நூலகத்தை வைத்திருக்கிறோம்.

ஆகவே, அவ்வளவு புத்தகங்களையும் ஒரே கட்டிடத்திலேயே உள்ள நூலகத்தில் வைக்க வேண்டுமென்றால் அதற்கென்று தனியாகக் கட்டிடம் வைக்க வேண்டும். எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தாராளமாகத் தங்குவதற்கும், எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து பழகுகின்ற வகையில் லாபி ஏற்படுத்துவோமானால் அங்கே நூலகம் அமைக்க வழி ஏற்படும்.

அங்கே நண்பர்கள் குறிப்பிட்டமாதிரி கான்டீனும்—அதற்கென்று ஏற்ற வசதியில்லாத அளவில் இப்பொழுது இருப்பிடங்கள் இருக்கிறது—எனவே அதற்காகத் திட்டம் போட்டு ஒரு கோடி இரண்டு கோடி ரூபாயானாலும் பரவாயில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்பேரில் செய்வது என்று முடிவெடுத்தால் அந்த அளவில் செய்யலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டது மாதிரி 480 கோடி ரூபாய் ஒதுக்குகிறோமே என்றாலும் பிட்டது மாதிரி 480 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்றாலும்கூட அவற்றையெல்லாம் வழங்குகின்ற மிக முக்கியமான பொறுப்பை ஏற்றிருக்கின்ற இந்தச் சட்டமன்றப் பேரவை, மேலவை இந்தத் துறை அத்தனைக்கும் சேர்து நான் இன்றைக்குக் கோருகின்ற மானியம் 40 இலட்சத்துச் சில்லறை ரூபாய்தான்.

ஆனால் இப்படிப்பட்ட பொறுப்பான இந்த அவைக்கு வசதி வாய்ப்புகள் வேண்டுமென்றால் அதற்கென்று தனியாகத் திட்டம் போட்டால்தான் முடியுமே தவிர இந்த இடத்தையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் பல்வேறு நெருக்கடிகள் வருகின்றன.

கான்டீனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பல சங்கடங்கள் இருக்கின்றன.

அந்தப் பகுதி உறுப்பினர்கள் அந்தப் பகுதிக்குப் போகிறார்கள், இந்தப் பகுதி உறுப்பினர்கள் இந்தப் பகுதிக்குப் போகிறார்கள். ஆகவே, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துகொள்ள முடியாத அளவில் இப்போது இருக்கும் லாபி முறை இருந்து கொண்டிருக்கிறது.



*1974 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]*

டில்லியில் இருப்பதுமாதிரி இருக்க வேண்டுமென்றால் புதிய கட்டடம் அமைத்தாலொழிய அந்தத் தன்மை வராது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் திட்டம் தீட்டச் செய்து இதே இடத்தில் கட்ட வேண்டுமா அல்லது அரசினர் தோட்டத்திலாவது அல்லது எதிர்ப்புறத்திலாவது முழு வசதிகள் கொண்ட அவைக்கு கட்ட ஏற்பாடு செய்தால் சட்டமன்றப் பணிகள் சிறப்பாக நடைபெற வசதிகள் ஏற்படும் என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு வசதி வாய்ப்புக்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் அவைக்குழு கூடி முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இலவச ரயில்வே பாஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது பல்லாண்டுக் காலமாக எழுப்பப்பட்டு வருகிற கோரிக்கை. 1957-இல், 58-இல், 61-இல், 62-இல், 68-இல், 69-இல் வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம்கூட ரயில்வே பாஸ் தருவதன் மூலம்தான் உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்ய வசதி வாய்ப்புகள் ஏற்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரயில்வே பாஸ் தருவதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

எந்த வகையில் நடைமுறைப்படுத்துவது என்பதை வேறு பல மாநிலங்களில் உள்ள நடைமுறைகளைப் பார்த்து நம்முடைய மாநிலத்தில் எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதைச் சிந்தித்து நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சில மாநிலங்களில் 3,000 கிலோ மீட்டர் வரை போகலாம் என்று வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் மாநில அளவில் மட்டும் போகலாம் என்று வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் இந்தியா முழுவதும் போகலாம், ஆனால் 3,500 கிலோ மீட்டருக்கு மேல் போகக் கூடாது, 6,000 கிலோ மீட்டருக்கு மேல் போகக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். எந்த முறையைக் கையாண்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் வசதி வாய்ப்பாக இருக்கும்

யாருமே நுழைய முடியாத இடத்தில் இராஜாஜி மண்டபத்திற்குக் கீழே இருக்கிற, 'அம்யூனிஷன்ஸ்' எல்லாம் வைத்திருந்த இடத்திலே நூலகத்தை வைத்திருக்கிறோம்.

ஆகவே, அவ்வளவு புத்தகங்களையும் ஒரே கட்டிடத்திலேயே உள்ள நூலகத்தில் வைக்க வேண்டுமென்றால் அதற்கென்று தனியாகக் கட்டிடம் வைக்க வேண்டும். எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தாராளமாகத் தங்குவதற்கும், எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து பழகுகின்ற வகையில் லாபி ஏற்படுத்துவோமானால் அங்கே நூலகம் அமைக்க வழி ஏற்படும்.

அங்கே நண்பர்கள் குறிப்பிட்டமாதிரி கான்டீனும்—அதற்கென்று ஏற்ற வசதியில்லாத அளவில் இப்பொழுது இருப்பிடங்கள் இருக்கிறது—எனவே அதற்காகத் திட்டம் போட்டு ஒரு கோடி இரண்டு கோடி ரூபாயானாலும் பரவாயில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்பேரில் செய்வது என்று முடிவெடுத்தால் அந்த அளவில் செய்யலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டது மாதிரி 480 கோடி ரூபாய் ஒதுக்குகிறோமே என்றாலும் பிட்டது மாதிரி 480 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்றாலும்கூட அவற்றையெல்லாம் வழங்குகின்ற மிக முக்கியமான பொறுப்பை யேற்றிருக்கின்ற இந்தச் சட்டமன்றப் பேரவை, மேலவை இந்தத் துறை அத்தனைக்கும் சேர்து நான் இன்றைக்குக் கோருகின்ற மானியம் 40 இலட்சத்துச் சில்லறை ரூபாய்தான்.

ஆனால் இப்படிப்பட்ட பொறுப்பான இந்த அவைக்கு வசதி வாய்ப்புகள் வேண்டுமென்றால் அதற்கென்று தனியாகத் திட்டம் போட்டால்தான் முடியுமே தவிர இந்த இடத்தையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் பல்வேறு நெருக்கடிகள் வருகின்றன.

கான்டீனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பல சங்கடங்கள் இருக்கின்றன.

அந்தப் பகுதி உறுப்பினர்கள் அந்தப் பகுதிக்குப் போகிறார்கள், இந்தப் பகுதி உறுப்பினர்கள் இந்தப் பகுதிக்குப் போகிறார்கள். ஆகவே, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்துகொள்ள முடியாத அளவில் இப்போது இருக்கும் லாபி முறை இருந்து கொண்டிருக்கிறது.





டில்லியில் இருப்பதுமாதிரி இருக்க வேண்டுமென்றால் புதிய கட்டடம் அமைத்தாலொழிய அந்தத் தன்மை வராது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் திட்டம் தீட்டச் செய்து இதே இடத்தில் கட்ட வேண்டுமா அல்லது அரசினர் தோட்டத்திலாவது அல்லது எதிர்ப்புறத்திலாவது முழு வசதிகள் கொண்ட அவைக்கு கட்ட ஏற்பாடு செய்தால் சட்டமன்றப் பணிகள் சிறப்பாக நடைபெற வசதிகள் ஏற்படும் என்று குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு வசதி வாய்ப்புக்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் அவைக்குழு கூடி முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இலவச ரயில்வே பாஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது பல்லாண்டுக் காலமாக எழுப்பப்பட்டு வருகிற கோரிக்கை. 1957-இல், 58-இல், 61-இல், 62-இல், 68-இல், 69-இல் வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம்கூட ரயில்வே பாஸ் தருவதன் மூலம்தான் உறுப்பினர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்ய வசதி வாய்ப்புகள் ஏற்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரயில்வே பாஸ் தருவதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

எந்த வகையில் நடைமுறைப்படுத்துவது என்பதை வேறு பல மாநிலங்களில் உள்ள நடைமுறைகளைப் பார்த்து நம்முடைய மாநிலத்தில் எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதைச் சிந்தித்து நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சில மாநிலங்களில் 3,000 கிலோ மீட்டர் வரை போகலாம் என்று வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் மாநில அளவில் மட்டும் போகலாம் என்று வைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் இந்தியா முழுவதும் போகலாம், ஆனால் 3,500 கிலோ மீட்டருக்கு மேல் போகக் கூடாது, 6,000 கிலோ மீட்டருக்கு மேல் போகக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். எந்த முறையைக் கையாண்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவு பேருக்கும் வசதி வாய்ப்பாக இருக்கும்

என்று பார்க்க வேண்டும். ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார்—3,000 கிலோ மீட்டர் என்று வைத்து விட்டால் நாகர்கோயில் உறுப்பினருக்கும் தாம்பரம் உறுப்பினருக்கும் ஒரே நிலை என்றாகி விடுகிறது. நாகர்கோயில் உறுப்பினர் அங்கிருந்து இரண்டு மூன்று முறை வந்து விட்டாலே அந்த 3,000 கிலோ மீட்டர் தீர்ந்துவிடும் என்று குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் மனதில் கொண்டு எந்த வகையில் செய்தால் எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பயன் ஏற்படும் என்று ஆராய்ந்தறிந்து கொண்டுவரப்படும்.

**திரு. முனு ஆதி:** ரயில்வே பாஸ் தருவது எம்.எல்.ஏ.க்களுக்கு மட்டுமா அல்லது குடும்பத்திற்கும் சேர்த்தா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு காலத்தில் எந்த வசதியும் இல்லாமல் இருந்தது. உறுப்பினர்கள் கேட்கத் தொடங்கிய பிறகுதான் அரசாங்கப் பேருந்துகளை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலை வந்தது. ரயில் போகாத இடத்திற்கெல்லாம் பேருந்துகள் செல்லுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இப்போது ரயில்வே பாஸ் உறுப்பினர்களுக்கு மட்டுந்தான், குடும்பத்திற்கு அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கே இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குடும்பத்திற்கும் சேர்த்துக் கேட்டால் நிதியமைச்சர் கணக்குப் பார்த்து இந்த ஆண்டு வேண்டாமென்ற முடிவுக்கு வரவேண்டி வரலாம். உறுப்பினர்கள் அளவுக்கு ஏற்றுக்கொள்வதுதான் பொருத்தமுடையதாக இருக்கும்.

பேனா ஒன்று வழங்குவது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் எழுப்பியதற்கு விளக்கம் சொல்லுகின்ற போது பேனா ஒன்று வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். இந்தத் தொடர்கூட்டத்தின் இறுதிக்குள்ளாக ஒரு பேனா எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. முனு ஆதி:** பேனாவில் தரமும் இருக்கிறது. எட்டணாவுக்குக்கூட பேனா இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் குறைந்தது ஓராண்டுக் காலத்திற்காவது எழுதக்கூடிய அளவுக்கு உயர்ந்த பேனாவாக வழங்க முன்வர வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பயன்படக் கூடிய, நின்று எழுதக்கூடிய அத்தகைய பேனாவாகப் பார்த்துத் தர முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

வாழ்க்கைச் செலவு மற்ற நிலைமைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்களும் குறிப்பிட்டார்கள்.

திரு. வீராசாமி அவர்கள் எந்தெந்த மாநிலங்களில் உறுப்பினர்களுக்கு சம்பளம் அதிகமாக இருக்கிறதோ அவற்றை மட்டுந்தான் குறிப்பிட்டுக் காட்டினார்களே தவிர, எங்கெங்கு குறைவாக இருக்கிறது என்பதைக் குறிப்பிடவில்லை. எங்கெங்கு குறைவாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது என்னுடைய பொறுப்பு.

உறுப்பினர்களுக்கு—பீகாரில் 250 ரூபாய் கொடுக்கிறார்கள். கேரளத்தில் இப்போதுதான் சிறிது உயர்த்தியிருக்கிறார்கள். ஏற்கனவே காம்பன்சேடரி அலவன்ஸ் மட்டுந்தான் இருந்தது. இப்போது 300 ரூபாய் கொடுக்கிறார்கள். குஜராத்தில் 300 ரூபாய் கொடுக்கிறார்கள். அஸ்ஸாமில் 250 ரூபாய்தான். கர்நாடகத்தில் 250 ரூபாய், ஸ்பெஷல் அலவன்ஸ் 150 ரூபாய், ஒரிஸ்ஸாவில் 200 ரூபாய். அவர்கள் அதிகமாக இருப்பதை 400, 500, 600 என்று இருப்பதைப் படித்து விட்டார்கள். அவர்கள் விட்டு விட்டதை நான் படித்தேன்.

உறுப்பினர்களுக்கு மட்டும் இங்கு குறைவாக இருக்கிறது என்று கருத வேண்டாம். அமைச்சர்களுக்கும் இங்கு சம்பளம் குறைவாகத்தான் இருக்கிறது. அமைச்சர்களுக்கு இங்கு சம்பளம் அதிகமாக இருக்கிறது என்று எண்ணிக் கொள்ளக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாபில் முதலமைச்சருக்கு 1,500 ரூபாய், அலவன்ஸ் 500 ரூபாய். மற்ற அமைச்சர்களுக்கு 1,500 ரூபாய். கர்நாடகத்தில் 1,500 ரூபாய் சம்பளம். அலவன்ஸ் 350 ரூபாய். ஸ்டேட் மினிஸ்டர்களுக்கு சம்பளம் 1,000 ரூபாய், அலவன்ஸ் 350 ரூபாய். அரியானாவில்

1,500 ரூபாய் முதலமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும். குஜராத்தில் 1,100 ரூபாய் கொடுத்து முதலமைச்சர் அவர்களுக்கு 10,000 ரூபாய் வருஷத்திற்கு மற்ற அலவன்ஸ் என்ற வகையில் கொடுக்கப்படுகிறது. இராஜஸ்தானில் சம்பளம் 1,250 ரூபாய், அலவன்ஸ் 250 ரூபாய். மேற்கு வங்கத்தில் சம்பளம் 1,150 ரூபாய், அலவன்ஸ் 500 ரூபாய்.

இதையெல்லாம் நான் சொல்லுவது இங்கு அமைச்சர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, உண்மையிலேயே அமைச்சர்களுக்குச் சம்பளம் போதாது. அமைச்சர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக ஓட்டு எடுத்தால் 234 உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்கள். எதிர்க்கட்சிக்காரர்களும் மறுக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கெல்லாம் விரைவில் மந்திரியாக வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. குறைந்த பட்சம் முதலமைச்சர் அவர்களுக்கு 2,000 ரூபாய் சம்பளம், மற்ற அமைச்சர்களுக்கு 1,500 ரூபாய் சம்பளம் என்று ஆக்க வேண்டும். இப்போது இருக்கும் விலைவாசியில் அந்த அளவு தேவை. அப்போதுதான் அமைச்சர்கள் வீட்டுக்குப் போனால் காப்பியாவது கிடைக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மற்ற மாநிலங்களில் இருக்கிற நிலைமையை விளக்கினேனே தவிர, இங்குள்ள அமைச்சர்களுக்கு அதிகச் சம்பளம் வேண்டுமென்பதற்காக இவற்றை எடுத்துச் சொல்லவில்லை.

உறுப்பினர்களுக்கு இப்போது 250 ரூபாய் சம்பளம் என்று வைத்திருக்கிறோம். காம்பன்சேடரி அலவன்ஸ் 100 ரூபாய் கொடுத்து மொத்தம் 350 ரூபாய் வருகிறது. காம்பன்சேடரி அலவன்சில் 50 ரூபாய் கூட்டி 150 ரூபாயாகக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. முனு ஆதி:** 50 ரூபாய் கொடுப்பதைவிடக் கொடுக்காமலே இருக்கலாம். 50 ரூபாய் கொடுத்து அவமானப்படுத்த வேண்டாம்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவை முன்னவர் அவர்கள் மற்ற மாநிலங்களில் அமைச்சர்களுடைய சம்பளத்தை ஒப்பிட்டுக் காட்டியது இங்கு அமைச்சர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொள்வதற்காக அல்ல. அதை எல்லாம் காட்டி இதை அதிகப்படுத்திக் கொள்ளாமல் இருக்கும்போது உறுப்பினர்கள் அதிகப்படுத்திக் கொண்டால் பொது மக்கள் மத்தியில் கெட்ட பெயர் வரும் என்ற காரணத்தால் படிப்படியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று 50 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. முனு ஆதி:** அமைச்சர்களுக்கும் சம்பளம் அதிகமாகத் தேவைதான். பொறுப்பு அதிகம் இருக்கிறது. ஒத்துக் கொள்ளுகிறோம். அவர்களும் அதிகம் பெற்றுக் கொள்ளட்டும், எங்களுக்கும் அதிகம் தரட்டும். நடைமுறையில் இப்போது பல சிக்கல்கள் இருக்கின்றன. அமைச்சர்களும் அவர்களுடைய சம்பளத்தை ஏற்றிக் கொள்ளட்டும். வேண்டாமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. ஆதி அவர்களே ரொம்பக் கஷ்டப்படுகிற காரணத்தால் அவர்களுடைய கோரிக்கைக்கு இணங்க 250 ரூபாய் சம்பளம் 150 ரூபாய் அலவன்ஸ் என்று அவை முன்னவர் அறிவித்ததை மாற்றி 250 ரூபாய் சம்பளம் 200 ரூபாய் அலவன்ஸ் ஆக மொத்தம் 450 ரூபாய் என்று அறிவிக்கிறேன். (ஆரவாரம்).

**திரு. பெ. சீனிவாசன்:** ஸ்டாம்ப் பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** கான்ஸ்டுவென்சிக்குப் போக ஜீப் ஏற்பாடு பண்ண வேண்டும். இதையெல்லாம் கொடுப்பதை விட ரொம்பத் தேவை அது. அதைக் கொஞ்சம் கன்சிடர் பண்ணுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போதே உத்தரவு இருக்கிறது. அந்தந்த யூனியனைச் சேர்ந்த ஜீப்புகளை சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிப் பணிகளைக் கவனிப்பதற்காக எடுத்துச் செல்லலாம் என்பது தற்போதே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1974 ஏப்ரல்

**திரு. பெ. சீனிவாசன்:** நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன பஞ்சாயத்து யூனியனிலிருந்து எனக்கே ஜீப் கிடைக்க வாய்ப்ப இல்லை. காரணம், பஞ்சாயத்து யூனியன் வேலைகளே ஏராளமா இருக்கின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய இலாகாவில் இருந்து கூட்டமாக வந்த விடுகிறார்கள். இதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு பண்ணுவத நல்லது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்துகொண்டு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன தீவிரத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்பதற்கான முயற்சியை மேற்கொள்வார்கள்.

உறுப்பினர்களுக்கு இப்பொழுது ஏற்றப்பட்டிருக்கிற சம்பளமும் படியும் 1—4—1974 இலிருந்து கிடைக்கும். மார்ச் மாதச் சம்பளம் என்று அர்த்தம். அதாவது மார்ச் மாதச் சம்பளத்தோடு சேர்த்து 1—4—1974 இலிருந்து கிடைக்கும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I do not think it is wrong to increase the salaries of Hon. Ministers and people will not misunderstand it because the cost of living has gone up. So, under the impression that the people will misunderstand it, the Hon. Ministers should not think that they should not increase the salary of Members. I think there is nothing wrong in it.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அமைச்சர்களும் செம்மையாகச் செயல்பட இன்றைய விலைவாசியில் அதை ஏற்றிக்கொள்வதுதான் நீதியாக இருக்கும். இந்த அவையின் ஒருமித்த கருத்தோடு சொல்கிறோம். அதை ஏன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினர்கள் பலரும் சொல்லியிருப்பதன் காரணமாக இதைப் பரிசீலிக்கலாமே தவிர இப்போது ஏற்றுக்கொள்கிற நிலை இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** உறுப்பினர்கள் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்வதற்கு யூனியன் ஜீப்கள் தருவதேயில்லை. ஆணையரிடம் ஒரு வாரத்திற்கு முன்பே கேட்டால் கூட தருவதில்லை. ஒருவேளை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இருக்கிற



1974 ஏப்ரல் 8] [திரு. க. உரொ எட்மண்ட்]

இடங்களில் கொடுக்கிறார்களோ என்னவோ நாங்கள் கேட்டால் தருவதில்லை. ஆகவே, அரசு ஒரு உத்தரவு போட்டு அனுப்ப வேண்டும். ஒரு மாதத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒரு வாரம் ஒதுக்கிக்கொடுக்கவேண்டும். அல்லது மாதத்திற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கிக் கொடுங்கள் என்று அரசு ஆணை பிறப்பித்தால் அவர்கள் கொடுப்பார்கள்.

**திரு. பெ சீனிவாசன்:** யூனியன் ஜீப் யூனியன் வேலைக்கே மாதம் பத்து நாட்களுக்கு பயன்படுவதில்லை. ரெவின்யூ இலாகா, ஃபாமிலி ப்ளானிங் இவற்றிற்கு எவ்வளவோ பணம் அலாட் செய்கிறார்கள். யூனியனுக்கு ஒரு ஜீப் அல்லது வான் கொடுக்கலாம். அல்லது ப்ரைமரி ஹெல்த் சென்டருக்கு ஒதுக்கவேண்டும். யூனியன் வேலைகளுக்குப் பயன்படாமல் சிலசமயங்களில் ஆணையரே ஜீப் இல்லாமல் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் ஒரு மாதம் காத்திருந்தாலும் கிடைக்காது. பெருந் தலைவர்களுக்கே கிடைக்கவில்லை. இது ஒரு பெரும் குறை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்து ஒரு திட்டத்தை வகுத்து மாதம் இரண்டு நாட்களாவது ஒவ்வொரு உறுப்பினருக்கும் கிடைக்கத்தக்க அளவிற்குச் செய்வதற்கு முயற்சிகளைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் முதலில் குறிப்பிட்டபடி மற்றப் பிரச்சினைகளைப் பொறுத்து எதிர்க்கட்சித் தலைவர்கள், அத்தனை பேர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நான் எல்லோரும் சேர்ந்து ஒழுங்குப்படுத்திக் கொண்டால் மற்ற வசதிவாய்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** முன்பெல்லாம் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் ஹாஸ்டல் டே ஸெலிபரேஷன்ஸ் இருக்கும், ஸ்போர்ட்ஸ் வைப்பார்கள். ஆனால் இப்போது அப்படி வைப்பதில்லை. அவற்றை வைத்தால் ஒரு என்டெர்டெயின்மென்ட் இருக்கும். ஆகவே அவற்றை இந்த முறை வைப்பார்களா அல்லது அடுத்த முறை வைப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சென்ற ஆண்டுதான் வைக்கவில்லை. அதற்கு முந்திய ஆண்டு இருந்தது. எப்போதும் பட்ஜெட் செஷனில் வைப்பதில்லை. ஜூலை செஷனில் தான் வைப்பது. வருகிற ஜூலை செஷனில் அதை வைக்கலாம்.

**திரு. கு. காமாட்சி:** வைத்திய வசதி பற்றி கேட்டோம். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் குடும்பத்தினருக்கு இந்த வைத்திய வசதிகள் உள்ளன. இங்கு எங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. குறைந்தது தாயார், மனைவி, குழந்தைகள் இவர்களுக்கும் இருந்தால் நல்லது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இப்போதுள்ள விடுதிகள், புது விடுதி பழைய விடுதி, புதிய புதிய விடுதி என்று இப்படி ஒரே குழப்பமாக இருக்கிறது. ஆகவே ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை, சிலப்பதிகார விடுதி அல்லது மணிமேகலை விடுதி என்று பெயர்களை வைத்தால் நன்றாகயிருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல துறவிகளின் பெயரால் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. பெ. சீனிவாசன்:** துறவிகளின் பெயர்கள் வேண்டாம். முன்னாள் சபாநாயகர்களின் பெயர்களை வைக்கலாமே.

THIRU B. VENKATASWAMY: The Hon. Minister has not replied to the point *re.* allotment of scooters to M.L.As. So many poor M.L.As. require it.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எந்த விதிகளுக்கு உட்பட்டு, எந்த நிபந்தனைகளை வைத்து எப்படிக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி பரிசீலிக்கப் பட்டு வருகிறது. பரிசீலித்த பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும்.

**திரு. கு. காமாட்சி:** உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உள்ள வைத்திய வசதி பற்றி. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எம்.எல்.ஏ-க்கள் சுற்றுப்பயணம் செய்து உடல் நலிவுற்றாலும் அவர்கள் குடும்பங்கள் சுகமாக வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நியூ கார் ஒரு தடவை அலாட் ஆகிவிட்டால் மறுமுறை கிடையாது என்றிருக்கிறது. இப்போது டீஸல் பொருத்தி கார் வரப்போகிறது. அதைச் சிலர் பயன்



படுத்த முன்வருவார்கள். ஆகவே இப்போதுள்ள நிலைத் தளர்த்தி டீஸல் என்ஜின் உள்ள காரை அலாட் செய்ய வழிவகை செய்வார்களா?

திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், ஆ. கு. சுப்பையா, பெ. சௌந்தரபாண்டியன், எம். சுரேந்திரன், கே. டி. கே. தங்கமணி, எம். ஏ. லத்தீப், கே. எஸ். கோதண்டராமையா, பி. வெங்கடசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,27,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

[1974 ஏப்ரல் 8

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.57 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 9.. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

230. Notification issued with G.O. Ms. No. 7460, Revenue, **dated the 18th December 1973, in regard to an amendment to rule** 61 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]

231. Notification issued with G.O. Ms. No. 7469, Revenue, **dated the 19th December 1973, in regard to an amendment to rule** 43 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the table of the House **under section 48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of** 1963).]

### B. *Reports, Notifications and Other Papers.*

**@ 173. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Confer-**ment of Ownership). Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 13 of 1974) with Annexure.

---

@ Despatched to Members on 4th April 1974.



1974 ஏப்ரல் 8]

## இணைப்பு I.

(2-ம் பக்கத்தில் 775 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

**விடை—**

(அ) தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் இரண்டு முகவரமைப்புகளைக் கொண்டுள்ளது. அவையாவன: புலனாய்வுப் பிரிவு, அனல் மின்சார உட்குழு ஆகியன. இவை முறையே புதிய புனல் மின்சாரத்திட்டங்களையும் அனல் மின்சாரத்திட்டங் களையும் வகுத்து இந்திய அரசின் அனுமதியைப் பெறும் புதிய திட்டங்களுக்கும் பொறுப்புள்ளவையாகும். செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை பொறுத்தவரை பணியினை ஒருங்கிணைக்க திட்டம் செயற்படுத்தும் உட்குழு ஒன்றும், திட்டமிடும் உட்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) புலனாய்வுப் பிரிவு அனல் மின்சார உட்குழு, திட்டம் செயற்படுத்தும் உட்குழு, திட்டமிடும் உட்குழு, ஆகியவற்றின் பணிகள்.

### புலனாய்வுப் பிரிவு.

இப்புலனாய்வுப் பிரிவு 1958-ல் தோற்றுவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதிலுமுள்ள பல்வேறு ஆற்றுப்படுகைப்பகுதிகளி லிருந்து நீரியல் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, அவற்றைத் தொகுப்பது, வளர்ச்சி நடவடிக்கைகளின் அளவுக்கு ஏற்ப புனல் மின்சக்திப் பெருக்கத்திற்கான செயற்குறிப்புகளை வகுப்பது, உரிய ஆதாயம் தரக்கூடிய புனல் மின்சாரத்திட்டங்கள் குறித்து விரிவாக புலனாய்வு செய்வது, தொழில் நுட்பமுறையில் சாத்தியக்கூறு யாவையும் பொருளாதார வகையில் தனித்தியங்க வல்லமையுமான திட்டங்கள் குறித்து விரிவான அறிக்கைகள் தயாரிப்பது தேசியத் திட்டங்களின் அமைப்பிற்குள் புதிய புனல் மின்சாரத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மத்திய நீர்-மின் சக்தி ஆணைக்குழுவிடமிருந்தும், திட்ட ஆணைக்குழுவிடமிருந்தும் தொழில் நுட்ப இசைவு, அனுமதியைப் பெறுவது ஆகிய பணிகள் இப்பிரிவின் பொறுப்பின் கீழ் உள்ளன. இவ்வாறாக இப்பிரிவின் முதன்மையான பணி இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய புனல் மின்சக்தி வாயில்களின் வளர்ச்சிக்காக திட்டமிடுவதாகும். தற் போதுள்ள புனல் மின்சாரத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் புனல் மின்சாரத்திட்டங்கள் ஆகியவற்றைப் பொருத்த

வரை எழும் பிரச்சனை எதுவும் குறிப்பாக மின்சக்தியில் நீரியல் கூறும் மதிப்பீடு சில பகுதிகளின் மறு ஆய்வு முதலியவை இப்பிரிவால் கவனிக்கப்படுகின்றன. மேலும் தமிழ்நாட்டில் இரண்டாவது அணு மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்காக இடத்தைத் தெரிந்தெடுக்கும் பணியும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கான இடத்தைத் தெரிந்தெடுக்கும் பணியும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்காக நேரிடைப் புலனாய்வுப்பணியும் இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட பணிகளைக் கவனிப்பதற்காக இக்குழு 4 கோட்டங்களைக் கொண்டுள்ளது. அவையாவன :

(1) நீரியல் அளவை ஆய்வுக்கோட்டம். இது சென்னையில் தலைமையிடத்தை உடையது. புதிய புனல் மின்சாரத்திட்டப் பார்வையிடங்களான கலிங்கல்கள், மழை அளவு இடங்கள் முதலியவற்றை நீரியல் புள்ளி விவரங்களைத் திரட்டி அமைப்பதுடன் தொகுக்கும் பணியை இது கவனிக்கும்.

(2) பல்வேறு புதிய புனல் மின்சாரத்திட்டங்களுக்குத் தேவையான நேரிடப் புலனாய்வுகளில் ஈடுபடும் புனல் மின்சார ஆய்வுக்கோட்டம். இதன் தலைமையிடம் எமரால்டில் உள்ளது.

(3) மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட புனல் மின்சார ஆய்வுக் கோட்டம். இது இரண்டாவது அணுமின் சக்தி நிலையம் தொடர்பான நேரிடப்புலனாய்வுகளைக் கவனித்து வரும்.

(4) சென்னையில் உள்ள புனல் மின்சார ஆய்வுகள் கோட்டம் செயற்குறிப்புகளை வகுப்பது திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பது நேரிடப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் திட்டத்தின் பொருளாதாரக் கூறுகள் பற்றி ஆய்வு செய்வது விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிப்பதுடன் அவற்றைச் செயற்படுத்த மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவிடமிருந்தும் திட்ட ஆணைக்குழுவிடமிருந்தும் இசைவு பெறுவது ஆகிய பணிகளை செய்து வருகிறது.

சென்னை நீரியல் அளவை ஆய்வுக்கோட்டம். இது உதக மண்டலம், திண்டுக்கல், பாபநாசம் ஆகிய இடங்களில் மூன்று நேரிடத்துணைக்கோட்டங்களைக் கொண்டுள்ளது. இத்துணைக் கோட்டங்கள் தற்போதுள்ள நீரியல் நிலையங்களைப் பராமரித்தல், தேவைப்படும்போது புதிய நிலையங்களை நிறுவுதல் நீரியல் புள்ளி விவரங்களைத் தொகுத்துப் பணிந்தனுப்புதல் ஆகியவற்றை சென்னையிலுள்ள துணைக்கோட்டம் களப்பணியைக் கண்காணித்தல் அங்கிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களை சரி பார்த்து நிலையான பதிவேடுகளாக அவற்றைத் தொகுத்தல் ஆகிய பணிகளையும் மேற்படி நேரிடத்துணைக்கோட்டம் செய்து வருகின்றன. இத் துணைக்கோட்டங்களுக்கு களத்திலும் அலுவலகத்திலும் தேவையான தொழில் நுட்ப பணியாளரும் தொழில் நுட்பச்சாராத பணியாளரும் உதவி பெறுகின்றனர். புலனாய்வுகள் முடியப்பெற்ற புதிய திட்டங்கள் குறித்துத் திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்காக மேலும் ஒரு துணைக்கோட்டம் இக்கோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.





எமரால்டில் உள்ள புனல் மின்சார ஆய்வுக்கோட்டம் புதிய அனல் மின்சாரத்திட்டங்களின் புலனாய்வுப்பணிகளைக் கவனிக்க உதக மண்டலத்தில் இரண்டும், எமரால்டில் ஒன்றும் பொள்ளாச்சியில் ஒன்றும் பழனியில் ஒன்றும் மேட்டூரில் ஒன்றுமாக 6 நேரிடத் துணைக்கோட்டங்களைக் கொண்டுள்ளது.

மதுரையில் உள்ள புனல் மின்சார ஆய்வுக்கோட்டம் தமிழ் நாட்டில் II-ஆம் அணு மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பது தொடர்பாக களப்புலனாய்வுப் பணிகளைக் கவனிக்க மதுரையில் நிர்வாக பொறியாளர் ஒருவரையும் தூத்துக்குடியில் புனல் மின்சார ஆய்வுகள் உதவிப் பொறியாளர் ஒருவரையும் மேற்பார்வைப் பொறியாளர் (கட்டிடப்பணி) ஒருவரையும் கொண்டது. இந்தக் கோட்டம் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு 20-10-1972-ல் அமைக்கப்பட்டது.

சென்னையிலுள்ள புனல் மின்சார ஆய்வுக்கோட்டம் மூன்று துணைக்கோட்டங்களைக் கொண்டது. அக்கோட்டங்கள் நேரிட ஆய்வுத் திட்டங்களை ஆய்வு செய்தல், நேரிடப்பணிகளுக்குக் கட்டளைகள் பிறப்பித்தல், விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்தல், மத்திய நீர் மின்சக்தி ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட குறிப்புரைகளுக்குப் பதில் தயாரித்தல், எதிர்காலத் திட்டங்களுக்குத் திட்டமிடுதல் ஆகிய பணிகளைச் செய்கின்றன. சென்னை புனல் மின்சார ஆய்வுகள் நிர்வாகப் பொறியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் மேலும் ஒரு துணைக்கோட்டம் சென்னையில்

செயல்படுகிறது. அதன்பணி II-வது அணுமின் சக்தி நிலையத்திற்காக இடம் தெரிந்தெடுப்பது தொடர்பானதாகும். நிர்வாகப் பணியாளர் நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்கள். அவர்களுக்குத் தலைமையாக இரண்டு இளநிலை கண்காணிப்பாளர்கள், உள்ளனர். அவர்களில் ஒருவர் பணியாளரமைப்பின் நிர்வாகத்தையும் மற்றவர் கணக்குகளையும் கவனித்து வருகிறார்.

### அனல் மின்சார உட்குழு.

அனல் மின்சார உட்குழு எண்ணூரில் II-ஆம் கட்ட விரிவுப் பொறியியல் பணிகளை விரிவாக மேற்கொள்ள 1971 அக்டோபர் திங்களில் அமைக்கப்பட்டது.

புதிய அனல் மின்சாரத்திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்பும் இந்த உட்குழுவைச் சேர்த்தது. அது பின்வரும் திட்டங்கள் குறித்து விவரமான திட்ட அறிக்கைகளைத் தயாரித்து அரசுக்கும் திட்ட ஆணைக்குழுவுக்கும் பணிந்தனுப்பியுள்ளது.

1. தூத்துக்குடி அனல் மின்சாரத்திட்டம்: 400 மெ. வா. திறனை 600 மெ.வா. திறனுக்கு உயர்த்துதல்.

2. மேட்டூர் அனல் மின்சாரத்திட்டம்: 3 100 மெ.வா.

தற்போதுள்ள அனல் மின்சார நிலையங்களுக்கு நிலக்கரி கொள்முதல் செய்யும் பொறுப்பும் அக்குழுவைச் சேர்ந்ததாகும். தற்போதுள்ள நிலையங்களின் இயக்கம், பராமரிப்பு, குறித்து பிரச்சினைகளை மறு ஆய்வு செய்வது உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்வது ஆகிய பணிகளையும் அக்குழு செய்கின்றது.

அக்குழு (1) நெய்வேலியில் 50 மெ. வா. கி. உற்பத்தி திறனுள்ள 2 கொதிகலன்களை எண்ணெயை எரிபொருளாகக் கொண்டு செயல்படுமாறு மாற்றுவது.

(2) நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவது தொடர்பான சிறப்புக்குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளது.

### திட்ட செயற்படுத்தும் உட்குழு

29—6—1972 வரை ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநிலப்பாசன மின்சார அமைச்சர்களது ஆறுவது மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட 10-வது தீர்மானத்தையொட்டி வாரியத்தில் திட்டம் செயற்படுத்தும் உட்குழுவை அமைப்பதற்கு வாரியம் ஏற்பளித்துள்ளது. இந்த உட்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு—



தலைமைப் பொறியாளர் (பொது), தலைமைப் பொறியாளர் (இயக்கம்), தலைமைப் பொறியாளர் (பகிர்ந்தளித்தல்), தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்-கட்டுமானம்), தலைமைப் பொறியாளர் கொள்முதல்—பண்டகசாலைப் பொருள்கள், மேற்பார்வைப் பொறியாளர் (தொழில் நுட்பம்) (மின்சாரம்), மேற்பார்வைப் பொறியாளர் அனல் மின்சார உட்குழு, மேற்பார்வைப் பொறியாளர் புலனாய்வுப் பிரிவு, மேற்பார்வைப் பொறியாளர் (கிராமப்பகுதிகள் மின் இணைப்பு) ஆகியோராவர், தலைமைப் பொறியாளர் (பொது) இந்த உட்குழுவின் தலைவராவார். எந்திரவியல் மின்சாரம் திட்டமிடல் நிர்வாக பொறியாளர் ஆவார்.

இந்த உட்குழுவின் அலுவல்களான:

(1) கட்டப்பட்டு வரும் மின்சாரத்திட்டப்பணிகளின் பணி முன்னேற்றங்கள் குறித்து மறு ஆய்வு செய்தல்.

(2) சாதனங்களைச் சேர்ப்பிக்கும் பணியை ஒருங்கிணைப்பது.

(3) உருக்கு—சிமிட்டி முதலிய இன்றியமையாப் பொருட்கள் போதுமான அளவு உரிய நேரத்தில் வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்வது.

(4) திட்டங்களில் பணி செயல்படத் தொடங்குவதை விரைவுபடுத்துவதற்குத் தடையாக உள்ள இடையூறுகளைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

5. பெருகிவரும் மின்சாரத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் புதிய மின்சாரத்திட்டங்கள் குறித்து முடிவு செய்வதுடன் எதிர்காலத்தேவைகளை நிறைவு செய்யத் திட்டங்கள் வகுப்பது.

இந்த உட்குழுவின் இரண்டு கூட்டங்கள் இதுவரை நடந்துள்ளன.

### திட்டமிடும் உட்குழு:

திட்டமிடும் உட்குழு அமைப்பதற்கு வாரியம் ஏற்பளித்துள்ளது. இந்த உட்குழு தொழில் நுட்ப உறுப்பினர்—தலைமைப் பொறியாளர் (இயக்கம்). தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்-கட்டுமானம்), மேற்பார்வைப் பொறியாளர்/தொழில்நுட்பம் (மின்சாரம்), மேற்பார்வைப் பொறியாளர்/அனல் மின்சக்தி, மேற்பார்வை பொறியாளர்-புலனாய்வுப்பிரிவு, நிதிநிலைமைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோரடங்கியது. தொழில் நுட்ப

உறுப்பினர் தலைவராகவும் தொழில் நுட்ப (மின்சாரம்), மேற்பார்வைப் பொறியாளர் செயலாளர் கூட்டங்கள் கூட்டுநராகவும் இவ்வுட்குழு கொண்டுள்ளது.

வாரியத்தின் திட்டப்பணிகள் ஐந்தாண்டு திட்டப்பணிகள் ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதுடன் அவ்விருவகைப் பணிகள் தொடர்பானது பிரச்சனைகள் அனைத்தையும் ஆய்வு செய்து தீர்த்துவைக்கும் பணியும் திட்டமிடும் உட்குழுவைச் சாரும்.

இந்த உட்குழுவின் முதற்கட்டம் 24—8—1973 அன்று நடைபெற்றுள்ளது.

*Answer*—

(*a*) At present the Tamil Nadu Electricity Board has two agencies viz. Investigation Circle and Thermal Cell which are in charge of formulation of new Hydro Electric Projects and Thermal Projects respectively, and obtaining sanction from the Government of India. In order to co-ordinate the work in respect of new projects and projects under construction, a Project Implementation Cell and Planning Cell have also been formed.

(*b*) Functions of Investigation Circle, Thermal Cell, Project Implementation Cell and Planning Cell.

## I. Investigation Circle—

The Investigation Circle was formed in 1958. This circle is in charge of collecting hydrological data from the various river basins in the entire State, compiling the data, formulating proposals for Hydro Electric Power Development to suit the pace of development activities, investigating remunerative Hydro-Electric Projects in detail, preparing detailed reports on such of the projects found technically feasible and economically viable and obtaining technical clearance/sanction from the Central Water and Power Commission and Planning Commission for implementing new Hydro Electric Projects within the frame work of the National Plans.

Thus the main function of the circle is to plan the development of Hydro Power resources available in the State. In respect of existing Hydro-Electric Projects as well as Hydro-Electric Projects under construction, any problem that may arise particularly in the Hydrological aspect assessment of power potential, re-examination





of certain components, etc., are also being attended to by this circle. Further this circle has also been assigned the task of selecting a suitable site for locating the second Atomic Power Plant in Tamil Nadu. Field investigation for locating the Thermal Station at Mettur in Salem District is also being carried out by this circle.

This circle comprises 4 divisions for attending to the above works, viz. (1) Hydro Metric Surveys Divisions with Headquarters at Madras for attending to the collection and compilation of hydrological data including erection of new Hydro-Electric Project observation points (viz.) weirs, rain fall stations, etc., and (2) Hydro Electric Surveys Division with Headquarters at Emerald for attending to the field investigations required for the various new Hydro-Electric Projects (3) Hydro-Electric Surveys Division with Headquarters at Madurai for attending to the field investigations connected with II Atomic Power Plant and (4) Hydro-Electric Surveys Division at Madras for formulation of proposals, the preparation of project reports, studying economical aspects of the project, based on field data, preparation of detailed project reports and getting clearance from the Central Water and Power Commission and Planning Commission for the Project, for implementation.

Hydro Metric Surveys Division, Madras comprises 3 field sub-divisions at Ootacamund, Dindigul and Papanasam to attend to the maintenance of existing hydrological stations, installing new stations as and when necessary, collection and submission of hydrological data and one sub-division at Madras for watching the work of the field, checking the data received from the field and compiling them as permanent records. The sub-divisions are assisted by the required technical and non-technical personnel both in the field and in the office, and one more sub-division is attached to this division for preparation of the project reports on the new schemes, for which investigation were completed.

Hydro-Electric Surveys Division, Emerald comprises 6 field sub-divisions, two at Ootacamund, one at Emerald, one at Pollachi, one at Palni and one at Mettur to attend to the detailed investigations of new Hydro-Electric Project.

Hydro-Electric Surveys Division, Madurai comprises one Executive Engineer at Madurai, one Assistant Engineer/Hydro-Electric Surveys at Tuticorin and one Supervisor (Civil) to attend to

the field investigations, connected with selection of suitable site for locating II Atomic Power Plant in Tamil Nadu. This was formed on 29th October 1972 with headquarters at Madurai.

Hydro-Electric Surveys Division, Madras comprises 3 sub-divisions and they attend to the scrutiny of field survey plans, issue of instructions to the field, preparation of detailed project reports, preparing replies to the comments received from the Central Water and Power Commission and Planning future projects. One more sub-division is functioning at Madras under the control of Executive Engineer/Hydro-Electric Surveys, Madras for attending to the works connected withe the site selection for II Atomic Power Plant. The administrative work is attended to by the requisite ministerial staff headed by two Junior Superintendents one being incharge of establishment and the other incharge of Accounts.

*Thermal Cell—*

The Thermal cell was formed in October 1971 to take up the detailed Engineering of the Ennore II stage Extensions, it is also in charge of preparation of new thermal projects. It has prepared and submitted to Government and Planning Commission the detailed project report on—

1. Tuticorin Thermal Project—400 MW raising to 600 MW
2. Mettur Thermal Scheme—3 x 100 MW.

It is also in charge of procurement of coal for the existing thermal stations. The operation and maintenance problems of existing stations are reviewed and procurement of spares undertaken.

It has also been associated with special committee on—

(1) Conversion of 2 Nos. 50 MW boilers at Neiveli to oil firing and

(2) Neiveli second mine cut.

*Project Implementation Cell—*

In pursuance of Resolution No. 10, adopted at the sixth Conference of State Ministers of Irrigation and Power held at Srinagar from 29th June 1972 to 1st July 1972, the formation of the Project Implementation Cell in Board has been approved by the Board



The members of the Cell are Chief Engineer (General), Chief Engineer (Operation), Chief Engineer (Distribution), Chief Engineer (Projects and Construction), Chief Engineer (Purchase and Stores). Superintending Engineer/Technical (Electrical), Superintending Engineer Thermal Cell, Superintending Engineer/Investigation and Superintending Engineer, Rural Electrification with Chief Engineer (General) as the Chairman of the Cell and the Executive Engineer Mechnical and Electrical Planning as the Secretary of the Cell.

The functions of this cell are—

(1) to review the progress of power projects under construction;

(2) to co-ordinate the work with respect to delivery of equipments;

(3) to ensure that adequate supply of essential materials like steel, cement, etc., are provided in time;

(4) to take up remedial measures to overcome the bottlenecks for quickening the commissioning of the projects; and

(5) and to decide upon the new power schemes to meet the increasing demand and other forward planning.

Two meetings of the cell have so far been held.

*Planning Cell—*

The Board has approved the formation of Planning Cell. The Cell consists of Technical Member, Chief Engineer (Operation), Chief Engineer/Projects and Construction, Superintending Engineer/Technical (Electrical), Superintending Engineer (Thermal) Superintending Engineer/Investigation and Financial Controller with Technical Member as the Chairman of the Cell and Superintending Engineer/Technical (Electrical) as Secretary and convenor of the meetings.

The Planning Cell is responsible for sorting out all problems relating to both the Planning of the Board and the five year plan, besides taking over works statistics relating to them.

**The first meeting of the Cell has been held on 24th August 1973.**

[1974 ஏப்ரல் 8

## இணைப்பு II

(7-ம் பக்கத்தில் 776 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

இதுவரையில் கடம்பாரை நீர் மின்சக்தித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வருமாறு :—

**விரிவான ஆய்வுகள் :**

ஒதுக்கக்காடுகளில் செல்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பல்வேறு கூறுகள் குறித்து தொடக்க நிலை ஆய்விற்காக காடுகள் அழித்தல் போன்ற பணிகள் நடந்தேறி வருகின்றன. அணுகு சாலைகளும் பாலங்களும் மேல் அளியாறு அணையிலிருந்து கடம்பாரை மின் நிலையம் குடைவு வரை வரையில் உள்ள அணுகு சாலை (நீளம் 5.6 கி.மீ.)

ஜீப் செல்லக்கூடிய சாலையின் அமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. சாலையை அகலப்படுத்தும் பணிகள் நடந்தேறி வருகின்றன. கண்டரப்பட்டி ஓடை, புனச்சி ஓடை ஆகியவற்றின் குறுக்கே பாலங்கள் கட்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன. மதகுப் பாலங்கள் அமைப்புப்பணி நடந்தேறி வருகிறது. கடம்பாரை மின் நிலைய குடை வரையிலிருந்து 'சர்ஜ் ஷாப்ட்' வரையில் அணுகு சாலை :

**நிலை 1 :—**

(0 முதல் 2 கிலோ மீட்டர் வரை) ஜீப் செல்லக்கூடிய சாலைகள் அமைக்கும்பணி முடிவடைந்துள்ளது. சாலைகள் மேலும் அகலப் படுத்தும் பணி நடந்தேறி வருகிறது.

**நிலை 2 :—**

(2 கிலோ மீட்டர் முதல் 3.5 கிலோ மீட்டர் வரை) ஜீப் செல்லக் கூடிய சாலை அமைக்கும்பணி 100 கிலோ மீட்டர் நீளத்திற்கு முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடந்தேறி வருகின்றன.

**நிலை 3 :—**

(3.5 கிலோ மீட்டர் முதல் 5 கிலோ மீட்டர் வரை) ஜீப் செல்லக் கூடிய சாலை அமைக்கும் பணி 800 மீட்டர் நீளத்திற்கு முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணி நடந்தேறி வருகிறது.

பொள்ளாச்சி வால்பாரை நெடுஞ்சாலையையும், கடம்பாரை அணையையும் இணைக்கும் 12 கிலோ மீட்டர் நீளமுள்ள அணுகு சாலை தற்போதுள்ள சின்கோனா எஸ்டேட் சாலையில் (0 முதல் 7.5 மீட்டர் வரை) மேம்பாட்டுப் பணிகள்.



1974 ஏப்ரல் 8]

சாலையை அகலப்படுத்தும் பணிகள் நடந்தேறி வருகின்றன. கான்கிரீட் சாலைக்குத் தேவையான சரளைக் கற்கள் சேகரிக்கும் பணிகள் நடந்தேறி வருகிறது. ஏழு மதகுப் பாலங்கள் கட்டும் பணி நடந்தேறி வருகின்றது. சின்கோனா எஸ்டேட்டிலிருந்து கடம்பாரை அணைவரை (7.5 கிலோ மீட்டர் முதல் 12 கிலோ மீட்டர் வரை, சாலைகள் அமைக்கும் பணி :—

சாலைகள் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. சாலைகளை அகலப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது. அடிப்பரப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. நீர் விட்டு மேற்பரப்பை உறுதியாக்குவதற்கான சரளைக் கற்களைச் சேகரிக்கும் பணி நடந்தேறி வருகின்றது. 27 மதகுப் பாலங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 8 மதகுப் பாலங்கள் கட்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன. கடம்பாரை முகாமிலிருந்து இடது கரை முகாமுக்கு அணுகுசாலை அமைத்தல் (2 கி.மீ.). சாலை அமைப்புப் பணிகள் நடந்தேறி வருகிறது. கடம்பாரை பாலத்திலிருந்து சர்ஜ் ஷாப்ட் வரை சாலை அமைத்தல் பணி நடந்தேறி வருகிறது. கடம்பாரை பாலத்திலிருந்து கடம்பாரை அணையில் இடது கரை முகப்பு வரை சாலை அமைத்தல் 1 கி.மீ. சாலை அமைப்புப் பணி நடந்தேறி வருகின்றது.

கடம்பாரை அணையிலிருந்து 'சர்ஜ் ஷாப்ட்' வரையில் சாலை அமைத்தல் (0.8 கி.மீ.) சாலை அமைப்புப் பணி நடந்து வருகிறது.

**கடம்பாரை பாலத்திலிருந்து கடம்பாரை அணையின் வலது கரை முகப்பு வரையிலான சாலை அமைப்புப் பணி.**

சாலை அமைப்புப் பணி நடந்தேறி வருகிறது.

**கடம்பாரை ஆற்றுக்கு குறுக்கே உறுதியாக்கப்பட்ட கான்கிரீட் பாலம் கட்டுதல் :**

ஒப்பந்தப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. கடம்பாரை அணையின் வலது பக்க வளைவுக்கான அகழ்தல் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. பொருள்களை சேகரிக்கும் பணி நடந்தேறி வருகிறது.

**கடம்பாரை ஆற்றின் மீதான தற்காலிக பாலம் கட்டும் பணி :**

மரப்பலகைகள் அமைக்கும் பணி உட்பட அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

[1974 ஏப்ரல் 8

முகாம்கள்—

**மின்சக்தி உற்பத்தி நிலைய முகாம் :**

மேற்படி முகாமின் வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் கொட்டகை ஒன்றும் தொழிலாளர் உறங்குவதற்காக இரண்டு கொட்டகை தொகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் கொட்டகைகளின் இரண்டாவது தொகுதி பணிகள் நடந்தேறி வருகின்றது.

**கடம்பாரை அணைமுகம் (இடதுகரை) :**

தொழிலாளர் உறங்குவதற்கான கொட்டகை தொகுதி ஒன்றும் தொழிலாளர்களுக்கான கொட்டகைத் தொகுதி ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் உறங்குவதற்கான மற்றொரு கொட்டகையும், தொழிலாளர்களுக்கான கொட்டகை ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன.

கீழ்க்கண்ட தற்காலிக குடியிருப்புகளை கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன :—

EA வகை—1 தொகுதி
E2 வகை—4 தொகுதி.
வகை—6 தொகுதி.
6G வகை—8 தொகுதி.

பணிகளை மேற்கொள்வதற்கு, மேற்பார்வைப் பொறியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முகாம்களுக்கும், பணிகளுக்கும் நீர் வசதி அளித்தல் :**

முகாம்களுக்கும், பணிகளுக்கும் குழாய்கள் போடுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**பணிகளுக்கு மின் வசதியளித்தலும், தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தலும் :**

கடம்பாரை அணை நிலையத்திலிருந்து கடம்பாரை மின் உற்பத்தி நிலையம் உள்ள இடம் வரை உயர் அழுத்தக் கம்பி போடும் பணி நடந்து வருகிறது. மேல் அளியார் அணையிலிருந்து மின் உற்பத்தி நிலையம் உள்ள இடம் வரை உயரழுத்தக் கம்பி போடும் வேலை முடிந்து மின் சக்தி வழங்கும் பணி தொடங்கப்பட்டது.



1974 ஏப்ரல் 8]

குறைந்த அழுத்தக் கம்பியும், தொலைபேசித் தொடர்பும் ஏற்படுத்தும் பணி நடந்தேறி வருகிறது.

**கடம்பாரை அணை :**

(அ) மேற்படி அணையின் அகழ்தல் பணி 26-9-1973-ல் தொடங்கப்பட்டது. நான்கு நிலைகளில் பணிகள் நடந்தேறி வருகின்றது.

**நீரைக் கொண்டு செல்லும் திட்டம், மின் உற்பத்தி நிலையம், குடைவரையில் கடை மடைப் பகுதி.**

கீழ்க்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. அவை தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(a) உள் கட்டுமானப் பணி ( Intake strncture ) கேட் ஷாப்ட் ( Gate shaft) ) குடை வரையின் தலைப் பகுதி.

(b) சர்ஜ் ஷாப்ட்டுகளும் பிரஷர் ஷாப்ட்டுகளும்.

(c) பாதாள மின் நிலையம், நீரோட்டத்தின் கீழ்ப்பகுதியில் சர்ஜ் ஷாப்ட்டும் கேபிள் டன்னலும்.

(d) குடை வரையின் அணுகுப் பகுதி, கடை மடைப் பகுதி கேட் ஷாப்ட்டு.

குடை வரையின் தலைப்பகுதிக்காகவும் அணுகுப் பகுதிக்காகவும் அகழ்தல் பணி தொடங்கப்பட்டு விட்டது.

**உற்பத்தி இயந்திரம் :**

100 மெகா வாட் சுழல் இயந்திரங்கள் நான்கு தொகுதிக்காக போபாலில் உள்ள திருவாளர்கள் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், நிறுவனத்திற்கு 1973 ஜனவரியில் அனுமதிக் கடிதம் அளிக்கப்பட்டது. சில வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து முதல் தொகுதி சுழல் இயந்திரத்தைப் பெறுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை போபாலில் உள்ள திருவாளர்கள் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் பெற்றுள்ளது. இத்துடன் தொடர்ந்த ஏனைய மூன்று தொகுதி சுழல் பம்புகளைப் போபாலிலேயே தயாரிக்க உதவும் வகையில் செய்முறை உத்திகளும் வரப்பெற்றுள்ளன. மேலே கூறப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்தப் புள்ளிகளைக் குறித்த தொழில் நுட்ப விவாதங்களை, திருவாளர்கள் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்,

வாரியத்தின் பொறியாளர்களுடன் அண்மையில் நடத்தியது. இங்கிலாந்திலுள்ள திருவாளர்கள் ஜி.இ.சி. ஆண்ட் போலிங் நிறுவனத்திடமிருந்து முதல் தொகுதி சுழல் இயந்திரத்தை இறக்குமதி செய்வதற்கான அவர்களுடைய செயற்குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. பேச்சு வார்த்தைகள் நடத்தி விலை பற்றி ஒரு முடிவுக்கு வரும்வரை இங்கிலாந்து கம்பெனிக்குத் தேவைக் குறிப்பாணையை அனுப்புவதற்கு இயலும்பொருட்டு ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு சிறப்பு பணமாக ரூ. 100 லட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

**மின் உற்பத்தி இயந்திரத்தின் திறன் குறித்து ஆய்வுகள் :**

இத்திட்டத்தின் மின் உற்பத்தி இயந்திரத்தின் உற்பத்தித் திறன் குறித்த நிலையான அலகினை முடிவு செய்வதற்காக, தேவைப்படும் ஆய்வுகள் திருவாளர்கள் ஹெவி எல்க்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாலும் இங்கிலாந்தில் ஸ்டாபோர்டின் உள்ள திருவாளர்கள் ஜி.இ.சி. டிரான்ஸ்மிஷன் பிரிவால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுகளில் பங்கு கொள்வதற்காக நமது பொறியாளர்கள் இருவர் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

**ஆலோசனைப் பணிகள் :**

இத்திட்டத்தின் கட்டிட, இயந்திர, மின்சாரப் பணிகள் குறித்து தமிழ் நாடு மின்சார வாரியத்தின் ஆலோசகர்களாக புது டில்லியிலுள்ள மத்திய நீர் மின் சக்தி ஆணைக்குழு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு மின்சார வாரியத்துடன் தொழில் நுட்ப விவாதங்கள் நடத்திய பின்னர், நீரைக் கொண்டு செல்வதற்கான முறையைக் குறித்த தொழில் நுட்ப குறிப்பேடுகளையும் வரைபடத்தையும் அவர்கள் முடிவாகத் தயாரித்துள்ளனர். அதற்கென அண்மையில் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான முதல் எந்திரத்தை தருவிப்பது குறித்து சென்னையில் அண்மையில் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாருடன் நடத்தப்பட்ட விவாதத்திலும் அவர்கள் கலந்து கொண்டனர்.

The Progress so far made on the Kadamparai Hydro-Electric Scheme is as follows :—

Detailed Surveys :

The necessary permission to enter the reserved forest areas has been obtained and preconstruction surveys and jungle clearance for the various components of the project are in progress.



*Access roads and bridges*

*Access road from Upper Aliyar Dam to Kadamparai Power House access tunnel 5.6 km.*

Formation of jeepable road is completed and widening works in progress. Construction of bridges across Gondropatti stream and Punachi stream in progress. Construction of culverts in progress. Access road from Kadamparai Power House access tunnel to surge shaft—5 km.

**Reach I (0 to 2 km) Formation of jeepable road completed. Further widening works in progress.**

Reach II (2 km. to 3·5 km.) Formation of jeepable road for 100 metres completed. Balance works in progress.

Reach III (3.5 km. to 5 km.) Formation of jeepable road for 800 metres completed. Balance works in progress.

Access road connecting Pollachi-Valparai Highway and Kadamparai Dam—12 km.

Improvements to the existing cinchona estate road (0 to 7.0 km).

Widening works in progress. Collection of metal for concreting in progress 7 Nos. culverts completed.

Formation of road from cinchona estate to Kadamparai Dam (7.5 km. to 12 km.)

Formation completed. Widening works completed. Soling works completed. Collection of metal for waterbound Maccadam surfacing in progress. 47 culverts completed. Works on 8 culverts in progress. Access road from Kadamparai bridge to top of Kadamparai dam left flank (1 km.).

Formation in progrtss.

*Access road from Kadamparai Dam camp to left flank. Camp about F.R.L. (2 km.)*

Formation in Progress.

*Road from Kadamparai bridge to top of Kadamparai Dam left flank (1 km.).*

Formation in progress.

*Road from Kadamparai dam to surge shaft (0.8 km.)*

Formation in progress.

*Road from Kadamparai bride to top of Kadamaparai dam Right flank (1 km.).*

Formation in progress.

*Construction of Kadamparai R.C.C. Tee beam bridge across Kadamparai river.*

Tender awarded. Excavation for right abutment nearing completion. Collection of materials in progress.

*Construction of temporary bridge across Kadamparai river.*

All works including wooden decking completed.

*Camps.*

*Power House camp—*

Layout of the camp is being finalised. Construction of one block of labour shed and two blocks of dormitory sheds completed. Works in progress for the 2nd block of labour shed.

*Kadamparai Dam camp (Left flank)—*

One block of dormitory and one block of labour sheds completed. Also one block of dormitory and one block of labour sheds under construction.

Press tenders were called for the following temporary quarters :—

AE type—1 block.
2E type—4 blocks.
4F type—6 blocks.
6G type—8 blocks.

Action is being taken by the field Superintending Engineer to take up the works.

*Water supply to camps and works—*

Arrangements are being made for laying pipe lines for camps and works.

*Power supply and telephone lines to works—*

H.T. line from Kadamparai Dam site to Kadamparai Power House site is under construction. H.T. line from Upper Aliyar Dam to Power House site completed and Power supply commissioned.

Laying L.T. lines and telephone lines is in progress.



*Kadamparai Dam—*

(a) Excavation for the dam was started on 26th September 1973 and in progress in four reaches.

Water coductor system, power House and Tail race tunnel.

Tenders have been called for, the following works and are being finalised by the Tamil Nadu Electricity Board :—

(a) Intake structure, gate shaft and head race tunnel.

(b) Surge shaft and pressure shafts.

(c) Under ground Power House, draft tube manifold down-stream surge shaft and cable tunnel.

(d) Access tunnel, tail race tunnel and yate shaft.

Open excavation for the head race tunnel and the access tunnel has been started.

*Generating maihinery—*

A letter of intent for the 4 sets of 100 M.W. Pump turbines and Generator motors and accessories had already been placed on M/s. Heavy Electricals/Bhopal in January 1973. M/s. Heavy Electricals Ltd., Bhopal, have received tenders from some foreign manufacturers for the supply of the first set, along with the know-how for the manufacture of the subsequent 3 units at Bhopal. Technical discussions on these foriegn tenders were held recently by M/s. Heacf Electricals Ltd. with the Board's Engineers and their proposal for importing the first set from M/s. G.E.C. and Boving of U.K. has been agreed to. An ad hoc advance payment of Rs. 100 lakhs to M/s. Heavy Electricals Ltd. is made to enable them to place their firm order on the U.K. company s, pending the negotiation and settlement of prices.

*System stability studies—*

For deciding the parameters of the static excitation system for the generating machinery of this project, the required system stability studies are being connected by M/s. Heavy Electricals Limited at M/s. G.E.C Transmission Division in Stafford, U.K. Two of our engineers have been deputed to participate in the studies.

*Consultancy Services*—

**The Central Water & Power Commission, Delhi-5 have already** been appointed as Tamil Nadu Electricity Board's consultants on the civil, mechanical and electrical sides of the project. After holding technical discussions with Tamil Nadu Electricity Board they have finalised the technical specification and drawing for the water conductor system for which the tenders have been recently **floated.**

They have also participated in the recent discussions held at Madras with Heavy Electricals Ltd. on the ordering of the first machine for the project.



## இணைப்பு III

[450-ம் பக்கத்தில் 768-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | | சாலையின் பெயர். | சாலையின் நீளம். கி. மீ. | சாலையின் தற்போது நிலை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| 1. | எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம். | 1. | பெரந்தூர் சாலையை மேம்படுத்தல் ரூ. 30,000. | 1·0 | தார் போடப்பட்டுவிட்டது. |
| | | 2. | செம்பேடு சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 79,200. | 3·6 | தார் போடப்பட்டுவிட்டது. |
| | | 3. | திருக்கண்டாலம் சாலையை மேம் படுத்தல் மதிப்பு ரூ. 64,500. | 2·0 | சரளைக்கல் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. தார்போட ஆரம்பிக்கப்பட வேண்டியதாக உள்ளது. |
| 2. | கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம். | 1. | ஜி. என். டி. சாலையில் இருந்து சித்தராஜ கண்டிகைக்கு சாலை அமைத்தல் மதிப்பு ரூ. 1,71,300. | 3·0 | சாலை அமைப்பு முடிந்துவிட்டது. 3 கி. மீ. வரை சரளைக்கல் பரப்புதலின் முதல் பருவம் முடிந்துவிட்டது. 0·8 கி.மீ. வரை சரளைக்கல் பரப்புதலின் முதல் பருவம் முடிந்துவிட்டது. 3·0 கி. மீ. வரை அடிச் செம்மண் பரப்பும் வேலையும் முடிந்துவிட்டது. |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | சாலையின் பெயர். | சாலையின் நீளம். கி. மீ. | சாலையின் தற்போது நிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2. | கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் | 2. ஜி. என். சாலை 2·2 கி. மீ. இருந்து கே. எஸ். சாலை 4·2 கி. மீ. வரை சித்தராஜ கண்டிகை சிறுபுலபேட் வழியாக சாலை அமைத்தல் மதிப்பு ரூ. 4.00,000. | 7·2 | 0·0–1·0 கி. மீ. வரையிலும் 2/8, 7/2 வரை அமைப்பு வேலை பூர்த்தியாகி விட்டது. அடிச் செம்மண் பரப்பும் வேலை கி. மீ. 6/0 லிருந்து 7/4 வரை முடிக்கப்பட்டுள்ளது. |
| | | 3. புதிய கும்முடிப்பூண்டியிலிருந்து சிறுபுலப்பேட்டைக்கு சாலை அமைத்தல் மதிப்பு 1,60,000. | 2·6 | 0/0 விலிருந்து 2/0 கி.மீ. வரை சாலை அமைப்பு பூர்த்தியாகி விட்டது. |
| | | 4. ஜி. என். டி. ஐய்யநல்லூர் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 2,47,550. | 5·6 | கி. மீ. 0/0–3/0 வரை சரளைக்கல் பரப்பும் வேலை முடிவடைந்து விட்டது. 3/2 கி. மீ. லிருந்து 4/0 கி. மீ. வரை சரளைக்கல் பாப்பும் முதல் டருவம் முடிந்துவிட்டது. |
| | | . சித்தி தேப்பாக்கம் வழியாகச் செல்லும் மாதர்பாக்கம் சத்திய வேடு சாலை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 1,20,000. | 3·2 | சரளைக்கல் பரப்பும் வேலை கி. மீ. 1/0 லிருந்து 2/0 வரை முடிக்கப்பட்டுள்ளது. தார் போடும் வேலை 0/0 கி. மீ. இருந்து 1/0 வரை முடிக்கப் பட்டுள்ளது. 2/0 லிருந்து 3/2 கி. மீ. வரை தார் போடும் வேலை முடிக்கப்பட்டது. |
| | | 6. ஜி. என். டி. சாலையிலிருந்து பெரிய ஒபலாபுரம் செல்லும் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 1,20,000. | 3·0 | 0/0 கி. மீட்டரிலிருந்து 1/0 கி. மீ. வரை தார்வேலை முடிந்து விட்டது. 1/0 கி. மீ. லிருந்து 3/0 வரை செம்மண் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. |
| | | 7. ஜி. என். டி. சாலையிலிருந்து புது கும்முடிபூண்டி செல்லும் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 74,400. | 1·6 | தார் போடும் வேலை முடிந்து விட்டது. |
| | | 8. கே. எஸ். சாலையிலிருந்து தேர் வாய்க்குச் செல்லும் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 1,90,000. | 6·4 | கி. மீ. 3-லிருந்து 4 வரையிலும், 5-லிருந்து 6 வரையிலும் தார் போடும் வேலை முடிந்துவிட்டது. கி. மீட்டர் 0/0 லிருந்து 3/0 வரையிலும், 4/0 லிருந்து 5/0 வரையிலும், 6/0 லிருந்து 6/4 வரையிலும் சரளைக்கல் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. |
| | | 9. ஜி. எம். சாலையிலிருந்து சேறு புத்தூர் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 1,75,200. | 4·0 | 0/0 கி. மீ. லிருந்து 3/0 கி. மீ. வரை சரளைக்கல் பரப்பப்பட்டு விட்டது. 3/0 கி. மீ. லிருந்து 4/0 கி. மீ. வரை சரளைக்கல் பரப்பும் முதல் கட்டம் முடிந்துவிட்டது. |
| | | 10. ஜி. எம். சாலையிலிருந்து மாதர் பாக்கம் சாணூர் புத்தூர் செல்லும் சாலையை (வழி சூரபூண்டி) மேம்படுத்தல், மதிப்பு ரூ. 1,32,000. | 3·0 | சரளைக்கல் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். | | சாலையின் பெயர். | சாலையின் நீளம். கி. மீ. | சாலையின் தற்போது நிலை. |
|---|---|---|---|---|---|
| 2 | கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம். | 11. | சே. பி. பி. சாலையிலிருந்து அப்பாளையம் செல்லும் சாலையை மேம்படுத்தல் மதிப்பு ரூ. 2,12,800. | 4·8 | 0/0 கி. மீ. லிருந்து 3/2 கி. மீ. வரை சரளைக்கல் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. 3/0 கி. மீ. லிருந்து 4/8 வரை தார் போடும் வேலை நடந்து கொண்டிருந்தது. |
| | | 12. | பலேஸ்வரம் நெல்வாய் சாலையை மேம்படுத்தல், மதிப்பு ரூ. 54,600. | 1·6 | சரளைக்கல் பரப்பும் வேலை முடிந்துவிட்டது. |

## HOW TO USE THE INDEX.

**The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.**

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)'', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) .. .. .. | Calling Attention Statement. |

Consid. .. .. .. Consideration stage of a Bill. This stage includes—
- (i) Motion to refer to Select/Joint Select Committee.
- (ii) Amendment to refer to Select/Joint Select Committee.
- (iii) Amendment to circulate.
- (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
- (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

Consid. Cl. .. .. Consideration of clauses of a Bill.

D.E.E. .. .. .. Demands for Excess Expenditure.

Dis. S.D. or D.S.D. .. .. Discussion for Short Duration on an urgent matter of administration.

D.S.G. .. .. .. Demands for Supplementary Grants.

G.A. .. .. .. Governor's Address.

G.D. .. .. .. General Discussion.

H.A.H. Dis./H.H.D. .. .. Half-hour Discussion.

Int. .. .. .. Introduction stage of a Bill.

L.A. .. .. .. Legislative Assembly.

L.C. .. .. .. Legislative Council.

M. .. .. .. Motion.

P.M. .. .. .. Privilege Motion.

R/Res. .. .. - Resolution.

St. .. .. .. Statement.

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

3rd to 5th and 8th April 1974

Volume LIV (Nos. 1 to 4)


PAGES

A

ABDUL JABBAR, Thiru V. M.—

Budget, 1974-75, Voting—

Milk Supply Schemes ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. } 226, 227

ACCIDENTS—

—due to foot-board travellers in buses (C. A.) .. 470

ADITANAR, Thiru Si. Pa.—

Budget, 1974-75, Voting—

Co-operation .. 352-353, 361-362, 382

ALAGARSAMY, Thiru S.—

Budget, 1974-75, Voting—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 108

PAGES

A—*contd.*

ALAGARSAMY, Thiru S.—*contd.*

Budget, 1974-75, Voting—*contd.*

Co-operation .. .. .. .. 293, 358-361, 362-364, 365-366, 367, 368-369

Khadi .. .. .. .. 182

Milk Supply Schemes .. .. .. .. .. 179

Sugar supply, Koilpatti .. .. .. .. 75

AMBAR CHARKA—

Distribution .. .. .. .. .. 442

ANANDANAYAKI, Thirumathi T. N.—

Budget 1974-75 Voting—

Community Development Projects, etc. .. .. 55, 76, 130-131

Co-operation .. .. .. .. .. .. 344-347, 348, 349, 350, 351, 352, 354

Milk Supply Schemes ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi .. .. .. .. } 184, 185, 209-215, 220, 223, 231, 246, 262, 263,

State Legislature .. .. .. .. .. 544, 545, 565, 566, 572



PAGES

A—*contd.*

ANBAZHAGAN, Thiru K.—

Budget, 1974-75, Voting—

State Legislature .. .. .. .. .. 480

Animal Husbandry—

Dairy Development Corporation—Cattle feed .. [illegible]

Dairy Development Corporation, Financial assistance to farmers .. .. .. .. .. 25-26

Development Corporation, financial assistance to certain schemes .. .. .. .. .. 26-28

ARUMUGAM, Thiru C.—

Budget, 1974-75, Voting—

Co-operation— .. .. .. .. .. 369-37[illegible]

B

BALASUNDARAM, Thiru V.—

Budget, 1974-75, Voting—

Milk Supply Schemes .. .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. ..
Khadi .. .. .. .. .. .. } 215-220

BANKS—

Kuzhithurai House Mortgage Bank .. 158-159

BILL(S)—

Additional Sales Tax (Amendment) Bill, 1974—

Message from Governor, Int. .. .. .. .. 471

Appropriation (No. 2) Bill, 1974—

Message from Governor .. .. .. 583

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974.—

Int. .. .. .. .. .. .. .. 291-292

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 .. .. .. .. .. 52, 471

B—*contd.*


PAGES

BOARDS—

Tenements under Slum Clearance Scheme, occupation by allottees .. .. .. .. .. 21–23

BOMMAN, THIRU K. H.—

Budget, 1974–75, Voting—

Co-operation .. .. .. .. .. .. 293, 337–340

BRIDGES AND CULVERTS—

Across Coleroon connecting Srirangam and Tiruchirappalli .. .. .. .. .. 153

Across Kuzhithurai river .. .. .. .. 155–156

Bridges across, A.V.M. canal, reconstruction .. 10–11

New over bridge, Coimbatore .. .. .. .. 153, 155


C


CALLING ATTENTION—

Accidents due to foot-board travelling in buses .. 470

Damages by floods in Semmarikulam and Puthantharuvai .. .. .. .. .. 172–174

Enfield India worker's strike, Singampunari .. 50–51

Failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of Land Revenue, loans 467–469

Failure of rains-Kanyakumari district and necessity to supply rice and allow tax-remission .. .. 44–50

Hardships due to Kerosene scarcity .. .. 174–177




C—*cont.*


PAGES

CHAIR—

*Rulings and observations :*

Adjournment Motions—

*Arrest of Dravida Kazhagam volunteers*

Consent was withheld on the ground that there was no need for allowing the adjournment motions after the explanation given by the Minister .. .. .. .. 460–467

*(Alleged) Leakage of S.S.L.C. Examination English question papers :*

Consent was withheld on the ground that there was no need to discuss the matter by adjourning the other business of the House in view of the explanatory statement given by the Minister. .. .. .. .. 41–44

*Allegations :*

Before making any allegation against persons inside or outside the House, the proper procedure was for the member to show the proof for for such allegation to the Speaker and only after obtaining his consent an allegation should be made

It was not also proper to speak about persons not present in the House .. .. .. .. 300, 304

If a member wanted to make an allegation against another based on the statement given to him by some other person, even then, he should take up responsibility for its contents and he should follow the procedure prescribed for the purpose. Baseless allegations cannot be accepted and it was not also proper to allow such allegations to form part of the proceedings of the House. Such allegations made by a Member were therefore ordered to be expunged. .. .. 384–385

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observation—cont.*

*Allegations—contd.*

The burden of proof beyond doubt lay on the member making an allegation against another. It was not proper to make an allegation without any basis or to say that proof would be furnished later .. .. .. .. 306, 308

Calling Attention—

*Clarification*

If the statement given by the Minister is not clear in any respect, one or two questions may be put; but it is not proper to raise a discussion on the same by importing new ideas 48

*Reply by concerned Minister*

With reference to a point of order raised by a Member that it created confusion, when the Revenue Minister replied to the Call Attention Notice relating to supply of rice at fair price instead of the Food Minister, the Chair observed that the member had raised in his notice two matters, namely, remission of land revenue and supply of rice at fair price and hence, it would suffice if any one of the concerned Ministers answered, in view of the collective responsibility of the Cabinet .. 49

Debate

*Interruptions*

On a Member raising a point of order and objecting to a Minister interrupting a member of his party instead of replying at the end, the Speaker observed that even in the course of the discussion, there was scope for the Ministers to reply to or clarify certain points raised and so there was no point of order .. 314



PAGES

CHAIR—*cont.*

Debate—*cont.*

Interruption—*cont.*

Whenever a member interrupted another, he should first quote the rule under which he did it. When a member held the floor, another member should not interrupt him, unless and until the member holding the floor yielded or he raised a point of order. It was not a healthy convention for each and every member to interrupt in turn and it would not be allowed. 226

*Reference to Legislative Council*

With reference to certain remarks made by a member about the Legislative Council, the Speaker expunging those remarks observed that it was not in order to comment about the Legislative Council, as that would lead to their commenting about the Assembly and such mutual comments were not in order .. 496

*Reference to Legislators, Hostel*

On 8th April 1974, when a Member complained about certain irregularities in the Legislators' Hostel and stated that outsiders should not be allowed in the Hostel. The Speaker expunging certain objectionable expressions used by the Member, in that text observed that the points referred to by the Member about the Hostel could be considered and decided by the House Committee and the Member might refrain from referring to those matters further in the House.. .. 511–513

*Reference to persons in their individual capacity*

It is not proper for a member to refer to another in his individual or personal capacity

PAGES

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Reference to persons in their indivigual capacity—cont.*

and particularize that he belongs to this party or to that party. Individual comments need not be made .. .. .. .. 336-337

*Reference to persons not in the House*

It was not proper to refer to persons who could not come to the House and defend themselves .. .. .. .. 71

*Reference to Speaker*

It was not proper to make particular reference to the Speaker. The Speaker should neither be praised nor ridiculed by a member while speaking .. .. .. .. 543

Demands for grants—

*Reference to the Speaker's ruling*

Even during the discussion on the Legislature Demand, matters relating to the Legislature Department alone should be discussed and not Speaker's actions or rulings .. .. 544

*Relevancy*

During the discussion on a Demand for Grant, matters relating to the Demand under discussion should alone be referred to and not those relating to the Demands already discussed and voted. Such references to other Demands might be made during the discussion on Appropriation Bills .. ..301 302 303 381-382,

House—

*Allotment of seats to the press*

On a Member alleging favouritism shown to some newspapers as against certain others in the matter of allotment of seats in the Press Gallery, the Speaker observed that the allotment of seats was decided by the Press Advisory Committee and not by the Speaker .. 541



PAGES

CHAIR—*cont.*

*Objectionable Expressions*

'Kutti Amaichar' to denote 'Junior Minister' deprecated and withdrawn .. .. .. 487

*Point of order*

If it was considered that the information furnished in the House had been wrongly published in the Press a privilege motion might be brought forward and it was not in order to raise the matter as a point of order and then as a point of clarification. .. .. .. .. 171

Privilege Matters—

*Alleged furnishing of wrong information by the Education Minister in reply to a Call Attention Notice* re. *S.I.E.T. College, Madras.*

On 3rd April 1974, a Member raised a matter of privilege and stated that in response to a Call Attention Notice, the Education Minister stated that there was delay in release of funds to the S.I.E.T. College as the College authorities refused to submit to audit by Government Auditors, but the Correspondent of the College has been reported in the 'Hindu' to have refuted this statement and pointed out that the delay in release of funds was the entire fault of the Government.

The Education Minister quoting from the relevant files and correspondence with the College authorities explained that the College authorities did refuse to subject themselves to Government audit and maintained that his earlier statement was correct and was not at variance with the actual facts and hence there was no question of breach of privilege in the matter .

The Speaker reserved his ruling .. .. 31-41

PAGES

CHAIR—*cont.*

Privilege Matters—*cont.*

*Alleged furnishing of Wrong information by the Education Minister in reply to a Call Attention Notice* re *S.I.E.T. college, Madras*—cont.

On 8th April 1974, the Speaker held that there was no case of breach of privilege on the ground that the Minister had quoted from a number of documents in support and confirmation of the information he gave in his reply to the Call Attention Notice on 26-3-74 and that the Minister had stated that he did not refute the Statement of the Correspondent of the College published in 'The Hindu', as the Member had given notice of the privilege matter on the very same day on which the statement appeared in the Press, and that therefore, it was clear that the information furnished by the Minister to the House was true and that the matter of privilege raised by Dr. Hande on the basis of the statement in 'The Hindu', by the correspondent of the College was contrary to truth.

The Speaker also appealed to the members not to raise privilege matters on such baseless information, as it would tend to denigrate the conventions of the House.. .. .. 458-460

Unless a Member come to know categorically on the basis of concrete Proof that the statement given by the Minister was wrong, he could not raise a privilege matter against the Minister and it would not come under Privilege. The Member could only seek a clarification from the Minister on the basis of a Press Report to the contrary, as to which of the two statements was correct .. .. .. .. 33



PAGES

CHAIR—*cont.*

Questions and Answers.—

*Minister's refusal to answer a question included in the list of questions.*

When a Minister declined to answer an admitted question, in public interest, a member objected to it saying that it would not be right on the part of the Minister to say so at that stage. He observed that the question could have been disallowed at the earlier stage and need not have found a place in the list of questions for the day.

Thereupon the Speaker ruled that even though a question was admitted a Minister could decline to answer it at any time according to the rules. Supplementaries also could not be allowed, as the same reply would be given .. .. .. .. .. .. 163-164

*Reference to disallowed questions.*

It was not in order to refer in the House to questions which were disallowed by the Speaker. While Members themselves should send the questions, in actual practice, sometimes they got questions from those who were not Members. Such questions had to be examined. As it was not fair to explain those things in the House, any further clarification in that regard had to be sought only in his Chamber and not in the House .. .. .. .. 542-543

Question Hour—

*Non-utilisation of the entire first hour for questions and answers.*

On 3rd April 1974, on the Speaker declaring that the Question Hour was over, before the

PAGES

CHAIR—*cont*,

Quesion Hour—cont.

*Non utilisation of the entire first hour for question Ruling and Observations*—cont.

full utilisation of the first hour, a Member rising on a point of order objected to the closure of question hour even before the expiry of the first one hour and contended that the House alone could take such a decision and it was not proper for the Speaker to do so under the rules.

Thereupon the Speaker ruled that the permission of the House would be necessary only to extend the question hour beyond the first one hour and that the question hour could be closed even earlier, in the absence of supplementaries. Further, time was required to give opportunity to more members who had given their names fot participating in the discussion on Demands for Grants after considering other matters like Adjournment Motions, Calling Attention Notices and Privilege Matters that were to be taken that day. } 28-29

*Rulings.*

Speaker's ruling given in his Chamber should not be discussed in the House .. .. 17[illegible]

COMMITTEES

Public Accounts Report of action taken presentation .. .. .. .. 52

CO-OPERATION

Consumer Co-operatives .. .. .. 12-1[illegible]

DENNIS THIRU N.

Ayahs, Maternity centres .. .. .. .. 147-148

Bamboo forests .. .. .. ..



PAGES

CHAIR.—*cont.*

*Rulings*—cont.

DANNIS THIRU N.—*Cont.*

Bridge across Kuzhithurai river 155-156

Bridges accross A.V.M. Canal reconstruction .. .. .. .. .. 10-11

Budget, 1973-74, Voting—

Community Development projects, etc,, .. 109-111

Drug Testing Laboratory .. .. .. 147

East Coast Road, Central aid .. .. 152-153

Housing Board colonies public contact system .. .. .. .. .. 23-24

Kuzhithurai House Mortgage Bank .. .. 158-159

Labour Advisory Committee meeting ... 159-162

Leprosy Survey Project—Financial assistanse from City Council of Munich .. .. .. 148

Siddha Dispensary for Killiyoor Union ... 6-7

Tenements under Slum Clearance Scheme illegal alienation .. .. .. .. ... 20-21

Tigers, Kundrathur area .. .. .. 25

Water supply for Ayacuts Kanayakumari District .. .. .. .. .. 11-12

DEVARAJAN THIRU M.—

Budget, 1973-74, Voting—

Milk Supply Schemes .. .. ..
Administration of Tamil Nadu
Hindu Religious and Charitalae Endownments Act, 1959 .. .. .. ..
Khadi .. .. .. ... .. } 233-239

PAGES

CHAIR—*cont*
*Rulings—cont*

DEVENDRAM THIRU A.—
Budget, 1973-74, Voting—
Milk Supply Schemes
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments 1959
Khadi .. .. .. .. } 196-200

DHARMALINGAM, THIRU A.P.—
Budget, 1974-75, Voting.—
Community Development Projects etc., .. 52,54
57
59-63
121-135

DORAI GOVINDARASAN, THIRU
Budget, 1974-75, Voting :
Co-operation .. .. .. .. 294-299
303-304
305-309
310-311

Milk Supply Schemes
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959
Khadi .. .. .. .. .. } 227

DURAI MURUGAN, THIRU
Budget, 1974-75, Voting—
State Legislature .. .. .. .. 505-553

E

EDMUND, THIRU G.R.
Accidents due to foot board travelling buses (C.A.) .. .. 470



PAGES

EDMUND THIRU G.R.—*cont.*

Budget 1974-75, Voting—
Co-operation .. .. .. 375-377
378,379
381,382
383,385
386-388

State Legislature .. .. .. .. 511,512
580,581

EDUCATION
Physical education, Special Cell .. .. 146

ELECTRICITY—
Bills .. .. .. .. .. 165-169
Board Buildings reconstruction .. .. 24,25
Kothayaru Scheme .. .. .. .. 440-441
Nellithurai Power Scheme .. .. .. 164-165
New Electricity Scheme, Special Cell .. .. 434-439

EMPLOYEES.—
Under District Library, Authorites Concessions .. 145-146

ETTIAPPAN THIRU P.—
Budget, 1974-75, Voting—
Community Developement Projects etc., .. 84-85

F

FILM
Film Finance Corporation .. .. .. 162-163

FINANCIAL BUSINESS
Budget, 1974-75, Voting.—
Co-operation. .. .. .. .. 392-425

F— ont

PAGES

FINANCIAL BUSINESS—*cont*
Budget 1974-75 Voting—*cont.*
Milk Supply Schemes.
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 Khadi .. .. .. .. .. 178 271
State Legislature .. .. .. .. 472-583

FLOODS
Damages Floods in Semmarikulam and Puthatharvai (C.A). .. .. .. .. .. 172-174

FOOD
Wheat Supply Madras .. .. .. 15-18

FORESTS
Bamboo forests .. .. .. .. 163-164
Deers in Point Calimore forests .. .. 441

G

GANAPATHY THIRU T.—
Budget, 1974-75, Voting—
Co-operation. .. .. .. .. 395,395

GOPAL THIRU K.P.—
Budget, 1974-75, Voting—
Community Development Project etc., .. 54
Co-operation. .. .. .. .. 292

GURUSAMI THIRU N.V.—
Budget 1974-75 Voting—
State Legislature .. .. .. .. 527-530



PAGES

H

HANDE Dr. H.V.—
Alleged incorrect statement by the Education Minister to a call attention notice (privilege .. Matter). 31-32 33 34 35
Arrest of D.K. Voluntors 463-464
Budget, 1974-75, Voting—
Administation of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 180
Community Development Project etc., .. 54,57 58,73 74,131
Enfield India workers strike, Singampunari (C.A.) .. .. .. .. .. 50-51
Taking up of certain matters (Point of Order) .. 170

HOSPITALS AND DISPENSARIES—
General Hospital, additional building .. .. 3-6
General Hospital for South Madras .. .. 1-3
Hospital pharmacy .. .. .. .. 149-150
Maternity centres, Ayahs, appointment .. .. 147-148
Siddha Dispensary for Killiyoor union .. .. 6-7

HOUSING—
Housing Board Colones public contract System .. .. .. .. 23-24
Tenements under Slum Clearance Scheme. Occupation by allottes .. .. 21-23

I

INFORMATION AND PUBLICITY
Field Publicity Forum .. .. .. 433-434

PAGES

I—*cont.*


**IRRIGATION**

Water supply for Ayacout, Kanayakumari District .. .. .. .. .. 11–12

J

**JAMES THIRU J—**

Budget 1974–75 Voting

Community Development project etc., .. 57
Milk Supply Schemes .. .. .. .. 173

Bridge across Kuzhithurai river .. .. 155 156

Kothayaru Electricity System .. .. 440-441

Taking up of certain matters Point of Order 170

**JAYARAMAN THIRU K.—**

Consumer Co-operatives .. .. .. 12–14

**JOTHI VENCATACHELUM THIRUMATHI**

Budget, 1974-75, Voting—

Milk Supply Scheme .. .. ..
Administation of the Tamil Nadu Hindu Religious and charitable Endowments Act, 1959 .. 207–208
Khadi .. .. .. .. ..

K

**KAMATCHI, THIRU K—**

Budget, 1974-75, Voting

State Legislature .. .. .. .. 581–582

**KANDAPPAN THIRU S—**

Budget, 1974-75, Voting—

Community Development Projects etc., .. 773–476




K—*cont.*

PAGES


**KANDASAMY, THIRU MANALI C.—**

Budget 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 116–119

Co-operation .. .. .. .. 372–375

State Legislature .. .. .. 532–537

**KANDASAMY, THIRU K.—**

Electricity Bills .. .. .. .. 165–169

**KANDASAMY, THIRU K.P.—**

Budget 1974–75, Voting—

Milk Supply schemes .. .. ..
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 204,207
Khadi .. .. .. .. ..

Damages by floods in Semnarikulam and Puthantharuvai (C.A.) .. .. .. .. 172–174

**KANDASAMY, THIRU M—**

Budget 1974–75, Voting—

Co-operation .. .. .. .. 369–372

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. ..
} 233-235

**KANNAPPAN, THIRU M.—**

Budget 1974–75, Voting—

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. .. ..
} 178,179
184–189
256–271

PAGES

KARIVENGADAM, THIRU M.V.—

Budget 1974-75, Voting—

Co-operation .. .. .. .. 314,321, 347

KARUNANITHI, Dr. M.—

Appropriation (No. 2) Bill, 1974 .. .. 583,584

Arrest of D.K. Volunteers (A,M.) .. .. 464-466

Budget 1974-75, Voting—

Co-operation .. .. .. .. 384,386

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. .. .. } 210,213 221,222 223,227 231,247

State Legislature .. .. .. .. 477,478 489,508 509,515 516

KARUPPIA, THIRU A.—

Budget 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 93-95

KAVERI MANIAN, THIRU S.—

Budget, 1974975, Voting—
Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. .. .. } 228,231

KITTAPPA, THIRU N.—

Budget 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 71-75 131



PAGES

KITTAPPA THIRU N.—*cont.*

Budjet 1974-75, Voting.—

Deers in Point Calimere forest .. .. 441

Hand pounded rice .. .. .. 441

Kadambari Hydro-Electricity Scheme .. 439,440

New Electricity Schemes special cells .. 434,439

KOTHANDARAMIAH, THIRU K.S.—

Budget 1974-75, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 179

Community Development Projects, etc. .. 53,108-109

State Legislature .. .. .. 474 524-527

KOVAI CHEZHIAN THIRU.—

Budget 1974-75, Voting—

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. .. .. } 184 245,247

State Legislature .. .. .. .. 485,494 503,507 564,565

Taking up of certain matters (Point of order) .. .. .. .. .. 170,171

KEROSENE—

Hardships due to scacity (C.A.) .. .. 175,177

KRISHNAMURTHI, THIRU V. (NELLIKUPPAM)—

Budget 1974-75, Voting—
Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi .. .. .. .. .. } 243,247

PAGES

K—*cont.*

KRISHNAMURTHI, THIRU V, (NELLIKUPPAM) —*cont.*
Budject 1974-75, Voting—*cont.*
State Legislature .. .. .. 486,487
488,492

L,

LABORATORY—
Drug Testing Laboratory .. .. .. 147

LABOUR—
Drivers (Civil Supplies Corporation) represen tation to Minister .. .. .. 19-20
Labour Advisory Committee meeting .. 159-162

LANDS—
Lease to cinema studios .. .. 156-158

LATHEEF, THIRU M.A.—
Budget 1974-75, Voting—
Community Development Projects, etc. .. 58
Milk Supply Schemes .. .. .. }
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. } 189-196
Khadi .. .. .. .. .. }
State Legislature .. .. .. .. 473,499
516,565
580,582

LEPROSY.—
Survey Project Financial assistance from the City Council of Munich .. .. 148

LIBRARIES—
Employees under District Library Authorities, concessions .. .. .. .. 145-146



PAGES

L—*cont*

LIBRARIES—*cont.*
Mobile .. .. .. .. .. 139-141
Public libraries Act, implementation in Kanyakumari district .. .. .. .. .. 142-145

M

MARIMUTHU THIRU A.R.—
Budget 1974-75 Voting.—
Community Development Projects etc. .. 112-116

MARRIAGES—
In temples .. .. .. .. 442-446

MARUDACHALAM THIRU N.—
Budget 1974-75 Voting—
Community Development Projects etc., .. 54

MEDICINES—
Drug Testing Laboratory .. .. .. 147

MOTION (S)—
Adjournment Motions
Arrest of the D.K. Volunters .. .. 460-467
Leakage of S. S. L. C Examination English question Papers .. .. .. 41-44
Question hour suspension — .. .. 201

MUTHUSELVAN, THIRU P.S.—
Budget 1974-75 Voting.—
Co-operation .. .. .. .. 340-344
State Legislature .. .. .. .. 521-524

PAGES

MUNU ADI THIRU M.—

Budget 1974-75 Voting

Community Development projects etc. .. 75-76

State Legislature .. .. .. .. 513-576
577-578
779

MUNUSAMI THIRU R. R.—

Budget 1974-75, Voting—

Community Development Projects etc. .. 87-90

Field Publicity Forum .. .. .. 433-434

Film Finance Corporation .. .. .. 162-163

New bridge across Coleroon connecting Srirangam and Tiruchirappalli .. .. .. .. 153

Tenements under Slum Clearance Scheme, Occupation by allottees .. .. .. 21-23

MUTHAIH, THIRU M.—

Budget 1974-75, Voting—

Community Development Projects etc., .. 86-87

N

NACHIAPPAN, THIRU N.—

Budget, 1974-75 Voting—

Co-operation .. .. .. .. .. .. 354-358

NARASIMHAN, THIRU A. C.—

Budget, 1974-75, Voting—

State Legislature .. .. .. .. 513, 514



PAGE

NARAYANASAMY, THIRU Mannai. P.—

Budget 1974-75, Voting.—

Co-operation .. .. .. .. .. 293-294
300, 304
305, 307
311-312
313-314
326-327
348
364, 366
406-421
422-424

Hardships due to Kerosene scarcity (C. A. St.) .. 175-177

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974. .. .. .. 291-292

Question hour Suspension (M) .. .. 291

NATARAJAN, THIRU S.—

Budget 1974-75, Voting—

Co-operation .. .. .. .. .. .. 333-337

NEDUNCHEZHIYAN. DR. V. R.—

Alleged incorrect statement by the Education Minister to a Call attention notice (P.M.) .. 35-41

Budget, 1974-75, Voting—

State Legislature .. .. .. .. .. 490
562-582

Leakage of S.S.L.C. question paper (A.M.) .. 42-44

P

PADMANABHAN, THIRU P.—

Budget 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 101-103

PAGES

P—*cont.*

**PALANISAMY**, Pulavar C.—
Ayyankulam Tank, deepening .. .. .. 12

**PALANISAMY**, THIRU N. K.—
Budget 1974-75, Voting—
Community Development Projects, etc. .. 54, 63, 76 77-79 109
Dairy Development Corporation, Cattlefeed .. 25
Dairy Development Corporation, Financial Assistance to certain schemes.. .. .. .. 26-28
Dairy Development Corporation, Financial Assistance to farmers .. .. .. .. .. 25-26
Drug Testing Laboratory .. .. .. .. 147
Film Finance Corporation .. .. .. .. 162-163
General Hospital additional building .. .. 3-6
Hospital Pharmacy.. .. .. .. .. 149-150
Kadambarai Hydro-Electricity Scheme .. .. 439-440
New Electricity Schemes, Special cells .. .. 434-439
New over bridge, Coimbatore .. .. .. 153-155
Physical Education, Special cell .. .. .. 146
Wheat supply, Madras .. .. .. .. 15-19

**PALANIVELAN**, THIRU K.—
Budget 1974-75 Voting—
Community Development Projects etc. .. .. 76-82

**PANCHAYAT UNIONS**—
Roads special grants .. .. .. .. .. 446-450

**PAPERS LAID ON THE TABLE**—
Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959) notification .. .. 134





PAGES

P—*cont.*

**PAPERS LAID ON THE TABLE**—*cont.*
Constitution (Thirty-Second Amendment) Bill, 1973— .. .. .. .. .. .. .. 135
Constitution (Thrty-Third Amendment) Bill, 1973— 135
Dairy Development Department, 1974-75—
Commercial Budget .. .. .. .. 425
Dairy Development, Department 1974-75—
Policy note .. .. .. .. .. .. 425
Entertainments Tax Act 1939 (Tamil Nadu Act X of 1939) Notification.. .. .. .. .. 134, 271
Financial Supplement to Demand under Community Development 1974-75 (English and Tamil) .. .. . .. .. .. 135
General Sales Tax Act 1949 (Tamil Nadu Act 1 of 1959)—Notification .. .. .. .. 272
Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962—Notification .. .. .. .. 584
Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965—Notification .. .. 584
Note on Khadi & Village Industries Board .. 272
Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974 (L. A. Bill No. 13 of 1974) with Annexure .. .. 584
Policy note on Community Development and Panchayat Development 1974-75 (English and Tamil) .. .. .. .. .. .. 135
Policy note on Demand No. 12—Administration of Religious and Charitable Endowments Act 1959. 252

PAGES

P—*cont.*


PAPERS LAID ON THE TABLE—*cont.*

Procedure to be followed at Check Posts .. .. 135

Report of the Committee on Public Accounts on the action taken by the Govt. on the recommendation of the Committee contained in its earlier reports .. .. .. .. .. .. 272

Review of the Progress made in Co-operative Development Schemes, 1973–74 .. .. .. 272

Spirituous Essences Rules, 1972—Notification .. 272

Sixth Annual Reports of the Tamil Nadu Vigilance Commission for the period from the 1st April 1971 to 31 on March 1972.. .. .. .. 272

Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11/1971) notification .. 134

Speech by Hon. Thiru Mannai P. Narayanasamy, 272

Speech of Hon. Thiru S. T. Sadiq Pasha, on Demand No. 1—Land Revenue Department, Demand No. 2—State Excise Department, Demand No. 4—General Sales Tax and other Taxes and duties Administration, Demand No. 5—Stamp Administration (English and Tamil) .. .. .. .. .. 135

Statement in regard to decision taken on recommendation of Administrative Reforms Commission on Panchayat Development Administration 272

PARANDHAMAN THIRU A.—

Bus for legislators allowing public .. 30,31

Drinking water, Conversion of see water into .. 7–10

Failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of Land Revenue, loans (C.A.) .. .. .. .. 467–469




PAGES

P—*cont.*


PARANDHAMAN, THIRU A.—*cont.*

Lands, lease to Cinema studios .. .. 156–158

Special grants to Panchayat Unions .. .. 446–450

PAULIAH, THIRU A.—

Failure of rains in Kanyakumari district and necessity to supply rice and allow tax remission. (C.A.) .. 44–50

POINT OF ORDER—

Question hour, full utitisation .. .. 28–29

PONNAPPA NADAR, THIRU R.—

Budget 1974–75, Voting—

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. 180

Co-operation .. .. .. .. 395–396, 401–406

Milk Supply Schemes .. .. .., Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, Khadi .. .. .. .. 240–255

State Legislature .. .. .. .. 473, 554–562

PRIVILEGES—

Alleged incorrect statement by the Education Minister to a call attention notice .. .. 29–30, 31–41, 458–460

PROSPERITY BRIGADE—

Volunteers .. .. .. .. 433


R


RAJAGOPAL, THIRU K. M.—

Budget 1974–75, Voting—

Community Development Project, etc, .. 58, 10[illegible]–108

PAGES

R—*cont.*

RAJANGAM, THIRU N.—

Budget 1974-75, Voting—

Milk Supply Schemes ..
Administration of the Tamil Nadu Religious and Charitable Endowments Act, 1959 ..
Khadi .. .. .. .. } 223

RAJARAM, THIRU K.—

Budget 1974-75, Voting—

Milk Supply Schemes ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi .. .. .. .. } 244

Enfield India Workers Strike, Singampuneri (C.A. St.) 50–51

RAMACHANDRAN, THIRU S.—

Accidents due to foot board travelling in buses (C.A. St). .. .. .. .. .. 470

Budget 1974-75, Voting—

State Legislature .. .. .. .. 483

RICE—

Hand pounded rice .. .. .. 441

ROARDS—

Black topping roads, Mukkarambakkam .. 450
East Coast Road, Central aid .. .. 152–153
New roads, Gummudipoondi .. .. 450
Road, Palavakkam .. .. .. .. 451–453
Special grants to Panchayat Unions .. 446–450

S

SADIQ PASHA, THIRU S. J.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 .. 471
Damages by flood in Sennarikulam and Puthantharuvri (C.A. St.) .. .. .. .. 172–174



PAGES

S—*contd.*

SADIQ PASHA, THIRU S. J.—*cont.*

Failure of monsoon in Tiruttani taluk and the need to postpone the collection of Land Revenue, loans (C.A. St.) .. .. ..

Failure of rains in Kanayakumari district and necessity to supply rice and allow tax remission (C.A.) .. .. .. .. .. 44-50

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 .. .. .. 52

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Marriages in temples .. .. .. 442–446

SATHIAMURTHI, THIRU M.—

Budget 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 82–48

SEENIVASAN, THIRU P.—

Budget, 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 58, 64–71

State Legislature .. .. .. .. 499, 509, 516, 552, 580-581

SELVARAJ, THIRU M.—

Budget, 1974-75, Voting—

Co-operation .. .. .. .. 388-392

SERVICES—

Assistants—Promoted as Sub-Registrars .. 150 152

PAGES

S—*contd.*


SHANMUGAM, THIRU M.—

Budget, 1974-75, Voting—

Co-operation .. .. .. .. 327–330

SHANMUGAM, THIRU P.U.—

Budget, 1974-75, Voting—

Community Development Projects etc. .. 70

SIVAPRAKASAM, THIRU D.S.A.—

Employees under District Library Authorities Concessions .. .. .. .. 145–146

SLUM CLEARANCE—

Tenemets Under Slum Clearance Scheme, illegal alienation .. .. .. .. 20–21

SOUNDARAPANDIAN, THIRU P.—

Assistants promoted as Sub-Registrars .. 150–152

Budget, 1974-75 Voting—

Co-operation .. .. .. .. 292

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.. ..
Khadi .. .. .. .. .. } 178, 181 200–204

State Legislature .. .. .. .. 473 537–544

Drug Testing Laboratory .. .. 147

Hardships due to kerosene scarcity .. .. 175, 177

Mobile Libraries .. .. .. .. 139–141

Panchayat taxes, collection .. .. .. 453–57

Public Libraries Act, implementation in Kanayakumari district .. .. .. .. 142–14




PAGES

S—*contd.*


SUBBIAH, THIRU A.K.—

Budget, 1974-75, Voting—

Community Development Projects, etc. .. .. 53

Milk Supply Schemes .. .. .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. ..
Khadi .. .. .. .. .. .. } 179, 181 239–241

State Legislature .. .. .. .. 473

Hardships due to kerosene scarcity (C.A.) 174, 177

SUBBAIH, THIRU A. R.—

Budget, 1974-75, Voting—

Milk Supply Schemes.. .. .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. .. ..
Khadi .. .. .. } 247–249

SUBRAMANIAM, THIRU A.—

Budget, 1974-75, Voting—

Community Development Projects, etc. .. 53

Khadi .. .. .. .. .. .. 181

State Legislature .. .. .. .. 215 492–516

Question hour, full utilisation, Point of order .. 28–29

S.S.L.C. English question pages—Leakage (A.M.) 41

Taking up of certain matters, (point of order).. 171–172

SUBRAMANIAM, THIRU K.M.—

Budget, 1974-75, Voting—

Milk Supply Schemes .. .. ..
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. ..
Khadi .. .. } 236–238

PAGES

S—*contd.*

SUBRAMANIAM, THIRU K. M.—*cont.*
Budget, 1974-75, Voting—*cont.*
State Legislature .. .. .. .. .. 530-532, 580
General Hospital for South Madras .. .. 1-3

SUGAR—
Supply, Koilpatti .. .. .. .. .. 15

SUNDARA BHARATHI, THIRU Sowdi. S.—
Public Accounts Committee, report on action take, presentation.. .. .. .. .. .. 52

SUNDARAM, THIRU O. N.—
Budget, 1974-75, Voting—
State Legislature .. .. .. .. .. 494-499

SURENDRAN, THIRU M.—
Budget, 1974-75, Voting—
Administration of Tamil Nadu Hiudu Religious and Charitable Endowments Act, 1959 .. 180
Milk Supply Schemes .. .. .. .. 179
State Legislature .. .. .. .. .. 473, 579
Electricity Board Buildings reconstruction .. 24-25
Prosperity Brigade Volunteers .. .. .. 433

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1974-75, Voting—
Co-operation .. .. .. .. .. 321-326
Khadi .. .. .. .. .. .. .. 181

T

TANGAMANI, THIRU K.T.K.—
Arrest of D. K. Volunteers (A.M.).. .. .. 440-463



PAGES

T—*cont.*

TANGAMANI, THIRU K. T. K.—*cont.*
Budget 1974-75, Voting—
Community Development Projects, etc. .. .. 59, 121, 123, 132
Co-operation .. .. .. .. .. .. 310, 364, 400
Milk Supply Schemes .. .. .. ..
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. .. ..
Khadi .. .. .. .. .. .. .. } 222, 223, 226
State Legislature .. .. .. .. .. 473, 474-485
Hospital Pharmacy Strating .. .. .. 149-150

TANKS—
Ayyankulam Tank, deepening .. .. .. 12

TAXES—
Panchayat taxes, collection .. .. .. 453-457

TEMPLES—
Marriages .. .. .. .. .. .. 442-446

THIAGARAJAN, THIRU E. S.—
Budget 1974-75, Voting—
Community Development Projects, etc. .. .. 103-105
Milk Supply Schemes .. .. .. ..
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi .. .. .. .. .. .. .. } 241-243

THOOYA MANI, THIRU M. C.—
Ambar Charka .. .. .. .. .. .. 442

PAGES

T—*cont.*


THOOYA MANI, THIRU M.C.—*cont.*

Budget, 1974–75, Voting—*cont.*

Nellithurai Power Scheme .. .. .. .. 164–165

TRANSPORT—

Accidents due to foot-board travelling in buses (C.A.) .. .. .. .. 470

V

VADIVEL, THIRU S.—

Budget, 1974–75, Voting—

Milk Supply Schemes
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. ..
Khadi .. .. .. .. } 220–226, 227

VADIVELU, THIRU S. K.—

Budget 1974–75, Voting—

Community Development Projects, etc. .. 98–101

VEERASAMI, THIRU N.—

Budget, 1974–75, Voting –

Milk Supply Schemes etc. .. .. .. .. 184

State Legislature .. .. .. .. 547–553, 577, 578

Questions allowed to Ruling Party Members (point of Information) .. .. .. .. 472

VENKATASWAMY, THIRU B.—

Budget, 1974–75, Voting—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 181




PAGES

V—*cont.*


VENKATASWAMY, THIRU B,—*cont.*

Budget, 1974–75, Voting—*cont.*

Community Development Projects, etc. .. .. 53, 63, 64, 95–98

Milk Supply Schemes
Administration of Tamil Nadu .. ..
Hindu Religious and Charitable Endowments Act 1959—
Khadi .. .. .. .. } 179, 231–233

State Legislature .. .. .. .. .. 474, 545–547, 582

VEZHAVENDAN, THIRU K.—

Black topping roads, Mukkarambakkam .. 450

Budget, 1974–75, Voting—

Milk Supply Schemes .. .. .. ..
Administration of Tamil Nadu .. ..
Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. ..
Khadi .. .. .. .. } 208–209

Drivers' (Civil Supplies Corporation) representation to Minister .. .. .. .. 19–20

New roads, Gummidipoondi .. .. .. 450

Road, Pallavakkam .. .. .. .. 451–453

W

WAHAB, THIRU K. A.—

Budget, 1974–75, Voting—

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. .. .. } 180

PAGE

W—*cont.*

WAHAB, THIRU K. A.—*cont.*

Budget, 1974–75, Voting—

Community Development Projects, etc. .. .. 53, 90–93

Co-operation .. .. .. .. .. 132

Khadi .. .. .. .. .. 330–333

Taking up of certain matters given notice by Members (Point of order) .. .. .. 181

171

WATER SUPPLY—

Drinking water, conversion of sea water into .. 7–10

WILD LIFE—

Tigers, Kundrathur area .. .. .. .. 25

61659

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons. Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co.. Tiruchirappalli district
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10. Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V B Ganesan, Villupuram, South Arcot district.
Messrs Vasantham Stores, Book-sellers Cross Cut Road, Coimbatore.
Messrs Mercury Book Company, 223 Raja Street. Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore. North Arcot district.
Messrs Jayakumari Stores, Nagercoil Kanyakumari district.
Messrs. Babu Stores Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-E Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House. Trivandrum.
Messrs. Firma K L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs Book Links Corporation. Narayanaguda, Hyderabad-29.
Messrs The Book Syndicate, Hyderabad-1.
Messrs Labour Law Publications Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.